வெளியீடு :20-04-2024 Issued:20-04-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, மார்ச் 30, 2023—தொகுதி 57

Thursday the 30th March 2023—Volume 57

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30–3–2023

உள்ளடக்கம்

		பக்கங்கள்
	ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
	Governor and Council of Ministers	xi-xv
	பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
	பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxix
1.	**வினாக்கள்-விடைகள்—**	
	உடுக்குறியிட்ட வினாக்கள்	1-47
2.	**தகவல் கோரல்—**	
	விழுப்புரம், வடக்குத் தெருவைச் சார்ந்த இப்ராஹிம் ராஜா உயிரிழந்தது	47-50
	திரு. எடப்பாடி K. பழனிசாமி	47-48
	**திரு. ச. சிவகுமார்*	48-49
	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	49-50
3.	**விதி 110—ன் கீழ் அறிக்கை—**	50-57
	வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	
	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	50-57
4.	**வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—**	57-67
	திரு. தி. வேல்முருகன்	57-58
	திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	58
	திரு. ப. அப்துல் சமது	59

பக்கங்கள்

4. வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—தொடர்ச்சி

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	59-60
திரு. ட்டி. இராமச்சந்திரன்	60
திரு. வி.பி. நாகைமாலி	61
திரு. ம. சிந்தனை செல்வன்	61-62
*திரு. நயினார் நாகேந்திரன்	62
திரு. ஜி.கே. மணி	63
திரு. கு. செல்வபெருந்தகை	63-64
*திரு. ஓ. பன்னீர்செல்வம்	65
*திரு. ப. தனபால்	65-66
மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்	66-67
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	67

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	68-299
*மாண்புமிகு திரு. கே.என். நேரு	68, 114, 125, 128 132, 266-298
*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி	91, 115, 222-242
*மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்	115, 242-266

		பக்கங்கள்
5.	**மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*	
	**திரு. எஸ்.பி. வேலுமணி*	88, 110-111, 116-125, 127-138, 141
	திரு. எடப்பாடி K. பழனிசாமி	125-127, 142-143
	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	126-127
	மாண்புமிகு திரு. எ.வ. வேலு	128
	மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்	133
	மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	138-144
	**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்*	141, 144-157
	மாண்புமிகு திரு. துரைமுருகன்	144-146, 213
	திரு. க. கார்த்திகேயன்	157-167
	**திரு. G. அசோகன்*	167-171
	திரு. ச. அரவிந்த் ரமேஷ்	172-187
	**திரு. இரா. அருள்*	76, 97, 187-198
	திரு. பெ.சு.தி. சரவணன்	199-208
	**திரு. செ. கிருஷ்ணமுரளி*	70, 91-92, 209-222
6.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	300-301
7.	**இணைப்புகள்**	303-756

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	**முதலமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	**நீர்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	**நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	**உயர் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6.	பொதுப் பணித் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7.	வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9.	தொழில் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10.	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்*
11.	சட்டத் துறை அமைச்சர் ..	**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*

12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி

13. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:**

கூட்டுறவுத் துறை

14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

15. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

16. சமூக நலன் — மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

17. மீன்வளம் — மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு*
18. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்*
19. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
20. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
21. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
22. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்*
23. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*

24. **வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. **போக்குவரத்துத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. **இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. **நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. **பால்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. **சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*
32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	**Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	**Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

13. **Minister for Co–operation**	..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14. **Minister for Micro, Small and Medium Enterprises**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16. **Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17. **Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18. **Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

19. Minister for Tourism	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20. Minister for Food and Civil Supplies	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21. Minister for Electricity, Prohibition & Excise	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22. Minister for Handlooms and Textiles	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23. Minister for Health and Family Welfare	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24. Minister for Commercial Taxes and Registration	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25. Minister for Transport	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

27. Minister for Finance and Human Resources Management	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics
28. Minister for Milk & Dairy Development	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29. Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30. Minister for School Education	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
31. Minister for Environment and Climate Change	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32. Minister for Labour Welfare and Skill Development	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33. Minister for Information Technology and Digital Services	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology and Digital Services
34. Minister for Forests	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35. Minister for Adi Dravidar Welfare	..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	..	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
		மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். ..	குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். ..	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. ..	தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி. ..	தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ. ..	தலைமை நிருபர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. ..	சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. ..	சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ. ..	சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)
பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. போளூர்
2. அசன் மௌலானா, திரு. JMH. .. வேளச்சேரி
3. அசோகன், திரு. G. .. சிவகாசி
4. அசோக்குமார், திரு. கி. .. கிருஷ்ணகிரி
5. அசோக்குமார், திரு. N. .. பேராவூரணி
6. அண்ணாதுரை, திரு. கா. .. பட்டுக்கோட்டை
7. அப்துல் சமது, திரு. ப. .. மணப்பாறை
8. அப்துல் வஹாப், திரு. மு. .. பாளையங்கோட்டை
9. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
10. அமலு, திருமதி V. .. குடியாத்தம் (தனி)
11. அமுல் கந்தசாமி, திரு. T.K. .. வால்பாறை (தனி)
12. அம்பேத்குமார், திரு. S. .. வந்தவாசி (தனி)
13. அம்மன் K. அர்ச்சுனன், திரு. .. கோயம்புத்தூர் (வடக்கு)
14. அய்யப்பன், திரு. பி. .. உசிலம்பட்டி
15. அரவிந்த் ரமேஷ், திரு. ச. .. சோழிங்கநல்லூர்
16. அருண்குமார், திரு. P.R.G. .. கவுண்டம்பாளையம்
17. அருண்மொழிதேவன், திரு. ஆ. .. புவனகிரி
18. அருள், திரு. இரா. .. சேலம் (மேற்கு)
19. அர்ஜுனன், திரு. பொ. .. திண்டிவனம் (தனி)
20. அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
21. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
22. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
23. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு

24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச.	.. ஈரோடு (கிழக்கு)
37.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
39.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
40.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
41.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
42.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
43.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
45.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி

46.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
48.	எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
49.	ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
50.	ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
51.	கடம்பூர் ராஜூ, திரு.	.. கோவில்பட்டி
52.	கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
53.	கணேசன், திரு. சி.வி.	.. திட்டக்குடி (தனி)
54.	கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
55.	கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்
56.	கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்
57.	கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
58.	கயல்விழி செல்வராஜ், திருமதி என்.	.. தாராபுரம் (தனி)
59.	கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
60.	கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
61.	கருப்பணன், திரு. K.C.	.. பவானி
62.	கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
63.	காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
64.	காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
65.	காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
66.	காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
67.	காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
68.	கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
69.	கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
70.	கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
71.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
72.	கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
73.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
74.	கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி. .. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S. .. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)
86. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
101. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை

103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு. .. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
116. சேகர், திரு. S. .. பரமத்தி-வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந. .. முசிறி

TRUTH ALONE TRIUMPHS

131.	துரைமுருகன், திரு.	.. காட்பாடி
132.	தேவராஜி, திரு. க.	.. ஜோலார்பேட்டை
133.	தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (தனி)
134.	நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	.. நத்தம்
135.	நந்தகுமார், திரு. A.P.	.. அணைக்கட்டு
136.	நயினார் நாகேந்திரன், திரு.	.. திருநெல்வேலி
137.	நல்லதம்பி, திரு. அ.	.. கெங்கவல்லி (தனி)
138.	நல்லதம்பி, திரு. A.	.. திருப்பத்தூர்
139.	நாகைமாலி, திரு. வி.பி.	.. கீழ்வேளூர் (தனி)
140.	நாசர், திரு. சா.மு.	.. ஆவடி
141.	நிவேதா எம். முருகன், திரு.	.. பூம்புகார்
142.	நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
143.	நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144.	பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
145.	பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)
146.	பழனி நாடார், திரு. S.	.. தென்காசி
147.	பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
148.	பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
149.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
150.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
151.	பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
152.	பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
153.	பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
154.	பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
155.	பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
156.	பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
157.	பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158.	பிரகாஷ், திரு. ஒய்.	.. ஓசூர்
159.	பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்

160.	பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
161.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
162.	புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
163.	பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164.	பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
165.	பெரியகருப்பன், திரு. கேஆர்.	.. திருப்பத்தூர்
166.	பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
167.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169.	பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170.	பொன்னுசாமி, திரு. கே.	.. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171.	மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172.	மகேந்திரன், திரு. சி.	.. மடத்துக்குளம்
173.	மணி, திரு. ரா.	.. ஓமலூர்
174.	மணி, திரு. ஜி.கே.	.. பெண்ணாகரம்
175.	மணிக்கண்ணன், திரு. A.J.	.. உளுந்தூர்பேட்டை
176.	மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்
177.	மதியழகன், திரு. தே.	.. பர்கூர்
178.	மதிவேந்தன், டாக்டர் மா.	.. ராசிபுரம் (தனி)
179.	மரகதம் குமரவேல், திருமதி கு.	.. மதுராந்தகம் (தனி)
180.	மனோ தங்கராஜ், திரு. த.	.. பத்மநாபபுரம்
181.	மாங்குடி, திரு. சா.	.. காரைக்குடி
182.	மாணிக்கம், திரு. இரா.	.. குளித்தலை
183.	மாரிமுத்து, திரு. K.	.. திருத்துறைப்பூண்டி (தனி)
184.	மார்க்கண்டேயன், திரு. G.V.	.. விளாத்திகுளம்
185.	மான்ராஜ், திரு. இ.மா.	.. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186.	முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ.	.. நாகப்பட்டினம்

187.	முத்துசாமி, திரு. சு.	.. ஈரோடு (மேற்கு)
188.	முத்துராஜா, டாக்டர் வை.	.. புதுக்கோட்டை
189.	முருகேசன், திரு. செ.	.. பரமக்குடி (தனி)
190.	முனிரத்தினம், திரு. ஆ.மு.	.. சோளிங்கர்
191.	முனுசாமி, திரு. கே.பி.	.. வேப்பனஹள்ளி
192.	மூர்த்தி, திரு. பி.	.. மதுரை (கிழக்கு)
193.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	.. ஆலங்குடி
194.	மோகன், திரு. M.K.	.. அண்ணா நகர்
195.	ரகுபதி, திரு. எஸ்.	.. திருமயம்
196.	ரகுராமன், திரு. A.R.R.	.. சாத்தூர்
197.	ரவி, திரு. சு.	.. அரக்கோணம் (தனி)
198.	ராதாகிருஷ்ணன், திரு. R.	.. விருத்தாசலம்
199.	ராமசந்திரன், திரு. கா.	.. குன்னூர்
200.	ராமச்சந்திரன், திரு. தி.	.. அறந்தாங்கி
201.	ராமலிங்கம், திரு. பெ.	.. நாமக்கல்
202.	ராஜகண்ணப்பன், திரு. R.S.	.. முதுகுளத்தூர்
203.	ராஜகுமார், திரு. S.	.. மயிலாடுதுறை
204.	ராஜமுத்து, திரு. M.	.. வீரபாண்டி
205.	ராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	.. திருப்பரங்குன்றம்
206.	ராஜா, திரு. ஈ.	.. சங்கரன்கோவில் (தனி)
207.	ராஜா, முனைவர் T.R.B.	.. மன்னார்குடி
208.	ராஜேஷ் குமார், திரு. செ.	.. கிள்ளியூர்
209.	ரூபி ஆர். மனோகரன், திரு.	.. நாங்குநேரி
210.	வரலட்சுமி, திருமதி ம.	.. செங்கல்பட்டு
211.	வானதி சீனிவாசன், திருமதி	.. கோயம்புத்தூர் (தெற்கு)
212.	வில்வநாதன், திரு. அ.செ.	.. ஆம்பூர்
213.	விஜயகுமார், திரு. K.N.	.. திருப்பூர் (வடக்கு)
214.	விஜயதரணி, திருமதி S.	.. விளவங்கோடு
215.	விஜயபாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
216.	வெங்கடாசலம், திரு. A.G.	.. அந்தியூர்
217.	வெங்கடேசன், திரு. ஆ.	.. சோழவந்தான் (தனி)

218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி.	..	தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ.	..	வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ.	..	திருவண்ணாமலை
221. வேலு, திரு. த.	..	மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி.	..	தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி.	..	பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர்.	..	ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச்.	..	பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு.	..	கீழ்வைத்திணான் குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S.	..	பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P.	..	ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன்.	..	கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர்.	..	சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு.	..	அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ.	..	செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க.	..	கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ.	..	துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 16, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 மார்ச் 30, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை."

போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கிப் படை நடத்தும் பொறுப்பு, அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான், குடிமக்களைக் காப்பாற்றி, உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு மு. ஜெகன் மூர்த்தி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

அணையிலிருந்து ஏரிக்கு தண்ணீர்

***17759—திரு. மு. ஜெகன் மூர்த்தி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மோர்தானா அணையிலிருந்து வரும் தண்ணீரை பாக்கம் ஏரிக்குக் கொண்டு செல்ல அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் உள்ள பாக்கம் ஏரிக்கு, மோர்தானா அணையிலிருந்து வரும் நீரை கொண்டு செல்ல, பாக்கம் ஏரியின் முழு நீர்மட்ட அளவு மோர்தானா அணையின் இடதுபுறக் கால்வாயின் தலைப்பு மதகின் அளவைவிட 3.175 மீட்டர் உயரமாகவுள்ளதால், புவிஈர்ப்பு விசையின் மூலமாக ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்ல சாத்தியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக வாழ்த்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மோர்தானா அணையிலிருந்து வரும் நீர் வீணாக பாலாற்றில் கலந்து கடலுக்குத்தான் செல்கிறது. ஆகவே, அந்நீரை பாக்கம் ஏரிக்கு திருப்பி, குடியாத்தம் நகரின் குடிநீருக்காகவும், அங்கேயிருக்கின்ற விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய வகையிலேயும் அந்நீரைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில், அந்தப் பகுதி உயரமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்; வேறொரு பக்கம் கால்வாயைத் திருப்பிவிட்டால் நிச்சயமாக நீரைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி இல்லையென்று சொன்னால், பம்பிங் மூலமாகவாவது அந்த ஏரிக்குக் குடிநீரை ஏற்ற வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அமைச்சருடைய சொந்த ஊர் என்பதாலும், அங்கே குடியிருக்கின்ற மக்களின் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் உபயோகமாக இருக்கும் என்பதாலும் இதனை இந்த நேரத்தில் நினைவுபடுத்துகிறேன். எனவே, அந்த ஏரியில் நீரைத் தேக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாக்கம் ஏரி என்பது முறைப்படுத்தாத ஒரு ஏரி. பாக்கம் ஏரியின் ஆயக்கட்டு 214 ஏக்கர் மட்டும்தான். நான் முன்பே சொன்னதுபோல், கொள்ளளவு மிகவும் குறைவாக இருக்கிறது. 300 கன மீட்டருக்கும் குறைவாகத்தான் கொள்ளளவு உள்ளது. எனவே, அந்த ஏரிக்கு 3.175 மீட்டர் உயரத்திற்கு பம்பிங் செய்வது என்பது சிரமம். இரண்டாவது ஒன்று சொன்னார்; கடலுக்குத் தண்ணீர் போகிறது என்றார். கடலுக்குத் தண்ணீர் போகாது. ஏனென்றால், அந்த ஏரிக்கு வலதுபுறக் கால்வாய், இடதுபுறக் கால்வாய் என்று உள்ளன. இடதுபுறக் கால்வாய் குடியாத்தம் தொகுதிக்குள் நுழைந்து முழுக்க முழுக்க காட்பாடி தொகுதிக்குள் சென்று, அங்கேயே சங்கமமாகிவிடுகிறது. வலதுபுறக் கால்வாய் நேராக மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் சட்டமன்றத் தொகுதியான அணைக்கட்டிலேயே சங்கமமாகிவிடுகிறது. ஆகவே, தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்று கலக்கின்ற அளவிற்கு அவ்வளவு பெரிய ஏரி இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. தட்டப்பாறை வழியாகச் சுற்றி கால்வாய் அமைத்து அதன்வழியாக நீரைக் கொண்டு வந்தால் நிச்சயமாக ஏரியில் நீரைத் தேக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நீங்கள்தான் முயற்சி செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றாலுங்கூட, இயந்திரம்மூலம் பம்பிங் செய்து அதன்மூலமாகவாவது நீரை ஏரியில் தேக்கி வைக்க வேண்டும். ஏப்ரல், மே மாதங்களில் மக்கள் குடிநீருக்காகக் கஷ்டப்படுகின்ற ஒரு நகரமாக அந்தப் பகுதி இருக்கிறது. ஆகவே, இது குடிநீருக்கும் பயன்படும், விவசாயத்திற்கும் பயன்படும். ஆகவே, மீண்டும், மீண்டும் சொல்கின்றேன். மறுபரிசீலனை செய்யுங்கள்; அதற்குண்டான முயற்சியை எடுங்கள். அது உங்களுடைய மாவட்டம்; உங்களுடைய தொகுதி; உங்களுடைய சொந்த ஊர் என்பதை மீண்டும் நான் ஞாபகப்படுத்துகின்றேன். நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[2023 மார்ச் 30

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் ஏரிக்குப் போகிறதோ, இல்லையோ, ஆனால் என்னுடைய நீண்ட நாளைய நண்பர் ஜெகன் மூர்த்தி அவர்கள் திரும்ப, திரும்பச் சொன்னதால் நானும் முயற்சி, முயற்சி செய்து பார்த்து, முடிந்த அளவிற்குச் செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் நந்தன் கால்வாய் திட்டம் இருக்கிறது. அதில் 6, 7 கிலோ மீட்டர் வரை* cement lining *செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 4 கிலோ மீட்டர் அளவிற்குச் செய்ய வேண்டியிருப்பதால் தண்ணீர் வீணாகிறது. அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

அதேபோல குப்பநத்தம் அணை கட்டப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தை குப்பநத்தம் கிராம மக்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், குப்பநத்தம் ஏரிக்கே தண்ணீர் போகாமல், பாசனம் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த ஏரிக்கு குப்பநத்தம் அணையிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல், கர்நாடகாவில் அதிக அளவிலே Lift Irrigation *மூலம் தண்ணீரை மேடான பகுதிகளுக்குக் கொண்டு சென்று பாசன வசதிகளை செய்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* debate*-ல் பேசுவதுபோல நான்கு கேள்வி கேட்டால், நான்கு கேள்விகளுக்கும் எப்படிப் பதில் சொல்ல முடியும்?*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): Lift Irrigation. . . *(குறுக்கீடு)*

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணைக் கேள்வி ஒன்று கேளுங்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): Lift Irrigation-*ஐக் கொண்டுவந்து, அதன்மூலம் பல மேடான பகுதிகளுக்குத் தண்ணீரை அனுப்புவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கு. பிச்சாண்டி அவர்கள், இந்தப் பிரச்சினையில் அதிகம் கவனம் உள்ளவர். திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் கேள்விக்கு மட்டும்தான் நான் பதில் தயார் செய்து வந்தேன். இது வேலூர் மாவட்டம், அது திருவண்ணாமலை மாவட்டம். இவ்வளவு அக்கறையிருக்கின்ற திரு. கு. பிச்சாண்டி அவர்கள் சும்மா இருக்கிற நேரத்தில் ஒரு கேள்வியை எழுதிப்போட்டிருந்தால் விவரமாக பதில் சொல்லியிருப்பேன். எனவே, தனிக் கேள்வி போடவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தின் கழகப் பொதுச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொகுதியில் ஏற்காடு மலையிலிருந்து வேப்பாடி ஆறு வழியாக தொப்பையாறு* dam-*க்கு செல்கிறது. பி.பள்ளிப்பட்டி பகுதியில் ஒரு தடுப்பணையைக் கட்டி, அங்கே இருக்கின்ற 7 ஏரிகளுக்கும் நீர் கொண்டு வருவதற்கு, இந்த அரசு முன்வர வேண்டும். காரணம் என்னவென்றால், பக்கத்தில் இருக்கின்ற துரிஞ்சிப்பட்டியில் நீர் ஏற்றுக்குழாயின்மூலம் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அதற்குண்டான* Detailed Project Report *வைத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, அந்தப் பகுதிக்கு நீர் ஏற்றுக் குழாயின்மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரில் கொடுத்திருக்கலாமே! மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவருடைய பக்கத்தில் இருக்கின்ற ஏரிக்கு தண்ணீர்* pump *செய்து கொண்டு போகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்* report *உடன் வந்திருக்கிறார். பின்னர், கவனிக்கவில்லை என்றால் எப்படி? கவனிக்கிறேன். உங்கள் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று சொன்னேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

நான்கு வழிச் சாலை

***11671—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, நாமக்கல்–துறையூர் செல்லும் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வினாவிலே குறிப்பிட்ட சாலை நாமக்கல்–கண்ணூர்–துறையூர் சாலையாகும். இதில் கிலோ மீட்டர் 5 முதல் 26 வரை உள்ள சாலை சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட மாநில நெடுஞ்சாலையாகவும், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களை இணைக்கின்ற சாலையாகவும் அமைந்திருக்கிறது. பொதுவாக நான்கு வழிச் சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், PCU *என்கிற* Passenger Car Unit *17,250 இருந்தால்தான் நான்கு வழிச் சாலையை அமைக்க முடியும். அந்த அளவிலே ஆய்வு செய்தபோது இந்தச் சாலையில் போக்குவரத்துச் செறிவு 27,480* PCU *இருக்கிறது. எனவே, போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் முக்கியத்துவம் தந்து,*

2023 மார்ச் 30]
மாண்புமிகு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வினாவைத் துவங்குவதற்கு முன்பாக, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது, கொல்லிமலையில் நெடுஞ்சாலைத் துறைக்கு என தனிப் பிரிவு அலுவலகம் அமைக்க வேண்டுமென்று நான் வினா எழுப்பினேன். தொகுதி மக்களின் சார்பாகவும் கோரிக்கை வைத்தேன். இந்தக் கூட்டத் தொடருக்கு முன்பாகவே கொல்லிமலையில் நெடுஞ்சாலைத் துறையின் தனிப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நாமக்கல்-துறையூர் செல்லும் சாலை இரு வழிச் சாலையாக உள்ளது. இச்சாலையில் போக்குவரத்து வாகனங்கள் அதிகளவில் செல்வதால், நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லையென்று கருதுகிறேன். அவர் கேட்ட கேள்விக்குத்தான் தற்பொழுது நான் பதிலளித்தேன். அதுவொரு முக்கியமான சாலை. அச்சாலையில் போக்குவரத்து 27,480* PCU *இருக்கிறது. அதனால், இந்த ஆண்டே முன்னுரிமையளித்து, அச்சாலை எடுத்துக்கொள்ளப்படும் என்கிற பதிலை நான் ஏற்கெனவே சொன்னேன்.*

அதேபோன்று, 'கேட்டதும் கொடுப்பவனே, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்ற ஒரு பாடல் இருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டார். அந்தப் பகுதி மலைப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அங்கே தனிப் பிரிவு அலுவலகம் ஒன்று அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி சொன்னதற்காக, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல்லிலிருந்து சென்னைக்குச் செல்ல வேண்டுமென்றால், அச்சாலையின் வழியாக சுமார் 1,000 வாகனங்களைக் கடந்துசெல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு செல்வதால், அச்சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அச்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியைப் பொறுத்தவரையில், மாநில நெடுஞ்சாலை 90 கிலோ மீட்டரும், மாவட்ட முக்கிய சாலை 127 கிலோ மீட்டரும், இதர மாவட்ட சாலைகள் 255 கிலோ மீட்டரும், கரும்பு அபிவிருத்தி சாலை 8 கிலோ மீட்டரும், ஆக, 480 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சேந்தமங்கலம் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, உறுதிப்படுத்துவது, விரிவுபடுத்துவது, பராமரிப்பது உள்ளிட்ட

2023 மார்ச் 30]

பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கண்ணனூர் சாலை, தூரூர், எருமப்பட்டி, பவித்ரம் ஆகிய பகுதிகளிலுள்ள 4 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உறுதி செய்யப்பட்டு, சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலைகளையும் விரிவுபடுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார். இந்த ஆண்டு நிதிநிலைமை சரியாக இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அந்தச் சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள்.*

திரு. ரா. இளங்கோ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து கரூர் செல்கின்ற சாலை சுமார் 60 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இந்தச் சாலையில் அதிகப்படியான கனரக வாகனங்கள் செல்கின்றன. குறிப்பாக, விவசாயப் பொருட்கள் மற்றும் கரும்பு ஆகியன லாரிகள்மூலம் போளூர் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அதேபோல, புன்னம்சத்திரம் பகுதியிலுள்ள, கல்குவாரிகளுக்கும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டுமென்ற கேள்வியைக் கேளுங்கள். என்ன செய்ய வேண்டுமென்பதை மட்டும் கேட்க வேண்டும்.*

திரு. ரா. இளங்கோ: *வாகனங்கள் அதிகப்படியாக செல்கின்றன. ஆகவே, அந்தச் சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளங்கோ அவர்கள் கேட்ட அந்தச் சாலையில் சுமார் இரண்டு மாத காலத்திற்கு முன்னால், நானும் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், சகோதரர் திரு. செந்தில் பாலாஜி*

அவர்களும் பயணித்தோம். அப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்றும், ஈரோடு ஒரு மாவட்டம், கரூர் ஒரு மாவட்டம் என்பதால், இரண்டு மாவட்டங்களையும் இணைக்கிற சாலையாக அந்தச் சாலையிருக்கிறது என்பதால், இச்சாலைக்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என்றும் விரிவாகச் சொன்னார்கள்.

சில இடங்களில் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுகிற அளவிற்கு இடங்கள் இருக்கின்றன. சில இடங்களில் அச்சாலை குறுகிய நிலையில் இருக்கின்றது. எனவே, எங்களுடைய துறையினுடைய செயலாளர், தலைமைப் பொறியாளர் ஆகியோரை அனுப்பி, 10 மீட்டர் சாலையாக மாற்றலாமா அல்லது 4 வழிச் சாலையாக மாற்றலாமா என்று ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். கூடுமானவரையில் 4 வழிச் சாலையாக மாற்ற முடியவில்லையென்றாலும்கூட—ஏனென்றால், வீடுகளையெல்லாம் எடுக்க வேண்டுமென்றால், LA செய்ய வேண்டுமென்றால், பல பிரச்சினைகள் இருக்கின்றன. சாலைகளை விரிவுபடுத்துகிறபோது, வீடுகளை எடுக்க வேண்டியுள்ளது, நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது, வீடுகளை இடிக்க வேண்டியதாகவும் இருக்கிறது. அதனால், மக்கள் நீதிமன்றத்திற்குப் போய்விடுவதால், காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அதை நான்கு வழிச் சாலையாக அமைப்பதா அல்லது 10 மீட்டர் சாலையாக அமைப்பதா என்பது குறித்துத் துறையின் தலைமைப் பொறியாளருடைய ஆய்வுக்குப் பின்னர், முடிவெடுத்து அச்சாலைக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாமக்கல் மாவட்டத்திற்கும், உங்களுக்கும் என்ன சம்பந்தம்? சரி, சொல்லுங்கள்.

முற்பகல் 10–15

திரு. செ. தாமோதரன்: சேலம்-கொச்சி சாலை, கோவைக்கு அருகிலேயே ஆறு வழிச் சாலையாக சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பாதையில் இடைப்பட்ட பகுதியான நீலாம்பூர் முதல் மதுக்கரை வரை உள்ள சாலை இன்னும் இருவழிச்

2023 மார்ச் 30]

சாலையாகவே இருக்கிறது. ஆனால், 4 வழிச் சாலைக்குத் தேவையான நிலமும் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வழியில் போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும், ஒரு சில நேரங்களில் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதாலும், இவற்றைத் தவிர்க்கின்றவகையில், இந்த இருவழிச் சாலையினை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும், இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டில் இருப்பதாக தெரிய வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அந்தச் சாலைக்குப் பரிந்துரை செய்து, விரைவில் இருவழிச் சாலையினை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும். மேலும், அந்த இடைப்பட்ட பகுதியில் பொள்ளாச்சி-கோவை சாலை இருக்கிறது. அதற்கும் ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களது கேள்வி. நியாயமான ஒரு கேள்வி. ஏனென்றால் அந்த இரு பகுதிகளும் 6 வழிச் சாலையாக உள்ளன. இடையில் 27 கி.மீ. இருவழிச் சாலையாக போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு அந்தச் சாலை L&T நிறுவனம்மூலம் அமைக்கப்பட்டது. அப்பணியினைப் பொறுத்தவரையில், பொதுப் பணித் துறைக்கு 2029 ஆம் ஆண்டு வரையில் கால அவகாசம் உள்ளது. இதற்கிடையில் நான் ஒன்றிய அரசின் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரான மாண்புமிகு நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்து, 'இது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினால். மாநில நெடுஞ்சாலையை வைத்திருக்கிற நாங்கள் ஏதும் செய்ய இயலாத நிலை உள்ளது, எனவே நீங்கள் இதனை விரைந்து 4 வழிச் சாலை அல்லது 6 வழிச் சாலையாக மாற்ற வேண்டும்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கேட்ட கேள்வியை நானே ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் வைத்தேன். அதன் பின்னர், L&T அதிகாரிகளை அழைத்துப் பேசினார்கள். அப்போது அவர்களிடம், 'இதனை 4 வழிச் சாலையாக மாற்றித் தாருங்கள்' என்று கேட்டபோது, 'ஆக்கித் தருவோம்' என்று*

சொன்னார்கள். ஆனால், அதையும் செய்யவில்லை. அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுதில்லி சென்றிருந்தபோது, நானும் அவருடன் சென்று ஒரு கடிதம் கொடுத்தோம். அந்த இடத்தில் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அவர்கள் எல்லைக்குப் பக்கத்திலேயே அந்தச் சாலையிலாவது, bypass சாலையை 6 வழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டும் என்றோம். ஏனென்றால், கேரள மாநிலத்திற்குச் செல்லும் கனரக வாகனங்கள் அதிக அளவில் அந்தப் பகுதியில்தான் வேகமாக போய்க்கொண்டிருக்கின்றன என்று சொன்னவுடன் தற்போது தேசிய நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளரை அழைத்துப் பேசி, ஒன்றிய அரசாங்கம் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறது. தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, L&T சாலை அமைக்க வேண்டும்—இல்லையென்றால், அருகிலேயே 4 வழிச் சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடம்பூர், புளியம்பட்டி தெய்வச் செயல்புரம் செல்லும் சாலை, அகலம் 3.75 மீட்டரும், நீளம் 12 கி.மீ. கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. புளியம்பட்டி புனித அந்தோணியார் ஆலயத்திற்கு அதிக அளவிலான பக்தர்கள் வாகனங்களில் வருகை தருவதால், வாகனங்கள் செல்வதற்குக்கூட சிரமமாக இருக்கிறது. அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கடிதம் கொடுத்துள்ளேன். அப்பகுதி மக்களின் நலன் கருதி அந்தச் சாலையை 5.50 மீட்டருக்கு அகலப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். நேற்றையதினமே

2023 மார்ச் 30]

நான் தலைமைப் பொறியாளரை அழைத்து, அது முக்கியமான சாலையாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நிதியாண்டிலேயே அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். மானியக் கோரிக்கை விவாதங்கள் முடிந்தவுடனேயே திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டிலேயே சாலை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

***26561—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலம், சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட எஸ்.518 அ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் புதிய நவீன கட்டடம் கட்டப்பட்டு, 15-6-2013-ல் திறக்கப்பட்டு, சங்கம் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது சங்கத்திற்குப் புதிய கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் கழகத்தின் பொதுச் செயலாளரின் ஆசியோடு இக்கேள்வியினை கேட்கிறேன். அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டியில் சங்கத்தின் கூடுதல் கட்டடம் இருக்கிறது. நிருவாக வசதிக்காக வேண்டிதான் மற்றொரு கூடுதல் கட்டடம் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தக் கூடுதல் கட்டடத்தையும், அந்தப் பகுதியிலுள்ள இரண்டு கிராமங்களையும் சேர்த்து, ஒரே society bit 1, bit 2 என்ற கிராம கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. Bit 1, bit 2 இரண்டிற்கும் ஒரே society ஆக இருக்கின்ற காரணத்தினால், அதிக அளவிலான மக்கள், தங்கள் நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக அச்சங்கத்தில் வைக்கிறார்கள். எனவே, அதற்கு சுற்றுச் சுவரும் அமைத்துத் தர வேண்டும்.

முற்பகல் 10-20

அதேபோல, நகைக் கடனில், ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டது போக, மறுபரிசீலனைக்காக மீண்டும் முறையீடு செய்தவர்களுடைய கடன் விண்ணப்பத்திற்கு இதுவரை தள்ளுபடியா, இல்லையா என்று தெரிவிக்காமல், இரண்டு ஆண்டுகளாகக் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அது தள்ளுபடியா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நகைக் கடனில் ஒரு வருடத்திற்கு 20 சதவீதம் என்று, 5 வருடங்களுக்கு பொது நகைக் கடன் தள்ளுபடி இருக்கிறது. அதில் 8 சதவீதம், 9 சதவீதம் மட்டுமே ஆண்டாண்டிற்கு அந்தந்த சங்கங்களுக்கு கொடுப்பதனால், சங்கங்கள் நலிவடைந்து வருகின்றன. அந்த நிதியையும் உடனடியாக தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டிருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவுச் சங்கமானது, நல்ல நிலையில் இயங்கக்கூடிய

2023 மார்ச் 30]

சங்கமாக இருக்கிறது. ஏறத்தாழ, 20 கோடி ரூபாய் அளவில் நகைக் கடன் வரவு-செலவு செய்யக்கூடிய கூட்டுறவுச் சங்கமாகும். அதைப்போல பயிர்க் கடன், இன்னும் இதர வகைகள் என்று 20.92 கோடி ரூபாய் அளவிலான வரவு-செலவுகள் நடைபெறுகின்ற சங்கமாகவும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அளவிற்கு இன்னும் கூடுதலான கட்டடத்தை நிர்வாக வசதிக்கென்று கேட்கின்றார்கள். ஏழு நியாய விலைக் கடைகளும் அதனுள் இருக்கின்றன. தேவைப்பட்டால், துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எடப்பாடி ஐயா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஏற்காட்டில் கூட்டுறவு பயிற்சி மையம் ஒன்று 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. பாதி வேலைகள் நடந்து முடிந்த நிலையில், அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. எனவே, இதற்கு முன் இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஆரம்பிக்காமல் விட்டுவிட்டார். தற்போதுள்ள, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களாவது பெரிய மனது வைத்து, இதனை ஆரம்பிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எப்போதுமே பெரிய மனசுதான்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

[2023 மார்ச் 30

74—

நினைவுச் சின்னம்

***51562—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, நங்கவரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குளித்தலை தொகுதி, நங்கவரத்தில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். 1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்தில், அந்தத் தொகுதிக்குட்பட்ட நங்கவரம் பகுதியில், நங்கவரம் பண்ணையாளர்களின் ஆதிக்க வெறியினால் அநீதி இழைக்கப்பட்ட விவசாய பெருங்குடி மக்களுக்காக, 'உழுத நிலம் உழுதவனுக்கே சொந்தம்' என்ற உரிமையை மீட்டுக் கொடுக்க, மாபெரும் போராட்டத்தை நடத்தினார். 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அந்தப் பகுதியிலே 10 நாட்களுக்கும் மேலாக தங்கியிருந்து, 10,000–க்கும் மேற்பட்ட விவசாய பெருங்குடி மக்களை ஒன்று திரட்டி, மாபெரும் போராட்டத்தை நடத்தி, பண்ணையாளர்களிடமிருந்து நிலங்களை மீட்டுக் கொடுத்து, ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றினார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் விவசாயக் குடும்பத்தினர், அவர்களின் சந்ததியினர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை தெய்வமாக வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதே அவையில் 66 ஆண்டுகளுக்கு முன்பு 4–5–1957–ல் முத்தமிழறிஞர்*

2023 மார்ச் 30]

டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களது கன்னிப் பேச்சில், 'கையேறு வாரம், மாட்டேறு வாரம்' என்ற அடிமைத்தனத்தை எதிர்த்து, 'நாடு பாதி; நங்கவரம் பாதி' போராட்டம் பற்றி பேசியிருந்தார். அந்தக் கன்னிப் பேச்சு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக விளங்கியது. அப்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. கிருஷ்ணாராவ் அவர்கள், 'very good speech' என்று துண்டுச் சீட்டு எழுதி அனுப்பினார். அன்றைய அமைச்சரும், பிற்காலத்தில் முதலமைச்சராகவும் இருந்த காங்கிரஸ் தலைவர், பெரியவர் திரு. பக்தவச்சலம் அவர்கள், 'நான் கலைஞரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன், இன்று அவருடைய பேச்சைக் கேட்டு வியந்தேன்' என்று பாராட்டினார். (மணியடிக்கப்பெற்றது) சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நங்கவரம் போராட்டத்தின் வரலாற்றை. பிற்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும் வகையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற இந்த ஆண்டில், போராட்டம் நடைபெற்ற நங்கவரம் பகுதியில் நினைவுச் சின்னம் அமைத்து, கலைஞர் அவர்களுக்குப் புகழ் சேர்க்க வேண்டுமாய் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் முதல் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களையும் தங்கள் வாயிலாக மெத்தப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுடைய போராட்டம் என்பது மிகப் பெரியதும், வரலாற்றிலே குறிப்பிட வேண்டிய ஒன்றும் ஆகும். நமது தாய்மொழிக்கு வந்த ஆபத்தை எதிர்த்து போராடத் துவங்கியதிலிருந்து, நங்கவரம் விவசாயிகளுக்காக இருந்தாலும் சரி, தொழிலாளர் தோழர்களுக்காக இருந்தாலும் சரி, அனைத்துப் போராட்டங்களையும் கையிலெடுத்து, அன்றைக்கு மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடினார்கள். எனவே, நூற்றாண்டு காணக்கூடிய இந்தக் காலகட்டத்தில், முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்கின்றபோது, அனைத்து இடங்களிலும்கூட வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கும். இருந்தாலும், விவசாயிகளுக்காக அன்றைக்கு நடந்த*

இந்தப் போராட்டம் குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஏற்கெனவே வரலாற்றில் இடம் பெற்ற ஒரு போராட்டம். எனவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதுகுறித்து துறை நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம், நன்றி சொல்லி அமருங்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *துறை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பைக் கொடுத்த மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலத்திற்குச் சென்றிருந்தபொழுது,* Modern Theatres*-னுடைய சிறப்புகளை எல்லாம், அந்த திரையரங்கம் முன்பு நின்று சொல்லியிருந்தார். அப்படிப்பட்ட* Modern Theatres*-னுடைய நிறுவனர் திரு.* T.R. *சுந்தரம் அவர்கள், திருச்செங்கோட்டில் பிறந்தவர். அவருக்கு அங்கே ஒரு நினைவிடம், மணிமண்டபத்தோடு கூடிய அரங்கம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் நன்கு அறிவார்கள். இருந்தாலும், நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G.V. *மார்க்கண்டேயன் அவர்கள்.*

2023 மார்ச் 30]

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், வடமலாபுரம், அரவிந்த் கண் மருத்துவமனையினுடைய நிறுவனர், திரு. வெங்கடசாமி அவர்கள் பிறந்த ஊர். அவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மருத்துவம் பார்த்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமெரிக்கப் பயணத்தின்போது, அமெரிக்க நாட்டில் அவர் பணி செய்து கொண்டிருந்தார். முத்தமிழறிஞர் அவர்கள், அவரை அழைத்து வந்து, தமிழகத்திலே கண் மருத்துமனையைத் தொடங்க வைத்து, ஒரு துறையை அரசின் சார்பிலே உருவாக்க வைத்தார்கள். அவர் பத்மவிபூஷண், பத்மபூஷண் போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றவர். நாடு முழுவதும், புரை நீக்குதல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காகவும், கண்ணொளி வழங்குவதற்காகவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். சுதந்திரப் போராட்ட தியாகிகள், கலை இலக்கிய உணர்வாளர்கள் என மற்ற பல்வேறு சிறப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன், என்ன வேண்டுமென்று கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மற்றவர்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிலைகளை நிறுவியும்,மணிமண்டபம் அமைத்தும்,புகழைச் சேர்த்திருக்கிறார்கள். அதுபோன்று, அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனரான திரு. வெங்கடசாமி அவர்களுக்கு, அவர் பிறந்த ஊரான விளாத்திகுளம் தொகுதியில் நினைவிடம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனர் திரு. வெங்கடசாமி அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய திருச்செங்கோடு தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுக்கு சொன்ன பதிலையே இதற்கும் தெரிவிக்கிறேன். எதிர்காலத்திலே, பரிசீலிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

தெரு விளக்குகள்

***38274—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, வாழக்கரை ஊராட்சி, தெற்குத் தெருவில் மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, வாழக்கரை ஊராட்சியில், தெற்குவெளி செல்லும் சாலை என்ற இடத்திற்கு 35 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைப்பதற்கு 31–1–2023 அன்று விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ஊராட்சியால் செலுத்தப்பட்டு, உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 27–2–2023 அன்று, நாகப்பட்டினம் S.E. அவர்களால் உரிய அனுமதி வழங்கப்பட்டது. 17–3–2023 அன்று இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.8,22,890/– திருக்குவளை பிரிவு அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தெரு விளக்குகள் அமைப்பதற்கான 35 மின் கம்பங்கள் நடப்பட்டு, மூன்றரை கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் பாதை அமைக்கப்பட்டு வருகின்றது. பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, அதற்கான மின் இணைப்புகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, வாழக்கரை ஊராட்சியில், தெற்குத் தெருவில் மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிற மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைந்து அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், சிகார் ஊராட்சி, சிகார் எடையாற்றுப் பாலம் முதல் முடித்தளம் சாலை வரையும், சிகார் தெற்குத் தெரு முதல் எடையாற்றுப் பாலம் வரையும், மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 முதல் 2021 வரை வழங்கப்பட்ட தெரு விளக்குகள் மற்றும் குடிநீர்த் திட்ட மின் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 51,729. ஆனால், நம்முடைய திராவிட முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2021 முதல் 2023 பிப்ரவரி வரை 48,779 தெரு விளக்குகள் மற்றும் குடிநீர்த் திட்ட பணிகளுக்கான மின் இணைப்புகள் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தத் தெருக்களுக்கு ஊராட்சியின்மூலம் முறையான விண்ணப்பங்கள் வரப்பெற்றால், அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஊராட்சிக்கு அனுப்பப்படும். அதற்குரிய நிதியை ஊராட்சியானது, செலுத்திய பிறகு, விரைவாக மின் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2023 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே, மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைப்பதற்கு ஊராட்சியிலிருந்து கடந்த 24 ஆம் தேதி பணம் செலுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை விரைந்து தாங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது தொகுதியான கீழ்வேளூரில் 33 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இடமும் தேர்வாகியிருக்கிறது. அதையும் தாங்கள் விரைந்து முடித்துத் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதியில் ஏற்கெனவே, நீங்கள் குறிப்பிட்ட இடங்களில், கட்டணம் செலுத்தப்பட்ட பகுதிகளுக்கு, ஒரு வாரக் காலத்திற்குள் மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு, தெரு விளக்குகளுக்கான இணைப்புகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, முன்னுரிமை அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில், விவசாயிகளுக்கு பகலில் 6 மணி நேரம்தான் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகின்றது. 24 மணி நேரமும் அந்த விவசாயிகளுக்கு 3* phase current *வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்வாரா என்று சிறப்பாகச் செயலாற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி மின்மாற்றி அமைப்பது பற்றியதுதான். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மின் வாரிய தலைமை அலுவலகத்தில் ஏற்கெனவே ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 18 மணி நேரம், விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்குவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இடங்களில், அப்படி ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், இன்றே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, தவறு இருக்கும்பட்சத்தில், உரிய நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, இருபெரும் தலைவர்களையும் வணங்கி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அய்யா எடப்பாடியார் அவர்களை வாழ்த்தி, வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில், புதியதாக உருவாக்கப்பட்ட கெங்கவல்லி மின் வாரியக் கோட்ட அலுவலகம், ஆத்தூர் கோட்ட அலுவலகம், வாழப்பாடி கோட்ட அலுவலகம் ஆகிய மூன்றையும் இணைத்து, ஆத்தூரைத் தலைமையிடமாக கொண்டு, புதியதாக மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கோட்டப் பொறியாளர் அலுவலகங்களுக்கு தனியாக அலுவலர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மூன்று புதிய மண்டல அலுவலகங்கள், 11 கோட்ட அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்தப் பகுதியில், அவசியம் ஏற்படின், மின் இணைப்புகளுக்கேற்ப, அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே தொடங்கப்பட்ட அலுவலகங்களுக்குத் தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கேனும் காலிப் பணியிடங்கள் இருந்தால், அவற்றையும் விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

பருத்தியைக் கொள்முதல் செய்ய தனி ஆணையம்

***422—திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தியைக் கொள்முதல் செய்து, நூற்பாலைகளுக்கு நேரடியாக விற்பனை செய்ய தனி ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 மார்ச் 30]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பருத்தி கழகம் என்ற நிறுவனம் அமைக்கவும், தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியைக் கொள்முதல் செய்து நேரடியாக விற்பனை செய்வதற்கும், உரிய நேரத்தில் தனி ஆணையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

முற்பகல் 10-35

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, திருப்பூர் தெற்கு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் அண்ணன் திரு. செல்வராஜ் அவர்களின் சார்பிலும், அவர் தொகுதி மக்களின் சார்பிலும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆணையம் ஏன் அமைக்கப்பட வேண்டுமென்றால், அப்போதுதான் ஒரு நிலையான விலை கிடைக்கும். அப்படிக் கிடைத்தால்தான், பருத்தி விளைவிக்கிற விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். இப்போது பருத்தியை வெளி மாநிலங்களிலிருந்து நாம் விலை கொடுத்து வாங்குவதால், நூலின் விலை உயர்ந்து, நூற்பாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த ஆணையம் அமைக்கப்பட்டால், விவசாயிகள், நூற்பாலைகள் மட்டுமின்றி, ஆயத்த ஆடைத் தொழிலில் ஈடுபடுபவர்களும், பெரிதும் பயன்பெறுவார்கள். எனவே, இந்த ஆணையம் அமைக்கப்படவிருக்கின்ற நல்ல சூழ்நிலையில், கடந்த காலங்களிலிருந்த சூழ்நிலைகளையெல்லாம் அரசும், நம்முடைய துறையும் கருத்திற்கொண்டு, அனைத்து நூற்பாலைகள், விவசாயிகள், ஆயத்த ஆடைப் பணிகளில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் ஆகியோருக்கு இருந்த நெருக்கடியான சூழ்நிலைகளையெல்லாம் உணர்ந்து, எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய ஓர் ஆணையமாக இந்த ஆணையம் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றவுடன், நான் இந்தத் துறைக்கு அமைச்சரான பிறகு, முதன்முதலில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினேன். அந்த ஆய்வுக் கூட்டத்தில், அவர்கள் வைத்த முதல் கோரிக்கை, அந்த நூற்பாலைகளுக்கு Cotton Corporation of India-விடமிருந்துதான் நூல் வாங்குகிறோம் என்றும், இது வெளி மாநிலங்களிலிருந்துதான் வர வேண்டும் என்றும், அதற்கு cess வரி 1% ஆக இருக்கிறது என்றும், அந்த cess வரியை நீக்க வேண்டுமென்று நாங்கள் கடந்த 20 ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்றும், இதுவரை எந்த அரசும் இதை செய்து தரவில்லை என்றும், நீங்கள் இதைச் செய்து தந்தீர்களென்றால், உடனடியாக Cotton Corporation of India-ன் godown-ஐ இங்கேயே அமைத்து எங்களுக்கெல்லாம் supply செய்வார்கள் என்றும், அதையும் private traders-ஐ வைத்து supply செய்வார்கள் என்றும் சொன்னார்கள். நான், உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்து, அவர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றி எடுத்துக் கூறினேன். இதைச் சொன்னவுடன் யாரும் உடனே செய்துவிட மாட்டார்கள். இது உண்மையா, பொய்யா என்று பார்த்து, இது தேவையா என்பதை ஆய்ந்தறிந்துதான் செய்வார்கள். ஆனால், இதுபோன்ற ஒரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாம் பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொன்னவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10, 15, 20 நாட்களிலேயே சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துச் சொல்லி, cess வரி 1%-ஐ நீக்கிய ஒரே முதலமைச்சர் யாரென்றால் அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு பிறகு, அன்றைய தேதியில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு வருடங்களுக்கு முன்பு cotton விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். உடனடியாக தனியாரெல்லாம் இங்கே வந்து தொழிலைத் தொடங்க ஆரம்பித்தார்கள். இன்னும் CCI-Cotton Corporation of India தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்படவில்லை.

அதற்குப் பிறகு, cotton விலை கடந்த ஆண்டு அதிகமாக இருந்ததற்குக் காரணம், 11% import duty இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் Thiru Piyush Goyal அவர்களைப் பல முறை

2023 மார்ச் 30]

பார்த்து, தொடர்பு கொண்டு பேசி, அந்த 11% import duty*–ஐ நீக்கியதும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை நல்ல கோரிக்கைதான். அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது. நம்முடைய மொத்த தேவை 120 இலட்சம் பேல்கள். ஆனால், தமிழ்நாட்டில் இதற்கு முன்னர் 5 இலட்சம் பேல்கள்தான் விவசாயிகள்மூலம் தயாராகி வந்தன. இப்போது அது* increase *ஆகி, கிட்டத்தட்ட 15 இலட்சத்திற்கு வந்திருக்கிறது. 7 இலட்சம் பேல்கள்* import *செய்கிறோம். சுமார் 100 இலட்சம் பேல்கள் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி,* CCI *போன்ற அமைப்புகள் தேவை. தமிழ்நாட்டில் பஞ்சு பேல்களை தங்குதடையின்றி விநியோகம் செய்வதற்கு, தனியார் நூற்பாலை பிரதிநிதிகளும்* SIMA–Southern India Mills' Association *என்ற கூட்டமைப்பும், கூட்டுறவு நூற்பாலை பிரதிநிதிகளும் சேர்ந்து* Public–Private Partnership model*–ல் தமிழ்நாடு பருத்திக் கழகம் என்ற பெயரில் ஆரம்பித்தோம் என்றால், நிச்சயமாக அது நன்றாக இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் ஆலோசித்து நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு.* N. *அசோக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

பேருந்து வசதி

***52655—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்குவதற்கான திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்களது எதிர்காலம் இளைய தளபதியை வணங்குகிறேன்.*

பேராவூரணியிலிருந்து திருப்பதிக்குச் செல்ல தஞ்சை, புதுக்கோட்டை மற்றும் திருச்சி போன்ற நகரங்களுக்குச் சென்று, பின்பு அங்கிருந்து பேருந்துகள் மூலமாக திருப்பதிக்குச் செல்கின்றோம். எனவே, பேராவூரணி தொகுதி மக்களின் சிரமத்தைப் போக்கும்விதமாக, பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க, மறுபரிசீலனை செய்து, அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அசோக்குமார் அவர்களின் கோரிக்கையை, அவருடைய பகுதி மக்களுடைய கோரிக்கையாக வைக்கிறார். ஆனால், பேராவூரணியிலிருந்து 23 கி.மீ. தொலைவில்தான் பட்டுக்கோட்டை இருக்கிறது. பட்டுக்கோட்டையிலிருந்து ஏற்கெனவே, தினசரி ஒரு பேருந்து திருப்பதிக்கு இயக்கப்படுகிறது. அதற்கு முன்பதிவு செய்வதற்கு* online *வசதியும் உள்ளது. எனவே, அண்ணன் அசோக்குமார் அவர்கள்* online *மூலமாகப் பதிவு செய்துகொண்டு, 23 கி.மீ. பயணம் செய்தால் பட்டுக்கோட்டையிலிருந்து நேரடி பேருந்தில் திருப்பதிக்கு பயணிக்கலாம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைகோடி பகுதியானது, எங்கள் பேராவூரணி தொகுதி. பேராவூரணி அரசு பேருந்து பணிமனையிலிருந்து மாவட்ட தலைநகர் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி போன்ற நகரங்களுக்கு பேருந்து வசதி கிடையாது. மேலும், இரவு 8 மணிக்குமேல் வெளியூரிலிருந்து வருபவர்கள், பேராவூரணிக்கு வந்தடைய பேருந்துகள் இயக்கப்படவில்லை. எனவே, புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதிக்குப் பேருந்து இல்லை என்றவுடன், இன்னும் கூடுதலாகப் பேருந்து வசதியைக் கேட்கிறார். எனவே, முதலில் திருப்பதி பிரச்சினையை முடித்துவிடுகிறோம். திருப்பதிக்கு பட்டுக்கோட்டையிலிருந்து இயக்குகின்ற பேருந்தை பேராவூரணி வரை நீட்டிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். அதேநேரத்தில் பட்டுக்கோட்டைக்குத் தேவையான எண்ணிக்கையில்* seat *வசதிகளையும், முன்பதிவுக்கான ஏற்பாடுகளையும் செய்து, அந்தப் பேருந்து இயக்கப்படும். இந்த புதிய வழித் தடங்கள் குறித்து, புதிய பேருந்துகள் வந்தபிறகுதான், நடவடிக்கை எடுக்க இயலும். ஏற்கெனவே, ஒன்றிய அரசு 15 ஆண்டுகாலம் இயங்கிய பேருந்துகளை* scrap *செய்ய வேண்டுமென்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதுபோக, மீதியிருக்கின்ற பேருந்துகளை புதிய வழித்தடத்தில் இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 மார்ச் 30

78—

சுற்றுச்சுவர்

***1958—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, சாக்கோட்டை அருள்மிகு அமிர்தகலசநாதர் திருக்கோயில் குளத்தைச் சீரமைத்து, சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சாக்கோட்டை பகுதியிலிருக்கின்ற அமிர்தகலசநாதர் திருக்கோயில் குளத்திற்குத் தூர்வாரும் பணிக்கு, 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தில் யாரும் பங்கேற்காததால், மீண்டும் திருத்திய மதிப்பீடுகளோடு வெகு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட இருக்கின்றது. அதோடு, அவர் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையும் வைத்திருக்கின்றார். அந்தக் குளமானது 3 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள திருக்குளம். ரூ.25 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. உபயதாரர்கள் வருவதற்குண்டான கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. ஒருவேளை உபயதாரர் கிடைக்காதபட்சத்தில், ஆணையரின் பொது நல நிதியில், அந்தக் குளத்திற்குச் சுற்றுச்சுவர் ஏற்படுத்தித் தரப்படும். குளத்திற்குத் தூர்வாரும் பணிக்கு, வெகுவிரைவில் திருத்திய மதிப்பீட்டோடு ஒப்பந்தம் கோரப்பட்டுப் பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

2023 மார்ச் 30]

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பிற்கினிய முதல்வர் அவர்களையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சாக்கோட்டை கிராமத்தில் அமைந்திருக்கிற அருள்மிகு அமிர்தகலசநாதர் திருக்கோயில், இராஜராஜசோழனுக்கு முன்னர் சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முன்பாக கற்றளியாகக் கட்டப்பட்டது என்றும், பின்னர் 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 3 ஆம் குலோத்துங்க சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் 17 ஆம் நூற்றாண்டில் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டது என்பதும், கல்வெட்டு வாயிலாகத் தெரிய வருகிறது. அப்பர், சுந்தரர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர், இந்த நால்வரில் ஒருவரான சுந்தரரால் பாடப்பெற்றது அந்தத் திருக்கோயில். அந்தத் திருக்கோயிலைச் சுற்றி 3 புறமும், 3 ஏக்கர் 26 சென்ட் பரப்பளவுள்ள அந்தக் குளம், நல்ல அகழியைப் போன்று அமைந்திருக்கின்றது. அந்தக் குளத்திற்கு ஏற்கெனவே 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதியை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அந்த நிதி போதுமானதாக இல்லை என்று சொல்லி, யாரும் ஒப்பந்தம் எடுக்க முன்வரவில்லை. மேலும், கோயிலைச் சுற்றி சுமார் 150 குடும்பங்கள் குழந்தைகளுடன் வசித்து வருகின்றன.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

திரு. க. அன்பழகன்: *ஒரு நிமிடம். அவர்களின் பாதுகாப்பு கருதி அந்தக் குளத்தை முழுமையாகத் தூர்வாரி, தடுப்புச் சுவர் அமைத்துத் தருவதற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கி, பணியைச் செய்து தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும், மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

திரு. க. அன்பழகன்: *கேள்வியை முழுமையாகக் கேட்டால்தான் பதில் பெற முடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். நன்றி சொல்லிவிட்டார் அல்லவா!

வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: எனக்கு, இரண்டாவது துணைக் கேள்விக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்லி அமர்ந்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். இன்னொரு கேள்வி இருக்கிறது. அவர் கேட்டதற்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) 5 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள், ஆனால், கேள்வியே வரவில்லை. (குறுக்கீடு) என்ன செய்ய வேண்டும், கேள்வி என்ன என்பதை தற்போது சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன்: அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர் ஆகிய நாயன்மார்களால் பாடப்பெற்ற திருத்தலமான அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயிலின் தெற்கு கோபுரம், மொட்டைக் கோபுரமாக உள்ளது. அந்த மொட்டைக் கோபுரத்தை 7 நிலை இராஜகோபுரமாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதையும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு ஆவன செய்யுமா, அவ்வளவுதானே! மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி உங்களுக்கு இருக்கிறது.

திரு. க. அன்பழகன்: இல்லை, ஒரேயொரு நிமிடம். மகாமகத் திருக்குளத்திற்கு வருடந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வருகை தருகிறார்கள். முன்னோர்களுக்குத் திதி கொடுப்பதற்காக ஆயிரக்கணக்கானோர் கூடுகிறார்கள். அந்த விழாவை அரசு விழாவாக அறிவித்து, உள்ளூர் விடுமுறை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, செய்து கொடுப்பார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயிலில் மொட்டைக் கோபுரமாக இருப்பதை 7 நிலை இராஜகோபுரமாக அமைப்பதைப் பொறுத்தவரையில், தொல்லியல் துறை வல்லுநர்களை அனுப்பி ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருக்கின்றபட்சத்தில், நமது மண்டலக் குழு, மாநிலக் குழுக்களின் ஒப்புதலோடு, அந்த இடத்தில் இராஜகோபுரம் கட்டும் பணியை மேற்கொள்ள அரசு முயற்சிக்கும். அதேநேரத்தில், அவர் கேட்ட மாசி மகத் திருவிழா என்பது notified festival list-ல் வரவில்லை. மகாமகத் திருவிழாதான் notified festival list-ல் இருக்கின்றது. உள்ளூர் விடுமுறை என்பது மாவட்ட நிர்வாகமும், ஆட்சியரும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு. ஆகவே, துறைக்கு அதில் எந்தவிதமான தடையும் இல்லை.

மேலும், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 2022-2023 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 7 இராஜகோபுரங்களுக்கு ஒப்புதல் வழங்கி, 38 கோடி ரூபாய் செலவில் இராஜகோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவர் கோரிய ஆதி கும்பேஸ்வரர் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டுவதைப் பொறுத்தவரையில், சாத்தியக்கூறுகள் இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுட்டத்தில் வைணவத் திருத்தலமும், சைவத் திருத்தலமும் உள்ளது. நித்தீஸ்வரர் ஆலயம் இருக்கிற இடத்திலே ஒரு தெப்பக்குளம் அமைந்திருக்கிறது. மன்னராட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கிற அந்த தெப்பக்குளத்தில் படிக்கட்டுகள் ஆழமாக இருக்கின்றன. அண்டை மாநிலங்களிலிருந்து வருகின்ற பக்தர்கள் அந்த ஆழத்தின் தன்மை புரியாமல் அதில் இறங்கி,

கீழே விழுந்துவிடுவதால், ஆண்டொன்றிற்கு ஒன்றிரண்டு உயிர்ப் பலிகள் ஏற்படக்கூடிய சூழல் இருக்கின்றது. ஆகவே, அந்தத் தெப்பக்குளங்களின் படிக்கட்டுகளை, உயிர்ப்பலி நிகழாத வகையிலே, சாய்கோணத்தில் சரிசெய்து தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுட்டத்திலே இருக்கின்ற தெப்பக்குளம் என்பது மன்னராட்சியில் கட்டப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். நம்முடைய தளபதி மன்னராட்சி ஏற்பட்ட பிறகு, 2,359 திருக்குளங்கள் இருக்கின்ற 1,586 திருக்கோயில்களில், இதுவரையில் சுமார் 80 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் சொன்ன இந்தத் தெப்பக்குளத்தையும் உடனடியாக இணை ஆணையர் அவர்களை வரச் சொல்லி, ஆய்வு செய்து திருப்பணி செய்வதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தால், கூடிய விரைவில் பணிகளை எடுத்து, நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

முற்பகல் 10-50

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தில், வேதாரண்யேஸ்வரர் கோயில் மூலவருக்கு திருத்தேர் அமைக்கப்பட்டுவிட்டது. மேலும், 4 சின்ன சின்ன திருத்தேர்கள் அமைப்பதற்கான கருத்துரு ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வி போதும்.

2023 மார்ச் 30]

திரு. ஓ.எஸ். மணியன்: ஔவையாருக்கு தமிழ்நாட்டிலேயே ஒரே கோவில் எங்கள் ஊரில்தான் இருக்கிறது. ஏற்கெனவே அதற்கு மணிமண்டபம் கட்டுவதற்கான அறிவிப்பு செய்தீர்கள். அதுகுறித்த நடவடிக்கையையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலைப் பொறுத்தளவில், 46 பிரிவு (3)-ன்கீழ் இருக்கின்ற திருக்கோயில். போதிய வருமானம் இல்லாத நிலையிலேயும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஆணையர் பொது நல நிதியில், அது உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, திருத்தேர் செய்வதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதோடு, 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற வார்த்தைக்கு இலக்கணமாக, மக்கள் வாழ்வில் அன்றாடம் பின்னிப் பிணைந்திருக்கின்ற வார்த்தைகளை உதிர்த்த, ஔவையார் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதியோடு ஒரு மணிமண்டபத்தை கட்டித் தருவதாக 2022–2023 ஆம் ஆண்டு ஓர் அறிவிப்பினை வெளியிட்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், அந்த மணிமண்டபத்திற்கான முதல் சுற்று வரைபடத்தை இன்னும் அனைவரும் பாராட்டுகின்ற அளவிலே சிறப்பான ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று புதிய வரைபடத்தை உருவாக்கச் சொன்னார்கள். அந்த வகையிலே, சுமார் 12 கோடி ரூபாய் செலவில், ஔவையாருக்கு ஒரு மணிமண்டபத்தைக் கட்டுவதற்குண்டான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கூடியவிரைவில், 3, 4 மாத காலங்களுக்குள்ளாக, அந்தப் பணிகளைத் துவக்குகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்தத் துவக்க விழாவிலே பங்கேற்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் இருக்கிற முக்கியத்

திருத்தலங்களில் ஒன்று அருள்மிகு சிக்கல் சிங்காரவேலர் கோயில். அங்குள்ள குளம் மிகவும் சிதிலமடைந்திருக்கிறது. அந்தக் குளத்தைத் தூர்வாரி, படித்துறை அமைத்து, சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைத்துத்தர ஆவன செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி அறிவிப்பை 2021–2022 ஆம் ஆண்டு அறிவித்திருந்தோம். 2022–2023-ல் 19 பணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவிலே, அந்தத் திருப்பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் வைத்த அந்தக் கோரிக்கையும், இந்தத் திருப்பணியிலே வருகின்றபடியால், முழுவதுமாக இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள், அந்தத் திருக்கோயிலினுடைய கும்பாபிஷேகம் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

தங்கும் விடுதிகள்

***15039—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம், விளாங்குறிச்சி, சேரன்மாநகர் மற்றும் சரவணம்பட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம், விளாங்குறிச்சி, சேரன்மாநகர் மற்றும் சரவணம்பட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் ஆசியோடு, இன்று கழகத்தின் 1½ கோடி தொண்டர்களால் கழகப் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். என் தொகுதிக்குட்பட்ட, மாண்புமிகு அமைச்சர் கூறிய பகுதியிலே, IT நிறுவனங்கள்; சிறு, குறு நிறுவனங்கள் எல்லாம் இருப்பதால், வெளியூரிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் வந்து வேலை பார்க்கும் அந்தத் தொழிலாளர்கள், அதிக வாடகை கொடுத்து தனியார் விடுதி மற்றும் வீடுகளில் தங்கி வருகின்றனர். இதனால் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆதலால், இதனைப் பரிசீலித்து, ஒரு தங்கும் விடுதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் சுற்றுலாத் தலங்களில் விடுமுறை இல்லங்கள் கட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த விடுமுறை இல்லங்களில், தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்கிப் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம் 1972, பிரிவு*

[2023 மார்ச் 30

17(2)(f)–ன்படி தொழிலாளர்கள் தங்கும் விடுதி (Dormitory) கட்ட வழிவகை செய்யப்படவில்லை என்பதால், கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம், விளாங்குறிச்சி, சேரன்மாநகர், சரவணம்பட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்றாலும், மாணவச் செல்வங்களின் நலன் கருதி துறை சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்கின்றேன். கவுண்டம்பாளையம் பகுதியில் இயங்கிவரும், 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள வகுப்பறைகள் எல்லாம் பழுதடைந்துள்ளன. அதைப்போல, அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கு கூட்டரங்கு ஒன்று தேவைப்படுகிறது. மேலும், அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லை. அதனால், மாலை மற்றும் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் எல்லாம் அங்கு வந்து செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தாங்கள் மேற்கூறிய பணிகளைச் செய்து தருவீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இதுபோன்று 1950, 1960, 1965 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் இருக்கின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு, நான் நேற்று குறிப்பிட்டதைப்போல, உபகரணங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தங்கள் முடிவுற்று, இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே, அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் பழுதடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

2023 மார்ச் 30]

நிச்சயமாக, உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதனைப் பார்வையிட்டு, விரைவிலே அந்தப் பணிகளைச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி தொகுதியில், திருமழிசை சிட்கோ, காக்களூர் சிட்கோ தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான சிறு, குறு தொழிற்சாலைகள் நிரம்பி இருக்கின்றன. அங்கு பெண் தொழிலாளர்கள் நிறையபேர் பணிக்குச் செல்கின்றனர். அவர்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடம் இல்லை. தனியாரிலும் வாடகைக்குச் செல்வதற்கு, வாடகைக் கட்டணம் அதிகமாக இருக்கிற காரணத்தால், வாடகைக்கு குடியிருக்க முடியவில்லை என்ற காரணத்தினால், பெண் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பான நவீன விடுதி கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே ஓர் அரசிடம் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்த பிறகுதான் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவார்கள். எந்தத் தொழிலாளர்களும் சாலைக்கு வராமல், கோரிக்கை வைக்காமலேயே, அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றியிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், நேற்றையதினம், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலோடு, சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பண்ருட்டி தொகுதியில் Lotus Chocolate Company Ltd., நிறுவனம், கடலூர் Shasun Chemicals & Drugs Ltd., கடலூர் Tagros Chemicals India Limited, அரியலூர் The Ramco Cements Limited போன்ற பெரும் தொழில் முதலாளிகள் நடத்துகின்ற நிறுவனங்களில், கொரோனா காலங்களைக் காரணம்காட்டி, அந்தத் தொழிலாளர்களுடன் இரண்டாண்டு, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தர வேண்டிய மாற்று ஊதிய உயர்வு ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தாமல், பொங்கல் போனஸ், தீபாவளி போனஸ் மற்றும் இதர சலுகைகளும் வழங்காமல், அவர்களை அலைக்கழித்து வருகிறார்கள். அதற்காக உண்ணாவிரதம் இருந்தபோது, பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலோடு, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நான் சொன்ன இந்த நிறுவனங்களுடைய முதலாளிகளையோ அல்லது நிர்வாகத்தினரையோ அழைப்பதோடு, தொழிலாளர்களையும் அழைத்து, மாண்புமிகு அமைச்சர் தலைமையில் ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி, கண்ணீரோடு காத்திருக்கிற அந்தத் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு நம்முடைய (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மணி அடித்தது நான். நீங்கள் என்னிடம்தான் பேச வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: பொறுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

2023 மார்ச் 30]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமானது. முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்துள்ளார்கள். தொழிலாளர்களின் நலன் கருதி, தொழிலாளர்களின் தேவைகளை, உணர்வுகளைப் புரிந்து கொண்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்துப் பேசி, நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

இ-சேவை மையம்

***58294—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் இ-சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில், சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு இ-சேவை மையங்கள் அமைக்க வேண்டும் என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களாகிய உங்களுடைய

பேராதரவோடு, சட்டமன்றத்தில் நாம் பயன்படுத்தி வந்த கணினிகளை சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகத்திற்கு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து, அறிவித்தோம். அதனடிப்படையில், 234 சட்டமன்ற உறுப்பினர்களுடைய அலுவலகங்களுக்கும், இ-சேவை பயனாளர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல், இந்த மாமன்றத்தில் ஒரு செய்தியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொகுதியான கொளத்தூர் தொகுதியில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இ-சேவை மையத்தின்மூலம் இதுவரையிலும் 1,369 பரிவர்த்தனைகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, இ-சேவை மையம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் இ-சேவை பயனாளர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்களின் ஆசியோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1½ கோடி தொண்டர்களின் ஒப்பற்ற பொதுச் செயலாளராகத் தேர்வு பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையும், இயக்கத்தையும் காப்பாற்றும் மூன்றாம் தலைமுறை தலைவர், கரும்பு தேசத்து இரும்பு மனிதர், அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன்.

இது என்னுடைய தொகுதிக் கோரிக்கை அல்ல; அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுமக்கள் தினந்தோறும் வந்து செல்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களிலும், இ-சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களும் அறிவித்திருந்தார்கள். அந்த அடிப்படையில், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

2023 மார்ச் 30]

அலுவலகத்திற்கு மட்டுமல்ல, பிற சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி அலுவலகங்களுக்கும் இ-சேவை மையம் அமைப்பதற்குத் தேவையான இ-சேவை பயனாளர் குறியீடுகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் இதுவரையிலும் வழங்கப்படவில்லை.

மேலும், தேவையான counter-களும், தேவையான உபகரணங்களும், அதை செயல்முறைப்படுத்த தேவையான ஆட்களும், network வசதியும் தமிழக அரசின் மூலமாக செய்து தரப்படுமா என்பதையும், அது எப்பொழுது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இரண்டு காரணங்களுக்காகத்தான் இ-சேவை மையங்களை சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் அமைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களில், இந்த இ-சேவை மையங்களை அமைக்கின்ற நேரத்தில், அரசு குறிப்பிட்டிருக்கக்கூடிய பணத்தை மட்டும் வசூல் செய்து, அதற்கு மேலாக வாங்காமல், பொது மக்களுக்கு அந்தச் சேவையை வழங்க முடியும்.

இரண்டாவது, இந்தச் சேவையை வழங்குவதில் ஏதாவது காலதாமதங்கள் ஏற்பட்டால், அந்த காலதாமதங்களை நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாக monitor செய்ய முடியும்; அவற்றை அவர்கள் கவனிக்கவும் முடியும். இந்த இரண்டு காரணங்களுக்காகத்தான் இ-சேவை மையங்களைக் கொடுத்தோம். ஆனால், அதைக் கொடுக்கின்ற நேரத்தில், நாம் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தோம்; இ-சேவை பயனாளர் குறியீடுகளை TNeGA மூலம் இலவசமாகவும், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய சட்டமன்றத்தில் பயன்படுத்திய desktop கணினியையும் வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தோம். இதர எந்தப் பொருட்களும், தளவாடங்களும் வழங்குவதாக நாம் குறிப்பிடவில்லை. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதற்கான உரிய ஆலோசனைகளை வழங்கி, அங்கு இருக்கக்கூடிய

e-District Managers-ஐ நீங்கள் தொடர்புகொள்ள நாங்கள் கேட்டிருந்தோம். அதனடிப்படையில், 77 சட்டமன்ற உறுப்பினர்கள் desktop கணினியைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய பேரவை அலுவலகமும் தொடர்ந்து மற்றவர்களுக்கு desktop கணினியை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அதை நீங்கள் பெற்றுச் செல்லலாம். அதேபோன்று, கடவுச் சொல் பிரச்சினைகள் உங்களுக்கு இருந்தது என்றால், நீங்கள் அந்தக் குறியீடுகளைப் பெறுவதற்கு, உங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையோ, அங்கு இருக்கக்கூடிய e-District Managers-ஐயோ அணுகலாம். இந்தக் கணினியை அங்கு வைத்தவுடன், உடனடியாக அவர்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்கான staff பற்றி கேட்டார்கள். அதற்கும்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு, சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் வைக்கக்கூடிய இ-சேவை மையங்களில் நடக்கின்ற பணப் பரிவர்த்தனைகளில், 80 சதவிகிதப் பணம் திரும்ப அந்தந்த உறுப்பினர்கள், நீங்கள் யாரை நியமிக்கிறீர்களோ அவருடைய பெயரில் உள்ள account-க்கு வந்துவிடும். உதாரணத்திற்கு 100 ரூபாய்க்கான பரிவர்த்தனை நடைபெற்றது என்றால், 80 ரூபாய் அங்கு வந்துவிடும். அப்படி நாம் அரசாணை வெளியிட்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமை அங்கு ஏற்படாது. அந்த வருவாயிலேயே அவர்களுடைய சம்பளத்தை ஈடு செய்ய முடியும். எனவே, அதிலும் எந்தச் சிரமமும் இல்லை. நீங்கள் அதைப் பயன்படுத்துங்கள்.

முற்பகல் 11-05

அதுபோன்று 235 சேவைகள் இருக்கின்றன என்று சொன்னால், அதில் ஒரு சில சேவைகளைத்தான் மக்கள் பயன்படுத்துகின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களுக்கான இத்தனை சேவைகள் இருக்கின்றன என்ற தகவலை உங்களுடைய அலுவலகத்தில் ஒரு Board போன்று வைத்தீர்களென்றால், அதிக சேவைகளை அவர்கள் எளிதாகப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். இதை ஏற்கெனவே பலமுறை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். தயவுசெய்து, நீங்கள் அதைக் கடைப்பிடித்து, விரைவிலேயே அவற்றைச் செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். 1,369 பரிவர்த்தனைகள்

2023 மார்ச் 30]

அவருடைய அலுவலகத்திலே நடைபெற்றிருக்கின்றன என்று சொன்னால், நீங்கள் அதை எண்ணிப் பாருங்கள் என்பதைத் தெரிவித்து, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கலைவாணர் அரங்கத்தில்தான்* All–in–One PC *அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வைக்கப்பட்டிருந்தது. இங்கு வரும்போது கையடக்கக் கணினி கொடுத்ததால், அவற்றை என்ன செய்யலாம் என்று கேட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் 'அனைத்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் அனுப்புங்கள்' என்று சொன்னார்கள். அதையும் தங்களுடைய மேலான கவனத்திற்குச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.P. *கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டி இரசீதைப் பெற வேண்டுமானால் மக்கள் எங்கு வேண்டுமானாலும் சென்றுவிடுவார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகக் கொடுத்தால்தான் அங்கு மக்கள் வருவார்கள். எனவே, தயவுகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே செயலாற்றுகின்ற அந்த நபருக்கு சம்பளம் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைச் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் கட்டப்பட்டுள்ள இ-சேவை மையக் கட்டடத்தில், அந்தச் சேவை எப்போது தொடங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மேலும், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கம், வட்டார வளர்ச்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் போன்ற இடங்களில் இயங்கிவரும் இ–சேவை மையங்களில் தற்போது நடைமுறையில் உள்ள சேவைகளோடு, முக்கிய சேவைகளான EB bill *கட்டணம் கட்டுதல், ஆதார் கார்டு பிழைத் திருத்தம் செய்தல், மின்சாரத் துறையில் புதிய மின் இணைப்புகள் பெறுவதற்கு விண்ணப்பித்தல், மின் துறையில் பெயர் மாற்றம் செய்தல்,* mobile phone recharge *செய்தல்,* money transfer *செய்தல், ரேஷன் கார்டில் மொபைல் எண்ணைச் சேர்த்தல் மற்றும் பிழைத் திருத்தம் செய்தல் போன்ற சேவைகளும் துரிதமாகக் கிடைத்திடவும்* server *சீரிய முறையில் துரிதமாக இயங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

[2023 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியினுடைய முக்கியமான ஒரு சில இலக்குகள், ஒளிவுமறைவற்ற ஓர் அரசை online services மூலமாக வழங்க வேண்டும், விரைவாக மக்களுக்குச் சேவைகள் கிடைக்கின்றவிதத்திலே செய்ய வேண்டும் என்பதுதான். இதனை ஒரு முக்கியமான நோக்கமாக வைத்திருக்கின்றார்கள். அதுபோன்று தரவுகளின் அடிப்படையில், அரசு அமைய வேண்டுமென்பது இன்னொரு முக்கியமான நோக்கமாக இருக்கிறது. இவற்றை மையமாக வைத்துதான் TNeGA செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. சேவைகளைப் பொறுத்தவரையில் பார்த்தீர்களென்றால், இந்த ஓராண்டு காலத்தில்தான் நிறைய சேவைகளை அதிகரித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது நிச்சயமாக receipts and payments-ஐ நாம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. Inter-departmental co-ordination கொஞ்சம் சவாலான பிரச்சினைதான். நாங்கள் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உதவியோடு செய்து வருகின்றோம். தமிழ்நாடு அரசில் இருக்கக்கூடிய சேவைகளையும், பரிவர்த்தனைகளையும் இ-சேவை மையங்கள் மூலமாக வெகு விரைவில் கொண்டு வர வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அதை நிச்சயமாக இந்த அரசு படிப்படியாக வெகுவிரைவில் நிறைவேற்றும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

நான் ஏற்கெனவே கூறியது போன்று, staff நியமிக்கின்ற விஷயத்தில் எந்தச் சிரமங்களும் எனக்குத் தெரிந்து இல்லை. ஏனென்றால், இந்தப் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்ற நேரத்தில், யாரிடமும் பணம் அதிகம் வாங்கவில்லை. அரசுக்கு எதைக் கட்ட வேண்டுமோ, நிர்ணயிக்கப்பட்ட தொகையை மட்டும்தான் கட்டச் சொல்கிறோம். அதை அவர்கள் தானாகவே கட்டிவிட்டு, தானாகவே வாங்கிக் கொண்டு சென்றுவிடுவார்கள். அந்தத் தொகையில் 80 சதவிகிதம் அதை நடத்தக்கூடிய நபருக்கு தானாக வந்துவிடும். அதை வைத்து அவர்கள் பணி செய்ய முடியும். அதில் எந்தச் சவால்களும் இருப்பதுபோன்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினர்கள்

2023 மார்ச் 30]

தொகுதி அலுவலகங்களில் மிக மகிழ்ச்சியாகத்தான் இது நடைபெறுகிறது, எங்களுக்கு மிக வசதியாக இருக்கிறது என்ற ஒரு feedback*-ஐத்தான் தந்திருக்கிறார்கள். அதில் பிரச்சினைகள் வராது. நீங்கள் தயவுசெய்து அதை ஏற்றுக்கொண்டு மிக விரைவில் செயல்படுத்துமாறு அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

விழுப்புரம் வடக்குத் தெருவைச் சார்ந்த இப்ராஹிம் ராஜா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம். ஏற்கெனவே மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் எழுப்புகின்ற பிரச்சினை எதுவாக இருந்தாலும் முக்கியமான பிரச்சினைதான். நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110. . . (குறுக்கீடு) நீங்கள் பேசுவது தொடர்பாக ஏற்கெனவே. . . (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள்.*

முற்பகல் 11–10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விழுப்புரத்தில்* G.R.P. *தெருவைச் சேர்ந்த ராஜசேகர், வல்லரசு என்ற இளைஞர்கள் இருவரும் சகோதரர்கள். இவர்கள் இருவரும் கஞ்சா போதையில் நேரு வீதி, பாதுஷா தெரு, எம்.ஜி. ரோடு ஆகிய முக்கிய கடை வீதிகளில் ரகளையில் ஈடுபட்டுள்ளனர். இருவரும் போதையில், கடை வீதியிலுள்ள பல கடைகளை அடித்து நொறுக்கியதோடு, சாலையில் சென்றவர்களை கத்தியால் தாக்கியுள்ளனர். அப்போது, கஞ்சா போதையில் விழுப்புரம் மாவட்டம்,*

எம்.ஜி. சாலையிலுள்ள ஜோதி விருட்சம் கடைக்குச் சென்ற இருவரும் கத்தியைக் காட்டி கடையில் உள்ளவர்களை மிரட்டியுள்ளனர். அப்போது அருகிலிருந்த வடக்குத் தெருவைச் சார்ந்த முகம்மது ராஜா என்கிற முகம்மது இப்ராஹிம் ராஜா என்பவர், 'ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள்?' என்று கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த இவர்கள், கொடூரமான முறையில் இப்ராஹிம் ராஜா என்பவரை கத்தியால் குத்தியுள்ளனர். இக்கொடூர நிகழ்வு அனைத்து ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் வெளிவந்துள்ளது. இதில் படுகாயமடைந்த இப்ராஹிம் ராஜா என்பவரை, சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால், சிகிச்சை பலனின்றி இப்ராஹிம் ராஜா பரிதாபமாக உயிரிழந்துள்ளார். தமிழகத்தில் கஞ்சா பயன்பாடு அதிகரித்துள்ளதால், தினந்தோறும் இதுபோன்ற கொலை மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதைக் கண்டு மக்கள் அச்சத்தில் உள்ளனர். கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் தமிழகத்தில் தடையில்லாமல் புழக்கத்திலுள்ளது வேதனையை அளிக்கிறது. இச்சம்பவத்தைக் கண்டித்து, வியாபாரிகள், மேற்கு காவல் நிலையத்தை நேற்று இரவு முற்றுகையிட்டுள்ளனர். இந்தப் படுகொலையைக் கண்டித்து, விழுப்புரம் நகரத்தில், வியாபாரிகள் இன்று கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் இப்பகுதியில் மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்ராஹிம் ராஜாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு அரசு உரிய நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மேலும், இக்குற்றவாளிகள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து மயிலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்களும், விதி எண் 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். இதனை தகவல் கோரல் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள், அரசின் தகவலுக்காக ஓரிரு வார்த்தைகளைச் சொல்லி அமரவும்.

***திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், வடக்குத் தெருவில் வசித்து வந்த இப்ராஹிம், எம்.ஜி. சாலையில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடியில்

2023 மார்ச் 30] [திரு. ச. சிவகுமார்]

ஊழியராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், நேற்று மாலை நோன்புக் கஞ்சி வாங்குவதற்காக ஒரு கடைக்குச் சென்றுள்ளார். அங்கு இரண்டு வாலிபர்கள் ஒரு பெண்ணிடம் தகராறு செய்து கொண்டிருந்தபோது, 'ஏன் நீங்கள் வீணாகத் தகராறு செய்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, அவர்கள் வைத்திருந்த கத்தியால், அவருடைய இடுப்பில் குத்தியதால் படுகாயமடைந்துள்ளார். பின்னர், அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்ற வழியிலே இறந்துவிட்டார். அந்தக் குடும்பம் ஏழ்மையான குடும்பம், கூலித் தொழில் செய்யும் குடும்பம் என்பதால், அவருடைய குடும்பத்திற்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற போதைப் பொருள்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும். அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் இஸ்லாமிய நபர் கத்தியால் தாக்கப்பட்டு உயிரிழந்தது பற்றிய அந்தச் செய்தியை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்களும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மேற்கு காவல் நிலைய சரகம், G.R.P. தெருவைச் சேர்ந்தவரும், எம்.ஜி. ரோட்டில் பழக்கடை நடத்தி வருபவருமான திரு. ஞானசேகர் என்பவருக்கு சாந்தி என்ற மனைவியும், ராஜசேகர், வல்லரசு என்ற இரண்டு மகன்களும் உள்ளனர். இந்நிலையில், ஞானசேகருக்கு வேறொரு பெண்ணிடம் தொடர்பு இருப்பதாகவும், அதனால் பழக்கடையில் வரும் வருமானத்தை குடும்பத்திற்குத் தருவதில்லை என்றும், சாந்தி தனது மகன்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, 29-3-2023 அன்று மாலை, ராஜசேகர் மற்றும் வல்லரசு ஆகியோர் தனது தந்தையிடம் இதுகுறித்துக் கேட்க,

பழக்கடைக்குச் சென்றபோது, அங்கு அவர் இல்லாததால், அங்கிருந்தவர்களிடம் கேட்டு பிரச்சினை செய்திருக்கிறார்கள். அப்போது, அப்பிரச்சினையில் தலையிட்ட இப்ராஹிம் என்பவரை வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கத்தியால் குத்தி, காயம் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. இச்சம்பவத்தில் காயம்பட்ட இப்ராஹிம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியில் உயிரிழந்திருக்கிறார். இச்சம்பவத்தில் ஈடுபட்ட வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் மேல் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையின் காரணமாக ஏற்பட்ட தகராறின்போது, அங்கு தடுக்கவந்த நபர், துரதிருஷ்டவசமாக தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்திருக்கக்கூடிய சம்பவம் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110–ன்கீழ் அறிக்கை. பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) நாளை உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வரலாற்றிலே ஒரு முக்கியமான நாள். 1924 ஆம் ஆண்டு, மார்ச் 30 அன்று, மாபெரும் சமூக சீர்திருத்தத்திற்கு அடையாளமாக விளங்கும் வைக்கம் போராட்டம் தொடங்கியதன் நூற்றாண்டு தொடக்க நாள் இன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாளில் வைக்கம் போராட்டம் வெற்றி பெற காரணமாக இருந்த பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், தந்தை பெரியாரைப் போற்றும்

விதமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி 110–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவதை என் வாழ்வில் கிடைத்தற்கரிய நல்வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை வரிகள் சிலவற்றை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல்
நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு
வெண் சங்கொத்த கண்களிலே
விழியிரண்டும் கருவண்டு
அதில் சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின்
இவரோ, படுகிழமாய்ப் போன பின்னும்
பம்பரமாய்ச் சுற்றி வந்தார்; (மேசையைத் தட்டும் ஒலி)
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.

இவை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி எழுதிய கவிதை வரிகள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 மார்ச் 30

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக, 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, ‘இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை’ என்றார் பேரறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதலானோர், திருச்சி சென்று பெரியாரைத்தான் முதன்முதலில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இப்போது ஆறாவது முறை ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசும், இப்போது தந்தை பெரியார் காட்டிய சமூக முன்னேற்றப் பாதையில்தான் பயணிக்கிறது.

“ஈ.வெ. இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல, மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு, அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததனால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு, தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித்து, 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும் சமூக நீதியை நிலைநிறுத்திட அவர் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமான போராட்டம்தான் வைக்கம் போராட்டம்.

1924–1925 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது; இந்தியாவின் கோயில் நுழைவுப் போராட்டங்கள் அனைத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது; ஒடுக்கப்பட்டவர்கள் சமத்துவ உரிமையைப் பெறுவதில் முதற்படியாக அமைந்தது என்று சொன்னால், அது மிகையல்ல.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில், ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம். 1924 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள், கேரளத் தலைவர் திரு. டி.கே. மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அந்தப் போராட்டம். அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே, அதே பகுதியைச்

2023 மார்ச் 30] [திரு. மு.க. ஸ்டாலின்]

சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்கள் இன்றி போராட்டம் தவித்தது. இந்தச் சூழலில், கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தை பெரியார் அவர்கள், வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். போராட்டக் காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை, 'அருவிக்குட்டி' என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில், ஒருமாத காலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாதக் கடுங்காவல் தண்டனையை, திருவனந்தபுரம் சிறையில் கழித்தார். மற்றவர்கள் அனைவரும் அரசியல் கைதிகள் போல நடத்தப்பட்டார்கள். ஆனால், தந்தை பெரியார் அவர்களின் கையிலும், காலிலும் விலங்கு போடப்பட்டு, கழுத்தில் மரப்பட்டை அணிவிக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தார். சாதாரண கைதியைப் போலவே தந்தை பெரியார் நடத்தப்பட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் உடனே திரும்பாமல், வைக்கம் சென்று மீண்டும் போராடினார் தந்தை பெரியார். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு 74 நாட்கள் சிறையில் இருந்தார்; 67 நாட்கள் அங்கேயே தங்கி, போராடினார்; மக்களைத் திரட்டினார். ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23 ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29 ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. 'வைக்கம் வீரர்' என்று பெரியாரைப் பாராட்டினார் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்கள். 'திருவனந்தபுரம் சிறையில் இருக்கும் தீரரைத் தமிழ்நாடு பாராட்டுகிறது' என்று சுதேசமித்திரன் இதழில் எழுதினார் மூதறிஞர் ராஜாஜி அவர்கள்.

போராட்டக்காரர்களுக்கும், மன்னருக்குமான பேச்சு வார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தை பெரியாரையே உடன் அழைத்துச் சென்றார். கோயில் தெருவில் அனைவரும் நடக்கலாம் என்ற உரிமையைப் பெற்றுத்தந்த வெற்றி விழாவுக்கு, தந்தை பெரியாரும், நாகம்மையாரும் அழைக்கப்பட்டார்கள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 மார்ச் 30

1929 ஆம் ஆண்டு மகத் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய மக்களுக்காக எல்லைகளைக் கடந்து போராடி, வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும், சமூகநீதிக் கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தவும், "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளை, தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் உண்மையிலேயே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வைக்கம் போராட்டம் தொடங்கிய மார்ச் 30 ஆம் நாளில், வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சிகள், 2023 ஆம் ஆண்டு, மார்ச் 30 ஆம் நாள் தொடங்கி, ஓராண்டு முழுவதும் நடத்தப்படும். போராட்டத்தின் வரலாற்றையும், நோக்கத்தையும், வெற்றியையும் பொதுமக்களும் மாணவர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்படும்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா, பின்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்:

முற்பகல் 11-25

1. வரும் ஏப்ரல் 1, 2023 அன்று, கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத் தூணுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

2023 மார்ச் 30] [திரு. மு.க. ஸ்டாலின்]

2. தமிழ்நாட்டில் மிக முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவரான பழ. அதியமான் அவர்கள் எழுதிய "வைக்கம் போராட்டம்" என்ற தமிழ் நூலின் மலையாள மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் கேரளாவில் உள்ள டி.சி. பதிப்பகம் ஆகியவற்றின் கூட்டு வெளியீடாக இது வெளியிடப்படவுள்ளது. இந்த நூலின் தெலுங்கு, கன்னடம், ஆங்கிலப் பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும்.

4. இந்த ஆண்டு நவம்பர் 29 அன்று, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இருமாநில முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் பங்கேற்கக்கூடிய வகையில், வெகு சிறப்பான நிகழ்ச்சி ஒன்று தமிழ்நாடு அரசால் நடத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. எல்லை கடந்து சென்று, வைக்கத்தில் போராடிய பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் "வைக்கம் விருது" சமூகநீதி நாளான செப்டம்பர் 17 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீன முறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்களுக்கு கூடுதலாக இடம் பெறுவதற்கும் 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாக சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குட்டி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

8. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாக சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

9. தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி–வினா உள்ளிட்ட போட்டிகளை நடத்தி, பரிசுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

10. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில், 64 பக்க நூல் ஒன்று கொண்டுவரப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அது தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக வெளியிடப்பட்டு, விற்பனை செய்யப்படும். இந்த நூல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலிப்புத்தகமாகவும் வெளியிடப்படும்.

11. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்று தொகுத்து, வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று 'தமிழரசு' பத்திரிகைமூலம் கொண்டு வரப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவை அனைத்தும் வரும் ஓராண்டு காலத்திற்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் பரிணாமம் பெற்று, ஆட்சியைப் பிடித்து, பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது, இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய பெருமை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அத்தகைய பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்துகொண்டு இருக்கும்போது, வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமான ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* சாதாரண இராமசாமியாக இருந்தவர், தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இதுபோன்ற கடந்த கால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

பெரியார் என்பவர், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் மட்டும் சொந்தமானவர் அல்ல; அவர் மொழி கடந்தவர்; *(மேசையைத் தட்டும் ஒலி)* நாடு கடந்தவர் என்பதை அவரது கருத்துகளின், செயல்களின்மூலம் நிரூபித்துக் காட்டியவர். சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவை

2023 மார்ச் 30] [திரு. மு.க. ஸ்டாலின்]

உலகளாவிய கொள்கைகள். நேற்றைய கிளர்ச்சிக்கும், இன்றைய முயற்சிக்கும், நாளைய வளர்ச்சிக்கும் அடிப்படையானவை தந்தை பெரியாரின் கருத்தியல்கள். அத்தகைய சுயமரியாதை சமதர்மப் பாதையில் நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவை விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பின்மீது பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு நிமிடத்திற்கு மிகாமல், அதை வரவேற்று, நன்றி சொல்லி அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

முற்பகல் 11-30

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்களின் வைக்கம் போராட்டம் சமூக நீதித் தளத்தில் இந்தியாவில் பேசப்பட்ட போராட்டம். சாதிய தீண்டாமை இழிவுகளையும், கொடுமைகளையும் எதிர்த்து அந்த மண்ணில் போராடி, சிறை சென்று, வெற்றி கண்டு, சமூக நீதியையும் நிலைநாட்டிய மகத்தான தலைவருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற அத்துணை திட்டங்களையும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.*

அதே நேரத்தில், தோள்சீலைப் போராட்டத்தில் அய்யா வைகுண்டர் அவர்கள் போராடி, 100 ஆண்டுகளுக்கான நூற்றாண்டு விழாவும் தற்போது நடந்திருக்கிறது. பெண்கள் மார்பை மறைத்துக்கொள்வதற்காக அணிந்த தோள் சீலையை அங்கிருந்த ஆதிக்க சாதிகள் அகற்றினார்கள். இதை எதிர்த்து நம்முடைய வீரத் தமிழச்சிகள் தங்கள் மார்பை அறுத்தெறிந்து போராடியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தாங்கள் கூறுவது சரியான கருத்தாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை மட்டும் வரவேற்று அமருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி தந்தை பெரியார் அவர்களுக்கு இந்தச் சிறப்பினை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்களோ, அதே அளவிற்கு அய்யா வைகுண்டர் அவர்களும் மகத்தான சமூக நீதி தளத்தில் பங்காற்றியிருக்கிறார், அவருக்கும் இந்தச் சிறப்புகளை செய்து, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வந்த தளபதி அவர்களும் கோடானுகோடி மக்களின் அன்பைப் பெற வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். கவனத்திற்கு வந்துவிட்டது. நன்றி சொல்லிவிட்டீர்கள். உரையாற்றியது போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் சொன்ன அனைத்து கருத்துகளும், அனைத்து கொள்கைகளும் சட்டமாக மாற்றப்பட்டு, தமிழகத்தில் இன்றைக்கு சமூக நீதியை நிலைநாட்டுகின்றவகையில், அனைத்தும் செயல்பாட்டில் இருக்கின்றன. மீதி இருக்கிறவற்றையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒவ்வொன்றாக சட்டமாக்கி, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு கேரள தலைவர்கள் போராட்டத்திற்காக தந்தை பெரியார் அவர்களை அங்கு அழைத்தார்கள். இன்றைக்கு கேரளாவில் நடைபெற இருக்கின்ற நூற்றாண்டு விழாவிற்காக, கேரள தலைவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறார்கள். தந்தை பெரியார் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு செல்கின்றார்கள். அந்தவகையில், இந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்களுடைய புகழைப் பரப்புகின்றவகையில், பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் சார்பாகப் பாராட்டி, நன்றி தெரிவித்து, அமர்கின்றேன்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவருக்கும் சரியாக ஒரு நிமிடம் மட்டுமே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அறிவிப்பினை வரவேற்று, நன்றி சொல்லிவிட்டு அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கம் போராட்டம் என்பது வரலாற்றில் மிக முக்கியமான போராட்டம். தெருவில் நடப்பதற்காக வேண்டி ஒரு போராட்டம் இந்த மண்ணில் நடந்தது. அதற்கு ஒரு நூற்றாண்டு விழா இன்றைக்கு எடுக்கப்படுகிறது என்பதை இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியமானது. இந்தத் தமிழ் மண், இன்றைக்கு ஓர் அமைதிப் பூங்காவாக, ஒரு சமூக நல்லிணக்க மண்ணாக, அனைத்து மக்களும் சமூக நல்லிணக்கத்தோடு வாழும் மண்ணாக இருக்கிறதென்றால், தந்தை பெரியார் அவர்கள், 95 ஆண்டுக்காலம் இந்த மண்ணில் உழைத்த உழைப்புதான், இந்த மண்ணை இந்த அளவிற்குப் பண்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்து, சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டத்தின் வாயிலாக இந்த மண்ணுக்கான உரிமையைப் பெற்றுத் தந்த தந்தை பெரியாரினுடைய நினைவைப் போற்றும்விதமாக, அறிவித்திருக்கக்கூடிய அனைத்து அறிவிப்புகளும் மிகவும் வரவேற்கத்தக்கவையாக இருக்கின்றன. இதுபோன்ற மிக முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை, மக்களுடைய ஒடுக்குதல்களை வெளிக்கொண்டுவருவதும், அதற்கான நிகழ்வுகளை முன்னெடுப்பதும், இந்த நாட்டைப் பின்னோக்கி இழுக்க வேண்டும் என்று எண்ணுகின்ற சக்திகளுக்கு ஒரு மிகப் பெரிய பேரிடியாக இருக்கும். எனவே, இந்த முயற்சி எடுக்கக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, இந்த நேரத்தில் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நெஞ்சாரப் பாராட்டி, வாழ்த்தி, நிறைவு செய்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி தவறாது ஆண்டு கொண்டிருந்த சில மன்னர்களுக்கிடையே, கொடுங்கோலாட்சி செய்த மன்னர்களும் இருந்திருக்கின்றார்கள். அந்தவகையில், கேரள மாநிலத்தில்

கொடுங்கோலாட்சி செய்த மன்னர்கள், சில மக்களைக் கண்டாலே தீட்டு, சில மக்களைத் தொட்டாலே தீட்டு என்ற நிலையில் இருந்தார்கள். அவர்களெல்லாம் தெருவுக்குள் வரக்கூடாது, பொது இடங்களுக்கு வரக்கூடாது என்று விரட்டியடிக்கப்பட்ட காலத்தில், நம்முடைய சுயமரியாதைத் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்கள். அவர் நடத்திய போராட்டம், நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கிறது. அவரைப் பாராட்டும்விதமாக, பல்வேறு திட்டங்களை அவருக்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். சமூக நீதியையும், சுயமரியாதையையும், சமத்துவத்தையும், கற்றுத்தந்த தந்தை பெரியாருக்கு ஆற்றுகின்ற சேவையை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் தெருக்களில் நடக்க அனுமதி மறுக்கப்பட்ட காலத்தில், தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று தலைமையேற்று, வைக்கம் போராட்டத்தை நடத்தி, சிறை சென்றார். இது நடைபெற்று நூறாண்டுகள் ஆனதையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆண்டு முழுவதும் “வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா” கொண்டாடப்படும் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், ‘அருவிக்குட்டி’ கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று அமைப்பதற்காக 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், பெரியாருடைய வைக்கம் போராட்டத்தை நினைவுகூரும் வகையிலே, சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிடுவது, பள்ளி, கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் குறித்து பேச்சுப் போட்டிகள் நடத்துவதும் என்று பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2023 மார்ச் 30]

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சீர்திருத்த இயக்கத்தினுடைய மாபெரும் குறியீடு தந்தை பெரியார் அவர்கள், வைக்கத்தில் நடத்திய போராட்டத்தினுடைய நூற்றாண்டு விழாவை, தமிழகத்திலே சிறப்பாக நடத்துவதற்கான முன்மொழிவினை மாண்புமிகு முதலமைச்சர் இங்கே விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார். இதில் சிறப்பு என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேரளா செல்ல, கேரள முதல்வர் தமிழகம் வர, இந்தியாவினுடைய இந்த இரண்டு ஆளுமைகளும் இணைந்து நடத்துகிற இந்த மாபெரும் விழா, வரலாறு காணாத வகையில் வெற்றி பெறும் என்று சொல்லி, இந்த விழா தமிழகத்திலே சிறப்பாக நடைபெற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எல்லா வகையிலும் ஒத்துழைக்கும் என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்பை மனதார நான் ஆதரிக்கிறேன்; மனதார வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த அறிவிப்பை, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் தொடரும் என்கிற அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த பாராட்டுகளை, வாழ்த்துகளை, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வரலாற்று உணர்வு என்பது, மிக அடிப்படையான ஒரு தேவை. அந்த வரலாற்று உணர்வுதான், ஒரு சமூகத்திற்கான தன் உணர்வாக அமையும், ஒரு சமூகம் தன் உணர்வு பெறுகிறபோதுதான், தன்மான உணர்வைப் பெற முடியும். ஆகவே, நாம் அனுபவிக்கின்ற ஒவ்வொரு உரிமைக்குப் பின்னாலும், ஓர் இரத்தம் தோய்ந்த வரலாறு இருக்கிறது என்பதை இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த மகத்தான முயற்சியை, நெஞ்சார விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒன்றை இந்த அவையிலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று திராவிட கருத்தியல் பல்வேறு முனைகளிலிருந்து தாக்குதலுக்கு உள்ளாகிறது. சனாதன முறையிலிருந்து மாத்திரமல்ல, தமிழ் தேசியம் பேசுகிறவர்களும்கூட திராவிட கருத்தியலை, விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அந்தத் தாக்குதல் இருந்தது. தந்தை பெரியாருக்கும் இருந்ததும். . .

திரு. ம. சிந்தனை செல்வன்: சமூக நீதி தத்துவத்தின் அடிப்படையிலே உருவாகியிருக்கிற இந்தத் திராவிட கருத்தியல்தான், ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகம் தலை நிமிர்வதற்கு அடிப்படையாக இருந்தது என்பதை, வைக்கம் போராட்டம் நமக்கு நினைவுபடுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இடைநிலை சமூகத்தில் பிறந்த, கற்றறிந்த வழக்கறிஞராக இருந்த ஒருவர் தன்னுடைய நீதிமன்றப் பணிகளைச் செய்வதற்குக்கூட தடை விதிக்கக்கூடிய ஒரு நிலை இருந்ததை மாற்றிய இந்த மகத்தான போராட்டம், இளைய தலைமுறையினரிடத்திலே கொண்டு செல்லப்படும் என்கிற அறிவிப்பு, இதயத்தை மகிழ்ச்சியால் நிறைக்கிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியைச் சொல்லி நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். தந்தை பெரியாருக்கு ஒரு நன்றிதானே சொல்ல வேண்டும். விதி 110-க்கு எதிர்த்து சொல்ல முடியாது. நன்றிதான் சொல்ல வேண்டும்.

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவிருக்கின்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும், அவர்கள் ஏற்பாடு செய்கின்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, இன்று ஸ்ரீராம நவமி, ராமர் பிறந்த தினம் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

2023 மார்ச் 30]

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு முதல் காரணமாக இருந்தவர், இந்திய நாட்டிற்குத் தமிழ் மண்ணை, சமூக நீதிக்கு வித்திட்ட மண்ணாக மாற்றியவர். தன்னுடைய சீர்திருத்த வரலாற்றில், வைக்கம் போராட்டம் என்ற முதல் போராட்டத்தை நாட்டுக்கு உணர்த்திய தந்தை பெரியாரை நினைவுகூரும் வகையில், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாட்டில் ஓர் ஆண்டுக்காலம் நடத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி–110-ன்கீழ் முன்மொழிந்த அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்திய நாட்டிற்குச் சமூக நீதியை எடுத்துச் சொன்னவர் தந்தை பெரியார். சமூக நீதி, எல்லா தளங்களிலும் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று தொடர்ந்து பாடுபட்டு வருகிற அரசு, தமிழ்நாடு அரசு. இந்த விழா, தமிழ்நாடு, கேரளா என இரு மாநிலங்களுக்கும் ஓர் இணைப்புப் பாலத்தை உண்டாக்கும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அதேநேரத்தில், நம்முடைய தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை, சமூக நீதி வரலாற்றை, இந்த நாடு தெரிந்துகொள்வது மட்டுமல்ல, இளைய சமுதாயம் மறந்து விடக்கூடாது என்பதற்காக பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், கருத்தரங்குகள், விழாக்கள், போட்டிகள் நடத்தப்படுவது என்பது மகத்தானது. அதோடு, வைக்கம் போராட்டம் நடந்த இடத்திலுள்ள நினைவிடத்தில், ஒரு விளக்கு கூட இல்லாத நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகின்றது. அதை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கேரள அரசுக்குச் சொல்லி, அதனை மெருகூட்ட வேண்டுமென்று அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டு, முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பை வரவேற்கிற வேளையில், பாட்டாளி மக்கள் கட்சியில் எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள் முதல் கொள்கையாக வைத்திருப்பது சமூக நீதி, தந்தை பெரியாருடைய திருவுருவப் படம் என்பதைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நெஞ்சார வரவேற்று அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சமூக நீதியின் அடிச்சுவடியாக விளங்கிய*

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 மார்ச் 30

இந்த நாளை, நாடு முழுவதும் ஒரு வருடம் கொண்டாடுவதற்கு தீர்மானித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தப் போராட்டம் நாராயணகுருவின் சீடர் திரு. டி.கே. மகாதேவன் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. அச்சமயம், தந்தை பெரியார் 1919 முதல் 1925 வரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். கேரளாவில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களெல்லாம் சிறைபிடிக்கப்பட்டனர். அப்பொழுது, மகாத்மா காந்தியடிகள் இந்த சமூக நீதிக்கான போராட்டத்திற்கு யாரை அனுப்புவது என்று நினைத்த பொழுதுதான், தந்தை பெரியாரை அழைத்து, 'நீங்கள்தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்று' கூறினார். மகாத்மா காந்தி அவர்களின் அழைப்பின் அடிப்படையில், அப்போது, அங்கிருந்த காங்கிரஸ் பேரியக்கத் தலைவர் திரு. கேசவமேனன், திரு. ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் தந்தை பெரியாரை அழைத்துக் கொண்டுபோய், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டம்தான் இன்றுவரை இந்தியா முழுவதும் சமூகநீதிக்கான போராட்டம் என்பதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், 1936 ஆம் ஆண்டு ஒரு போராட்டத்திலே, வைக்கம் போராட்டத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். அங்கிருந்த ஈழ மக்கள், புலவர்கள், அவர்ண சாதி என்று சொல்லப்படுகின்ற அந்த மக்களை, ஆலயப் பிரவேசம் செய்ய விடாமல், ஆலய வழிபாட்டுக்கு விடாமல் தடுத்தபொழுது, தந்தை பெரியார் அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார் என்ற பதிவைச் செய்திருக்கிறார். காங்கிரஸ் பேரியக்கம் இன்று கேரளாவிலே இந்த நாளைக் கொண்டாடுகின்ற வகையில், எங்கள் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களும், அங்குள்ளவர்களும் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், 1 ஆம் தேதி இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்விலே கலந்துகொள்வார் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மையான வரலாற்றை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார். வரலாறு, வரலாறுதான் என்பதை மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறார். ஆகவே, அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வரலாற்று நிகழ்வாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு சிறப்பான வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். திராவிட இயக்கத்தினுடைய தலைக் காவிரியாக விளங்கிய, வரலாற்றுக்குரிய திராவிட தந்தையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தந்தை பெரியார் அவர்கள் மொழி கடந்து, மாநிலம் கடந்து, சமூக நீதிக்காக அவர் நடத்திய வைக்கம் போராட்டத்தை இங்கு வரலாற்று நிகழ்வாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி, அதை ஓர் ஆண்டு நிகழ்வாக நடத்திட வேண்டுமென்ற நம்முடைய உணர்வுகளை இங்கே வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.*

முற்பகல் 11-45

திராவிட இயக்கத்தின் நீட்சியாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் சமூக நீதி காத்த வீராங்கனையாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டை பின்தங்கிய மக்களுக்கு பெற்றுத் தந்ததனுடைய அடித்தளமாக விளங்கியது தந்தை பெரியாருடைய கொள்கைதான் என்பதை நான் இங்கே பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிற இந்தச் சிறப்பு நிகழ்ச்சி, சிறப்பு அறிவிப்பு, வரலாற்றில் மிகப் பெரிய முக்கியத்துவத்தைப் பெறும் என்பதை அறியலாம். இதனை தேசிய விழாவாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்து, வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள்.*

***திரு. ப. தனபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு நல்ல அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள் எல்லாம்கூட, இந்த மன்றத்தில் இப்படியெல்லாம் அமர்வதற்கு உறுதுணையாக இருந்தவர் தந்தை பெரியார் என்பதை எண்ணி,*

வைக்கம் போராட்டத்தை அவர் நடத்தி, இந்தச் சமுதாயத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு முன்னேற்றத்தை கொண்டு வர வேண்டுமென்று பாடுபட்டார். அப்படிப்பட்டவருக்கு இன்றைக்கு நூற்றாண்டு விழா எடுத்திருக்கிறார்கள். அதேநேரத்திலே, தந்தை பெரியாருக்கு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் நூற்றாண்டு விழா நடத்தியதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட இந்த நல்ல அறிவிப்பை நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) ஒரு நிமிடம்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர், திராவிட மாடல் ஆட்சியைச் சிறப்பாக நடத்தி வருகிற மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள், நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட அநீதியைத் துடைக்கின்ற வகையில், அன்றைக்கு மாநில எல்லையைக் கடந்து, கேரள மாநிலத்திற்குப் போய் வைக்கத்தில் போராட்டம் நடத்திய, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கு, அந்தப் போராட்டத்தின் நினைவாக, நூற்றாண்டு நினைவாக, இன்றைக்கு நூற்றாண்டு விழாவை அறிவித்ததோடு, அதன் நினைவாக, அஞ்சல் தலை வெளியிடுவதாகவும், அதற்கான முயற்சியை மாநில அரசு எடுக்கும் என்றும், அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற இந்த காலகட்டத்திற்குள் இரண்டு முறை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த இடத்திற்கு என்னை அனுப்பி பார்வையிடச்செய்து, அங்கே பராமரிப்பு எப்படி உள்ளது என்பதை அறிந்து வர உத்தரவிட்டார்கள். அதில் ஒருமுறை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. வேலு அவர்களோடு என்னையும் போய் பார்த்து விட்டு வரச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, இன்றைக்கு பொதுப் பணித் துறையால் வடிவமைக்கப்பட்டு, அந்த அரங்கத்தை மேம்படுத்துவதற்காக அங்கிருக்கக்கூடிய சிலையை மெருகூட்டுவதற்காக ஏறத்தாழ 8 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதற்காகவும், இந்த நேரத்தில் துறையின் அமைச்சர் என்கிற முறையில் மீண்டும், மீண்டும் என் நெஞ்சம்

நிறைந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் தெரிவித்துள்ள அந்தக் கருத்துகளை அமைச்சர் பெருமக்களின் சார்பாகவும், இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் அவற்றை வழிமொழிய கடமைப்பட்டிருக்கிறேன்.*

வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவினுடைய மனித உரிமைப் போராட்டம். இந்தியாவில் முதன்முதலாக சமூக நீதிக்காக வித்திட்ட போராட்டம்தான் வைக்கம் போராட்டம். எனவே, அந்த நினைவைப் போற்றுகின்ற வகையில், இங்கே நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பத்தாண்டுக் காலமாக பாழ்பட்டுக் கிடக்கின்ற அந்த இடத்தைப் புனரமைக்க வேண்டுமென்ற அடிப்படையில், நேரடியாக என்னை அங்கு அனுப்பி, அவற்றையெல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று கூறிய அடிப்படையில் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அறிவிப்பின் அடிப்படையில், இன்றைக்கு அந்த நூற்றாண்டு விழாவையும் ஓராண்டுக்காலம் நடத்துவது என முடிவு செய்து, புனரமைப்பு செய்வதற்காக 8 கோடியே 14 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. சிறப்பாக அந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக இன்றைக்கு ஆணையிட்டிருக்கின்ற, திராவிட இயக்கத்தினுடைய நான்காம் தலைமுறையின் தலைவர், திராவிட நாயகர், தளபதியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.719,08,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 77, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

***திரு. செ. கிருஷ்ணமுரளி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.*

2023 மார்ச் 30]

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 704, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 851, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 948, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன்.*

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1179, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1693, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1997, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2960, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

2023 மார்ச் 30]

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2306, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3217, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 480, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1908, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2233, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2621, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3060, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 468, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

*__திரு. இரா. அருள்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 493, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 748, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1680, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2818, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2847, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட மதுக்கரை நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் கோரிக்கை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, திருமங்கலம் நகராட்சியில் அமைந்துள்ள

பழைய பேருந்து நிலையத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சியைத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடத்தூர் பேரூராட்சி, மொமல்லாரம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் மின் மயானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 604, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதிக்குட்பட்ட சிவகங்கை நகருக்கு குப்பைக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 814, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 992, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியிலுள்ள புவனகிரி, சேத்தியாத்தோப்பு, கங்கைகொண்டான் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1076, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி நகராட்சி, 12–வது வார்டுக்குட்பட்ட பாப்பாரப்பட்டி மயானத்திற்கு முழுமையாக சுற்றுச்சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் போதிய அளவு குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1133, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சி வாரச் சந்தையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1221, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட கருமத்தம்பட்டி நகராட்சியில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1271, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

2023 மார்ச் 30]

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 60 வார்டுகளில் உள்ள பகுதிகளில் 4—வது குடிநீர் திட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1280, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரிமங்கலம் பேரூராட்சி, அண்ணா நகர் பகுதியில் அங்கன்வாடி மையம் கட்ட இடம் ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1322, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1427, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து கடலோர மாவட்டங்களிலும் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1526, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிகோவில், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி, பள்ளபாளையம் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அகலமான சாலைகளாக விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1548, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி நகராட்சியில் குப்பைகள் தினமும் அகற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1591, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட கூடலூர் மற்றும் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் முறையாக குடிநீர் விநியோகிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1704, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, கோட்டகுப்பம் நகராட்சியில் சுத்தமான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1715, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1865, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட 5 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1894, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி நகரத்தில் குடிநீர் குழாய்களை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2010, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சிக்குக் கூடுதலாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2111, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜூனன்.*

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் நகராட்சிக்கு கண்டரக்கோட்டையில் இருந்து வரும் நீர் அளவை ஐந்து MLD ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2199, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணியில் விடுபட்டுள்ள பகுதியைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2630, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

***திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறும் குடிநீர்த் திட்டப் பணிகள், வெள்ளலூர் குப்பைக் கிடங்கு துர்நாற்றம் கட்டுப்படுத்துதல், குனியமுத்தூர் பகுதியில் குடிநீர் 15 நாட்களுக்கு ஒருமுறை வருவது, குளங்களில் ஆகாயத் தாமரை அகற்றல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2686, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலாற்றிலிருந்து திருப்போரூர் பேரூராட்சி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2722, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், நன்னிலம், குடவாசல், வலங்கைமான், பேரளம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2762, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், ராசக்காபாளையம் ஊராட்சியில் குரும்பபாளையம் ரோட்டில் உள்ள 60 ஆயிரம் லிட்டர் மேல்நிலைத் தொட்டி மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3049, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டமான 2–வது பைப்லைன்மூலம் வழங்கப்படும் குடிநீரை சுத்திகரிக்கப்பட்ட குடிநீராக (R.O plant) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3069, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரைக்குடி நகராட்சி, வார்டு எண் 22 பகுதியில் முத்தூரணி பகுதிக்கு ஐந்து இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3135, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சியில் அனைத்து வார்டுகளுக்கும் குப்பை அள்ளும் புதிய வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.719,08,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 30]

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய

42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 78, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 699, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 946, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1694, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2000, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2392, மாண்புமிகு உறுப்பினர் T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2962, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2331, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3225, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 340, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 481, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1918, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2248, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2624, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2995, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

2023 மார்ச் 30]

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3062, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 461, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 765, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1458, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1645, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

2023 மார்ச் 30] [திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2859, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் உள்ள வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, சித்தேரி ஊராட்சி, வேடகட்டமடுவு ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, திருமங்கலம் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளில் சீராக குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பன்னியான் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி முதல் மயானம் வரை புதிய சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பெத்தவேப்பம்பட்டு ஊராட்சியிலிருந்து விசலாபுரம் ஊராட்சி வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சி ஒன்றியத்தில் தார்ச் சாலைகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 608, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றம் போன்ற அலுவலகங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்கி டிஜிட்டல் (Digital) நடவடிக்கையின்மூலம் கட்டட அனுமதி, வீட்டு வரி, பிளாட் அப்ரூவல் மற்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் Online–ல் விண்ணப்பிக்க வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 625, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேசவன் புத்தன்துறையில் மழைக் காலத்தில் வெள்ளச் சேதங்கள் ஏற்பட்ட சாலைகளைச் சீரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 841, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகள் அனைத்திலும் படிப்பகங்கள், உடற்பயிற்சி நிலையங்கள் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 967, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மஞ்சகுழி ஊராட்சி, சம்பந்தம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 993, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

2023 மார்ச் 30]

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள பல ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1087, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி ஒன்றியம், அட்டூர் மாரியம்மன் கோயிலிலிருந்து கின்ன மேலுபள்ளி வழியாக பெத்த மேலுபள்ளி செல்லும் சாலையை தரம் உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1114, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள பழமையான இந்திரா நினைவு குடியிருப்புகளை அகற்றி, புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1126, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உதினிப்பட்டி கிராமத்திலிருந்து சிவகங்கை மாவட்டம், அணைக்கரைப்பட்டி வரை இணைப்புச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1152, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, மாம்பட்டு ஊராட்சியில் மஞ்சளாற்றின் குறுக்கே, திண்டிவனம் செல்லும் சாலையில் புதிய மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1244, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

2023 மார்ச் 30]

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள ரிசர்வ் சைட் இடங்களில் ஊராட்சி மன்றம் விரும்பும் அரசுத் திட்டப் பணிகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1266, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்குத் தொகுதியில் உள்ள ஈட்டிவீராம்பாளையம் ஊராட்சிக்குப் புதிதாக ஊராட்சி மன்ற அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1279, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதியில் கட்டப்பட்ட திருமண மண்டபங்களை பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1342, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை உடனடியாக அனைத்துப் பேரூராட்சிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1424, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதி, மின்னல் சித்தாமூர் ஊராட்சி, முருங்கை பகுதியில் சிறு பாலம் (கல்வெட்டு) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1528, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னிமலை ஒன்றியம், ஈவ்தர், பனியம்பள்ளி, வரப்பாளையம், கூத்தம்பாளையம், வாய்பாடி, சிவகழஞ்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்த வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1555, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியம், வடுகசாந்து ஊராட்சியில் உள்ள தெருக்களில் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1703, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வானூர், கிளியனூர் என இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1723, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட தியாகதுருகம், அந்தியூர் முதல் குன்னியூர் வரை வனச்சரக பகுதி வழியாக செல்லும் சாலைகளை செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1856, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் மாத ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1897, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி ஒன்றியம், அம்மாபேட்டை ஒன்றியம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தார்ச் சாலைகள் சீரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2024, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் முதல் கீழ்குப்பம், மூதூர், கோணலம் வழியாக காவேரி ராஜபுரம் செல்லும் மாவட்ட இதர சாலையை மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2068, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2121, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒலக்கூர் ஒன்றியம், ஆவனிப்புர் ஊராட்சியில் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றி, புதியதாக ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2196, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், கோபனாரி முதல் தோலம்பாளையம் மூறுகுட்டை வரையுள்ள சாலையை வனத் துறையின் அனுமதிபெற்று, PMGSY திட்டத்தில், நிதி ஒதுக்கீடு பெற்று செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2631, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திடக்கழிவு மேலாண்மை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2694, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியம், நாவலூர், தாழம்பூர், புதுப்பாக்கம், ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மையினை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2732, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரி வருவாய் குறைவாக உள்ள ஊராட்சிகளுக்கு அன்றாட அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளவும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைத் தவிர்க்க சிறப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2778, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், மன்றாம்பாளையம் ஊராட்சி, ஒவ்வாங்காடு அருகிலுள்ள ஓடையின் வழியே கோதவாடி குளத்திற்கு PAP வாய்க்காலில் ஒரு பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2821, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி ஒன்றியம், இராயநல்லூர் ஊராட்சி, முள்ளியாற்றில் நாட்டுவாய்க்கால் என்ற இடத்தில் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3054, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துத் துறைகளிலும் தூத்துக்குடி மாவட்டத்தின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டுவரும் இளையரசனேந்தல் குறுவட்டத்தில் உள்ள 12 ஊராட்சிகளையும் தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின்கீழ் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3082, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஆம்பக்குடி ஊராட்சி, பெத்தானேந்தல் கிராமத்தில் குடிநீர்த் தேவைக்காக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3155, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், கிளக்கோடு ஊராட்சியில் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிக்கு சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3184, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி—வேலூர் தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், கோப்பணம்பாரியம் கிராமம், கணபதி கார்டனில் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,953,53,34,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,607,82,46,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

@ *303 முதல் 642 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

***மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

@ மற்றும் @@ 643 முதல் 756 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் இன்றைக்கு பதிலுரை கூறவிருக்கின்றார்கள். இன்று, 8 மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள்; முதலில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர், பிரதான எதிர்க்கட்சியிலிருந்து பேச வருகின்றார். அவருக்கு 15 நிமிடங்களும், ஏனைய உறுப்பினர்கள் அனைவருக்கும் 7 நிமிடங்கள் வீதம் வழங்கப்படுகின்றன. தயவுசெய்து பிற்பகல் 1–00 மணிக்குள் இந்த விவாதத்தை முடித்து, 3 மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருப்பதால், நேரத்தை எல்லோரும் கடைப்பிடித்து இந்தப் பேரவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசப் பிணைப்போடும், நேசப் பிணைப்போடும், மக்களை உயிராக நேசித்தவர். மக்களால் உயிராக நேசிக்கப்பட்டவர். மறைந்தும் மறையாமல் வாழும் சத்துணவு தந்த சரித்திர நாயகர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காகவே நான் என தவவாழ்வு வாழ்ந்து, தமிழகம் தழைத்திட, நித்தம் சாதனை திட்டங்கள் தந்து, யுக புரட்சி கண்ட, நித்தம் நான் வணங்கும் தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

நண்பகல் 12–00

உழவர் குடியில் பிறந்து, காவிரியை மீட்டு, குடிமராமத்துத் திட்டம் தந்து, டெல்டா பகுதிகளை வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து, சாமானிய மக்களின் முதல்வராக இருந்து, ஏழை, அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மருத்துவம் பயில 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஆண்டில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள், 60 ஆண்டு கால கனவுத் திட்டமான, அத்திக்கடவு–அவினாசித் திட்டம் என துறைதோறும் சாதனைத் திட்டங்கள் தந்து, நல்ஆளுமைத் திறனால், தேசிய அளவில் விருதுகள் பல வென்று, இந்திய மாநிலங்களிலேயே தமிழகத்தை முதன்மை இடத்திற்கு உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி)

சோதனைகளைச் சாதனைகளாக்கி, தொண்டர்கள் துயர் நீங்க துணைபுரியும் கழகத்தின் காவலர், மக்கள் விரும்பும் முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் விடிவெள்ளி, வருங்கால முதலமைச்சர், புரட்சிக் காவலர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து பேரூர் மற்றும் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நான்காவது முறையாக வெற்றியைத் தந்த தொண்டாமுத்தூர் தொகுதி மக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி, எனது மக்கள் பணிக்கு அங்கீகாரம் அளித்து, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் கோவை மாவட்ட மக்களுக்கும், இந்த இனிய வேளையில் நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் முன், கோவையில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து நிறைவேற்ற, இப்பேரவையின் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியினைத் தொடர்ந்து வழிநடத்திய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கோவை மாவட்டத்திற்குத் தந்த அத்திக்கடவு-அவினாசித் திட்டம், விமான நிலைய விரிவாக்கத் திட்டம், மேற்கு புறவழிச்சாலைத் திட்டம், பில்லூர் மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம், வெள்ளளூரில் ஒருங்கிணைந்த பில்லூர் மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம், வெள்ளளூரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் உள்ளிட்ட கோவை நகரில் நடைபெற்று வரும் முக்கியப் பாலங்கள், குடிநீர்த் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைகள், சீர்மிகு நகர திட்டப் பணிகள் ஆகிய பணிகளை விரைந்து நிறைவேற்றவும், குறிப்பாக, கோவை மாநகராட்சிப் பகுதியில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளைச் செப்பனிட்டு சீர் செய்யவும் போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் கோவை மக்களின் மிகுந்த எதிர்பார்ப்பாகும். ஆகவே, பணிகளை விரைவாக முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2023 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ரூ.22,562 கோடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.24,476 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு கடந்த 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ரூ.26,647.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. நடப்பாண்டில், நிதி குறைக்கப்பட்டு, அதாவது ரூபாய் 4,085 கோடி குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், கிராமப்புறப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. இதுகுறித்து, மாண்புமிகு அண்ணன் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், பேரவையில் சுட்டிக்காட்டியபொழுது மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள், நிர்வாக வசதிக்காக ஜல்ஜீவன் குடிநீர்த் திட்டம் நகர்ப்புர உள்ளாட்சிக்கு மாற்றப்பட்டு, இத்திட்டத்திற்குத் தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு நிதிநிலை அறிக்கையில் கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக ஒதுக்கப்பட்டது என விளக்கம் கூறியிருந்தார்கள். இருந்தாலும்கூட, கிராமப்புற நகர்ப்புர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நேரடியாகச் செய்து தரும் முக்கியமான துறை இவை. இத்துறைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் சரிவர வளர்ச்சிப் பணிகள் நடைபெறாததால், இந்த நிதியாண்டில், ஒதுக்கியுள்ள நிதியைக் காட்டிலும் ஊரக வளர்ச்சி மற்றும் நகர்ப்புர உள்ளாட்சித் துறைகளுக்கு இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளைப் பொறுத்தவரையில், இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ. நீளத்திற்கு முதல்வரின் கிராமச் சாலைகள் திட்டத்தை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் பேசி முடித்த பிறகு பதில் சொல்லலாம்.

திரு. எஸ்.பி. வேலுமணி: இத்திட்டத்தில் ‘முக்கிய இணைப்புச் சாலைகள், பேருந்துகள் இயங்கும் சாலைகள் தரம் உயர்த்தப்படும், வரும் நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,145 கி.மீ. சாலைகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும்’ என தெரிவித்துள்ளீர்கள். தமிழக ஊராட்சிப் பகுதிகளில் 1,02,000 சாலைகள் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாசியுடன் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது, சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு

2023 மார்ச் 30] [*திரு. எஸ்.பி. வேலுமணி*]

இணைப்புச் சாலைகள் அமைத்துத் தரும் வகையில் கூடுதலாக 50,000 சாலைகள் புதிதாக அமைத்து, கிராமப்புறப் பகுதிகள் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்பட்டது என்பதைப் பெருமையோடு தெரிவித்து, இன்னும் கூடுதலாக இதற்கும் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமப்புறங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,618 நீர்நிலைகளில் மொத்தம் 638 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், மேலும் 10,000 சிறிய நீர்நிலைகள், குளங்கள், ஊருணிகள் 800 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான ஆட்சியில், தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க, குடிமராமத்துத் திட்டத்தின்மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 5,000 சிறுபாசன ஏரிகளும், 25,000 குளங்கள் மற்றும் ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு இயந்திரங்கள்மூலம் தூர்வாரவும், கரைகளைப் பலப்படுத்தவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும், மாநில அரசு நிதியாக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும், மேலும், மேற்படி நீர்நிலைகளில் உள்ள மதகுகள், நீராடும் துறை, சிறுகுளம், கழிமுகம் ஆகிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள NREGA *திட்ட நிதியில் 750 கோடி ரூபாய், ஆக மொத்தம் 1,250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து குளங்கள், குட்டைகள் ஆகிய நீர்நிலைகளைத் தூர்வாரும்போது கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் விலையில்லாமல் எடுத்துச் சென்று பயன்படுத்த மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அதேபோன்று, வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள இந்த அரசும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–05

குக்கிராமங்களையும் அழகுபடுத்தும் நோக்கில், முக்கிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட, உன்னதத் திட்டம் THAI *திட்டம் ஆகும். இத்திட்டத்தினைப் பெயர் மாற்றி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–2 எனவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவையை நிறைவுசெய்ய கலைஞர் மேம்பாட்டுத்*

திட்டம் எனவும், குறிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் செயல்படுத்தப்பட்ட THAI திட்டம், IUDM, CMCDM உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்குப் பெயர் மாற்றம் செய்து, புதிதாக நிதி ஒதுக்கீடு செய்ததுபோல், கடந்த 2022–2023 நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். திட்டங்களின் பெயரை மட்டும் மாற்றிவிட்டு, எங்கள் அம்மா அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களை உங்கள் அரசு அறிமுகப்படுத்திய திட்டம்போல் அறிவித்துள்ளீர்கள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இதுவரை, 10,914 கோடி ரூபாய் செலவில் 30.87 கோடி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2023–2024 ஆம் ஆண்டில், இத்திட்டத்தில் 35 கோடி வேலை நாட்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக, நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். தமிழகத்தில், முதற்கட்டமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2–2–2006 முதல் 6 மாவட்டங்களில், அதாவது, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கையில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஆட்சிக் காலத்தில் ஆண்டுக்கு சராசரியாக 34.76 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. அதேபோன்று, 2016–2017 முதல் 2020–2021 வரை, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் ஆண்டொன்றிற்கு சராசரியாக 30 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2011–2012 முதல் 2015–2016 வரை 173.81 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. அதில் 20,598 கோடி ரூபாய் சம்பளம் விடுவிக்கப்பட்டது. அதேபோன்று, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களது ஆட்சிக் காலத்தில், 2016–2017 முதல் 31–1–2021 வரை 142.65 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, 28,923 கோடி ரூபாய் சம்பளம் விடுவிக்கப்பட்டது. இந்த அரசில் 2022–2023–லிருந்து இதுவரை 30.87 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன எனவும், வரும் ஆண்டில் 35 கோடி மனிதசக்தி வேலை நாட்கள் உருவாக்கப்படும் என்றும் கூறியிருக்கிறீர்கள். இந்த இலக்கு போதுமானதாக இல்லை. வேலை நாட்கள் இலக்கு இன்னும் கூடுதலாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

MGNREGS திட்டத்தின்கீழ், மனிதசக்தி வேலை நாட்கள் 150 ஆக உயர்த்தப்படும் எனவும், ஊதியம் 300 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் எனவும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தும், கடந்த இரண்டாண்டுகளாக செயல்படுத்தப்படவில்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் 2011–2012 முதல் 2020–2021 வரையிலான மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 26.38 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 84,815 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கி மகத்தான சாதனை படைத்து, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுத் திட்டமான, உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனத் திட்டம்; அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது கையெழுத்திட்ட முக்கிய கோப்புகளில் இதுவும் ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் தமிழகத்தில் சுமார் 2 இலட்சத்து 96 ஆயிரம் மகளிர் பயன்பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இளைஞர்களுக்கும் மானிய விலையில் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கினால், அவர்களும் பாராட்டுவார்கள். ஏனெனில், பெண்களுக்கு இரு சக்கர வாகனம் வழங்குவதையே நிறுத்திவிட்டீர்கள், அதையும் கூடுதலாக செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தினை மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த, அம்மா ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்மூலம் நகர்ப்புரத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள், சிறு கடன் மற்றும் பெருங்கடன் பெற்று தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

பாரதப் பிரதமரின் கனவுத் திட்டமான முழு சுகாதார இயக்கத்தினை தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்த, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெரும் பங்காற்றி, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அரசு, இந்தியாவிலேயே முதன்மையானதாக

இடம் பெற்று, இத்திட்டத்திற்கான பாரதப் பிரதமரின் விருதினை வென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கொரோனா நோய்த் தொற்று காலகட்டத்தில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவின்பேரில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் sanitizer, soap போன்றவற்றைத் தயாரித்து, அரசு மருத்துவமனைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கின. ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு, பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டன.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் முடிவிற்கு வந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால், 2016 ஆம் ஆண்டு உலக வங்கியுடன் கலந்துபேசி, நிதியைப் பெற்று, புதுவாழ்வுத் திட்டம்–2 செயல்படுத்தப்பட்டு, இத்திட்டச் செயலாக்கத்தின்போது, ஏற்கெனவே புதுவாழ்வுத் திட்டத்தில் பணிபுரிந்தவர்களைப் பணியமர்த்தி, அவர்களுடைய குடும்ப வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டது. இத்திட்டத்தைத் தற்போது 'வாழ்ந்து காட்டுவோம்' எனப் பெயர் மாற்றம் செய்துள்ளீர்கள். ஆக மொத்தத்தில் இந்த அரசு அம்மா அவர்களின் திட்டங்களுக்குப் புதிய பெயர் வைத்துச் செயல்படுத்தி வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பக்கம் எண் 100, வரிசை எண் 396–ல் அனைத்து கடலோர மாவட்டங்களிலும், பொருத்தமான இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளீர்கள்.

பிற்பகல் 12–10

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகால அம்மா அரசில் 4,64,880 பணிகளுக்கு 46,869 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் வழங்கப்பட்ட மொத்த குடிநீர் அளவு, 7,791 MLD ஆகும். குறிப்பாக சென்னையில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால், அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்ட, 150 MLD கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகளை விரைவாக முடித்து, சென்னை மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, சென்னை பெருநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிரந்தரமாக பூர்த்தி

செய்யும் வகையில், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவியுடன் சென்னைக்கு அருகில் பேரூரில் சுமார் 6 ஆயிரம் கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 MLD கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட இரு திட்டங்களையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். பருவ மழை பொய்த்தாலும் சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிரந்தரமாகப் பூர்த்தி செய்திடும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசில் இத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆகவே, மேற்கண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இவ்விரு திட்டங்களையும் விரைந்து செயல்படுத்த அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நாளொன்றுக்கு 60 MLD திறன் கொண்ட இரண்டு கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டில் அம்மாவின் அரசு, அண்ணன் எடப்பாடியார் முதலமைச்சராக இருக்கும்பொழுது, ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்து கடலோர மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுமென தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல, விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வரவேண்டும்.

கோவை மாநகருக்குக் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதாவது 50 அடி அளவு நீர்மட்டத்திற்குப் பதில், தற்போது சுமார் 11.7 அடி அளவு நீர்மட்டம்தான் உள்ளது. நாளொன்றுக்கு கோவை நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய 100 MLD தேவைப்படுகிறது. இந்த நிலையில், அணையின் அளவு, நீரின் சேமிப்பை வைத்துப் பார்க்கும்பொழுது மே முதல் வாரம் வரை மட்டுமே குடிநீர் வழங்க இயலும். தற்போது கடும் கோடை வெப்பம் மக்களை வாட்டி வருகிறது. கோவை நகரில் இன்றைய நிலையில் 15 முதல் 20 நாட்களுக்கு ஒருமுறையே குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மாற்று வழிமுறைகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய அரசும், கோவை மாநகராட்சியும், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அப்போது, எங்களுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, இதற்கு நடவடிக்கை எடுத்து, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பருவமழைக் காலத்தில், கேரள அரசும், தமிழ்நாடு அரசின் அதிகாரிகளின் அனுமதியின்றித்

தண்ணீரைத் திறந்து விடுவதைக் கட்டுப்படுத்தினால், சிறுவாணி அணையில் கூடுதல் நீர் சேமித்து வைக்க இயலும். கோவையில் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தால் பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையை பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

ஏழை, எளிய கூலித் தொழிலாளர்கள், பாட்டாளிகள் பயன்பெறும் வகையில் மிகக் குறைந்த விலையில் சத்து மிகுந்த சுகாதாரமான உணவு, வறிய நிலையில் உள்ள அனைவருக்கும் கிடைக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களால் 19–3–2013-ல் அம்மா உணவகத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள திட்டமாகும். ஆனால், 2021 ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அம்மா உணவகத் திட்டத்தை ** வகையில், கலைஞர் உணவகத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டப்பேரவையில் அம்மா உணவகத் திட்டத்தை ** எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற வார்த்தை வேண்டாம். ஏனென்றால், நடைமுறையில் இருக்கிறது. பட்ஜெட்டிலும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ்.பி. வேலுமணி: அம்மா உணவகத் திட்டத்தை ** எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என பலமுறைத் தெரிவித்துள்ளீர்கள் என்பதைத்தான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அதனால் ** என்ற வார்த்தை வேண்டாம். மற்றவையெல்லாம் ok.

திரு. எஸ்.பி. வேலுமணி: பலமுறை நீங்கள் ** என்றுதான் சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். ஆனால், 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அம்மா உணவகத்தின் பற்றாக்குறை இடைவெளியை சரிசெய்ய ரூபாய் 100 கோடியை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அம்மா அரசு ஒதுக்கியது. அதன்பிறகு மூன்று நிதிநிலை அறிக்கைகளிலும் இத்திட்டம் செம்மையாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

நடைபெற நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விளிம்பு நிலை ஏழையெளிய மக்கள் பயன்பெறும் இத்திட்டத்தை அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் குற்றச்சாட்டாக சொன்னதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை வாங்கிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருநாள்கூட அம்மா உணவகத்தை நிறுத்துவது குறித்து நாங்கள் எண்ணவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதனைச் சொல்லவில்லை. ஒவ்வொரு இடத்திலும் அம்மா உணவகத்திலே, சாதாரணமாக ஒரு நாளைக்கு 4 ஆயிரம் ரூபாய் அளவிற்கு விற்பனை ஆகிறது என்று சொன்னால், சம்பளம் பெறுகிற அந்த மகளிர் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு சம்பளமே ஆறாயிரம், ஏழாயிரம் என்று கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதைச் சீர்செய்யும்பொருட்டு, அங்கு பணியாற்றுவோரை மாற்றி மாற்றி, முதல் நாள் ஒருவர் வந்தால், மற்றொருவர் மறுநாள் என்று மாற்றி அனைவருக்கும் வேலை தந்துகொண்டிருக்கிறோம். அனைத்து இடங்களிலும் இந்த உணவுப் பண்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரேயொரு இடம், அதுவும் இரயில்வே எடுத்த காரணத்தால், அது மாற்றப்பட்டு இருக்கிறது. அந்த இடத்திலும் புதிதாக இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, எந்த ஒரு இடத்திலும் அம்மா உணவகம் மூடப்படவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு செய்யவே இல்லை. ஆனால், நீங்கள் அதை அரசியல் ஆக்குவதற்காக தினந்தோறும் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; அது சரியில்லை.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், பல்வேறு அம்மா உணவகங்களிலிருந்து எங்களிடத்திலே புகார்

தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். தரமான பொருட்கள் வழங்கவில்லையென்றும், அதோடு, தரமாக, ருசியாக உணவைச் செய்வதற்குண்டான பொருட்கள் இல்லாத காரணத்தினாலே, அங்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் குறைந்து கொண்டிருக்கின்றனர் எனவும் பல பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, தரமான உணவு கொடுப்பதற்கு, தரமான பொருட்களை வாங்கி, வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அம்மா உணவகத்தைப்பற்றிச் சொல்கிறபோது, உணவு தரமாக வழங்கப்படவில்லை, தரமாகத் தயாரிக்கப்படவில்லை என்று பத்திரிகையிலே செய்தி வருவதாகச் சொன்னார்கள். ஆதாரத்தோடு அவர் சொன்னால், நிச்சயமாக, உறுதியாக, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். எங்கேயாவது தவறுகள் நடக்கலாம்; நான் இல்லையென்று மறுக்கவில்லை. எல்லாமே, எல்லா இடத்திலும் correct ஆக நடக்கிறதென்று நான் சொல்ல வரவில்லை. பல இடங்களில் தவறுகள் நடக்கலாம். சில இடங்களில் தவறுகள் நடக்கலாம். ஆக, எந்த இடத்தில் அந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆதாரத்தோடு சொன்னார்களென்றால், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக, உறுதியாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல பதில் சொல்லிவிட்டார்களே!

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில், இப்படிப்பட்ட நிலை இருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை நீங்கள் ஆய்வு செய்யுங்கள். ஆய்வு செய்து, அப்படி ஏதாவது இருந்தால் அதை சீர் செய்யுங்கள் என்பதைத்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் மட்டுமல்ல; ஊடகங்களில்கூட வேண்டுமென்றே திட்டமிட்டு இந்தச் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அதற்கு வக்காலத்து வாங்கி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். எங்கே என்று நிரூபித்தார்களென்றால், எங்கே என்று ஆதாரத்துடன் சொன்னார்களென்றால், அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களாகிவிட்டன.

திரு. எஸ்.பி. வேலுமணி: அம்மா உணவகத்தைப் பொறுத்தவரையில் எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார். நான் சொல்வது 2020–2021 —ல் 100 கோடி ரூபாய் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது ஒதுக்கினார். அதன்பின்னர், 3 வருடங்களாக நிதி ஒதுக்கப்படவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு முதல்வரும் சொல்லிவிட்டார்கள். நீங்கள் அடுத்ததைச் சொல்லுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: *ஏழையெளிய மக்களுக்காக* service mind*–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இதைக் கொண்டு வந்தது. நீங்கள் 3 வருடங்களாக நிதியொதுக்கவில்லை. அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கிறோம். நிதியொதுக்கினால்தான் சரியாக இருக்கும் என்று சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது மாநகராட்சிமூலம். . .*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லை, இல்லை, மாநகராட்சி மூலமாகத்தான் நடக்கிறது. அரசு நிதி 100 கோடி ரூபாயை, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இருக்கும்போது அதற்கு ஒதுக்கியிருக்கிறார். அதைத்தான் சொல்கிறேன், வேறு ஒன்றும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட்டபோது, நீங்கள் எதற்கும் நிதியொதுக்கவில்லை. அதற்குப் பிறகு, இடையிலே நீங்கள் நிதியொதுக்கினீர்கள். இந்த ஆண்டு இரண்டு மடங்கு அதற்காக நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் நினைப்பதைப்போல் அல்ல; நிதியொதுக்கப்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அடுத்த உணவகத்திற்கு வந்துவிடுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *நான் அடுத்த* subject*–க்குப் போகிறேன். மாநகராட்சியில் நிதியில்லாத காரணத்தால்தான், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாரின் அரசு நிதியொதுக்கியது. திரும்ப நிதி ஒதுக்க வேண்டுமென்று தான் நான் கேட்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) தமிழகத்தில் தூய்மையான. . .*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *ஆதாரத்தோடு கொடுங்கள். விசாரிக்கிறோம், அதை முறைப்படுத்துகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இது ஆதாரப்பூர்வமானதுதானே! அரசாணைதானே இது. தமிழகத்தில் தூய்மையான, முழுமையான சுகாதாரம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதுபோதும். அடுத்து, நன்றிக்கு வாருங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் மேலாண்மை போன்ற திட்டங்களை நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்திட அரசு தனிக் கவனம் எடுத்து, மிகவும் சவாலான திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி, கூடுதல் நிதியொதுக்கீடு செய்து செயல்படுத்த அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, கோவை மாநகராட்சி வெள்ளலூர் குப்பைக் கிடங்குகளில் மழைக்காலங்களில் சுமார் 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு துர்நாற்றம் வீசி, நோய்த்தொற்றால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் பழைய குப்பைகளைத் தரம் பிரித்து மண் புழு உரம், அதேபோல,* Effective micro-organisms solution *என்கிற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பழைய குப்பைகள் அழிக்கப்பெற்று, துர்நாற்றம் மற்றும் ஈக்களின் தொல்லைகள் கட்டுப்படுத்தப்பட்டன. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தி, முன்னுரிமை வழங்கி, கூடுதல் நிதியொதுக்கீடு செய்து, வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் பழைய குப்பைகளைத் தரம் பிரித்து, மண் புழு உரம் தயாரித்து* Effective micro-organisms solution *என்கிற தொழில்நுட்பம்மூலம் குப்பைகளை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமா?*

திரு. எஸ்.பி. வேலுமணி: *தென்னிந்தியாவின்* Manchester. . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கடைசிப் பகுதிக்கு வந்துவிட்டார்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: கோவை நகரம் ஜவுளித் தொழில், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், மருத்துவ வசதிகள், கல்வி மற்றும் Engineering உட்பட உற்பத்தித் துறைகளில் முதன்மை நகரமாகும். மேலும், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசுதான் கோவை மாநகரை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திட உயர்மட்டப் பாலங்கள், குடிநீர்த் திட்டப் பணிகள், விமான நிலைய விரிவாக்கம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா போன்ற முக்கியத் திட்டங்களைச் செயல்படுத்தி, metro rail திட்டம் அறிவித்து, ஆரம்பக் கட்ட ஆய்வுக்கு 3 கோடி ரூபாய் நிதியொதுக்கியது. இந்நிலையில் கோவையில் அவினாசி சாலை, சத்தியமங்கலம் சாலையை உள்ளடக்கிய இடங்களுக்கு 9,000 கோடி ரூபாயில் metro rail திட்டம் அறிவிக்கப்பட்டு இருப்பினும், அரசின் அறிவிப்பில் கோவையில் முக்கிய பிரதான நெடுஞ்சாலைகளான, மேட்டுப்பாளையம் சாலை, திருச்சி சாலை, பொள்ளாச்சி சாலை, பாலக்காடு சாலை மற்றும் தொண்டாமுத்தூர் சாலை, சிறுவாணி சாலை உள்ளிட்ட சாலைகள் மெட்ரோ இரயில் திட்டத்தில் இணைக்கப்படாமல் விடுபட்டுள்ளன. கோவையிலுள்ள அனைத்துத் தொழில் துறையினருக்கும், பொதுமக்களுக்கும் இது மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. விடுபட்ட சாலைகளை இணைத்து, மெட்ரோ இரயில் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தினால், அனைத்துத் தரப்பினரும் மிகுந்த பயன்பெறுவர் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கிட, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் திருவாளர்கள் அட்சய பாத்திரா நிறுவனத்தாரிடம், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, இத்திட்டமானது பிப்ரவரி 25, 2019 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் மற்றும் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் முதன்முதலாக திருவான்மியூரில் உள்ள சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 5,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலைச் சிற்றுண்டி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு கண்காணிப்புக் குழு அமைத்து, செம்மையாக நடைபெற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார்

TRUTH ALONE TRIUMPHS

அவர்கள் உத்தரவிட்டு, இத்திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த, மண்டலம் 9, வார்டு எண் 111, மண்டலம் 6, வார்டு எண் 76 ஆகிய இடங்களில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் 35,000 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், பொது சமையல்கூடம்—centralised kitchen அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் திருவாளர்கள் அட்சய பாத்திரா நிறுவனத்தாருடன் ஒப்பந்தம் போடப்பட்டு, பூமி பூஜை நடைபெற்றது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *நான் பேசி முடித்துவிடுகிறேன், அதற்குப் பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் மாண்புமிகு எடப்பாடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட காலைச் சிற்றுண்டி திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் சென்னை பெருநகர மாநகராட்சியில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தினால் காலையில் பள்ளிக்கு வரும் மாணவர்கள் தாமதமாக வருகைபுரிவது தவிர்க்கப்பட்டது. இது மாணாக்கர்கள் பசியின்றி உற்சாகமாக கல்வி பயிலவும் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்கவும் மிகவும் பயனுள்ள திட்டமாகும். அந்தவகையில் இந்த அரசால் 15 மாநகராட்சிகள், 23 நகராட்சிகளில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15–9–2022 அன்று 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை, அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயன் கருதி, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே முதன்முதலாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் சிறுபிள்ளைகளுக்கு காலை உணவுத் திட்டம் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அறிவித்தீர்கள் என்று சொன்னீர்கள். எங்கேயும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நீங்கள் ஆரம்பித்தும் பார்க்கவில்லை. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலமாகத்தான்,* Akshaya Patra Foundation *நிறுவனம் மூலமாகத்தான் நடந்தது. இப்போது நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக ஒவ்வொரு இடத்திலும் காலையிலிருந்து அது ஒழுங்காகச் செல்கிறதா என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார்கள். ஆரம்பித்தது மாண்புமிகு முதலமைச்சர்; அதைச் செய்தது இப்போது இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர், ஆனால், அந்தப் பெயரை நீங்கள் வாங்கப் பார்க்கிறீர்கள். அதெப்படி வாங்க முடியும்? இன்னொன்றையும் சொல்கிறேன். அம்மா உணவகத்துக்கு நிதி ஒதுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். அம்மா உணவகத்துக்கு இந்த ஆண்டு ரூபாய் 129 கோடியே 85 இலட்சம் சென்னை மாநகராட்சியால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய வருவாய் என்பது 15 கோடி ரூபாய்தான். ஆனால், அதற்காக 129 கோடி ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *நான்* argument*–க்காக பேசவில்லை. சென்னை மாநகராட்சியில் 2023 ஆம் ஆண்டு* Budget*–ல் நிதி ஒதுக்கவில்லை. நான் இப்போதுதான்* particulars *வாங்கினேன்; நிதி ஒதுக்கவில்லை. நீங்கள் ஒதுக்குங்கள், சந்தோஷம். அதைப்போல, காலை உணவுத் திட்டத்தை அப்போது இருந்த முதலமைச்சர் அவர்களும் அப்போது இருந்த ஆளுநர் அவர்களும்* Akshaya Patra Foundation *நிறுவனம் மூலமாகத் தொடங்கி வைத்தார்கள்; நீங்கள் விசாரித்துக்கொள்ளுங்கள்;* Record*–ல் இருக்கின்றது. அதற்குப் பிறகு விரிவுபடுத்தி இருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இந்தப் பதிலையும் கேட்டுக்கொள்ளுங்கள்.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Akshaya Patra *என்பது ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம். அந்த அட்சய பாத்திரா நிறுவனம் அரசுக்குச் சொந்தமான நிறுவனம் இல்லை. அது ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் அரசுக்கு ஏதாவது ஓர் இடத்தில் உதவ முன்வருவார்கள். அதைப் பெற்றுக்கொள்வது என்பது அரசின் கடமை. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலையும் கேட்டுக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *அந்தவகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு திட்டத்தை, தனது அரசின் திட்டம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்வதைப் போல ஒரு ** வேறு எதுவுமே இருக்க முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தையை நீக்கிவிடுகிறேன். அந்த வார்த்தை நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அதை நீக்கியாகிவிட்டது, உட்காருங்கள். முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. உட்காருங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *நாங்கள் செய்ததைச் சொல்லி கோரிக்கை வைக்கின்றோம். அவர்கள் ** என்று சொல்லிப் பேசுகிறார்கள். அப்போது நாங்கள் பேசலாமா? அதை அவைக்குறிப்பில் இருந்து எடுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொன்னது, நாங்கள் சொன்னது எல்லாம் நீக்கியாகிவிட்டது. நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லை. நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதை நீங்கள் எடுக்கவேண்டாம்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

பிற்பகல் 12-25

திரு. எஸ்.பி. வேலுமணி: *அப்போது எங்கள் அண்ணன் எடப்பாடியார் முதலமைச்சராக இருந்தபோது,* 'Akshaya Patra' *என்ற தனியார் நிறுவனம்மூலம் ஆரம்பித்தோம் என்றுதான் நாங்கள் சொன்னோம். எந்த* ward*-ல் ஆரம்பித்தோம்; எப்படி ஆரம்பித்தோம், மாநகராட்சி எதனுடன் ஒப்பந்தம் போட்டது, எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று நான் விளக்கமாகத்தான் பேசினேன். நீங்கள் அரசின் சார்பாக ஆரம்பித்தீர்கள் என்பதை நான் இல்லையென்று மறுக்கவில்லையே! அதற்கு ஏன் நீங்கள் கோபப்படுகிறீர்கள்? ஒன்றுமே இல்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு உறுப்பினர். . . (குறுக்கீடு) இல்லை, கோபம் இல்லை. (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *எங்கள் ஆட்சியில் ஆரம்பித்தோம் என்பதை நான் பதிவு செய்தேன். வேறொன்றுமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்களும் சொன்னார்கள்; நீங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் போட்டீர்கள். அதை மறுக்கவில்லையே! (குறுக்கீடு) இது அரசுத் திட்டம் என்று சொன்னார்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: Correct *தான். நாங்கள் அதைத்தான் சொன்னோம். தன்னார்வத் தொண்டு நிறுவனமாக இருந்தாலும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் அப்போது முதலமைச்சராக இருந்த எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கவர்னர் அவர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனமாக இருந்தாலும், அவர்களுக்குத் தேவையான வழிமுறைகளை ஏற்பாடு செய்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *அதாவது* centralised kitchen *ஏற்பாடு செய்து, அனைத்து வசதிகளையும், அனைத்து உதவிகளையும் அப்போதிருந்த மாநகராட்சி செய்து கொடுத்தது. அதை நாங்கள்தான் இருந்து பார்த்தோம். அதனால்தான் சொன்னோம். இப்போது நீங்கள் அரசு சார்பாக ஆரம்பித்திருக்கிறீர்கள்.*

அதை நாங்கள் ஒன்றும் மறுக்கவில்லை. அதனால், யாரும் கோபப்பட வேண்டாம். அப்போதிருந்த எங்களுடைய முதலமைச்சர் அவர்களின் முயற்சியில்தான் செய்தார் என்பதைத்தான் நான் சொன்னேன். வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: உடனே உரையை முடித்துவிடுகிறேன். அதைப்போல, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தியது அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. அதேபோல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், உள்ளாட்சித் துறையில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் பராமரிப்புப் பணியாளர்கள், அனைத்து அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 7 ஆண்டுகளுக்குமேல் பணிபுரியும் ஒப்பந்தம் மற்றும் தற்காலிகப் பணியாளர்களை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க, நிரந்தரப்படுத்த அப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பின்னர், ஆட்சி மாற்றத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த அரசு அவர்களை நிரந்தரப்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போல, கிராம ஊராட்சியாளர்களாகப் பணிபுரிவோர்களுக்கு அரசுக் கருவூலத்திலிருந்து மாதாந்திர ஊதியம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: உரையை முடிக்கப்போகிறேன். அவ்வளவுதான், உரையை முடிக்கப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–2–2023 அன்று காலை கோவை நீதிமன்றத்தில் வாய்தாவிற்காக ஆஜராகி, பின்னர் திரும்பும் போது, கீரநத்தம் பகுதியைச் சேர்ந்த கோகுல் என்பவரின் நண்பன் மனோஜ் நீதிமன்றத்தின் முன்பு, நுழைவாயில் அருகில் 4 பேர் கொண்ட

கும்பலால் பட்டப்பகலில் கொடூர ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் கோகுல் கொல்லப்பட்டார்; மனோஜ் சிகிச்சையில் உள்ளார். அதற்குப் பிறகு, 23–3–2023 அன்று காலை நீதிமன்ற வளாகத்தில், இரண்டாவது நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சம்பந்தமாக ஆஜராக வந்த கவிதா என்ற பெண்மணி, அவரது கணவர் சிவகுமார் ஒரு can நிறைய acid எடுத்துக்கொண்டுவந்து ஊற்றியதில், உடல் முழுவதும் வெந்து, அப்பெண்மணி நீதிமன்றத்திற்குள் ஓடியபோது, வழக்கறிஞர்களெல்லாம் அவரை காப்பாற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு நீதிமன்றத்தில் இருப்பவர்கள் அச்சத்தில் இருக்கிறார்கள்; கோவை மாவட்ட மக்கள் அச்சத்தில் இருக்கின்றனர். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. இன்றைக்கு உள்ள மானியக் கோரிக்கைமீதுதான் பேசவேண்டும். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: இது கோவை மாவட்டம் சம்பந்தப்பட்ட subject.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நான் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. எஸ்.பி. வேலுமணி: இதற்கு நடவடிக்கை எடுங்கள் என்றுதான் கேட்கிறேன். வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பதிவு செய்துவிட்டீர்கள். உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: உடனே உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர். (குறுக்கீடு) இல்லை, இவர் உரையாற்றியவுடன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அவர் உரையை முடித்தவுடன், ஒரு நிமிடத்தில் நீங்கள் பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்தவிட்ட பிறகு, உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

திரு. எஸ்.பி. வேலுமணி: கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தமிழக மக்களுக்கு தி.மு.க. வழங்கிய தேர்தல் அறிக்கையில், அனைவருக்கும் கல்விக் கடன் இரத்து; அனைவருக்கும் நகைக் கடன் இரத்து; அனைவருக்கும் விவசாயக் கடன் இரத்து; அனைவருக்கும் gas cylinder மானியம் ரூ.100/– . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) நான் கேட்டுவிட்டு, சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'அனைவருக்கும்' என்பதற்கு தெளிவான பதில், ரூ.1,000/– கொடுப்பதாக அறிவித்தபோது, சொல்லியாகிவிட்டது.

திரு. எஸ்.பி. வேலுமணி: அனைவருக்கும் gas cylinder மானியம் ரூ.100/– மற்றும் பெட்ரோல், டீசல் விலை குறைப்பு என பொதுமக்களை கவர்ச்சிகரமான தேர்தல் அறிக்கையில், வார்த்தைகளால் ஈர்த்து, ஆட்சியில் அமர்ந்தவுடன், 'அனைவருக்கும்' என்பதற்குப் பதில் 'தகுதியுள்ள' என்ற வார்த்தையைப் புகுத்தி ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. ** என்று நீங்கள் சொன்ன வார்த்தை அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) போதும், நன்றி. (குறுக்கீடுகள்) இதைப்போல எல்லோரும் பேச ஆரம்பித்தால், அவை நாகரிகமாக போகாது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றியோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதை, அவைக்குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடு) அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) ஒரே நிமிடம்.

திரு. எஸ்.பி. வேலுமணி: நாட்டிலுள்ள சுமார் இரண்டு கோடியே 19 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில், 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' எனக் கூறும் இந்த அரசு, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளின்படி, குடும்பத் தலைவிகள் மனம் மகிழ மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000/–ஐ, மகளிர் தினம் கொண்டாடும் வகையில். . . (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். 2023 வரை 21 மாதங்கள் நிலுவையினை வழங்க அரசு முன்வர வேண்டும். அதைப்போல, தாலிக்குத் தங்கம் மற்றும் உதவித் தொகை, விலையில்லா மடிக்கணினி, கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், அம்மா இருசக்கர வாகனம், Amma Mini Clinic போன்ற மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நல்லரசில் செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்கள். . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி. (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) அவர் முடித்து உட்கார்ந்தவுடன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *தொடர்ந்து இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்த வேண்டும். இரத்து செய்த திட்டங்களையெல்லாம் செயல்படுத்த வேண்டும். இல்லையென்றால், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வந்து இத்திட்டங்களை நிறைவேற்றுவார். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், போதும். (குறுக்கீடு) முடித்தாகிவிட்டது, உட்காருங்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நடைமுறையில் தேர்தல்களில் வெற்றி, தோல்வி என்பது இயல்பான ஒன்று. 2006–2011–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவைக்குறிப்பில் எதுவும் ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. (குறுக்கீடு)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான கூட்டத்திற்காக அதிகாரிகளுடன் வெளியில் இருந்தேன். அப்போது எனக்குத் தகவல் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, காலை உணவுத் திட்டத்தைப் பற்றி, ஏதோ பேசியது போன்று எனக்குத் தகவல் வந்தது. அதனால் சில விளக்கங்களை இங்கே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது, ஆளுநர் மாளிகைக்குக் கொடுக்கின்ற ஒதுக்கீட்டில், திடீரென்று சில மாற்றங்கள் வந்தது போன்று எனக்கு தகவல் வந்ததனால், அதைச் சென்று ஆய்வு செய்தேன். 2018–2019 ஆம் ஆண்டு வரையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய அரசாங்கம், ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் மாளிகைக்கு discretionary fund என்பதில் 50 இலட்சம் ரூபாய் வரை ஒதுக்கிக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு, திடீரென்று ஒரு ஆண்டில், 2019–2020 இல் அதை 50 இலட்சம் ரூபாயிலிருந்து, ஐந்து கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. அதற்குப் பெயர் என்னவென்றால், discretionary fund. அதாவது, அட்சயப் பாத்திராவிற்கோ, உணவிற்கோ கிடையாது. Discretionary fund என்ற ஒரு தலைப்பில், 50 இலட்சம் ரூபாயை 5 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். பிறகு, அதை ஆய்வு செய்தால், அந்த ஆண்டு, ஐந்து கோடி ரூபாயில், நான்கு கோடி ரூபாயை அட்சயப் பாத்திராவிற்கு, இரண்டு தவணைகளாக தலா இரண்டு கோடி ரூபாயாகக் கொடுத்திருக்கிறார்கள். மாநகராட்சியினுடைய சில மண்டலங்களில் செயல்படுத்த ஏதோ ஓர் ஒப்பந்தம் போட்டதுபோன்று எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதாவது, பூண்டு, வெங்காயம் இவற்றையெல்லாம் சேர்க்காத ஓர் அமைப்பு, அவர்கள் வழியில் செய்கின்ற உணவு, அதை சத்துணவு என்றெல்லாம் சொல்ல முடியாது. அவர்கள் வழியில் செய்கின்ற உணவை, அரசு பணத்தை வைத்து, அரசு இடத்தை வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அரசால் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்காக என்று ஒதுக்கப்பட்ட பணம். சரி, ஆனால் மீதமுள்ள ஒரு கோடி ரூபாய் என்னவாயிற்று? மீதமுள்ள ஒரு கோடி ரூபாய் ஆளுநர் மாளிகை கணக்கு என்கின்ற வகையில், எங்கள் கண்ணுக்குத் தெரியாத கணக்கில் மாற்றப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த ஆண்டு என்னவாயிற்று? திருப்பி ஐந்து கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஐந்து கோடி ரூபாயில், ஒரு கோடி ரூபாய் அட்சயப் பாத்திராவிற்குக் கொடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்தத் திட்டமே நின்று போய்விட்டது என நினைக்கிறேன். (குறுக்கீடு) நடைமுறைப்படுத்தவே இல்லை என்கிறார், மாவட்டச் செயலாளராகிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். மீதமுள்ள நான்கு கோடி ரூபாய் என்னவாயிற்று? ஏதேதோ அவர்களுக்கு விருப்பமான செலவுகளில், கூட்டங்களில், எதற்கெல்லாமோ செலவு செய்துவிட்டு, திருப்பி ஆண்டு முடியும்போது, சுமார் ஒரு கோடியே 88 இலட்சம் ரூபாயை அரசு கணக்கில் கஜானாவிலிருந்து எடுத்து, வேறு ஏதோ ஒரு கணக்கில் போடப்பட்டது. அந்தக் கணக்கு, எங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. Audit-க்கோ, தணிக்கைக்கோ, அரசாங்கத்திற்கோ தெரியவில்லை. எனவே, discretionary fund, அட்சயப் பாத்திரா என்று முன்னாள் அமைச்சர் விளக்கம் கொடுக்கிறார்களே தவிர, அந்தக் கணக்கினைக் கொடுக்கும்போது, வெறும் discretionary fund, ஆளுநர் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்கின்ற அளவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் சென்று செலவைப் பார்க்கப் பார்க்க, அது அரசமைப்புக்கு உட்பட்டதா, இல்லையென்றால், ஏதோ ஒரு கட்சி நடத்துபவர்களுக்காக இது செலவு செய்யப்படுகிறதா என்பது போன்ற அச்சமெல்லாம், அந்தக் கணக்கைச் சென்று பார்க்கும்போது வருகிறது.

அதற்குப் பிறகு, இந்த நிதி தொடர்ந்து CAG-னுடைய ஒரு எல்லையை மீறி—CAG-ல், ஆண்டு முடிகின்ற நேரத்தில் பட்ஜெட்டுக்காக ஒதுக்கிய நிதியை செலவு செய்யவில்லையென்றால், அந்தப் பணத்தை, மார்ச் 30 அல்லது 31-ல் திடீரென்று எடுத்துச் சென்று, கண்ணுக்குத் தெரியாத account-ல் வைப்பது தவறு என்று பல முறை தணிக்கைப் பத்தியில் சொல்லியிருக்கிறார்கள். நான் ஐந்து வருடங்கள் பொதுக் கணக்குக் குழுவில் உறுப்பினராக இருந்து, பல தணிக்கைக் குழு அறிக்கைகளை பார்த்திருக்கிறேன். நாங்கள் இதையெல்லாம் தெரிந்த பிறகு, இதனைத் திருத்தும் வகையில் முதல் முறையாக, இதற்குப் புதிய விதிமுறைகளுடன், சட்ட அமைப்பின் அடிப்படையில் செலவு செய்ய வேண்டுமென்று ஒரு திட்டத்தையும் கொண்டு வருகிறோம். அதனால், இவர்கள் நிஜமாகவே உணவு போட்டது மாதிரி எதிலும் தகவல் இல்லை. இந்த மாதிரி ஒரு திட்டம், என்னைப் பொறுத்தவரையில் ஜனநாயகத்திற்கே விரோதமானது. மீதமுள்ள

அனைத்துத் துறைகளுக்கும் 1,000/– ரூபாய், 10,000/– ரூபாய்க்கு இங்கு மானியக் கோரிக்கையில் வைத்து எடுத்துக் கொண்டு செல்கிறோம். ஐந்து கோடி ரூபாயை எந்தக் காரணமும் இல்லாமல், யாருக்கும் சொல்லத் தேவையில்லாமல், வேண்டுமென்கின்றபோது நிதியை மறைமுகமான கணக்கிற்கு எடுத்துக் கொண்டு செல்வதெல்லாம் இந்த ஜனநாயக மரபில் கிடையாது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இது நல்ல திட்டமே இல்லை என்று நான் கூறுவேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள். (குறுக்கீடுகள்)

***திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டை கண்டிருக்கக்கூடிய தந்தை பெரியாரினுடைய இந்த மாபெரும் நாளினைப் போற்றுகின்ற அறிவிப்பாக தொடங்கிட்ட. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் பேசி முடித்த பிறகுதான் நான் அமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதில் உங்களுக்கு ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்தால். . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னது குறித்து உங்களிடம் ஆதாரம் இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள் பார்ப்போம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) அவர்களிடம் ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உள்வாங்கிக் கொண்டு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மேதகு ஆளுநரைப் பற்றி இந்த அவையில் பேசியது அவைக் குறிப்பில் இருக்கலாமா என்று பாருங்கள். அவர் ஆளுநரைப் பற்றிப் பேசியதே தவறு. (குறுக்கீடுகள்) ஆளுநரைப் பற்றி அவர் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதியமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசும்போது நான் குறுக்கிட்டு விளக்கமளிக்க வாய்ப்புக் கொடுங்கள் என்று தங்களிடம் கேட்டேன். அதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகுதான் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள். அவர் பேசி முடித்த பிறகுதான், நான் விளக்கம் அளித்தேன். ஆனால், திரும்பத் திரும்ப அவர் பேசினார் என்றால், பேசி முடித்ததற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அப்படியென்றால், நான் குறுக்கிட்டு எப்போது விளக்கமளிக்க வாய்ப்புக் கேட்டாலும் கொடுங்கள். (குறுக்கீடுகள்) அப்படியென்றால் அதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிட்ட பிறகு நீங்கள் பேசுங்கள் என்று சொல்லிவிட்டு, திரும்பவும் அவர் பேசப் போகிறார். திரும்பவும் நான் குறுக்கிட்டு, பதில் சொல்லட்டுமா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இதை உள்வாங்கிக் கொண்டு நீங்கள் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவர்னருடைய* account*-க்கு பணம் இப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மரபும் கிடையாது; சட்டத்திலும் அதற்கு இடம் கிடையாது. அது ஒரு மறைமுகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னது தவறாகத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எந்த அடிப்படையில் கவர்னருக்கு பணம் சென்றது? எதற்குச் சென்றது என்று நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுக்கு,*

தனிப்பட்ட முறையில் அவர்களுக்குண்டான திட்டங்களை அறிவிப்பதற்காக மேதகு ஆளுநர் அவர்கள் அரசாங்கத்திடம் கேட்கின்றார். அரசாங்கத்தால் அவர்களுக்கு அளிக்கப்பட்டு, அந்தத் தொகையிலிருந்து செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் சொல்கிறார். நான் முதலமைச்சராக இருந்தபோது, நானும், மேதகு ஆளுநர் அவர்களும், இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்திருக்கிறோம். இது ஏழைகளுக்காக கொடுக்கப்பட்ட திட்டம்தான். அப்படியென்றால், ஏழைகளுக்கு கொடுக்கப்பட்டதை நீங்கள் கொச்சைப்படுத்துகிறீர்களா? நீங்கள் கொடுத்தால் சரி, நாங்கள் கொடுத்தால் தவறா? (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? திராவிட முன்னேற்றக் கழக அரசில், 'தொழிலதிபர்கள், தொழில் நிறுவனங்கள், முன்னாள் மாணவர்கள்மூலம் நன்கொடை பெற்று'—என்று, நீங்கள் சொன்னால் right, நாங்கள் செய்தால் தவறா? ஏழைகளுக்கு உணவு கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? எந்த ரூபத்தில் செய்தாலும் அது ஏழைகளுக்குச் சென்று சேர்ந்தால் சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் இதற்கொரு விளக்கம் சொல்கிறேன். ஒரு ஜனநாயக அமைப்பு, அரசு, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், நிதியைக் கையாளுவதற்கு அவர்களுக்குத்தான் முழு உரிமையுண்டு. அதை கவர்னருக்குக் கொடுத்து, அவர் மூலமாக 'அட்சயப் பாத்திரா' மூலம் யாருக்கோ திட்டங்கள் நடத்துவதற்கு ஜனநாயக நாட்டில் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரத்திற்கு அவர் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார். (குறுக்கீடு) ஆதாரத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகக் கூறுகிறேன். அவர்கள் 'அட்சயப் பாத்திரா' நிறுவனத்திற்குக் கொடுத்ததையோ,

செயல்பட்டதையோ ஜனநாயகத்திற்கு தவறு என்று நான் சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த நிதியை ஒரு காரணம் சொல்லி, சுட்டிக்காட்டி வாங்கி, அந்தக் காரணத்திற்காக செலவு செய்யாமல், வேறு ஏதோ காரணத்திற்காக செலவு செய்தது ஏன் என்பது முதல் கேள்வி. அதற்குமேல் நான் சொல்கிறேன். பத்து பத்திகள் இருக்கின்றன. எந்தத் துறையும், எந்த line item-த்திலும், எந்தத் தலைப்பிலும் எதற்காக நீங்கள் செலவு செய்கிறீர்கள் என்று சொல்லிவிட்டு, கஜானாவிலிருந்து நேராக payment செல்ல வேண்டுமே தவிர, இந்தப் பணத்தை எடுத்து இன்னொரு account-ல் வைக்கக் கூடாது என்பது மரபு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்கிறேன், 2015-ல், வெள்ள பாதிப்புக்காக வந்த நிவாரணம் பற்றி, தணிக்கைக் குழு, தணிக்கை அறிக்கையில் கூறியிருக்கிறது. அந்த அரசாங்கம் நடக்கும்போது, 4 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் பணம் நிவாரணமாக வாங்கி, 2 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் குறிப்பிட்ட காலத்திற்குள் செலவு செய்யாமல், வேறு account-க்கு மாற்றப்பட்டிருக்கிறது; கண்ணுக்குத் தெரியாத அளவில் செலவு செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு என்ன விதிமுறை சரியோ, அதே விதிமுறைதான் ஆளுநருக்கும் சரியே தவிர, வெவ்வேறு ஆளுக்கு வெவ்வேறு விதிமுறை என்றிருப்பது சரியில்லை என்றுதான் நான் சொல்கிறேனே தவிர, இவர்கள் அட்சயப் பாத்திரா நிறுவனத்திற்குக் கொடுத்தது சட்டத்திற்கு விரோதமானது என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள். நீங்கள், 7 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

பிற்பகல் 12-40

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு சிறிய சட்டச் சிக்கல் இருக்கிறது. அதாவது, கவர்னருக்கு பணத்தை* raise *செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர் வாங்கிவிட்டார். யாருக்காகக் கொடுத்தார்கள்? கவர்னருக்காக கொடுத்தார்கள். கவர்னர் அதை எடுத்து இன்னொருவருக்கு, அட்சயப் பாத்திரா நிறுவனத்திற்கோ, எதற்கோ கொடுத்திருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சின்ன திருத்தம். காலை சிற்றுண்டிக்கு அட்சயப் பாத்திரா நிறுவனம் மூலமாகக் கொடுப்பதற்காகத்தான் 5 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 4 கோடி ரூபாய் செலவு செய்துவிட்டு, மீதி 1 கோடி ரூபாயை வேறு அக்கௌன்ட்டிற்கு மாற்றியிருக்கிறார்கள். அடுத்த வருடம் 5 கோடி ரூபாயை வாங்கிவிட்டு, 4 கோடி ரூபாயை வேறு அக்கௌன்ட்டிற்கு மாற்றியிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்க்குத்தான் உணவு வழங்கப்பட்டிருக்கிறது என்றுதான் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இதில் என்னுடைய கருத்து என்னவென்று கேட்டால், இதற்கு கவர்னரே பதில் சொல்ல வேண்டும். இந்த விவகாரத்திற்கு எல்லாம் காரணம் அவர்தான், வாங்கிக் கொடுத்திருக்கிற ** வேலை செய்திருப்பது அவர்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டையொட்டி, ஒரு மாபெரும் அறிவிப்பினை வழங்கிட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முதலில், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, விளிம்புநிலை மக்களின் சார்பில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை வணங்கி, திராவிட பேராசான் பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, நூற்றாண்டு காணுகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) “ஏழைகள் வாழ வேண்டும், எரியாத குடிசை வேண்டும், வயிறார உணவு, மானமாரத் துணி, அறிவாரக் கல்வி இவற்றைத் தர வேண்டும். உழைப்பிற்கு வாய்ப்பும், உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும்” என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்ட அந்த வைர வரிகளை நெஞ்சிலே ஏந்தி, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

உழைத்துக்கொண்டிருக்கக்கூடிய உன்னதத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியை, தமிழ்நாட்டில் நடத்திக்கொண்டிருக்கக்கூடிய, தமிழகத்தின் முதல்வர், எங்கள் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற குறள் வரிகளுக்கு ஏற்ப. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னேன். இன்னொரு வார்த்தை ** என்று சொன்னேன். அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோன்று, அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *எங்கள் தலைமுறையினரை, இந்த அவைக்கு அழைத்து வந்து, முந்தியிருக்கச் செய்த எங்கள் தந்தைக்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.*

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்"

என்ற குறள் வழியில், இந்த அவையில், தந்தைக்கு உதவியாய், தந்தை எடுக்கின்ற அத்துணை முயற்சிகளுக்கும் உதவியாய், திராவிட சிந்தனையை அடுத்த தலைமுறைக்குக் கடத்திடவும், உழைத்திடும் உன்னதத் தலைவனாய், எங்கள் இளந்தலைவராய் விளங்குகின்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 மார்ச் 30] [திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்]

மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னர் பேசியவர், இதே துறைக்கான அமைச்சராக கடந்த கால ஆட்சியில் இருந்தவர், என்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்று சொல்வதற்கு முற்பட்டாரே தவிர, என்னவெல்லாம் செய்யவில்லை என்பதனை மறைத்துவிட்டார். பேரறிஞர் பெருந்தகை அண்ணா பெயரில் இயக்கத்தைக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், அண்ணாவின் மண்ணுக்கு செய்திருக்கக்கூடிய வஞ்சகம், எந்த அளவுக்கு என்று எடுத்து பட்டியலைப் பார்த்தால், காஞ்சிக்கு தந்த அத்துணை திட்டங்களும், கழக ஆட்சியில் கலைஞரால் வழங்கப்பட்டது மட்டுமே இருக்கின்றன. கடந்த முறை ஐந்தாண்டுக் காலத்தில் நான் எத்தனையோ கோரிக்கைகளை வைத்தேன்; காஞ்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டோம். காஞ்சிக்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டோம். காஞ்சியில் ஒரு தடுப்பணை கட்டப்பட வேண்டுமென்று கேட்டோம். 2017 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். நூற்றாண்டின்போது தடுப்பணை கட்டப்படும் என்று அறிவித்துவிட்டு, ஐந்தாண்டு காலமும் தடுப்பணை கட்டாமலேயே சென்றுவிட்டவர்கள் கடந்தகால ஆட்சியாளர்கள். அவர்கள் இன்றைக்கு என்ன செய்திருக்கிறோம் என்று பட்டியலிடுவதாக இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் யார் வீட்டுப் பிள்ளைக்கும் பெயர் சூட்டிக்கொள்வதற்கு Initial *வைத்துக்கொள்ள விரும்பாதவர்கள். எங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் நாங்கள் பெயர் சூட்டிக்கொள்வோம். மற்றவர்களின் பொருளின்மீது ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்வதற்கு தயாராக இல்லாதவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–45

எங்கள் திட்டங்கள் தந்தை பெரியாரால், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வகுக்கப்பட்ட பாதையில் பயணித்து கொண்டிருக்கக்கூடிய

திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய எங்கள் தலைவர் அவர்களால் கொண்டுவரப்படக்கூடிய திட்டங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* Thiru Jyotirao Phule அவர்கள், தன்னுடைய துணைவியார் Tmt. Savitribai Phule அவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டுமென்று விரும்பினார். அதில் அவருடைய குடும்பத்தாருக்கு விருப்பமில்லை. சுற்றத்தார், உறவினர்கள் Thiru Jyotirao Phule அவர்களை வீட்டை விட்டே விரட்டிய வரலாறு உண்டு. Thiru Jyotirao Phule அவர்கள், தன்னுடைய துணைவியருக்கு தானே கல்வியை கற்றுக் கொடுத்து, ஆசிரியராக உருவாக்கி, எந்த ஊரில் இருந்து விரட்டப்பட்டாரோ, அந்த ஊருக்கே சென்று பள்ளியைத் தொடங்கி, அங்கே பெண் கல்வியை உயர்த்திக் காட்டிய அந்த பெண்மணியை இந்த வரலாறு இன்றைக்கும் மறந்து விட முடியாது.

அந்த வரலாற்றின் அடிப்படையில் பார்க்கின்றபோது, தந்தை என்ன வித்திட்டாரோ என்ன செய்து காட்டியிருக்கிறாரோ, என்ன தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறாரோ அதே பாதையில் இன்றைக்கு எங்கள் தலைவர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட நாயகனாக விளங்கக்கூடியவர், பெண்கள் முன்னேற்றத்திற்கான எண்ணற்ற சட்டங்களையும், திட்டங்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறார். அப்படி வழங்கக்கூடிய பல்வேறு திட்டங்களில், முக்கியம் வாய்ந்த திட்டமாக இருப்பது மகளிருக்கு உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கக்கூடிய திட்டமாகும். இதைப்பற்றி இங்கே பேசுகிறவர்கள் சொன்னார்கள். யாருக்கான ஆயிரம் ரூபாய் இது? ஒருவேளை Star Hotel-லில் tea குடிக்கக்கூடியவர்களுக்கானதா, ஒருவேளை buffet உணவை உண்ணக்கூடியவர்களுக்கானதா, ஒருவேளை உல்லாசப் பயணம் செல்லுவதற்காக petrol போட்டுக்கொள்பவர்களுக்கானதா, ஒருவேளை tips ஆக வழங்கக்கூடியவர்களுக்கானதா என்று சொன்னால், அவ்வாறு இல்லை. ஏழையெளியோருக்கு ஒரு மாத சம்பளத்திற்குக் கூடுதலாக, ஒரு மாத மளிகை சாமானை வாங்கிக்கொள்ளத் தேவையானவர்களுக்கு, ஒரு மாதத்தின் செலவினங்களை ஈடுகட்டுவதற்கு காத்துக்கொண்டிருக்கக்கூடிய ஏழையெளிய பெண்களுக்காக உரிமைத் தொகையாய், இதை அங்கீகரிக்கும் வகையில் வழங்கக்கூடிய தொகை என்று சொல்லியிருக்கிறோம் நாங்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

2023 மார்ச் 30] [திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் என்பது ஒரு முக்கியமான துறையாக விளங்கக்கூடியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நகராட்சியையும், ஊரக வளர்ச்சியையும் சேர்த்து பார்த்திருக்கிறார். நகர்ப்புர வளர்ச்சி என்பது ஒரு நாகரிகத்தின் அடையாளமாக இருக்கிறது. கீழடி நாகரிகம், அதைத்தான் காட்டுகிறது. 3,200 ஆண்டுகளுக்கு முன்பாகவே நகரத்தை கட்டி அமைத்து வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள். அந்தவகையில் நாகரிகத்தின் அடையாளமாக நகர்ப்புரம் இருக்கிறது.

நகரமயமாதல் என்பது புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது, இந்தியாவினுடைய சராசரி 35 சதவீதம் என்று இருக்கிறவேளையில், 2011 ஆம் ஆண்டினுடைய மக்கள் தொகையின் அடிப்படையில் பார்க்கின்றபோது, தமிழ்நாடு 48.5 சதவீதம் நகரமயமாகியிருக்கிறது. தற்போது மக்கள்தொகை அடிப்படையில் காண்கின்றபோது, அது 50 சதவீதத்தைக் கடந்திருக்கக்கூடிய நிலையில் உள்ளது. இன்னும் 10 ஆண்டு காலம் கழித்துப்பார்க்கின்றபோது, அது 60 சதவீதம் நகரமயமாக்கக்கூடிய சூழலை எண்ணிப்பார்த்து, தொலைநோக்குச் சிந்தனையோடு, இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை, நகர்ப்புர மேம்பாட்டுத் துறையின் அம்சமாக இருக்கும்வண்ணம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் விளங்கிக்கொண்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சி என்பது மிக அவசியமானது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்வது, கிராமப்புறமும் சமநேரத்தில் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். கிராமப்புறத்தில் வாழக்கூடியவர்கள் நகர்ப்புரத்திற்குச் சென்றிட வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில், நகர்ப்புரம் மிகுந்த நெரிசலுக்குரியதாய், மக்கள்தொகை நெரிசல் கொண்டதாய், பல்வேறு அசௌகரியங்கள் கொண்டதாய் மாறிவிடும். நகர்ப்புரத்திற்கு வராமலேயே அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை கிராமப்புறத்திற்கே கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், 1970-களிலேயே அனைத்து கிராமங்களுக்கும் சாலைகளையும், அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்புகளையும் வழங்கிய ஓர் உன்னத தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்தச் சூழலில்தான், இன்றைக்கு நகர்ப்புரத்திற்கென பல்வேறு திட்டங்கள் இருந்தாலும், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை நான் பார்க்கிறபோது, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்

திட்டம் என்ற ஓர் உன்னதத் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தில், அறிவுசார் மையம் என்ற ஒன்றை உருவாக்க, இன்றைக்கு தமிழ்நாட்டில் 100 அறிவுசார் மையங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் இப்போது செயலாக்கத்தில் 36 அறிவுசார் மையங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளைப் பார்க்கின்றபோது, அங்கே e-books வசதியோடு, கணினி வசதியையும் இளைஞர்கள், மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளன. Knowledge Centres மூலமாக, வருங்காலங்களில் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கக்கூடிய மாணவர்கள், இளைஞர்கள் பெரிதும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் ஓர் உன்னதத் திட்டத்தினை, வருங்காலச் சமுதாயத்திற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறாரே, இது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், Knolwedge Centres என்று பொதுவாக அழைக்கக்கூடிய இந்த மையங்களுக்கு, 'கலைஞர் கற்றல் மையம்' என்று பெயர் சூட்டுவது மிகச் சாலப் பொருத்தமாக இருக்குமென்று இந்த நேரத்தில் நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகர்ப்புரத்தை மேம்படுத்துவதற்காக, சுடுகாடுகளை, நவீன எரிவாயு தகன மேடைகளாக மாற்றுவதற்காக, தமிழ்நாடு முழுவதும் உள்ள நகர்ப்புரங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சியில் எந்தளவுக்குச் சாலைகள் போடப்பட்டன என்பது குறித்தெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு ஐந்தாண்டுக் காலத்திற்கான சாலைத் திட்டமாக, 21,000 கிலோ மீட்டர் நீள நகர்ப்புரச் சாலைகளை மேம்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளுக்காக இந்த நிதியாண்டிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, நகர்ப்புரத்தோடு இணைக்கப்பட்டிருக்கக்கூடிய புறநகர்ப் பகுதிகளில் மண் சாலைகள் இருக்குமேயானால், அந்த மண் சாலைகளும் இல்லாத நிலையினை, இன்னும் வருகிற நான்கு ஆண்டுகளுக்குள்ளாக உருவாக்கி, நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக திட்டம் வகுக்கப்பட்டு, இந்த ஆண்டு

2023 மார்ச் 30] [திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்]

மட்டும் ரூ.1,211 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 1,600 கிலோ மீட்டர் நீள மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்படுகிற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேபோலத்தான், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அதிகளவில் கொண்டு வரப்பட்டன, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் என்று சொன்னால், எங்களுடைய தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அதிகளவில் குடிநீருக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற அதே சூழ்நிலையில்தான், நான் பெருமிதத்தோடு நன்றி உணர்வோடு சொல்லிட வேண்டும் என்று சொன்னால், காஞ்சிபுரத்திற்கும் இத்தகைய திட்டங்களெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த கால ஆட்சியின்போது, நாங்கள், எங்களுடைய தொகுதியில் குடிநீர் வறண்டு போகிறது என்றும், அதனால், கூடுதல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டும் என்றும் கேட்டோம். (மணியடிக்கப்பட்டது) திருப்பாற்கடல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்றும் கேட்டோம். அவர்கள் தரவில்லை. ஆனால், தற்பொழுது ரூ.300 கோடி மதிப்பீட்டில் அதற்கான ஒரு திட்டத்தை வழங்குவதற்காக அரசாணை வெளியிட காத்துக்கொண்டிருக்கிறது.

அதேபோல, காஞ்சிபுரம் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதனையும் கடந்த கால ஆட்சி செயல்படுத்தவில்லை. தற்போது அந்தத் திட்டத்தை ரூ.300 கோடி மதிப்பீட்டில் செயலாக்கம் செய்வதற்காக, ஆணை பிறப்பிக்கப்படவிருக்கிறது. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

காஞ்சிபுரம் நகரத்தின் மையப் பகுதியில் செல்லும் மஞ்சள் நீர் கால்வாயை, சிமெண்ட் கால்வாயாக அமைத்து, நாறாத ஆறாக அதனை மாற்றி, மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்திட வேண்டும். அதை உண்மையான மஞ்சள் நீர் கால்வாயாக மாற்றிட வேண்டுமென்பதற்காக, ரூ.40 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இவைதானே உன்னத ஆட்சி என்பதற்கு அடையாளங்கள் என்று நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தனை திட்டங்களைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கின்ற வேளையில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அங்கன்வாடிகளைப் பற்றி சொல்லிட வேண்டும். ஒரு சிறிய ஆலோசனையாக நான் அரசுக்குச் சொல்லக்கூடியது என்னவென்றால், மிகுந்த சேதமடைந்துள்ள பழைய அங்கன்வாடிக் கட்டடங்களும், ரேஷன் கடைக் கட்டடங்களும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் அதிகளவில் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. ஆனால், அவற்றை நிர்வகிக்கக்கூடிய உரிமை மட்டும் அந்தந்தத் துறைகளுக்கு இருக்கிறது என்றாலும், அவற்றைப் பராமரிக்கக்கூடிய பொறுப்புரிமை யாரிடம் இருக்கிறது என்பது இதுவரையில் தெளிவாக இல்லை. எனவே, இனிவருங்காலங்களில் அவற்றைப் பராமரிக்கக்கூடிய துறையாக, அந்தக் கட்டடங்கள் எங்கு அமைந்திருக்கின்றனவோ, அந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் அவற்றை ஒப்படைக்கின்ற ஒரு சட்ட திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஊராட்சி ஒன்றிய எல்லைகளை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளுக்கு வாருங்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு ஏற்ப ஊராட்சி ஒன்றிய எல்லைகளைச் சீரமைத்திட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு பல காரணங்கள் உண்டு. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தோடு இணைந்து பணியாற்றுவதற்கு ஏதுவாக அமையும் என்பதற்காகத்தான் இதனைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அவ்வாறு காஞ்சிபுரம், வாலாஜாபாத் ஆகிய இரண்டு blocks-ஐயும் இணைத்து, மூன்றாவது ஒரு block-ஐ உருவாக்கிட வேண்டும். திருப்பெரும்புதூர், குன்றத்தூர் ஆகிய இரண்டு blocks-ஐயும் இணைத்து, மூன்றாவதாக ஒரு block-ஐ உருவாக்குவதன் மூலமாக, கூடுதலாகத் திட்டங்கள் வருகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன; இவற்றையெல்லாம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பழங்குடியின மக்களாக இருக்கக்கூடிய இருளர் இன மக்களுக்காக, தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை ஊரக வளர்ச்சித் துறை

மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது உன்னதத் திட்டம். ஆனால், அவ்வாறு கட்டி முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்படுகிற வீடுகளுக்கு மின்னிணைப்புகள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அதனை உடனடியாக கவனத்தில்கொண்டு, மின்னிணைப்பையும் நாமே பெற்றுத் தந்து, அவர்கள் தங்குவதற்கும், வாழ்வதற்கும், வசதி வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள். (குறுக்கீடு) 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியம் வாய்ந்த துறை பற்றி கூற விரும்புகிறேன். இந்த அவையில் முதன்முறையாக இன்று தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை வெளியிட்டு, பதிலுரையை வழங்க இருக்கக்கூடிய எங்கள் இளம் தலைவர், மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்ந்த துறையைப் பற்றி நான் இங்கு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக இருக்கிறது. இந்தத் துறை இன்றைக்கோ நேற்றைக்கோ நிகழ்ந்த மாற்றத்தினால் ஏற்பட்ட துறை அல்ல, நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று, தந்தை பெரியார் வித்திட்ட பாதையில் பயணித்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், எண்ணற்ற மகளிர் நலத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட துறைதான் அந்தத் துறை. 1989 ஆம் ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, இன்றைக்கு இலட்சக்கணக்கான மகளிர் சுயமாக வாழக்கூடிய சுயமரியாதையை அடையக்கூடிய சூழ்நிலையினை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய உன்னதத் திட்டங்கள் வாயிலாக இன்றைக்கு இவர் செய்துகாட்டிக் கொண்டிருக்கக்கூடிய சாதனைகளைப் பற்றி நான் இந்த அவையில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திப்பதற்கோ, வாழ்த்துகளைப் பெறுவதற்கோ

சென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'எனக்கு வேட்டி வேண்டாம், பட்டாடை வேண்டாம், பூங்கொத்து வேண்டாம், புத்தகங்களைத் தாருங்கள், தமிழ்நாட்டை அறிவார்ந்த, தமிழகமாய் அறிவார்ந்த சமுதாயமாய் நான் உருவாக்குவேன்' என்று சொல்கிறார். ஆனால், நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், என்னைப் பார்க்க வருகிற நேரத்தில், 'எனக்கு பூங்கொத்து வேண்டாம், வேட்டி வேண்டாம், எதுவும் வேண்டாம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கக்கூடிய பொருட்களைக் கொண்டுவந்து பரிசாக தாருங்கள், அது மகளிர் வாழ்வை மேம்படுத்தும்' என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ஓர் உன்னத எண்ணத்தைக் கொண்டிருக்கக்கூடிய, ஒரு சிறந்த ஆற்றல் மிகுந்த செயல் வீரராய் இருக்கக்கூடிய எங்கள் அமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்தத் துறையினைக் கையாண்டுக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு ரூ.30,000 கோடி கடன்தரக்கூடிய அளவில் target வைத்திருக்கிறார், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ரூ.25,000 கோடிக்கான கடன் இணைப்பை வழங்க இலக்கை அவருக்கு வழங்கியதை ரூ.25,022 கோடியாக வழங்கி சாதனை செய்திருக்கக்கூடியவருக்கு, ரூ.30,000 கோடி என்ற ஒரு பரிட்சையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அனைவருக்கும் தெரியும், தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி 16 அடி கண்டிப்பாக பாயும் என்று. எனவே, ரூ.30,000 கோடியை கடந்துதான் வருவார். அவர் இந்தச் சாதனையைத் தொடுவார்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத, தமிழ்நாட்டில் நிறைவேற்றிய மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலகத்தின் சிறந்த விருதான 'Kentucky Colonel' என்ற விருதினைப் பெற்றவர் எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆம், நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான், அந்த விருதினைப் பெற்றார்கள். அதைப் பெற்றதற்குக் காரணம், நான்காண்டு காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக விளங்கியபோது அவர் கொண்டுவந்த அந்தத் திட்டங்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொண்டு வந்த

அந்தத் திட்டம்மூலம், சற்றேறக்குறைய 1,53,000 மகளிர் சுய உதவிக் குழுக்களிலுள்ள 22 இலட்சம் மகளிர் பயன்படக்கூடிய நிதியினை வழங்கி, பெண்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதற்காக அவருக்கு அந்த உயரிய 'Kentucky Colonel' விருது வழங்கப்பட்டது.

இந்த விருதினையும் கடந்து, எங்களுடைய இளந்தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மிகப் பெரிய விருதுகளாக தமிழக மக்களின் நெஞ்சங்களில் வாழ்வார். அவ்வாறு அவர் நீடூழி வாழ வேண்டும். அவருக்கான பணிகள் தொடரும், அந்தப் பணிகளுடன் சேர்ந்து, தமிழகமும் முன்னேறும், தமிழகத்தின் முன்னேற்றத்தில் மகளிரின் பங்களிப்பு பெரிதும் இருக்கும் என்பதற்கு, அதிக சான்றுகள் இருக்கின்றன. வருகின்ற காலங்கள் அவருக்கான காலமாய் அமையும் என்று கூறி, என் தொகுதிக்கான கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் இந்த அவையில் வழங்குகிறேன். அவற்றை நான் இந்த அவையில் கோரிக்கை வைத்து படித்ததாகப் பதிவு செய்திட வேண்டும். பதிவு செய்வதோடு விட்டுவிடாமல், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் வழங்கி, அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி, நான் விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

காஞ்சிபுரம், விஷார் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும். காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். பம்பை கால்வாயை முழுமையாகத் தூர்வாரி, ஆழப்படுத்தி தேவையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். காஞ்சிபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் சட்டக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். காஞ்சிபுரம் தேரோடும் வீதிகளில் புதைவடக் கம்பிகள் (Underground Cable) அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், முக்கிய புறவழிச் சாலையான செவிலிமேடு–கீழம்பி சாலையை நான்கு வழித் தடச் சாலையாக விரிவுபடுத்த வேண்டும்.

காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலையத்தை இரண்டு காவல் நிலையங்களாக பிரித்து அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், செவிலிமேடு, சிறுகாவேரிப்பாக்கம், கீழம்பி ஏரிகளை ஆழப்படுத்தி

சீரமைத்து புதிய குடிநீர்த் திட்டங்கள் உருவாக்க வேண்டும். காஞ்சிபுரத்தில் தொழில்நுட்பப் பூங்கா (IT Park) அமைக்க வேண்டும். காஞ்சிபுரம் மாநகரை ஒட்டி வெளிவட்ட சாலை அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், பொன்னேரிக்கரை ஏரியை நவீனப்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.

காஞ்சிபுரம், ஒருங்கிணைந்த மாவட்ட முதன்மை நீதிமன்ற கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். காஞ்சிபுரம்-செவிலிமேடு, தேனம்பாக்கம், ஓரிக்கை, நத்தப்பேட்டை, திருக்காலிமேடு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும். பாலுசெட்டி சத்திரம், அரசு பால் குளிரூட்டும் நிலையத்தை பதப்படுத்தும் நிலையமாக மேம்படுத்த வேண்டும். காஞ்சிபுரம், மஞ்சள் நீர் கால்வாயை மேம்படுத்த தொழில்நுட்ப அனுமதி வழங்க வேண்டும். காஞ்சிபுரம், காவலன்கேட் வெளிவட்டச் சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளுக்குத் தொழில்நுட்ப அனுமதி வழங்க வேண்டும்.

காஞ்சிபுரம், புதிய நவீன புறநகர் பேருந்து நிலையம் விரைவாக அமைக்கப்பட வேண்டும். காஞ்சிபுரம், அரசு தலைமை மருத்துவமனையில் புதிய கண் வங்கிக் கட்டடம் மற்றும் ட்ராமா கேர் (Trauma Care) கட்டடம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், நீதித் துறை அலுவலர் குடியிருப்புகள் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், ஏனாத்தூர் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைக்க வேண்டும்.

காஞ்சிபுரம், காரப்பேட்டை, அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு (மண்டல புற்றுநோய் மையம்) அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். காஞ்சிபுரம், ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகைக் கட்டடம் மற்றும் திட்ட அதிகாரிக்கான துணை அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், மாவட்ட விளையாட்டு வளாகம், விளையாட்டு விடுதி அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், விடுபட்ட பகுதிகளில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும், குடிநீர் ஆதாரங்களை உருவாக்கி புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்க வேண்டும்.

காஞ்சிபுரம், தாட்டித் தோப்பு பகுதி, வேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், சிறுகாவேரிப்பாக்கம், துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம்,

வேளியூர், துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், கோவிந்தவாடிஅகரம், சிறுகாவேரிப்பாக்கம் மற்றும் கோனேரிக்குப்பம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டும்.

காஞ்சிபுரம், பெரும்பாக்கம், வேளியூர் பகுதிகளில் கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டும். காஞ்சிபுரத்திற்கு, Smart City திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். காஞ்சிபுரத்தில், பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், தாமல் ஏரியிலுள்ள கருவேல மரங்களை அகற்றி, தூர்வாரி ஆழப்படுத்தி, மேம்படுத்த வேண்டும்.

காஞ்சிபுரம், மேட்டுக்குப்பம்–பெரும்பாக்கம் சாலை, எம்.சி.பி. சாலை–கூத்திரம்பாக்கம் சாலை, கூரம்–வதியூர் சாலை, அரக்கோணம் காஞ்சிபுரம் சாலை–கோவிந்தவாடி சாலை ஆகிய சாலைகளை அகலப்படுத்த வேண்டும். காஞ்சிபுரம், தேரடி அருகில், ராஜாஜி மார்க்கெட், தாலுகா அலுவலகம் அருகில், பச்சையப்பன் பள்ளி பேருந்து நிறுத்தம் அருகில், சிக்னல் அருகில், கச்சபேஸ்வரர் கோயில் அருகில், சங்கரமடம் அருகில், சென்னை–பொன்னேரிக்கரை–காஞ்சிபுரம் சாலை (MDR-66) பூக்கடை சத்திரம் அருகில் சுரங்க நடைபாதை (Subways) அமைக்க வேண்டும்.

காஞ்சிபுரம்–வந்தவாசி சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மின்படிக்கட்டு உடைய நடைபாலம் (Foot over bridge with escalator) அமைக்க வேண்டும். காஞ்சிபுரம்–வந்தவாசி சாலை மற்றும் உத்திரமேரூர்–காஞ்சிபுரம் சாலை ஆகிய இடங்களில் உயர்மட்டச் சாலை அமைக்க வேண்டும். காஞ்சிபுரம், ஐயம்பேட்டை, தாங்கி மற்றும் சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை இணைக்க காஞ்சிபுரம் புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன் திட்டங்களின் மானியக் கோரிக்கை மீதான

விவாதத்தில் கலந்துகொண்டு, உரையாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். பேரறிஞர் அண்ணாவின் இதயத்திற்கு அருகே, வங்கக் கடலோரம் உறங்குகின்ற நூற்றாண்டு விழா காணும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் வணங்குகின்றேன்.

பெரியார், அண்ணா, கலைஞர் என்கின்ற திராவிட இயக்கத்தின் உலைகளத்தில் பயிற்சி பெற்று, கழகத் தளபதியாய் புகழ்பெற்ற, இந்திய ஒன்றியம் போற்றும் திராவிட நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

பிற்போக்கு மாடல்களைப் புறந்தள்ளி, திராவிட மாடல் ஆட்சியின் உற்சவ நாயகராக வலம்வரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு இளைஞரணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தை தமிழகத்திலேயே முன்மாதிரி மாவட்டமாக உருவாக்கிட, கழகத் தலைவர் வழியில் உழைத்திடும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். என்னோடு இணைந்து எங்கள் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றுகின்ற அன்பு அண்ணன் திரு. உதயசூரியன் அவர்களுக்கும், திரு. மணிக்கண்ணன் அவர்களுக்கும் வணக்கத்தைக் கூறிக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரையும், காஞ்சித் தலைவர் பேரறிஞர் அண்ணாவையும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களையும் வழிகாட்டிகளாகக் கொண்டதுதான் இந்த ஆட்சி. 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற பொதுவுடைமை தத்துவத்தை உள்ளடக்கமாகக் கொண்டதுதான் திராவிட மாடல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரர்கள் வாழும் திராவிட நாட்டை வென்றவர் கிடையாது. 'எல்லோருக்கும் எல்லாம்' என்பதில் ஜாதி இல்லை, மதம் இல்லை, பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லை, பால் பேதம் இல்லை. சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, கூட்டாட்சித்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தத்துவம், அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை என்கின்ற உலகளாவிய மறுமலர்ச்சி சிந்தனையாளர்களின் கருத்துகளை உள்ளடக்கி, தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற மாநிலமாக உருவாக்கிடும் மக்களின் அரசாக, மக்கள் நலன் அரசாக, மக்கள் விரும்பும் அரசாக, மக்கள் கவலைகளைப் போக்கும் அரசாக, மக்கள் கனவு காணும் அரசாக செயல்படும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் செயல் திட்டங்களே, திராவிட மாடல் எனப்படுகிறது. மொழி ஆதிக்கம், அதிகாரக் குவியல், மதவெறி, தீண்டாமை, ஆணாதிக்கம் என ஆதிக்க சக்திகளின் அனைத்து வேடங்களையும் கிழித்தெறிந்து, தமிழ்மொழி, பண்பாடு, கலாச்சாரத்தைப் பாதுகாப்பதுடன், எல்லோரும் இன்புற்றிருக்க, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்', இதுவே தியாகத் தலைவரின் திராவிட மாடல் என்று வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்."

ஆட்சியோர் மக்களின் பாதுகாவலராக இருத்தல் வேண்டும். அப்படி செயல்படும் தலைவன், பிறப்பால் மனிதனானாலும், செய்யும் செயலால் இறைவன் எனப் போற்றப்படுவான் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. தமிழகம் முழுவதும் 1½ இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் மோட்டார் இணைப்புகளை அளித்த விவசாயிகளின் விடியல், கல்லூரி செல்லும் பெண் பிள்ளைகளுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை ரூ.1,000/–, பெண்களுக்கு கட்டணமில்லா இலவசப் பேருந்து வசதி, தகுதியுள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– உரிமைத் தொகை அளித்திட்ட திராவிட நாயகருக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலே நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் 100 சதவிகிதம் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது. கடந்த ஆட்சிக் காலத்தில் நீண்டகாலம் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாததால் நிர்வாகப் பணிகள் தொய்வுற்றிருந்த நிலையில், தேர்தலுக்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புகள் முடுக்கி விடப்பட்டு, மக்கள் நலப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. அனைத்துத் துறைகளிலும் முன்மாதிரி

திட்டங்களைத் தீட்டி, நாட்டிற்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், மாண்புமிகு முதல்வரின் தலைமையிலான திராவிட மாடல் அரசும், மாண்புமிகு அமைச்சர்களும் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகின்றோம்.

"அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை."

அறத்தை அறிந்தவராய், அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவராய், எக்காலத்திலும் செயல் செய்யும் திறனறிந்தவராய் உள்ளவர்களே, தலைவனுக்கு அருந்துணை அமைச்சராவார் என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குறளுக்கேற்ப, தலைவர் அவர்கள், மேயர், உள்ளாட்சித் துறை அமைச்சர் என படிப்படியாக பயிற்சி பெற்று, முதலமைச்சராக உயர்ந்தவர். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும்கூட, ஒன்றிய பெருந்தலைவர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக அனுபவம் பெற்ற பின்புதான் அமைச்சர்களாக உயர்ந்த காரணத்தினால், உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகளின் நிர்வாகத்தை முழுமையாக அறிந்தவர்கள் என்பதால், இத்துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள்தான் அரசின் பெரும்பான்மையான திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதி, மின் விளக்கு, தூய்மைப் பணிகள், சுற்றுச்சூழல் ஆகியவற்றில் முன்மாதிரி துறையாக பொதுமக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது. சாதாரண மனிதர்களோடு, நேரடி தொடர்புடைய துறைகளில் உள்ளாட்சித் துறையும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களில் குடியேறுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 48 சதவிகிதம் இருந்த மக்கள்தொகை, கடந்த 11 ஆண்டுகளில், மிகவும் வேகமாக வளர்ந்து, 57 சதவிகிதத்தை எட்டியுள்ளது. அதற்கேற்ப நகரங்களில் சுத்தம், சுகாதாரமான

2023 மார்ச் 30] [திரு. க. கார்த்திகேயன்]

சுற்றுச்சூழல், சாலை வசதிகள், குடிநீர், மின் விளக்கு, அடிப்படை வசதி ஆகிய திட்டங்களைத் தீட்டி, நமது அரசு மேம்படுத்தி வருவது, மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. AMRUT 2.0 திட்டத்தின்கீழ், குடிநீர் வழங்கலைச் சீரமைக்கவும், கழிவுநீர்க் கட்டமைப்பை மேம்படுத்தவும், நீர்நிலைகளைப் புதுப்பிக்கவும், இதுவரை, 9,378 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 612 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்புக்குரியதாகும்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 1,211 கோடி ரூபாய் செலவில் நகர்ப்புரங்களில் தரமான சாலைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக வரவேற்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு, பெரும்பாலான நகராட்சி, பேரூராட்சிகளில் இறுதிச் சடங்குகளைச் செய்ய, எரிவாயு தகன மேடைகளை அமைத்துள்ளது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2015 ஆம் ஆண்டு, சென்னையில் பெய்த பெருமழை காரணமாக, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், மக்கள் படகுகள்மூலம் மீட்கப்பட்டனர். போக்குவரத்து முடங்கியதால் உணவு, பால்கூட கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. ஆனால், நமது கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற ஓர் ஆண்டுக் காலத்தில், தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான அரசாங்கத்தில், நெடுஞ்சாலைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுப் பணித் துறை, நீர்வளத் துறை இணைந்து, இனி சென்னையில் எவ்வளவு பெரிய மழை வந்தாலும், வெள்ளம் வராமல் தாக்கு பிடிக்கக்கூடிய அளவிற்கு, சென்னை மாநகரம் சீரமைக்கப்பட்டுள்ளது என்பது வரலாறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மகளிர் முன்னேற்றத்திற்காக சட்டங்களையும், திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் முன்னேற்றத்தில், இன்னுமொரு மைல்கல்லாக, மகளிர் குழுவிற்கு கடன் வழங்கும் பொறுப்பை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அவருக்குக் கொடுத்த target 25 ஆயிரம் கோடி ருபாயைத் தாண்டி achieve செய்திருக்கிறார்கள். அதேபோல, இந்த ஆண்டு 30 ஆயிரம் கோடி ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குக் கொடுக்கப்பட்ட target-ஐ விட 2 மடங்கு அதிகமாக செய்யக்கூடிய அண்ணன் உதயநிதி அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளில் நான் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மீதமுள்ளவற்றை நான் இந்த அவையில் படித்ததாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

எங்களுடைய ரிஷிவந்தியம் ஒன்றியமானது, 120 கிராமங்கள், 60 ஊராட்சிகளைக் கொண்ட ஒரு பெரிய ஒன்றியமாகும். அங்கு சற்றேறக்குறைய, ஒன்றரை இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, ரிஷிவந்தியத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய ஒன்றியத்தை உருவாக்கினால், அங்குள்ள மக்கள் பயனடைவார்கள். அதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு கேட்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதேபோல, சென்ற கூட்டத்தொடரில், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது, ரிஷிவந்தியத்தை பேரூராட்சியாக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதைத் தருவதாக ஒப்புதல் அளித்திருந்தார். ஆகவே, அதனை இந்தக் கூட்டத் தொடரில் அறிவித்தால் நன்றாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள கோரிக்கைகளை எழுத்துமூலமாகக் கொடுக்கிறேன். அதனை அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு 30 நிமிடத்திற்கு ஒரு முறை பேருந்து இயக்கிட வேண்டும். கள்ளக்குறிச்சி கோமுகி அணையில் இருந்து கீழ்புறம் வாய்க்கால் வழியாகப் பாசனத்திற்காக திறந்துவிடப்படும் தண்ணீர் காரனூர் ஏரி வரை செல்கிறது. இந்த வாய்க்காலை உலகங்காத்தான், பொற்படாக்குறிச்சி, இந்திலி ஆகிய ஊராட்சிகள் வரை நீட்டிப்பு செய்து கொடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சிலியிருந்து சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு வழியாக திருவண்ணாமலை இரயில் நிலையத்தை இணைப்பது பற்றி ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திடம் வலியுறுத்த வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள ஏமப்பேர் தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு மீன், இறைச்சி விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு முறையாக கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி நகராட்சி, தியாகதுருகம் சாலையில் மயானத்தின் பின்புறம் கோமுகி நதிக்கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பொதுப்ப ணித் துறைக்கு சொந்தமான ஏரிகளில் புதியதாக 4 திறந்தவெளி பொதுக் கிணறுகள் அமைத்துத் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாணவ, மாணவிகளின் கல்வி நலனுக்காக மாவட்ட மைய நூலகம் அமைக்க வேண்டும். இந்து சமய அறநிலையத் துறை அலுவலகம்–அதிகாரிகள், வேளாண்மைத் துறை அலுவலகம்–அதிகாரிகள் மற்றும் கூட்டுறவுத் துறை பதிவாளர்கள்–மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் பல்வேறு துறைகளை கள்ளக்குறிச்சி மாவட்டத்திலேயே உரிய அதிகார வரம்புடன் செயல்படுத்தித் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் நகரம் முழுவதும் கழிவுநீர் வடிகால் வாய்க்கால்கள் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைத்துத் தர வேண்டும். தியாகதுருகம் நகரில் விவசாயிகளின் நலனுக்காக உழவர் சந்தை அமைத்துத் தர வேண்டும். தியாகதுருகம்–உதயமாம்பட்டு நெடுஞ்சாலைக்கு புதிய தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப புதிய குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டை நகராட்சியில் புதிய காய்கறி மார்கெட் மற்றும் மீன் விற்பனையாளர்களுக்கு தனி வளாகம் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டித் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியம், வேங்கூர் மதுரா செட்டிதாங்கல் ஊராட்சியில் இயங்கிவரும் கால்நடை மற்றும் காய்கறி வாரச் சந்தைக்கு இடம் ஒதுக்கி சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, செங்கணாங்கொல்லை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, காப்புக் காட்டின் எல்லைப் பகுதியில் நீர்த்தேக்கக் குளங்கள் அமைத்துத் தர வேண்டும்.

வாணாபுரம் வருவாய் வட்டத்திற்கு நிருவாக அனுமதியும் புதிய கட்டடமும் அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மேலத்தேனூர், கீழத்தேனூர், சேரந்தாங்கல் ஆகிய ஊராட்சிகளைப் பிரித்து தனி ஊராட்சியாக அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, ஜி.அரியூர், அம்மன்கொல்லைமேடு துணை கிராமத்தைப் பிரித்து, தனி ஊராட்சியாக அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, ஈருடையாம்பட்டு ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலகத்திற்கு கூட்டரங்குடன்கூடிய புதிய பேரூராட்சிக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு, வாணாபுரம், மணலூர்பேட்டை, வேங்கூர் மதுரா செட்டிதாங்கல் ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உழவர் சந்தை அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, ஜி.அரியூரில் தனியாக மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு, மணலூர்பேட்டை, ஜி.அரியூர், புதுப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் இயங்கிவரும் துணை சுகாதார நிலையங்களை நவீன வசதிகளுடன் தரம் உயர்த்த வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, திருப்பாலபந்தல் ஆகிய ஊராட்சிகளில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, காடியார், பூமாரி, மேமாளூர், பழங்கூர் ஆகிய ஊராட்சிகளில் அரசு துணை சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

2023 மார்ச் 30] *[திரு. க. கார்த்திகேயன்]*

ரிஷிவந்தியம் தொகுதி, தகடி ஊராட்சியில் உள்ள நாதேஸ்வரர் திருக்கோயில், டி.முடியனூர் ஊராட்சியில் உள்ள கைலாசநாதர் என்கின்ற அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், சோழவாண்டிபுரம் கைலாசநாதர் திருக்கோயில், திம்மச்சூர் ஊராட்சியில் உள்ள விஸ்வநாதேஸ்வரர் திருக்கோயில், திருப்பாலபந்தல் மத்தியநாதேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு செய்து தர வேண்டும்.

கரடி ஊராட்சியில் உள்ள செவிலியர் குடியிருப்பு பழுதடைந்துவிட்டதால் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மொகலார் ஊராட்சி முதல் ஜி.அரியூர் வரை பள்ளி மாணவர்களின் நலன் கருதி பேருந்து வசதி செய்து தர வேண்டும். காட்டு எடையார் கெடிலம் ஆற்றில் அமைந்துள்ள தடுப்பணையைச் சீரமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, தகடி, மேமாளூர் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

வேங்கூர் மதுரா செட்டிதாங்கல் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் உரிமை தனிநபரிடம் உள்ளதால், நியாய விலைக் கடையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ரிஷிவந்தியம், ஆலூர், மதுரா, துலாம்பூண்டி கிராமத்தில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, வடமாமாந்தூர் ஊராட்சிக்கு சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள அரியலூர் துணை மின் நிலையத்திலிருந்து மின்னிணைப்பு வழங்கப்படுவதற்குப் பதிலாக 4 கி.மீ. தொலைவில் உள்ள ஈருடையாம்பட்டு துணை மின் நிலையத்திலிருந்து தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, முஸ்குந்தா நதியிலிருந்து வரும் உபரிநீர் வரத்து வடமாமாந்தூர் பெரிய ஏரி, வடமாமாந்தூர் சித்தேரி, மங்களம் ஏரி, அருளம்பாடி ஏரி, ஈருடையாம்பட்டு ஏரி ஆகிய ஏரிகளை நிரப்பும் நீர்வரத்து வாய்க்கால்கள் தூர்வாரப்பட வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, வடமாமாந்தூர் காலனிப் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதியில் ஒரு சிப்காட் அமைக்க வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதியின் வனப் பகுதியில் உள்ள லா.கூடலூர் முதல் ஏந்தல் வரை, அரியலூர் முதல் விரியூர் வரை, சாத்தப்புத்தூர் முதல் வேளானந்தல் வரை, பேரால் முதல் வேளானந்தல் வரை, காணாங்காடு முதல் புஷ்பகிரி வரை உள்ள கிராமங்களில் வனப்பகுதி வழியாக தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வனப் பகுதிகளில் உள்ள வன விலங்குகளுக்கு சிறு குடிநீர் தொட்டிகள், குளங்கள் அமைத்துத் தர வேண்டும்.

சாத்தனூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு பாசனக் கால்வாய் மூலமாக மூங்கில்துறைப்பட்டு, கடுவனூர் வழியாக அத்தியூர், அங்கிருந்து 3 கி.மீ. தூரமுள்ள ராமராஜபுரம் கால்வாய்க்கு கோடைக் காலங்களிலும் தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதியிலுள்ள மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் துணை மின் நிலையம் உற்பத்தித் திட்டம் உடனடியாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, புதுப்பட்டு ஊராட்சியில் காவல் நிலையம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றை அமைக்க வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, பொரசப்பட்டு ஊராட்சியின் குறுக்கே செல்லும் உயர் அழுத்த மின்சாரப் பாதையை கிராமத்திற்கு வெளியே செல்லுமாறு அமைக்க வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் கிளை நூலகத்தை சொந்தக் கட்டடத்தில் செயல்படும் முழுநேர நூலகமாக மாற்றித் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை ஆற்றுப்பாலம் அருகில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் நடைபாதையுடன்கூடிய விளையாட்டு மற்றும் அறிவியல் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் போக்குவரத்து நெரிசலைப் போக்க புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இரவுக் காவலர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் துணை வேளாண்மைக் கட்டடம், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் மற்றும் தானிய கிடங்கு அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, ஆதி திருவரங்கம் ஸ்ரீ அரங்கநாதர் கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் யாத்திரி நிவாஸ் ஏற்படுத்தித் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை, திருவரங்கம், மூங்கில்துறைப்பட்டு, வாணாபுரம், ரிஷிவந்தியம், ஜி.அரியூர், திருப்பாலபந்தல் ஆகிய ஊராட்சிகளில் அரசு திருமண மண்டபம் அமைத்துத் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான இடங்களை பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட அங்கன்வாடிக்கு சொந்தக் கட்டடமும், ஊழியர் பற்றாக்குறையையும் சரிசெய்து தர வேண்டும். ரிஷிவந்தியம் பேரூராட்சியிலிருந்து பெங்களூரு, பாண்டிச்சேரி, சேலம் போன்ற நகரங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சி துணை மின் நிலையத்தில் சுமார் 200 மின்மாற்றிகள் உள்ளதால் மின்சார அலுவலகத்தைப் பிரித்து, பகுதி 1, 2 அலுவலகமாக அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, சீர்ப்பனந்தல் ஊராட்சிக்கு பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிக்கு சாத்தனூர் வலதுபுறக் கால்வாய் பி-1-ல் இருந்து தனி கிளை வாய்க்கால் அமைத்துத் தர வேண்டும். ரிஷிவந்தியம், மணலூர்பேட்டை அருள்மிகு பிரயோக வரதராஜபெருமாள் திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்து தர வேண்டும். ரிஷிவந்தியம் தொகுதி, புதுப்பட்டு–பவுஞ்சிப்பட்டு ஊராட்சிகளின் இடையே செல்லும் முஸ்குந்தா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.

***திரு. G. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த மானியக் கோரிக்கையில் பேச அனுமதி தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும்,

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு, 56 அறிவிப்புகளைத் தந்த மாண்புமிகு அமைச்சர் நேரு அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த ஆண்டு, சிவகாசியில் Underground Sewage system *அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கான அறிவிப்பினை வெளியிட்டு, விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டுக்குள், நிதியொதுக்கி, இப்பணியினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான அறிவிப்பினை வெளியிட்ட மாண்புமிகு அமைச்சர் நேரு அண்ணன் அவர்களுக்கும், அதனை நல்லமுறையில் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனக்குக் கொடுத்த பணியை ஆரம்பிக்கிறேன். Plan approval*-ன்போது ஒரு சதவீதக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அது பல ஆண்டுக்காலமாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒரு சதவீதம், கட்டடத் தொழிலாளர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணம்* accounts*-ல் எப்படி சேர்கிறது. எவ்வளவு* amount *இருக்கிறது என்று கேட்டால், சரியான பதில் கிடைப்பதில்லை. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், அதற்கு விரிவான விளக்கத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி, நல்ல முறையில் கட்டடத் தொழிலாளர்களைச் சென்று சேர்வதைக் கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

அதுபோல, உலகத்தில் தெய்வங்களைத் தரிசிக்க நாம் கோயிலுக்குச் செல்கிறோம். அதுபோல, நம்மிடையே நடமாடும் தெய்வங்களாக இருப்பவர்கள் மருத்துவர்களும், ஆசிரியர்களும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகளோ, சிக்கல்களோ வரும்போது, அவர்களையும், அவர்களின் குடும்பத்தையும், அவர்களின் பொருட்களையும் காப்பாற்றுவதற்கு பாதுகாப்புச் சட்டம் இயற்றுகிறோம். ஆனால், கடந்த ஒரு வார காலத்திற்குள் பார்த்தீர்கள் என்றால், கிராமங்களில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பள்ளிக் குழந்தையைக் கண்டித்த

2023 மார்ச் 30] [திரு. G. அசோகன்]

காரணத்தினால், ஊரே திரண்டு வந்து ஆசிரியர்களை அடிக்கிறார்கள். அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் ** என்று viral ஆக வந்தது. ஆசிரியர்கள் என்பவர்கள் ஒரு சமுதாயத்தை உருவாக்கக்கூடிய பொறுப்பில் இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற அந்த வார்த்தைகள் எல்லாம் பதிவில் வேண்டாம். அதனை எடுத்துவிடுவோம்.

திரு. G. அசோகன்: நடந்த சம்பவத்தைத்தான் நான் சொல்கிறேன். இது viral ஆக வந்தது. ஆகவே, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு, சட்டத்தை இயற்றி ஆசிரியர்களுக்கு பாதுகாப்பைத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நகராட்சி மற்றும் மாநகராட்சியைப் பார்க்கும்போது, 21 மாநகராட்சிகள் இருக்கின்றன. 138 நகராட்சிகள் இருக்கின்றன. இந்த வருடம் முழுவதும் current bill, Electricity Board-க்கு கட்டுகிறோம். கிட்டத்தட்ட 500 கோடி ரூபாயிலிருந்து 1,500 கோடி ரூபாய் வரை revenue expenditure ஆக நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். Corporate companies-களைப் பார்த்தோம் என்றால், Wind mill, Solar farm போன்றவற்றை அமைக்கிறார்கள். இந்த இரண்டியினையும் பார்த்தோம் என்றால், கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய்க்கு, கிட்டத்தட்ட 250 மெகா வாட் Wind mill or Solar farm, இந்த இரண்டையும் நிறுவ வேண்டுமென்றால், அவர்களுக்கு 7 ஆண்டுக்காலம் pay back ஆகி வந்துவிடும். அதன் பிறகு, 8 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுக் காலத்திற்கு பிறகு capital ஆக அவர்களுக்கு வந்து சேரும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு நிதி ஒதுக்க வேண்டும். இதில் ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது. HT services-தான் என்று சொல்வார்கள். But, Special Ordinance போட்டு, Government இதைக் கொடுத்தார்கள் என்றால், நகராட்சிக்கும், மாநகராட்சிக்கும் நன்றாக இருக்கும். மொத்தத்திற்கு 4,000 கோடி ரூபாய் வரும். இந்த 4,000 கோடி ரூபாய் 7 ஆண்டுக் காலத்தில் சரியாக முடியும் என்பது எங்களுடைய கணக்கு.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன, அதற்குள் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. G. அசோகன்: நகராட்சியில், real estate-காரர்கள் plot போடுகிறார்கள். அதற்கு யார், யார் பெயரையெல்லாம் வைக்கிறார்கள். நகராட்சியிலோ அல்லது மாநகராட்சியிலோ plot போடும்போது, முன்னோர்களான Leaders பெயரை வைத்தால் நன்றாக இருக்கும். அவர்களுடைய நினைவுகள் எல்லோர் மனதிலும் இருக்கும். அண்ணா, காமராஜர், சுதந்திரப் போராட்ட தியாகிகள் பெயர்களை வைத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகாசி, இப்போது புது Corporation ஆக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு Integrated bus terminal வேண்டும். அதனை மானியத்தில் கொடுத்தால்தான் நன்றாக இருக்கும். புதிதாக வந்த Corporation-க்கு அது supportive ஆக இருக்கும். மேலும், scavengers-ஐ படிப்படியாகக் குறைத்துக்கொண்டிருக்கிறோம். புதிதாக ஆட்களை நாம் நியமனம் செய்வதில்லை. ஆகவே, Sewage Suction truck ஒவ்வோர் மாநகராட்சிக்கும் இரண்டு என மானியத்தில் கொடுத்தீர்கள் என்றால், main வீதிகளில் இருக்கின்ற drainage system-ல் எல்லாவற்றையும் suck செய்து, வெளியே கொண்டு போய்விடுவார்கள். அதனால், கொசு உற்பத்தி குறையும், சுகாதார வசதிகள் நன்றாக இருக்கும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சியில் பார்த்தீர்கள் என்றால் lorry terminal இல்லாமல் இருப்பதனால் Lorry-கள் எல்லாம் ஊருக்குள் வந்து விடுகின்றன. அதனால் சாலைகள் எல்லாம் congested ஆக இருப்பதால் traffic problem ஆக இருக்கிறது. ஆகவே, ஒரு lorry terminal-ஐ எல்லா இடங்களிலும், பத்து ஏக்கரில் நிறுவ வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். சிவகாசி Corporation ஆனதினால் 80,000 ஜனத்தொகையாக இருந்தது, இப்போது 3,28,000 ஜனத்தொகையாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நேரம் முடிந்துவிட்டது. தொகுதிப் பிரச்சினைகள் இருந்தால் என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் சபையில் பேசியதாக நான் பதிவு செய்து விடுகிறேன். (குறுக்கீடு) சரி, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. G. அசோகன்: ஒரு நிமிடத்தில் எனது உரையை முடித்து விடுகிறேன். சிவகாசி Corporation-க்கு ஏற்கெனவே இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. தனியாக மூன்றாவது திட்டம் ஒன்று வேண்டும். அதெல்லாம் கூட்டுத் திட்டங்களாக இருக்கின்றன. இப்படி இருக்கும்போது எங்களுக்கு 70%-தான் தண்ணீர் வருகிறது. எனவே, 45 MLD தண்ணீர் தனியாக சிவகாசிக்கு கொடுத்தால்தான் 1½ ஆண்டுக்காலத்திற்கு பிறகு, Union-ல் இருக்கிற பஞ்சாயத்துகள் எங்களுடன் சேரும்போது, அவர்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு வசதியாக இருக்கும். அதேபோன்று, எங்களுக்கு Ring Road அமைத்துத் தரப்பட வேண்டும். ஏனென்றால், traffic அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மேலும், Railway bridge அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் அதனை இந்த அவையில் பேசியதாகப் பதிவு செய்து விடுகிறேன். நன்றி சொல்லி, அமர்ந்துவிடுங்கள்.

திரு. G. அசோகன்: சரி. பேசுவதற்கு அரிய வாய்ப்பைக் கொடுத்த தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். ** நிறைய மக்கள் attend செய்யாமல் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் தனியாகச் சொல்லியிருக்கலாம். இப்பேரவையில் நீங்கள் கடைசியாகச் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். இது வெளியே போனால், ** என்று நினைப்பார்கள். அது இடம்பெற வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன். உங்களுக்கு ** நான் பேசியது, உறுப்பினர் பேசியது உட்பட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

பிற்பகல் 1-15

தொகுதிக் கோரிக்கைகள்:

சிவகாசி மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஒரு வட்டச் சாலை அமைத்துத் தர வேண்டும். கொசு மருந்து அடிக்கும் வாகனம் ஒன்றும் வழங்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சிவகாசி நகர் உருவாகி 100 ஆண்டுகளானதன் நினைவாக ஒரு சிறப்பு அலங்கார வளைவு நிறுவ வேண்டும்.

We request to provide bus facility from Sivakasi bus stand to Sivakasi Government College, ESI, Court and RTO office and also to provide more number of buses in Sivakasi–Virudhunagar main road. We request to sanction Sivakasi–Srivilliputur four ways.

We request to take appropriate steps to desalt the water bodies and the waterways before monsoon.

We have got the order to demolish the very old damaged building of Tamil Nadu Government staff quarters building. But now, 385 staff gave proposal for their stay. We request to sanction order for new building.

We request to take necessary steps for banning the usage of disposable cigarette lighters and save the environment and save our traditional match industry.

We request to establish a District Goat Farm at Maraneri, Sivakasi Taluk, Virudhunagar District.

We request to provide the following Government Hospital requirements:

Construction of Maternity and child health building, Construction of modern kitchen block, Construction of steam laundry, Construction of CSSD (Central Sterile Supply Department), Construction of blood centre with blood component separation unit & administrative block, Construction of emergency ward in 1st floor of AE ward.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் இந்த அவையில் பேசுவதற்கான அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியதற்கு நன்றி

தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதியினுடைய அடிப்படைத் தேவைகளை கழக ஆட்சி அமைந்ததிலிருந்து, எண்ணற்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்ற குறள் நெறிக்கேற்ப, அமைச்சர்களைக் கண்டறிந்து, துறைகளை ஒதுக்கி, நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற, தமிழ்நாட்டை முன்னிலை மாநிலமாக்க உழைத்துக் கொண்டிருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும்—மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று, முதல் மானியக் கோரிக்கையில் பதிலளிக்கின்ற இந்நன்னாளில் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமைப்படுகிறேன்—அவர்களுக்கும், மருத்துவத் துறையில் புரட்சிகளைச் செய்து கொண்டிருக்கும், எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், மாண்புமிகு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள், இன்றைக்கு 3 இலட்சத்து 18 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக 36 இலட்சத்து 25 ஆயிரம் உறுப்பினர்கள் என்ற இலக்கை எட்டியிருக்கின்றது. இக்குழுக்களில் சாதனை படைத்து, பெண்கள் மட்டுமின்றி, ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்கள் சமூக ஒருங்கிணைப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் குழு செயல்பாடுகளில் வருவாய் ஈட்டியதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது.

நமது கழக அரசால், 2022–2023 ஆம் ஆண்டில், 11,233 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16.93 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 13,230 சுய உதவிக் குழுக்களுக்கு, 228.66 கோடி ரூபாய்

சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.30 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சி மகளிருக்கான ஆட்சி என்பது இதன்மூலம் உறுதி செய்யப்படுகிறது.

2023–2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.38,444 கோடி நிதியை ஒதுக்கியதால், இன்றைக்கு நகர்ப்புரத்தில் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெறுவதற்குப் பேருதவியாக இருந்து கொண்டிருக்கிறது. நகர்ப்புரத்திற்கு ஈடாக அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக, கழக அரசால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ரூ.27,562 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியானது, 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதி, உள்ளாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. இதில், முதன்முறையாக பட்டியலினத்தைச் சார்ந்த பெண் ஒருவர் இன்றைக்கு பொறுப்பேற்று அழகுபடுத்திக் கொண்டிருப்பது திராவிட மாடல் ஆட்சிக்குப் பெருமை சேர்க்கின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டு, 13 ஆண்டுக் காலமாக பள்ளிகளை மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் இணைக்கவில்லை. இதுவே, மாணவர்கள்மீது அக்கறை இல்லாத அரசு, முந்தைய அரசு என்பதற்கு உதாரணமாக இருக்கிறது. தளபதியாருடைய ஆட்சியில்தான் 139 தொடக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாணவர்களுடைய வாழ்வில் மிகப் பெரிய ஏற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

பிற்பகல் 1–20

என்னுடைய தொகுதிக்கான தேவைகளை அதிகப்படியாகக் கேட்பதைவிட, நன்றி சொல்கின்ற ஒரு நிகழ்வாக இதை ஏற்படுத்திக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். சோழிங்கநல்லூர் தொகுதியில் பொது மருத்துவமனை கட்டுவதற்கு, 51 கோடி ரூபாயும், மேலும், நகர்ப்புர நல்வாழ்வு மையம் கட்டுவதற்கு 2.50 கோடி ரூபாயும் ஒதுக்கப்பெற்று, 10 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னையில் பல்வேறு இடங்களிலிருந்து ஏழையெளிய மக்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் மறுகுடியமர்த்தப்பட்டனர். ஆனால், அந்த மக்களுக்கு எந்தவொரு அடிப்படை வசதியும் ஏற்படுத்தாமல், கடந்த ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டார்கள். திராவிட மாடல் ஆட்சியில், அனைவரும் சமம் என்கின்ற வகையில், வாரியத்தின் மூலமாக பழுதடைந்துள்ள 36,764 வீடுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் அமைச்சர் அவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்து, இன்றைக்கு 68.19 கோடி ரூபாய்க்கான பணிகள் நடைபெறுவது நம்முடைய திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு சான்றாக இருக்கின்றது.

என்னுடைய தொகுதியில் கடந்த ஆட்சியில் செய்யத் தவறிய பணிகள் தற்போது, தளபதியின் ஆட்சியில் 100 சதவிகிதம் நிறைவடைந்துள்ளன. அனைத்து வார்டுகளிலும், 430 கிலோ மீட்டருக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும் மற்றும் 78 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளும் நடைபெறுவதற்கு நான் நன்றி சொல்கின்றேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக 271 சாலைப் பணிகளும் மற்றும் 677 சாலைகளில் மழைநீர்க் கால்வாய்கள் அமைக்கின்ற பணிகளும் துவங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளைத் துவங்குவதற்கு நிதியொதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 135.70 கோடி ரூபாய் அளவிலான மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. அதுபோல், நீர்வளத் துறையின் மூலமாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 222.92 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சோழிங்கநல்லூர் தொகுதியில் மட்டும், சென்னை மாநகராட்சி பகுதியில் ஆடுகள், மாடுகள் மேய்க்க தடை உள்ளது. ஆடு, மாடுகள் இல்லாத நிலையில் மேய்ச்சல் நிலம் என்று பெயரளவில் வைத்திருப்பதால், அரசின் அத்தியாவசியமான தேவைகளுக்கான, கட்டடங்கள்கூட இந்த இடத்தில் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருக்கிறது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *நீண்ட நெடுநாட்களாக வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டும். மேலும், கிராம நத்தங்களுக்கு தலைவர் கலைஞர் ஆட்சியில் பட்டாக்கள் வழங்கப்பட்டு, கிராம கணக்கில் வரவு வைக்கப்படாமல் உள்ளது. அலுவலர்களைச் சந்தித்தால், அவர்கள்* belt area *என்று ஒரே வார்த்தையில் முடித்து, விடைபெறுகின்றார்கள். அதனால், ஒரு புதிய நிர்வாகத்தின் மூலமாக, புதியதாக ஒரு வழிகாட்டுதலை உருவாக்கி, நீண்ட நெடுநாட்களாக குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க, உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக நான் இன்றைக்கு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்தது எல்லாவற்றையும் என்னிடம் தந்துவிடுங்கள். நீங்கள் அவையில் அனைத்தையும் பேசியதாக நான் பதிவு செய்துகொள்கிறேன். கடைசி பக்கத்தில் நன்றி என்று இருக்கும், அதனை எடுங்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *சோழிங்கநல்லூர் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 5 சென்ட்டோ, 3 சென்ட்டோ நிலம் வைத்திருக்கும் குடும்பங்கள் 500–க்கும் அதிகமாக உள்ளன. அனைத்து நிலைகளிலும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தடையில்லாச் சான்று வழங்க வேண்டும். அதைப்போல, குடிநீர், பாதாள சாக்கடைப் பணிகள் நிறைவுற்று, இன்று வீட்டுக்கு வீடு இணைப்புகள் வழங்கப்பெறுகின்றன. 1998–க்கு முன்பு உள்ள வீடுகளுக்கு,* IDC *என்ற சிறப்புக் கட்டணம் இல்லை. அதனால் 10 முதல் 15 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டடங்களுக்கெல்லாம்,* IDC *என்ற சிறப்புக் கட்டணத்தைப் பெறுவதனால், இன்றைக்கு மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். போதும்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *ஆகவே, அதை 2020 என்று மாற்ற வேண்டுமென்று. . .*

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். திரு. அரவிந்த் ரமேஷ், போதும்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள், ரமேஷ். நன்றி சொல்லி, முடியுங்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: பெரிய தொகுதி, நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலேயே பெரிய தொகுதி சோழிங்கநல்லூர்தான் என்பது எங்களுக்குத் தெரியும்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: தொகுதியின் கோரிக்கைகளை நான் படித்ததாக அவைக் குறிப்பில் பதிவேற்றம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் அவரவர் திறமைக்கேற்ற விளையாட்டுப் பயிற்சிகள், அனைவருக்கும் சிறந்த மருத்துவம், அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு, பெண்களின் பொருளாதார முன்னேற்றம், நாட்டின் பொருளாதாரம், அனைத்திலும் முதன்மை மாநிலமாக, முன்மாதிரியாகத் திகழும் நம் மாண்புமிகு முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சி, வெற்றிச் சாதனையை நோக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பயணித்துக்கொண்டிருக்கும் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தளபதியினுடைய ஆட்சியில் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பணிகளும் 100-க்கு 100 சதவிகிதம் நடைபெற்று வருகின்றன. இன்றைக்கு 50 ஆண்டுக்கால கனவுகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற அரசாக, திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டையாக, தொகுதி அனைத்து நிலைகளிலும் உயர்த்தப்பட்டுக் கொண்டிருப்பதற்கு இந்த நேரத்தில் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சோழிங்கநல்லூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் 43 நியாய விலைக் கடைகள் அனைத்திற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் இயங்கிவரும் நுகர்வோர்—உணவு உதவி ஆணையர் அலுவலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள 1000-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ள நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் உள்ள நகர கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதியான 196-வது வார்டு, கண்ணகி நகர் மற்றும் 200-வது வார்டு, செம்மஞ்சேரி, சுனாமி நகர் ஆகிய பகுதிகளில் 22,420 குடியிருப்புகளுக்கும் மேல்தளத்தில் Sintex tank *வைத்து குடிநீர் வழங்க வேண்டும்.*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண் 187, மடிப்பாக்கம், கார்த்திகேயபுரம் ஏரியை மேம்படுத்தி, சீரமைத்து சுற்றுலாத் துறை மூலமாக படகுக் குழாம் அமைக்க வேண்டும்.

*சோழிங்கநல்லூர் தொகுதி, மயானத்திற்கு உதவியாளர்களைப் பணியமர்த்தி இறந்தவர்களின் உடலை, சென்னையைப் போன்று இலவசமாக அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கிழக்குக் கடற்கரை சாலையை கடலில் இருந்து 200 மீட்டர் வரை கோஸ்டல் ஏரியா (*CRZ*) என்ற விதி நீலாங்கரை வரை உள்ளது. ஆனால், சோழிங்கநல்லூர், ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், சின்ன நீலாங்கரை, பெரிய நீலாங்கரை, சின்னாண்டிகுப்பம், பனையூர்குப்பம், நைனார்குப்பம், உத்தண்டி வரை சென்னை மாநகராட்சியாக விரிவாக்கப்பட்ட பகுதிகளாகும். இந்த ஊர்களுக்கு கடலில் இருந்து 500 மீட்டருக்கு வெளியேதான் வரைபட அனுமதி வழங்கப்படும் என உள்ளது. எனவே, இந்த விதியைத் தளர்த்தி 200 மீட்டருக்கு வெளியிலிருந்தால் அனுமதி வழங்குவதைப் போல் இந்த பகுதிக்கும் அதே விதியினை வரைமுறைப்படுத்த வேண்டும்.*

சோழிங்கநல்லூர் தொகுதி, 199-வது வட்டத்தில் அரசு அலுவலகம் செயல்படும் சமுதாய நலக் கூடத்தில் பொதுமக்கள் சுபநிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்க வேண்டும்.

2023 மார்ச் 30] [திரு. ச. அரவிந்த் ரமேஷ்]

சோழிங்கநல்லூர் தொகுதி, 199-வது வட்டத்தில் சமுதாய நலக் கூடம் கட்டப்பட வேண்டும்.

சோழிங்கநல்லூர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பகுதிகளான செம்மஞ்சேரி, பெரும்பாக்கம் ஆகியவற்றில் 30,488 குடியிருப்புகளில் பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்தப் பகுதியில் தற்போது 80 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கி வருகின்றனர். மேலும், கூடுதலாக 160 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கினால் அந்தப் பகுதியில் குடிநீர் பிரச்சினைகள் இல்லாமல், பொதுமக்கள் வசிக்க முடியும். ஆகையால், பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு தினந்தோறும் 160 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்குப் போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண் 183, பாலவாக்கம், கிழக்குக் கடற்கரை சாலையில் சுமார் 500 மாணவ, மாணவிகள் பயிலும் ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. தற்போது கிழக்குக் கடற்கரை சாலையில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இதனால் சாலை விரிவாக்கத்திற்கு அந்தப் பள்ளியின் கட்டடங்களை இடிக்கின்ற சூழ்நிலை உருவாகி உள்ளது. எனவே, கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, அதே பகுதியில், கல்வி கற்கும் வகையில் தொழில் துறைக்கு சொந்தமான சர்வே எண் 19 ECR-பாலவாக்கத்தில் உள்ளடங்கிய எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரிஸில் சுமார் 55.5 சென்ட் காலி இடம் உள்ளது. அந்த இடத்தை ஆய்வு செய்து தொழில் துறை அமைச்சரின் உரிய அனுமதி பெற்று, மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்துகின்ற வகையில் அந்த இடத்தில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, மண்டலம் 14, வார்டு எண் 191 ஜல்லடையான் பேட்டையில் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியை பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்க வேண்டும்.

[திரு. ச. அரவிந்த் ரமேஷ்] [2023 மார்ச் 30

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மேடவாக்கத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இது ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் பயிலும் பள்ளியாக உள்ளது. இந்த பள்ளியில் பயிலும் மொத்த மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 2,225 ஆக உள்ளது. இதில், ஆண்கள் 1,211 ஆகவும் பெண்கள் 1,014 ஆகவும் உள்ளனர். மேலும், மாணவிகளுக்கென தனியாக பள்ளியை பிரிக்க கடந்த 12–3–2012 ஆம் ஆண்டு பொதுமக்களின் பங்குத்தொகை ரூபாய் ஒரு இலட்சம் செலுத்தப்பட்டது. இன்று பள்ளி தனித்தனியாக இயங்கி வருகிறது. 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை மேடவாக்கத்திலும், 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வெள்ளக்கல் என இரண்டு இடத்திலும் இயங்கி வருகிறது. இதனால், கூடுதலாக அரசுக்கு எந்தவித கட்டடமும், ஆசிரியர்கள் தேவையும், கூடுதல் செலவும் இல்லாமல் உள்ள இந்த பள்ளியை பெண்களுக்கென தனிப் பள்ளியாகவும் பிரித்துத் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15 வார்டு எண் 198—ல், சோழிங்கநல்லூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இது ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் பயிலும் பள்ளியாக உள்ளது. இந்த பள்ளியில் பயிலும் மொத்த மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 765 ஆக உள்ளது. மேலும், இப்பள்ளியில் ஆண்டுதோறும் மாணவ, மாணவிகள் அதிகமான அளவில் சேர்ந்து குறைந்த இடத்தில் படிப்பதால் பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. மேலும், குறிப்பாக கடந்த 28–1–2009 ஆம் ஆண்டு தாம்பரம் பாரத் வங்கியில் இப்பள்ளியை மேம்படுத்துவதற்காக ரூ.1,00,000/– (Challan no:203) தாம்பரம் சார்நிலைக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது. எனவே, மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பக்கிங்ஹாம் கால்வாயை தூர்வாரி படகுக் குழாம் அமைத்து மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம், நன்மங்கலம் ஊராட்சியில் உள்ளடங்கிய ஏரியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். மேலும், படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக மேம்படுத்த வேண்டும்.

2023 மார்ச் 30] [திரு. ச. அரவிந்த் ரமேஷ்]

வேங்கைவாசல், சித்தேரியிலிருந்து பெரும்பாக்கம் செல்லும் உபரிநீர் கால்வாயை தூர்வாரி மேம்படுத்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, அக்கரை, பனையூர், நைனார்குப்பம் ஆகிய பகுதிகளில் கடல் சீற்றம் ஏற்படும்போது, பொதுமக்களைப் பாதிக்காத வகையில் தடுப்புச் சுவர் ஏற்படுத்தி, பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம், நீலாங்கரை, வெட்டுவாங்கேணி, அக்கரை, பனையூர், நைனார்குப்பம் ஆகிய பகுதிகளில் மழைக் காலங்களில் வலைகளைப் பின்னும் கூடம் மற்றும் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் முதல் பெரும்பாக்கம் வரை சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெறுகிறது. மேற்கொண்டு, குளோபல் மருத்துவமனை முதல் மேடவாக்கம் வரை சாலையை அகலப்படுத்த வேண்டும்.

வேங்கைவாசல், சித்தேரியிலிருந்து பெரும்பாக்கம் செல்லும் உபரிநீர் கால்வாயை தூர்வாரி, இருபுறமும் Concrete wall அமைக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் சர்வே எண்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் வீடுகள் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அடிப்படை வசதிகளான சாலை, தெரு விளக்குகள், குடிநீர் வழங்கப்பட்டு வசித்து வரும் இடங்களுக்கு பட்டா வழங்க வேண்டும். அதன் விவரம் கீழ்வருமாறு:-

- சோழிங்கநல்லூர், சர்வே, எண் 439 கிராம நத்தத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- ஜல்லடையான்பேட்டை, திருவள்ளுவர் நகர் சர்வே எண் 220 மற்றும் 221–க்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- ஈஞ்சம்பாக்கம், பெத்தேல் நகரில் சர்வே எண் 282/1, 2, 3 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- ஒக்கியம்துரைப்பாக்கம் சர்வே எண் 75 பட்டா வழங்க வேண்டும்.
- காரப்பாக்கம் சர்வே எண் 160B, 161B, 123/3, 165, 170, 171/1, 172, 169/2 170/2, 123/9 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- பள்ளிக்கரணை, தந்தை பெரியார் நகர், சர்வே எண் 23/1A, 663/5C மேய்க்கால் புறம்போக்கு
- பள்ளிக்கரணையில் சர்வே எண் 314/1 கிராம கணக்கில் பதிவு செய்ய வேண்டும்.
- பெருங்குடி கல்லுக்குட்டை பகுதியில் பட்டா வழங்க வேண்டும்.
- செம்மஞ்சேரி சர்வே எண் 337/12B, இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- புழுதிவாக்கம் சர்வே எண் 42/6, 44/16, 46/1, 229, 230/16, 76/2 கிராம நத்தம் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- ஒக்கியம்துரைப்பாக்கம் மூட்டைக்காரன் சாவடி, சர்வே எண் 272/1A, 164/2 சில இடங்களில் இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.
- உள்ளகரம் சர்வே எண் 90, 91 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.
- பள்ளிக்கரணை சர்வே எண் 101
- பள்ளிக்கரணை நாகேஸ்வரி அம்மன் நகர் சர்வே எண் 71 மேய்க்கால் புறம்போக்கு
- பள்ளிக்கரணை, மேற்கு அண்ணா நகர், சர்வே எண் 121, 121B, 118
- கந்தன்சாவடி KPK நகர் சர்வே, எண் 658/1A, 1B பட்டா வழங்க வேண்டும்.

- வார்டு எண் 189, பள்ளிக்கரணை சர்வே, எண் 330, 627 பட்டா வழங்க வேண்டும்.

- பெரும்பாக்கம் சர்வே எண் 441, 429/6 வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- பெருங்குடி, காமராஜர் நகர், சர்வே எண் 181/1, 181/2, 183/1, 183/2, 183/3, 184/1, 184/2, 184/3,187 ஆகியவற்றிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- ஈஞ்சம்பாக்கம் சர்வே எண் 87/2 பட்டா வழங்க வேண்டும்.

- சித்தாலப்பாக்கம் ஊராட்சி சர்வே எண் 12, 12/1, 12/3, 12/4, 25, 19/1, 22/2, 32, 12/6 30/1, 30/2 வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- வேங்கைவாசல் சர்வே எண் 2/16, நேரு நகர் பகுதி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- கோவிலம்பாக்கம் சர்வே எண் 405, 403/2, 403/3, 390/2 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- ஒட்டியம்பாக்கம், அரசன்கழனி சர்வே எண் 1/6, 1/10 மற்றும் 72/1 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- பள்ளிக்கரணை சர்வே எண் 657/3A2, 343, 183–ல் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- ஒக்கியம்துரைப்பாக்கம் சூலைமான் நகர் சர்வே எண் 169, 189 மேய்க்கால் பகுதிக்கு பட்டா வழங்க வேண்டும்.

- உள்ளகரம் சர்வே எண் 172, 28/1–க்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- பெருங்குடி, சௌந்தர்யா நகர், சர்வே எண் 159/2, 159/3–ல் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- நீலாங்கரை, ராஜேந்திரன் நகர், சர்வே எண் 41/1, பாரதியார் நகர் சர்வே எண் 38/1–ல் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- நன்மங்கலம், காந்தி தெரு, அண்ணா தெரு சர்வே எண் 279–க்கு பட்டா வழங்க வேண்டும்.

- நன்மங்கலம், அஸ்தினாபுரம் சாலை, கண்ணகி இளங்கோ தெரு, கம்பர் தெரு, அவ்வையார் தெரு சர்வே எண் 302–க்கு பட்டா வழங்க வேண்டும்.

- பாலவாக்கம், மீனவர் குப்பம் பகுதியில் சர்வே எண் 4–ல் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

- மேடவாக்கம், சர்வே எண் 400A, 227, 417, 416–ல் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் 20–25 வருடங்களுக்கு மேல் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். மேலும், உள்ளகரம், புழுதிவாக்கம், கொட்டிவாக்கம், கந்தன்சாவடி, பாலவாக்கம், பெருங்குடி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடையான்பேட்டை, நீலாங்கரை, ஒக்கியம்துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், சோழிங்கநல்லூர், உத்தண்டி, செம்மஞ்சேரி, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நீண்ட நாட்களாகக் குடியிருப்பவர்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கும் வீட்டுமனைப் பட்டாவை விரைவில் வழங்கிட வேண்டும்.

2006–2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பட்டாக்களை, கிராம கணக்கில் பதிவு செய்ய வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் பழைய சர்வே எண் 602/3–ல் தோல்குட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

2023 மார்ச் 30] [திரு. ச. அரவிந்த் ரமேஷ்]

சோழிங்கநல்லூர் தொகுதி, 200-வது வட்டம், செம்மஞ்சேரி சுனாமி நகரில் மயானபூமியை பெரியதாக அமைக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, 195, 196-வது வட்டங்களில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களை ஒப்படைக்க வேண்டும்.

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக கோவிலம்பாக்கம் சக்தி நகர் பகுதிகளில் பட்டா வழங்க வேண்டும்.

மடிப்பாக்கம், மைலை பாலாஜி நகர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வார்டு எண் 188 பள்ளிக்கரணை நடைபாதைவாசிகள் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வழங்கப்பட வேண்டிய கிரையப் பத்திரம் வழங்க வேண்டும்.

உள்ளகரத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனை பிரிவுகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வழங்கப்பட வேண்டிய கிரையப் பத்திரம் வழங்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதியை மேம்படுத்தி மழைநீர் சேகரிக்கப்பட்டு பறவைகள் சரணாலயமாக மாற்றி சுற்றுலாத் தலமாக உருவாக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதியில் வனத் துறை மூலமாக அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தளத்தில் கட்டணமில்லாமல் அனுமதிக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, வார்டு எண் 186-ல், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, சர்வே எண் 483, 484, 488-ல் தனிநபர் ஆக்கிரமிப்பில் உள்ள இடத்தை அறநிலையத் துறை மீட்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் சமூக நலக் கூடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் குடிநீர் வசதி போதுமான அளவு ஏற்படுத்தித் தரவேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஏழு ஊராட்சிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் (UGSS), குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளை கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்வாரி ஒக்கியம் மடுகு பகுதியில் படகுக் குழாம் அமைத்து மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரியை உருவாக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் உள்ளடங்கிய சமூக நலக் கூடங்களில் சுப நிகழ்ச்சிகளுக்கு தேவையான பாத்திரங்களை அரசே இலவசமாக வழங்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சியில் கீழ்க்கண்ட பகுதிகளில் துப்புரவு பணியாளர்கள், டிராக்டர், இ-கார்ட் காம்பாக்ட் வாகனம், டாட்டா ஏஸ் வாகனம் மற்றும் மினி லாரி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

ECR சாலையை உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா மண்டலமாக உருவாக்க வேண்டும்.

2023 மார்ச் 30] *[திரு. ச. அரவிந்த் ரமேஷ்]*

சோழிங்கநல்லூர் தொகுதி, மீனவ சமுதாய மக்களின் நலன் கருதி மீன்பிடித் துறைமுகம் அல்லது நவீன மீன் மொத்த விற்பனை மையத்தை துவங்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பக்கிங்ஹாம் கால்வாய் இடையே கொட்டிவாக்கம் இளங்கோ நகர், கந்தன்சாவடி, பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம்துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் சாலைகளை இணைக்கும் பாலம் மிகவும் சிறியதாக உள்ளது. அதனை அகலப்படுத்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 197 இல் உள்ளடங்கிய உத்தண்டி பகுதியில் அரசு இ–சேவை மையத்தை மீண்டும் துவங்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உள்ளகரம், புழுதிவாக்கம் பகுதியில் மின் அழுத்தக் குறைபாடு உள்ளதால் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள். மணி பிற்பகல் 1–24 ஆகிறது. பிற்பகல் 1–30 மணியைத் தாண்டி 1 நிமிடம் பேசலாம்.*

பிற்பகல் 1–25

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர், எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைஞர்களின் வழிகாட்டி, எங்களுடைய தலைவர் அன்புக்குரிய அண்ணன் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், எங்களையெல்லாம் இங்கே வழிநடத்திக் கொண்டிருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் தியாகச் செம்மல் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளருமான அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், சேலம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான எங்களுடைய அன்புக்கும் பாசத்திற்குமுரிய அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள் உள்ளிட்ட இங்கு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரையும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும்*

வணங்கி, என் குலதெய்வம் ஏழூர் மாசி பெரியசாமியையும், என்னை வளர்த்த தெய்வம் என்னுடைய பாட்டி அம்மணி அம்மாளையும் வணங்கி, என்னை என்றும் அன்போடு அரவணைக்கும், சேலம் மாவட்ட மக்கள் மற்றும் என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பியிருக்கிற சேலம் மேற்கு தொகுதி மக்கள் அனைவருடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடந்த இரண்டுமுறை நான் பேசியபோது வைத்த கோரிக்கைகளில், குறிப்பாக, அரியகவுண்டம்பட்டியில் 25 கோடி ரூபாயில் வெள்ளிக் கொலுசு பன்மாடித் தொழிலகம், சேலம் புதுரோட்டில் 5 கோடி ரூபாயில் ரவுண்டானா, போடிநாயக்கன்பட்டி ஏரி, பனைமரத்துப்பட்டி ஏரி உள்ளிட்ட சேலத்தை அழகுபடுத்தும் திட்டங்கள், 25 கோடி ரூபாயில் விளையாட்டரங்கம், பெரியார் பல்கலைக்கழகத்திற்கு 2½ கோடி ரூபாய் நிதி, சேலத்தில் 880 கோடி ரூபாயில் மிகப் பெரிய ஜவுளிப் பூங்கா ஆகியவற்றையெல்லாம் எங்களுக்குத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சரான மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் இந்த நேரத்தில் அன்போடு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 880 கோடி ரூபாய் மதிப்பிலான ஜவுளிப் பூங்காவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அதற்கான பணிகளை விரைவாகத் தொடங்கி, முடித்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே அதிகமான நகர்ப்புரங்களைக் கொண்ட மாநிலம் நமது தமிழ்நாடு. தமிழ்நாட்டில் 54% மக்கள் நகரத்தில் வாழ்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் அதிகப்படியான மாநகரங்கள், நகரங்களை நோக்கி பெயர்வு நடைபெறுகிறது. தொழில், வேலை, கல்வி வசதிகளுக்காக நகரங்களை நோக்கி மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நகராட்சி நிர்வாகத்திற்குக் கூடுதலான நிதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புரங்களில் இருக்கும் வசதிகளைப்போல், நமக்கும் தேவை என்று ஊரகப் பகுதி மக்களும் விரும்புகிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே தமிழக அரசு நிதிநிலை அறிக்கையிலே அதிக நிதி ஒதுக்கீடு செய்த 5 துறைகளில், ஊரக வளர்ச்சித் துறையும்

ஒன்று. இந்த நிதிநிலை அறிக்கையில் 22,562 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் துப்புரவுப் பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. சேலம் மாநகராட்சியில்கூட நிறைய துப்புரவுப் பணியாளர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அந்த இடங்களில் புதியவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். ஒரு வார்டில் குறைந்தபட்சம் 100 பணியாளர்களையாவது நியமனம் செய்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று எங்களுடைய மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்களும், எங்களுடைய தலைவர் அண்ணன் மருத்துவர் அன்புமணி அவர்களும், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், எங்கள் அய்யா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, தலைவர் கலைஞர் அவர்கள் முதலாவது கட்ட திட்டத்தைச் செய்து கொடுத்தார்கள். எனவே, அந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் 7,145 கோடி ரூபாயினைக் கொடுத்திருக்கிறார்கள்; அதை வரவேற்கிறோம். அந்தப் பணியை மிக விரைவாகத் துவங்கி முடிக்க வேண்டும்; இரண்டாவது கட்டத் திட்டப் பணிகள் எப்போது துவக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறோம்.

Jal Jeevan Mission திட்டத்திற்கு 6,600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த JJM திட்டத்தின் மூலமாக, சேலம் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில்கூட தண்ணீர் பிரச்சினை இல்லை, அனைத்து கிராமங்களிலும் தண்ணீர் கிடைக்கிறது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக என்னுடைய சேலம் மேற்குத் தொகுதியில், 20 ஊராட்சிகளிலும், 14 Divisions-லும் 100 சதவிகிதம் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், மழைக் காலங்களில் நகர்ப் பகுதிகளில் மின் விபத்துகள் நிறைய ஏற்படுகின்றன. எனவே, பூமிக்கு அடியில் புதைவட மின்கம்பிகள் அமைக்கப்பட வேண்டும்.

சேலம் உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில், wi–fi வசதி செய்வதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் அதை அமல்படுத்த வேண்டும். தனியார் மூலமாகவோ, விளம்பரங்கள் மூலமாகவோ அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் ஓர் அன்பான வேண்டுகோள். நமக்கு நாமே திட்டத்தில், ஊரகப் பகுதிகளில் பட்டியல் சமுதாய மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள பங்கில் 5–ல், 1 பங்கு என்ற தளர்வை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதை நடைமுறைப்படுத்திட உடனடியாக அரசாணை வெளியிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்க வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 29 வகையான அதிகாரங்களும், 12–வது அட்டவணையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 18 வகையான அதிகாரங்களும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்களை தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி பெற்றுத் தந்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஊரக வளர்ச்சித் துறையில் முதலமைச்சருடைய கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திலே. . .

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அருள், இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. உரையை முடியுங்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு வாத்தியார் வீட்டுப் பையன். தயவுசெய்து, எனக்குக் கொஞ்ச நேரம் கொடுங்கள். 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 5,145 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகள்

செயலாக்கப்படுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்கிறேன். இந்த நிதி போதாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இன்னும் அந்தக் கிராமச் சாலைகளுக்காக கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கிராமப்புறச் சாலைகளைப் போடும்போது, எதிர்காலத்தில் சாலையை அகலப்படுத்தும் ஒரு நிலை ஏற்படும். சாலையை மீண்டும் அகலப்படுத்தும்போது இரண்டு பக்கமும் உள்ள மரங்களை வெட்டாத வகையிலே, இரண்டு பக்கமும் மரங்களை நட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கிராமப்புற மக்கள் கொரோனாவிற்குப் பிறகு, மரம் நடுவதில் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆகவே, ஓர் இயக்கமாக வனத் துறையோடு சேர்ந்து நடத்த வேண்டுமென்றார் எங்கள் அய்யா. எங்கள் மருத்துவர் அய்யா அவர்களைப் பொறுத்தவரையிலே, பிறந்த நாளுக்கு யார் வேண்டுமென்றாலும் தமிழ்நாட்டில் இருப்பவர்கள் மட்டுமல்ல; உலகெங்கும் இருப்பவர்கள் அவர்களுடைய பிறந்த நாளுக்காக மரத்தை நட்டு ஒரு புகைப்படத்தை எடுத்து அய்யாவுக்கு அனுப்பினால், உடனே அவர் தொலைபேசியில் வாழ்த்து சொல்வார். அந்த அளவிற்கு இயற்கையோடு ஒன்றியிருக்கிற எங்களுடைய கட்சியினுடைய கோரிக்கையை தயவுசெய்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவிகளை தன்னுடைய முதல் கேள்வியிலே, எங்களுடைய தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்டார்கள். ‘15 நாட்களில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொகையை வழங்குவேன்’ என்று சொன்ன, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த நேரத்திலே வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னொன்றையும் அவரிடத்தில் சொல்ல வேண்டும். இங்கே இருக்கிற மூத்த அமைச்சர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை மறந்துவிட்டீர்கள். ஆனால், மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக, சிறுதானியங்களால் செய்யப்பட்ட இனிப்புகளை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் வழங்கினார். அதற்காக இந்த நேரத்திலே அவருக்கு நன்றியைத் தெரிவித்து, அவரிடம் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன்.

Khelo India Youth Games. . . (குறுக்கீடு) எங்களுக்கெல்லாம் வந்தது. எங்களுக்குக் கொடுக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் கொடுத்தார் என்று சொல்லி கையெழுத்து வாங்கிவிட்டுப் போனார்கள். Khelo India Youth Games போட்டியில் மாநில அளவில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, Khelo India குளிர்கால விளையாட்டுப் போட்டிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு, 2019 மற்றும் 2023–ல் Khelo India போட்டியில் சேலத்தைச் சேர்ந்த ஓர் ஏழை, ஆட்டோ ஓட்டுநருடைய மகள் சுப்ரஜா பெருமாள் என்பவர் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் பெற்றார். அந்தப் பெண்ணிற்கு இதுவரை ஒரு பாராட்டோ, ஊக்கத் தொகையோ வழங்கப்படவில்லை. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறுகிறவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு normal category–ல் இருக்கிற விளையாட்டு வீரர்களுக்கு வழங்குவதைப்போல வழங்கப்பட வேண்டும்.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 44–லிருந்து 47 நாட்கள்தான் வேலை வழங்கப்படுகிறது. அதை சராசரியாக 75 நாட்களாகக் கொண்டுவர வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரு குடும்பத்திற்கு 150 நாள் வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணிகளில் உழவர்களுடைய பங்களிப்பையும் ஏற்று, விவசாயிகளுடைய பங்களிப்பையும் ஏற்று, விவசாயப் பணிகளுக்கு அதை பயன்படுத்த வேண்டும்.

அரியலூர் மாவட்டத்தில் சோழர் பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எங்கள் தலைவர் அண்ணன் அன்புமணி அவர்கள் நடைபயணம் மேற்கொண்டார். அந்தப் பயணத்திற்கு மக்களிடத்திலே பெரும் ஆதரவு உள்ளது. ஆகவே, பயனுள்ள இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள், போதுமா?

திரு. இரா. அருள்: எல்லா நகர்ப்புர ஊராட்சி அமைப்புகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை அமல்படுத்த வேண்டும். இன்னொன்று நீங்கள் MLA fund 3 கோடி ரூபாய் கொடுக்கிறீர்கள். அதிலே 54 இலட்சம் ரூபாய் GST–க்குப் போய்விடுகிறது.

2023 மார்ச் 30] [திரு. இரா. அருள்]

2½ கோடி ரூபாய்க்குத்தான் எங்களால் பணிகளைச் செய்ய முடிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறோம், அதை 5 கோடி ரூபாயாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: GST-க்கு நீங்கள் எங்கே கேட்க வேண்டும்? பார்லிமென்ட்டில் பேசக்கூடிய விஷயம்.

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளத்தோடு கேட்பதை எல்லாம் கொடுக்கிற மாண்புமிகு முதலமைச்சர் 5 கோடி ரூபாயாகக் கொடுத்துவிட்டு, அதில் 2 கோடி ரூபாயை வேறு பணிகளுக்குக் கொடுங்கள் என்று சொன்னால்கூட கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி. நன்றி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் இரண்டு நிமிடம் கேட்டீர்கள். நான் அதிகமாக 4 நிமிடங்கள் தந்துவிட்டேன். திரு. ஜி.கே. மணிக்காக 2 நிமிடங்கள், என் சார்பாக 2 நிமிடங்கள், மொத்தம் 4 நிமிடங்கள் அதிகமாகத் தந்திருக்கிறேன்.

திரு. இரா. அருள்: *சென்னை தீவுத் திடல், நகர்ப்புர சதுக்கத்தை 50 கோடி ரூபாயில் அமைத்திருக்கிறீர்கள். அதற்காகப் பாராட்டுகிறோம். தமிழ்நாடு முழுக்க எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் நகர்ப்புர சதுக்கம் அமைக்க வேண்டும். சேலத்தில் நம்முடைய மாண்புமிகு நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் எங்கள் பொறுப்பு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு காலியிடம் இருந்தது. அங்கு, அரசாங்கத்தினுடைய கட்டுமானப் பணிகளுக்குக் கேட்கும்போது, போஸ் மைதானம் இப்பொழுது இல்லை, சேலத்தில் எந்த நிகழ்ச்சி நடத்துவதற்கும் இடமில்லையென்று சொல்லி, அந்த இடத்தினை பொதுமக்களுக்கான பயன் பாட்டிற்காக வைத்தார். அந்த* Ground*-க்கு கவிச்சிங்கம் ராஜரிஷி அர்த்தநாரீச வர்மாவுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன். (குறுக்கீடு) நீங்கள், உங்கள் தொகுதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு)*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சேலம் மாவட்டத்தில் தென்னை மட்டையிலிருந்து நார் எடுக்கின்றனர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்ற கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) உரையாற்றியது போதும். (குறுக்கீடு) திரு. அருள், போதும். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) ஒரு வரியில் பேசி உரையை முடியுங்கள்.*

திரு. இரா. அருள்: *தென்னை நார் தொழிற்சாலை மிகப் பெரிய அளவில் இருக்கிறது. அதில்* tariff III*–க்கு 500 யூனிட் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். இன்றைக்கு கயிறு தொழில் மிகவும் பாதிப்படைந்துவிட்டது. தொழிலாளர்களுக்கு கூலிகூட கிடைக்காமல் இருக்கிறது. அதைச் சீர் செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு)*

திரு. இரா. அருள்: *நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய முதல் உரையிலே, 'இது என்னுடைய அரசு இல்லை, நம்முடைய அரசு' என்று சொன்னார்கள். அந்த உணர்வோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் தாயுள்ளத்தோடு அரவணைக்கின்றார். ஆனால், ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர்கள் பற்றி பேசியதெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம்; நீக்கிவிடுகிறேன். நன்றி சொல்லி அமருங்கள். நீங்கள் நேரில் சென்று பேசிவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் செய்யக்கூடியவற்றை 100 சதவிகிதம் செய்து தருவார்கள்; சட்டத்திற்குப் புறம்பாக சில விஷயங்கள் செய்ய முடியாமல் இருக்கும்; நிதி ஆதாரமில்லாமல் இருக்கும். நீங்கள் உங்கள் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர்களிடத்தில் கொடுத்து, அதை* follow up *செய்ய வேண்டும். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. இரா. அருள்: *தமிழ்நாடு முழுவதும் கழிப்பிடங்கள் போன்ற அரசாங்கக் கட்டடங்கள் இருக்கின்றன. அவை ** போய் இருக்கின்றன. அது ரூ.10 இலட்சம் மதிப்புள்ள ஒரு கட்டடம்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அதற்கு, ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கினால், அதைச் சரி செய்துவிடலாம். அதுபோன்ற கட்டடங்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய fund கொடுக்கப்பட்டு, அவற்றை maintain செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. இரா. அருள்: இதுபோன்று, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. அவற்றை தங்களிடத்தில் கொடுக்கின்றேன். அதை நான் பேசியதாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, மீண்டும் என்னை இங்கு அனுப்பிய சேலம் மேற்கு தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லி, தாயுள்ளத்தோடு எனக்கு உரையாற்றுவதற்கு 3, 4 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்தீர்கள். நன்றி, நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

சேலம் மாநகரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நீண்டநெடுங்காலமாக வாழ்ந்து வரும் சுமார் 5,000-க்கும் மேற்பட்ட குடும்பத்தினரின் வீடுகளுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

சேலம் மாநகராட்சி உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சிகளில் உள்ள மேம்பாலங்களில், சென்னை போல திருக்குறள் ஓவியங்களை வரையவும், தொங்கும் தோட்டங்கள் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேலம் மாநகராட்சி உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் 300 சதுர அடி, 600 சதுர அடிகளில் வீடு கட்டுபவர்களுக்கும் Clearance Certificate தரப்படாததால் மின் இணைப்பு வழங்கப்படுவதில்லை. இதுபோன்றவர்கள் உடன் மின் இணைப்பு பெற அரசு உரிய வழிகாட்டுதல்களை வழங்கிட வேண்டும்.

ஏற்காடு மலை அடிவாரம் முதல் ஏடிசி நகர் வழியாக புதிய பேருந்து நிலையம் வரை செல்லும் வரட்டாறு ஓடையில், ஏடிசி நகர், ஐய்யர் தோட்டம், அருண் நகர், கே.எம்.எஸ். கார்டன் ஆகிய இடங்களில் உயர்மட்டப் பாலம் அமைத்து, ஓடை முழுவதும் கான்கிரீட் தளம் அமைத்து நிலத்தடி நீரைப் பாதுகாத்திட வேண்டும்.

[திரு. இரா. அருள்] [2023 மார்ச் 30

சேலம் மாநகரில் மாமாங்கம் அரபி கல்லூரி, வெள்ளக்கல்பட்டி, செட்டிச்சாவடி, கொண்டப்பநாயக்கன்பட்டி வரை இணைப்பு சாலை சேலம் மாநகரைச் சுற்றி ரிங் ரோடு அமைக்க வேண்டும்.

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முத்துநாயக்கன்பட்டியை தலைமை இடமாகக் கொண்டு முத்துநாயக்கன்பட்டி ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும்.

சேலம் மாநகராட்சியிலிருந்து தினமும் சுமார் 500 முதல் 600 டன் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள், மருத்துவக் கழிவுகள் அனைத்தும் ஒன்றாக சேர்த்து செட்டிச்சாவடியில் கொட்டி எரிக்கப்படுகிறது. ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டினுடைய இயற்கை அழகு பாழ்பட்டு வருகிறது. அவற்றைத் தடுத்து புகையினாலும், குப்பையினாலும் மக்களுக்கும், இயற்கைக்கும் ஏற்படும் பாதிப்பைத் தடுத்து நிறுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இஸ்மாயில்கான் ஏரியை சுற்றுலாத் தலமாக மாற்றிட வேண்டும்.

பள்ளப்பட்டி காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலைய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

சேலம், பள்ளப்பட்டி கிராமத்தைத் தனி கிராமமாக பிரித்து பள்ளப்பட்டிக்கு தனி கிராம நிருவாக அலுவலரை நியமித்து, தனி கிராம நிருவாக அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

சேலம், குருவம்பட்டி உயிரியல் பூங்கா, ஏற்காடு ஆகியவற்றை பெரும் சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட வேண்டும்.

சேலம் மாவட்டம், குறு, சிறு தொழில் செய்வோர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்திட, பொது சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கித் தர வேண்டும்.

சேலம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, ரெட்டியூர் ஊத்துக்கிணறு இடையில் 800 மீட்டர் சாலை அமைக்க வனத் துறை அனுமதி மறுக்கிறது. இதுபோன்ற இடங்களில் வனத் துறை அனுமதி உடனடியாக கிடைக்க ஆவன செய்திட வேண்டும்.

2023 மார்ச் 30] [திரு. இரா. அருள்]

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1-வது கோட்டம் ரெட்டிப்பட்டி மற்றும் பாகல்பட்டி ஊராட்சியில் உள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட நவீன சுகாதார மருத்துவமனையாக மேம்படுத்திட வேண்டும்.

அழகாபுரம் பெரியபுதூர், சிவதாபுரம், காமநாயக்கன்பட்டி பகுதிகளில் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களை புதிதாக அமைத்திட வேண்டும்.

பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் மழைக் காலத்தில் சேவை மையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மக்களுக்கு அது இடையூறாக இருப்பதால், அங்கிருந்து அதனை உடனடியாக பழைய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்திற்கே மாற்ற வேண்டும்.

சேலம் மாநகராட்சியின் பல பகுதிகளில் சுமார் 6 முதல் 8 அடி சாலை இருந்தாலும் தனியார் தொலைதொடர்பு நிறுவனங்கள் கம்பம் அமைக்கிறார்கள். கம்பங்களும், கேபிளும் மிகவும் தாழ்வான உயரத்தில் அமைப்பதால் பொதுமக்களுக்கு பெரும் இடையூறாக உள்ளது. ஜியோ, ஏர்டெல் போன்ற தனியார் தொலைபேசி கம்பங்கள் போர்க்கால அடிப்படையில் அகற்றப்பட வேண்டும்.

சேலம், சூரமங்கலம் உழவர் சந்தை அருகில் உள்ள அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும்.

சேலம், வெள்ளி கொலுசு உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைத்திட வேண்டும்.

சேலம் வெள்ளி கொலுசுக்கு புவிசார் குறியீடு கிடைக்க ஆவன செய்திட வேண்டும்.

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தை உடனடியாக செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

சேலம் டால்மியா போர்டு அருகில் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சேலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT Park) துவக்கப்பட்டு ஆரம்ப நிலையிலேயே உள்ளது. நிலம் வாங்கிய நிறுவனங்கள் உடன் தொழில் துவங்க வாய்ப்பு வசதிகளை அரசு உருவாக்கித் தர வேண்டும். வேலைவாய்ப்பில் சேலம் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

சேலம் உருக்காலைக்கு நிலம் வழங்கியவர்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்குவதோடு வளாகத்திலேயே குடியிருக்க காலி இடத்தில் வீடு கட்டி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

சேலம் புதிய பேருந்து நிலையத்திற்கு கூடுதல் சுகாதாரமான சுத்தமான கழிப்பறை வசதிகள் இலவசமாக ஏற்படுத்தி தருவதுடன், முதியோர்களுக்கு மேற்கத்திய கழிவறை (Western Toilet) வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும்.

ஓமலூர் ஒன்றியம், சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட பாகல்பட்டி, முத்துநாயக்கன்பட்டி, மாங்குப்பை, நல்லாகவுண்டம் பட்டி, சாமிநாயக்கன்பட்டி, கோட்டகவுண்டம்பட்டி. செம்மண்கூடல், செல்லப்பிள்ளைக்குப்பை ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனி குடிநீர் வசதி வழங்க வேண்டும்.

சேலம் மாநகராட்சியை சுற்றி ரிங் ரோடு அமைத்துத் தர வேண்டும்.

சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில் உத்தமசோழபுரம் கரபுரநாதர் திருக்கோயில் புனரமைக்கும் பணிகளை விரைந்து முடித்து குடமுழுக்கு செய்திட வேண்டும்.

சேலம், அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்பன் கோயிலுக்கு வரும் திரளான பக்தர்களின் நலன் கருதி கோயில் முன்பாக மிகப் பெரிய நிழற்கூடம் அமைத்துக் கொடுத்திடவும், பக்தர்கள் வசதிக்காக கூடுதல் விருந்துக் கூடங்கள் அமைத்துக் கொடுத்திடவும் வேண்டும்.

சேலம் மாவட்டம், குருவம்பட்டி வன விலங்கு உயிரியல் பூங்கா தரம் உயர்த்தப்பட வேண்டும். மேலும், அங்கு உள்ள ஏரியை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, கூடுதல் நீர் ஆதாரத்தை உயர்த்தி படகு சவாரிக்கு ஏற்பாடு செய்து, சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஒரு விஷயத்தை சொன்னீர்கள், எல்லாமும் ** கிடக்கின்றன; ஒன்றுமே நடக்கவில்லை என்று. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும், இந்த அரசு வந்ததற்குப் பின்னர்தான், இரண்டு வருடங்களில் நிதியைக் கொடுத்து, எந்தெந்தப் பள்ளிக்கூடக் கட்டடங்கள்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

எல்லாம் பழுதடைந்திருந்தனவோ, அவை அனைத்தும் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சரிசெய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு எது சரியாக இல்லையோ, அதை மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, பொத்தாம் பொதுவாகக் கூறிய ** கிடக்கின்றன என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) செய்துவிடலாம். மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியார்' நான்கு எழுத்து, 'அறிஞர்' நான்கு எழுத்து, 'கலைஞர்' நான்கு எழுத்து, 'தளபதி' நான்கு எழுத்து, இளைய 'சூரியன்' நான்கு எழுத்து, இந்த நான்கு எழுத்துகளைக் கொண்ட தலைவர்களை வணங்கியும், கலசப்பாக்கம் தொகுதிக்கு பல வளர்ச்சித் திட்டங்களை அறிவிக்கவிருக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பவரை மதிப்பவர், எதிலும் வல்லவர் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும், வணங்கி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசுக் கொறடா, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, உரையை தொடங்குகிறேன்.

'பூக்களாய் இருக்காதே, உதிர்ந்து விடுவாய்! செடிகளாய் இரு, பூத்துக்கொண்டே இருப்பாய்!' என்றார் விவேகானந்தர். அப்படி செடிகளாய் இருந்து, பூக்களைப்போல பல நல்ல திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, ஒரு பேரூராட்சியும், 94 கிராம ஊராட்சிகளும் அடங்கிய பெரிய தொகுதியாகும். நடைபெற்று முடிந்த நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தலில், புதுப்பாளையம் பேரூராட்சியில் எதிர்க்கட்சி ஒரு ward-ல்கூட வெற்றி பெறாமல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பெ.சு.தி. சரவணன்] [2023 மார்ச் 30

நூறு சதவிகிதம் தளபதி அவர்களின் உடன்பிறப்புகளும் (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுமே வெற்றி பெற்றனர். அதற்குக் காரணம் என்ன? பத்து ஆண்டுகளாக புதுப்பாளையம் பேரூராட்சியில் எந்த வளர்ச்சித் திட்டமும் நடைபெறாமல் இருந்ததே முக்கிய காரணமாகும். பத்து ஆண்டுகளில் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகள், இந்த ஒரே ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் நடைபெற்றுள்ளன என்பதை நான் இந்த அவையில் பெருமையாகக் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

மீதமிருக்கும் பணிகளான, புதுப்பாளையம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல், அம்மாகுளம் புனரமைத்தல், சமுதாயக் கூடம் சீரமைத்தல், பழுதடைந்துள்ள சந்தைக் கடைகளை புதிதாகக் கட்டித் தருதல், மீதமுள்ள தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய், சிமெண்ட் சாலைகள் அமைத்துத் தருதல், பழுதடைந்துள்ள கூடுதல் நிர்வாகக் கட்டடத்தை அகற்றி, புதிய கட்டடம் கட்டித் தருதல், புதுப்பாளையம் பேரூராட்சியைத் தரமுயர்த்துதல், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்தித் தருதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பாளையம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் சுமார் ரூ.10.88 கோடி நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதற்குப் பரிந்துரை செய்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த அவையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எங்கள் மாவட்டத்திற்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த அவையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில், அனைத்துத் துறைகளின்மூலம் பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கு அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 30] [திரு. பெ.சு.தி. சரவணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை ஒன்றியத்தில், கலசப்பாக்கம் தொகுதியில் மட்டும் 5 ஊராட்சிகள் உள்ளன. இதில் சுமார் 269 குக்கிராமங்கள் உள்ளன. ஜவ்வாது மலை ஒன்றியத்திலுள்ள பல கிராமங்கள் இன்னும் சாலை வசதிகளே இல்லாமல் இருக்கின்றன. சில கிராமங்களுக்கு மட்டும் ஓரடுக்கு ஜல்லி சாலைகளும், மண் சாலைகளும் உள்ளன. இதனால், மலைவாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு, அந்தச் சாலைகள் அத்தனையையும் சீரமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், அத்தனை சாலைகளும் வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால், மற்ற துறைகளின் மூலமாக அந்தச் சாலைகளைப் போடுவதற்கு NOC கிடைக்கவில்லை என்கின்ற ஒரு நிலைமை உள்ளது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி சுமார் 90 சதவிகிதம் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. அது தமிழகத்திற்குக் கிடைப்பதில்லை. அதைப் பெற்று, மலைவாழ் கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தற்போது வனத் துறையினரிடம், சாலைகள் போட வேண்டும் என்று கேட்டால், 'எங்களிடம் பணம் இல்லை' என்கிறார்கள். ஆனால், மற்ற துறைகள் சாலை போடுவதாக இருந்தால், நாங்கள் NOC கொடுக்கிறோம் என்ற ஒரு வாக்குறுதியை அவர்கள் கொடுக்கிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மலைவாழ் மக்களின் நலன் கருதி, அங்குள்ள மலைச் சாலைகளை, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின் கிராம சாலைகள் திட்டத்தின் மூலமாகவோ மேம்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வனத் துறையின் பொறியாளர் அலுவலகம், தருமபுரி மாவட்டம் அரூரில் உள்ளதால், அருகாமையிலுள்ள மலைச் சாலைகளுக்கு கடந்த காலங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஜவ்வாது மலை, ஏலகிரி மலை என எங்கள் பகுதியிலுள்ள மலைச் சாலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில்கொண்டு, ஜவ்வாது மலைப் பகுதியில் வனத் துறையின் சார்பில் பொறியாளர் அலுவலகம் ஒன்றை புதிதாக ஏற்படுத்தி,

எங்கள் பகுதியிலுள்ள சாலைகளை மேம்படுத்தித்தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலை ஒன்றியத்தில் சிமெண்ட் கிடங்கு இல்லாத காரணத்தால், போளூரிலிருந்து பயனாளிகள் சிமெண்ட் எடுத்துச் செல்லும் நிலை உள்ளது. உதாரணமாக, அம்ரிதியில் இருக்கும் ஒரு பயனாளி சிமெண்ட் எடுக்க வேண்டுமென்றால், போளூருக்குத்தான் செல்ல வேண்டும். ஆனால், போளூருக்கும், அம்ரிதிக்கும் இடையே சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, ஜவ்வாது மலை ஒன்றியத்தில் சிமெண்ட் கிடங்கு ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பாளையம், ஜவ்வாது மலை ஒன்றியங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடம் வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பேய்மழை வெள்ளக் காலங்களில் ஜவ்வாது மலைப் பகுதியில் அடித்துச் செல்லப்பட்ட 63 தரைப் பாலங்களையும், கலசப்பாக்கம் பகுதியில் மிருகண்டா நதியின் குறுக்கே அடித்துச் செல்லப்பட்ட வெங்கட்டம்பாளையம் ஊராட்சியிலுள்ள நல்லான்பிள்ளைபெற்றாள் சிறு பாலத்தையும், காந்தப்பாளையம் ஊராட்சி, பட்டியேந்தல் சாலையிலுள்ள சிறு பாலத்தையும், சிறுவள்ளூர் ஊராட்சியில் அண்ணா நகர் செல்லும் சாலையிலுள்ள சிறு பாலத்தையும் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், இந்தச் சாலைகள் அத்தனையும் ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான சாலைகள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் பெரிய ஊராட்சிகள் நிறைய இருக்கின்றன. ஜவ்வாது மலையிலுள்ள கோவிலூர், போளூர் ஒன்றியத்திலுள்ள குப்பம், படவேடு போன்ற பெரிய கிராம ஊராட்சிகளைப் பிரித்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். MGNREGS திட்டத்தின்மூலம் ஆரம்பப் பள்ளிகளுக்கு நாம் சுற்றுச்சுவர் மட்டும்தான் கட்டித் தருகிறோம். இதை விரிவுடுத்தி, ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிவறை கட்டித் தருதல்,

2023 மார்ச் 30] [திரு. பெ.சு.தி. சரவணன்]

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்தல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், அங்கன்வாடி மையம் அமைத்தல் போன்ற திட்டங்களை MGNREGS திட்டத்தின்மூலம் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை நிரந்தரமாக்கி, அவர்களுக்கு ஊதிய வரன்முறை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராம ஊராட்சிகளில் Tank operators பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவர்கள் நியமிக்கப்பட்டு பல ஆண்டுகளாகின்றன. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு நியமிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஒவ்வொரு Operator-ம் சுமார் 3 அல்லது 4 motor–களை இயக்கும் நிலையுள்ளது, இதனைக் கருத்தில்கொண்டு புதிய operator–களை நியமிக்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளைச் செய்ய ஓர் ஊராட்சிக்கு ரூபாய் 20 இலட்சம் வழங்கப்படுவதை, ரூ.50 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தங்களுடைய ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகளைப் பார்ப்பதற்கு செல்லும்போது, அவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட jeep பழுதடைந்து, நடுவழியில் repair ஆகி நின்றுவிடுகிறது என்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு இப்போது வந்துள்ள Airbags வசதியுடன்கூடிய புதிய jeep வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பெரிய ஊராட்சிகளுக்கும், சிறிய ஊராட்சிகளுக்கும் ஒதுக்கப்படும் மின் கட்டணத் தொகை சமமாக உள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு, மக்கள்தொகைக்கேற்பவும், அவர்களுடைய மின் தேவைக்கேற்பவும் நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 2001–2006 ஆம் ஆண்டைய காலகட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சியின் மின் கட்டணத்தைச் செலுத்த வழியில்லாமல் இருந்தபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, ஊராட்சித் தலைவர்கள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தனி நிதியை ஒதுக்கி வழங்கினார்கள் என்பதை இந்த அவையில் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மேலும், கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் Jal Jeevan திட்டம் மற்றும் பதினைந்தாவது நிதிக் குழுவின்மூலம், அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க புதிய pipeline போடப்படுகிறது. இதனால், தெருக்களெல்லாம் சேதமடைகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, அந்த estimate-ல் cement road போடவும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், உங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட மற்ற கோரிக்கைகளையெல்லாம் கொடுங்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தனியாக இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய அத்தனை கோரிக்கைகளையும் நான் பதிவு செய்துவிடுகிறேன்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பதிவு செய்துவிடுகிறேன். உங்களுடைய தந்தை திரு. திருவேங்கடம் அவர்கள் மணியடித்தவுடன் உட்கார்ந்துவிடுவார்கள். (சிரிப்பு)*

2023 மார்ச் 30]

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், குடிசை மாற்று வாரியம் அமைத்தார்கள்; மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் தமிழ்நாட்டை குடிசையில்லா மாநிலமாக்க அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளீர்கள். இதில் தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், முதலமைச்சரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்மூலம் கட்டும் வீடுகளுக்கு கடைக்கால், கிராவல் மண் நிரப்புவதில் பல சிரமங்கள் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு* BDO *அல்லது கிராம நிர்வாக அலுவலர் மூலமாக அனுமதி கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதும். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். கடைசி பக்கத்தை எடுங்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். கடைசி பக்கம் வந்துவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், நன்றி.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அனைத்து ஊராட்சிகளும் வளர்ச்சியடைய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஓர் உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்தினார். இடையில் இத்திட்டம் நிறுத்தப்பட்டது. மீண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து கிராம மக்கள் பயன்பெறும்விதமாக கருவறை முதல் கல்லறை வரை பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறீர்கள். கிராமச் சாலைகளை மேம்படுத்த முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயத்திற்குத் தனி நிதிநிலை அறிக்கை. எத்தனை முதல்வர்கள் வந்தார்கள், போனார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த 'விவசாயத்திற்கு இலவச மின்சாரம்' என்ற திட்டம்போல, இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது உண்டா? ஏன், நம்மை குறை சொல்பவர்கள்தான் இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி என எதுவாக இருந்தாலும் அதிகம் பயன்பெறுகின்றார்கள். இது கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம், எங்களுக்கு வேண்டாம்,*

நாங்கள் மின் கட்டணம் செலுத்துகிறோம், கடன் கட்டுகிறோம் என்று சொல்பவர்கள் யாராவது உண்டா என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மழைநீர் வீணாகாமல் சேகரிக்க பயன்பாட்டில் இல்லாத 1,333 ஆழ்துளைக் கிணறுகளை உறிஞ்சு குழாய்களாக 15 நாட்களில் மாற்றி, இதன்மூலம் நிலத்தடி நீர் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுகூட ஒரு மாதத்தில் 1,100 பண்ணைக் குட்டைகளை அமைத்தது உலக சாதனையாக அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சரவணன், போதும்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்துவிட்டது. கடைசி கோரிக்கை. தொகுதிக் கோரிக்கைகளைத் தனியாக வைத்திருக்கிறேன்.

செங்கம் வட்டத்தில் உள்ள எரையூர், புதுப்பாளையம் உள் வட்டத்தைப் பிரித்து காஞ்சியை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய உள் வட்டத்தை பிரித்துத் தர வேண்டும். ஏனென்றால், வருவாய் ஆய்வாளர்–RI–ஐ பார்க்க வேண்டுமென்றால், நம்முடைய தளபதி ஆட்சியிலுமா 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று நினைப்பதால், பொதுமக்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இதனைக் கருத்தில்கொண்டு, அதனைப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரித்துத் தர சொல்வதோடு கேட்டு, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–50

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்குமா, நடக்குமா, முடியுமா என்று கேலி பேசியவர்களுக்கு, கிடைக்கும், நடக்கும், முடியும் என ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகையை அண்ணாவின் பிறந்த தினத்தில் வழங்கவிருக்கும் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் படிக்க புதுமைப் பெண் திட்டம், கட்டணமில்லா பேருந்து வசதி, கொரோனா நிதி ரூ.4 ஆயிரம், பெண்களின் நலனுக்காக சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி, பெண்களின் நலனுக்காக, மகனாக, சகோதரனாக, தந்தையாக, ஏன் தாயாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களே! நீங்கள் பெண் உரிமைக் காவலர் அல்லவா! நீங்கள் சூரியனைப் போன்றவர், உங்களை யாரும் நெருங்க முடியாது. உங்கள் உடன்பிறப்புகளெல்லாம் நட்சத்திரம் போன்றவர்கள். அவர்களை கணக்கிட முடியாது என்று கூறிக்கொள்கிறேன்.

இமைக்கும் என் கண்கள் தளபதியைப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால், என் இதயம் தளபதியை எப்போதும் மறந்ததில்லை. மறந்தால் என் இதயம் துடிக்காது என்று கூறிக்கொள்கிறேன். உழைப்பை நேசி, உயர்வு தெரியும் என்பார்கள். உழைப்பால் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னிலை மாநிலமாக்கிய உங்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும்.

கலசப்பாக்கம் ஒன்றியத்தில் வட்டார கல்வி அலுவலகம் புதிதாக கட்டித் தர வேண்டும்.

புதுப்பாளையம் ஒன்றியம், புதுப்பாளையம் அங்கன்வாடி ஒன்றிய அலுவலகம் புதிதாக கட்டித் தர வேண்டும்.

ஜவ்வாது மலை ஒன்றியம், நம்மியம்பட்டில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மிருகண்டா நதி அணை பாசனக் கால்வாயை சீரமைத்துத் தர வேண்டும்.

எலத்தூர் மோட்டூரில் அமைந்துள்ள போக்குவரத்துப் பணிமனையை பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி ஊராட்சியில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

கோவிலூர், குப்பம், A.K. படவேடு போன்ற பெரிய கிராம ஊராட்சிகள் பிரிக்கப்பட வேண்டும்.

எலத்தூர் மோட்டூர் நட்சத்திர கோயில் மலை சுற்றும் பாதையை சீரமைத்துத் தர வேண்டும்.

பருவதமலையில் குடிநீர் வசதி, பாதிமலையில் நிற்கும் அந்த வசதியை மலை உச்சிக்குக் கொண்டு செல்ல வேண்டும். பருவதமலைக்குச் செல்லும் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும்.

கடலாடி ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் கட்டப்பட்டு சிதிலமடைந்துள்ள சமுதாயக் கூடத்தைச் சீரமைத்துத் தர வேண்டும்.

செய்யாற்றின் குறுக்கே கடலாடி ஊராட்சியில் தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

தாமரைப்பாக்கம் பகுதியில் தடுப்பணை கட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளதைச் செயல்படுத்த வேண்டும்.

புதுப்பாளையம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

புதுப்பாளையம் பேரூராட்சியில் உள்ள அம்மாகுளத்தை புனரமைத்துத் தர வேண்டும்.

ஆதமங்கலம் கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

புதுப்பாளையம் பேரூராட்சி, அம்மாகுளத்தின் கால்வாயைச் சீரமைத்து, கரையின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும்.

புதுப்பாளையம் பேரூராட்சி சாலைக்கு மேற்கில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும்.

புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், செய்யாற்றின் குறுக்கே ஓரவந்தவாடி பகுதியிலும், இறையூர் பகுதியிலும், காஞ்சி அருகிலும், படிஅக்ரஹாரம் அருகிலும் தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு 15 நிமிடங்கள் தந்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். என்னைப் பொறுத்தவரை, எனக்கு மாதாவாக, பிதாவாக, குருவாக வழிநடத்தும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகத்தின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து நாயகன் எங்கள் ஐயா, வணக்கத்திற்குரிய எடப்பாடியார் அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு, உரையாற்ற அனுமதியளித்த எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அன்பு அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கும் மற்றும் என்னை வழிநடத்தும் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இன்னும் உங்களுக்கு 6 நிமிடங்கள்தான் இருக்கின்றன.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *எனக்கு அனுமதித்த நேரத்தில் முழுமையாக என்னுடைய கருத்துகளை எடுத்துச்சொல்லவும், ஒருவேளை பதிலளிக்கக்கூடிய சூழல் வந்தால் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இறுதியிலோ அல்லது தங்களுடைய பதிலுரையிலோ விளக்கத்தினை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அதற்குத் தகுந்தபடி பேசினால் போதும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்களின் குறுக்கீடு இல்லாத அளவிற்கு நீங்களும் பேசி முடியுங்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும், நானும் நெல்லை மண்ணைச் சேர்ந்தவர்கள் என்கிற உறவோடு, உத்தரவாதத்தோடு வேண்டி விவாதத்தைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்ட இடமெல்லாம் வெற்றியைப் பெற்று, எடுத்த காரியம் யாவிலும் மேன்மையை அடைந்து, புரட்சித் தலைவர் மன்னாதி மன்னனின் ஆசியையும், தமிழர்களின் தனிப்பெரும் தெய்வம் அம்மா அவர்களின் அன்பையும், ஒருசேரப் பெற்றவர் எங்கள் ஐயா எடப்பாடியார்தான் என்பதற்கு நீதி தேவதையும், மக்களுமே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தமிழ்ச் சமூகத்திற்கு மாற்றத்தைத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயக்கனி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மட்டுமே. ஏழைகளின் நிரந்தர ஒளிவிளக்காய் திகழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே இதயக்கனி, தங்கத்தாரகை, தமிழர் குலச்சாமி அம்மா மட்டுமே. 7 கோடி தமிழர்களின் 100 கோடி நன்றிகளைப் பெற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒரே இதயக்கனி, சேலம் தந்த மாங்கனி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்று, எங்கள் ஐயா எடப்பாடியார் மட்டும்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது திருவடியை பணிந்து வணங்குகிறேன்.

புகழ்வாய்ந்த இந்தச் சட்டமன்றப் பேரவையில், அதுவும் மாபெரும் தலைவர்கள் அமர்ந்த, நடந்த, வாதம்-விவாதம் செய்த இந்தப் பேரவையில், பொறுப்புவாய்ந்த இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் உரையாற்ற வாய்ப்பு தந்து, என்னை நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்து அனுப்பிய கடையநல்லூர் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகளை இருகரம் கூப்பி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள் பேசுகையில், எங்கள் ஆட்சியில் அண்ணாவிற்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்தோம். அண்ணாவின் பெயரை கட்சிக்குப் பெயராக வைத்திருப்பவர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள்.

2023 மார்ச் 30] [திரு. செ. கிருஷ்ணமுரளி]

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற விதத்தில் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். அண்ணா அவர்களின் நூல்களை, புத்தகங்களையெல்லாம் அரசுடைமையாக்கி, ரூ.75 இலட்சம் நிதியை திருமதி ராணி அண்ணா அவர்களிடம் கொடுத்து, கௌரவித்து, அண்ணாவின் குடும்பம் நல்வாழ்வு பெறுவதற்கு உதவியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் கோரிக்கைகளை, நேரத்தின் அருமை கருதி ஒரு சிலவற்றை இங்கே பேசி, மற்ற கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் வழங்குகிறேன். அவற்றை பேரவைக் குறிப்பில் பதிவு செய்து தக்க நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் நகராட்சியில், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் ஒருசில பகுதிகளுக்குச் செல்கிறது, ஒருசில பகுதிகளுக்குச் செல்லாமல் இருக்கிறது. அதை முறைப்படுத்தி கடையநல்லூர் நகராட்சி முழுமைக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் செல்லும்வகையில் மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதன்பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 10 கோரிக்கைகளில், எனது தொகுதிக்குட்பட்ட 3 பேரூராட்சிகளான, பண்பொழி, வடகரை, அச்சன்புதூர் பேரூராட்சிகளுக்கு அடவிநயினார் அணைக்கட்டு பகுதிகளிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டம்மூலமாக 24 மணி நேரமும் குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாக உருவாக்கப்பட்ட தென்காசி மாவட்டத்தில், செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள சுற்றுலா விருந்தினர் மாளிகை பழுதடைந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது. இச்சுற்றுலா மாளிகையை இடித்துவிட்டு புதியதாக

[திரு. செ. கிருஷ்ணமுரளி] [2023 மார்ச் 30

சுற்றுலா விருந்தினர் மாளிகையை அமைப்பதற்கு கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. அதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்து சுற்றுலா மாளிகை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி, கேரள எல்லையையொட்டியுள்ள தொகுதியாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம்கூட, ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், அதுகுறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். கனரக வாகனங்கள் மூலமாக கனிமங்களை அதிகளவில் இந்தப் பாதையில் கேரளாவிற்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதில், ஒரு நாளைக்கு 2,000 வாகனங்களிலிருந்து 3,000 வாகனங்கள் வரை 5 யூனிட்டிலிருந்து 10 யூனிட் வரை ஒரு வண்டியில் கொண்டு போகிறார்கள். அதனால், கிராமச் சாலைகளில் அந்த வண்டிகள் போகும்போது சாலைக்கு அடியில் போடப்பட்டுள்ள குடிநீர் பைப்லைன் போன்றவை சேதமடைந்துவிடுகின்றன. செங்கோட்டை நகராட்சி, அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு வரக்கூடிய 19 இலட்சம் லிட்டர் தண்ணீர் அளவு குறைந்து 9, 10 இலட்சம் லிட்டர் அளவிற்குத்தான் தண்ணீர் வருகிறது. கோடைக்காலங்களில் தண்ணீர் வழங்குவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அதனால், அந்த கனரக வாகனங்கள் முறையாகச் செல்கிறதா, ஒரு நாளைக்கு 3,000 வண்டி என்றால், மாதத்திற்கு 1,500 யூனிட் என்றால், மாதத்திற்கு சுமார் 4 இலட்சம் யூனிட் கேரளாவிற்குப் போகின்றன. அவை முறையாகப் போகிறதா என்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் கொள்ள வேண்டும். ஒரு மாதத்திற்கு 4 இலட்சம் யூனிட் என்றால், கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு கல் குவாரிதான் இருக்கிறது. ஒரு சின்ன குவாரியில், ஒரு நாளைக்கு 25–லிருந்து 30 யூனிட் கற்கள்தான் எடுக்க முடியும், கனிமவளம் எல்லா பகுதிகளுக்கும் சென்றுவிடுவதால், கடையநல்லூர் தொகுதியின் கனிமவளத் தேவைக்கு மிகவும் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் சிறப்புக் கவனம் செலுத்தி, முறையாகச் செல்கிறதா, இல்லையா என்பதை கணக்குப் பார்த்து, முறையற்றுப் போனால், அதனை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி ஏற்கெனவே ஒரு புகார் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வந்தது. மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார். அந்த மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேற்றுகூட என்னிடம் சொன்னார். வாகனங்கள் செல்வதால் சாலை மிகவும் பாதிக்கப்படுகிறது, பழுதடைகிறது என்று உறுப்பினர் சொன்னார். ஆக, எந்தக் காரணம் கொண்டும், இதுபோன்ற கனரக, பெரிய இராட்சஸ அளவிலான கனரக வாகனங்கள் போகக் கூடாது என்பதுதான் நாங்கள் போட்டிருக்கின்ற சட்டம். எங்களையும் மீறி அதுபோன்று வாகனங்கள் செல்கின்றன என்று சொன்னால், அங்கே காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவல் துறை அதிகாரிகளிடம் தெரிவித்தால், காவல் துறை ஸ்ட்ரிக்ட்டாக நடவடிக்கை எடுப்பார்கள். இதுபோன்ற வண்டிகளை பயன்படுத்தக் கூடாது என்று நாங்களும் ஸ்ட்ரிக்ட்டாக சொல்லியிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 முதல் 2021 வரையிலான பத்தாண்டுகளில் நகராட்சி நிர்வாகத் துறை தனது செயல்பாட்டால், நிர்வாகத்தால், உட்கட்டமைப்பால், மாநகராட்சிகளின் செயல்பாடுகளால் பெற்ற வெற்றிகளை இந்த நாடு நன்கு அறியும். அதற்கு சாட்சி, பல்வேறு விருதுகளை இந்திய அளவிலும், உலக அளவிலும் கடந்த காலங்களில் துறை பெற்றது. இதற்கு முத்தாய்ப்பாக 2011 முதல் 2021 வரை சுமார் பத்தாண்டுக் காலத்தில் இத்துறையின் சீர்மிகு செயல்பாட்டால் பல விருதுகளைப் பெற்றிருந்தாலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில்* Global Water *மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தண்ணீர் மறுபயன்பாட்டு சங்கத்தால் வழங்கப்பட்ட விருது, 2015–ல்* UK*–வினால் வழங்கப்பட்ட விருது உட்பட, ஊரக வளர்ச்சித் துறை 122 விருதுகளும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்*

வழங்கல் துறை 21 விருதுகளும் என மொத்தம், 143 விருதுகளைப் பெற்று சாதனை படைத்தது கடந்தகால அம்மா அவர்களின் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மிகப்பெரும் பெருமையை தமிழகத்திற்குத் தேடித் தந்தது என்பதை நான் இங்கே நினைவுப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 280–ல், சிங்காரச் சென்னை 2.0 திட்டத்திற்காக 2021–2022 ஆம் ஆண்டு 500 கோடி ரூபாயும், 2022–2023 ஆம் ஆண்டு 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்காக இந்த ஆண்டு எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் 10 நிமிடங்கள் முடிந்திருக்கிறது. நன்றி சொல்லி, அமருங்கள்.

திரு. செ. கிருஷ்ணமுரளி: சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் 37.58 கோடி ரூபாய் 59 பேருந்து சாலைகள் திட்டத்திற்கும், 1.29 கோடி ரூபாய் செயற்கை நீரூற்றுத் திட்டத்திற்கும் அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், பூங்கா மேம்பாட்டுத் திட்டம், விளையாட்டுத் திடல் மேம்பாட்டுப் பணி, வண்ண விளக்குகள் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் எண்ணிக்கை மதிப்பு, தற்போதைய நிலை ஆகியவை விரிவாகக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், தற்போதைய நிலை என்ன என்பது குறிப்பிடப்படவில்லை. இனிவரும் காலங்களில் திட்டங்களின் தற்போதைய நிலையைக் குறிப்பிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்; உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகளை என்னிடம் தந்து விடுங்கள்.

2023 மார்ச் 30]

திரு. செ. கிருஷ்ணமுரளி: தொகுதி சம்பந்தமானவற்றை எல்லாம் கொடுத்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்போது நன்றி சொல்லிவிடுங்கள்.

திரு. செ. கிருஷ்ணமுரளி: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. செ. கிருஷ்ணமுரளி: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு முறை வழங்கும் காலத்தினை நீட்டிக்கவேண்டுமென்று, பல்வேறு மாநிலங்கள், மத்திய அரசிற்கு கோரிக்கை வைத்ததாகவும், அதனை மத்திய அரசு ஏற்கவில்லை என்றும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார தேக்க நிலையால், பாதிக்கப்பட்ட மாநிலங்களில், வருவாய் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பாததுதான் என்று சென்ற ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இழப்பீட்டுக் காலம் மேலும், நீட்டிக்கப்பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. அதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதேசமயம் கொரோனாவால் பாதிக்கப்பட்டு, பொருளாதாரம் மீண்டும் மேம்படும் வரையில் சொத்து வரி அதிகரிக்கப்படமாட்டாது என்று தி.மு.க–வின் தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தி.மு.க. அரசின் கூற்றின்படியே கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம், தேக்கநிலையில் இருந்து இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாத நிலையில், சொத்து வரியை தி.மு.க. அரசு அதிகரித்தது ஏன் என்று தெரியவில்லை. மத்திய அரசிடம் இழப்பீடு சம்பந்தமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே!

திரு. செ. கிருஷ்ணமுரளி: கோரிக்கை வைக்கும்போது கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை என்று கூறுவதும், மக்கள்மீது சொத்து வரி விதிக்கும்போது கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாகக் கூறுவதும் அரசின் இரட்டை நிலையைக் காட்டுகிறது. எனவே, கடந்த

ஆண்டு விதிக்கப்பட்ட சொத்து வரி உயர்வினை திரும்பப்பெற வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். மாண்புமிகு கொறடா அவர்கள் ஒரு நிமிடம் கேட்டிருக்கிறார்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள். 2-03-மணிக்கு முடித்துவிடுங்கள்.

திரு. செ. கிருஷ்ணமுரளி: ஊரக வளர்ச்சித் துறை. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு இந்த ஆண்டு 22,562 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு எங்கள் எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் சொன்ன மாதிரி, சென்ற ஆண்டைக் காட்டிலும், 4,085 கோடி ரூபாய் குறைவு. இதற்குக் காரணமாக கூறப்படுவது, ஜல் ஜீவன் திட்டத்திற்காக, ஊரக வளர்ச்சித் துறைக்கு சென்ற ஆண்டு மூன்று ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அது, இந்த ஆண்டு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது என்பதுதான். அப்படியே பார்த்தாலும் 1,085 கோடி ரூபாய் குறைவாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜல் ஜீவன் திட்டத்திற்காக இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து, இரண்டு துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெளிவுபடுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 100 நாள் வேலைத் திட்டம் 150 நாளாக உயர்த்தப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலும், நிதிநிலை அறிக்கையிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த வாக்குறுதியை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, அந்தக் கடைசி பக்கத்தை அவருக்கு எடுத்துக்கொடுங்கள்.

2023 மார்ச் 30]

திரு. செ. கிருஷ்ணமுரளி: *விதி எண் 110–ன்கீழ் 24–3–2020 அன்று ஐயா எடப்பாடியார் அவர்கள், கொரோனா பெருந்தொற்று காலத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு இரண்டு நாள் சிறப்பு ஊதியமாக ரூ.458/– வீதம் 123.10 கோடி ரூபாய் வழங்கி, தொழிலாளர்களின் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் வளர வழி வகுத்தார் என்பதை இப்பேரவையில் பெருமையுடன் பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். நாம் திருநெல்வேலி மண் என்றால், சொன்னதைக் கேட்டுக்கொள்வீர்கள். உடனே உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சியை நல்லாட்சியாக மாற்றி விருதுகளைப்பெற்ற அரசு, ஐயா எடப்பாடியார் அவர்களின் அரசு; தங்கு தடையில்லா மின்சாரம் தந்து, மின்மிகை மாநிலமாக தமிழகத்தை மாற்றிய அரசு ஐயா எடப்பாடியார் அரசு; ஆவின் பால் தங்குதடையில்லாமல் கிடைத்ததோடு, இயந்திரக் கோளாறு இல்லாமல் இயங்கி மக்கள் மனதில் பால் வார்த்த அரசு ஐயா எடப்பாடியார் அவர்களின் அரசு. ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** வேண்டாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ** அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுகிறேன்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *அரசுப் பணியில் வெளிப்படையான நிர்வாகத்தை தந்த நேர்த்தியான அரசு ஐயா எடப்பாடியார் அவர்கள் அரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளின் மொத்த உருவமாய், சரித்திரத்தின் மறு பக்கமாய்த் திகழ்ந்த அரசு, சாமானியர் வழிநடத்திய அரசு. மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு என்பதை இந்த நாடும், நாட்டு மக்களும், நன்கு அறிவார்கள்.*

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். நன்றி, நன்றி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் எங்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தலைமையில் 40–ஐயும் வென்று (மேசையைத் தட்டும் ஒலி) 2026 ஆம் ஆண்டு. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். (குறுக்கீடு) பதிலுரை. (குறுக்கீடு) வாய்ப்பில்லை, போதும். நிறைய பதிவு செய்துவிட்டீர்கள்.

திரு. செ. கிருஷ்ணமுரளி: என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

செங்கோட்டை நகராட்சி, புதூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குண்டாறு நீர்த்தேக்கத்திலிருந்து குழாய் அமைத்து, கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் 24 மணி நேரமும் தடையின்றி குடிநீர் வசதி கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தனியார்மயமாக்கலால், குப்பைகளைச் சேமித்துப் பிரித்து எடுக்கும் பணியை மட்டும் தூய்மைப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். அதனால் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளைத் தூய்மையாக வைப்பதற்கு நிரந்தரமாக தூய்மைப் பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் கொடிய வன விலங்குகளிடமிருந்து விவசாயிகள் மற்றும் குடியிருப்புப் பகுதி மக்களைப் பாதுகாத்திட மின் வேலிகள் அமைத்துத் தர வேண்டும்.

கிராமச் சாலைகள், அதி கனரக வாகனங்களை இயக்கக்கூடிய அளவிற்கு உறுதியான சாலைகளாக இல்லை. கிராமச் சாலைகள் மிகவும் குறுகிய சாலைகளாக இருப்பதால் அதிக கனரக வாகனங்கள் சாலையில் வரும்பொழுது பொதுமக்கள் சாலையில் செல்லவே அச்சப்படுகின்றனர். 12 வீல் மற்றும் 14 வீல் கொண்ட வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட எடையைவிட அதிக எடையுடன் வாகனங்கள் கிராமச் சாலையில் செல்வதால், சாலைகள் சேதம் அடைவதோடு, சாலையில் உள்ள குழாய், பாலங்களும் சேதமடைகின்றன. சாலையில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்களும் சேதமடைந்து, பொதுமக்கள் மிகவும் இன்னல்படுகின்றனர். அச்சாலைகள் பாலங்கள் மற்றும் குடிநீர்க்

2023 மார்ச் 30] [திரு. செ. கிருஷ்ணமுரளி]

குழாய்களைச் சீர் செய்ய குவாரிகளிலிருந்து கிடைக்கின்ற வருவாயைவிட அதிக அளவு அதை சீர் செய்ய, அரசு செலவிட வேண்டி உள்ளது. ஆகவே, கிராமச் சாலைகளில் அதிக கனரக வாகனங்கள் செல்வதைத் தடை செய்ய வேண்டும். இரவு நேரத்தில் கனரக வாகனங்கள் கிராமச் சாலைகளில் செல்வதால் பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. ஆகவே, இரவு நேரத்தில் வாகனங்கள் இயக்கப்படுவதை உடனே தடை செய்ய வேண்டும்.

செங்கோட்டை நகராட்சிக்கான குடிநீர்த் திட்டம் 20 ஆண்டுக் காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. அந்தக் குடிநீர்த் திட்டம் தாமிரபரணி ஆற்றில் இருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலையில் குழாய்மூலம் கொண்டு வரப்படுகிறது. தற்போது அந்த சாலையில் அதிக எடையுடன் அதிக அளவில் வாகனங்கள் செல்வதால் அந்த அழுத்தம் காரணமாக ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் ஆங்காங்கே செல்வதால், குடிநீர் மாசுபட்டு, அக்குடிநீர்தான் தற்போது செங்கோட்டை நகராட்சி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அரசு உடனடியாக உடைப்புகளைச் சீர் செய்து, சாலையில் அதிக எடையுடன் வாகனங்கள் செல்வதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் உள்ள குவாரிகளில் உள்ள கனிம வளங்கள் செங்கோட்டை நகராட்சி வழியாக இரவு நேரத்திலும் அசுர வேகத்தில் செல்வதால், பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. வேகத்தடை உள்ள இடங்களில் கனரக வாகனங்கள் செல்லும்போது அதிர்வினால் வீடுகளில் உள்ள ஜன்னல், கதவு போன்றவை குலுங்கி பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறாக உள்ளது. ஆகவே, இரவு நேரத்தில் செங்கோட்டை நகராட்சி வழியாக கனரக வாகனங்கள் இயங்குவதைத் தடை செய்ய வேண்டும்.

கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சியில் புதிதாக விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் வாறுகால், தார்ச்சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் நகரத்தில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். இங்குள்ள அரசு

மருத்துவமனை சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்ட மருத்துவமனை ஆகும். தற்போது கடையநல்லூரைச் சுற்றியுள்ள 10-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கடையநல்லூருக்குத்தான் மருத்துவ வசதிக்குச் செல்ல வேண்டும். தற்போது உள்ள மருத்துவமனையில் போதுமான இடவசதி இல்லாததால் மிகவும் நெருக்கடியான நிலை உள்ளது. எனவே, நகராட்சி அருகில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தில் மருத்துவமனையை விரிவாக்கம் செய்து உள் கட்டமைப்பு செய்து தர வேண்டும்.

'ஜல் ஜீவன்' குடிநீர்த் திட்டத்தின்கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதற்கு ஏற்ப அந்தந்தப் பகுதிகளில் கூடுதல் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, உள்ளூர் நீர் ஆதாரத்தை விரிவுபடுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

சாம்பவர்வடகரை, ஆய்க்குடி பேரூராட்சிகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பயன்பெற அப்பகுதியில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான பட்டியல் தொகை இதுவரை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதை விரைந்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரிய ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் நகராட்சி, தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சிறிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. தற்போது பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் உள்ள காலி இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கருப்பாநதி, அடவிநயினார், குண்டாறு ஆகிய அணைக்கட்டுகளைத் தூர்வாரி, அதன் மதகுகளைச் சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2023 மார்ச் 30] [திரு. செ. கிருஷ்ணமுரளி]

திரிகூடாபுரம் ஊராட்சியில் உள்ள பெரியநாயகம் திருக்கோயில் அருகில் உள்ள ஆற்றில் பாலம் அமைப்பதற்கு ரூ.5 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து, பல மாதங்கள் ஆகின்றது. அதை விரைந்து முடிக்க வேண்டுகிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சியில் உள்ள கழிவு குப்பைகளை அகற்றி, ஒன்றியத்திற்குட்பட்ட ஒரு பகுதியில் சேர்த்து, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளைத் தரம் பிரிக்க இயந்திரங்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 40 வருட காலமாக பிரிக்காமல் இருந்து வருகிற பெரிய ஊராட்சிகளை, பொதுமக்கள் வசதிக்கேற்ப பிரித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.3 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கோட்டை நகராட்சியில் மாங்கனிகளைப் பதப்படுத்தும் குளிரூட்டும் கிட்டங்கி அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தாலுகாவில் வசிக்கும் பொது மக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அலுவலர்கள் பயன்பெறும் வகையில் சார்நிலைக் கருவூலம் அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கு அதிகளவில் சுய உதவிக் குழுக்கள்மூலம் மானியக் கடன் மற்றும் வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதி மக்கள் வெளிநாடு செல்வதற்கோ, வருவதற்கோ ஏற்படும் இடர்களைத் தவிர்க்க கடையநல்லூரில் தகுந்த ஆலோசனை மையம் அமைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

கடையநல்லூர் நகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் சித்த மருத்துவக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் அரசுப் பொறியியல் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போக்குவரத்து அதிகம் உள்ள மெயின் ரோடு பகுதிகளில் ரவுண்டானா அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தனி தாலுகாவாக அறிவிக்கப்பட்டு, 8 வருட காலம் ஆகிறது. இப்பகுதியில் வசிக்கின்ற மக்கள் நீதிமன்ற வழக்குகளுக்காக 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள தென்காசிக்குச் செல்ல வேண்டி உள்ளது. எனவே, இப்பகுதி மற்றும் சுற்றுப்புற மக்களுக்கு கடையநல்லூர் நகராட்சிப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் மட்டுமல்லாமல், அகிலமே உற்றுநோக்குவது தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியை. 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற தலைசிறந்த தத்துவத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்ற, நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வழியிலும், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணாவின் வழியிலும், நவீன தமிழகத்தின் சிற்பி, எங்கள் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் வழியிலும், (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பின் உருவமாய் இருக்கின்ற, எங்களின் முதல்வர், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கக்கூடிய, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் தலைவர், தளபதியார் அவர்களுக்கு முதல் வணக்கம்.

இந்த மாமன்றத்தில், எனக்குப் பின்னால் இங்கே உரையாற்றவிருக்கின்ற நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான எனது அருமைத் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாமன்றத்தில் மீண்டும் நான் சட்டமன்ற உறுப்பினராக, ஒன்றியத்தின் பெருந்தலைவராக, மூன்றாவது முறையாக அமைச்சராகப் பொறுப்பை ஏற்பதற்குக் காரணமாக இருந்த எங்களின் உயிரினும் மேலான தலைவர் தளபதியார் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சித் துறை தொடர்பாக ஒரு சில விளக்கங்களை நான் இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், கிராமச் சாலைகள் அமைக்கப்படுகின்றன—ஒரு காலத்தில், கிராமங்களுக்குச் சாலைகளை அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவதில் பெருமையடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கிராமப்புறச் சாலைத் திட்டத்தை உருவாக்கி, கிராமங்களுக்கெல்லாம் சாலைகளை அமைத்து, பள்ளிகளில் படிப்பதற்கும், விவசாயிகள் அச்சாலைகளைப் பயன்படுத்துவதற்கும், அதுமட்டுமல்லாமல், எல்லாத் தரப்பு மக்களும் பயன்படுத்துவதற்கும், பேருந்து வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இந்தச் சிறப்பான திட்டத்தை, மாண்புமிகு முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை இன்றும் மனதில் வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே முதலமைச்சரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.4,000 கோடி செலவில் 10,000 கிலோ மீட்டர் சாலைகள் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்து, வரலாற்றில் முத்திரை பதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சாலைகள் அமைக்கப்படுவதன் நோக்கங்களாகப் பல இருக்கின்றன என்றாலும், அவற்றைப் பற்றி நான் விளக்கிச் சொல்ல விரும்பவில்லை. காரணம், இந்தச் சாலைகள் அமைக்கப்படுவதன் நோக்கமே இச்சாலைகளை, தரமான சாலைகளாக, அதுவும் நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கு இணையான சாலைகளாக மேம்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும் ஆகும்.

பிற்பகல் 2–10

அதுமட்டுமல்லாமல், இந்தச் சாலைகள் எல்லாம் மறுசீரமைக்கப்படுவதில், குறிப்பாக கடந்த காலங்களிலெல்லாம் NABARD ஆக இருந்தாலும் சரி, PMGSY பிரதம மந்திரி கிராம

சாலைத் திட்டமாக இருந்தாலும் சரி, ஒரு கிலோ மீட்டருக்கு, 2 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள சாலைகள்தான் அத்திட்டங்களில் எடுப்பது வழக்கமாக இருந்தது. நகரங்களையும், நெடுஞ்சாலைகளையும், குக்கிராமங்களையும் இணைப்பதற்கு ஒரு கிலோ மீட்டருக்குக் கீழே உள்ள சாலைகளையும் இணைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, உயர்ந்த கொள்கையோடு, உருவாக்கப்பட்ட திட்டம்தான், இந்தத் திட்டம். இது ரூ.4,000 கோடியில் 10,000 கி.மீ. தூரம்வரை போடப்படுகின்ற திட்டமாகும். தமிழ்நாட்டில் 12,525 பஞ்சாயத்துகளில் சுமார் 79,000 குக்கிராமங்கள் இருக்கின்றன. இந்த 79,000 குக்கிராமங்களை இணைப்பதற்காக, அங்கே தரமான சாலைகளை உருவாக்குவதற்காக, 4,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்தவர், மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் அந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம்.

அதுமட்டுமல்லாமல், கடந்த 2021–2022 மற்றும் 2022–2023 காலகட்டங்களில், நமது துறையின் மூலமாக பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில், 2021–2022–ல், குறிப்பாக 113 பாலங்கள், ஏறத்தாழ 333 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 80 பாலங்கள் 262 கோடி ரூபாய் மதிப்பில், இன்றைக்கு கட்டப்பட்டு வருகின்றன. பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலமாக, ஏறத்தாழ 786 கோடி ரூபாய் மதிப்பில் 1,221 கி.மீ. சாலைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 248 கோடி ரூபாய் மதிப்பில் 55 பாலப் பணிகள் எடுக்கப்பட்டு, இன்றைக்கு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த அரசு, சாலைகளை அமைப்பதில், இதுபோன்ற எண்ணற்ற ஏராளமான திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாக இருக்கிறது. காரணம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நோக்கம், சீர்குலைந்த சாலைகள் தரமாக உயர்த்தப்பட வேண்டும், இந்தச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான். இந்தச் சாலைகளின் மொத்த நீளம் 1,55,000 கி.மீ. அவற்றில், தார்ச் சாலையின் அளவு மட்டும் ஏறத்தாழ 1,03,000 அல்லது 1,06,000 கி.மீ. அளவில் உள்ளது. இதன் மதிப்பு குறைந்தபட்சம் ரூ.55,000 கோடி ஆகும். இந்த 55,000 கோடி ரூபாய் மதிப்பிலான அரசின் சொத்துகள், சேதமடையாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, மிகப் பெரிய உயர்ந்த நோக்கத்தோடு, இன்றைக்கு இந்தத் திட்டத்தை நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த அவையில் முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள், சாலைகள் சம்பந்தமாகவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரக வளர்ச்சித் துறை மூலமாகச் செய்த பணிகள் தொடர்பாகவும், அவருடைய அரசில் செய்யப்பட்ட சாதனைகள் சிலவற்றை சொல்லியிருக்கிறார். நான் அதற்குப் பின்னர் வருகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II, தற்போது தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஏற்கெனவே, கடந்த காலத்தில் இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், ஒரு கிராமம் அனைத்து வசதிகளையும் பெற வேண்டும்; ஒரு கிராமம், சாலை வசதியாக இருந்தாலும், சாக்கடை வசதியாக இருந்தாலும், நல்ல சாலை, நல்ல குடிநீர், பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் ஒன்றுகூட விடாமல் அனைத்து வசதிகளையும் பெற வேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. 1996–2001 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது இத்திட்டம். அதற்கு பின்னர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்தபோது, இத்திட்டத்தில் அதிக அளவிலான பணிகளைச் செய்து பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அவர்கள் செய்திருக்கின்ற பணிகள் அனைத்தும் மிகச் சிறப்பான பாராட்டுகளைப் பெற்றுள்ளது. நான் அவற்றைப் படிப்பதற்கு நேரமில்லை.

பிற்பகல் 2–15

இருந்தாலும், இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 2011 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், பெயர் மாற்றியது நீங்கள்தான், நாங்கள் பெயரை மாற்றவில்லை. தாய் திட்டம் என்று நீங்கள்தான் பெயர் மாற்றினீர்கள். அண்ணாவின் பெயரால் கட்சி வைத்திருப்பவர்கள், அண்ணாவை மறந்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பெயர் மாற்றம் செய்தவர்கள் நீங்கள்தான். ஆக, இன்றைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, நம்முடைய கிராமங்களுக்கு எல்லா வசதிகளையும் கொண்டு வரவேண்டுமென்கிற நோக்கத்துடன் அந்தத் திட்டத்தை அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II என்று எங்களுடைய தலைவரை,

எங்களுடைய முன்னாள் முதல்வரை, முத்தமிழறிஞரை மறக்காமல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை திரும்பவும் கொண்டு வந்துவிட்டார்கள்.

கிராமங்கள் வளர்ச்சியடைய வேண்டும். கிராமத்தின் வளர்ச்சிதான் நாட்டினுடைய முதுகெலும்பு. விவசாயிகள் எப்படி இந்த நாட்டினுடைய முதுகெலும்போ, அதுபோல கிராமங்களின் வளர்ச்சிதான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு. அதற்காகத்தான் விட்டுப்போன பணிகள் அத்தனையையும் செய்வதற்காக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு, முதல் ஆண்டிலேயே 1,455 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். 2022–2023 ஆம் ஆண்டிற்கு 1,155 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். இந்த வருடம் 1,148 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்நிலைகள், குட்டைகள், தடுப்பணைகள் அதுமட்டுமல்லாமல், road, paver block, cement road, குடிதண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி போன்ற அத்துணை வசதிகளையும் செய்வதற்கு இதிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இதில் பார்த்தோமென்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்தபொழுது, தமிழ்நாட்டில் எல்லா கிராமங்களிலும் நூலகங்கள் வர வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதெல்லாம் அப்படியே போய்விட்டது. அவை பராமரிப்பு இல்லாமல், புத்தகங்கள் இல்லாமல், அங்கே அமர்ந்து படிப்பதற்குக்கூட chair, table இல்லாமல், எதுவுமே இல்லாமல் வெள்ளைகூட அடிக்காமல் மூடி வைத்துவிட்டார்கள். அதை மீண்டும் புதுப்பிப்பதற்காக இன்றைக்கு அந்த திட்டத்தின் மூலமாக பல கோடி ரூபாய் ஒதுக்கி அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்று நம்முடைய அரசு பல திட்டங்களை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியாக, அவருடைய சிந்தனையிலே உதித்த திட்டம், மிக முக்கியமான திட்டம், குழந்தைகள் நேய பள்ளி—அதற்கு உட்கட்டமைப்பு உருவாக்குவது, அதை மேம்படுத்துவது. குழந்தைகள் நேய பள்ளி–child friendly school. அவர்கள் படிக்கக்கூடிய பள்ளிகளுக்கு infrastructure development–ஐ உருவாக்கி, 823 கோடி ரூபாய் செலவிலே நல்ல சுகாதாரமான, காற்றோட்டமுள்ள பெரிய verandah, உயரமான ceiling, காற்றோட்டத்திற்குப் பெரிய ஜன்னல்கள் வைக்கப்பட்டு, கல்லூரியைப் போல அந்தப் பள்ளிகள் அமைய வேண்டுமென்று

விரும்பி, இன்றைக்கு 5,483 குழந்தைகள் நேய பள்ளிகளுக்கு 823 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அந்தப் பள்ளிகளில் பழைய கட்டடங்களைச் சீரமைப்பதற்காக, ஓர் ஆண்டிற்கு சராசரியாக 2,500 ஊராட்சிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளைப் பராமரிப்பதற்காகவும், சீரமைப்பதற்காகவும், குடிதண்ணீர், கழிப்பறை வசதி, cycle stand ஆகியவற்றை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும், ஏறத்தாழ 300 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி, இந்தத் திட்டத்திற்காக வழங்கியிருப்பது அவருடைய தொலைநோக்குப் பார்வையைக் காட்டுகிறது. இதெல்லாம் எதற்காக? கொரோனா காலத்தில் பள்ளிகளையெல்லாம் மூடிவிட்டார்கள். பள்ளிகளெல்லாம் மிகவும் சீர்குலைந்தன. பள்ளியைப் பற்றி யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. மிக அதிகமான அளவிற்கு அனைத்துப் பள்ளிகளும் பழுதடைந்தன. அதனால்தான், இன்றைக்குப் பள்ளிகளைச் சீரமைக்கின்ற வகையிலே பணிகள் செய்யப்படுகின்றன.

சில மாமன்ற உறுப்பினர்கள் இடிக்கப்பட்ட பள்ளிகளைக் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். பதினோராராயிரத்து சொச்சம் பள்ளிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 5,500 வகுப்பறைகளை பணிகள் செய்ய எடுத்துள்ளோம். வருகிற ஆண்டிலும் நிச்சயமாக அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும். முழுமையாகச் சேதமடைந்த பள்ளிகள் இடிக்கப்பட்டுவிட்டன. மாணவர்களுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடுதான் பள்ளிகள் இடிக்கப்பட்டன. வேறு எந்தக் காரணத்திற்காகவும் இல்லை. பள்ளிகளை இடித்தார்கள், கட்டாமல் விட்டுவிட்டார்களா என்ன? இல்லை, நாங்கள் இப்போது கட்டிக் கொண்டிருக்கிறோம். அடுத்து, இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, அத்தனையையும் கட்டி முடிப்பதற்கு, நிச்சயமாக அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 2–20

இதுபோக, பெரியார் சமத்துவபுரம். இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், வைக்கம் வீரர் பெரியாருக்காக, அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே நீண்டதொரு விளக்கத்தை இந்த அவையிலே தந்தார்கள். எல்லோரும் பாராட்டினார்கள்.

குறிப்பாக, தந்தை பெரியார் அவர்களின் பெயரில், எல்லா சமூக மக்களும் ஒரே இடத்தில் வசிக்க வேண்டுமென்பதற்காக, வீடுகள் கட்டப்பட்டு, பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கப்பட்டது. ஆனால், கடந்தகால ஆட்சியில் அது கிடப்பில் போடப்பட்டது. அதற்கென்ன காரணம் என்றால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அத்திட்டம் துவங்கப்பட்டதுதான். வீடுகளுக்கு வெள்ளை கூட அடிக்கப்படாமல் உள்ளது. தற்போது, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 149 சமத்துவபுரங்களுக்கு, கிட்டத்தட்ட 190 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் தற்போது முடிவடைந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, 88 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் நிலுவையில் இருந்தன. அவற்றிற்கும் 67 கோடி ரூபாய் நிதியொதுக்கி, இந்த ஆண்டு, தொடர்ச்சியாக அவை சீரமைக்கப்பட்டு வருகின்றன.

முதன்முதலில் 1970 ஆம் ஆண்டு ஆதி திராவிட மக்களுக்காக கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்தத் திட்டம்தான் இன்று பல வடிவங்களாக மாறியுள்ளது. பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் மொத்தமே 2,82,000 வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், நமது திராவிட முன்னேற்றக் கழக அரசில் 2021-2022, 2022-2023 ஆகிய இரண்டே ஆண்டுக்காலத்தில் சுமார் 2,16,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் மைக் பக்கம் செல்லாமல், தூரமாக நின்று பேசவும்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: குறிப்பாக, பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/-ல் மத்திய அரசு, 60 சதவிகிதம் வழங்க வேண்டும். மாநில அரசு 40 சதவிகிதம் வழங்க வேண்டும். ஆனால், இன்றைக்கு அந்த 1,20,000/- ரூபாயில் வீடு கட்ட முடியவில்லை என்பதால், கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக 50,000/- ரூபாயை உயர்த்தி வழங்கினார்கள். அப்படியும் அது முழுமையாக நிறைவேறவில்லை. அதற்குப் பின்னர் 70,000/- ரூபாய் உயர்த்தப்பட்டு, ஆக மொத்தம் 1,20,000/- ரூபாயை மாநில அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இன்றைக்கு பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் மாநில அரசின் பங்கு 1,72,000/- ரூபாய், மத்திய அரசின் பங்கு சுமார் 1,05,000/- ரூபாயாக இருக்கிறது. அதாவது, 62 சதவிகிதம் மாநில அரசு கொடுக்கிறது,

மத்திய அரசு 38 சதவிகிதம்தான் வீடு கட்டுவதற்காக நிதியுதவி வழங்குகிறது. இனிவரும் காலங்களில், மத்திய அரசு எவ்வளவு கொடுத்தது, மாநில அரசு எவ்வளவு கொடுத்தது என்பதை அங்கிருக்கக்கூடிய வீடுகளில் பதிவு செய்ய இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் இது ஒரு கட்டாயம்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அயலகத் தமிழர்களுக்காக, இந்தத் துறையின்மூலமாக ஏறத்தாழ 3,500 வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அதேபோல, மீனவர்களுக்காக 4,000 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக, இருளர்களுக்கு 1,440 குடியிருப்புகளுக்கு மேலாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி வீடு கட்டும் திட்டத்தின்கீழ், நம்முடைய அரசு மிகச் சிறப்பாகப் பல பணிகளை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் இன்னும் 2,85,000 வீடுகள் நிலுவையிலிருக்கின்றன. அதில் 85,000 வீடுகளுக்கு பட்டாவே இன்னும் கிடைக்கவில்லை.

பிற்பகல் 2–25

மத்திய அரசினுடைய Socio Economic Caste Census 2011 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பின்படி எடுத்த அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்குத்தான் அந்தத் திட்டத்தின்படி வீடுகள் கொடுக்க முடியும். அப்படி அந்தத் திட்டத்தின்படி கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு பட்டாவே இல்லை. ஊரக வளர்ச்சித் துறை எடுத்த முயற்சிகள் காரணமாக, பல கூட்டங்களை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அவர் துறையில் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள் பட்டா வழங்குவதற்காக நடத்தி, இதுவரைக்கும் ஏறத்தாழ 20,000 பட்டாக்களைத் தயார் செய்து கொடுத்துவிட்டார்கள். அந்த பட்டாக்கள் கிடைத்தவுடனேயே, நிச்சயமாக தமிழ்நாட்டில் கட்டாமல் இருக்கின்ற அந்த 85,000 வீடுகளைக் கட்டி முடிப்போம். மொத்தம் 2,85,000 வீடுகள். 85,000 வீடுகள் கட்ட இடமில்லாமல் இருப்பவர்கள். கோயில் நிலத்தில், தனியார் இடத்தில் குடியிருக்கின்றவர்களுக்கு, தனியார் இடத்தில் உள்ளவர்களுக்கு, இடத்தின் உரிமையாளர்கள் இல்லாமல்

இருந்தால், அதற்குரிய நஷ்ட ஈடு தொகையைக் கொடுத்துவிட்டு, அதை எடுத்து, பட்டா வழங்கி, வீடு கட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. குடிசைகளற்ற, அதுவும், கீழ் தஞ்சை மாவட்டத்தில்இந்தத்திட்டத்தைசிறப்பாகச்செயல்படுத்துவதற்காக, இந்தத் துறை வருகின்ற காலத்தில் முனைப்பாக, சிறப்பாகச் செயல்படும் என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

MGNREGS எனும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், மிகச் சிறப்பாகப் பல பணிகளை இந்த அரசு செய்து வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்து சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமுரளி அவர்கள் பேசும்போது சொன்னார், காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. வேலை திறன் நாட்கள் வருகின்ற ஆண்டில் 35 கோடி என்பதை, ஒரு மதிப்பீடாகத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். இனி இந்தத் திட்டத்தின் மூலமாக சில பணிகளை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். குறிப்பாக இன்றைக்கு சம்பளத்தை பற்றிச் சொன்னீர்கள். வருகின்ற ஏப்ரல் மாதத்திலிருந்து 294 ரூபாய் சம்பளம் வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 150 நாட்களை கொடுத்துவிடலாம். (குறுக்கீடு) நீங்கள்தான் மத்திய அரசோடு உறவாக இருக்கிறீர்கள், வாங்கிக் கொடுங்கள். 150 நாட்கள் என்ன, 200 நாட்கள்கூட கொடுக்கலாம், நிதியை வாங்கிக்கொடுங்கள். (குறுக்கீடு)

ஏற்கெனவே, நான் சொல்லிவிட்டேன். விடியல் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே என்று; விடியலுக்கு வழிகாட்டப் போகின்றவர்தான் எங்களுடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, இந்தத் திட்டம் நிச்சயமாக, சிறப்பாக மேம்படுத்தப்படும். அதற்கு நாங்கள் உறுதியாக, இந்தத் திட்டத்தில், வருகிற ஆண்டில் வேலை திறன் நாட்களை அதிகரிக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். மொத்தம் 93 இலட்சம் பேர் இருக்கிறார்கள். வேலை செய்பவர்களில், active workers என்ற வகையில் 60 இலட்சம் பேர், 65 இலட்சம் பேர்தான் உள்ளனர். 60 இலட்சம் பேர் வருவதில், வேலை நாட்கள், சில இடங்களில் 80 நாட்கள், 70 நாட்கள், 60 நாட்கள், 50 நாட்கள் என கொடுத்திருக்கிறோம். ஆனால், வருகிற காலத்தில் அந்த

நாட்களை உயர்த்துவதற்கு நாங்கள் முனைப்பாக இருக்கிறோம். அதிலும், குறிப்பாக வேலை நாட்களைப் பொறுத்த அளவில் எல்லா கிராமங்களிலும் 20,000 cluster முன்பு இருந்தது. இப்போது 3,500 cluster உயர்த்தப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டில் 30,000 cluster ஆக உயர்த்தப்படும். எந்தக் கிராமமாக இருந்தாலும், கிராமத்திற்கு அருகாமையில் நடந்துதான் 100 நாட்கள் வேலைத் திட்டத்திற்குச் செல்ல வேண்டும். 5 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் எல்லாம் போக வேண்டாம். 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் இருக்க வேண்டும் என்கிறோம். Cluster-ஐ அதிகப்படுத்தி, அந்தத் தொகுப்புகளை அதிகப்படுத்தி, கிராமத்தில் இருக்கின்ற மக்கள் அருகாமையில் பணி செய்ய வேண்டிய ஏற்பாடுகளை, எதிர்காலத்தில் செய்து, அதிக வேலை நாட்களை உறுதி செய்து, the man days என்பதை, குறிப்பாக, 75 சதவிகிதம் பேர்தான் வேலைக்கு வருகிறார்கள். இதில் 86 சதவிகிதம் பெண்கள் வந்து விடுகிறார்கள். 13 சதவிகிதம் முதல் 14 சதவிகிதம் வரைதான் ஆண்கள். இதில் ஆதி திராவிட மக்கள் கிட்டத்தட்ட 30 சதவிகிதம் major ஆக வருகிறார்கள். கிட்டத்தட்ட 50 சதவிகிதம் அளவுக்கு நெருங்கி வந்துவிடுவார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு பணி நாட்கள் இருக்கின்றன. எனவே, இதையெல்லாம் சீர் செய்ய பல வழிவகைகளை இப்போது முன்னெடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நாம் material component எனச் சொல்லி பல பணிகளைச் செய்கிறோம். அதைக்கூட நமது உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை முடித்து விட்டு, ஒப்பீட்டை நான் கடைசியாகச் சொல்கிறேன்.

பிற்பகல் 2–30

இங்கே பேசிய உறுப்பினர்களெல்லாம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தத் திட்டத்தின் மூலமாக பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்ட வேண்டும்; அங்கன்வாடி கட்ட வேண்டும்; அங்கன்வாடி கட்டுவது மட்டுமல்லாமல் தானியக் கிடங்குகள் கட்ட வேண்டும்; பால் குளிரூட்டும் இடங்கள்; கிராம பஞ்சாயத்து அலுவலகக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, தமிழ்நாட்டில் இருக்கின்ற தொடக்கப்

பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் வருகிற ஆண்டில் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோக, இந்தத் திட்டத்தில் இன்னும் பல பணிகளை மேற்கொள்வதற்கும் வழிவகைகள் இருக்கின்றன. அதற்கும் வழிவகைகள் காணப்படும்.

ஜல் ஜீவன் திட்டத்தில், நமக்கு ரூ.22,500 கோடிதான் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்; ரூ.4,000 கோடி, ரூ.3,000 கோடி இல்லை என்று சொன்னார்கள்—ஜல் ஜீவன் திட்டத்திற்கு இப்போதுதான் Nodal Officer—முதலில் Rural Development and Panchayat Raj department—ஊரக வளர்ச்சித் துறையில்தான் இருந்தது. தமிழ்நாட்டில் தற்போது நிறைய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலமாக, உயர்மட்டத் தொட்டி கட்டுவது, தண்ணீர் வழங்குவது போன்ற பணிகள் நடைபெறுகின்ற காரணத்தால், அந்தத் திட்டத்தில் இருக்கின்ற பணம், ஜல் ஜீவன் திட்டத்திற்கான பணம், ஊரக வளர்ச்சிக்கு எவ்வளவு, நகராட்சிக்கு எவ்வளவு என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்தார்கள். எல்லாமே ஒன்றுதான். எந்தத் துறையாக இருந்தாலும் அந்தப் பணம் முறையாக ஊரக வளர்ச்சித் துறைக்கு வழங்கப்படுகிறது. இப்போதுகூட நான் பொறுப்பேற்றதற்குப் பின்னர், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1,296 உயர்மட்டத் தொட்டிகள் கட்ட வேண்டும் என்றார்கள். அதற்காக ரூ.209 கோடி நிதி தேவைப்பட்டது. உடனே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் முதலில் தெரிவித்து, அவர்கள் நகராட்சி நிர்வாகத் துறையின் செயலாளர் அவர்களிடத்தில் சொல்லி, உடனடியாக அந்த நிதியை விடுவித்து, உயர்மட்டத் தொட்டிகள் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். நகராட்சி நிர்வாகத் துறையில் பணம் இருந்ததென்றால், அதிலிருந்து எங்களுடைய துறைக்கு வராது என்று நீங்கள் நினைக்காதீர்கள். நகராட்சி நிர்வாகத் துறையில் இருப்பதும் எங்களுடைய நிதிதான். அனைத்துமே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திட்டங்கள்தான். எனவே, எல்லோருக்கும் குடிநீர் வழங்குவதற்கான உயர்மட்டத் தொட்டிகளைக் கட்டுவோம்; நல்ல குடிதண்ணீர் கொடுப்போம்; நல்ல சாலைகளை அமைப்போம்; எல்லா வசதிகளையும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவும், நகராட்சி நிர்வாகத் துறையின் மூலமாகவும் இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

Swachh Bharat Mission, தூய்மை இந்தியா திட்டம் பற்றி இங்கே சொன்னார்கள். தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மக்கும் குப்பை, மக்காத குப்பை, திடக் கழிவு, திரவக் கழிவு என்று பிரித்து, எங்கள் ஆட்சியில் இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்தோம் என்று சொன்னார்கள். இப்போது நாங்களும் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறோம். மக்கும் குப்பையிலிருந்து மண்புழு உரம் செய்கிறோம்; கிராமங்களிலிருந்து சேகரிக்கப்படும் நெகிழிகளையும், அந்தந்த ஊராட்சியிலிருந்து சேகரிக்கப்படும் நெகிழிகளையும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தமாக சேர்த்து, அந்த நெகிழிகளை உடைத்து plastic road போடுகிறோம். அந்த polythene-ஐ tar உடன் mix செய்து சாலைகள் போடுவதற்குப் பயன்படுத்தும் திட்டத்தையும் நாங்கள் விரைவில் செயல்படுத்தவிருக்கிறோம். இப்படி, எந்தத் திட்டமாக இருந்தாலும், அது மைய அரசுத் திட்டமாக இருந்தாலும் சரி, மாநில அரசுத் திட்டமாக இருந்தாலும் சரி, அனைத்துத் திட்டங்களையும் இன்றைக்கு நாம் நிறைவேற்றி வருகிறோம்.

பிற்பகல் 2-35

இங்கே பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதில், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் பேசும்போது, பொருட்கூறில்—மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நாங்கள் நிறைய செலவு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். 2016–2017–ல் ரூ.1,014 கோடி; 2017–2018–ல் ரூ.808 கோடி; 2018–2019–ல் ரூ.1,218 கோடி; அதுபோக 2019–2020–ல் 937 கோடி ரூபாய்; 2020–2021–ல் 1,800 கோடி ரூபாய்; எங்களுடைய அரசு வந்ததற்குப் பிறகு, 2021–2022–ல் 2,305 கோடி ரூபாய்; 2022–2023–ல் அதாவது இந்த ஆண்டு 3,490 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, வேலைநாட்களைக் குறித்த இன்னொரு விளக்கத்தையும் சொல்லியிருக்கிறார். வேலைநாட்களைப் பொறுத்தவரையில், 100 நாள் வேலை, 2016–2021–க்குள், 2016–2017 வறட்சியாக இருந்ததால், ஓராண்டு மட்டும் 39 கோடி பேருக்கு அவர்கள் வேலை கொடுத்திருக்கிறார்கள். வறட்சியாக இருந்த காரணத்தால், 100 நாள் என்றிருந்ததை 150 நாள் வேலை கொடுத்திருக்கிறார்கள். 2017–2018–ல் 23.88 கோடி; 2018–2019–ல் 25.76 கோடி; 2019–2020–ல் 24.85 கோடி; 2020–2021–ல் 33.39 கோடி; இதுதான் நீங்கள் கொடுத்த man-days, வேலை நாட்கள்.

எங்கள் ஆட்சியில், 2021–2022–ல் எவ்வளவு வேலைநாட்கள் கொடுத்திருக்கிறோம் தெரியுமா? 2021–2022–ல் 34.57 கோடி. இப்பொழுது 2022–2023–க்கு கிட்டத்தட்ட 33 கோடி man–days cross ஆகியிருக்கிறது. அதில் இன்னும் கடைசி வாரம் வரவில்லை என்று சொன்னார்கள். ஆக, அந்த அளவிற்கு இன்றைக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

குறிப்பாக, நீங்கள் சாலை மேம்பாடு குறித்து என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் கிராமப்புறச் சாலை திட்டத்திற்காக பெரும்பாலும் 10 ஆண்டுகளுக்கு ஒதுக்கிய நிதி, மொத்தம் 23,348 கோடி ரூபாய். இந்த 2 ஆண்டு காலத்தில் நாங்கள் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று கேட்டீர்களென்றால், 14,725 கிலோ மீட்டருக்கு 6,791 கோடி ரூபாயை இரண்டே வருடங்களில் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். 10 வருடங்களுக்கு என்றால்—நீங்கள் கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளுங்கள்—அது 30,000 கோடி ரூபாய், 32,000 கோடி ரூபாயைத் தாண்டும். நீங்கள் 10 வருடங்களில், 23,000 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். நாங்கள் 10 வருடங்கள் இருக்கப் போகிறோம். 10 வருடங்கள் மட்டும் இல்லை, இன்னும் 15 வருடங்கள் என்றாலும், நிச்சயம் தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 10 ஆண்டு காலங்களில் 35,000 கோடி ரூபாயைக்கூட தொடுவோம். அந்த அளவிற்கு நிச்சயம் உள்ளது, ஏனென்றால் இந்தத் திட்டம் தலைவர் அவர்கள் ஆரம்பித்து வைத்த திட்டம். அவர்தான் இந்தத் திட்டத்திற்கு பிதாமகன். கண்டிப்பாக அந்தச் சாலைகளெல்லாம் நெடுஞ்சாலைக்கு மட்டுமல்ல; NHAI–க்கு equal ஆகக்கூட எதிர்காலத்தில் இந்தச் சாலைகள் மேம்படுத்தப்படும். இன்னும் சில நாட்கள் போக வேண்டும். ஏனென்றால் நிதி ஆதாரம் வரட்டும், வந்துவிட்டால் எல்லாவற்றையும் செய்துவிடலாம்.

'நமக்கு நாமே திட்டம்'. இது ஒரு உயிரோட்டமான திட்டம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்தபோது, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பெற்றது. மாண்புமிகு முதலமைச்சர்க லைஞர் காலத்திலும் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றத் திட்டம். நமக்கு நாமே திட்டத்தில், 100 கோடி ரூபாயைத் தொடர்ந்து இந்த ஆண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக 'நமக்கு நாமே திட்டம்' இப்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. M.L.A. Constituency Development Scheme (MLACDS)–லிருந்து M.P. Local Area Development Scheme (MPLADS) வரை எல்லாம் ஒழுங்காகச்

செயல்பட்டுக்கொண்டு வருகிறது. நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. நமக்கு நாமே திட்டம் போன்று எல்லா திட்டங்களையும் பற்றி பேசுவதற்கு நான் விரும்பவில்லை, ஏனென்றால் நேரம் அதிகமாகிவிட்டது.

குறிப்பாக, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக வருகின்ற காலத்தில் எங்கள் குறியீட்டைவிட, கூடுதலான சாதனையை நிகழ்த்துவதற்கு உறுதிபூண்டிருக்கிறோம். மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்; சாலைகளை மேம்படுத்த இருக்கிறோம்; எல்லா வசதிகளையும், எல்லோருக்கும் செய்யவிருக்கிறோம்; எல்லோருக்கும் எல்லாம். நான் ஒன்றே ஒன்றை இந்த அவையில் உள்ள அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 2–40

நான் ஒரு ஒப்பீடு சொல்லியிருக்கிறேன். நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் முன்னாள் அமைச்சர் திரு. வேலுமணி அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த காலத்தில், நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி அல்லது ஊரக வளர்ச்சித் துறையாக இருந்தாலும் சரி, நிதியொதுக்கீடு என்பது பாரபட்சமாக இருந்தது. எல்லோருக்கும் போகாது, சமச்சீராக இருக்காது. ஆனால், சமச்சீர்தான் திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கியிருக்கின்ற 4,000 கோடி ரூபாய் நிதி, தமிழ்நாட்டில் இருக்கின்ற 234 தொகுதிகளுக்கும் சமச்சீராகச் செல்கிறது. எந்தத் தொகுதியும் விடுபடவில்லை. நீங்கள் யாரும் மனு கொடுக்க வேண்டியதில்லை. நாங்கள் என்ன எடுத்திருக்கின்றோம் என்ற பதில் உங்களைத் தேடி வரும் வகையில் நாங்கள் அனுப்பி வைப்போம். எல்லா தொகுதிகளும் அதில் cover ஆகிவிடும். கிராமப்புறங்களை, ஊராட்சிகளை உள்ளடக்கியிருக்கின்ற அத்தனை தொகுதிகளும் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இது சமச்சீரான திராவிட மாடல் ஆட்சி, இந்தியா மட்டுமல்ல, உலகமே உற்றுநோக்குகின்ற ஆட்சி, எதிர்கால இந்தியா, விடியலை எதிர்நோக்கியிருக்கின்ற ஆட்சி, நம்முடைய தளபதியார் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சி என்பதை வருகின்ற காலங்களிலே நிரூபிப்போம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் 288 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். 288 வெட்டுத் தீர்மானங்களில், ஒருசிலவற்றில் அலுவலர்களுக்கு Jeep கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று 224 வாகனங்களை book செய்துவிட்டோம். அதுமட்டுமல்ல, 388 ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கும் வழங்க கடந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். தற்போது வண்டி மட்டும்தான் வழங்க வேண்டியுள்ளது. அதிலும், தற்போது 150 வண்டிகள் வந்துவிட்டன. என்ன வண்டி என்றால், Scorpio Classic. 19 மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு என்ன வண்டி என்றால், Tata Safari. மாண்புமிகு மந்திரிகளுக்குக்கூட அதுபோல் கொடுக்கப்படவில்லை. எவ்வளவு பெருந்தன்மையான மனது. அந்தளவிற்கு மிகவும் பெருந்தன்மையுடன் வழங்கியுள்ளோம். (குறுக்கீடுகள்) உங்களுக்கா? உங்களுக்குப் பிறகு கேளுங்கள். மனது கடலைப் போல் விரிந்திருக்கிறது. நிதி ஆதாரம் சுருங்கியிருக்கிறது. அதற்கு யார் காரணம் என்பதை நீங்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, சாலைத் திட்டங்களாக இருந்தாலும், எந்தத் திட்டமாக இருந்தாலும் உங்களைத் தேடி, எல்லாத் தொகுதிகளையும் தேடி கண்டிப்பாக வரும், வரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், 3, 4 மட்டும்தான் நிறைவேற்ற முடியாதவை என்று சொல்லலாம். நிறைய பேர் பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டும், ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகக் குழுவெல்லாம் அமைக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் அதுகுறித்து கலந்து பேசி, கண்டிப்பாக நான் பிரித்துத் தருகிறேன். கிராம ஊராட்சிகளைப் பிரிப்பதற்கும், ஒன்றியங்களைப் பிரித்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எல்லாமே செய்து தரப்படும். இந்த அரசில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். 284 வெட்டுத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கின்றன, அவை நிறைவேற்றித் தரப்படும். இந்த நல்லதொரு வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேம்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு) அறிவிப்புகளை அறிவித்தபின் நிறைவேற்றக் கோரலாம்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *தற்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.*

1. விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்கள் வாழும் குடியிருப்புகளில் தேவையென கண்டறியப்பட்டுள்ள முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், கால்வாய்கள், தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் போன்ற பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்

இன்றும் பல ஊராட்சிகளில் விளிம்புநிலை மக்கள் வாழும் குடியிருப்புகள், பிற குடியிருப்புகளுடன் ஒப்பிடுகையில் குறைவான அடிப்படை வசதிகளைக் கொண்டதாக உள்ளன. ஊரக வளர்ச்சித் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும் ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து இம்மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குத் தேவையான சாலைகள், கால்வாய்கள், தெரு விளக்குகள் குடிநீர் வசதிகள் போன்றவை 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மக்கள் பங்கேற்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து (PIP) முன்னுரிமை அடிப்படையில் ஒரு இலட்சம் கிராமப்புர ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனிநபர் மற்றும் சமுதாயச் சொத்துகள் உருவாக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக மக்கள் பங்கேற்பு முறையில், இலக்கு மக்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வருமானத்தை உயர்த்த நிலைத்த சொத்துகள் தேவைப்படுகின்றன. ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு, நிலைத்த வருமானத்தை வழங்கக்கூடிய சொத்துகளை உருவாக்கும் பணிகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை ஒருங்கிணைத்து 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

3. ஊரகப் பகுதிகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்

இந்த ஆண்டு ஜல் ஜீவன் இயக்கம், ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி மற்றும் மாநில நிதிக் குழு மானிய நிதி ஆகியவற்றை ஒருங்கிணைத்து 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

4. தமிழ்நாடு அரசின் "பசுமை தமிழ்நாடு இயக்கத்தை" முன்னெடுத்துச் செல்லும் வகையில் 70 இலட்சம் மரக்கன்றுகள் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும்

புவி வெப்பமடைதலைத் தடுத்திடவும், ஊரகப் பகுதிகளின் பசுமையை அதிகரிக்கவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 70 இலட்சம் மரக்கன்றுகள் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அரசு நிலங்கள், நிறுவனங்கள் மற்றும் சாலையோரங்களில் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. ஊரகப் பகுதிகளில் இரத்தசோகையைக் குறைக்கும்பொருட்டு, 21 இலட்சம் முருங்கைக் கன்றுகள், 137 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களால் வளர்க்கப்பட்டு, பத்து இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்

*முருங்கை இலை மற்றும் காய்களில் அதிக இரும்புச்சத்து உள்ளதால் இதனை பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் உட்கொள்வதால், இரத்தச் சோகை தடுக்கப்படும். அதற்காகவும், ஆரோக்கியமான ஊராட்சிகளை (*Healthy Panchayats*) உருவாக்கும் நோக்கிலும் 21 இலட்சம் முருங்கை நாற்றுகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்டு, பத்து இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.*

6. ஊரகப் பகுதிகளில் பணிபுரியும் 66,130 தூய்மைக் காவலர்களின் மாதாந்திர மதிப்பூதியம் 3,600 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மையாக வைத்திருக்க, தூய்மைக் காவலர்கள் இல்லம்தோறும் திடக் கழிவுகளைச் சேகரித்து, தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக

மாற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 3,600 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக அரசு கூடுதலாக 112 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறோம். கடந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டில் 100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

7. நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கான அடிப்படை கட்டமைப்பு மற்றும் கழிவு மேலாண்மை வசதிகளை அருகிலுள்ள நகர்ப்புரங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட ஒரு சிறப்புத் திட்டம் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் தேவைகள் இதர ஊராட்சிகளிலிருந்து வேறுபடுகிறது. நகர்ப்புரத்தை போன்றே இவ்வூராட்சிகளிலும் உட்கட்டமைப்பு வசதி, கழிவு மேலாண்மை போன்ற பல வசதிகளின் தேவை உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு சொந்த வருவாய் நிதியின்மூலம் சிறப்புத் திட்டங்களை உருவாக்கும் தகுதியுள்ள நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதியாக 69 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

பிற்பகல் 2–45

8. மலைப் பகுதிகளில் உள்ள ஊராட்சிகளின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்

மலைப் பகுதிகளில் உள்ள ஊராட்சிகளில், குடியிருப்புகளிடையே அதிக இடைவெளி உள்ளதாலும், ஒரு ஊராட்சிப் பகுதி மலை மற்றும் பள்ளத்தாக்குகளைக் கொண்டு பரந்து விரிந்த நிலப்பரப்பில் அமைந்திருப்பதாலும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் சிரமங்கள் உள்ளன. இதுபோன்ற ஊராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய சிறப்புத் திட்டம் 30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

9. ஊரகப் பகுதிகளில் 500 புதிய அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் அங்கன்வாடி மையங்கள் முக்கியப் பங்களிக்கின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நிலையான கட்டடங்களின் தேவை உள்ளது. இதற்காக பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து இந்நிதியாண்டில் 500 புதிய அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

10. முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் 2,043 புதிய சத்துணவுக் கூடங்கள் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டத்திற்காக சத்துணவுக் கூடம், ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கட்டப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்காக தேவைப்படும் தொடக்கப் பள்ளிகளில் 2,043 புதிய சத்துணவுக் கூடங்கள் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

11. அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் ஒரு சிறப்புக் குழு அமைத்து உள்ளூர்மயமாக்கல்மூலம் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை எய்த 20 கோடி ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்

2030–க்குள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்த ஒவ்வோர் ஊராட்சியிலும் ஐந்து நபர் கொண்ட குழு கண்டறியப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி, ஊராட்சியின் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் சமூக செயல்பாடுகள்மூலம் இலக்குகள் எய்தப்படும். இதற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

12. ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளை அனைத்து நிலையிலும் சீரிய முறையில் கண்காணிக்க தொடக்கம் முதல் முடிவு

வரை கணினிமயமாக்குதல் (End to End Computerisation) 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும்

இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, முன்மொழிவு, நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்தப்புள்ளி கோருதல், பணி ஆணை, பணி முன்னேற்றம், பட்டியல் அனுமதித்தல், நிதி செலவினம் மற்றும் சொத்துப் பதிவேடு பராமரித்தல் போன்றவற்றை எளிதில் நிர்வகித்திட ஏதுவாக அனைத்துத் திட்டச் செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு ஏதுவாக, மூன்று கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் காணொளிக் காட்சி வசதிகள் (Video Conference facilities) 388 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்படும்

இன்றைய மின்னணு யுகத்தில் பயிற்சிகள், தகவல் தொடர்பு மற்றும் திட்ட கண்காணிப்பு ஆகியவற்றைச் செம்மையாகச் செய்திட, காணொளிக் காட்சி அமைப்பு ஒரு முக்கியமான கருவியாக இருக்கிறது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இவ்வசதி மூன்று கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

14. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசினைக் குறைக்கும் வகையில் 1,500 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் அமைக்க 500 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகள் பயன்படுத்தப்படும்

ஊரகப் பகுதிகளிலும் நெகிழிப் பயன்பாடு அதிகரித்து, நீர்நிலைகள் மற்றும் நிலங்களிலும் மாசு ஏற்படுகிறது. இதனைத் தடுக்கும் பொருட்டு, மகளிர் குழுக்களின் வாழ்வாதாரத்திற்காக நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் உருவாக்கப்பட்டு, நெகிழிக் கழிவுகள் தரம் பிரித்து துகள்களாக்கப்படுகின்றன. இக்குழுக்களிடமிருந்து நெகிழித் துகள்களைப் பெற்று தார்ச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

2023–2024 ஆம் ஆண்டில் “முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில்” 1,500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 500 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகள் பயன்படுத்தி அமைக்கப்படும்.

15. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள், திட்டப் பணிகளைத் திறம்படக் கண்காணிக்க 224 புதிய வாகனங்கள் இருபது கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தைக் கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதிசெய்யவும் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. பணிகளைத் திறம்படக் கண்காணிக்க ஏதுவாக 224 புதிய வாகனங்கள் இருபது கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஜார்ஜ் கோட்டை இன்று தமிழ்நாட்டின் திராவிட கோட்டையாக உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமைமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை, பல வரலாற்று நிகழ்வுகளின் சாட்சி. மாநிலத்தின் வளர்ச்சிக்கான கருவறை. இத்தகைய மாமன்றத்தில் முதன்முறையாக வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சராக மானியக் கோரிக்கை மீதான பதிலுரை வழங்குகிற வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கி, பிறகு அப்பகுதி மக்களின் நற்பெயரை பெறுகிற அளவிற்கு உழைப்பதற்கு உந்துதலாய் இருந்து, என்னை இந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு அமைச்சராக கடமையாற்றும் பெரும் பொறுப்பைத் தந்து, எந்நாளும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 மார்ச் 30] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையைத் தொடங்கும் முன், தமிழ்நாட்டின் திசைவழியை மாற்றி, தமிழர்களை ஏற்றம்பெறச் செய்த திராவிட இயக்கத் தலைவர்களை இந்நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கின்றேன். எல்லா கோட்டைகளும் அஸ்திவாரத்தின்மீது தான் கட்டப்படும். திராவிட இயக்கம் எனும் கோட்டை, ஒரு வலுவான அஸ்திவாரத்தின் மீதுதான் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. ஆனால், இந்த அஸ்திவாரம் செங்கற்களால் கட்டப்பட்டது அல்ல. இது ஈரோட்டுக் கைத்தடியால் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், எங்களின் அஸ்திவாரம் தந்தை பெரியார். இந்த நேரத்தில் தந்தை பெரியாரை நான் வணங்குகின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று சொற்களின் கொள்கை முழக்கத்தை தன் கோடானுகோடி தம்பிகளுக்கு தந்தவர் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரையும் நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறிஞர் அண்ணாவை இந்த அவையில் இருந்து நம்மால் பார்க்க முடியவில்லையே என நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு ஓர் ஏக்கம் இருக்கும். ஆனால், கடந்த ஜனவரி மாதம் நடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உருவில் பேரறிஞர் அண்ணா நம்மோடு தான் அமர்ந்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) "தமிழ்நாட்டின் பெயர் தமிழ்நாடுதான்" என்று நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் உரக்க உறுதிப்படுத்திக் காட்டியபோது, நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அவர்களின் உணர்வாக, உயிராக, மறு உருவமாக இந்த அவையில் நிறைந்திருந்தார், பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரையும் இந்த நேரத்தில் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'திராவிட மாடல்' என்றால் என்னவென்று புரியாமல் இன்னமும் பலர் பேசுகிறார்கள், விமர்சிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இறுதி இலட்சியம் என்பது சமுதாயத் துறையில் சமத்துவம்–பகுத்தறிவு; பொருளாதாரத் துறையில் சமதர்மம்; அரசியலில் ஜனநாயகம் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞரின் இந்தக் கருத்துதான் திராவிட மாடல் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கான அரிச்சுவடி. திராவிட மாடல் அரசின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை

இந்த நேரத்தில் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெரியாரின் பேரன்பையும், அண்ணாவின் பிரியத்தையும், கலைஞரின் நட்பையும் பெற்று நம்முடைய கொள்கை தீபத்தை அணையாமல் ஏந்தி வந்து, அடுத்தடுத்த தலைமுறையிடம் கொண்டு வந்து சேர்த்த இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களையும் இந்த நேரத்தில் வணங்குகின்றேன்.

பிற்பகல் 2–50

நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின் ஆற்றும் முதல் உரை இது. இந்த நேரத்தில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், 1967 ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன்:

“எனக்குப் பொதுப் பணித் துறை ஒதுக்கப்பட்டிருக்கிறது; நாவலருக்குக் கல்வித் துறை, மதியழகனுக்கு உணவுத் துறை, எந்தத் துறை ஒதுக்கப்பட்டாலும் அதை நாங்கள் சரிவர நிருவகிப்போம் என்ற தெம்பு ஏற்படக் காரணம், அண்ணாதுரை தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துரையை நம்பித்தான் இந்தத் துறைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்,” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன அதே கருத்தை, இப்போது நான் மீண்டும் சொல்கின்றேன். நாங்கள் எல்லாம் எந்தத் துறை அமைச்சர்களாக இருந்தாலும், அத்தனைப் பேரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்னும் ஒற்றை ஆளுமையின் ஆற்றலில்தான் இந்தத் துறைகளை ஏற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டப் பேரவையின் அவை முன்னவர்–மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் மாமா அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், அரசுத் தலைமை கொறடா அண்ணன் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேரவைச்

செயலாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கு அமைச்சராக இருக்கக் காரணம், என்னுடைய சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்கள்; அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில், 'உங்களுக்காக தொடர்ந்து உழைப்பேன்' என்று உறுதியளிக்கின்றேன்.

குறிப்பாக, கழகத்தின் வெற்றிக்காக எந்தவித எதிர்பார்ப்புமின்றி உழைத்த முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அத்தனைபேருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), தோழமைக் கட்சியினருக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர்–அன்பில் தர்மலிங்கம் தாத்தா, தலைவர்–பொய்யாமொழி மாமா, இந்த நட்புச் சங்கிலியை இன்னும் இறுக்கமாகப்பற்றி என்னுடன் எப்போதும் தோளோடு தோள் நிற்கும் எனது நண்பன் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"I belong to the Dravidian Stock" என சட்டமன்ற உறுப்பினராக எனது கன்னிப்பேச்சை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி அன்று இதே அவையில் தொடங்கினேன். 'ஓர் அரசியல் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அரசு நடவடிக்கைகளை ஒரு பார்வையாளனாக பார்த்த நான், சட்டமன்ற உறுப்பினராக, ஒரு பங்கேற்பாளனாக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்' என அப்போது என்னுடைய உரையிலே குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பங்கேற்பின் அடர்த்தி என்பது, அமைச்சர் எனும் பொறுப்புடன் இன்னும் அதிகமாகியுள்ளது. இன்று "I am a representative of our Tamil Nadu Chief Minister's Dravidian Model of Government" என்று சொல்வதில் நான் பெருமை கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றதும், என்னுடைய முதல் கன்னிப்பேச்சில், 'நீட்' ஒழிப்பு போராளி தங்கை அனிதாவின் பெயர், அரியலூர் மருத்துவக் கல்லூரியில் ஒலிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். எனது கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், அரியலூர் மருத்துவக் கல்லூரியில்

ரூபாய் 22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூட்ட அரங்கிற்கு "அனிதா நினைவு அரங்கம்" எனப் பெயர் சூட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நான் அமைச்சராகச் சென்று திறந்து வைக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக, உடனுக்குடன் செய்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், அரியலூர் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் உரிமைத் தொகை, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், காலை சிற்றுண்டித் திட்டம் என இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் அளவில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஆற்றலாகவும், என்ஜினாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகள் உள்ளார்கள் என்று கூறுவதில் நான் பெருமைகொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதன்முதலாக கையொப்பமிட்ட கோப்புகளில் மிக முக்கியமானது, நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாப் பயணம் என்ற திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், கையொப்பமிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி பெருமையாகக் கருதினார்களோ, அதேபோல், அமைச்சராக முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடர்பான மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதில் நானும் பெருமைகொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், வரலாற்றிலேயே முதன்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன்களைத்

தள்ளுபடி செய்வதற்கான அறிவிப்பு, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.

அதன்படி 94 ஆயிரத்து 194 மகளிர் சுய உதவிக் குழுக்களின் 2 ஆயிரத்து 88 கோடியே 75 இலட்சம் ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான சான்று இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளோருக்கும் கடன் தள்ளுபடிக்கான சான்று விரைவில் வழங்கப்படும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்" என்பதைக் கருத்தில் கொண்டு, பெண்கள் பொருளாதாரத்தில் சுயசார்பு பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கம் உதயமாகி, இன்று, 'ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி' உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–55

இந்தியாவிற்கே முன்னுதாரணமாக இந்த சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றியானது, பிற மாநிலங்களையும் ஈர்த்து, அங்கும் சுய உதவிக் குழுக்கள் அமைய வழி வகுத்தது. 1996 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் மகளிர் திட்டம் என்ற ஓர் இயக்கம் தொடங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டு, தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்மூலம் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் வசிக்கும் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம், ஒன்றிய மாநில நிதியுதவி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் என தற்போது நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களின் வாயிலாக, ஏழையெளிய மக்களின் வறுமையை நீக்க, எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மேற்கொண்டுள்ள செயல்பாடுகள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள் மற்றும்

சாதனைகள் குறித்த விவரங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் இந்த அவையில் உங்கள் முன் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊரக மற்றும் நகர்ப்புர மகளிரின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய, அவர்கள் பொருளாதார சுய சார்பு பெற, மகளிரை குழுக்களாக இணைத்து, அவர்களுக்கு சுழல் நிதி, வங்கிக் கடன் இணைப்பு பெற்று, பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைச் சந்தைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

சென்ற கழக ஆட்சிக் காலத்தில், 2006 முதல் 2011 வரை 5 ஆண்டுகளில் 1 இலட்சத்து 75 ஆயிரத்து 484 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுக் கால முந்தைய ஆட்சியின்போது, 2 இலட்சத்து 36 ஆயிரத்து 607 சுய உதவிக் குழுக்கள் மட்டுமே உருவாக்கப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், அப்போதைய 5 ஆண்டுக் கால ஆட்சியின்போது, ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 35 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த பத்தாண்டுக் கால ஆட்சியில், ஆண்டு ஒன்றிற்கான சராசரி 25 ஆயிரமாகக் குறைந்தது. மீண்டும் நமது ஆட்சி அமைந்தவுடன், இந்த இரண்டே ஆண்டுகளில், 86 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு மேல் அமைத்து சாதனை புரிந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது முந்தைய 10 ஆண்டுக் கால ஆட்சியினரின் ஓராண்டு சராசரியைவிட இரு மடங்கு அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிதி ஆதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், தகுதியுள்ள குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் 90–க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற அரசு விழாக்களில் 100 மணி நேரத்திற்கும் மேலாக நின்று பல்லாயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடனுதவிகளை தனது பொற்கரங்களால் வழங்கினார்கள் என்பதை இந்த மன்றத்திலே நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2023 மார்ச் 30] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியின்போது, சுய உதவிக் குழுக்களுக்கு 357 கோடியே 9 இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டது. ஆனால், முந்தைய ஆட்சியினரின் பத்தாண்டு காலத்தில், இது 230 கோடியே 75 இலட்சம் ரூபாயாக குறைந்தது. மீண்டும், நமது ஆட்சி அமைந்தவுடன், இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், ஊரக மற்றும் நகர்ப்புரத்தைச் சேர்ந்த 70 ஆயிரத்து 879 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 87 கோடியே 37 இலட்சம் ரூபாய் சுழல் நிதி வழங்கி சாதனை புரிந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையை ஈடு செய்திடவும், அவர்களின் சுய சார்பினை மேம்படுத்திடவும், குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தருவதில் நமது அரசு என்றுமே முன்னோடியாக விளங்குகின்றது. முந்தைய ஆட்சியினரின் 10 ஆண்டுகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 84 ஆயிரத்து 815 கோடி ரூபாய் மட்டுமே வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டது. கணக்கிற்காக எதையும் செய்பவர்களுக்கு மத்தியில், மக்கள் சிறக்க வேண்டும், மகளிர் செழிக்க வேண்டும் என திட்டங்களைத் தீட்டி செயல்படும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான ஆட்சியில், 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரை வங்கிக் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாய் என்ற இலக்கையும் தாண்டி 46 ஆயிரத்து 414 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அந்த இலக்கை அடைந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) சராசரியாக ஆண்டு ஒன்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய ஆட்சியில், வங்கிக் கடன் இணைப்பாக 23 ஆயிரத்து 307 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை எங்கள் துறையின் சாதனையாக இந்த சபையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து, அதாவது மூன்று மாதங்களுக்குள்ளாகவே பல்வேறு மாவட்டங்களில் மகளிர் திட்டங்களின் செயல்பாடுகளைத் தொடர் ஆய்வு செய்ததன் பயனாக, 1 இலட்சத்து 78 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கியுள்ளேன் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னதான் வங்கிக் கணக்கிலிருந்து அந்தக் கடன்

தொகையை எடுத்துக்கொள்ளலாம் என்றாலும், நான் செல்லும் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் ஆயிரக்கணக்கில் வருகை தந்து, அந்தத் தொகையை அன்போடு பெற்றுச் செல்லும் நம் மகளிரின் வாழ்த்தும், அவர்களின் தன்னிறைவான சிரிப்பொலியும், இன்னும் உழைப்பதற்கான பொறுப்பை நமக்கு உணர்த்துகிறது.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Community Investment Fund என்பது 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரச் செயல்பாட்டிற்காக, ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்மூலம் குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்படுகிறது. நமது ஆட்சி அமைந்த இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு, 483 கோடியே 92 இலட்சம் ரூபாய் அளவுக்கு Community Investment Fund வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியாளர்களின் 10 வருட காலத்தைவிட, இது 5 மடங்கு அதிகமாகும் என்பதைப் பெருமிதத்துடன் இம்மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான கடன்கள், வங்கிகள்மூலம் வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களுடைய நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்யும்விதமாக பெருங்கடன்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின்மூலம் வழங்கப்படுகின்றது. இந்த அரசு அமைவதற்கு முன்பான, 10 ஆண்டுக்கால ஆட்சியில், 940 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.298 கோடியே 35 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நம்முடைய ஆட்சி வந்த பிறகு, தற்போது வரை 2 ஆயிரத்து 907 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 1,282 கோடியே 37 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது முந்தைய அரசு வழங்கிய சராசரி தொகையைவிட 20 மடங்கு அதிகமாகும் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்; பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த டிசம்பர் மாதம் 2022 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளியில் பல்லாயிரக்கணக்கான மகளிர் கலந்து கொண்ட அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன்,

நானும் இணைந்து, ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 42,000 சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் பயன்பெறும் வகையில், 2 ஆயிரத்து 548 கோடியே 4 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கியுள்ளோம் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் எக்காரணம் கொண்டும் முடங்கிவிடக் கூடாது என்பதற்காக, ஊரகப் பகுதிகளிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்தகால ஆட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக 93 கோடியே 14 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், நமது அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5 இலட்சத்து 79 ஆயிரத்து 107 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியமாக 93 கோடியே 73 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட குழுக்களின் எண்ணிக்கை மற்றும் கடன் தொகைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, முந்தைய ஆட்சியாளர்களின் பத்தாண்டு காலத்தில் செய்யப்பட்ட பணிகள், நம்முடைய கழக அரசு அமைந்ததும், இரண்டே ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டுள்ளதை நீங்கள் உணரலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
பொருளாதாரத்தில், கிராமப்புற மக்களின், குறிப்பாக பெண்களின் பங்கு மிகவும் முக்கியம். பல சுய உதவிக் குழு மகளிர், பண்ணை மற்றும் பண்ணை சாராத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். நமது அரசு, பண்ணை சார்ந்த பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இதற்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, அதன்மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், 11 ஆயிரத்து 597 உற்பத்தியாளர் குழுக்கள், 190 இயற்கை வேளாண் தொகுப்புகள், 171 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள், கால்நடை வளர்ப்பிற்காக 250 ஏக்கர் பசுந்தாள் பயிர் சாகுபடி, வேளாண் மகளிர் பண்ணை வேலைகள் செய்வதை ஊக்குவிப்பதற்காக 736 கருவி வங்கிகள்

(Tool Banks), *500 மகளிரைக் கொண்டு 94 காளான் வளர்ப்பு அலகுகள், 2 ஆயிரத்து 350 மகளிர் பயன்பெறும் வகையில் தேனீ வளர்ப்பு தொகுப்புகள் மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்து காட்டுவோம் திட்டம், 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டதுதான். வாழ்ந்து காட்டுவோம் 1.0 என்ற பெயரில்தான் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதன் பின்னர், 2011 ஆம் ஆண்டு முந்தைய அரசு இந்தத் திட்டத்தை புது வாழ்வுத் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்தது. எனவே, பெயர் மாற்றம் செய்தது நம்முடைய ஆட்சியில் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான் பெயர் மாற்றம் நடைபெற்றது, 2016 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தியது. இத்திட்டம் நிறைவடைந்த பின், 2017 ஆம் ஆண்டு உலக வங்கியுடன் இணைந்து, 910 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு புத்தாக்கத் திட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு மே மாதம் வரை எந்தத் திட்ட நடவடிக்கையும் கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்படவில்லை. வெறும் Covid Assistance Package *மட்டும்தான் வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகுதான் வாழ்ந்து காட்டுவோம் 2.0 திட்டக் கூறுகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டன.*

இதுமட்டுமல்லாமல், 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின்மூலம் 5,000 உற்பத்தியாளர் குழுக்கள் தொடங்க 50 கோடி ரூபாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு 7 கோடி ரூபாயும் தொடக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் மட்டுமல்லாமல், நகர்ப்புர பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற, நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து நகரவாசிகளுக்கும் முறைசாரா துறைகளில் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், நகர்ப்புர ஏழைகளின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தைப்படுத்துவதற்கும் தேவையான தகவல்களை வழங்கும் மையமாக நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் செயல்படுகின்றன.

மேலும், இது ஓரிட வணிக மையமாகவும் (one-stop shop) செயல்படுகிறது. இதுவரை 80 நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் 8 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நகர்ப்புரங்களில் விற்பனை செய்ய ஏதுவாக, மாவட்டத் தலைமையகங்களில் வணிக வளாகங்களை நிறுவி, அதற்கு 'பூமாலை வணிக வளாகம்' என்று பெயரிட்டார்கள். சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக இந்தப் பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுவதுடன், சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கும் இம்மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலங்களில் பராமரிப்பின்றி இருந்த பூமாலை வணிக வளாகங்கள், நமது ஆட்சி அமைந்தவுடன், 29 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள், 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் renovation செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, இக்கட்டடங்கள் அனைத்துக்கும் ஒரே மாதிரியான வண்ணம் பூசப்பட்டுள்ளது. மாநிலத்தில் எங்கு சென்றாலும் அந்தக் கட்டடத்தைப் பார்த்தாலே பூமாலை வணிக வளாகம் என Brand ஆக தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாதிரியான வண்ணம் பூசப்பட்டு, அவை தனித்துவமாக காட்சியளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் இவ்வணிக வளாகங்களில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்வதற்கான அரங்குகளாக மாறி, தனித்துவமிக்க அடையாளத்தை சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சேகர் அவர்கள் பரமத்தி—வேலூர் தொகுதியில் உள்ள சுய உதவிக் குழுக் கட்டடம் பற்றி வெட்டுத் தீர்மானம் ஒன்றை அளித்துள்ளார். அந்தத் தொகுதியில் இரண்டு கட்டடப் பணிகள் தலா 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. இப்பணிகள், இந்தாண்டு அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில், 124 கண்காட்சிகளில், 3 ஆயிரத்து 511 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று, 3 கோடியே 64 இலட்சம் ரூபாய் அளவிலான

பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனை பரிவர்த்தனைகள் மின்னணுமயமாக்கப்படும். இதற்காக ஒரு மின்னணு வர்த்தக வலைதளம் (e-commerce online portal) வடிவமைக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்ற நல்ல செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வீட்டுக்கே சென்று மருத்துவ வசதி வழங்கும் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற மகத்தான திட்டத்தில், நம்முடைய சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 8 ஆயிரத்து 713 மகளிர், கிராமப்புறங்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆயிரத்து 256 மகளிர், நகர்ப்புரங்களிலும் ஆக மொத்தம் சுமார் 11 ஆயிரம் பேர், மகளிர் சுகாதார தன்னார்வலர்களாக (Women Health Volunteers) தங்களது உன்னதப் பணியைச் சிறப்புடன் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டமானது, 16 மாவட்டங்களில் உள்ள 17 வட்டாரங்களுக்குட்பட்ட கிராமப்புறங்களிலுள்ள 963 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சுவையான, தரமான காலை உணவை வழங்குவதன்மூலம் அவர்களின் கல்வி மற்றும் உடல்நலம் பேணிக்காக்கப்படுவதோடு, சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரமும் மேம்பாடு அடையும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் தாய்மார்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களில் இடம்பெற்றிருந்தால், கிராம அளவிலான மையக் குழுவால், அவர்கள் தேர்வு செய்யப்பட்டு, உரிய சமையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களைக் கொண்டு, சம்பந்தப்பட்ட பள்ளியிலேயே காலை உணவு தயாரிக்கப்பட்டு, சூடாகவும், சுவையாகவும் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

நான் எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும், காலையில் tiffin சாப்பிடுவது இந்த காலை உணவுத் திட்டத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காலை உணவுத் திட்டத்தில் நானும் ஒரு பயனாளி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 30 ஆயிரத்து 122 பள்ளிகளில் பயிலும் சுமார் 18 இலட்சம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதை உறுதி செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறன் பயிற்சி என்பது மிகவும் அவசியமான ஒன்று. திறன் பயிற்சி, கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி, வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இதற்காக பல்வேறு திட்டங்களை நமது துறையின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறோம். திறன் பயிற்சிமூலம் ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்ய தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம், சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்க ஊரக சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின்மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களின் வேலைவாய்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நம்முடைய தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சின்னதுரை அவர்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடர்பாக அளித்துள்ள வெட்டுத் தீர்மானத்துக்கு பதிலளிக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டித்தந்த திட்டங்களால், இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாடு வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், நம்பர் 1 மாநிலம் எனும் நிலையிலும் உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், துளியும் வறுமை நிலைமை இல்லையென்ற நிலையை உறுதிப்படுத்தவும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கடைசி மனிதனை மீட்டு கரை சேர்க்கவும், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாகவே இந்தத் திட்டங்கள் காலத்துக்கு ஏற்ப தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக நம் மாநில மகளிர் அனைவரும் சுயசார்புடன் செயல்படுவதை உறுதி செய்ய இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பிற்பகல் 3–10

இளைஞர் ஆற்றல் அதிகம் கொண்ட நம் மாநிலத்தில், வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் குழுமங்கள் மற்றும் திறன் தொழில் பிரிவுகளில் பணிபுரிவதற்கான தங்களது திறன்களை மேம்படுத்திக்கொள்ள போதிய விழிப்புணர்வு அவசியமாகிறது.

இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து வட்டாரங்களிலும், இளைஞர் திறன் திருவிழா நடத்திட அறிவித்தது மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே முதன்முறையாக சென்னையில் நடந்த இத்திருவிழாவில் நேரடியாகக் கலந்துகொண்டு, இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட எங்களுக்கு எல்லாம் ஊக்கம் அளித்தார்கள்.

பல சாதனைகளைப் படைத்து வரும் சுய உதவிக் குழுக்களுக்கு அங்கீகாரம் அளிப்பதுபோல், 2006 ஆம் ஆண்டு முதல் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவை சார்ந்த அமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகளை' அறிவித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சுய உதவிக் குழுக்களைச் சிறப்பித்தார்கள். இதன்மூலம், சுய உதவிக் குழுக்களின் இயக்கத்திற்கு ஊக்கமும், உத்வேகமும் அளிக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் மென்மேலும் ஓங்கி உயர வழிவகுக்கப்பட்டது.

ஆனால், முந்தைய ஆட்சியாளர்களால் 10 வருட காலமாக இது நிறுத்தப்பட்டு, இவ்விருதுகள் வழங்கப்படவில்லை. மீண்டும் நமது ஆட்சி பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மணிமேகலை விருதுகள் மீண்டும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 2021–2022 ஆம் ஆண்டிற்கான விருதுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அவருடைய திருக்கரங்களால் திருச்சியில் நடந்த மாபெரும் அரசு விழாவில் சுமார் 20 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில், 33 அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 30 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பை, 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் அறிவித்துள்ளதற்கு என் சார்பாகவும், எனது துறையின் சார்பாகவும், இலட்சக்கணக்கான சுய உதவிக் குழுக்களின் மகளிர் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில், இலக்கைவிட அதிகமாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், நம்முடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கடன் இணைப்பு அனைத்தையும், அவர் கடன் தொகையாக பார்க்கவில்லை. மாறாக சுய உதவிக் குழு சகோதரிகளின் உழைப்பின்மீது வைத்துள்ள நம்பிக்கைத் தொகையாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னைப் பார்க்க வரும் நண்பர்களிடம், அவர்கள் தரும் பரிசுப் பொருட்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களாகத்தான் இருக்க வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டுள்ளேன். அதை இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் தரமானவை, அழகானவை மற்றும் பாரம்பரியமானவை. எனவே, நீங்கள் ஒவ்வொருவரும், பிறருக்கு பரிசளிக்கும்போதோ அல்லது உங்களுக்கு மற்றவர் பரிசளிக்கும்போதோ தயவுசெய்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை மட்டுமே பரிசளிக்க வேண்டும் என்று நீங்கள் ஒரு கோரிக்கை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களைப் பிரபலப்படுத்துவதற்கு வழிவகை செய்யும்.

இந்தப் பேரவையில், இன்றையதினம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரியதர்சினி மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் தயாரித்த மஞ்சப்பையினை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் துறையின் சார்பாக வழங்கியுள்ளோம்.

மேலும், சில மகளிர் சுய உதவிக் குழு தயாரிப்புப் பொருட்களை உங்களுக்கு இன்றையதினம் வழங்கவுள்ளோம். அனைவரும் அந்தப் பொருட்களை அவை முடிந்ததும் நூலகப் பிரிவு வளாகத்தில் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் தொடர்பாகவும், அவற்றை மேம்படுத்தவும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் தயாராகவுள்ளோம் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறு ஆண்டு கண்ட இந்த மாமன்றத்தில், எனது கருத்துகளையும், என் துறை சார்ந்த செயல்பாடுகளையும் அமைச்சராக முதன்முறையாக இம்மாமன்றத்தில் இந்த மானியக் கோரிக்கையில் பதிலுரையாக வழங்குவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மிகுந்த அறிவும், அனுபவமும் வாய்ந்த மூத்த அமைச்சர்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் வழிகாட்டுதலும் நான் அமைச்சராக எனது பணியினைச் சிறப்பாகச் செய்திட மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். கள ஆய்வு செய்வது மட்டுமல்லாமல், ஏதேனும் பணிகளில் தொய்வு ஏற்பட்டால், அங்கேயே, immediate action எடுக்கின்றார்கள்.

நானும் கடந்த மூன்று மாதங்களில் திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர், கரூர் உள்ளிட்ட பல மாவட்டங்களுக்குச் சென்று அமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களோடு, மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியுள்ளேன். என்னென்ன திட்டங்கள்

அறிவிக்கப்பட்டிருக்கின்றன அவை எந்த நிலையில் உள்ளன என ஆய்வு செய்கிறோம். அதில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களோடு கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில், அவையில் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு கோரிக்கை வைக்கின்றேன். தயவுசெய்து அந்தக் கூட்டங்களுக்கு முறையாக அழைப்பு வைக்கப்படும்போது, நீங்கள் அத்தனைப்பேரும், கலந்துகொள்ள வேண்டுமென்றும், மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும், அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும் நீங்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் ஒன்றாக சேர்ந்து மக்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குங்கள் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியுடன், எனது துறை சார்ந்த 19 புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். தற்போது அறிவிப்புகளின் தலைப்பைச் சுருக்கமாக அறிவிக்கின்றேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு அறிவிப்பு விவரத்தையும் நான் இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்ததாக அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அறிவிப்புகள்

1. 45,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி 145 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திறன் பயிற்சியானது கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஆண்டு 20,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 120 கோடி ரூபாய் செலவில் திறன் பயிற்சி வழங்கப்படும்.

மேலும், சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 25,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி 25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. 5,000 சுய உதவிக் குழுக்களுக்கு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதி பொருளாதார கடன் உதவியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 5,000 சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். இதற்காக மொத்தத் தொகை 75 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

3. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் 7,500 நுண் மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் 50 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுய உதவிக் குழு மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்கள் கடன் பெறுவதில், புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்வதில், விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் டிஜிட்டல் தளங்களில் விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. சுய உதவிக் குழு பெண்களால் நடத்தப்படும் 7,500 நுண் மற்றும் குறு தொழில்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் நிதி மற்றும் இதர தேவைகளின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படும். இதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்மூலம் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

4. 1,000 கிராம ஊராட்சிகளில் உள்ள மகளிர் புதிய தொழில் தொடங்குவதற்கும், ஏற்கெனவே உள்ள தொழிலை மேம்படுத்துவதற்கும், நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதித் திட்டம் (Nano Enterprise Financing Fund) 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வாழ்ந்து காட்டுவோம் திட்டம், ஊரக மகளிருக்கு தொழில் தொடங்குவதற்கு பல்வேறு உதவிகள் புரிந்து வருகிறது. இந்த ஆண்டு மகளிர் புதிதாக தொழில் தொடங்குவதற்கும், ஏற்கெனவே செய்து வரும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும், 1,000 கிராம ஊராட்சிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்மூலம் "நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதித் திட்டம்" 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2023 மார்ச் 30] [*திரு. உதயநிதி ஸ்டாலின்*]

5. ஊரகப் பகுதிகளில் 10,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 15 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மகளிர், ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் சமூக பொருளாதார மேம்பாடு அடைய, சுய உதவிக் குழுக்கள் சிறந்த அமைப்பாக உருவாகி உள்ளன. இவர்கள் அரசின் பல்வேறு திட்டங்களின்மூலம் பயன்களையும் அடைந்துள்ளார்கள். இந்த ஆண்டு, மக்கள் நிலை ஆய்வுப் பட்டியலில், விடுபட்ட மகளிர் குடும்பங்களைக் கொண்டு 10,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

புதிதாக உருவாக்கப்படும் குழுக்களுக்கு சுழல் நிதியாக 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

6. அனைத்து மாவட்டங்களிலும், உள்ளூர் வல்லுநர்களைக் கொண்டு ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 1,000 புதிய சமுதாயத் திறன் பள்ளிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உள்ளூர் மற்றும் பாரம்பரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள செயல் வல்லுநர்கள்/ நிபுணர்களைக் கண்டறிந்து அவர்களின்மூலம் அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதிய வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் தொடங்குவதற்கு, ஆர்வமுள்ள இளைஞர்களைக் கண்டறிந்து தொழிற்பயிற்சிகள் அளிக்க, ஒவ்வொரு சமுதாயத் திறன் பள்ளிக்கும் 70 ஆயிரம் ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் 1,000 புதிய சமுதாயத் திறன் பள்ளிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் 9 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தகுதி மற்றும் திறமையை மேம்படுத்த அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைப்பண்பு ஆகியவற்றில் மகளிர் குழுக்களுக்கு சிறப்பு புத்தாக்கப் பயிற்சி 9 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். இத்துடன் அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும்.

8. மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக பொருளாதாரக் கூட்டமைப்புகள் 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கொத்தடிமையாக இருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் ஏற்கெனவே கூலித் தொழிலாளர்களாக ஈடுபட்டிருந்த அதே தொழில்களில், தொழில் முனைவோர்களாக உருவாக்க 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் பொருளாதாரக் கூட்டமைப்புகள் அமைக்கப்படும்.

9. 100 முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்ய, காட்சிப்படுத்த 'மதி அங்காடிகள்' 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுய உதவிக் குழுக்களின் பாரம்பரிய மற்றும் தனித்துவமான பொருட்களை சுற்றுலாத் தலங்களுக்கு வரும் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வாங்குவதற்கு ஏதுவாக, மாநிலத்தின் 100 முக்கிய சுற்றுலாத் தலங்களில் 'மதி அங்காடிகள்' 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

10. 'ஒரு வட்டாரம் ஒரு உற்பத்தி பொருள்' (One Block One Product) எனும் திட்டம் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மதிப்புக் கூட்டி, சந்தைப்படுத்த ஏதுவாக பொது சேவை மையம் (Common Facility Centre) 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

'ஒரு வட்டாரம் ஒரு உற்பத்திப் பொருள்' எனும் திட்டம் வட்டார அளவில் அதிக எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் ஒரு பொருளைக் கண்டறிந்து, மதிப்புக் கூட்டி, மதி முத்திரையில் சந்தைப்படுத்த ஏதுவாக, பொது சேவை மையங்கள் 50 வட்டாரங்களில் முன்மாதிரியாக 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

11. சிறப்பு சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய, 100 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்காக சிறப்பு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருமானத்தைப் பெருக்குவதற்காக

பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான இதர பொருட்களை மின் வாகனம் (e-Cart) மூலம் விற்பனை செய்து, வருமானத்தைப் பெருக்கிட 100 நகரும் 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

12. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் "வாங்குவோர்—விற்போர் (Buyer—Seller)" சந்திப்புகள் 2 கோடியே 5 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

'வாங்குவோர்-விற்போர்' சந்திப்புகளை நடத்துவதற்கு முறையான அமைப்புகள் இல்லாததால், சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் குறைவாக உள்ளன. அதற்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் காலாண்டிற்கு ஒரு முறை "வாங்குவோர்-விற்போர்" சந்திப்புகள் 2 கோடியே 5 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

13. மகளிர் உற்பத்தியாளர் குழுக்கள்மூலம் 100 சான்றளிக்கப்பட்ட சிறுதானிய விதை உற்பத்தி அலகுகள் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு சுய உதவிக் குழுக்கள்மூலம் அமைக்கப்பட்ட 100 சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி அலகுகள் உறுப்பினர்களுக்கு வருவாயை ஈட்டிக்கொடுத்தது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு உயர்தர விதைகள் கிடைப்பதையும் உறுதி செய்தது. சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர்மூலம் 100 சான்றளிக்கப்பட்ட சிறுதானிய விதை உற்பத்தி அலகுகள் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்க ஊக்குவிக்கப்படும்.

14. சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு 37 மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில் மகளிர் குழுக்கள் 'சிறுதானிய உணவகங்கள்' (Millets Cafe) நடத்திட 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, ஊட்டச்சத்து நிறைந்த

சிறுதானிய உணவுகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி அவற்றை உட்கொள்வதை ஊக்கப்படுத்தும் விதமாக, மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, 37 மாவட்ட பெருந்திட்ட வளாகங்களில், மதி 'சிறுதானிய உணவகங்கள்' 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

15. 37 மாவட்டங்களிலும் முன்மாதிரியாக "வானவில் மையம்" எனும் பாலின வள மையம் 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் உடல்நலம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்குத் தீர்வு காணும் வகையில் முன்மாதிரியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு வட்டாரத்தில் 'வானவில்' பாலின வள மையம் உருவாக்கப்பட்டு, ஊட்டச்சத்து, உடல் மற்றும் மன நலம், குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தித் தீர்வு காண வழிவகை செய்யப்படும்.

இதற்காக இந்த ஆண்டு 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 37 "வானவில் மையங்கள்" உருவாக்கப்படும்.

16. அனைத்து மாவட்டங்களிலும் 100 இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக இளைஞர்களுக்கு திறன் குறித்த போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தி, படித்த திறன் பெற்ற இளைஞர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வேலைகளைப் பெற்றுத் தந்திட இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்படும். இதில் இளைஞர்களுக்கு திறன் மற்றும் திறனுக்கேற்ற வேலை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்கள் சரியான தொழிற்பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு பெறுவதற்கு அனைத்து மாவட்டங்களிலும் 1 கோடி ரூபாய் செலவில், 100 இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்படும்.

17. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஊரகப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட சுய உதவிக்

2023 மார்ச் 30] [*திரு. உதயநிதி ஸ்டாலின்*]

குழு மகளிருக்கு சமையல் செய்முறை பயிற்சி 1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் ஒருங்கிணைந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அனைத்து மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. கிராம அளவிலான மையக் குழுவால் அடையாளம் காணப்படும் சுய உதவிக் குழு மகளிருக்கு, காலை உணவு சமையல் செய்முறை பயிற்சிகள் 1 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

18. ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியினைக் கண்காணித்திட ஒரு மின்னணு தளம் உருவாக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள்மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் வங்கிப் பெருங்கடன் ஆகியவை குழுக்களுக்கு முறையாகச் சென்றடைவதைக் கண்காணித்து நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய ஒரு மின்னணு தளம் உருவாக்கப்படும்.

19. சமுதாய வளப் பயிற்றுநர்களின் (CRPs) திறனை மேம்படுத்துவதற்காக கற்றல் மேலாண்மை அமைப்பு (Learning Management System) எனும் மின்னணு தளம் உருவாக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஊராட்சி அளவில் சிறப்பாகச் செயல்படுத்துவதில் சமுதாய வள பயிற்றுநர்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர். திட்டத்தின் பல்வேறு கூறுகளைச் சிறப்பாக செயல்படுத்த, அவர்களின் அறிவு, திறமை மற்றும் அணுகுமுறையைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்காகக் கற்றல் மேலாண்மை அமைப்பு எனும் மின்னணு தளம் உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்; ஒற்றுமையில் மகளிர் வளர்ச்சியைக் காண்போம்; மகளிரின் வளர்ச்சியில் மனநிறைவை அடைவோம்; மகளிரின் மனநிறைவே நமது அரசின் வெற்றி என்பதை ஓங்கிச்

சொல்வோம்” என்றுரைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது துறை சார்பாக, எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். திவ்யதர்ஷினி, I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் பிரியங்கா, I.A.S. மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயலாக்க அலுவலர் பத்மஜா, I.A.S. அவர்களுக்கும், துறைசார்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என அன்போடு கேட்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–20

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, எங்களையெல்லாம் உருவாக்கி, ஆளாக்கி வளர்த்து, என்றைக்கும் நின்று காத்துக்கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர், தன்னிகரில்லா தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, இங்கு தலைவர் கலைஞர் அவர்கள் தந்தையாக இருந்து பார்த்ததுபோல, தனயனாக இருந்து எங்களை ஆளாக்கி வளர்த்து வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பாக உரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது பொதுச் செயலாளர், என்னுடைய சக அமைச்சர், திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும், சக அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கு ஓர் இக்கட்டான நேரத்தில் இருந்துகொண்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர், எதிர்க்கட்சியின் கொறடா அவர்கள் உரையாற்றுகின்றபோது, 'அம்மா உணவுத் திட்டத்தை நீங்கள் நிறுத்திவிட்டீர்கள், குறைத்துவிட்டீர்கள்' என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு, அப்பொழுதே விளக்கம் சொல்லப்பட்டிருந்தாலும் மீண்டும் சொல்கிறேன்; நீங்கள் ஆரம்பித்த எந்தத் திட்டத்தையும், கலைஞராக இருந்தாலும், தளபதியாக இருந்தாலும், அவற்றை விடாமல் நடத்துகின்ற ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஆரம்பித்த திட்டங்களை, நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வரும்பொழுது, ஒவ்வொரு நேரத்திலும், அவற்றை நிறுத்தியும், மறுத்தும் செய்துகொண்டிருக்கிறீர்களே தவிர, எங்களுடைய முதல்வர்கள், அது எங்களுடைய மறைந்த தலைவராக இருந்தாலும், இன்றைக்கு இருக்கிற முதல்வராக இருந்தாலும், உங்களுடைய திட்டங்களை நிறுத்துவதில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நீங்கள் பதிலுரையைத் தொடருங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: அதோடு, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு 27–5–2019 அன்றே அனுமதியளிக்கப்பட்டிருந்தாலும், 28–10–2020 அன்றுதான் அந்தத் திட்டம் துவங்கப்பட்டது. இடையிலே ஒன்றரை ஆண்டுக்காலம்

கொரோனா தொற்று காலமாக இருந்தது; அடுத்த மாதம் 150 MLD கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடுகிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரூரில் 400 MLD திட்டம் தொடர்பாக, நேற்றுமுன்தினம் முடிவு செய்யப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் அத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, இரண்டே ஆண்டுக் காலத்தில் அத்திட்டம் மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கோரியபடி, அச்சன்புதூர், பண்பொழி, வடகரை ஆகிய மூன்று பேரூராட்சிகளில் அச்சன்புதூர், பண்பொழி ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கு AMRUT 2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இன்று சட்டமன்றத்திலே அறிவிக்கப்படவிருக்கிறது. எனவே, உங்களுடைய பிரச்சினை முடிந்துவிடும்.

மற்றபடி, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அருள் போன்றவர்கள் பேசியிருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் எங்களை உருவாக்கியபோது, 'அமைச்சராக இருக்கிறவர்கள் படிக்கக்கூடாது, அனைத்தையும் உள்வாங்கித்தான் பேச வேண்டும்' என்று சொல்வார்கள். ஆனால், இதிலே பல்வேறுதரப்பட்ட பணிகள் இருக்கின்றன. அதாவது, சாலைகள் இருக்கின்றன, விளக்குகள் போட வேண்டியிருக்கிறது, கழிவறை சுத்தம், மழைநீர் வடிகால், கழிவுநீர் வடிகால், கொசு ஒழிப்பு, பள்ளிக்கூடம் ஆகிய அனைத்துப் பணிகள் குறித்தும் ஒருசேர சொல்வது இயலாத காரியம் என்ற காரணத்தால், நான் படிக்க முற்படுகிறேன்.

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'ஊரகத் துறைக்கு நிதியைக் குறைத்துவிட்டீர்கள்' என்றும், 'நகராட்சித் துறைக்கு நிதியை அதிகமாக ஒதுக்கியிருக்கிறீர்கள்' என்றும் சொன்னார்கள். அதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி, அவர் சொல்லட்டும். ஆனால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் 55 சதவிகிதம் நகர்ப் பகுதியாக இருக்கிறது. 45 சதவிகிதம்தான் ஊரகப் பகுதியாக இருக்கிறது. 'இந்த நிதி

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

போதாது' என்று நாங்களே மாண்புமிகு முதலமைச்சரோடு போராடிக்கொண்டிருக்கிற நேரத்தில், சட்டமன்றத்தில் நீங்கள், 'ஊராட்சித் துறைக்கு நிதியைக் குறைத்துவிட்டீர்கள்' என்று சொன்னீர்கள். கடந்த ஆண்டு அந்தத் துறைக்கு நிதி ஏன் கூடுதலாக இருந்தது என்றால், Jal Jeevan திட்டத்தினுடைய Nodal Officer குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வந்துவிட்ட காரணத்தால், சுமார் ரூ.6,000 கோடி இந்தத் துறைக்கு வந்துவிட்டது. ரூ.6,000 கோடி இந்தத் துறைக்கு வந்திருந்தாலும்கூட, ரூ.4,000 கோடி நிதி கிராமப்புறங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக மீண்டும் அந்தத் துறைக்குத்தான் செல்கிறது. இருப்பினும், Head of account எங்களுடையது. ஆனால், அந்த நிதி, ஊரகப் பகுதிகளுக்காகத்தான் செலவு செய்யப்படுகிறது. நான் இதுபற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் 'எங்கள் துறைக்கு கூடுதலாக நிதி வழங்க வேண்டும்' என்று கேட்டேன். அவர்கள், 'இல்லை, இல்லை, கிராமப்புறப் பகுதிகளுக்கு 51 சதவிகிதம், உங்களுக்கு 49 சதவிகிதம்தான்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் நிதியை நிர்ணயித்துத் தந்தார்கள். எனவே, நகர்ப்புரப் பகுதிகளைப் பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 48 சதவிகிதம். இன்றைய கணக்கெடுப்பின்படி கிட்டத்தட்ட 60 சதவிகித மக்கள் தினந்தோறும் நகர்ப்புரத்திற்கு வந்து செல்கின்றார்கள், இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்கின்ற பணி, இந்த அரசுக்குத் தலையாய கடமையாக இருக்கிற காரணத்தினால்தான், ஒருபக்கம் நிதி கேட்கிறோம். மறுபக்கம் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'எங்களுடைய பங்குத் தொகையைத் தருகிறோம், நீங்கள் கடன் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்கிறார்கள்.

பிற்பகல் 3-25

உங்களுடைய 10 ஆண்டுக்கால ஆட்சிக் காலத்தில் குடிநீருக்காகச் செலவழிக்கப்பட்ட நிதி ரூ.11,000 கோடி. இந்த 20 மாத காலத்தில், அரசு, குடிநீருக்கான நிதியாக ரூ.38,000 கோடி ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஒன்றிய அரசின் பங்கு இருக்கிறது, KfW மற்றும் NABARD ஆகியவற்றில் கடன்கள் பெறப்பட்டுள்ளன. புதியதாக 36 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில்தான் இந்தத் தொகை பெறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.என். நேரு] [2023 மார்ச் 30

தற்போது என் பதிலுரையை துவங்குகிறேன். விரைவில் முடிக்கிறேன் என்றும் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மூன்றாம் ஆண்டாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்மீது எனது பதிலுரையினைத் தொடங்குகிறேன்.

தமிழ்நாட்டின் நகர்ப்புர உள்ளாட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், நகர்ப்புர வாழ்வாதார திட்டங்கள்மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி வறுமையை அகற்றுதல், அடிப்படை பொது சுகாதாரம் மற்றும் அடிப்படைக் கல்வி வசதியினை உறுதிப்படுத்துதல் போன்ற எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தலையாய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வாரியம், Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited (TUFIDCO), Tamilnadu Urban Infrastructure Financial Services Limited (TNUIFSL), சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், Tamil Nadu Water Investment Company Limited (TWIC) ஆகியன செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில், 6 நகராட்சிகள் மாநகராட்சிகளாகவும், 28 பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தரத்திற்கு ஏற்றவாறு பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளனர். மன்னர்களின் தலைநகரங்களாக இருந்த இராமநாதபுரம், புதுக்கோட்டை, கோயில் நகரமான திருவண்ணாமலை, தொழில் வர்த்தக நகரமான நாமக்கல், கல்வி நகரமான காரைக்குடி போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென கோரிக்கைகள் வந்த வண்ணமுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று விரைவில் மேற்கூறிய இடங்களையெல்லாம் மாநகராட்சிகளாக உருவாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

அதேபோல், ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், பெருந்துறை, அவிநாசி, கோத்தகிரி, சங்கரி, திருவையாறு போன்ற சில பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமெனவும், சில ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமெனவும் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும் நகராட்சிகளை மாநகராட்சிகளாகவும், தரம் உயர்த்துவது குறித்து ஆய்ந்து, விரைவில் முடிவு எடுக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் டிசம்பர் 2024-ல் முடிவடைவதால், அதற்குப் பின்னர் எந்தெந்த உள்ளாட்சி அமைப்புகளை நகர்ப்புர உள்ளாட்சிகளுடன் இணைக்கலாம் என்பதை, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் முந்தைய அரசால் நாளொன்றுக்கு விநியோகிக்கப்பட்ட 830 மில்லியன் லிட்டர் குடிநீரின் அளவு, இந்த அரசால் 1,030 மில்லியன் லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் கழக அரசு பொறுப்பேற்கும் முன்பு, 18 பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வந்தன. அவற்றில் 9 பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி, ரூ.190 கோடி மதிப்பீட்டிலான பணிகள், 1.45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12-5-2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. எஞ்சிய பணிகளும் விரைவில் முடிக்கப்பெற்று, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

சென்னைக்கு அருகிலுள்ள நெம்மேலியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட கடல்நீரைக்கு டிநீராக்கும் திட்டம், ஜூலை 2023-ல் முடிவுற்று, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். மேலும், நெம்மேலிக்கு அருகிலுள்ள பேரூரில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. முந்தைய அரசு கவனத்தில் கொள்ளாத குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பெருமளவு இழப்புகளைக் கண்டறிவதற்கு, இந்த அரசால் அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர்

பகிர்மான நிலையங்களிலும், ரூ.50 கோடி மதிப்பீட்டில், Smart water meters பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த ஆட்சியின் பத்தாண்டுக் காலத்தில் ஆலந்தூர், ஆயிரம் விளக்கு தொகுதி மற்றும் கே.கே நகரிலுள்ள அண்ணா பிரதான சாலை போன்ற பகுதிகளில் கழிவுநீர் கட்டமைப்புகளிலுள்ள குறைபாடுகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அந்த பாதிப்பிலிருந்து மக்களுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில், ஆலந்தூர் பகுதியில் ரூ.127 கோடி மதிப்பீட்டிலும், ஆயிரம் விளக்குப் பகுதியில் ரூ.53 கோடி மதிப்பீட்டிலும், கே.கே. நகரில் ரூ.46 கோடி மதிப்பீட்டிலும், குறைபாடுகள் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில், 17 பகுதிகளில் கழிவுநீர் கட்டமைப்புப் பணிகள் முடிவடைந்து, மக்கள் பயன்பாட்டில் உள்ளன. 9 பகுதிகளில் ரூ.783 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 16 பகுதிகளுக்கும், மாதவரத்தில் விடுபட்ட பகுதிகளுக்கும் முந்தைய அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், தற்போது அவற்றிற்கு ரூ.2,288 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–30

1971–ல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாட்டிலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர்த் திட்டங்களையும் மற்றும் நகரப் பகுதிகளில் கழிவுநீர் அகற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இவ்வாரியத்தின் பராமரிப்பில் உள்ள 544 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள் மற்றும் 52,361 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள சுமார் 4.53 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் சராசரியாக நாளொன்றுக்கு 2,104 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2021-க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, நீண்டகாலமாக முடிவுறாமலிருந்த நாமக்கல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், வேலூர் மாநகராட்சி குடிநீர்த் திட்டம், ஆலம்பாளையம் கூட்டுக்

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

குடிநீர்த் திட்டம், இரணியல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டங்கள் இந்த ஆட்சி அமைந்த பின்னர் துரித நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக தற்பொழுது முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த 2 ஆண்டுகளில் வேலூர், கிருஷ்ணகிரி, கடலூர், கரூர், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ரூ.2,432 கோடி திட்ட மதிப்பீட்டில் 1 மாநகராட்சி, 4 நகராட்சிகள், 31 பேரூராட்சிகள் மற்றும் 3,783 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 39 இலட்சத்து 3 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 26 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ரூ.738 கோடி மதிப்பீட்டில் 1 மாநகராட்சி, 4 நகராட்சிகள், 5 பேரூராட்சிகளில் உள்ள 7 இலட்சத்து 46 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 10 பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் (மூன்றாம் கட்டம்) மற்றும் சேலம் மாவட்டம் இளம்பிள்ளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்கள் மே மாதம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளன. அதேபோல், சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், தற்போது சோதனை ஓட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர தயார் நிலையில் உள்ளது.

JJM மற்றும் அம்ரூத் 2.0 திட்ட நிதி ஆதாரங்களுடன், 18 மாவட்டங்களைச் சார்ந்த 6 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 11,847 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 74 இலட்சத்து 84 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.14,652 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள 36 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், 22 திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 14 திட்டங்களும் விரைவில் துவங்கி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் முடிவுற்று மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். இதன்மூலம் தினசரி சுமார் 667 மில்லியன் லிட்டர் குடிநீர் 21 இலட்சத்து 59 ஆயிரம் வீட்டு இணைப்புகள்மூலம் வழங்கப்படும்.

இவை தவிர, 7 மாநகராட்சிகள், 21 நகராட்சிகள், 28 பேரூராட்சிகள் மற்றும் 8,588 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமார் ஒரு கோடியே 33 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.10,955 கோடி மதிப்பீட்டில் 32 குடிநீர்த் திட்டங்களும், 11 பாதாள சாக்கடைத் திட்டங்களும், பராமரிப்பிலுள்ள 56 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ரூ.1,722 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு செய்து குடிநீர் வழங்கும் திட்டங்களும், பல்வேறு நிதி ஆதாரங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 3 பகுதிகள், தூத்துக்குடி மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆகிய நகர்ப்புரங்களில் உள்ள 3.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1,006 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் அம்ரூத் 2.0 நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்பட உள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் நமது தலைவர் தளபதி அவர்களால் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிலுள்ள, கனவுத் திட்டமான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் பகுதியை ரூ.7,145 கோடி மதிப்பீட்டில் அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி முழுவதும் பயன்பெறும் வகையில், முல்லைப்பெரியாறை நீராதாரமாகக் கொண்டு, ரூ.1,296 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர்த் திட்டத்தில் ஏறக்குறைய 60 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன; விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 24X7 குடிநீர்த் திட்டம், பில்லூர்–3 குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. திருநெல்வேலி, திருப்பூர், வேலூர் ஆகிய மாநகராட்சிகளின் குடிநீர்த் திட்டங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளன. தாம்பரம், காஞ்சிபுரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளுக்கு புதிதாக குடிநீர்த் திட்டப் பணிகள் 2023–2024 ஆம் ஆண்டில் துவங்கப்படவுள்ளன.

மொத்தமுள்ள 20 மாநகராட்சிகளில், 18 மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 16 மாநகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. இம்மாநகராட்சிகளில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 2 மற்றும் 3 ஆம்

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

கட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு ரூ.8,922 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளன.

சிவகாசி மாநகராட்சியில் பாதாள சாக்கடைப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

21 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நகரின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் பயன்பாட்டில் உள்ளன. இந்த 21 நகரங்களில், 9 நகரங்களில் விடுபட்ட பகுதிகளுக்கும், பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், மேட்டுப்பாளையம், இராமேஸ்வரம், காரைக்குடி, சாத்தூர், ஆம்பூர், இராஜபாளையம், திண்டிவனம் மற்றும் பொன்னேரி ஆகிய நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.1,033 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 3–35

மேட்டூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்காக ரூ.11 கோடி மதிப்பீட்டிலும், விழுப்புரம் நகரில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.263 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைத்தவிர மன்னார்குடி, அருப்புக்கோட்டை, திருத்தணி, தென்காசி, செங்கல்பட்டு, பழனி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய நகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கைகள் இறுதி செய்யப்பட்டு, விரைவில் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையைத் தடை செய்யக்கூடிய தடைச் சட்டம் 2013 முற்றிலும் அமல்படுத்தப்பட்டுள்ளது. நகரின் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் நலன் கருதி, தங்களை அப்பணியில் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் சமூக நலம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் “சுகாதாரப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்” 9–12–2022 அன்று மதுரை மாநகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணியினை, முற்றிலுமாக இயந்திரமயமாக்கி, அதற்கான பயிற்சிகளை வழங்கி, இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்தி அனைத்துப் பணிகளையும்

மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளில் முறைகேடாக கழிவுநீர் வெளியேற்றுவதைத் தடுத்து, நீர்நிலைகளைப் பாதுகாக்கும் வகையில் இந்த அரசு ஆணை பிறப்பித்து, இதற்கான விதிகளையும் உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் மொத்தம் 55,567 கி.மீ. நீளமுள்ள சாலைகள் உள்ளன. 2021–2022 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மொத்தம் 2,540 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19–10–2022 அன்று நகர்ப்புரங்களில் உள்ள 20,990 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.9,585 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என அறிவித்து, அரசின் சிறப்பு நிதியாக ரூ.2,200 கோடியும் வழங்கினார்கள். இதனடிப்படையில், 2022–2023 ஆம் ஆண்டில், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 5,900 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன.

நகர்ப்புர உள்ளாட்சிகளில் மண் சாலைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கிட 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற உன்னதத் திட்டத்தின்கீழ் முதலில் நகர்ப்புர உள்ளாட்சிகளில் உள்ள 1,422 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகளின் தரத்தை உயர்த்த ரூ.1,211 கோடி நிதியினை இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே அளித்துள்ளார்கள்.

சென்னை மாநகரில் கடந்த ஆண்டில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் 4 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது, ரூ.135 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர்–வில்லிவாக்கம் மேம்பாலம், ஸ்டீபன்சன் சாலை பாலம் மற்றும் தி.நகர் ஆகாய நடைபாதை ஆகியன முடியும் தருவாயில் உள்ளன. இதுதவிர, தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் முதல் பிரதான சாலை மேம்பாலம் ரூ.131 கோடியிலும், கணேசபுரம் சுரங்கப் பாதையின்மேல் ரூ.142 கோடியில் மேம்பாலமும், மணலி சாலையில் ஏற்கெனவே உள்ள இரயில்வே சந்திக்கடவு 2B–க்கு மாற்றாக ரூ.96 கோடியில் மேம்பாலமும் அமைக்க மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பணிகள் துவங்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பொதுமக்கள்–தனியார் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வராமலே இருந்த நாமக்கல், திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, மன்னார்குடி, ராணிப்பேட்டை, சங்கரன்கோவில், திருமங்கலம் ஆகிய நகராட்சிகளில் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் ரூ.267 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 2021–2022 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கருணை உள்ளத்துடன் வழங்கப்பட்ட, வணிக மையத்துடன்கூடிய திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைக்கும் பணி ரூ.350 கோடி மதிப்பீட்டில் துரிதமாக நடைபெற்று வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டில் திருப்பூர், திருவள்ளூர், பொள்ளாச்சி, இராமநாதபுரம், ஓசூர், கூடலூர் (தேனி), அரியலூர், வடலூர், வேதாரண்யம், மேலூர், பட்டுக்கோட்டை, குளச்சல், சிதம்பரம், ஆற்காடு, உசிலம்பட்டி, மேட்டூர், எடப்பாடி ஆகிய 17 புதிய பேருந்து நிலையங்களும், முசிறி, ஜெயங்கொண்டம், கோபிசெட்டிபாளையம், மானாமதுரை, பழனி, கொடைக்கானல், அருப்புக்கோட்டை, பள்ளப்பட்டி, வாலாஜாபேட்டை, ஆத்தூர், குளித்தலை, இராமேஸ்வரம், சிவகங்கை, கூத்தாநல்லூர், சாத்தூர், களக்காடு, இராஜபாளையம், தருமபுரி, துறையூர், பெரியகுளம், சிதம்பரம், மதுரை மாநகராட்சியில் ஆரப்பாளையம் மற்றும் மாட்டுத்தாவணி ஆகிய 23 பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும், கடந்த இரண்டாண்டுகளில் பேரூராட்சிகளில் 25 பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.62 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 3–40

பெருநகர சென்னை மாநகராட்சியில் 161 தகனமேடைகள் உள்ளன. தற்போதுள்ள தகனமேடைகளை படிப்படியாக நவீன எரிவாயு (LPG) தகனமேடைகளாக மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 2 ஆண்டுகளில் இதுவரை 38 பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ.111 கோடி மதிப்பீட்டில், 86 நவீன எரிவாயு மயானங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 25 நகராட்சிகளில் புதிய எரிவாயு தகன மேடைகளும், 17 நகராட்சிகளில் ஏற்கெனவே உள்ள சாதாரண தகன மேடைகள் நவீன எரிவாயு தகன மேடைகளாகவும் இந்த ஆண்டே மாற்றியமைக்கப்படும்.

பேரூராட்சிகளில் 70 நவீன எரிவாயு தகன மேடைகள், ரூ.99 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில்,மேலும்,25 நவீன தகன மேடைகள் அமைக்கப்படவுள்ளன.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், ரூ.309 கோடி மதிப்பீட்டில் 73 புதிய சந்தைகளும், ரூ.106 கோடி மதிப்பீட்டில் 33 சந்தைகள் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அதேபோல், பேரூராட்சிகளில் 30 சந்தைகள் ரூ.83 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 10 சந்தைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.176 கோடி மதிப்பீட்டில், 89 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் நூலகங்கள், வெறும் நூலகங்களாக மட்டும் செயல்படாமல், வேலை நாடுவோர், திறன்மிக்க மாணாக்கர்கள் நன்கு பயில்கின்ற பயிற்சி அரங்கங்களாகவும் செயல்படும். இந்த நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் நகர்ப்புர மாணாக்கர்கள், வேலை நாடுவோர் மட்டுமின்றி, கிராமப்புற இளைஞர்களும் இவற்றைப் பயன்படுத்தி பயன்பெறும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, 19 மாநகராட்சிகள் மற்றும் 129 நகராட்சிகளில், ரூ.395 கோடி மதிப்பீட்டில், 3 இலட்சத்து 50 ஆயிரம் எண்ணிக்கையிலான தெரு விளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றுதல் மற்றும் ரூ.183 கோடி மதிப்பீட்டில் 1 இலட்சத்து 11 ஆயிரம் எண்ணிக்கையிலான புதிய தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், 439 பேரூராட்சிகளில் ரூ.156 கோடி மதிப்பீட்டில் 2 இலட்சத்து 67 ஆயிரம் எண்ணிக்கையிலான தெரு விளக்குகளை LED தெரு விளக்குகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

பயோமைனிங்மூலம் தேக்க திடக் கழிவுகளைக் கையாண்டு, நிலத்தினை மீட்டெடுக்கும் பணி பல்வேறு உள்ளாட்சிகளில் நடைபெற்று வருகின்றன. கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக, 225 ஏக்கர் பரப்பளவில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் தேங்கியுள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 34 இலட்சம் கன மீட்டர் ஆகும். இந்நிலத்தை பயோமைனிங் முறையில் மீட்டெடுக்க ரூ.351 கோடி மதிப்பீட்டில் இதுவரை 20.54 இலட்சம் கன மீட்டர் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இத்திட்டம் ஜூலை 2024-ல் முடிவுறும்போது 200 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும்.

சென்னை மாநகரத்தின் வடக்குப் பகுதியில், 343 ஏக்கர் பரப்பளவில், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில், 66.52 இலட்சம் மெட்ரிக் டன் பழைய குப்பைக் கழிவுகள் தேங்கியுள்ளன. இந்நிலத்தை பயோமைனிங் முறையில் மீட்டெடுக்க, ரூ.648 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டம் முடிவுறும்போது 252 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும்.

122 உள்ளாட்சிகளில் குவிந்துள்ள தேக்க திடக் கழிவுகளின் மொத்த அளவு 106 இலட்சம் கன மீட்டர் ஆகும். ரூ.600 கோடி மதிப்பீட்டில் 93 இலட்சம் கன மீட்டர் தேக்க திடக் கழிவுகளை அகற்றுவதற்காக 18 மாநகராட்சிகள் மற்றும் 104 நகராட்சிகளில் பயோமைனிங் முறை மேற்கொள்ளப்பட்டு, 64 இடங்களில் பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 58 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் முடிவுறும்போது சுமார் 950 ஏக்கர் நிலங்கள் மீட்கப்படும்.

131 பேரூராட்சிகளில் குவிந்துள்ள தேக்க திடக் கழிவுகளின் மொத்த அளவு 11.6 இலட்சம் கன மீட்டர் ஆகும். ரூ.70 கோடி மதிப்பீட்டில் தேக்க திடக்கழிவுகளை அகற்றுவதற்காக, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 28 பேரூராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 103 பேரூராட்சிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பயோமைனிங் முறையில் பணிகள் முடிவுறும்போது, 257 ஏக்கர் நிலங்கள் மீட்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மொத்தம் 9,972 பூங்காக்களும், 1,034 திறந்தவெளி இடங்களும் உள்ளன. இவற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம்

435 பூங்காக்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன. 441 பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2023–2024 ஆம் ஆண்டில் மேலும் 339 பூங்காக்கள் மேம்படுத்தப்படவுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள 210 நீர்நிலைகளில், கடந்த 2 ஆண்டுகளில் 61 நீர்நிலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதர மாநகராட்சி, நகராட்சிகளில் உள்ள 2,477 நீர்நிலைகளில் 269 நீர்நிலைகள் ரூ.233 கோடி மதிப்பீட்டில் கடந்த 2 ஆண்டுகளில் புனரமைக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 2,212 குளங்களில், ரூ.171 கோடி மதிப்பீட்டில், 565 குளங்கள் கடந்த 2 ஆண்டுகளில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளில் மொத்தம் 8,744 சமுதாயக் கழிப்பறைகளும், 3,205 பொதுக் கழிப்பறைகளும் செயல்பட்டு வருகின்றன. தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன்கீழ், நகர்ப்புர உள்ளாட்சிகளில் நகர சுகாதார செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, 360 சமூகக் கழிப்பறைகள், 417 பொதுக் கழிப்பறைகள் மற்றும் 610 சிறுநீர் கழிப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 3–45

பெருநகர சென்னை மாநகராட்சியில், மண்டலம் 5, 6 & 9–களில் 372 கழிப்பறைகளின் செயல்பாட்டை தனியார் பங்களிப்புடன் மேம்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று, இனி வருங்காலங்களில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் தனியார் பங்களிப்புடன் கழிவறை செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

குப்பைகள் இல்லா நகரங்களை உருவாக்க, இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் 3–6–2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது. உருவாகின்ற குப்பைகளைத் தரம் பிரித்து அளித்தல், திடக்கழிவு மேலாண்மையில் பொது மக்கள், தன்னார்வ நிறுவனங்கள், தன்னார்வலர்கள் பங்களிப்பு மற்றும் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பெருமளவில் பொது மக்கள் பங்கேற்புடன் இந்த விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டு சென்னையில் பெய்த பெரும் மழையில் தேங்கிய தண்ணீரால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகக் கள ஆய்வு மேற்கொண்டு, எதிர்வரும் காலங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு. வெ. திருப்புகழ் அவர்களின் தலைமையில் பல நிபுணர்கள் அடங்கிய வெள்ளத் தடுப்பு மேலாண்மைக் குழுவினை உடன் அமைத்தார்கள்.

அதனடிப்படையில், சுமார் 220 கி.மீ. நீளத்திற்கு ரூ.700 கோடியிலும், கொசஸ்தலையாறு, கோவளம் வடிநிலப் பகுதிகளில் 600 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,896 கோடியிலும் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டன. இதனால், சென்னை மாநகரில், சிறிதளவுகூட தண்ணீர் தேங்க வாய்ப்பில்லாமல் போனது. இப்பணியினை பொதுமக்களும், ஊடகங்களும் வெகுவாக வரவேற்றுப் பாராட்டினர்.

வடசென்னையில், கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி மற்றும் தென்சென்னையில் கோவளம் வடிநிலப் பகுதிகளில் எஞ்சியுள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்படும். சென்னை புறநகர்ப் பகுதிகளில், வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு, தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி மற்றும் மாங்காடு, குன்றத்தூர், திருவேற்காடு நகராட்சிகளில் 30.31 கி.மீ. நீளத்திற்கு ரூ.82 கோடி மதிப்பீட்டில் 21 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. மேலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ.320 கோடியில் மழைநீர் வடிகால் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும் 135 ஆண்டுகள் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை மாநகரில் உள்ள விக்டோரியா பொது மண்டபம், அதன் பழைய தொன்மை மாறாமல் புத்துயிர் பெறும் வகையில் ரூ.33 கோடியில் புனரமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, இந்த ஆண்டு என்னென்ன பணிகளை எடுத்துக்கொள்ளவிருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அறிவிப்புகள்

1. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 24x7 குடிநீர்த் திட்டம்

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் விநியோகம் முறையாக, தொடர்ந்து 24 மணி நேரமும் கிடைக்கும் என்ற நிலையினை அடைந்திட பரீட்சார்த்த முறையில் திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், வேலூர், கடலூர், தாம்பரம், ஈரோடு மற்றும் நாகர்கோவில் ஆகிய 9 மாநகராட்சிகளிலும், காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராஜபாளையம் ஆகிய 3 நகராட்சிகளிலும் சுமார் 5,000 முதல் 10,000 வரையிலான குடிநீர் இணைப்புகளுக்கு 24X7 குடிநீர்த் திட்டம் ரூ.420 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

2. செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் (Bio CNG) அமைத்தல்

*மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், தஞ்சாவூர், நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 9 மாநகராட்சிகளில் உயிரி எரிவாயு தயாரிக்க, பொது–தனியார் பங்களிப்புடன் தினமும் 930 மெட்ரிக் டன் குப்பைகளைக் கையாளும் திறன் கொண்ட புதிய (*Bio CNG*) பயோமாஸ் எரிவாயு தயாரிக்கும் ஆலைகள் அமைக்கப்படும்.*

3. கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகளைச் செயலாக்கும் ஆலைகள் அமைத்தல்

*கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய 6 மாநகராட்சிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகளைச் செயலாக்கும் ஆலைகள் (*Construction and Demolition Waste*) ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.*

4. முழு தானியங்கி வளமீட்பு மையங்கள் அமைத்தல்

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், ஈரோடு மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளில் தினமும் 1,300 M.T. *உலர் கழிவுகளை பாதுகாப்பான முறையில் பிரித்து அப்புறப்படுத்தும் வகையில் முழு தானியங்கி வளமீட்பு மையங்கள் (*Automated Material Recovery Facilities*) அமைக்கப்படும்.*

5. புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல்

திண்டுக்கல், நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி (ஸ்ரீரங்கம் பகுதியில்) ஆகிய 3 மாநகராட்சிகள் மற்றும் நாகப்பட்டினம், மாங்காடு, ஸ்ரீவில்லிபுத்தூர், கொமாரபாளையம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, திருவாரூர், உளுந்தூர்பேட்டை மற்றும் பத்மனாபபுரம் ஆகிய 9 நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் ரூ.174 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல்

மேட்டுப்பாளையம், பெரம்பலூர், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, காரைக்குடி, காயல்பட்டினம், குழித்துறை, ராசிபுரம், செங்கோட்டை, மதுராந்தகம், திருவத்திபுரம் மற்றும் குன்னூர் ஆகிய 12 நகராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்கள் ரூ.42.80 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் மேம்படுத்தப்படும்.

7. புதிய நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் குறைந்தபட்சம் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும் என்ற இவ்வரசின் கொள்கையின்படி இந்த ஆண்டு மேலும் 25 புதிய நவீன எரிவாயு தகன மேடைகள் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. தகன மேடைகளை மேம்படுத்துதல்

மதுரை, சேலம், நாகர்கோவில் மற்றும் தாம்பரம் ஆகிய 4 மாநகராட்சிகள் மற்றும் ஒட்டன்சத்திரம், திருமங்கலம், தென்காசி, பழனி, கம்பம், உசிலம்பட்டி, தேவகோட்டை மற்றும் புளியங்குடி ஆகிய 8 நகராட்சிகளில் உள்ள 17 பழைய தகன மேடைகள் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடைகளாக மாற்றப்படும்.

9. பூங்காக்களை அமைத்தல்

நகர்ப்புரங்களில் பசுமை இயற்கை வளங்களை மேம்படுத்த மற்றும் பொது மக்கள் பொழுதுபோக்கிற்குப் பயன்படும் வகையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 307 பூங்காக்கள் ரூ.111.02 கோடி மதிப்பீட்டில் புதிதாக ஏற்படுத்த ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 100 புதிய பூங்காக்கள் ரூ.60.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. நீர்நிலைகள் மேம்படுத்துதல்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும், நீர் ஆதாரத்தினை உயர்த்துதல் என்ற இவ்வரசின் கொள்கையின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னை நீங்கலாக பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 269 நீர்நிலைகள் ரூ.233.17 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 50 நீர்நிலைகள் ரூ.42 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

பிற்பகல் 3–50

11. பள்ளிக் கட்டடங்கள் மேம்பாடு

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு, தேவையின் அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் பழைய கட்டடங்கள் புனரமைக்கப்படும்.

12. குடிநீர் அபிவிருத்திப் பணிகள்

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தரமான பாதுகாப்பான குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்க பல்வேறு முயற்சிகளை இவ்வரசு எடுத்துவருகிறது. இந்நிதியாண்டில் இராசிபுரம், ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு நகராட்சிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடின்றி விநியோகிக்க ரூ.22.69 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் செயல்படுத்தப்படும்.

13. புதிய சந்தைகள் அமைத்தல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.219.07 கோடி மதிப்பீட்டில் 40 புதிய சந்தைகள் அமைத்திடவும், ரூ.91.03 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே உள்ள 20 சந்தைகளை மேம்படுத்திடவும் ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 28 நகராட்சிகளில் ரூ.123.80 கோடி மதிப்பீட்டில் புதிய வாரச் சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகள் அமைக்கப்படும்.

திருத்தணி, மேட்டுப்பாளையம், விழுப்புரம், சத்தியமங்கலம், பள்ளிப்பாளையம், பவானி, உதகமண்டலம், கூத்தாநல்லூர், லால்குடி, சீர்காழி, திருவாரூர், காரைக்குடி, சிவகங்கை, அருப்புக்கோட்டை, காயல்பட்டினம், குழித்துறை, தென்காசி,

திருவள்ளூர், இராமேஸ்வரம், கிருஷ்ணகிரி, தாரமங்கலம், குமாரபாளையம், ஆத்தூர், காரமடை ஆகிய 24 நகராட்சிகளில் ரூ.123.80 கோடி மதிப்பீட்டில் 28 புதிய சந்தைகள் அமைக்கப்படும்.

14. அறிவுசார் மையங்கள் அமைத்தல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கற்றல் திறன் மேம்படுத்துதல் மற்றும் போட்டித் தேர்வர்கள் பயன்பெறும் வகையில் 100 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைத்தல் என்ற நோக்கோடு இந்த அரசு தற்போது 89 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்களை அமைத்துள்ளது. மேலும், இந்த ஆண்டு கூடுதலாக 11 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

15. மண் சாலைகளைத் தரம் உயர்த்துதல்

மண் சாலைகளை, அனைத்து பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகளாக மாற்றும் நோக்கில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள 400 கி.மீ. மண் சாலைகள் ரூ.288 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை, கான்கிரீட் அல்லது பேவர்பிளாக் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

16. இயற்கை உரத்திற்கான தரக் குறியீடு

நகர்ப்புரங்களில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடங்களில் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும்பொருட்டு, உரத்தின் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட இயற்கை உரத்தினை “செழிப்பு” என்ற பெயரில் தரக் குறியீடு நிர்ணயம் செய்து அனைத்து நகரங்களிலும் விற்பனை செய்து வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்படும்.

அனைத்து மக்கும் குப்பைகளும் உரக் கூடங்களில் உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும்பொருட்டு, உரத்தின் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து பரிசோதனை செய்யப்பட்ட இயற்கை உரமானது அனைத்து நகரங்களிலும் விற்பனை செய்து வருமானம் ஈட்டப்படுகின்ற வகையில் “செழிப்பு” என்ற பெயரில் தரக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்படும்.

17. சுற்றுலா நகரங்கள் மேம்படுத்துதல்

சுற்றுலா நகரங்கள் மற்றும் ஆண்டுதோறும் சிறப்பு விழாக்கள் நடைபெறும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும் மற்றும் மேம்படுத்திடவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி வழங்கப்படும்.

18. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளைத் தரம் உயர்த்துதல்

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள், அதன் ஆண்டு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, இரண்டாம் நிலை, முதல் நிலை, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை என 4-படி நிலைகளைக் கொண்டுள்ளன. பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணிகளைக் கருத்திற்கொண்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் தரம் உயர்த்தப்படும்.

திருத்தணி, நந்திவரம்-கூடுவாஞ்சேரி, காங்கேயம், திருமுருகன்பூண்டி, வேதாரண்யம், இராமேஸ்வரம், ஜெயங்கொண்டம் ஆகிய 7 இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல்நிலை நகராட்சிகளாகவும், திருவள்ளூர், பூந்தமல்லி, கள்ளக்குறிச்சி, தாராபுரம், திருவாரூர், போடிநாயக்கனூர், தென்காசி ஆகிய 7 முதல்நிலை நகராட்சிகள் தேர்வு நிலை நகராட்சிகளாகவும், பெரம்பலூர் இரண்டாம் நிலை நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகவும், திருவேற்காடு, விழுப்புரம், மயிலாடுதுறை, தேனி-அல்லிநகரம் ஆகிய 4 தேர்வு நிலை நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

இடைக்கழிநாடு, கீழ்குளம், சாயல்குடி ஆகிய மூன்று இரண்டாம் நிலை பேரூராட்சிகள் முதல் நிலை பேரூராட்சிகளாகவும், மரக்காணம், தாடிக்கொம்பு, வடமதுரை, செட்டியார்பட்டி, காரியாப்பட்டி, வாசுதேவநல்லூர், உண்ணாமலைக்கடை ஆகிய 7 முதல் நிலை பேரூராட்சிகள் தேர்வு நிலை பேரூராட்சிகளாகவும், மீஞ்சூர், அரூர், ஓமலூர், வேலூர், அந்தியூர், சென்னிமலை, கருமாண்டிசெல்லிபாளையம், கண்ணம்பாளையம், வீரபாண்டி, குறிஞ்சிப்பாடி, மண்ணச்சநல்லூர், நத்தம், நிலக்கோட்டை, பரவை, ஆரல்வாய்மொழி ஆகிய 15 தேர்வு நிலை பேரூராட்சிகள் சிறப்பு நிலை பேரூராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கான அறிவிப்புகள்

19. பள்ளிக் கட்டடங்களை மேம்படுத்துதல்

பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஏற்கெனவே, உள்ள 281 பள்ளிகளில், 39 பள்ளிகளை மேம்படுத்த கடந்த இரண்டு ஆண்டுகளில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள 139 பள்ளிகள் புதிதாக பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த ஆண்டும் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடங்கள் மேம்படுத்தப்படும்.

20. பெருங்குடியில் புதிதாக சுற்றுச்சூழல் பூங்கா அமைத்தல்

சென்னை மாநகரின் தெற்குப் பகுதியில், 225 ஏக்கர் பரப்பளவில் உள்ள பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில், பழைய குப்பை கழிவுகளை உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (Biomining) முறையில் நிலத்தை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வாறு மீட்டெடுக்கப்படும் நிலத்தின் ஒரு பகுதியில் தொல்காப்பிய பூங்காவைப் போன்று புதிதாக ஒரு சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

21. சமுதாய நலக் கூடங்கள் அமைத்தல்

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் கொளத்தூர், இராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, வேளச்சேரி மற்றும் ஆலந்தூர் ஆகிய 7 இடங்களில் தலா ரூ.5 கோடி வீதம் மொத்தம் ரூ.35 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக் கூடங்கள் அமைக்கப்படும்.

22. பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 786 பூங்காக்கள் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தில், 168 பூங்காக்கள் மற்றும் 68 விளையாட்டுத் திடல்கள், புதிதாக அமைக்க மற்றும் மேம்படுத்த, ஆணைகள் பெறப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில், மேலும்,

50 பூங்காக்கள் மற்றும் 10 விளையாட்டுத் திடல்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

23. நீர்நிலைகளைப் புனரமைத்தல்

நீர்நிலைகளைப் புனரமைப்பதன்மூலம் அதன் சேமிப்புத் திறன் அதிகரிப்பதுடன் நிலத்தடி நீர் மட்டமும் உயரும். பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ், 12 நீர்நிலைகள் ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க ஆணைகள் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து, இந்த ஆண்டிலும் மேலும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் சென்னையிலுள்ள நீர்நிலைகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள நீர்நிலைகள் புனரமைக்கப்படும்.

24. சென்னையில் புலியூர் கால்வாய் புனரமைத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள புலியூர் கால்வாய் என்கிற டிரஸ்ட்புரம் கால்வாய் மத்திய சென்னையில் முக்கிய நீர்வழி ஆகும். மழைக் காலங்களில் மழைநீர் பெருமளவு புலியூர் கால்வாய் வழியாக கூவம் நதியில் கலக்கிறது. இந்தக் கால்வாயைச் சீரமைப்பதால் கால்வாயின் கொள்ளளவு அதிகரிக்கப்படுவதுடன், அப்பகுதியில் மழைநீர் தேங்குவது தவிர்க்கப்படும். இக்கால்வாய் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் ரூ.14.18 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

25. பேட்டரிமூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் வீடுகளில் சேரும் குப்பைகளை வீடு வீடாகச் சென்று நேரில் சேகரிக்கவும் மற்றும் குப்பை சேகரிக்கும் பணியினை துரிதப்படுத்தவும் புதிதாக 350 பேட்டரி வாகனங்கள் ரூ.6.90 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

26. செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன் (Bio CNG) அமைத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் உருவாகும் ஈர மற்றும் உணவுக் கழிவுகளிலிருந்து உயிரி எரிவாயு தயாரிக்க, தற்போது

இரண்டு பகுதிகளில் 100 MT திறன்கொண்ட செறிவூட்டப்பட்ட உயிரி எரிவாயு கலன்கள் இயங்கி வருகின்றன. 2022 ஆம் ஆண்டு நான்கு ஆலைகளுக்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இரண்டு ஆலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிதியாண்டில் பொது–தனியார் பங்களிப்புடன் தினமும் 500 MT திறன் கொண்ட புதிய Bio CNG ஆலை வடசென்னையில் நிறுவப்படும்.

27. நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 211 மயானங்கள் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், 38 தகன மேடைகளை, நவீன எரிவாயு தகனமேடைகளாக மாற்றும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில், மேலும் 15 இடங்களில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய எரிவாயு தகனமேடைகள் அமைக்கப்படும்.

28. தொல்காப்பியப் பூங்கா–மறுமேம்பாடு

அடையாறு உப்பங்கழியில், 58 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாகச் செயல்பட்டுவரும் தொல்காப்பியப் பூங்காவில் பார்வையாளர்கள் மையம், நடைபாதை, பார்வையாளர் தளம் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் ரூ.42.45 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதிமூலம் மேற்கொள்ளப்படும்.

பேரூராட்சிகளுக்கான அறிவிப்புகள்

29. பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள்

பேரூராட்சிகளிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டுக் குழாய் இணைப்பு வழங்கிட ஏதுவாக, குடிநீர் ஆதாரங்கள் மற்றும் விநியோகத்தினைச் சீரமைக்கவும், பெண்ணாகரம், மூலனூர், ஆனைமலை, காட்டுமன்னார்கோவில், ஸ்ரீமுஷ்ணம், அரகண்டநல்லூர், வளவனூர், கொறடாச்சேரி, காட்டுப்புத்தூர், அரும்பாவூர், உடையார்பாளையம், பொன்னமராவதி, பாலமேடு, எஸ்.கொடிக்குளம், ஓடைப்பட்டி, வடுகப்பட்டி, இளையான்குடி, திருப்பத்தூர், அச்சம்புத்தூர் மற்றும் பண்பொழி ஆகிய 20 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள் ரூ.345 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

30. அனைத்து கட்டமைப்புகளுடன் 10 பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல்

சின்னாளப்பட்டி, அந்தியூர், அலங்காநல்லூர், ஓமலூர், தம்மம்பட்டி, சிவகிரி, ஆடுதுறை, நாரவாரிக்குப்பம், சாத்தான்குளம் மற்றும் காரியாப்பட்டி ஆகிய 10 பேரூராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்கள், அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

31. 10 பேரூராட்சிகளில் சந்தைகள் அமைத்தல்/புதுப்பித்தல்

மோப்பேரிப்பாளையம், நத்தம், பாளையம், தரங்கம்பாடி, ஆலங்குடி, புதுவயல் ஆகிய 6 பேரூராட்சிகளில் புதிதாக சந்தைகள் அமைத்தல் மற்றும் கம்பைநல்லூர், கருங்கல், மருதூர், பள்ளிகொண்டா ஆகிய 4 பேரூராட்சிகளில் ஏற்கெனவே உள்ள சந்தைகள் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

32. பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையினைக் கருத்திற்கொண்டு நடப்பாண்டில், 25 பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் ரூ.42.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

33. மண் சாலைகளைத் தரம் உயர்த்துதல்

மண் சாலைகளை அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலைகளாக மாற்றும் நோக்கில் பேரூராட்சிகளில் உள்ள 390 கி.மீ. மண் சாலைகள் ரூ.285 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை, கான்கிரீட் அல்லது பேவர் பிளாக் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

பிற்பகல் 3–55

34. நபார்டு திட்டத்தின்கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள்

விவசாய விளைபொருட்களை நகர்ப் பகுதிகளில் சந்தைப்படுத்த ஏதுவாக, நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளிலுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

35. உபயோகப்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல்

நகர்ப்புர உள்ளாட்சிகளில் நிலத்தடி நீரை பாதுகாக்கும் வண்ணம், பேரூராட்சிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் நீர்நிலைகளில் கலந்திடாவண்ணம், முதற்கட்டமாக 20 பேரூராட்சிகளில், ரூ.50 கோடி மதிப்பீட்டில் மறுசுழற்சி செய்து மேம்படுத்தப்படும்.

36. நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் தற்போது 37 பேரூராட்சிகளில் மட்டும் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அனைத்து பேரூராட்சிகளுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்படும் என்ற இலட்சிய நோக்கில் இந்த ஆண்டு 50 பேரூராட்சிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.

37. வளம் மீட்பு பூங்காவில் சமுதாயத் தோட்டம் அமைத்தல்

நகர்ப்புர உள்ளாட்சிகளை பசுமையாக்கி இயற்கைச் சூழலை மேம்படுத்தவும் மற்றும் குடியிருப்புகளில் தோட்டங்களை அமைக்க, பொதுமக்களை ஊக்குவிக்கும் விதமாகவும், ஆண்டிப்பட்டி, சோழவந்தான், வல்லம், மாமல்லபுரம், கருங்குழி, தரங்கம்பாடி, உத்திரமேரூர், பெரியநாயக்கன்பாளையம், கோத்தகிரி மற்றும் மண்ணச்சநல்லூர் ஆகிய 10 பேரூராட்சிகளில் வளம் மீட்பு பூங்காவில் சமுதாயத் தோட்டங்கள் அமைக்கப்படும்.

38. நீர்நிலைகள் மேம்படுத்துதல்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்கி, நீர் ஆதாரத்தினை உயர்த்துதல் என்ற இவ்வரசின் கொள்கையின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில், பேரூராட்சிகளில் உள்ள 565 நீர்நிலைகளை மேம்படுத்திட, ஆணைகள் வழங்கப்பட்டு, ரூ.170.53 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 100 நீர்நிலைகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

39. பூங்காக்கள் அமைத்தல்

நகர்ப்புரங்களில் பசுமை இயற்கை வளங்களை மேம்படுத்தவும் மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்குப் பயன்படும் வகையிலும், பேரூராட்சிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 514 பூங்காக்கள் ரூ.96.43 கோடி மதிப்பீட்டில் புதிதாக ஏற்படுத்த

ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்நிதியாண்டில் மேலும் 100 புதிய பூங்காக்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

40. சமுதாயக் கூடங்கள் புனரமைத்தல்

பொதுமக்கள் பயன்படுத்தும் விதமாகவும், பேரூராட்சிகளின் வருமானத்தை உயர்த்திடும் பொருட்டும், 50 சமுதாயக் கூடங்கள் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கான அறிவிப்புகள்

41. சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சேவைகள், சென்னை பெருநகரப் பகுதிகளில் (CMA) அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்துவதற்கான ஆய்வு

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு அப்பால், சென்னை பெருநகரப் பகுதிகளில் (CMA) அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும், சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சேவைகளை நீட்டிக்க, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அதற்குத் தேவையான உட்கட்டமைப்புகள், மனித வளம், வருவாய் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

42. இராஜீவ்காந்தி சாலையில் உள்ள பகுதிகளுக்கான குடிநீர் மேம்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி 14 மற்றும் 15–ல் அமைந்துள்ள இராஜீவ் காந்தி சாலை, எம்.ஜி.ஆர். நகர் பிரதான சாலை, தரமணி இணைப்பு சாலை மற்றும் 200 அடி சாலை ஆகிய இடங்களுக்கு ரூ.57 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

43. கூவம் ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் கூவம் ஆற்றின் 23 இடங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பணிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2023 மார்ச் 30] [திரு. கே.என். நேரு]

44. கண்ணகி நகர் மற்றும் கன்னிகாபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளுக்கு குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி 15–ல் உள்ள கண்ணகி நகர் மற்றும் பகுதி 6–ல் உள்ள கன்னிகாபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளுக்கு, புதிய குழாய்களைப் பதித்து, குழாய் அமைப்புகளுடன்கூடிய குடிநீர் தொட்டிகள் அமைத்து, குழாய்மூலம் ஒவ்வொரு குடியிருப்புக்கும் குடிநீர் விநியோகிக்கும் பணிகள் ரூ.89 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

45. புழல் மற்றும் சூரப்பட்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் புனரமைத்தல்

புழல் மற்றும் சூரப்பட்டில் அமைந்துள்ள, நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் மற்றும் 14 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

46. கொருக்குப்பேட்டை பகுதிக்கான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி 4–ல் அமைந்துள்ள கொருக்குப்பேட்டையில், 10 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட 25 தெருக்களுக்கு புதிய குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

47. பெருநகர சென்னை மாநகராட்சி கொளத்தூர் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி கொளத்தூர் பகுதியில் சுமார் 20 கி.மீ. நீளத்திற்கு, கழிவுநீர் குழாய்களை மேம்படுத்தும் பணி, ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

48. பெருநகர சென்னை மாநகராட்சி திருவல்லிக்கேணி–சேப்பாக்கம் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி திருவல்லிக்கேணி–சேப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பணிமனைகள் 62, 63, 115 & 116–ல் உள்ள பிரதான கழிவுநீர் குழாய்களை மேம்படுத்தும் பணி ரூ.7 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

49. பெருநகர சென்னை மாநகராட்சி துறைமுகம் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி 5–ல் அமைந்துள்ள பணிமனைகள் 57 மற்றும் 60–ல், பிரதான கழிவுநீர் குழாய்களை மேம்படுத்தும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

50. பெருநகர சென்னை மாநகராட்சி எழும்பூர் பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி 5, ஈ.வி.கே. சம்பத் சாலையில் சாலையோர கழிவுநீரகற்று நிலையம் அமைக்கும் பணி மற்றும் உந்து குழாயை புரசைவாக்கம் கழிவுநீரகற்று நிலையம் வரை பதிக்கும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

51. சென்னை பெருநகரின் கழிவுநீர் கட்டமைப்புகளை நிகழ்நிலை முறையில் கண்காணித்தல்

*சென்னை பெருநகரிலுள்ள அனைத்து கழிவுநீர் கட்டமைப்புகளின் செயல்பாடுகளும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரித்து வெளியேற்றப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தர அளவுகளும், நிகழ்நிலை முறையில் (*real–time*) ரூ.8 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் கண்காணிக்கப்படும்.*

52. சென்னை குடிநீர் வாரியத்தில் மின்னாற்றல் சேமிப்பிற்கான தணிக்கையை மேற்கொள்ளுதல்

சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் விநியோக மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீரிறைக்கும் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை

சுத்திகரிப்பு நிலையங்களில் (TTRO) மின்னாற்றல் சேமிப்பிற்கான தணிக்கை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.3 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கான அறிவிப்புகள்

53. குடிநீர் விநியோகத்தைக் கண்காணிக்க மைய கண்காணிப்பு முறை அமைத்தல் (Centralised Monitoring System)

உயிர் நீர் இயக்கத்தின் (Jal Jeevan Mission) கீழ், செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், குடிநீர் அளவுமானிகள் பொருத்தி, குடிநீர் விநியோகத்தை நேரடியாகக் கண்காணிக்க, வாரிய தலைமை அலுவலகத்தில் மைய கண்காணிப்பு முறை அமைக்கப்படும்.

54. செயல்திறன் குறைந்த மின்னிறைப்பான்களை (Pumpsets) ஆற்றல் திறன் உள்ள புதிய மின்னிறைப்பான்களாக மாற்றி அமைத்தல்

வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 15 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டுவரும் செயல்திறன் குறைந்த 100 குதிரைத் திறன் மற்றும் அதற்கு மேலுள்ள மின்னிறைப்பான்களை (Pumpsets) படிப்படியாக ஆற்றல் திறன் உள்ள புதிய மின்னிறைப்பான்களாக (Energy efficient pumpsets) மாற்றி/புனரமைப்பு செய்து, வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

55. குடிநீர் அளவுமானிகள் (bulk water meters) பொருத்தி, இணையவழி செயல்திறன் (Internet of Things) மூலம் கண்காணித்தல்

வாரியத்தால் குடிநீர் வழங்கப்படும் ஊரக மற்றும் நகர தரைமட்ட தொட்டிகளில் குடிநீர் அளவுமானிகள் பொருத்தி, இணையவழி செயல்திறன் (Internet of Things) மூலம் குடிநீர் அளவு கண்காணிக்கப்படும்.

56. குடிநீர் மாதிரிகளைப் பரிசோதித்தல்

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும்பொருட்டு, 7 இலட்சம் குடிநீர் மாதிரிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசோதனை செய்யப்படும்.

57. கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், தாளக்கரை ஊராட்சியில், 14 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 9.70 கோடி மதிப்பீட்டிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தேவியகரம் ஊராட்சிக்கு ரூபாய் 3.75 கோடி மதிப்பீட்டிலும், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 8 ஊராட்சிகளுக்கு ரூபாய் 19.20 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், தெரிசனங்கோப்பு அருகில் பழையாற்றை நீராதாரமாகக் கொண்டு கடுக்கரை ஊராட்சி, திடல் ஊராட்சி மற்றும் காட்டுப்புதூர் ஊராட்சிகளுக்கு ரூபாய் 9.50 கோடி மதிப்பீட்டிலும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

58. ஈரோடு மாவட்டம், அந்தியூர் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்குச் சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்

ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

பிற்பகல் 4–00

மாண்புமிகு உறுப்பினர்கள் 248 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய பேருந்து நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; தரமுயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தளவில் கிட்டத்தட்ட 36 இடங்களில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கி, அனைத்துப் பகுதி மக்களுக்கும் கொண்டு செல்கிற திட்டம் இந்த அரசால் இப்போது நிறைவேற்றப்பட அனைத்துத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 38,000 கோடி ரூபாய் செலவிலே அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன என்பதைத் தெரிவித்து, ஏற்கெனவே 544 இடங்களில் கிட்டத்தட்ட 4.53 கோடி மக்கள் பயன்பெறும்வகையிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பல பகுதிகளிலே 20 ஆண்டு, 30 ஆண்டுகால

பழைய குழாய் உள்ள இடங்கள், அதேபோல, கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆகி, பழுதுபட்ட இடங்கள், சாலைகள் அமைப்பதால் பழுதுபட்ட குடிநீர்த் திட்டங்கள் என ஒவ்வொன்றாக தினந்தோறும் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசினுடைய நோக்கம், முழுமையாக அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும், அனைத்து இடங்களிலும் அந்த மழைநீர் வடிகால்கள், கழிவு நீரோடை, கழிவறை வசதி, விளக்கு வசதி, சாலை வசதி மற்றும் கொசுக்கள் வராமல் பார்த்துக்கொள்ளுதல் முதலியன ஆகும்.

நேற்று முன்தினம்கூட, சென்னையிலே சொன்னார்கள்; உடனடியாக கூவம் ஆற்றை திறந்துவிட வேண்டும், குறிப்பிட்ட ஒரு பகுதியிலே கொசுக்கள் அதிகமாக வருகிறதென்று சொன்னவுடன், உடனடியாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை அழைத்து, முகத்துவாரத்தை கொஞ்சம் திறந்து விடுங்கள் என்று சொல்லியிருக்கின்றோம். ஏனென்றால், கூவம், அடையாறு, Buckingham Canal ஆகிய மூன்றையும் சீரமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியார் பங்களிப்புடன் ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டியிருக்கின்றார்கள். இந்த 3 ஓடைகளிலும் 544 இடங்களிலே இந்தக் கழிவுநீர் கலக்கிறது. ஒரு மாபெரும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். 3 ஆறுகளிலும் கழிவுநீர் கலக்காமல், அனைத்தையுமே எடுத்துச்சென்று, Sewage Treatment Plant (STP) மூலம் மறுசீரமைப்பு செய்து, நல்ல நீராகக் கொண்டு வரக்கூடிய திட்டங்களும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குடிநீரைக் கொடுப்பதற்கும், கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கும் இங்கு சுகாதாரத்தோடு மக்கள் வாழ்வதற்கும் உரிய அனைத்து முயற்சிகளையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே இந்தத் துறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் ஒவ்வொன்றையும் நிச்சயமாக நாங்கள் கவனித்து, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் சொல்வதையும் எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ, அதை விரைவாகச் செய்து தருவோம் என்கிற உறுதியைத் தந்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமைகிறேன், வணக்கம்.

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைப்பதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு எங்கள் துறையினுடைய செயலாளர் மற்றும் எங்களுடைய துறை அதிகாரிகள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள். திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., கூடுதல் தலைமை செயலாளர், திரு. சந்திரகாந்த் பி. காம்பளே, இ.ஆ.ப., திரு. நீரஜ் மிட்டல், இ.ஆ.ப., திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. அவர்கள்--அவருடைய பணியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மிகவும் பாராட்டுகிறார்கள்—டாக்டர் எஸ். சுவர்ணா, இ.ஆ.ப. அவர்கள், திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., திரு. தட்சிணாமூர்த்தி, திரு. கிரண் குராலா மற்றும் திரு. பொன்னையா ஆகிய அனைத்து அலுவலர்களுக்கும், எங்கள் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,258,04,88,000/–, மூலதனக் கணக்கில் ரூ.9,498,46,29,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.719,08,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,953,53,34,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,607,82,46,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-3-2023), வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

57. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

58. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

106. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

107. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

108. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

109. 'நீர்வளத் துறையின் சாதனைகள்–2023' என்கிற சிறுநூல். (தமிழ்)

110. 'தனியார் துறை பணிநியமனங்கள்–அரசாங்கத்தின் சீரிய முயற்சி' என்கிற சிறுநூல். (தமிழ்)

111. நீர்வளத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

2023 மார்ச் 30]

112. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

113. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(114 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

தொலைநோக்குத் திட்டம்

சுத்தம், பசுமை, ஆரோக்கியச் சுற்றுச்சூழல், அடிப்படை வசதி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை நிலை அகற்றல் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி போன்றவற்றில் வெளிப்படைத் தன்மையுடன்கூடிய பங்கேற்பு அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலமாக அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதற்கு வழிவகுத்தல்.

1. முன்னுரை

தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2030 நகர்ப்புர வளர்ச்சியில், உள்கட்டமைப்பு மேம்பாடுமூலம் பொருளாதார மறுமலர்ச்சியின் இலக்கினை அடையும் இலட்சியத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. வரும் பத்தாண்டுகளில், 60 விழுக்காடு மக்கள் நகரங்களில் வசிப்பார்கள் என்ற மதிப்பிடப்பட்ட மக்கள்தொகைக் கணிப்புடன், நகர்ப்புர மக்கள் விகிதத்தில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. நகரமயமாக்குதலின் வேகம் நகர்ப்புர ஆளுகையையும், போதுமான திட்டமிடுதலையும், அதிகமாக விரைவுபடுத்த செய்கிறது.

நகர்ப்புர வெளிகள், வசதிகள் மற்றும் காலநிலை மாற்ற யதார்த்தத்தின் பின்னணிக்கு எதிராக அதனை உள்ளடக்கிய மற்றும் நிலையானதாக உள்ள சேவையினை வழங்க தமிழ்நாடு சரியாக சீரமைக்கப்பட்டுள்ளது. 74-வது அரசியலமைப்பு சட்ட திருத்தம், மேம்படுத்தப்பட்ட நிதி மேலாண்மை, விவேகமான வளங்கள் ஒதுக்கீடு, முடிவெடுப்பதில் பங்கேற்பு மற்றும் ஒட்டுமொத்த ஆளுகையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

[*2023 மார்ச் 30*

நகர்ப்புர வசதிகள் மற்றும் சேவைகள்

நகரமயமாக்குதலின் நேர்மறையான விளைவுகளுக்கு காரணங்கள், தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்பு முன்னேற்றங்கள், மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, தரமான கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை ஆகும். அவற்றிற்கு தொடர்ந்து சவாலாக இருப்பது, வீட்டுவசதி மற்றும் போக்குவரத்துத் துறைகளின் வளர்ச்சி, உறுதி செய்யப்பட்ட தரமான நீர் வழங்கல், வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற நகர்ப்புர சேவைகளின் அதிகரித்து வரும் தேவைக்கு அதனைத் தொடர்ந்து ஈடுகொடுப்பதாகும்.

ஒரு நடைமுறை இடைவெளி பகுப்பாய்வு, நகர திட்டங்களை வடிவமைத்தல் ஆகியவை மத்திய நிதியுதவி மற்றும் மாநில திட்டங்களின் பட்ஜெட் செலவினங்களை அணுகுவதற்கு பட்டியலிட்டுள்ளது. கூட்டு நிதியுதவி மற்றும் பொது மக்கள் பங்கேற்பு வெளியிடுதல் வாயிலாக பெறப்படும் பயனுள்ள நிதி ஒதுக்கீடுமூலம் திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் போன்ற முன்னுரிமை திட்டங்களுக்கு கவனம் செலுத்துகையில், தொழில்நுட்பம் மற்றும் விழிப்புணர்வு உரு வாக்குதல் ஆகியவற்றைப் பயன்படுத்தி காலநிலையை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துதல், பொது இடங்களை பசுமையாக்குதல், பூர்வீக விதைகளுடன் தோட்டத்தை ஊக்குவித்தல் ஆகியவை காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை எதிர்கொள்ள பின்பற்றப்படவேண்டிய சில உத்திகள் ஆகும்.

குறிப்பாக, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், பாலங்களை அழகுபடுத்துதல், பாரம்பரிய கட்டடங்களைப் புனரமைத்தல், தெருவிளக்குகள் போன்றவற்றிற்காக ஒதுக்கப்படும் நிதிகள்மூலம் நகரங்களில் வாழும் தன்மை மேம்படுத்தப்படவேண்டும். இந்த நடவடிக்கைகள், நகரமயமாக்கல் மற்றும் பொறுப்பான மாநிலம் என்ற அடையாளமாக இருக்க ஏற்படும் சவால்களை ஈடுசெய்ய உதவி புரிகிறது.

2023 மார்ச் 30]

குடிநீர் - அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை

துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று சுத்தமான, போதுமான மற்றும் வழங்கக்கூடிய நீர் விநியோகத்தை உறுதி செய்வதாகும். அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நகர குடிநீர் திட்டம்மூலம் குடிநீர் தேவை கண்டறியப்பட்டுள்ளது. அம்ரூத் 2.0 இன்கீழ் முக்கியமான குடிநீர் வழங்கல் திட்டங்கள் அதற்கேற்ப நீராதார பெருக்கம் மற்றும் இலக்குடன்கூடிய வீட்டு இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், சிங்கார சென்னை 2.0 மற்றும் அம்ரூத் 2.0 ஆகியவற்றின்கீழ் கடுமையாக மாசுபட்ட மற்றும் வண்டல் படிந்த நீர்நிலைகளை புத்துயிர் பெறச் செய்தல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

தொழிற்சாலைகளின் தேவைக்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்துவதன்மூலம் நீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் வருவாய், நீர் கிடைப்பதில் மேம்பாடு ஏற்படுவதுடன், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வலிமையை மேம்படுத்துகிறது. கோயம்பேட்டில் உள்ள எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு (TTRO) மற்றும் கொடுங்கையூரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் (STPs) சென்னையின் தொழில் நிறுவனங்களின் நீர் தேவையைப் பூர்த்தி செய்து, அரியதாகவுள்ள புதிய நீர் தேவையையும் தவிர்க்கிறது.

கழிவு மேலாண்மை – சுகாதாரத்தின் வழிகாட்டி

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவை குடியிருப்பாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. திரவ மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கு தீர்வு காண ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன்கீழ் நகர சுகாதாரத் திட்டங்களைத் தயாரித்துள்ளன.

வெளிப்புற நிதி நிறுவனங்களின் உதவியுடன் அம்ரூத் 2.0 திட்ட நிதியின்கீழ் பாதாள சாக்கடை அமைப்பினை வழங்கவும் மற்றும் கசடுநீர் மேலாண்மையை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் வழங்குவதும் மாநிலத்தின் நோக்கமாகும். இதேபோல், உயிரியல்

[2023 மார்ச் 30

அகழ்ந்தெடுத்தல் முறை மற்றும் உயிரியல் அகழ்ந்தெடுத்தல் தீர்வு முறைமூலம் மரபுசாரா கழிவுகள் மற்றும் உயிரி சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு நிலையம்மூலம் ஈரக்கழிவுகள் ஆகியவற்றை சமாளிக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் 7.1 மில்லியன் மக்கள்தொகை கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாட்டின் மிகப் பெரிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு ஆகும். நகர்ப்புரங்களில் பொது கழிப்பிடங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பினை மேம்படுத்த இந்த அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை மாநகரில், புதிய, பொது மற்றும் சமூக கழிப்பறைகள் கட்டுதல், இருக்கும் கழிப்பறைகளைப் புதுப்பித்தல், 372 கழிப்பறைகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை பொது-தனியார் பங்களிப்பு முறையில் எடுக்கப்பட்டுள்ளது. இதன் வெற்றியின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள பிற மாநகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

சாலைகள் - இணைப்பு மற்றும் தகவல் தொடர்பு

வளர்ந்து வரும் நகரங்கள் புறநகர் பகுதிகள் மற்றும் உள் பகுதிகளுக்கு தரமான சாலைகள் தேவைப்படுகின்றன. சாலை இணைப்புகள் என்பது வளர்ச்சியின் முதன்மையான குறியீடு. அனைத்து வானிலைகளுக்கும் ஏற்றவாறு சாலைகளை அமைக்கவும், குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர சாலை உள்கட்டமைப்பு நிதி (TURIF), சிங்கார சென்னை 2.0 மற்றும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT) ஆகியவற்றை இணைத்து ஒரு பிரத்தியேக நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்மூலம் 2022-2023-ம் ஆண்டையும் சேர்த்து, நான்கு ஆண்டுகளில் சுமார் ரூ.9,600 கோடி செலவில் 21,000 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

பள்ளிகளின் கட்டமைப்பினை மேம்படுத்த, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. சென்னை பெருநகர மாநகராட்சி தங்களுடைய பள்ளிகளை

2023 மார்ச் 30]

மாதிரி பள்ளிகளாக ஏற்படுத்தி வருகின்றன. போட்டித் தேர்வுகள் எழுதும் இளைஞர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் நவீன நூலகங்கள், படிக்கும் அறைகள், மின் படிக்கும் பொருட்கள், பயிற்சி அறைகள் முதலியவை உள்ள அறிவுசார் மையங்களை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் அமைத்து வருகின்றன.

பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகள்

நகரத்திற்கு உள்ளும், புறமும் வசதியாக பயணம் செய்ய நவீன வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையங்கள் அவசியமாக உள்ளது. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலதன மானிய நிதியின்மூலம், நவீன பேருந்து நிலையம் மற்றும் வெற்றிகரமான சந்தைகள் நகர்ப்புரங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்னை - தலைநகரம் மற்றும் பெருநகரம்

சிங்கார சென்னை 2.0 திட்டம் சென்னையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், சென்னையை நவீன செயல்பாட்டு மற்றும் வாழக்கூடிய நகரமாக மாற்றும் முயற்சியாகவும் செயல்படுகிறது.

இந்தோ சாராசெனிக் கட்டடக் கலையால் உருவாக்கப்பட்ட விக்டோரியா பொது மண்டபம் அதனுடைய பழைய மகிமையை அடைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்மூலம் நகரத்தின் பாரம்பரிய சின்னம் பாதுகாக்கப்படுகிறது.

சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழாக்களில் மக்கள் ஒன்றிணைந்து ஊரையும், தமிழையும் கலகலப்பான நிகழ்ச்சிகள்மூலம் கொண்டாடுகிறார்கள்.

கடந்த 45 ஆண்டுகளாக திறம்பட இயங்கிவரும் சென்னை புத்தகக் கண்காட்சி, மற்ற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பசுமையான நகரங்கள்

சுற்றுச்சூழலுக்கும், உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் இடையிலான வர்த்தகத்திற்கு நகர்ப்புர பசுமையாக்கல் தீர்வை வழங்குகின்றன. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், சிங்கார சென்னை 2.0, நமக்கு நாமே திட்டம் மற்றும் அம்ரூத் 2.0 ஆகிய திட்டங்கள்மூலம் பசுமைப் பாதுகாப்பை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சொந்த

[2023 மார்ச் 30

இனசெடிகள்/ மரங்களை நடவு செய்வது, நீர்நிலைகளைப் புத்துயிர் பெறுவது ஆகியவை கார்பன் வெளியேற்றத்தை திறம்பட குறைத்து வருங்காலத்தில் சிறந்த நகரங்களை உருவாக்குகின்றன.

பிற உட்கட்டமைப்பு

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT) மற்றும் சிங்கார சென்னை 2.0 ஆகியவற்றின் நிதியின்மூலம் நகர்ப்புர உள்ளாட்சிகளில், நவீன தகன மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன மற்றும் வீடற்றவர்களுக்கு இரவு தங்குமிடங்கள் தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் பங்கேற்பு மற்றும் திறன் மேம்பாடு

மாநிலத்தில் நீண்ட பாரம்பரியமான குடிமக்கள் ஈடுபாடு அமைக்கப்பெறும்போது நகர சபைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை ஏற்படுத்துவதன்மூலம் பல நகர்ப்புர சவால்கள் தீர்க்கப்படுகின்றன. உள்ளாட்சித் தேர்தலில் 12,837 வார்டு உறுப்பினர்கள் மற்றும் 649 மேயர்/தலைவர் வேட்பாளர்கள் முடிவெடுக்கும் பொறுப்பில் உள்ளனர். அரசின் திட்டங்கள் குறித்து தேவையான தகவல்களை வழங்கவும், அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை அவர்களுக்கு தெரிவிக்கவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

1.1 துறைகள்

உள்ளாட்சி அமைப்புகளில் வெவ்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்கு பின்வரும் துறைகள் நகராட்சி நிருவாகத் துறையின்கீழ் செயல்படுகின்றன:

(i) நகராட்சி நிருவாக இயக்குநரகம் (DMA)

(ii) பெருநகர சென்னை மாநகராட்சி (GCC)

(iii) பேரூராட்சிகள் இயக்குநரகம் (DTP)

(iv) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB)

(v) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWADB)

(vi) தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

2023 மார்ச் 30]

(vii) சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT)

(viii) தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)

(ix) புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் (NTADCL)

(x) தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC)

1.2 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் இந்தத் துறையின் நிருவாகத்தின்கீழ் உள்ளன. இதன் விவரம் அட்டவணை 1.1-ல் உள்ளது.

அட்டவணை 1.1

வ. எண்	மாவட்டம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்	மொத்தம்
1.	அரியலூர்	-	2	2	4
2.	சென்னை	1	-	-	1
3.	கோயம்புத்தூர்	1	7	33	41
4.	கடலூர்	1	6	14	21
5.	தருமபுரி	-	1	10	11
6.	திண்டுக்கல்	1	3	23	27
7.	ஈரோடு	1	4	42	47
8.	காஞ்சிபுரம்	1	2	3	6
9.	செங்கல்பட்டு	1	4	6	11
10.	கன்னியாகுமரி	1	4	51	56
11.	கரூர்	1	3	8	12
12.	கிருஷ்ணகிரி	1	1	6	8

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்	மொத்தம்
13.	மதுரை	1	3	9	13
14.	நாகப்பட்டினம்	-	2	4	6
15.	மயிலாடுதுறை	-	2	4	6
16.	நாமக்கல்	-	5	19	24
17.	நீலகிரி	-	4	11	15
18.	பெரம்பலூர்	-	1	4	5
19.	புதுக்கோட்டை	-	2	8	10
20.	இராமநாதபுரம்	-	4	7	11
21.	சேலம்	1	6	31	38
22.	சிவகங்கை	-	4	11	15
23.	தஞ்சாவூர்	2	2	20	24
24.	தேனி	-	6	22	28
25.	திருவள்ளூர்	1	6	8	15
26.	திருவண்ணாமலை	-	4	10	14
27.	திருவாரூர்	-	4	7	11
28.	தூத்துக்குடி	1	3	18	22
29.	திருச்சிராப்பள்ளி	1	5	14	20
30.	திருநெல்வேலி	1	3	17	21
31.	தென்காசி	-	6	17	23
32.	திருப்பூர்	1	6	15	22
33.	வேலூர்	1	2	4	7
34.	திருப்பத்தூர்	-	4	3	7
35.	ராணிப்பேட்டை	-	6	8	14
36.	விழுப்புரம்	-	3	7	10
37.	கள்ளக்குறிச்சி	-	3	5	8

2023 மார்ச் 30]

வ. எண்	மாவட்டம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்	மொத்தம்
38.	விருதுநகர்	1	5	9	15
	மொத்தம்	21	138	490	649

2. நகராட்சி நிருவாக இயக்குநரகம்

2.1 நிருவாகம்


நகராட்சி நிர்வாக இயக்குநரக நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல், ஓசூர், நாகர்கோவில், ஆவடி, தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

ஆண்டு வருமான அடிப்படையில், அட்டவணை 2.1-ல் உள்ளவாறு நகராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1

வ. எண்	வகைப்பாடு	ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்)	எண்ணிக்கை
1	சிறப்பு நிலை	15.00-க்கு மேல்	12
2	தேர்வு நிலை	9.00 - 15.00	25
3	முதல் நிலை	6.00 - 9.00	31
4	இரண்டாம் நிலை	6.00-க்கு கீழ்	70
	மொத்தம்		138

[2023 மார்ச் 30



மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணியிடங்கள் முறைப்படுத்த வரையறைகள் நிர்ணயம் செய்தல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தேவைக்கேற்பவோ அல்லது எந்த ஒரு வரையறையைப் பின்பற்றியோ பணியிடங்கள் தற்போதுவரை தோற்றுவிக்கப்படாத நிலை இருந்தது. சில மாநகராட்சிகளில் அடிப்படை பணிகள் மேற்கொள்ள மிக போதுமான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் மிகவும் குறைவான பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலை காணப்பட்டது. இதன் காரணமாக பணிகள் மேற்கொள்வதிலும், மக்களுக்கான சேவைகள் வழங்குவதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், சீர்மிகு நிர்வாகத்தைச் செயல்படுத்துவதிலும் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டு வந்தன. மேற்கண்டவாறுவுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு அரசாணை (நிலை) எண் 152, நநி(ம)குவ துறை, நாள் 20.10.2022-ன்படி, மக்கள் தொகைக்கேற்ப மாநகராட்சிகள் 4 வகைகளாக வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வகைக்கும் பணியிடங்கள் தோற்றுவிக்கவும், முறைப்படுத்தவும் உரிய வரையறைகள் நிர்ணயம் செய்யப்பட்டு போதுமான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகள் ஏற்கெனவே வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், அந்தந்த நிலைக்கேற்ப தேவைக்கேற்ற வகையில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத நிலை காணப்பட்டது.

2023 மார்ச் 30]

அரசாணை (நிலை) எண் 10, நநி(ம)குவ(நநி.7) துறை, நாள் 23-1-2023-ன்படி நகராட்சிகளின் வகைப்பாட்டிற்கேற்ப பணியிடங்கள் தோற்றுவிக்கவும், முறைப்படுத்தவும் வரையறைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வகைப்பாட்டிற்கு ஏற்ப நிலையான வரையறைக்குள் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டதனால் மக்களுக்கான சேவைகளைச் சீராக வழங்குவதில் முன்னேற்றம் அடைய உதவிகரமாக உள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், அரசமைப்புச் சட்டத்தின் எண் (article) 243W-வது விதி, பன்னிரெண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பான்மையான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மக்கள் தொகை கணக்கெடுப்பு, தீயணைப்பு தவிர்த்து) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் பின்வருமாறு:

- *நகர திட்டமிடல் உள்ளிட்ட நகர்ப்புர திட்டமிடல்.*
- *நில பயன்பாடு மற்றும் கட்டுமானங்களை ஒழுங்குபடுத்துதல்.*
- *பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டுக்கான திட்டமிடல்.*
- *சாலைகள் மற்றும் பாலங்கள்.*
- *குடியிருப்புகள், தொழிற்சாலை மற்றும் வணிக பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்கல்.*
- *பொது சுகாதாரம், சுகாதாரப் பணி, துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை.*
- *நகர்ப்புர காடுகள், சுற்றுப்புறத்தைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்*
- *மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் பலவீனமான பிரிவினரின் நலன்களைப் பாதுகாத்தல்.*
- *குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் தரம் உயர்த்துதல்.*
- *நகர்ப்புர வறுமை ஒழிப்பு.*

[2023 மார்ச் 30

- பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்துதல்.
- பண்பாடு, கல்வி மற்றும் அழகியல் கூறுகள் மேம்படுத்துதல்.
- மயானங்கள், தகனமேடைகள், நவீன எரிவாயு மற்றும் மின் தகனமேடைகள்.
- கால்நடைப் பட்டிகள், விலங்குகளைத் துன்புறுத்துதலைத் தடுத்தல்.
- பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்தல் உள்ளிட்ட முக்கிய புள்ளிவிவரங்களைப் பதிவு செய்தல்.
- தெருவிளக்குகள், வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொதுக் கழிப்பிடங்கள் முதலான பொது விதிகளை ஏற்படுத்துதல்.
- இறைச்சிக் கூடங்கள் மற்றும் தோல்பதனிடும் தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்துதல்.
- நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள்.
- அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பலன்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்தல்.

2.1.1 தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 திருத்தப்பட்டது

சென்னையின் நிருவாகத்திற்காக சென்னை மாநகராட்சி சட்டம், 1919, மதுரையின் நிர்வாகத்திற்காக மதுரை மாநகராட்சி சட்டம், 1971, கோயம்புத்தூர் நிருவாகத்திற்காக மாநகராட்சி சட்டம், 1981-ம் இயற்றப்பட்டன. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் நிருவாகத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 இயற்றப்பட்டது.

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளில் சட்டம், 1994–ம் ஆண்டில் இயற்றப்பட்டது. இம்மாநகராட்சி சட்டங்கள் மூன்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981–ன் கூறுகளை உள்ளடக்கியதாகும்.

மேற்கூறப்பட்ட மாநகராட்சி சட்டங்கள் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 ஆகியவை தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டதால், ஏறக்குறைய 500 பிரிவுகள், ஏழு அட்டவணைகள் மற்றும் ஏராளமான விதிகளை உள்ளடக்கியதாக

2023 மார்ச் 30]

உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆறு மாநகராட்சி சட்டங்கள் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 ஆகியவற்றை திரும்பப் பெற்று, மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு விரிவான சட்டத்தை இயற்ற 1997 ஆம் ஆண்டு அரசு முடிவு செய்தது.

அதன்படி, ஆறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை நிருவகிக்கும் அப்போதைய சட்டங்களை திரும்பப் பெற்று, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் எண் 9, 1999) இயற்றப்பட்டது. மேலும், மேற்படி சட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2000 உருவாக்கப்பட்டு, மேற்படி சட்டமும், விதிகளும் ஆகஸ்ட் முதல் நாள் 2000 ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்டன.

மேற்கண்ட சட்டத்தின் உட்கூறுகளை கற்றறியவும், தேவைப்பட்டால் மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்கும், நீடித்திருக்கும் சந்தேகங்களை நீக்குவதற்கும், ஏற்கெனவே இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-ஐ தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாடு மற்றும் இடைநிறுத்தம்) சட்டம், 2000மூலம் அரசு நிறுத்தி வைத்து, நிறுத்தி வைக்கப்பட்ட முந்தைய ஆறு மாநகராட்சி சட்டங்கள் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 ஆகியவற்றை புதுப்பித்து செயல்முறைக்கு கொண்டு வந்தது.

இந்நிலையில் திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், திண்டுக்கல், ஒசூர், நாகர்கோவில், ஆவடி, கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் ஆகிய 15 மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டு, அவற்றிற்கான தனித்தனி சட்டங்கள் இயற்றப்பட்டன.

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, நகர்ப்புர மக்கள்தொகை சதவீதம் 48.45, தற்போது நகர்ப்புரங்களில் வாழும் மக்கள்தொகை 55 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நகரமயமாக்கல் விரைவாக செயல்படுவதால், எண்ணற்ற சவால்களுடன் மக்களுக்கு மேலும் சிறப்பாக சேவைகளை செய்ய வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், நிதி மற்றும் செயற்பாட்டாளர்களை மாற்றுவதற்கான தொடர் செயல்பாட்டில் ஈடுபடுவதை தவிர, முக்கியமான சட்டம்

மற்றும் நிறுவன முயற்சிகள்மூலம் செயல்படுத்தும் சூழலை வழங்குவதற்கான அவசர மற்றும் கட்டாயத் தேவை உள்ளது.

இந்த செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகவும், மேலே விவரிக்கப்பட்ட சூழலின்படி, குறிப்பாக அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான சட்டத்தின் தேவை மற்றும் நன்மைகள் கருதி, 2000 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-ஐ புதுப்பிக்க அரசு முடிவு செய்தது.

அதன்படி, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-ல் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) (தமிழ்நாடு சட்டம், எண்:35) 2022, 17-6-2022 அன்று இயற்றப்பட்டு 74-வது அரசியலமைப்பு சட்டத்திற்கு இசைவாக அரசு சிறப்பிதழில் 20-6-2022 அன்று வெளியிடப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2000 தகுந்தவாறு திருத்தம் செய்யப்படும். தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-யினை நடைமுறைப்படுத்த உரிய விதிகள் விரைவில் தோற்றுவித்து அறிவிக்கப்படும்.

2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு

2.2.1 குடிநீர் வழங்கல்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தினசரி குடிநீர் விநியோகத்தை உறுதிசெய்வதுடன், குடிநீர் விநியோகிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவதும், பல்வேறு காலகட்டங்களில் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களை ஒருங்கிணைத்து தற்போதைய உட்கட்டமைப்புகளைப் புனரமைப்பு செய்வதும், புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து, செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் விநியோக திட்டங்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் நிறைவேற்றுவதும் அரசின் நோக்கமாகும்.


மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தற்போது குடிநீர் வழங்கும் விவரம் அட்டவணை 2.2-ல் உள்ளவாறு:

2023 மார்ச் 30]

அட்டவணை 2.2

உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு	குடிநீர் அளவு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு லிட்டர்)	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை
மாநகராட்சிகள்	135 மற்றும் அதற்கு மேல்	5
	110-134	5
	70-109	10
நகராட்சிகள்	135 மற்றும் அதற்கு மேல்	11
	110-134	24
	70-109	103
மொத்தம்		158





[2023 மார்ச் 30

நகர்ப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும், நேரடியான குழாய் இணைப்புகள்மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. மேலும், மாநகராட்சிகள் மற்றும் பாதாள சாக்கடை வசதி உள்ள நகராட்சிகளில், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீரும், பிற நகராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீரும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீராதார அமைப்புகளை புனரமைத்தல்

மாநில அளவில் எடுக்கப்பட்ட ஒரு விரிவான கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலுள்ள மொத்த நீர்நிலைகளின் விவரங்கள் அட்டவணை 2.3-ல் உள்ளவாறு:

அட்டவணை 2.3

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு	நீர்நிலைகளின் மொத்த எண்ணிக்கை
மாநகராட்சிகள்	603
நகராட்சிகள்	1,874
மொத்தம்	2,477

நீர் ஆதாரங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல், நீர்வரத்து கால்வாய்களைப் புனரமைத்தல், நீர் ஆதாரங்களைத் தூர்வாருதல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல் போன்ற பணிகளைச் சிறப்பாக செயல்படுத்துவதன்மூலம் தண்ணீர் சேமிப்பு அதிகப்படுத்தப்படும்.

இதற்கேற்ப, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT), நமக்கு நாமே திட்டம் (NNT), மூலதன மானிய நிதி (CGF), 15-வது நிதிக் குழு (15th CFC) மற்றும் அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (AMRUT 2.0) போன்ற திட்டங்களின்கீழ், 2021–22 (ம) 2022-23 ஆம் ஆண்டுகளில்

2023 மார்ச் 30]
ரூ.233.17 கோடி மதிப்பீட்டில் 269 நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.2 தெருவிளக்குகள்

தற்பொழுது, 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் 138 நகராட்சிகளில் 8.62 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், '30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெருவிளக்கு' என்ற வரையறையின் அடிப்படையில் தேவையான இடங்களில் கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறைந்த செலவில் மிகுந்த திறனுடன் இயங்கும் வகையிலான தெருவிளக்குகளை அமைப்பதே அரசின் நோக்கமாகும். இதனடிப்படையில், அனைத்து தெரு விளக்குகளும் மின்னாற்றல் சேமிப்பு விளக்குகளாக மாற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, 16 மாநகராட்சிகள் மற்றும் 119 நகராட்சிகளில் ரூ.374.09 கோடி மதிப்பீட்டில் 3,31,895 தெரு விளக்குகளை மின்சேமிப்பு ஆற்றல்மிகு தெருவிளக்குகளாக மாற்றவும், ரூ.118.35 கோடி மதிப்பீட்டில் 77,667 புதிய தெரு விளக்குகள் அமைக்கவும் மாநில நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF), 15-வது நிதிக் குழு (15th CFC) 2021-22 மற்றும் 15th CFC 2022-23 ஆகிய திட்டங்களின்கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மாநில நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு (SUIDF) நிதியின்கீழ் 6 மாநகராட்சிகளில் ரூ.64.81 கோடி மதிப்பீட்டில் 33,660 புதிய மின்சேமிப்பு ஆற்றல்மிகு தெருவிளக்குகள் அமைக்கவும், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 10 நகராட்சிகளில் ரூ.20.41 கோடி மதிப்பீட்டில் 17,704 தெருவிளக்குகளை மின்சேமிப்பு ஆற்றல்மிகு விளக்குகளாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

2.2.3 சாலைகள்

நகர்ப்புர உள்ளாட்சிகளில், சாலைகள் பல்வேறு பகுதிகளை இணைப்பதிலும், போக்குவரத்து மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. சாலைகள்,

பாதுகாப்பான வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பான நடமாட்டத்திற்கு ஏதுவான வகையில், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் (MoRTH) குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, அமைக்கப்படுகின்றன.

மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 29,603 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், 6,204 கி.மீ. நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், 19,033 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலைகளும், 222 கி.மீ. நீளமுள்ள கப்பி சாலைகளும், 2,491 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகளும், 1,653 கி.மீ. நீளமுள்ள பேவர் பிளாக் சாலைகள் உள்ளிட்ட மற்ற வகை சாலைகளும் அடங்கும்.



சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் குறித்த ஒரு விரிவான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதனடிப்படையில் இணையவழி சொத்துகள் பராமரிப்பு பதிவேடு உருவாக்கப்பட்டு, அறிவியல் ரீதியாக பணிகள் தேர்வு மற்றும் செயலாக்கத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய சாலைகள்

2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க, 400 கி.மீ. மண் சாலைகளை,

2023 மார்ச் 30]

அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளாக, அதாவது தார்ச் சாலை, சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிகள், ரூ.332.26 கோடி மதிப்பீட்டில், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (KNMT), மூலதன மானிய நிதி (CGF), 15-வது நிதிக் குழு மானிய நிதி (CFC), நமக்கு நாமே திட்டம் (NNT) மற்றும் பொது நிதி ஆகியவற்றின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

சாலைகள் சீரமைத்தல்

சாலைகள், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள், இயற்கை இடர்பாடுகள் மற்றும் பருவமழை காரணமாக சேதம் அடைகின்றன. எனவே பொதுமக்களின் வசதிக்கேற்ப இத்தகைய சேதமடைந்த சாலைகளைச் சீரமைப்பது அவசியமாகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.655.17 கோடி மதிப்பீட்டில் 811.11 கி.மீ. நீளமுள்ள 4,474 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.654.79 கோடி மதிப்பீட்டில் 1,039.69 கி.மீ. நீளமுள்ள 5,894 சாலைப் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIF), மூலதன மானிய நிதி (CGF), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மற்றும் நகர்ப்புர உள்ளாட்சிகளின் பொது நிதி ஆகியவற்றின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.4 நகரமைப்பு

பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் கட்டட அனுமதி வழங்கும் நடைமுறைகளில் கால அவகாசத்தைக் குறைக்கவும், கட்டட அனுமதி பெறுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும், மென்பொருள் மேம்படுத்தப்பட்டு, பொதுமக்கள் எளிதில் பயன்படுத்தும் வகையில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கட்டட அனுமதி வழங்க இணைய வழியில் ஒப்புதல் அளித்தவுடன், கட்டணம் செலுத்துவதற்கான கேட்பு நேரடியாக விண்ணப்பதாரருக்கு சென்றடைவதுடன், இணைய வழியாக மட்டுமே கட்டணம் செலுத்துவதற்கேற்ப தற்போது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக பொது மக்கள் கட்டட அனுமதி பெறுவதற்காக எந்த ஒரு சூழ்நிலையிலும் மாநகராட்சி/நகராட்சி அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய தேவை முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வுக்கு மேலான பரப்பளவிலான கட்டடங்கள் கட்ட நகர் ஊரமைப்பு இயக்குநரகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமங்களில் திட்ட அனுமதி பெற்றிடவும், அதனைத் தொடர்ந்து

[2023 மார்ச் 30

உள்ளாட்சிகள் கட்டட அனுமதி வழங்கிடவும் பொதுவான இணைய வழி முகப்பு வசதிகள் (Common Single Window Portal), தமிழ்நாடு மின்ஆளுகை முகமை (TNeGA) வாயிலாக உருவாக்கப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தொடர் கண்காணிப்பு வாயிலாக கட்டட அனுமதி வழங்குவதில் காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டு, துரித நடவடிக்கைக் குறியீடு அளிக்கப்பட்டு, உரிய காலக் கெடுவிற்குள் இறுதி உத்தரவு வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

2.2.5 இதர உட்கட்டமைப்புகள்

(i) நவீன பேருந்து நிலையங்கள்

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பராமரிக்கப்படும் 184 பேருந்து நிலையங்களின் விவரங்கள் அட்டவணை 2.4-ல் குறிப்பிட்டுள்ளவாறு:

அட்டவணை 2.4

தற்போதுள்ள பேருந்து நிலையங்களின் விவரங்கள்

பேருந்து நிலையத்தின் தரம்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்	மொத்தம்
A	21	14	35
B	11	42	53
C	5	63	68
D	6	22	28
மொத்தம்	43	141	184

பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் வகையில், நகர்ப்புரங்களில் அமைந்துள்ள அனைத்து பேருந்து நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, திருச்சிராப்பள்ளியில் ரூ.350 கோடி மதிப்பீட்டில் வணிக மையத்துடன்கூடிய ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அவ்வறிவிப்பின்படி,

2023 மார்ச் 30]

நாமக்கல், திருத்தணி, திருவண்ணாமலை, திண்டிவனம், மயிலாடுதுறை, மன்னார்குடி, ராணிப்பேட்டை, சங்கரன்கோவில், திருமங்கலம் ஆகிய நகராட்சிகளிலும், ஈரோடு மற்றும் கரூர் மாநகராட்சிகளிலும் நவீனப் பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி உதவியுடன் 17 புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 16 பேருந்து நிலையங்கள் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ஒரு பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில், அதாவது 2021 முதல் 2023 வரை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டிற்காக 59 பேருந்து நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் எஞ்சியுள்ள பேருந்து நிலையங்களையும் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அதிக பயன்பாடுள்ள வணிக மையங்கள் அமைந்துள்ள இடங்களில் தேவையின் அடிப்படையில் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்படும்.

பூங்காக்கள்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பொது மக்களின், குறிப்பாக சிறுவர்களின் நலனுக்காக, விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 8,575 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

அட்டவணை 2.5

உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு	**பூங்காக்களின் எண்ணிக்கை**
மாநகராட்சிகள்	*4,337*
நகராட்சிகள்	*4,238*
மொத்தம்	*8,575*

*2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் (*KNMT*), நமக்கு நாமே திட்டம்* (NNT),

மூலதன மானிய நிதி (CGF), 15 வது நிதிக் குழு (15th CFC) மற்றும் அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (AMRUT 2.0) ஆகிய திட்ட நிதிகளின்கீழ் ரூ.111.02 கோடி மதிப்பீட்டில் 307 பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iii) மயானங்கள்

பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பராமரிக்கப்பட்டுவரும் மயானங்களின் விவரம் அட்டவணை 2.6-ல் உள்ளவாறு:

அட்டவணை 2.6

மயானங்களின் வகைப்பாடு மற்றும் எண்ணிக்கை

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு	ஏற்கெனவே உள்ள நவீன மயானங்கள்			நடைபெற்று வரும் பணிகள் (எரிவாயு தகனமேடை)	2022-23 ஆம் ஆண்டில் அமைக்கப்படும் நவீன எரிவாயு தகன மேடைகள்	மொத்தம்	2023-24-ல் நவீனப்படுத்தப்படவுள்ள உயிரி எரிவாயு தகன மேடைகள்
	உயிரி எரிவாயு தகன மேடை	எரிவாயு தகனமேடை	மின் தகன மேடை				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)=(2)+(3)+(4)+(5)+(6)	(8)
மாநகராட்சிகள்	9	51	7	16	-	83	9
நகராட்சிகள்	8	59	1	54	16	138	8
மொத்தம்	17	110	8	70	16	221	17

மயானங்களில், குடிநீர் வசதி, மின்விளக்குகள், மயானப் பாதைகள் மற்றும் ஈமச்சடங்குகள் செய்யும் கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் அமைப்பதை அரசு முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது. மேலும், உயிரி எரிவாயு (Bio-mass gasifier)

2023 மார்ச் 30]

எரிபொருளாக பயன்படுத்தப்படும் அனைத்து மயானங்களையும் திரவ எரிவாயு/மின் மயானங்களாக படிப்படியாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ், ரூ.108.10 கோடி மதிப்பீட்டில், 70 புதிய திரவ எரிவாயு மின் மயானங்கள் அமைக்கும் பணிகள் மற்றும் ரூ.5.76 கோடி மதிப்பீட்டில், 16 நவீன மயானங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வனைத்து மயானங்களும் 2023-24 ஆம் ஆண்டுக்குள் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

20 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மயான வசதிகள் இல்லாமல் உள்ளன. எனவே, புதியதாக மயானங்கள் அமைக்கவோ அல்லது அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மயானங்களுடன் இணைக்கவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iv) சந்தைகள்

பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருட்களை விற்பனை செய்வதில் சந்தைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வருவாயில் சந்தைகள் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 335 சந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 2.7-ல் குறிப்பிடப்பட்டுள்ளது:

அட்டவணை 2.7

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு	வார சந்தைகளின் எண்ணிக்கை	தினசரி சந்தைகளின் எண்ணிக்கை	மொத்தம்
மாநகராட்சிகள்	*27*	*86*	*113*
நகராட்சிகள்	*81*	*141*	*222*
மொத்தம்	*108*	*227*	*335*

தினசரி மற்றும் வாரச் சந்தைகளை மேம்படுத்துவது மற்றும் நவீனப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். பொது மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்கவும், சரக்கு போக்குவரத்தை எளிதாக கையாளுவதற்கு ஏதுவாகவும், பெரிய நகரங்களில் சந்தைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

பரவலாக்கப்பட வேண்டும். 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டு மானிய கோரிக்கை விவாதத்தின்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், ரூ.219.07 கோடி மதிப்பீட்டில், 40 புதிய சந்தைகள் அமைப்பதற்கும், ரூ.91.03 கோடி மதிப்பீட்டில் 20 சந்தைகள் மேம்படுத்தவும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.3 நகர்ப்புர சுகாதாரம் கட்டமைப்பு

மாநகராட்சிகளில் 179 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களும், நகராட்சிகளில் 121 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்களும் உள்ளன. இச்சுகாதார மையங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15-வது நிதிக் குழு சுகாதார நல மானியம்

சுகாதாரம் மற்றும் நல மேம்பாட்டிற்காக 15-வது மத்திய நிதிக் குழு மானியத்தின்கீழ் ரூ.293.29 கோடி மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர் நல மையங்கள், நலம் சார் மையங்கள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம், துணை சுகாதார மையங்கள் போன்றவை அமைப்பதற்கு இந்நிதியின்கீழ் ரூ.123.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.113.21 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட மொத்தமுள்ள 453 நல மையங்களில் 20 மாநகராட்சிகளில் 372 மையங்கள் மற்றும் 63 நகராட்சிகளில் 81 மையங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 320 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள நல மையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 14 மாநகராட்சிகளில் 22 பொது சுகாதார ஆய்வகங்களும், 5 நகராட்சிகளில் துணை சுகாதார மையங்களும், வடலூர் நகராட்சியில் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையம் மற்றும் 5 நகராட்சிகளில் வட்டார பொது சுகாதார அலகுகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் நிதியாண்டில் 9 மாநகராட்சிகள் மற்றும் 24 நகராட்சிகளில், 54 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டவும்,

2023 மார்ச் 30]

6 பொது சுகாதார ஆய்வகங்கள் கட்டவும் ரூ.14.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3.1 தூய்மைப் பணியாளர்களின் நலத் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சிகளை தூய்மையாகவும், மாசு இல்லாத நகரமாகவும் மாற்றி ஆரோக்கியமாக வைத்திருப்பதில் முதன்மைப் பங்கு வகிப்பவர்கள் தூய்மைப் பணியாளர்கள் ஆவர். அவர்கள் விலைமதிப்பற்ற பொதுச் சேவையை, நமது அன்றாட வாழ்க்கைக்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் அளித்து வருகின்றனர். அவர்கள் தங்களது பணிகளை மேற்கொள்ளும்பொழுது சில நேரங்களில் உடல்நலப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். எனவே, தூய்மைப் பணியாளர்களின் நலன், வாழ்வுரிமை, பாதுகாப்பு, கண்ணியம் ஆகியவற்றைப் பேணிக் காப்பது நமது கடமையாகும். எனவே, தூய்மைப் பணியாளர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, 2022-23 ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையில், தூய்மைப் பணியாளர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் "தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்" தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வினை மேம்படுத்தவும், பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக "தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படும். இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகளின் திறன் பயிற்சி, பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் பயன்படுத்துதல், சுகாதார காப்பீடு, தொடர் உடல்நல பரிசோதனைகள், திறன் பயிற்சி மற்றும் மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சிறு கடன் வழங்க வழிவகை செய்தல் போன்றவற்றை தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் குழந்தைகள் நல்ல கல்வி பெறுவதை உறுதி செய்யும் வகையில் இத்திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள திட்டங்களை ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள், ஒப்பந்தப் பணியாளர்கள், அரசு மற்றும் தனியார்

நிறுவனங்களில் பணிபுரியும் முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைசாரா தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 9-12-2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தினை நகர்ப்புர மேலாண்மை மையம் (Urban Management Centre) அகமதாபாத் தொழில்நுட்ப உதவியுடன் சிறப்பாக செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, கீழ்க்காணும் தூய்மைப் பணிச் சேவைகளை, முதன்மை தூய்மைப் பணியாளர்கள்மூலம் செயல்படுத்த திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(i) நச்சு தொட்டி சுத்தம் செய்தல்.

(ii) கழிவுநீர் வடிகால் பராமரிப்பு.

(iii) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்/கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

(iv) நிறுவனம், பொது மற்றும் சமூக கழிப்பறைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

இத்திட்டம் முதற்கட்டமாக செயல்படுத்த 5 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அதாவது பெருநகர சென்னை மாநகராட்சி (மண்டலம்-6), மதுரை மாநகராட்சி (மண்டலம்-3), பொள்ளாச்சி, புதுக்கோட்டை நகராட்சிகள் மற்றும் சேரன்மகாதேவி பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான கணக்கெடுப்பு மற்றும் முக்கிய பணியாளர்களைக் கண்டறிய கைப்பேசி செயலிமூலம் தகவல்களை சேகரிக்க வினாப்படிவம் தயாரிக்கப்பட்டு, கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்ட முன்னோடி செயலாக்கத்திற்குப் பின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

தேசிய நகர்ப்புர சுகாதார இயக்கம் (NUHM)

தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) துணைத் திட்டமாக தேசிய நகர்ப்புர சுகாதார திட்டம் (NUHM) 2013 ஆம் ஆண்டு முதல்

2023 மார்ச் 30]

செயல்பட்டு வருகிறது. நகர்ப்புர ஏழைகளை மையமாகக் கொண்டு குறிப்பாக விளிம்புநிலைக் குழுக்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த மற்றும் பின்தங்கிய மக்கள், தெருவோர வியாபாரிகள், வீடற்ற மக்கள் ஆகியோர்களின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் அவர்களுக்கு அத்தியாவசிய ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலமும், சிகிச்சைக்கான செலவினங்களை குறைப்பதன் மூலமும் சுகாதார பணியாளர்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மாநில தலைநகரங்கள், மாவட்ட தலைமையகம் மற்றும் 50,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட பிற நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 7 மாநகராட்சிகள் மற்றும் 13 நகராட்சிகளில் ஏற்கெனவே உள்ள 22 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ரூ.13.50 கோடி, 2 மாநகராட்சிகள் மற்றும் 1 நகராட்சியில் 4 சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவதற்கு ரூ.2.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

2.3.2. பாதாள சாக்கடை திட்டம் மற்றும் கசடு கழிவுநீர் மேலாண்மை

மொத்தமுள்ள 20 மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), 18 மாநகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 17 மாநகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஓசூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.574.00 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் 2.0 திட்டத்தில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிவகாசி மாநகராட்சியில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது, மேலும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும் விடுபட்டுள்ள பகுதிகளுக்கு திட்டத்தை விரிவுப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. நகரம் முழுமைக்கும் 100% பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், 10 மாநகராட்சிகளில், புதியதாக

சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த, அம்ரூத் 2.0, சீர்மிகு நகரங்கள் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

138 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்க நிலை

- மொத்தமுள்ள 138 நகராட்சிகளில், 1 இலட்சத்திற்குக் கூடுதலான மக்கள் தொகை கொண்ட 7 நகரங்களில், திருவண்ணாமலை, நாமக்கல், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி ஆகிய 5 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளன. ஆம்பூர் மற்றும் இராஜபாளையம் ஆகிய எஞ்சிய 2 நகராட்சிகளில், பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- மீதமுள்ள 131 நகராட்சிகளில், 54 நகராட்சிகள் 50,000 முதல் 1 இலட்சம் வரை மக்கள் தொகை கொண்டுள்ளன.
- மறைமலைநகர், திருவள்ளூர், சிதம்பரம், அரக்கோணம், திருப்பத்தூர், விழுப்புரம், மேட்டூர், இராசிபுரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, திருவாரூர், தேனி-அல்லி நகரம், போடிநாயக்கனூர், உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம், உதகமண்டலம், விருதுநகர், பொள்ளாச்சி மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய 20 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திண்டிவனம் நகராட்சியில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- 2018-19 ஆம் ஆண்டுகளில் 21 நகரங்களில் கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, எடப்பாடி, திருமங்கலம், தாராபுரம், கோவில்பட்டி, கடையநல்லூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அருப்புக்கோட்டை, திருச்செங்கோடு, கம்பம், பரமக்குடி, குடியாத்தம், சங்கரன்கோவில், தென்காசி, புளியங்குடி, ஆத்தூர் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய 17 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு, பண்ருட்டி, விருத்தாசலம், வாணியம்பாடி ஆகிய 4 நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2023 மார்ச் 30]

- *எஞ்சியுள்ள 12 நகராட்சிகளில், பூவிருந்தவல்லி, திருவேற்காடு, பழனி ஆகிய 3 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி நகராட்சியில் இத்திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 8 நகராட்சிகளான ஆற்காடு, பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, ஆரணி, குமாரபாளையம், தேவகோட்டை, கோபிசெட்டிபாளையம் மற்றும் வால்பாறை ஆகிய நகராட்சிகளில் தேவை, சாத்தியக்கூறு மற்றும் நிதித் திறன் அடிப்படையில் பாதாள சாக்கடை திட்டமோ அல்லது கசடுகழிவு மேலாண்மை திட்டமோ செயல்படுத்தப்படும்.*

- *50,000-க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட 77 நகராட்சிகளில்,*

 - *பெரம்பலூர், அரியலூர், பெரியகுளம், சின்னமனூர், சத்தியமங்கலம், சிவகங்கை, உளுந்தூர்பேட்டை, திருச்செந்தூர் மற்றும் சாத்தூர் ஆகிய 9 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் முடிவுற்றுள்ளது. இராமேஸ்வரம், பொன்னேரி ஆகிய 2 நகராட்சிகளில் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.*

 - *2018-19 ஆம் ஆண்டு 24 நகராட்சிகளில் (26 நகராட்சிகள் பயன்பெறும் வகையில்), கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, காங்கேயம், செங்கோட்டை, வந்தவாசி, குளித்தலை, கூத்தாநல்லூர், விக்கிரமசிங்கபுரம், துறையூர், மேலூர், திருத்துறைப்பூண்டி மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய 10 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நெல்லிகுப்பம், வாலாஜாபேட்டை, வேதாரண்யம், சீர்காழி, அறந்தாங்கி, ஜெயங்கொண்டம், கூடலூர் (தேனி), கீழக்கரை, குன்னூர், குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் ஆகிய 14 நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் மணப்பாறை, குளச்சல் ஆகிய நகராட்சிகளில் மாற்று இடம்*

தேர்வு செய்ய வேண்டியுள்ளது. நரசிங்கபுரம் நகராட்சி, ஏற்கெனவே கசடுகழிவு சுத்திகரிப்பு நிலைய பணிகள் நடைபெற்று வரும் ஆத்தூர் நகரத் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. கூடலூர்(கோ) மற்றும் மதுராந்தகம் ஆகிய 2 நகராட்சிகள் பெரிய நாயக்கன்பாளையம் மற்றும் கருங்குழி பேரூராட்சிகளில் முடிக்கப்பட்ட கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையத் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

- ➢ எஞ்சியுள்ள நகரங்களில் கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

- நடைபெற்றுவரும் அனைத்துப் பணிகளையும் விரைவாக நிறைவேற்றவும். ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மேற்கொண்டு அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கவும் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பாதாள சாக்கடை மற்றும் கசடுகழிவு மேலாண்மைத் திட்டங்கள் பராமரிப்பிற்குத் தேவையான எண்ணிக்கையில் நவீன தொழில்நுட்ப/இயந்திரமயமான உபகரணங்கள் வழங்கப்படும்.

2.4 கல்வி மற்றும் இளைஞர் நலன்

அனைத்து மாநகராட்சி/நகராட்சிப் பள்ளிகளிலும், கற்றல் வெளிப்பாடுகளின் மீதான கவனத்துடன், தரமான கல்வி வழங்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, வேலைவாய்ப்பு பெறத்தக்க தொழிற்பயிற்சி மற்றும் திறனாக்கப் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

2.4.1 நவீன நூலகங்கள் (நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள்)

நவீன நூலகங்கள் பொதுமக்களுக்கு அறிவுசார் தகவல் கிடைக்கச் செய்வதில் ஒரு சமூகச் செயல்பாட்டை ஏற்படுத்துகின்றன. இவை தகவல் மற்றும் அறிவுக்கான உள்ளூர்

2023 மார்ச் 30]

மையமாக விளங்குவதுடன், தேசிய மற்றும் உலகளாவிய தகவல்களை அணுகுவதற்கு நுழைவாயிலாகவும் உள்ளன.

மாணவர்கள் மற்றும் வேலை தேடும் ஆர்வலர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மூலதன மானிய நிதி மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.158.67 கோடி மதிப்பீட்டில் 78 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் கடந்த ஈராண்டுகளில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு போதுமான கல்விச் சூழலை உருவாக்கும் வகையில், அறிவுசார் மையங்களில் பயிற்சி அறைகள் மற்றும் வாசிப்புக் கூடம், நூலகம், இணைய வசதியுடன்கூடிய கணினி போன்ற நவீன வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையுடன் ஆர்வமுள்ள மற்றும் தேவைப்படும் இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தவும் இவ்வறிவுசார் மையங்கள் பயன்படுத்தப்படும்.

அறிவுசார் மையங்கள் மூன்று வகையான வடிவமைப்புகளில் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வகை-I – 3,160 சதுர அடி, ரூ.1.5 கோடி மதிப்பீடு, வகை-II - 4,500 சதுர அடி, ரூ.2 கோடி மதிப்பீடு, வகை-III- 7,843 சதுர அடி ரூ.2.50 கோடி மதிப்பீடு. மேலும், தேவை மற்றும் நிலப்பரப்பின் அளவுக்கேற்ப வடிவமைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

11 பேரூராட்சிகள் உட்பட மொத்தம் 89 அறிவுசார் மையங்கள் ரூ.176.25 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மூலதன மானிய நிதி மற்றும் சீர்மிகு நகரத் திட்டம் ஆகியவற்றின்கீழ் இம்மாநிலத்தில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பிடம் மற்றும் தேவைக்கேற்பவும், ஆர்வலர்களின் வசிப்பிடத்திற்கு அருகில் உள்ளதை உறுதிப்படுத்தும் வகையிலும் வரைபடம் தயார் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 11 அறிவுசார் மையங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.5 முன்னோடித் திட்டங்கள்

2.5.1 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், அடிப்படை கட்டமைப்பில் உள்ள இடைவெளியினை நிரப்பும்பொருட்டு, "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தை" அரசு துவக்கியுள்ளது. இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 70, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13-9-2021-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்திட அரசாணை (நிலை) எண் 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24-9-2021-ன் படி, 2021-2022-ம் ஆண்டிற்கு ரூ.1,000 கோடியும், அரசாணை (நிலை) எண் 87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.6.2022-ன்படி 2022-2023-ம் ஆண்டிற்கு ரூ.1,000 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகப் பணிகள், தெருவிளக்கு அமைத்தல், சாலைகள் மேம்படுத்துதல், சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள், மயானங்கள் கட்டுதல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளான, புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல், பேருந்து நிலையங்களை மேம்பாடு செய்தல், நீர்நிலைகளைப் புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் நிறுவுதல் போன்ற அடிப்படை வசதி பணிகள் நகராட்சிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ், பல்வேறு நகராட்சிகள் மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாநகராட்சிகளில் எடுக்கப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:

2023 மார்ச் 30]

அட்டவணை 2.8

வ. எண்	பணிகளின் விவரம்	2021-22		2022-23	
		பணிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)	பணிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
1	அறிவுசார் மையங்கள்	25	45.21	35	66.95
2	புதிய சந்தைகள்	7	39.37	30	158.90
3	சந்தைகள் மேம்பாடு	16	64.17	4	27.97
4	பூங்காக்கள் / உபகரணங்கள்	81	45.59	105	36.68
5	நீர்நிலைகள்	89	99.91	76	37.37
6	பேருந்து நிலையம் - மேம்பாடு	-	-	16	31.43
7	புதிய நவீன எரிவாயு தகனமேடைகள்	36	53.29	18	26.27
8	எரிவாயு தகனமேடைகள் நவீனப்படுத்துதல்	-	-	16	5.76
9	சாலைகள்	332	211.34	134	121.8
10	குடிநீர் வழங்கல்	-	-	19	69.06
மொத்தம்		586	558.88	453	582.19

2021-22 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 586 பணிகளில், 365 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 453 பணிகளில், 17 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.5.2 நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)

சுய உதவி நடைமுறையை மேம்படுத்தவும், சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கும் நோக்கத்திற்காக, நமக்கு நாமே திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13-9-2021-ல் வெளியிடப்பட்டுள்ளது.

நீர்நிலைகளைச் சீரமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை நிறுவுதல், மேம்பாடு செய்தல் மற்றும் சீரமைத்தல், போக்குவரத்துத் திட்டுகள், நீரூற்றுகள், தெரு விளக்குகள் அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், மரங்கள் நடுதல், பாதுகாப்பு வளையங்கள் அமைத்தல், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களுக்கு பயன்படும் கட்டடங்கள் ஆகியவற்றை கட்டுதல் மற்றும் சீரமைத்தல், பொது நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள், பாலங்கள், சிறு பாலங்கள், புதிய தகனமேடைகள், மழைநீர் வடிகால்கள், மண் சாலைகளை அனைத்து பருவகாலங்களுக்கேற்ற சாலைகளாக, அதாவது தார்ச் சாலைகள், சிமென்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக தரம் உயர்த்துதல், பொது மற்றும் சமுதாய கழிவறைகள், சந்தைகள், கடைகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், திடக்கழிவு மேலாண்மைப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் கொள்முதல் செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் பணிகளுக்கு, நீர்நிலை புனரமைப்பு பணிகள் தவிர்த்து, மற்ற பணிகளுக்கு குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்காகும். நீர்நிலை சீரமைப்பு பணிகளுக்கு குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் ஆகும். பொது மக்கள் பங்களிப்பிற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை.

2021-22-ம் நிதி ஆண்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 129,

2023 மார்ச் 30]

நாள் 20-12-2021-ல் முதல் தவணையாக ரூ.150 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளில், ரூ.84.08 கோடி மதிப்பீட்டில் 688 பணிகள் எடுக்கப்பட்டு, 497 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர), ரூ.64.30 கோடி மதிப்பீட்டில் 236 பணிகள் எடுக்கப்பட்டு, 101 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட மொத்த பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ரூ.60.38 கோடி ஆகும்.

மேலும் 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.200.00 கோடி அரசாணை (நிலை) எண் 100, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.7.2022-ல் ஒதுக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளில், ரூ.49.37 கோடி மதிப்பீட்டில் 438 பணிகளும், மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர), ரூ.16.55 கோடி மதிப்பீட்டில் 63 பணிகளும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட மொத்த பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ரூ.23.36 கோடி ஆகும்.

2.5.3 நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புர ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, பொதுச் சொத்துகளான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மழைநீர் வடிகால்கள், மரம் வளர்ப்பு மற்றும் நீர்நிலைகள் முதலானவற்றை உருவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் முதலான பணிகள் மேற்கொள்ள நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (TNUES) அரசால் தொடங்கப்பட்டது. 2021-22 ஆம் நிதியாண்டில் ரூ.75.00 கோடி ஒதுக்கப்பட்டு முன்னோட்டமாக, சென்னை மாநகராட்சியில் 2 மண்டலங்களும், 14 மாநகராட்சிகளில் தலா 1 மண்டலத்திலும், 7 நகராட்சிகளிலும், 37 மாவட்டங்களில் தலா 1 பேரூராட்சியிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இத்திட்டத்தின்கீழ் பின்வரும் ஊதிய விகிதம் வழங்கப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 30

அட்டவணை 2.9

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்	கூலி (நாளொன்றுக்கு ரூபாய்)
பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகள்	382
இதர மாநகராட்சிகள்	363
நகராட்சிகள்	342
பேரூராட்சிகள்	300

இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட 208 பணிகளில், 76 பணிகள் முடிக்கப்பட்டு, இதுவரை ஏறக்குறைய 2.53 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கூடுதலாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தும் வகையில், மாநில திட்டக் குழுவால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிவின் அடிப்படையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்த உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

2.6 செயல்பாட்டிலுள்ள திட்டங்கள்

2.6.1 இந்திய அரசின் திட்டங்கள்

(I) சீர்மிகு நகரங்கள் திட்டம்

பொதுமக்களுக்கு முக்கிய உட்கட்டமைப்பு, சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகள் வழங்குதல் போன்றவற்றின்மூலம் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வழங்கக்கூடிய நகரங்களாக திகழச் செய்யும் நோக்கத்துடன் 2015 ஆம் ஆண்டு சீர்மிகு நகரங்கள் திட்டம் ஒன்றிய அரசால் துவங்கப்பட்டது. மேலும், இத்திட்டமானது, நிலைக்கத்தக்க, உள்ளடக்கிய வளர்ச்சியில், சேவைகள் வழங்குவதில் சீர்மிகு தீர்வுகளைப் பயன்படுத்தவும், ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து அதில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணியானது பிற நகரங்களிலும் பின்பற்றக்கூடிய, அதாவது, பிற வளர்ச்சி அடையக்கூடிய நிலையில் உள்ள நகரங்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழக்கூடிய வகையிலான பணிகள் மேற்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

2023 மார்ச் 30]

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ரூ.1,000 கோடி நிதி, 50:50 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் ஒவ்வொரு நகரத்திற்கும் ஒதுக்கப்பட்டது.

இதுவரை இத்திட்டத்தின்கீழ், 10 மாநகராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) ரூ.9,700.94 கோடி மதிப்பிலான 636 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.4,761.40 கோடி மதிப்பிலான 442 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

(II) அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம்

அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் நோக்கமானது, குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் கசடுகழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால், இயந்திரம் சாராத வாகனப் போக்குவரத்து, பூங்காக்கள் மற்றும் பசுமைப் பகுதிகள் போன்ற உட்கட்டமைப்புகள் நிறுவப்படுவதை உறுதிப்படுத்துவதாகும். இத்திட்டத்தின்கீழ், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள், சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட 26 நகரங்கள், 2 சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களான வேளாங்கண்ணி மற்றும் இராமேஸ்வரம் என, மொத்தம் 28 நகரங்கள் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

[2023 மார்ச் 30

நிதிக்கூறு:

அட்டவணை 2.10

நகரங்கள்/மக்கள் தொகை	ஒன்றிய அரசின் ஒதுக்கீடு	தமிழ்நாடு அரசின் ஒதுக்கீடு	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு
10 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்	*33%*	*20%*	*47%*
10 இலட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்	*50%*	*20%*	*30%*

இத்திட்டத்தின்கீழ், 26 மாநகராட்சிகள்(பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக)/நகராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சியில் ரூ.9,977.37 கோடி மதிப்பீட்டில் 385 கட்டமைப்பு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 368 பணிகள் முடிக்கப்பட்டு, 17 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு நிதியை ஆசிய மேம்பாட்டு வங்கி/ஜெர்மன் வங்கி/தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்/ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி ஆகிய திட்டங்களின்கீழ் நிதியுதவி பெற அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023 மார்ச் 30]

செயலாக்கத்தில் உள்ள திட்டங்களின் சுருக்கம் அட்டவணை 2.11-ல் உள்ளன:

அட்டவணை 2.11

பிரிவு	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)	முடிக்கப்பட்ட திட்டங்கள்	முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள்
குடிநீர் வழங்கல்	14	5,870.22	8	6
பாதாள சாக்கடைத் திட்டம்	13	3,912.89	2	11
பசுமைப் பகுதிகள்	358	194.26	358	–
மொத்தம்	385	9,977.37	368	17

(III) அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் – (அம்ரூத் 2.0)

அம்ரூத் 2.0 திட்டம், 5 ஆண்டுகள் செயல்படுத்த ஒன்றிய அரசால் அக்டோபர் 1 ஆம் தேதி 2021 அன்று துவக்கப்பட்டது. அம்ரூத் திட்டம் 500 நகரங்களில் செயல்படுத்தியதன்மூலம் கிடைத்த வெற்றியினை தொடர்ந்து, நாட்டின் அனைத்து நகரங்களுக்கும் குடிநீர் ஆதாரப் பாதுகாப்பினை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நீரின் முழுமையான பயன்பாட்டினை ஊக்கப்படுத்தும் நோக்கில் குடிநீர் தேவைகள், நீர்நிலைகளை புனரமைத்தல், நீர்நிலை மேலாண்மை, உரிய முறையில் சுத்திகரிப்பின்மூலம் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுபயன்பாட்டிற்கான வழிவகைகளை ஆராய்தல் போன்றவை இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பணிகளைச் செயல்படுவத்துவதற்கான ஒன்றிய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.76,760 கோடியில், ரூ.4,942 கோடி தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிப் பங்கீடு அட்டவணை 2.12 இல் உள்ளவாறு:

[2023 மார்ச் 30

அட்டவணை 2.12

மாநகர/நகர மக்கள் தொகை	ஒன்றிய அரசின் பங்கு (சதவீதம்)	மாநில அரசின் பங்கு	உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு
10 இலட்சத்திற்கு மேல்	*25%*	*30%*	*45%*
10 முதல் 1 இலட்சம் வரை	*33%*	*30%*	*37%*
1 இலட்சத்திற்கும் குறைவாக	*50%*	*30%*	*20%*

அனைவருக்கும் குடிநீர் வழங்கும் நோக்கம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100% குடிநீர் விநியோகம் கிடைக்கச் செய்வது மற்றும் 28 அம்ரூத் நகரங்களிலும் 100 சதவிகித கழிவுநீர் மற்றும் கசடுகழிவு மேலாண்மையை உறுதி செய்வது போன்றவை அம்ரூத் 2.0 திட்டத்தின் நோக்கமாகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின்கீழ் செயல்படும் 158 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகள்) 'நகர குடிநீர் சமநிலைத் திட்டம்' தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் அனைவருக்கும் குடிநீர் வழங்குதல், நீர்நிலைகளின் நீடித்த மேலாண்மை மற்றும் அம்ரூத் நகரங்களில் 100 சதவிகித பாதாள சாக்கடைத் திட்டம் உறுதிச் செய்தல் ஆகியவற்றிற்கான திட்டப் பணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

பொது மற்றும் தனியார் பங்களிப்பை மேம்படுத்துதல்

10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட அனைத்து நகரங்களும், தங்களது மொத்த திட்ட நிதி ஒதுக்கீட்டில்,

2023 மார்ச் 30]

குறைந்தபட்சம் பத்து சதவிகிதம் அளவில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன்கூடிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

சீர்திருத்தங்கள்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது மற்றும் நகரங்களுக்கு முழுமையான குடிநீர் பாதுகாப்பை வழங்குவது ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் வலுவான சீர்திருத்தங்களை அம்ரூத் 2.0 கொண்டுள்ளது.

முதல் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் சீர்திருத்த செயல் திட்டங்கள், (அ) கட்டாய சீர்திருத்தங்கள் மற்றும் (ஆ) ஊக்கத்தொகை அடிப்படையிலான சீர்திருத்தங்கள் என இரு வகைப்படும்.

- *சொத்துவரி மற்றும் பயனாளிகள் கட்டணங்களில் கட்டாய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.*
- *மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான பயனுள்ள அமைப்பு ஏற்படுத்துதல்.*
- *ஊக்கத் தொகை அடிப்படையிலான நீர் பாதுகாப்பு, நகர்ப்புர நிர்வாகம் மற்றும் ஆற்றல்திறன் மேம்பாடு ஆகியவற்றில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.*

அனுமதிக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரம்

இத்திட்டத்தின்கீழ், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் நிருவாகத்தின்கீழ் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.2,746.16 கோடி மதிப்பீட்டில் 320 திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. KfW/TNCRUDP/CGF/KNMT/SUIDF *நிதிகளின்கீழ் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் காலம் அக்டோபர் 2026 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ் தற்போது வரை அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்:*

அட்டவணை 2.13

(ரூ.கோடியில்)

வகைப்பாடு	திட்டப் பணிகளின் எண்ணிக்கை	உத்தேச மதிப்பீடு	அம்ருத் 2.0		உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத் தொகை		வெளி ஆதார நிதி	
			ஒன்றிய அரசு நிதி	மாநில நிதி	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்	SUIDF நிதி	உலக வங்கி	KfW நிதி
குடிநீர் வழங்கல்	24	1129.59	534.69	329.12	137.02	69.00	73.62	0.00
பாதாள சாக்கடைத் திட்டம்	5	1658.90	510.92	497.68	0.00	0.00	268.15	454.69
மொத்தம்	29	2788.49	1045.61	826.80	137.02	69.00	341.77	454.69

(IV) தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புரம்)

அனைத்து நகரங்களையும் குப்பைகள் இல்லாத நகரங்களாகவும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாகவும் ஆக்குவதே தூய்மை இந்தியா திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக 135 உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புரத்தில் இதுவரை 5,07,143 தனிநபர் வீட்டுக் கழிவறைகள் (IHHL), 22,337 சமுதாய கழிப்பறைகள்

2023 மார்ச் 30]

ஆகியவை கட்டப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், இலகு ரக வணிக வாகனங்கள் மற்றும் டிப்பர் லாரி போன்ற முதன்மை சேகரிப்பு வாகனங்களை வாங்குதல்,நுண்ணுயிர் மையங்கள், வள மீட்பு மையங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

தூய்மை இந்தியா திட்டம் 2.0, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாள் தொடங்கப்பட்டது. குப்பையில்லா நகரங்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் செயலாக்க காலம் 5 ஆண்டுகள், அதாவது 2026 அக்டோபர் வரை ஆகும்.

அனைவருக்கும் தனிநபர் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உருவாக்குதல்மூலம் அனைத்து நகர்ப்புரங்களையும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களாகவும், குப்பையில்லா நகரங்களாகவும் உருவாக்குவது அரசின் நோக்கமாகும்.

தூய்மை இந்தியா திட்டம் (ந) 2.0 நோக்கங்கள்:

(i) *அனைத்து நகரங்களிலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை நீடித்த நிலைப்படுத்துவது, சுத்திகரிக்கப்படாத கசடுகழிவு (கழிவுநீர், பயன்படுத்திய நீர், கசடுகழிவு) அல்லது கழிவுநீர் சுற்றுப்புறத்தில் வெளியேற்றப்படாததை உறுதிசெய்வது மற்றும் 1 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை உள்ள நகரங்களில் நீரின் பயன்பாடு அதிகப்படுத்துதல்.*

(ii) *மேலும் அனைத்து நகரங்களையும் தூய்மையான மற்றும் குப்பை இல்லா நகரமாக மாற்றுவதுடன், 100% திடக்கழிவுகளை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்தல், குப்பை உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்தல், நெகிழி கழிவு மேலாண்மை மற்றும் அனைத்து தேக்கத் திடக்கழிவுகள் கொட்டும் இடங்களையும் சரிசெய்தல்.*

இத்திட்டத்தின் நிதிப் பங்கீடு விவரம் அட்டவணை 2.14 இல் உள்ளவாறு:

[2023 மார்ச் 30

அட்டவணை 2.14

மாநகர/நகர மக்கள் தொகை	ஒன்றிய அரசின் பங்களிப்பு	மாநில அரசு/ நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு
10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை	*25%*	*75%*
10 இலட்சத்திலிருந்து 1 இலட்சம் வரை மக்கள் தொகை	*33%*	*67%*
1 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை	*50%*	*50%*

சுகாதாரம்

தூய்மை இந்தியா திட்டம் 2.0 வழிகாட்டுதல்களின்படி, சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான தற்போதைய மற்றும் 2025 ஆம் ஆண்டின் உத்தேச மக்கள்தொகைக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் உள்ளாட்சி வாரியான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. அனைத்து நகரங்களிலும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை உறுதி செய்யும் வகையில், 2022-23 ஆம் ஆண்டில் 11,508 தனிநபர் வீட்டுக் கழிவறைகள் (IHHL) கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் 3,125 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,383 கழிவறைகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன, இவையனைத்தும் ஏப்ரல்-மே 2023-ல் கட்டி முடிக்கப்படும்.

தனிநபர் வீட்டு கழிப்பறை (IHHL) கட்டுவதற்கு இடம் இல்லாத குடும்பங்களுக்கு சுகாதாரத்தை உறுதிபடுத்துவதற்காக சமுதாயக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. குடிமக்கள் பொது இடங்களில் கழிப்பறைகளை எளிதாக அணுகுவதற்கு ஏதுவாக தூய்மை இந்தியா திட்டத்தின் வழிகாட்டுதல்படி,

2023 மார்ச் 30]

அனைத்து உள்ளாட்சிகளிலும் 500 மீட்டர் தூரத்திற்குள் ஒரு பொதுக் கழிப்பறை அமைக்கப்பட வேண்டும். இடைவெளி பகுப்பாய்வின்படி, 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 170 சமுதாயக் கழிப்பறைகள், 130 பொதுக் கழிப்பறைகள் மற்றும் 110 சிறுநீர் கழிப்பிடங்கள் ஆகியவை ரூ.86.86 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை

உள்ளாட்சி அமைப்புகளில் சேகரமாகும் குப்பைகளை உருவாகும் இடத்திலேயே பிரித்து, மக்கும் குப்பைகளை உரமாக மாற்றவும், எரிவாயு தயாரிக்கவும், இதன்மூலம், நகரங்களை, குப்பைகளற்ற பகுதிகளாக மாற்றவும் அரசு உறுதி பூண்டுள்ளது. திட மற்றும் திரவக் கழிவுகளை அறிவியல் ரீதியாகவும், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையிலும் கையாளுவது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியப் பணியாகும்.

தமிழகத்தில் உள்ள 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகளில் நாள்தோறும் சுமார் 7,500 மெ.டன் திடக்கழிவு உருவாகின்றது. இதில், 54% ஈரக்கழிவுகள் மற்றும் 46% உலர் கழிவுகள் ஆகும். ஈரக்கழிவுகள் அறிவியல் முறையில் கையாளப்பட்டு, உரமாக மாற்றப்படுகின்றன. அதுபோன்று, உலர் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுவதற்காக வளமீட்பு மையம்மூலம் வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் எரிக்கப்படக்கூடிய கழிவுகள், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு, இணைசெயலாக்க முறைமூலம் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

*பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள தேக்கத் திடக்கழிவுகளை உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (*Biomining*) முறையில், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வகையில், முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் பகுதி, நிலத்தின் தேவை மற்றும் தன்மைக்கேற்ப, நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளவோ, நகர்வனங்களாகவோ, பூங்காக்களாகவோ மாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது.*

*தூய்மை இந்தியா திட்டம் 2.0 வழிகாட்டுதல்களின் அடிப்படையில், நகர திடக்கழிவு செயல் திட்டம் (*CSWAP*)*

அனைத்து 158 உள்ளாட்சி அமைப்புகளிலும் தயாரிக்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டிற்கான இடைவெளி கண்டறியப்பட்டது. தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் மாநில உயர் மட்டக் குழுவால், நகர திடக்கழிவு செயல் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தில் ஈர மற்றும் உலர் கழிவுகளைக் கையாளுவதற்காக 80 நுண்ணுர மையங்கள், 9 உயிரி எரிவாயு அமைப்பு, 11 பயோ CNG ஆலைகள், 108 பொருள் மீட்பு வசதிகள், 7 முழு தானியங்கி வள மீட்பு மையம், 3 இடமாற்ற நிலையம் மற்றும் 4 அறிவியல் முறையிலான நிலநிரப்பு வசதி போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கோவை, மதுரை, திருச்சி, சேலம், தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய 6 மாநகராட்சிகளில் கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாடு கழிவுகளை கையாளும் முறைகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தூசி மற்றும் காற்று மாசுபாட்டை தடுக்கும் வகையில் கோவை, மதுரை, திருச்சி, சேலம், தூத்துக்குடி ஆகிய 5 மாநகராட்சிகளில் சாலை துப்புரவு இயந்திரங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தேக்கத் திடக்கழிவினை அகற்றுதல்

உயிரி அகழ்வு முறை (Biomining)மூலம் தேக்கத் திடக் கழிவுகளால் நிரம்பியுள்ள குப்பைக் கிடங்கை மீட்டெடுக்கும் பணி பல்வேறு உள்ளாட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள 122 உள்ளாட்சிகளில் குவிந்துள்ள தேக்கத் திடக் கழிவுகளின் மொத்த அளவு 106 இலட்சம் கன மீட்டர் ஆகும்.

தூய்மை இந்தியா திட்டம், 18 மாநகராட்சிகள் மற்றும் 93 நகராட்சிகளில் உயிரி அகழ்வு முறைமூலம் 93 இலட்சம் கன மீட்டர் தேக்கத் திடக்கழிவுகளை அகற்ற ரூ.600.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயிரி அகழ்வியல் முறையில் தேக்கத் திடக்கழிவுகள் அகற்றும் பணி முடிந்த பிறகு, சுமார் 950 ஏக்கர் நிலம் மீட்கப்படும்.

பழைய தேக்கத் திடக்கழிவுகளை அகற்றும் பணி 64 உள்ளாட்சிகளில் முடிக்கப்பட்டு, 48 இலட்சம் க.மீ தேக்கத்

2023 மார்ச் 30]

திடக்கழிவுகள் அகற்றப்பட்டு, 491 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. 58 உள்ளாட்சிகளில், தேக்கத் திடக்கழிவுகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உயிரி அகழ்வு முறையில் தேக்கத் திடக்கழிவுகள் அகற்றும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு நகரங்களில் மீட்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதி, திடக்கழிவு செயலாக்க வசதிகளை ஏற்படுத்துவதற்கும், உபரி நிலங்கள், பூங்காக்கள் மற்றும் பசுமையான நகர்ப்புர காடுகளை உருவாக்குதல் உள்ளிட்ட பொது நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

2022-23 ஆம் ஆண்டில், 6 மாநகராட்சிகள் மற்றும் 32 நகராட்சிகளில் கூடுதலாக உயிரி அகழ்வியல் முறையில் தேக்கத் திடக்கழிவுகளை அகற்றவும் ரூ.92.77 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புர காடுகள்

இதுவரை 64 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உயிரி அகழ்வியல் முறையில் தேக்கத் திடக்கழிவுகளை அகற்றும் பணிகள் முடிவுற்று, 491 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்டுள்ள நிலத்தில் நகர்ப்புர பசுமையாக்குதல் திட்டம் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 53,589 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் 2022-23 ஆம் ஆண்டில், 127 ஏக்கர் நிலம் பசுமை வெளியாக மாற்றப்பட்டுள்ளது.

தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் (தூய்மை நகரப் பிரச்சாரம்)

அரசானது, நகரத் தூய்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேலும், திடக்கழிவு மேலாண்மை, திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதற்கான அனைத்து உட்கட்டமைப்புகளும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசின் முயற்சியுடன் பெருமளவிலான மக்கள் பங்களிப்பும் இருந்தால்தான் நீடித்த நிலையான மாற்றத்துடன், தூய்மையான நகரங்களை உருவாக்க இயலும் என்பதன் அடிப்படையில் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் 03.06.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை குறித்த முக்கியத்துவத்தையும், குறிப்பாக குப்பையை பிரித்து வழங்குவதைப் பற்றி விழிப்புணர்வை

ஏற்படுத்துவது மற்றும் மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் அடிப்படை நோக்கமாகும். இத்திட்ட செயலாக்கத்தின் பரப்புரையின் முக்கிய வாசகத்தின் பொருள் "எனது குப்பை, எனது பொறுப்பு" ஆகும்.

தூய்மை இயக்க முகாம்கள் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் 7 முக்கியமான பொருள்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. பெருமளவிலான மக்கள் பங்களிப்புடன் பொது இடங்களைச் சுத்தம் செய்தல்.
2. குப்பையை சேகரிக்கும் இடத்திலேயே பிரித்து அளித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
3. நீர்நிலைகள், மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் மரம் நடுதல்.
4. அனுமதியில்லாத விளம்பர பலகை, பேனர்கள், உபயோகமற்ற வாகனங்கள், சேதமடைந்த தெரு நாற்காலிகள் அப்புறப்படுத்துதல்.
5. தூய்மைப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களைக் கௌரவப்படுத்துதல்.
6. அனுமதியின்றி கொட்டப்படும் அனைத்து கட்டடக் கழிவுகள் மற்றும் சுவரொட்டிகளை அப்புறப்படுத்துதல்.
7. ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமை அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்மூலம் 8,00,000 தன்னார்வலர்கள், 9,454 மக்கள் பிரதிநிதிகள் தங்களது பங்களிப்பை அளித்துள்ளனர். 3,000-க்கும் அதிகமாக குப்பை கொட்டும் இடங்களைக் கண்டறிந்து சுத்தம் செய்யப்பட்டு மாற்று உபயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 6,170 கி.மீ. மழைநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 12,000 தூய்மை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெருமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

சமூக வலைதள கணக்குகள்

மக்களை நேரடியாக சென்றடைவது, திடக்கழிவு மேலாண்மை, நீரை மறுசுழற்சி செய்தல் மற்றும் சுகாதாரம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, சமூக வலைதளங்களான (ட்விட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம்) கணக்குகள் துவக்கப்பட்டு, முக்கியமான நிகழ்வுகள் பற்றிய பதிவுகள் மக்கள் அறியும்வண்ணம் பதிவிடப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டம்-இணைய முகப்பு

தூய்மை பாரத இயக்கத்திற்கென பிரத்யேகமாக ஓர் இணைய முகப்பு (Portal) உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளும் பயன்பெறும் வகையில் திடக்கழிவு மேலாண்மை, திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த கையேடுகள், சுற்றறிக்கைகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சியிலும் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளை விளக்கும் வகையிலான கட்டுரைகளைப் பதிவேற்றம் செய்ய ஏதுவாக இந்த இணைய முகப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தவிர பொது மக்களும் புதுமையான மற்றும் சிறப்பான முயற்சிகளை பதிவேற்றம் செய்யும் வசதியும் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எழில்மிகு நகரம்-இணைய இதழ்

எழில்மிகு நகரம் என்னும் பெயரில் தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதார மேம்பாட்டு பணிகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளும் அறிந்து கொள்ளும் வகையில் எழில்மிகு நகரம் மாத இதழ் ஆகஸ்ட் 2022 முதல் வெளியிடப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த வழிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் நிலையான வழிகாட்டு முறைகள் ஆகியவை இவ்விதழில் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் தூய்மை தொடர்பான ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இம்மாத இதழ் வெளியிடப்படுகிறது. மேலும், இதன்மூலம் அதிக அளவிலான வாசகர்களைச் சென்றடையும்வண்ணம் வெளியிடப்படுகிறது. தற்போது வரை 4 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

[*2023 மார்ச் 30*

இயற்கை உரம்-செழிப்பு

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெறப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடத்தில் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும்பொருட்டு, உரத்தின் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இப்பகுப்பாய்வு உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-ன் வழிகாட்டுதலின்படி செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட உரமானது செழிப்பு என்ற பெயரில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள விவசாயிகளுக்கும், சமையல் தோட்டத்திற்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

(V) தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (NULM)

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்கீழ், நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான திட்டங்களும், நகர்ப்புர வீடற்றவர்களுக்கு தங்குமிடம் கட்டும் திட்டமும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

நகர்ப்புர வீடற்றவர்களுக்கான தங்குமிடம் (SUH)

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தெருவோரம் வசிப்பவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய இரவு தங்கும் விடுதிகள் வழங்க வேண்டும் என்பதே அரசின் கொள்கை முடிவாகும். இத்திட்டத்தின்கீழ் தெருவோரம் வசிப்பவர்கள் பயன்பெறும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 55 புதிய தங்குமிடங்கள் ரூ.33.27 கோடி மதிப்பீட்டிலும், 20 மாநகராட்சிகள் மற்றும் 66 நகராட்சிகளில் இதுவரை 107 புதிய தங்குமிடங்களும், 35 பழைய தங்குமிடங்கள் புதுப்பிக்கவும் மொத்தம் 142 தங்குமிடங்கள் ரூ.73.42 கோடி மதிப்பீட்டிலும், பேரூராட்சிகளில் 35 புதிய தங்குமிடங்கள் ரூ.12.90 கோடி மதிப்பீட்டிலும், எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 5 தங்குமிடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தெருவோர வியாபாரிகள் நலன் (SUSV)

உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் நலனுக்காக அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தெருக்களில் பொருள்களை விற்பனை செய்து மேற்கொண்டு வரும் தெருவோர வியாபாரிகளுக்கு விற்பனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் 900 வண்டிகள் ரூ.13.92 கோடி மதிப்பீட்டிலும், மதுரை, ஈரோடு மாநகராட்சிகள் மற்றும் 26 நகராட்சிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு 3,772 வண்டிகள் ரூ.28.95 கோடி மதிப்பீட்டிலும், பேரூராட்சிகளில் 228 வண்டிகள் ரூ.1.88 கோடி மதிப்பீட்டிலும், கொள்முதல் செய்யப்பட்டு தெருவோர வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், 2 மாநகராட்சிகள் மற்றும் 30 நகராட்சிகளில் உள்ள வியாபாரிகளுக்கு வழங்க மொத்தம் 805 விற்பனை வண்டிகள் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

PM-SVANidhi

தகுதியுள்ள தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள்மூலம் 7% வட்டி மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. இதுவரை முதல் தவணையாக 1,34,097 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.134.09 கோடியும், இரண்டாம் தவணையாக 37,355 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.74.71 கோடியும், மூன்றாம் தவணையாக 356 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1.78 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

2.6.2 மாநில அரசின் திட்டங்கள்

(I) மூலதன மானிய நிதி (Capital Grant Fund)

2021-2022 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின்கீழ், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ரூ.499.35 கோடி மதிப்பீட்டில் 1,084 உட்கட்டமைப்பு வசதி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதியின்கீழ், 2022-23 ஆம் ஆண்டிற்கு குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை வசதி, பாலங்கள், கல்வெட்டுகள், மழைநீர் வடிகால் பணிகள், பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள், பூங்காக்கள் மற்றும் கால்வாய்கள் மேம்பாடு மற்றும் பிற அத்தியாவசிய உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள மொத்த ஒதுக்கீடு ரூ.335 கோடியில் 31% (ரூ.155 கோடி) மாநகராட்சிகளுக்கும், 36% (ரூ.180 கோடி) நகராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 30

(II) இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

2021-22-ம் ஆண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ், ரூ.165.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் குடிநீர் கட்டண நிலுவை தொகை ரூ.93.39 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், மின் கட்டண நிலுவை தொகை ரூ.70.36 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டு 6-வது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ரூ.134 கோடி (மாநகராட்சி 31% ரூ.62 கோடி மற்றும் நகராட்சிகள் 86% ரூ.72 கோடி) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, TANGEDCO-*விற்கு, மின்சாரக் கட்டணம் செலுத்துதல், குடிநீர் கட்டணம் செலுத்துதல், பாதாள சாக்கடை வசதி, சாலைகள் பராமரிப்பு, பாலங்கள், சிறுபாலங்கள், பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள், பூங்காக்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பணிகளின் பராமரிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

(III) தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல் போன்ற பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2021-22-ன்கீழ், 13 மாநகராட்சிகள் மற்றும் 21 நகராட்சிகளில் 1,810 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1,624 பணிகள் ரூ.244.68 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2022-23-ல் 15 மாநகராட்சிகள் மற்றும் 20 நகராட்சிகளில் 5,897 சாலைப் பணிகள் ரூ.684.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(IV) நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19.10.2022 அன்று நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில் 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 2016-2017 நிதியாண்டிற்கு முன்பு

2023 மார்ச் 30]

போடப்பட்ட சாலைகள், குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடைப் பணிகள் மற்றும் இயற்கை பேரிடர் போன்றவற்றால் 20,990 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

முதற்கட்டமாக வரும் நான்கு நிதியாண்டுகளில் சேதமடைந்த 20,990 கி.மீ. நீளமுள்ள சாலைகளில், 16,370 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பல்வேறு திட்டங்கள் மூலமாக சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியின்கீழ் ரூ.2,200 கோடியில் கீழ்க்கண்ட அட்டவணை 2.15-ல் உள்ளவாறு 4,620 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

அட்டவணை 2.15

வ. எண்.	ஆண்டு	ஏற்கெனவே உள்ள திட்டத்தின்கீழ் எடுக்கப்படவுள்ள சேதமடைந்த சாலைகள் (கி.மீ)		சிறப்பு நிதியின்கீழ் எடுக்கப்பட உள்ள சாலையின் விவரம்		சீரமைக்கப்பட வேண்டிய சாலையின் மொத்த நீளம்	
		சாலையின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)	சாலை யின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)	சாலை யின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)
1	2022-2023	4,289	1,775	1,620	655	5,909	2,430
2	2023-2024	4,330	1,838	1,822	872	6,152	2,710
3	2024-2025	3,986	1,881	757	414	4,743	2,295
4	2025-2026	3,765	1,894	421	259	4,186	2,153
	மொத்தம்	16,370	7,388	4,620	2,200	20,990	9,588

20 மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் 138 நகராட்சிகளில் உள்ள 11,872 கி.மீ. நீளம்கொண்ட சேதமடைந்த சாலைகள் நான்கு ஆண்டுகளில் சீரமைக்கப்படும். மேற்கண்ட

11,872 கி.மீ. நீளம்கொண்ட சேதமடைந்த சாலைகளில், 9,346 கி.மீ. நீளம் உள்ள சேதமடைந்த சாலைகளை பல்வேறு திட்டங்களின்கீழ் (தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், மாநில நிதி ஆணையம் மற்றும் 15-வது மத்திய நிதி ஆணைய நிதி) மேம்படுத்தப்பட உள்ளன. கீழ்க்கண்ட அட்டவணை 2.16-ல் கண்ட மீதமுள்ள 2,526 கி.மீ. நீளம்கொண்ட சேதமடைந்த சாலைகள் ரூ.1,000 கோடியில் தமிழக அரசின் சிறப்பு நிதியின்கீழ் அடுத்து வரும் நான்கு நிதியாண்டுகளில் சீரமைக்கப்படும்:

அட்டவணை 2.16

வ. எண்.	ஆண்டு	ஏற்கெனவே உள்ள திட்டத்தின்கீழ் எடுக்கப்படவுள்ள சேதமடைந்த சாலைகள்(கி.மீ)		சிறப்பு நிதியின்கீழ் எடுக்கப்பட உள்ள சாலையின் விவரம்		சீரமைக்கப்பட வேண்டிய சாலையின் மொத்த நீளம்	
		சாலை யின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)	சாலை யின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)	சாலை யின் நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)
1	2022-2023	2,623	911	1,008	350	3,631	1,261
2	2023-2024	2,566	924	919	350	3,485	1,274
3	2024-2025	2,189	939	315	150	2,504	1,089
4	2025-2026	1,968	925	284	150	2,252	1,075
	மொத்தம்	9,346	3,699	2,526	1,000	11,872	4,699

2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் 138 நகராட்சிகளில் உள்ள 3,631 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகளில் 2,623 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகளை பல்வேறு திட்டங்களின்கீழ் (தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத்திட்டம், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்

2023 மார்ச் 30]

திட்டம், மாநில நிதி ஆணையம் மற்றும் 15-வது மத்திய நிதி ஆணைய நிதி) மேம்படுத்தப்பட உள்ளன. மீதமுள்ள 1,008 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகள் தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதித் திட்டத்தின்கீழ் ரூ.350 கோடியில் மேற்கொள்ளப்பட உள்ளது.

2.7 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2.7.1 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவித் திட்டம்-தமிழ்நாடு (SMIF–TN செயல்படுத்தப்பட்டு வருகிறது

ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 37 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், பாதாளச் சாக்கடை திட்டம், நீர் நிலைகள் புனரமைப்பு மற்றும் விளையாட்டுத் திடலுடன் கூடிய பூங்காக்கள் மேம்பாடு போன்ற 35 பணிகள் ரூ.3,062.51 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 34 திட்டப் பணிகள் ரூ.2,832.51 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து பணிகளையும் விரைந்து நிறைவேற்றி பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த நடப்பாண்டில் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியின்கீழ் 500 மில்லியன் யூரோ (தோராயமாக ரூ.4,250 கோடி) புதிய கடன் பெறுவதற்கான திட்ட மதிப்பீட்டு பட்டியல் இறுதி செய்யப்பட்டு வருகிறது.

2.7.2 உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ரூ.3,831 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செயலாக்கம் 31.03.2023-ல் முடிவடைகிறது.

இத்திட்டமானது, நகர்ப்புர ஆளுமைக் கூறு, நகர்ப்பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக்கூறு மற்றும் நகர்ப்புர சேவைகளுக்கான முதலீட்டுக்கூறு ஆகிய மூன்று துணைக் கூறுகள் உள்ளடக்கியதாகும்.

மேற்கூறிய 3 கூறுகளில், நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) மற்றும் நகர்ப்பகுதிகளுக்கான தொழில்நுட்ப உதவி ஆகியவை நகராட்சி நிருவாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புர சேவைகளுக்கான முதலீட்டுக் கூறு, தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(i) நகர்ப்புர ஆளுமைக்கூறு—செயல்பாடுகளின் அடிப்படையிலான மானியம்

நகர்ப்புர மேலாண்மையில் சிறந்த அம்சங்களை செயல்படுத்துவதே மாதிரி நகரங்கள் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இக்கூறின்கீழ் ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகள் ஆகியவை மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டன. நகர்ப்புர மேலாண்மை மற்றும் ஆளுமையில் மாதிரி நகரங்கள் தமிழ்நாட்டிலுள்ள பிற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மாதிரி நகரங்களில் நகர்ப்புர மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்திட திட்ட காலமான 7 ஆண்டுகளுக்கும் மொத்தம் ரூ.383.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டு வரை நகர்ப்புர மேலாண்மை இலக்குகள் எய்தப்பட்டமைக்காக 3 மாநகராட்சிகளுக்கு ரூ.356.48 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ii) நகர்ப்புரப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக் கூறு

அ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுமை

நகராட்சி நிருவாகத்தில் மின் ஆளுமைமூலம் பணிகளை கையாளுவதற்கு, “மையப்படுத்தப்பட்ட வலைதள மின் ஆளுமை பயன்பாடு" என்ற சீரிய திட்டம் ரூ.18.31 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகளில் அனைத்து மின் ஆளுமை சேவைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

சொத்துகள் மேலாண்மை

- ✓ *நகராட்சி நிர்வாகத் துறையில் மின் ஆளுமை செயலாக்க முயற்சியின் ஒரு பகுதியாக UTIS மென்பொருளில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் கணக்குகள் பராமரித்தல் மற்றும் பட்டியல்கள் தயாரித்தல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. செலவு சீட்டுகளும் இணைய வழியில் தயாரிக்கப்படுகின்றன. இறுதிப் பணம் செலுத்திய பிறகு, சொத்துகளின் விவரங்கள் அந்தந்தப் பதிவேடுகளில் தானாகவே பதிவேற்றமாகிவிடும். சொத்துப் பதிவேடுகள் பதிவேற்றப்பட்டவுடன், சொத்துகள் பற்றிய நிகழ்நேரத் தகவலை வழங்கும் சேவை மென்பொருளில் பராமரிக்கப்படுகிறது.*

நிகழ்நிலை திட்ட கண்காணிப்பு முறை

- ✓ *பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தும் நிலையைக் கண்காணிக்கவும்/ மதிப்பாய்வு செய்யவும் வரைகலை இணைய முகப்புடன்கூடிய புதிய தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுதியின்மூலம் திட்டங்களைச் செயல்படுத்துவது கண்காணிக்கப்படுகிறது.*
- ✓ *நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சிகள் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் ஆகிய துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் திட்ட முகப்பு பலகை புதுப்பிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

நமது சேவையில் நகராட்சி மற்றும் மக்கள் சேவையில் மாநகராட்சி

- ✓ *அனைத்து வகையான நகர்ப்புர சேவைகளை குடிமக்கள் தங்கள் இல்லங்களிலேயே பெறுவதை உறுதிபடுத்தும் வகையில், "நமது சேவையில் நகராட்சி மற்றும் மக்கள் சேவையில் மாநகராட்சி" என்ற திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியோடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அனைத்தையும், நிகழ் நேரத்தில் எளிமையாக கையாளும் வகையில் சேவைகளை மக்களின் வீட்டிற்கே கொண்டு*

செல்வது, நகர்ப்புர மின் ஆளுமையின் நோக்கமாகும். இது நகர்ப்புர உள்ளாட்சிகளின் ஆளுமையில் மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தவும், வெளிப்படைத் தன்மை மற்றும் செயலாக்கத்தினை மேம்படுத்தவும் வழிவகுப்பதோடு எளிய வணிக பயன்பாட்டிற்கும் வழிவகை செய்கிறது.

✓ அனைத்து வீடுகளிலும் QR Code ஒட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் குடிமக்கள் நகராட்சி சேவைகளை அவர்கள் வீட்டிலிருந்து பெறுவதோடு, நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்தலாம்.

திறன் மற்றும் நிறுவன மேம்பாடு பயிற்சி

திறன் மற்றும் நிறுவன மேம்பாடு துணைக் கூற்றின்கீழ் ரூ.9.86 கோடி செலவில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 41,200 பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி

தமிழ்நாட்டிலுள்ள 21 மாநகராட்சிகளின் மேயர்கள், துணை மேயர்கள், 138 நகராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு 13-4-2022 அன்று ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. அதேபோல் 18-4-2022 அன்று 490 பேரூராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. மொத்தம் 1,298 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தகைசால் பெருமக்கள் இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள் மற்றும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் கருத்துகளைத் தெரிவித்தனர். மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் 12,638 எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்திறனை மேம்படுத்துவது தொடர்பான புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட உள்ளது.

2023 மார்ச் 30]

பொது நிதி மேலாண்மை சீர்திருத்தப் பிரிவு

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பொது நிதி மேலாண்மை பிரிவு உருவாக்கப்பட்டு ஜூலை 2022 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு பொது நிதி மேலாண்மை தொடர்பான சீர்திருத்தங்களை செயல்படுத்தவும், நிலைத்திருக்க செய்யவும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

உலகவங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்

*உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் (*TNSUDP*) தொடர்ச்சியாக தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (*TNCRUDP*) என்று பெயரிடப்பட்டுள்ள புதிய திட்டம் உலக வங்கியின் மதிப்பீட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பு (*Outlay*) ரூ.3,350.25 கோடியாகும். இத்திட்டம் எதிர்வரும் 2023-24 நிதியாண்டில் தொடங்கப்படவுள்ளது.*

2.8 நிதி மேலாண்மை

2.8.1 ஆறாவது மாநில நிதிக் குழு

ஆறாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையை ஏற்று, அரசாணை (நிலை) எண் 60, நிதித் துறை, நாள்:28.02.2023-ன்மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- *மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 10% உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*
- *நகர்ப்புர மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே 49:51 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*
- *நகர்ப்புர பங்கில் 16% பெருநகரத்திற்கு அதாவது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*
- *84% நகர்ப்புர பங்கு, இதர மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*

- இந்நிதி 31:36:33 என்ற விகிதத்தில் மாநகராட்சி (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக), நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

- 6-வது மாநில நிதிக் குழு பின்வரும் அளவீடு மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது:

	மாநகராட்சிகள் 31 விழுக்காடு		**நகராட்சிகள் 36 விழுக்காடு**	
அ	2011 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கீடுபடி	65%	2011 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கீடுபடி	60%
ஆ	பரப்பளவுபடி	15%	பரப்பளவுபடி	20%
இ	குடிசைப்பகுதி மக்கள் தொகைபடி	20%	குடிசைப்பகுதி மக்கள் தொகைபடி	20%

- 2022-23 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.500 கோடியில், ரூ.335 கோடி மாநகராட்சி (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டிற்கான இயக்குதல், பராமரிப்பு மற்றும் பற்றாக்குறையிருப்பு நிதியின் (O&M)கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.200 கோடியில், மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கு ரூ.134 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிட்ட நோக்கத்திற்காக சிறப்பு மானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

2022-23 ஆம் ஆண்டின் ஆறாவது மாநில நிதிக் குழு சிறப்பு மானியங்கள்

அட்டவணை 2.17

வ. எண்	திட்டங்கள்	தொகை (ரூ. கோடியில்)
1	தூய்மை பணியாளர்களின் நல வாரியத்திற்கு மானியம்	10.00
2	நூலக வரி முன்பணம்	60.00
3	பொது நூலகத்திற்கு முன்பணமாக அளிக்கப்படும் வரி (Advance Cess)	90.00
4	புவியியல் தகவல் படி வரைவுகள்	10.00
5	படிப்பு மற்றும் ஆவண திரட்டுகளுக்கு	5.00
6	தமிழ்நாடு நகர்ப்புர பயிற்சி நிலையம் மற்றும் பயிற்சி தேவைகளுக்கு (TNIUS)	5.00
7	சுற்றுலாவிற்கான மானியம்	
	(அ) நிலையான மானியம்	15.00
	(ஆ) இதர வேறு இனங்களுக்கான மானியம்	5.00
8	பள்ளிகள் மேம்பாடு	
	(அ) உள்கட்டமைப்பு	100.00
	(ஆ) இயக்குதல் மற்றும் பராமரிப்பு	60.00
9	நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்	200.00
10	புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நகராட்சிகளுக்கான மானியம்	60.00

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட மானியத் தொகை விவரங்கள் அட்டவணை 2.18-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

[2023 மார்ச் 30

அட்டவணை 2.18

(ரூ. கோடியில்)

வகைப்பாடு	2022-23		2023-24	
மாநகராட்சிகள்	**ஒதுக்கீடு**	**விடுவிக்கப் பட்டது**	**ஒதுக்கீடு**	**விடுவிக்கப் பட்டது**
மாநில நிதி ஆணைய மானியம்	1,432.80	1,432.80	1,676.69	-
மூலதன மானியம்	155.00	155.00	170.50	-
இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை	62.00	62.00	68.20	-
நகராட்சிகள்				
மாநில நிதி ஆணைய மானியம்	1,663.89	1,663.89	1,947.12	--
மூலதன மானியம்	180.00	180.00	198.00	--
இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை	72.00	72.00	79.20	--

2023 மார்ச் 30]

2.8.2 15-வது மத்திய நிதி ஆணையம்

ஒன்றிய வரி வருவாயை மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பகிர்வு செய்வது குறித்தான பரிந்துரைகளை வழங்குவதற்காக அரசியலமைப்பு சட்டத்தின் 280-வது பிரிவின்கீழ் 15-வது ஒன்றிய நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. 15-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் 2020-21 முதல் 2025-26 வரை ஆகும்.

15-வது ஒன்றிய நிதி ஆணையம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இரண்டு பிரிவுகளாக; அதாவது, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மற்றும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் என பிரித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவையாகும். பிற மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கன்டோன்ட்மன்ட் போர்டுகள் (புனித தோமையார் மலை மற்றும் வெல்லிஸ்டன்) ஆகியவை 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

*15-வது ஒன்றிய நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஒன்றிய அரசு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிபந்தனையற்ற (*Untied*) மானியம் மற்றும் நிபந்தனையுடன்கூடிய (*Tied*) மானியம் என இரண்டு பிரிவுகளாக மானியம் வழங்குகிறது. கன்டோன்மன்ட் போர்டுகளுக்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் மானியம் வழங்க பரிந்துரைத்துள்ளது. 15-வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2021-22 ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட மானிய விவரம் அட்டவணை 2.19-ல் உள்ளவாறு:*

[2023 மார்ச் 30

அட்டவணை 2.19

(ரூ. கோடியில்)

மானியங்களின் வகை	2021-22		2022-23	
	ஒதுக்கீடு	பெற்றுக் கொண்டது	ஒதுக்கீடு	பெற்றுக் கொண்டது
10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையுடன் கூடிய மானியம்) பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளின் படி (சுற்றுப்புற காற்றின் தன்மை)	117.00	117.00	122.00	122.00
10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையுடன் கூடிய மானியம்) திடக்கழிவு மேலாண்மை	303.00	303.00	313.00	-
10 இலட்சத்திற்கும்கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையுடன் கூடிய மானியம்) (நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சிகள் இயக்குநரகம்) மற்றும் கன்டோன்மண்ட் போர்டு	535.80	535.80	555.00	277.50
10 இலட்சத்திற்கும்கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (நிபந்தனையற்ற மானியம்) (நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,பேரூராட்சிகளின் இயக்குநரகம், கன்டோன்மன்ட் போர்டுகள்)	357.20	357.20	370.00	185.00

2023 மார்ச் 30]

10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகர்ப்புர ஒருங்கிணைப்பு நகரங்கள்

பெரிய நகரங்கள் வேகமாக வளரும் போக்கைக் கொண்டிருப்பதால், காற்றின் தரத்தை மேம்படுத்துதல், நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சிறப்பான திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துதல் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, மானியங்கள் வழங்கப்படுகின்றன. 15-வது நிதி ஆணையம், 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு நிபந்தனையுடன்கூடிய மானியத்தை மட்டுமே பரிந்துரைத்துள்ளது. சில வரையறைகள் நிறைவேற்றப்படும் நிலையில் இம்மானியம் விடுவிக்கப்படுகிறது.

நீர், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் காற்றின் தரத்திற்கான மானியங்களை பரிந்துரைக்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர அமைச்சகம், மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பு அமைச்சகங்களாக ஒன்றிய அரசு நியமித்துள்ளது. இந்த அமைச்சகங்கள் மேற்கண்ட நகரங்களுக்கு மானியம் வழங்குவதற்கான பரிந்துரைகளை அளிப்பதற்கு இலக்குகளை நிர்ணயிக்கின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டில் நீர், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதியின்கீழ் 34 எண்ணிக்கையிலான பணிகள், திட்ட மதிப்பீடு ரூ.120 கோடியில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) உயிரி அகழ்வு முறையில் தேக்கத் திடக்கழிவுகள் அகற்றும் பணிகள், திடக்கழிவு மேலாண்மைக்கான வாகன கொள்முதல், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2021-2022 ஆம் நிதியாண்டில் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிதியின்கீழ் 80 பணிகள், திட்ட மதிப்பீடு ரூ.25.73 கோடியில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) முழு அகல சாலைகள் அமைத்தல், சாலையினை தூய்மைப்படுத்தும் வாகனங்கள் கொள்முதல் செய்தல், மூலதன பகிர்வு ஆய்வு, மின் செறிவூட்டும் நிலைய கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

[2023 மார்ச் 30

2022-2023 ஆம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட கூறுகளான நீர்நிலைகள் மேம்படுத்துதல், பயன்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி, குடிநீர் வழங்குதல், வாகனங்கள் கொள்முதல், குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிதியின்கீழ் முழு அகல சாலைகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் ரூ.10.86 கோடியில் எடுக்கப்பட்டுள்ளது.

10 இலட்சத்திற்குக்கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்

10 இலட்சத்திற்குக்கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு வழங்கப்படும் மானியத்தில், 60 விழுக்காடு நிபந்தனையுடன்கூடிய மானியமாகும். இம்மானியம் (அ) துப்புரவு மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) நிலையைப் பராமரித்தல் மற்றும் (அ) குடிநீர் விநியோகம், மழை நீர் சேகரிப்பு மேலும், நீர் வழங்கல் மற்றும் நீர் மறுசுழற்சி ஆகிய அடிப்படை சேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். உள்ளாட்சி அமைப்புகள் இயன்றவரை, இவ்விரண்டு மிக முக்கியமான சேவைகளுக்கு, நிபந்தனையுடன் கூடிய மானியத்தின் ஒரு பாதியை ஒதுக்க வேண்டும். எவ்வாறாயினும், எந்தவொரு உள்ளாட்சி அமைப்பும், மேற்படி வசதிகளின் ஒரு பிரிவினை நிறைவு செய்திருக்கும் நிலையில், அந்த நிதியை மற்ற பிரிவிற்கும் பயன்படுத்தலாம்.

40 விழுக்காடு நிபந்தனையற்ற (Untied Grant) மானியமாகும். இம்மானியம், நகர்ப்புர திட்டமிடல், தீயணைப்பு சேவைகள், நீர் வழங்கல், பொது சுகாதாரம், சாலைகள், வடிகால் மற்றும் சிறுபாலங்கள், இடுகாடுகள் மேம்பாடு, இறைச்சிக்கூடம் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை முறைப்படுத்துதல் போன்ற இடம் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளுக்கும், தெரு விளக்குகள், வாகன நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பொது வசதிகள் உள்ளிட்ட சம்பளம் அல்லது பிற பணியமைப்பு செலவுகள் தவிர்த்த எந்தவொரு கூறிற்கும் பயன்படுத்தப்படலாம்.

2021-2022 ஆம் நிதியாண்டில் வரையறுக்கப்பட்ட நிதியின்கீழ் மொத்தம் 1,481 பணிகள் திட்ட மதிப்பீடு ரூ.361.91 கோடியில், திடக்கழிவு மேலாண்மை வாகன கொள்முதல் (இலகு ரக வாகனம், மின்கல வாகனம், ஜே.சி.பி, ஸ்கிட் லோடர், கழிவுநீர் அகற்றும் வாகனம் மற்றும் பிற), மழைநீர் கால்வாய் மற்றும்

2023 மார்ச் 30]

சிறுபாலங்கள் அமைத்தல், கழிப்பறைகள் மற்றும் பிற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல் குடிநீர் வாகனம் கொள்முதல், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுதல், மின்மோட்டார் கொள்முதல், குடிநீர் பகிர்மான மற்றும் விநியோக குழாய்கள் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிபந்தனையற்ற நிதியின்கீழ் 1,047 பணிகள் திட்ட மதிப்பீடு ரூ.258.98 கோடியில் சாலைகள் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் நீர்நிலைகள் மேம்படுத்துதல், ஆற்றல் திறன்மிகு தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் இதர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2022-2023 ஆம் நிதியாண்டில் நிபந்தனைகளுடன்கூடிய நிதியின்கீழ் குடிநீர் பணி, நகர்ப்புர பசுமைப்படுத்துல், வாகனம் கொள்முதல், தூய்மை இந்தியா திட்டக் கூறுகளான சமுதாய கழிப்பிடம் மற்றும் பொதுக் கழிப்பிட பணிகள் எடுக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றன.

நிபந்தனையற்ற நிதியின்கீழ் ஆற்றல் திறன்மிகு தெருவிளக்குகள் கொள்முதல் செய்யும் பணி, பழைய தெருவிளக்குகளை ஆற்றல்மிகு (எல்இடி) விளக்குகளாக மாற்றும் பணி, சாலைகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புர சுகாதாரம், நல மையங்கள் மற்றும் நகர்ப்புர பொது சுகாதார ஆய்வகம்

சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் அதன் சேவையை மேம்படுத்துவதற்காகவும், கொள்முதலை வலுப்படுத்துவதற்காகவும், 15-வது நிதி ஆணையத்தின் குறிப்பிட்ட மானியங்களை வழங்கியுள்ளது.

ஒட்டுமொத்த ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு, கிராமப்புறங்களில் உள்ள துணை மையங்கள் மற்றும் பொது சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்களில் நோய் கண்டறியும் உட்கட்டமைப்புக்கான வசதிகள் மேற்கொள்ள நிதிகள் 15-வது நிதி ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கு கீழ்க்காணும் பணிகள் அனுமதிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

[2023 மார்ச் 30

அட்டவணை 2.20

வ. எண்	கூறின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)
1.	நல மையங்கள்	507	126.75
2.	நகர்ப்புர பொது சுகாதார ஆய்வகம்	28	5.60
	மொத்தம்	535	132.35

2.9 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான திறன் மேம்படுத்தும் நோக்கில், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

(i) *நகராட்சி நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.*

(ii) *நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவைப் பரப்புதல்.*

(iii) *நகர்ப்புர மேம்பாடு, நகராட்சி நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை மேற்கொள்ளுதல்.*

(iv) *நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சியை ஊக்குவித்தல்.*

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இப்பயிற்சி நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு முக்கிய நிதி ஆதாரமாக அமைகிறது.

2023 மார்ச் 30]

2.10 முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தினைச் செயல்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7-5-2022 அன்று சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 43, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் (ச.நு4-1) துறை, நாள் 27-7-2022-ல் மொத்தம் ரூ.15.43 கோடி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், செயல்படுத்த 15-9-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கப்பட்டது. நகர்ப்புரங்களில் 15 மாநகராட்சிகள் மற்றும் 23 நகராட்சிகளில் 46 சமையல்கூடங்கள்மூலம் 539 பள்ளிகளில் 55,071 மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டம் http-//cmbfs.tnega.org *என்ற வலைதளம் மூலமாக மாவட்ட, மண்டல மற்றும் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்திற்கென உருவாக்கப்பட்ட பிரத்யேக கைப்பேசி செயலிமூலம் தினந்தோறும் உணவு வழங்குவது நிகழ்நேரத்தில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

சோதனை முறையில் முன்னோட்டமாக செயல்படுத்தப்பட்ட இந்த மகத்தான திட்டமானது பெரும்பாலான மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. மேலும் பள்ளிகளில் மாணவர்களின் வருகை படிப்படியாக அதிகரித்து வருகிறது.

இரண்டாம் கட்டமாக 36 நகர்ப்புர உள்ளாட்சிகளில் ரூ.4.66 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 433 பள்ளிகளில் பயிலும் 56,098 மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் 28-2-2023 அன்று விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2.11 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிதிநிலை

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் வருவாய் மற்றும் செலவினங்களின் சுருக்கம் அட்டவணை 2.21 மற்றும் அட்டவணை 2.22-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.21

வருவாய் (ரூ.கோடியில்)

வ. எண்.	விவரம்	மாநகராட்சிகள்		நகராட்சிகள்	
		2021-2022	2022-2023	2021-2022	2022-2023
வருவாய்					
1.	வரியினம்	714.92	1,147.62	414.11	612.08
2.	வரியில்லா இனம்	458.71	534.00	229.73	315.00
3.	ஒதுக்கப் ப்பட்ட வருவாய் இனம்	102.99	322.65	138.78	185.00
4.	மாநில / ஒன்றிய நிதிக்குழு மானியங்கள்	1,122.29	2,237.80	1,140.81	1,932.14
	மொத்தம்	2,398.91	4,242.07	1,923.43	3,044.22
செலவினம்					
1.	பணியமைப்பு, நிர்வாகம் மற்றும் இயக்குதல் & பராமரித்தல் செலவு	2,584.11	3,968.13	2,137.00	2,859.00
மொத்தம்		2,584.11	3,968.13	2,137.00	2,859.00
உபரி / பற்றாக்குறை		-185.20	273.94	-213.57	185.22

2023 மார்ச் 30]

அட்டவணை 2.22

மூலதனம் *(ரூ.கோடியில்)*

வ. எண்.	விவரம்	மாநகராட்சிகள்		நகராட்சிகள்	
		2021-2022	2022-2023	2021-2022	2022-2023
1.	*மூலதன வருவாய்*	*2,275.75*	*2,440.31*	*714.93*	*1,123.00*
2.	*மூலதன செலவினம்*	*2,235.94*	*3,248.24*	*1,050.57*	*1,848.48*

2.12 நகராட்சி நிருவாக இயக்குநரகம் நிர்வாகத்தின்கீழ் செயல்படும் மாநகராட்சிகள்

I. மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி 1-5-1971 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 147.99 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 15,73,616 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 20 இலட்சம் (அரசாணை எண் 152, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 20-10-2022) மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.530.994 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் நீர் ஆதாரமான வைகை-I, வைகை-II, காவேரி ஆறு மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்களிலிருந்து 160.84 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த தண்ணீர் தேவை 235 MLD மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 160.84 MLD ஆகும். மொத்தமுள்ள, 3,35,801 வீடுகளில், 1,65,011 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு திட்டம் முடிவடையும் நிலையில் மாநகரின் குடிநீர் விநியோகம் 310 MLD ஆக உயரும்.

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 172.70 MLD திறன் கொண்ட 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தினசரி உருவாகும் 79 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பிறகு தற்போது புல் சாகுபடிக்காக நிலங்களில் வெளியேற்றப்படுகிறது. 3,35,801 வீடுகளில் இதுவரை மொத்தம் 1,66,722 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 100 வார்டுகளில், 63 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மேலும், 20 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு வைகை ஆறு பகுதி மற்றும் தெற்கு வைகை ஆறு பகுதி ஆகிய விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை ரூ.684.36 கோடிக்கு தயார் செய்யப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. மேலும், பழைய பாதாள சாக்கடைத் திட்டத்தை புனரமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 850 முதல் 900 TPD வரை ஆகும், இதில் ஈரக்கழிவுகள் 50 – 55 சதவீதம் ஆகும். ஈரமான கழிவுகளை செயலாக்க 38 நுண்ணுர செயலாக்க மையங்களும் (MCCs), உலர் கழிவுகளைக் கையாள 1 வளமீட்பு மையமும் (RCCs) கட்டப்பட்டுள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 1,687 கி.மீ. சாலைகள் உள்ளன. பழுதடைந்த சாலைகளில் தொடர்ச்சியாக சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 211 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 171 கி.மீ. சாலை மறுசீரமைப்பு பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 57,877 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2,882 புதிய தெரு விளக்குகள் அமைக்க 2023-24 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

வரி வசூல்:

மாநகராட்சியின் மொத்த சொந்த வரி வருவாய் ரூ.281.02 கோடியில் வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.212.78 கோடி), காலி மனை வரி (ரூ.16.27 கோடி), தொழில் வரி (ரூ.14.11 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.14.91 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.22.95 கோடி) ஆகியவை பிரதான நிதி ஆதாரங்களாகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *முல்லைப் பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகருக்கு குடிநீர் பெறுவதற்கு ரூ.1,295.79 கோடி மதிப்பீட்டில் அடல் மிஷன் புனரமைப்பு மற்றும் நகர்ப்புர மாற்றம் (அம்ரூத்) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றது. ஜூன் 2023 மாதத்தில் பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*
- *மதுரை மாநகராட்சியின் மையப் பகுதியில் ரூ.357.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடர்ந்து குடிநீர் வழங்கும் திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி* Tranche III-*ன்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்டம் டிசம்பர் 2025-க்குள் முடிக்கப்படும்.*
- *மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள, மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ரூ.684.36 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் அம்ரூத் 2.0 நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.*
- *ரூ.90.44 கோடி மதிப்பீட்டில் 157.00 கி.மீ நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்புத் திட்டம் நிலை* I *மற்றும்* II, *நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாநில நிதி ஆணைய மானிய நிதியின்கீழ் ரூ.18.35 கோடி மதிப்பீட்டில், 19.08 கி.மீ. நீளத்திற்கு மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[*2023 மார்ச் 30*

- *நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி ஏப்ரல் 2023-க்குள் முடிக்கப்படும்.*

செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்

- *வெங்காய சந்தையை இட மாற்றம் செய்யும் பணிக்காக ரூ.10.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.*
- *வண்டியூர் ஏரியினை சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, புனரமைத்தல் மற்றும் அழகுபடுத்துதல் பணிக்காக ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.*
- *இம்மாநகரில் 2022-23-ம் நிதி ஆண்டில் மூலதன மானிய நிதித் திட்டத்தில் கீழ்க்கண்ட புதிய பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*
- *கிழக்கு மாரட் தெருவிலுள்ள தயிர் மார்க்கெட்டை ரூ.1.53 கோடியில் மேம்படுத்துதல் பணி*
- *சுப்ரமணியபுரத்திலுள்ள காய்கறி சந்தையை ரூ.1.99 கோடியில் மறுசீரமைக்கும் பணி*
- *ஆரப்பாளையம் பேருந்து நிலையம் ரூ.1.07 கோடியில் சிறப்பு மேம்படுத்துதல் பணி*
- *மாட்டுத்தாவணி டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலைய கட்டடங்கள் மற்றும் ஆம்னி பேருந்து நிலையத்தை ரூ.11.75 கோடியில் சிறப்பு மேம்படுத்துதல் பணி*

II. கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 1-5-1981 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 257.04 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 16,04,925 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 22.88 இலட்சம். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ1,110.47 கோடி ஆகும்.

2023 மார்ச் 30]

குடிநீர் வழங்கல்:

மாநகரின் நீர் ஆதாரமான சிறுவாணி, பில்லூர்-1, பில்லூர்-2, ஆழியாறு மற்றும் பவானி-கே.வி.வி (கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரக்கேரளம் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம்) ஆறுகளில் இருந்து 214 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த தண்ணீர் தேவை 250* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 190* MLD *ஆகும். மொத்தமுள்ள, 5,41,312 வீடுகளில், 3,21,560 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. பில்லூர்*-III *குடிநீர் திட்டத்தை செயல்படுத்தினால், மாநகரின் தினசரி தண்ணீர் விநியோகம் 392* MLD *ஆக உயரும்.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

170 MLD *திறன் கொண்ட 3 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. 5,41,312 வீடுகளில் இதுவரை மொத்தம் 40,981 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 100 வார்டுகளில், 43 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மேலும், 31 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 1,200 TPD *ஆகும், இதில் 600-650* TPD *ஈரக்கழிவுகள் மற்றும் மீதமுள்ளவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளைக் கையாள, 36 நுண்ணுர மையங்களும் (*MCCs*), உலர் கழிவுகளை கையாள 6 வளமீட்பு மையங்களும் (*RCCs*) உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 2,733 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 345 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24-ம் ஆண்டில் 172 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 95,602 தெருவிளக்குகள் உள்ளன, 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 7,701 புதிய தெரு விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி–(ரூ.490.88 கோடி), காலி மனை வரி (ரூ.130.22 கோடி), தொழில் வரி (ரூ.52.40 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.91.18 கோடி), வரி அல்லாத வருமானம் ரூ.77.74 கோடி ஆகியவை மாநகராட்சியின் பிரதான வரி ஆதாரங்களாகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளான வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளில் பாதாளச் சாக்கடைப் பணிகள் ரூ.715.67 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.*
- *மாநகரில் 24X7 குடிநீர் விநியோகம் பொது மக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜூன் 2023-ல் முடிக்கப்படும்.*
- *அம்ரூத் திட்டத்தில் ரூ.706.24 கோடியில் பில்லூர் III குடிநீர்த் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, அதற்கான நிலம் கையகப்படுத்துதல், நிதி ஆதாரம் போன்றவற்றிக்கு தீர்வு காணப்பட்டு இத்திட்டம் ஜூன் 2023-ல் நிறைவடையும்.*
- *செம்மொழி பூங்கா முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைக்கவும் இதர வசதிகளை மேம்படுத்தவும் ரூ.172.21 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி நடவடிக்கையில் உள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும் நிலையில் உள்ளது.*
- *ரூ.105.41 கோடி மதிப்பீட்டில் 154 கி.மீ. நீளத்திற்கு 649 எண்ணிக்கையிலான சாலைகளை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டம் (சேமிப்பு நிதி) ஆகிய திட்டங்களின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*

2023 மார்ச் 30]

- *குறிச்சி–குனியமுத்தூர் பகுதிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.591.14 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் செப்டம்பர் 2023-ல் நிறைவடையும்.*

புதிய அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்:

- *மாநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகள் மற்றும் 9 வார்டுகள் உள்ளடக்கிய புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0-ன்கீழ் ரூ.197 கோடி மற்றும் பன்னாட்டு நிதியுதவி திட்டங்களின்கீழ் ரூ.296 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இத்திட்டம் விரைவில் துவங்கப்பட உள்ளது.*

- *வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளுக்கு ரூ.935 கோடியில் பாதாள சாக்கடை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.*

- *அதிகமான மழையின்போது திருச்சி சாலை பாதிப்படையாமல் இருக்க வாலாங்குளம் ஏரியில் இருந்து சங்கனூர் வரை கால்வாய் அமைக்க உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் ரூ.9.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *செங்குளம் கால்வாயிலிருந்து வடியும் அதிகப்படியான நீர் தேங்குவதால் ஏற்படும் அவலத்தில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக வடிகால் பணிகள் மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.7 கோடியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

- *அண்ணா சந்தை, எம்.ஜி.ஆர். சந்தை மற்றும் சுந்தராபுரம் தக்காளி சந்தை ஆகிய சந்தைகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.7.58 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*

III. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 1-6-1994 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 167.23 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

மக்கள் தொகை 9,15,569 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 10.50 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.451.86 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் விநியோகத்திற்கு 10 ஆதாரங்களில் இருந்து 141.67 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த தண்ணீர் தேவை 141* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 137.14* MLD *ஆகும். மொத்தமுள்ள, 2,36,022 வீடுகளில், 1,22,965 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

58.64 MLD *திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 56.36* MLD *கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்டு கோரையாற்றில் விடப்படுகிறது. 2,36,022 வீடுகளில் இதுவரை மொத்தம் 65,113 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 65 வார்டுகளில், 29 வார்டுகள் முழுமையாகவும், 20 வார்டுகள் பகுதியாகவும், புதிய 37* MLD *கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அம்ரூத் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின்கீழ் 9 வார்டுகள் முழுமையாகவும், 31 வார்டுகளில் பகுதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள வார்டுகளைப் பொறுத்தவரை விரிவான திட்ட அறிக்கை விரைவில் தயார் செய்யப்படும்.*

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 470 TPD *ஆகும், இதில் 250* TPD *ஈரக் கழிவுகள் மற்றும் மீதமுள்ள உலர் கழிவுகள், ஈரமான கழிவுகளை கையாள்வதற்கு மொத்தம் 40 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளை கையாள 5 வளமீட்பு மையங்களும் பயன்பாட்டில் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 1,443 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 337 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 190 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 41,615 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 6,264 புதிய தெரு விளக்குகள் பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.151.28 கோடி), காலி மனை வரி (ரூ.17.29 கோடி), தொழில் வரி (ரூ.24.76 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.60.36 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.20.34 கோடி) ஆகியவை மாநகராட்சியின் பிரதான வரி ஆதாரங்களாகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் பல்நோக்கு பயன்பாட்டு வசதி கொண்ட பேருந்து முனையம் ரூ.349.58 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, பணிகள் டிசம்பர் 2023-ல் நிறைவு பெறும்.*

- *மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பில் புதிதாக மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.200 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், பஞ்சப்பூரில் ரூ.220.62 கோடி மதிப்பீட்டில் 100* MLD *கொள்ளளவு கொண்ட நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. நிதி ஆதாரம் ஏற்படுத்தும் நடவடிக்கை பணி முன்னேற்றத்தில் உள்ளது.*

- *தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.54.02 கோடி மதிப்பீட்டில் 51.82 கி.மீ நீளத்திற்கு 331 எண்ணிக்கையிலான சேதமடைந்த சாலைகளை சீரமைத்திட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

புதிய திட்டங்கள்:

- *உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் மாரிஸ் திரையரங்கம் அருகில் சாலை மற்றும் ரயில் மேம்பாலம் அமைப்பதற்காக ரூ.34.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.*

[2023 மார்ச் 30

- கொல்லங்குளம் நீர் நிலையினை மேம்படுத்தவும், புதுப்பிக்கவும் மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.27.00 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 65.68 கி.மீ. நீளத்திற்கு சாலைகளைப் புனரமைப்பதற்காகவும், அதேபோல் 22 கி.மீ. நீளத்திற்கு மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும் ரூ.15.00 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- சோழம்பாறை வாய்க்காலில் நீர் விநியோக இணைப்பு முறையினை மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் ரூ.2.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

IV. திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி 1-6-1994 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 108.65 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 4,74,838 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 5.40 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.223.28 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் விநியோகம் 15 எண்ணிக்கையிலான நீர் ஆதாரத்திலிருந்து 48 MLD குடிநீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 70.51 MLD மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 48 MLD ஆகும். தினசரி எடுக்கப்படும் குடிநீர் 15 தலைமை நீரேற்றும் நிலையங்களில் இருந்து 25 MLD-யும், குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து 50 MLD-யும் கிடைக்கப்பெறுகிறது. மொத்தமுள்ள வீடுகளில், 83,313 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 60,000 வீடுகளுக்கு 2023-24-ம் ஆண்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

பாதாளச் சாக்கடைத் திட்டம்:

மொத்தமுள்ள 55 வார்டுகளில், 35 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மீதமுள்ள வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் இரண்டு கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 24.2 MLD திறன் கொண்ட

2023 மார்ச் 30]

1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 10 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, கொடகன் கால்வாயில் வெளியேற்றப்படுகிறது. 1,65,284 வீடுகளில் இதுவரை மொத்தம் 26,783 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2023-2024 ஆம் ஆண்டில் 54,000 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்படும். மேலும், 2024-2025 ஆம் ஆண்டில் 43,500 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவு 230 TPD, இதில் 140 TPD, ஈரக்கழிவுகள் மற்றும் 90 TPD உலர் கழிவுகள். மாநகரத்தில் ஈரக் கழிவுகளைக் கையாள்வதற்கு 47 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 4 வளமீட்பு மையங்களும் செயல்பாட்டில் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 920.18 கி.மீ. சாலைகள் உள்ளது. இதில் 807.53 கி.மீ. மாநகராட்சி சாலைகளும், 112.65 கி.மீ மாநில நெடுஞ்சாலைகள் ஆகும். 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 83 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 101 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 29,145 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-2024 ஆம் ஆண்டில் 1,968 புதிய ஆற்றல் மிகு தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.81.72 கோடி), காலி மனை வரி (ரூ.15.30 கோடி), தொழில் வரி (ரூ.11.87 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.27.72 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.11.77 கோடி) ஆகும்.

முடிவடைந்த பணிகள்:

- *டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் அமைத்தல் மற்றும் பாளையங்கோட்டை பேருந்து நிலைய மேம்பாட்டு*

[2023 மார்ச் 30

பணிக்காக ரூ.86.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

- வ.உ. சிதம்பரனார் விளையாட்டு அரங்கத்தை நவீனப்படுத்துவதற்காக ரூ.15.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- ராமையன்பட்டி குப்பை கிடங்கிலிருந்து 5 மெகா வாட் சூரிய மின் நிலையம் அமைப்பதற்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- கண்டுபிடிப்பு மையத்திற்கு IoT உடன் கூடுதல் வசதிகள் வழங்குதல், டெக்னோ பூங்காவில் உள்கட்டமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகே பூங்கா அமைக்கும் பணி ஆகியவை மேற்கொள்ள ரூ.10.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- SN நெடுஞ்சாலையில் வர்த்தக மையம் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.56.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- பழைய பேட்டை அருகில் டிரக் முனையம் மற்றும் மொத்த விற்பனை சந்தை கட்டுமான பணிக்காக ரூ.13.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- நேருஜி கலையரங்க மேம்பாட்டிற்காக ரூ.11.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- 7 இடங்களில் பசுமை பகுதிகளை உருவாக்குவதற்கு ரூ.9.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
- தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் வீடற்றோருக்கு இரண்டு உறைவிடங்கள் அமைக்க ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் அரியநாயகிபுரம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ள திருத்திய திட்ட

மதிப்பீடு ரூ.295.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டம் மே 2023-ல் முடிவடைய உள்ளது.

- *பாதாள சாக்கடைத் திட்டம் 2-வது கட்டப் பணிகள் ரூ.296.11 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் செப்டம்பர் 2023-ல் முடிவடைய உள்ளது.*

- *அம்ரூத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.643 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

- *தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியின்கீழ் ரூ.28.61 கோடி மதிப்பீட்டில் 44.88 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.*

- *டவுன் சந்திப்பில் அமைந்துள்ள பெரியார் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்கல், நிலத்தடி வாகன நிறுத்துமிடம் அமைப்பதற்கு ரூ.85.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *பாளையங்கோட்டை பகுதியில் மகாத்மா காந்தி வணிக வளாகம் கட்டுவதற்கு ரூ.40.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் 2 எண்ணிக்கையிலான நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

புதிய திட்டங்கள்

- *மழைநீர் வடிகால் பணிகள், மயானம், குடிநீர் வழங்கல் ஆகிய 40 பணிகள் ரூ.39.73 கோடி மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.*

- *மாநகராட்சிப் பகுதியில் குடிநீர் திட்டம் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு*

ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.20 கோடி 15-வது நிதிக் குழு மானிய நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின்கீழ் சமுதாய கழிப்பிடங்கள், நவீன வசதிகளுடன்கூடிய கழிப்பிடம் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- பிரதான் மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின்கீழ் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பொது சேவை மையம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- ரூ.4.94 கோடி மதிப்பீட்டில் 20 நகர்ப்புர சுகாதார நல மையங்கள் அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

V. சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி 1-6-1994 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 91.34 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,29,267 ஆகவும், தற்போதைய மக்கள் தொகை 11 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.385.09 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரம் காவிரி ஆற்றில் இருந்து 130 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 130 MLD மற்றும் ஒரு நாளைக்கு வழங்கப்படும் மொத்த விநியோக அளவு 130 MLD ஆகும். மொத்தமுள்ள, 2,07,570 வீடுகளில் 1,17,228 வீடுகளுக்கு குடிநீர் சேவை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை திட்டம்:

மொத்தமுள்ள 60 வார்டுகளில், 20 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மேலும், 23 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 98 MLD திறன் கொண்ட 4 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தினசரி உருவாகும் 98 MLD கழிவுநீரில் 47 MLD சுத்திகரிப்பு செய்யப்பட்டு திருமணிமுத்தாறு ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

2023 மார்ச் 30]

இதுவரை 2,07,570 வீடுகளில் மொத்தம் 5,292 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவு 550 TPD *ஆகும், இதில் 320* TPD *ஈரக்கழிவு மற்றவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை கையாள 28 நுண்ணுர செயலாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 1,040 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 150 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் 96 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளன.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 41,695 தெரு விளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டிற்கு 800 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.112.21 கோடி), காலி மனை வரி (ரூ.7.9 கோடி), தொழில் வரி (ரூ.22.35 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.68.73 கோடி), வரி அல்லாத வருமானம் ரூ.50.94 கோடி ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *14 வார்டுகளை முழுமையாகவும், விடுபட்ட 17 வார்டுகளையும் உள்ளடக்கும் வகையில் அம்ரூத் 2.0-ன்கீழ் ரூ.548 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.*
- *மாநகராட்சியின் முன்னோடி பகுதிக்கு 24X7 குடிநீர் வழங்குவதற்காக, விரிவான திட்ட அறிக்கை* PPP *முறையில் தயார் செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்த அழைப்பிற்கான ஆயத்த பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *2 நீர் நிலைகள் மறுசீரமைப்பு பணிகளுக்காக அம்ரூத் 2.0-ன்கீழ் ரூ.92.44 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

- *சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் ரூ.544.42 கோடி மதிப்பீட்டிலான 24 பணிகள் நடைபெற்று வருகின்றன.*

அனுமதிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்:

மூக்கனேரி, போடிநாயக்கம்பட்டி ஏரி மற்றும் அல்லி குட்டை ஏரி ஆகிய நீர்நிலைகளைப் புனரமைப்பு மற்றும் அழகுபடுத்துவதற்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் முறையே ரூ.23 கோடி, ரூ.19 கோடி மற்றும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கும் நிலையில் உள்ளன.

VI. ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி 1-1-2008 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 109.52 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,98,121 மற்றும் தற்போதைய மக்கள்தொகை 6.00 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 176.92 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரமான காவேரி நதியிலிருந்து 83.00 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 79.20* MLD *மற்றும் ஒரு நாளைக்கு 79.20* MLD *மொத்தக் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மொத்தமுள்ள, 1,69,912 வீடுகளில், 1,05,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 50.55 MLD *திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினந்தோறும் உற்பத்தி செய்யப்படும் 5* MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, தற்போது காவேரி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. 1,69,912 வீடுகளில் இதுவரை மொத்தம் 17,557 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 60 வார்டுகளில், 34 வார்டுகளில் பாதாள சாக்கடை*

2023 மார்ச் 30]

வசதி உள்ளது, மேலும், 19 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 200 TPD ஆகும், இதில் 90 TPD ஈரக்கழிவுகள் மற்றவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 24 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 3 வளமீட்பு மையங்களும் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 800 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 70 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 45 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 23,721 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 5,431 புதிய தெரு விளக்குகளுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.53.25 கோடி), காலி மனை வரி (ரூ.7.15 கோடி), தொழில் வரி (ரூ.12.25 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.7.28 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.9.82 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதியின்கீழ் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் புதிய சோலார் பேருந்து நிலையம் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது.*
- *15-வது மத்திய நிதிக் குழு மானியத்தின்கீழ் ரூ.27.27 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோக மேம்பாட்டுக்கு 32 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.*

- தூய்மை இந்தியா (நகர்ப்புரம்) 2.0 திட்டத்தின்கீழ் ரூ.10.80 கோடி மதிப்பீட்டில், 2 பொருள் மீட்பு மையங்கள் மற்றும் 4 நுண்ணுயிர் உரக்கூடங்கள் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

- ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் 2 நீர்நிலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 13 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.446.11 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் ICCC, பெரும்பள்ளம் ஓடை, சந்தை, பேருந்து முனையம் ஆகியவை சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகின்றன.

VII. திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி 1-1-2008 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 159.35 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 ஆகவும், தற்போதைய மக்கள் தொகை 13.90 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம், வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.310.43 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரில் 2 குடிநீர் ஆதாரங்கள் உள்ளன. அதில் இருந்து 135 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 189 MLD மற்றும் ஒரு நாளைக்கு மொத்தம் விநியோக அளவு 135 MLD குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மொத்தமுள்ள, 3,15,732 வீடுகளில், 1,27,062 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1,05,000 எண்ணிக்கையில் உள்ள வீடுகளுக்கு புதிய இணைப்புகள் ஜூலை 2023-க்குள் வழங்கப்பட்டுவிடும்.

பாதாள சாக்கடைத் திட்டம்:

15 MLD திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினந்தோறும் உற்பத்தியாகும் 8.2 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு தற்போது நல்லாறு ஓடையில் வெளியேற்றப்படுகிறது. 3,15,732 வீடுகளில் இதுவரை மொத்தம் 54,339 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கூடுதல் எண்ணிக்கையிலான

2023 மார்ச் 30]

36,800 வீடுகளுக்கான இணைப்புகள் ஜூலை 2023-க்குள் வழங்கப்படும். மொத்தமுள்ள 60 வார்டுகளில் 22 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும், 16 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள வார்டுகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.200 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவு 700 TPD *ஆகும். இதில், 320* TPD *ஈரக் கழிவு மற்றவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள மொத்தம் 26 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 4 வளமீட்பு மையங்களும் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 1,400 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 190 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் 171 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளன.

தெருவிளக்குகள்:

மாநகரில் 35,213 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 8,681 புதிய தெரு விளக்குகளுக்கு முன்மொழியப்பட்டுள்ளன.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.100.8 கோடி), காலி மனை வரி (ரூ.10.11 கோடி), தொழில் வரி (ரூ.3.42 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.19.7 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ. 16.20 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

பவானி நதியை ஆதாரமாகக் கொண்டு பிரத்தியேக குடிநீர் திட்டத்திற்காக அம்ருத் திட்டத்தின்கீழ் ரூ.992.40 கோடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மே 2023-க்குள் நிறைவடையும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

- அம்ரூத் திட்டத்தின்கீழ் 16 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.525.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 14,230 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணி ஜூலை-2023-க்குள் முடிவடையும்.

- சேதமடைந்த 385 சாலைகளை மீட்டெடுக்க 2021-22 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் கட்டம்-I & II-ல் ரூ.70.00 கோடியில் மறுசீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 2021-22 ஆம் ஆண்டில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின்கீழ் இரண்டு பணிகள் ரூ.0.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் 2 பணிகள் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (2022-23) நிதியின்கீழ் நொய்யல் ஆற்றின் குறுக்கில் சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக 4 பாலங்கள் ரூ.36.3 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (2022-23) நிதியின்கீழ் கோயில் வழியில் புதிய பேருந்து நிலையம் ரூ.26 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு (2022-23) திட்டத்தின்கீழ் ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் 12.96 கி.மீ. நீளமுள்ள சேதமடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணிகள் எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

- நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு (2022-23) திட்டத்தின்கீழ் ரூ.21 கோடி மதிப்பீட்டில் 59.51 கி.மீ. நீளத்திலான சாலைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

2023 மார்ச் 30]

VIII. தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி 5-8-2008 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 90.66 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,72,408 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 5.00 இலட்சம். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 146.75 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரமான தாமிரபரணி ஆற்றில் இருந்து 67 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 66.20* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 66.20* MLD *ஆகும். மொத்தமுள்ள 1,52,673 வீடுகளில், 88,168 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 28 MLD *திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 9* MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அருகில் உள்ள கால்வாயில் வெளியேற்றப்படுகிறது. 1,52,673 வீடுகளில் இதுவரை மொத்தம் 9,427 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 60 வார்டுகளில், 27 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும், 8 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் கூடுதலாக ஒதுக்கப்பட்ட ரூ.137.00 கோடி திட்ட மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளான 5 வார்டுகளுக்கு பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 180 TPD *ஆகும், இதில் 100* TPD *ஈரக்கழிவுகள் மற்றவை உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 16 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 2 வளமீட்பு மையங்களும் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 665 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 188 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 78 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 18,222 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 2,887 புதிய தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.51.13 கோடி), காலி மனை வரி (ரூ.8.43 கோடி), தொழில் வரி (ரூ.9.27 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.39.56 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.8.80 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் ரூ.45.19 கோடி மதிப்பீட்டில் 43.50 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP)கீழ் ரூ.34.50 கோடி மதிப்பீட்டில் 44.38 கி.மீ. நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *15-வது மத்தியக் குழு நிதியின்கீழ் ரூ.37.43 கோடி மதிப்பீட்டில் எல்இடி தெருவிளக்குகள், சாலைப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.*

புதிய திட்டங்கள்

- *ஆசிய வளர்ச்சி வங்கி நிதித் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாநகராட்சியின் வடக்கு மண்டலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதிகளில் 36.36 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைப்பதற்காக ரூ.82.92 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.*

2023 மார்ச் 30]

- *மாநகராட்சியின் சில கூடுதல் பகுதிகளை உள்ளடக்கும் நோக்கில் ரூ.137.00 கோடி செலவில் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ளது.*

- *அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் 2 நீர்நிலைகளை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

IX. வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி 1-8-2008 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 87.915 ச.கி.மீ. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 5,04,079 ஆகவும், தற்போதைய மக்கள்தொகை 6.04 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 223.08 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் விநியோகம் 11 ஆதாரங்களில் இருந்து, 62 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 61.50* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த குடிநீர் விநியோக அளவு 61.50* MLD *ஆகும். மொத்தமுள்ள 1,49,261 வீடுகளில், 63,401 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மொத்தமுள்ள 60 வார்டுகளில் 14 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது. மேலும், 34 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 10.28 MLD *திறன் கொண்ட ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தோராயமாக, 7.50* MLD *கழிவுநீர் உற்பத்தி செய்யப்பட்டு தற்போது ரங்காபுரத்தில் உள்ள வேலவாடி ஏரியில், சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. 1,49,261 வீடுகளில் இதுவரை மொத்தம் 4,990 பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவு 241 TPD *ஆகும், இதில் 128* TPD *ஈரமான கழிவுகள் மற்றும் 113* TPD *உலர் கழிவுகள் ஆகும். மாநகரத்தில் ஈரமானக் கழிவுகளைச் செயலாக்குவதற்கு 50 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை செயலாக்க ஒரு வளமீட்பு மையமும் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் 565 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 120 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2023-24 ஆம் ஆண்டிற்கு 87 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் 28,600 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 653 புதிய தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.64.41 கோடி), காலி மனை வரி (ரூ.8.91 கோடி), தொழில் வரி (ரூ.10.94 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.39.13 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.24.23 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கிய பணிகள்:

- *அம்ரூத் 2.0 மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடைத் திட்டத்தை இரண்டு கட்டங்களாக செயல்படுத்துவதற்காக முறையே ரூ.379.55 கோடி மற்றும் ரூ.311.36 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் ஜூலை மாதம் 2023-ல் நிறைவேறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.*

- *அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.234.93 கோடி மதிப்பீட்டில், குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. பணிகள் முடிவுற்றவுடன் அனைத்து வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படும்.*

2023 மார்ச் 30]

- *சேதமடைந்த 200 எண்ணிக்கையிலான 34.52 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மீட்டெடுக்க 15-வது நிதிக் குழு மானியம் மற்றும் TURIP திட்டத்தின்கீழ் ரூ.24.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*
- *தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின்கீழ் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருள் மீட்பு மையம் அமைக்கப்பட உள்ளது.*
- *இரண்டு நீர்நிலைகள் புதுப்பிக்கப்படுவதற்காக அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.2.25 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*
- *13 எண்ணிக்கையிலான சீர்மிகு நகரத் திட்டப்பணிகள் ரூ.279.50 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.*

X. தஞ்சாவூர் மாநகராட்சி

தஞ்சாவூர் மாநகராட்சி 19-2-2014 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 36.31 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,22,934 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 2.45 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.101.70 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரமான கொள்ளிடம் ஆற்றிலிருந்து 24.00 MLD *குடிநீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த தண்ணீர் தேவை 30.00* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 27.50* MLD *ஆகும். மொத்தமுள்ள, 48,829 வீடுகளில், 29,656 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 28.05 MLD *திறன் கொண்ட ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 14.05* MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வடவாறு ஆற்றில் விடப்படுகிறது. 48,829 வீடுகளில் இதுவரை மொத்தம் 24,682 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.*

[2023 மார்ச் 30

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 107 TPD ஆகும், இதில் 64 TPD ஈரக்கழிவுகள் மற்றும் 43 TPD உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 10 நுண்ணுர செயலாக்க மையங்கள் செயல்பாட்டில் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 358.17 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 55.7 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 60 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 13,486 தெருவிளக்குகள் உள்ளன. 100 சதவீத தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளன.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.26.62 கோடி), காலி மனை வரி (ரூ.4.88 கோடி), தொழில் வரி (ரூ.6.78 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.8.05 கோடி), பாதாள சாக்கடை கட்டணம் (ரூ.11.60 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.16.47 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ரூ.99.60 கோடி சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.*

- *மாநகராட்சியின் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்திற்காக சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.204.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *15-வது மத்திய நிதிக் குழு மானிய நிதியின்கீழ் ரூ.27.53 கோடி மதிப்பீட்டில் 78 எண்ணிக்கையிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2023 மார்ச் 30]

- *15-வது மத்திய நிதிக் குழு மானிய நிதியின்கீழ் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் 8 எண்ணிக்கையிலான இடங்களில் நகர்ப்புர சுகாதார மையங்கள் மற்றும் 1 நகர்ப்புர பொது சுகாதார ஆய்வகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*
- *தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம், (*TURIP*) சீர்மிகு நகரத் திட்டம் மற்றும் 15-வது மத்திய நிதிக்குழு மானிய நிதியின்கீழ் ரூ.151.73 கோடி விடுவிக்கப்பட்டு, மொத்தமுள்ள 112 கி.மீ. மண் சாலைகளைச் தார்ச் சாலைகளாகவும், பேவர் பிளாக் சாலைகளாவும், கான்கிரீட் சாலைகளாவும் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *காந்திஜி சாலையில் வணிக வளாகம் கட்டும் பணி சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது.*
- *அண்ணா சாலையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணியும், ரூ.60 கோடி மதிப்பீட்டில் மாநாட்டு மையமும், சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.*

XI. திண்டுக்கல் மாநகராட்சி

திண்டுக்கல் மாநகராட்சி 19-2-2014 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 14.01 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 2.26 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.95.06 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் நீர் ஆதாரமான ஆத்தூர் அணை மற்றும் காவேரி ஆறுகளில் இருந்து 19.65 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 29.03* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 19.20* MLD *ஆகும். மொத்தமுள்ள, 46,416 வீடுகளில், 31,906 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 13.65 MLD திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. 3.5 MLD கழிவுநீர் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது M/s. டால்கோ திண்டுக்கல் தோல் பதனிடுதல் நிறுவனத்திற்கு கழிவுநீர் நீர்த்தலுக்காக வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 46,416 வீடுகளில் இதுவரை மொத்தம் 11,686 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில், 13 வார்டுகளில் முதல் கட்டமாக முழுமையாகவும், 13 வார்டுகளில் பகுதியாகவும் பாதாள சாக்கடை வசதி உள்ளது. இரண்டாம் கட்டமாக 22 வார்டுகளிலும் முதல் கட்டத்தில் விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 92 TPD ஆகும், இதில் 50 TPD ஈரக்கழிவுகள், மீதமுள்ளவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை செயலாக்க, 9 நுண்ணுர மையங்கள் செயல்படுகின்றன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 256 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 32.93 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. 21.13 கி.மீ. சாலைகளை நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக ரூ.6.73 கோடியும், மூலதன மானிய நிதியின்கீழ் 37.89 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைப்பதற்கு ரூ.19.68 கோடியும், 15-வது மத்திய நிதிக் குழு மானியத்தின்கீழ் 3.57 கி.மீ. நீளத்திற்கு 16 சாலைகள் அமைப்பதற்கு ரூ.0.93 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 6,791 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டிற்கு 869 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.28.42 கோடி), காலி மனை வரி (ரூ.0.47 கோடி), தொழில் வரி (ரூ.3.07 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.17.31 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.11.58 கோடி) ஆகும்.

2023 மார்ச் 30]

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:'

- *மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் 17.59 கி.மீ. நீளத்திற்கு சேதமடைந்த 143 சாலைகளை சீரமைத்தல் மற்றும் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் இரும்பு சந்தை மற்றும் வாரச்சந்தை அமைத்தல் ஆகிய பணிகள் அனுமதிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.*

- *15-வது நிதிக் குழு (*Untied Grant*)-ன்கீழ் ரூ.6.55 கோடி மதிப்பீட்டில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றுவதற்கும், புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.*

- *தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0-ல் திடக்கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றும் பணி மற்றும் 10* TPD *கொள்ளளவு கொண்ட 3 மறு சுழற்சி பொருட்கள் மீட்பு மையம் உருவாக்க ரூ.10.00 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*

- *ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.*

புதிய திட்டங்கள்:

- *2 எண்ணிக்கையிலான நீர்நிலைகளைப் புதுப்பித்தலுக்காக ரூ.2.34 கோடி அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ஏற்கெனவே உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்வதற்காக ரூ.49.07 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணை தொகையாக ரூ.20.00 கோடி மூலதன மானிய நிதி 2022-23 இன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை ரூ.209 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் பன்னாட்டு நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.*

- *மழைநீர் வடிகால் பணிகள் ரூ.19.68 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

XII. ஓசூர் மாநகராட்சி

ஓசூர் மாநகராட்சி 1-3-2019 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 72.41 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,45,354 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 3.80 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.120.91 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரில் குடிநீர் ஆதாரமான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து 10 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 27* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 27* MLD *ஆகும். மொத்தமுள்ள, 1,08,491 வீடுகளில், 38,636 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.574.96 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 45 வார்டுகளில் 26 வார்டுகள் முழுமையாகவும், 12 வார்டுகள் பகுதியாகவும் முதலாம் கட்டத்தை உள்ளடக்கியதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதி இரண்டாம் கட்டத்தில் உள்ளடக்கியதாக உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 114 TPD *ஆகும், இதில் 65* TPD *ஈரக்கழிவுகள் மற்றவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை கையாள 11 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளை கையாள 2 வளமீட்பு மையங்களும் செயல்பாட்டில் உள்ளன. 3 வளமீட்பு மைய பணிகள் மற்றும் 2 பொருள் மீட்பு மையங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் இந்த ஆண்டு நிறைவு பெறும்.*

2023 மார்ச் 30]

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 635.25 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 32.57 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 25 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 13,234 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 3,000 புதிய தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.43.98 கோடி), காலி மனை வரி (ரூ.9.31 கோடி), தொழில் வரி (ரூ.10.69 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.9.33 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.11.90 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*
- *ரூ.33.98 கோடி மதிப்பீட்டில் கல்கேரி ஏரி, கர்னூர் ஏரி, அத்திவாடி ஏரி, இராமநாயக்கன் ஏரி ஆகிய நான்கு ஏரிகளை இணைக்கும் 4 கி.மீ. நீளமுள்ள இணைப்பு கால்வாய் மற்றும் ஏரிகளை புனரமைப்பு செய்வதற்காக* TNSUDP *திட்டத்தின்கீழ் பணிகள் அனுமதிக்கப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது.*
- *15-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் ரூ.6.95 கோடி மதிப்பீட்டில் 15 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.*

புதிய திட்டங்கள்

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

அம்ருத் திட்டத்தின்கீழ் ரூ.574.96 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது.

XIII. நாகர்கோவில் மாநகராட்சி

நாகர்கோவில் மாநகராட்சி 1-3-2019 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 63.15 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,89,916 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 3.87 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.107.95 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரில் நீர் ஆதாரமான முக்கடல் அணையில் இருந்து 21.00 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 24.65 MLD மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 24.65 MLD ஆகும். மொத்தமுள்ள 99.396 வீடுகளில், 47,055 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 17.77 MLD திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 79 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு தெங்கம்புதூர் ஆயக்கட்டில் வெளியேற்றப்படுகிறது. இதுவரை மொத்தம் 15,575 பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் முடிவடைந்த உடன், மொத்தமுள்ள 52 வார்டுகளில், 18 வார்டுகளில் முழுமையாகவும், 17 வார்டுகளில் பகுதியாகவும் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மேலும், மீதமுள்ள வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 150 TPD ஆகும், இதில் 90 TPD ஈரக்கழிவுகள் மற்றவை உலர் கழிவுகள். ஈரமான

2023 மார்ச் 30]

கழிவுகளை கையாள 11 நுண்ணுர மையங்களும், உலர் கழிவுகளை கையாள 3 வளமீட்பு மையங்களும் செயல்பாட்டில் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 900 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 118 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆண்டில் 103 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 19,891 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 1,046 ஆற்றல்மிகு புதிய தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

மாநகராட்சியின் முக்கிய வருமானமான வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.34.46 கோடி), காலி மனை வரி (ரூ.2.67 கோடி), தொழில் வரி (ரூ.6.53 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.6.63 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.8.65 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கிய பணிகள்:

- *அம்ரூத் திட்டத்தின்கீழ் ரூ.296.08 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ஜூலை 2023-ல் நிறைவு பெறும். இத்திட்ட நிறைவிற்கு பின்பு 40* MLD *அளவிற்கு 80,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.*

- *ரூ.129.94 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் மே 2023-ல் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 15,575 வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பாதுகாப்பாக தெங்கம்புதூர் ஆயக்கட்டில் அப்புறப்படுத்தப்படுகிறது.*

- *தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ29.99 கோடி மதிப்பீட்டில் 48.32 கி.மீ. நீளத்திற்கு 148 எண்ணிக்கையிலான சேதமடைந்த சாலைகளை மேம்படுத்திட அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *மூலதன மானிய நிதியின்கீழ் மாநகராட்சியில் தற்போதுள்ள மூன்று பேருந்து நிலையங்களை சீரமைக்க ரூ.7.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஏப்ரல் 2023-க்குள் முடிக்கப்படும்.*

- *ரூ.11.50 கோடி மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணி மற்றும் அறிவுசார் மையம் போன்ற திட்டங்களுக்கு ரூ.2.50 கோடி, 8 பூங்காக்கள் மேம்படுத்த ரூ.1.00 கோடி, கிருஷ்ணன் கோவில் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சீரமைக்க ரூ.2.00 கோடி, தொல்லவிளை ஆரம்ப சுகாதார நிலையக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.1.00 கோடி, சரலூரில் வணிக வளாகம் கட்ட ரூ.1.50 கோடி, கோர்ட் ரோடு மற்றும்* WCC *சாலையில் நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதை வசதியுடன்கூடிய வடிகால்கள் அமைக்க ரூ.3.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *21 கி.மீ. நீளமுள்ள 40 சாலைகளை ரூ.27.50 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதியின்கீழ் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.*

- *இரண்டு நீர்நிலைகளான சூர்யா நகர் குளம் மற்றும் பெத்தஸ்த குளம் ஆகியவற்றினைப் புதுப்பிப்பதற்காக ரூ.77.60 இலட்சம் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- *2022-23-ம் ஆண்டில் நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள வடிவீஸ்வரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமான பணிக்கு ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

2023 மார்ச் 30]

XIV. ஆவடி மாநகராட்சி

ஆவடி மாநகராட்சி 17-6-2019 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 65.00 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,44,701 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 5.63 இலட்சமாகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 108.17 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரில் 1 குடிநீர் ஆதாரத்திலிருந்து 18.5 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 76.05 MLD மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 18.5 MLD ஆகும். மீதமுள்ள குடிநீர் தேவை நிலத்தடி நீரைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுகிறது. மொத்தமுள்ள, 82,557 வீடுகளில் 3,886 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 40 MLD திறன் கொண்ட 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தினசரி உருவாகும் 5.6 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு கூவம் ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. 82,557 வீடுகளில் இதுவரை மொத்தம் 5,567 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில், 47 வார்டுகளில் பகுதியாக பாதாள சாக்கடை வசதி உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 180 TPD ஆகும், இதில் 90 TPD ஈரக்கழிவுகள், மற்றவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை கையாள 15 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 1 வளமீட்பு மையமும் செயல்பாட்டில் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 718 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 79.21 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24-ம் ஆண்டில் 94.08 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 21,538 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 4,445 ஆற்றல்மிகு தெரு விளக்குகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மொத்த திட்ட மதிப்பு ரூ.7.91 கோடியாகும்.

வரி வசூல்:

மாநகராட்சியின் முக்கிய வருமானமான வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.37.23 கோடி), காலி மனை வரி (ரூ.15.17 கோடி), தொழில் வரி (ரூ.5.61 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.1.00 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.1.35 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- ரூ.16.10 கோடி மதிப்பீட்டில் 32,703 குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான வீட்டு இணைப்புகள் வழங்குவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- SFC நிதியின்கீழ் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் இரண்டு நீர்நிலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சேதமடைந்த 149 சாலைகளை 30.07 கி.மீ. நீளத்திற்கு புனரமைப்பதற்காக TURIP திட்டத்தின்கீழ் ரூ.17.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF)கீழ் ரூ.14.19 கோடி மதிப்பீட்டில் தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- மாநில வெள்ளத் தடுப்பு நிதியின்கீழ் ரூ.11.80 கோடி மதிப்பீட்டில் 3.70 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 50% நபார்டு வங்கி நிதியுதவி மற்றும் 50% மூலதன மானிய நிதியின்கீழ் 2.61 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்

2023 மார்ச் 30]

அமைக்கும் பணி ரூ.21.90 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

புதிய திட்டங்கள்

- *135* LPCD *குடிநீர் வழங்கும் நோக்கில் ரூ.417 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு வருகிறது.*
- *மாநகரப் பகுதிகளில் மாநகராட்சிக்குட்பட்ட முழுமையாக விடுபட்ட மற்றும் பகுதியாக விடுபட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த ரூ.980.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை பகுதி-1 திட்டத்தில் எடுத்துக்கொள்ளும் பொருட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இரண்டு எண்ணிக்கையிலான கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் ரூ.113.54 கோடியில் கட்டப்பட திட்டமிடப்பட்டுள்ளது.*
- *மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 7.30 கி.மீ. நீளத்திற்கு ரூ.32.60 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.*

XV. தாம்பரம் மாநகராட்சி

தாம்பரம் மாநகராட்சி 3-11-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 87.64 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 7,23,017 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 10.11 இலட்சமாகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.305.85 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரில் உள்ள 5 குடிநீர் ஆதாரங்களில் 61.95 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த தண்ணீர் தேவை 117.81* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 61.95* MLD *ஆகும். மேலும், 2 முதல் 5 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள, 2,52,830 வீடுகளில் 73,913 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 30 MLD *திறன்கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. பல்லாவரம் பகுதியிலிருந்து தினசரி சுமார் 12* MLD *கழிவுநீர் பெருங்குடியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. மொத்தமுள்ள 2,52,830 குடியிருப்புகளில் 41,489 வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வசதி உள்ளது. மொத்தமுள்ள 70 வார்டுகளில் 35 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளது. மேலும், 11 வார்டுகளில் இப்பணி நடைபெற்று வருகிறது.*

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 400 TPD *ஆகும், இதில் 160* TPD *ஈரக்கழிவுகள் மற்றவை உலர் கழிவுகள் ஆகும். ஈரமான கழிவுகளை கையாள 26 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 6 வளமீட்பு மையங்களும் செயல்பாட்டில் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 991.64 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 56.46 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆண்டில் 50.00 கி.மீ. சாலைகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 42,902 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 37,803 ஆற்றல்மிகு தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

மாநகராட்சியின் முக்கிய வருமானமான வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.135.62 கோடி), காலி மனை வரி (ரூ.9.86 கோடி), தொழில் வரி (ரூ.22.54 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.16.15 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.4.23 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *15-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் ரூ.31.63 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு*

வாகன கொள்முதல் செய்தல், குடிநீர் திட்ட அபிவிருத்தி, சுகாதார நிலையம் அமைத்தல் மற்றும் ஆய்வகங்கள் ஆகிய பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

- 3 எண்ணிக்கையிலான நீர்நிலைகளை புனரமைப்பதற்கு ரூ.1.69 கோடி அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு நிதியின்கீழ் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் 12.42 கி.மீ. நீளத்திலான 78 சேதமடைந்த சாலைகளை மேம்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF)கீழ் தெருவிளக்குகளை ஆற்றல்மிகு மின் விளக்குகளாக மாற்றிடும் பணிக்கு ரூ.48.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய திட்டம்:

- தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்க முன்மொழியப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் உட்பட தாம்பரம் மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு விரிவான பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை டிசம்பர் 2023-க்குள் தயார் செய்யப்படும்.
- மாநில பேரிடர் நிவாரண நிதியின் (SDRF)கீழ் ரூ.37.40 கோடி மதிப்பீட்டில் 11.53 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.
- புதிய அலுவலக கட்டடம் கட்ட ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2 எண்ணிக்கையிலான தகன எரிவாயு மயானத்தின் மொத்த மதிப்பீடான ரூ.5.00 கோடியும், 1 எண்ணிக்கையிலான அறிவுசார் மையத்திற்கு ரூ.1.50 கோடியும், வணிக வளாகம் கட்டுவதற்கு ரூ.1.00 கோடியும், CGF திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

[2023 மார்ச் 30

- *17 எண்ணிக்கையிலான சாலைகள் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

- *ஒரு எண்ணிக்கையிலான பூங்கா, ஒரு எண்ணிக்கையிலான தகனமேடை மற்றும் ஒரு எண்ணிக்கையிலான தினசரி சந்தைக்கு ஆகிய பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, மொத்தம் ரூ.3.94 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது.*

XVI. காஞ்சிபுரம் மாநகராட்சி:

காஞ்சிபுரம் மாநகராட்சி 21-10-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 36.14 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,32,816 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 2.84 இலட்சம் ஆகும். மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.87.30 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரமான பாலாற்றில் இருந்து 23.50 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 31.43* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 23.50* MLD *ஆகும். மொத்தமுள்ள, 51,186 வீடுகளில், 32,620 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

14.70 MLD *திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 14.70* MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு நத்தப்பேட்டை ஏரியில் வெளியேற்றப்படுகிறது. 51,186 வீடுகளில் இதுவரை மொத்தம் 21,201 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 51 வார்டுகளில், 36 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது.*

2023 மார்ச் 30]

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 100 TPD *ஆகும், இதில் 50* TPD *ஈரமான கழிவுகள் மற்றும் 50* TPD *உலர்கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள மொத்தம் 4 நுண்ணுர மையங்கள் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 379 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 30.94 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆண்டில் 27.5 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 12,276 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 709 ஆற்றல்மிகு தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

மாநகராட்சியின் முக்கிய வருமானமான வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.23.44 கோடி), காலி மனை வரி (ரூ.4.42 கோடி), தொழில் வரி (ரூ.3.59 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.8.34 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.6.37 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *ரூ.10.19 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள், நல மையங்கள் மற்றும் சாலைப் பணிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 15-வது நிதிக் குழுவின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் கட்டப்பட்டு வருகிறது.*

- *கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.11.60 கோடி மதிப்பீட்டில் இராஜாஜி மற்றும் ஜவஹர்லால் நேரு சந்தைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF)கீழ் ரூ.12.51 கோடி மதிப்பீட்டில் தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- ரூ.10.00 கோடி சிறப்பு நிதியின்கீழ் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புதிய தகனமேடை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.
- SBM 2.0 திட்டத்தின்கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் நாதேபட்டேல் குப்பை கிடங்கில் உயிர் அகழ்வியல் முறையில் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.
- 20 மெட்ரிக் டன் கொள்ளவுள்ள 4 பொருள் மீட்பு வசதி மையங்கள் SBM 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 10 மெட்ரிக் டன் கொள்ளவுள்ள 2 நுண் உர மையங்கள் SBM 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 2 நீர்நிலைகளான உப்பேரி குளம், ஓரிக்கல் ஏரி ஆகிய நீர்நிலைகளை மறுசீரமைப்பதற்காக ரூ.1.06 கோடி அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 6 சமுதாய/பொதுக் கழிப்பறைகள் கட்டும் பணிக்கான SBM 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய திட்டங்கள்

தற்போதுள்ள குடிநீர்த் திட்டத்தினை மேம்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை ரூ.298.60 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

- *விடுபட்ட மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை செயல்படுத்த ரூ.339.08 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.*

- *மஞ்சநீர் கால்வாயினை மறுசீரமைத்தல் மற்றும் பலப்படுத்தும் பணிக்காக உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *காவலாங்கேட்டில் இருந்து செவிலிமேடு வரை உள்ள சாலையை விரிவுபடுத்துதல் மற்றும் பலப்படுத்துதல், வேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ஆகிய பணிகள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.*

XVII. கடலூர் மாநகராட்சி

கடலூர் மாநகராட்சி 8-10-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் பரப்பளவு 27.69 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,73,636 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 1.98 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ. 111.97 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

கடலூர் மாநகரில் 4 ஆதாரங்களிலிருந்து 17.85 MLD *குடிநீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 26.86* MLD *மற்றும் ஒரு நாளைக்கு 17.85* MLD *குடிநீர் வழங்கப்படுகிறது. மொத்தமுள்ள, 49,515 வீடுகளில், 11,517 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

கடலூர் மாநகரில் 12.25 MLD *திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று செயல்படுகிறது. தினந்தோறும் வெளியேற்றப்படும் 6* MLD *கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையத்தில்*

சுத்திகரிக்கப்பட்டு விஞ்ஞான முறையில் வெளியேற்றப்படுகிறது. மொத்தமுள்ள 49,515 வீடுகளில் இதுவரை 9,400 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 45 வார்டுகளில், தற்போது 33 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 59.40 TPD, இதில் 29.70 TPD ஈரக்கழிவுகள் மற்றும் 29.70 TPD உலர் கழிவுகள் ஆகும். ஈரக் கழிவுகளை கையாள்வதற்கு 3 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள்வதற்கு 1 வளமீட்பு மையமும் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 313.75 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 83.04 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 20 கி.மீ. சாலை சீரமைப்புப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 8,570 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டில் அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல்மிகு விளக்குகளாக மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் மொத்த வருவாய்:

மாநகராட்சியின் முக்கிய வருமானமான வசூலிக்கத்தக்க வரிகளான, சொத்து வரி (ரூ.35.48 கோடி), காலி மனை வரி (ரூ.4.05 கோடி), தொழில் வரி (ரூ.4.05 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.4.47 கோடி) மற்றும் வரியில்லா வருமானம் (ரூ.30.94 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP)கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் 15.90 கி.மீ. நீளத்திலான 52 சேதமடைந்த சாலைகளை சீரமைப்பதற்கான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

- மாநில நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF)கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.8.80 கோடி மதிப்பீட்டில், 8,570 தெருவிளக்குகளை எல்இடி விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.17.90 கோடி மதிப்பீட்டில் கடலூர் துறைமுகம் பக்தவத்சலம் மார்க்கெட், மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட் மற்றும் திருப்பாப்புலியூர் பான்பரி மார்க்கெட் ஆகிய மூன்று தினசரி சந்தைகள் அமைத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புரம்) 2.0 திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.0.74 கோடி திட்ட மதிப்பீட்டில் கம்மியாம்பேட்டை உரக்கிடங்கில் தேங்கியுள்ள 11,673 கனமீட்டர் பழைய குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் முழுமையாக அகற்றி நிலத்தினை மீட்டெடுத்தல் பணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புரம்) 2.0 திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.0.85 கோடி திட்ட மதிப்பீட்டில் பொருட்கள் மீட்பு மையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 4 எண்ணிக்கையிலான குடிநீர் வழங்கல் பணிகளுக்கு ரூ.1.45 கோடி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- 3 எண்ணிக்கையிலான நகர்ப்புர சுகாதார மையங்கள் மற்றும் 1 எண்ணிக்கையிலான நகர பொது சுகாதார ஆய்வகம் கட்டுமானத்திற்காக ரூ.0.97 கோடி 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- 4 மண்டல அலுவலக கட்டடம் கட்டுவதற்கு சிறப்பு மானியமாக ரூ.10.00 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் 2 எண்ணிக்கையிலான நீர்நிலை மேம்பாட்டுப் பணிக்கு ரூ.0.94 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- *2022-23 ஆம் ஆண்டிற்கான நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் தகன மேடை பராமரிப்பு, பூப்பந்தாட்ட மைதானம் கட்டுதல் பணி மற்றும் டிகாண்டிங் இயந்திரம் வாங்குதல் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*
- *மாநில பேரிடர் நிதியின்கீழ் 2022-23 ஆம் ஆண்டிற்கு 17.60 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக ரூ.14.45 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*

புதிய திட்டங்கள்

மாநகராட்சியில் தற்போதுள்ள 33 வார்டுகளில் விடுபட்ட 12 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ரூ.185.30 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

XVIII. கும்பகோணம் மாநகராட்சி

கும்பகோணம் மாநகராட்சி 24-12-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 14.68 ச.கி.மீ. ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,55,482 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 1.98 இலட்சமாக உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.79.28 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் முக்கிய குடிநீர் ஆதாரமான காவேரி ஆற்றில் இருந்து 20.58 MLD *தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 20.58* MLD *மற்றும் ஒரு நாளைக்கு மொத்த விநியோக அளவு 20.47* MLD *ஆகும். மொத்தமுள்ள 34,140 வீடுகளில், 18,364 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 17 MLD *திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 13* MLD *கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, அதன்பின் கரிகுளத்தில் வெளியேற்றப்படுகிறது. 34,140 வீடுகளில் இதுவரை மொத்தம் 20,407 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில், 43 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 78 TPD *ஆகும், இதில் 42* TPD *ஈரக்கழிவுகள் மற்றும் 36* TPD *உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 5 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 1 வளமீட்பு மையமும் உள்ளன.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 180.97 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 54.14 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 10 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 5,710 தெருவிளக்குகள் உள்ளன, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் 223 ஆற்றல்மிகு தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.23.20 கோடி), காலி மனை வரி (ரூ.0.48 கோடி), தொழில் வரி (ரூ.1.50 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.1.10 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.1.57 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- *கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் எடுக்கப்பட்டுள்ளன:*
- *மாநகராட்சியில் பூங்கா மற்றும் பசுமைவெளி மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.0.48 கோடி.*
- TB *குளம் மேம்பாட்டுப் பணிக்காக ரூ.1.26 கோடி மற்றும் தாமரை குளம் மேம்பாட்டுப் பணிக்காக ரூ.1.17 கோடி.*
- *ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆனைக்காரன்பாளையத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி.*
- *ரூ.3.83 கோடி மதிப்பீட்டில் 3.62 கி.மீ. நீளத்திற்கு மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணி.*

- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒலைப்பட்டினம் கால்வாய் பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் தூர் வாருதல் பணிக்காக ரூ.13.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நாகேஸ்வரன் திருமஞ்சனம் வீதியில் வணிக வளாகம் கட்டுவதற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கான மூலதன நிதியிலிருந்து ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2021-22-ன்கீழ் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில், குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தும்பொழுது பழுதடைந்த சாலைகளைச் சீரமைப்பதற்காக பணிகள் அனுமதிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2022-23-ன்கீழ் குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தும்போது, சேதமடைந்த சாலைகளை அமைக்கும் பணிக்காக ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- புதிய மண்டல அலுவலகம் கட்டுவதற்கு ரூ.11.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

XIX. கரூர் மாநகராட்சி

கரூர் மாநகராட்சி 21-10-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 53.26 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 2.51 இலட்சம் ஆகவும் உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.95.73 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் முக்கிய குடிநீர் ஆதாரமான காவேரி ஆற்றில் இருந்து 33.65 MLD தண்ணீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 34.01 MLD தேவையான குடிநீர் தினமும் வழங்கப்படுகிறது. மொத்தமுள்ள 81,118 வீடுகளில் 52,445 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

பாதாள சாக்கடைத் திட்டம்:

மாநகரில் 15 MLD திறன் கொண்ட 1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. தினசரி உருவாகும் 6.5 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, பஞ்சமாதேவி கால்வாயில் வெளியேற்றப்படுகிறது. 81,118 வீடுகளில் இதுவரை மொத்தம் 17,341 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 48 வார்டுகளில், 32 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி உள்ளது, மேலும், 16 வார்டுகளில் ரூ.476.11 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 110 TPD ஆகும், இதில் 62 TPD ஈரக்கழிவுகள் மற்றும் 48 TPD உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 12 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 2 வளமீட்பு மையங்களும் உள்ளன.

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 412.24 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 59.42 கி.மீ. சாலைப் பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 71.5 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 11,875 தெருவிளக்குகள் உள்ளன. மேலும் 2023-24 ஆம் ஆண்டிற்கு 1,507 ஆற்றல்மிகு தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.31.58 கோடி), காலி மனை வரி (ரூ.3.00 கோடி), தொழில் வரி (ரூ.3.68 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.11.43 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.6.5 கோடி) ஆகும்.

[2023 மார்ச் 30

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் திருமாநிலையூரில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு ரூ.40 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளுக்காக ரூ.20.13 கோடி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

- வாங்கல் இணைப்புச் சாலை பணிக்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் ரூ.2.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் மோகனூர்–வாங்கல் சாலையில் இருந்து பழைய தேசிய நெடுஞ்சாலை வரையிலான இணைப்புச் சாலையை மேம்படுத்த ரூ.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் காமராஜ் தினசரி சந்தையினை மறு சீரமைப்பு செய்வதற்காக ரூ.6.75 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- புதிய மண்டல அலுவலகம் கட்டுவதற்கு சிறப்பு நிதியின்கீழ் ரூ.7.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.6.46 கோடி மதிப்பீட்டில், சுங்ககேட் பகுதியில் மீன் மார்க்கெட் வளாகம் அமைப்பதற்கும், 5.72 கி.மீ. நீளத்திலான மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF)கீழ் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் 8,849 தெருவிளக்குகளை எல்.இ.டி. (LED) விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா திட்டம் (நகர்புரம்) 2.0 திட்டத்தின்கீழ் ரூ.8.85 கோடி மதிப்பீட்டில் உரக்கிடங்கு பகுதியில் உள்ள தேக்கத் திடக்கழிவுகளை பயோமைனிங் (Bio Mining)

2023 மார்ச் 30]

முறையில் அகற்றும் பணி, உரக்கிடங்கு பகுதியில் பொருட்கள் மீட்பு மையம் கட்டும் பணி, தாந்தோணி குடித்தெரு பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டும் பணி, புதிய பேருந்து நிலையம் பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்டும் பணி ஆகிய பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

புதிய திட்டங்கள்:

- மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக ஏற்கெனவே உள்ள திட்டங்களை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை ரூ.116.00 கோடியில் தயார் செய்யப்பட்டு, நிதி ஆதாரம் இறுதி செய்ய தயார் நிலையில் உள்ளது.
- மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ரூ.476.11 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு உள்ளது.

XX. சிவகாசி மாநகராட்சி

சிவகாசி மாநகராட்சி 21-10-2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 19.89 ச.கி.மீ. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,26,402 மக்கள் தொகை. தற்போதைய மக்கள் தொகை 1.40 இலட்சமாக உள்ளது. மாநகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு மானியங்கள் உட்பட ரூ.31.32 கோடி ஆகும்.

குடிநீர் வழங்கல்:

மாநகரின் குடிநீர் ஆதாரமான வெம்பக்கோட்டை, மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து 4.08 MLD குடிநீர் எடுக்கப்படுகிறது. மாநகரின் மொத்த குடிநீர் தேவை 12.66 MLD மற்றும் ஒரு நாளுக்கான மொத்த விநியோக அளவு 8.83 MLD ஆகும். மொத்தமுள்ள 44,597 வீடுகளில், 19,233 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம்:

40 KLD திறன் கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் ரூ.4.86 கோடியில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை:

மாநகரில் உருவாகும் மொத்த திடக்கழிவுகள் 52.70 TPD *ஆகும், இதில் 31.6* TPD *ஈரக்கழிவுகள் மற்றும் 21.1* TPD *உலர் கழிவுகள். ஈரமான கழிவுகளை கையாள 8 நுண்ணுர செயலாக்க மையங்களும், உலர் கழிவுகளை கையாள 4 வளமீட்பு மையங்களும் உள்ளன. மேலும், 2 எண்ணிக்கையிலான புதிய நுண்ணுர செயலாக்க மையங்களின் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.*

சாலைகள்:

மாநகரில் மொத்தம் 174.91 கி.மீ. சாலைகள் உள்ளன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் 85.98 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும், 2023-24 ஆண்டில் 43.86 கி.மீ. சாலைப் பணிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள்:

மாநகரில் மொத்தம் 4,876 தெருவிளக்குகள் உள்ளன. அதில் 4,423 தெருவிளக்குகள் ஆற்றல்மிகு விளக்குகளாக மாற்றம் செய்யப்படவுள்ளது. மேலும் 638 ஆற்றல்மிகு புதிய தெரு விளக்குகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வரி வசூல்:

வசூலிக்கத்தக்க வரிகள் சொத்து வரி (ரூ.21.84 கோடி), காலி மனை வரி (ரூ.1.23 கோடி), தொழில் வரி (ரூ.1.96 கோடி), குடிநீர் கட்டணம் (ரூ.2.04 கோடி), வரி அல்லாத வருமானம் (ரூ.2.31 கோடி) ஆகும்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்:

- TNSUDP *திட்டத்தின்கீழ் ரூ.206.88 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகள் முடிவுற்ற பிறகு, சிவகாசி மாநகராட்சிக்கு 16* MLD *குடிநீர் கூடுதலாக கிடைக்கும்.*
- *கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் மற்றும் ரூ.3.57 கோடி மதிப்பில் 3 நீர் நிலைகள் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2023 மார்ச் 30]

- *2020-21 ஆம் ஆண்டிற்கான நூற்றாண்டு திட்டத்தின்கீழ் 54 எண்ணிக்கையிலான திட்டப் பணிகளுக்கு ரூ.49.02 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*
- *15-வது நிதிக் குழு மானிய நிதியின்கீழ் ரூ.5.49 கோடி மதிப்பீட்டில் 30 பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *ரூ.10.48 கோடி மதிப்பிலான 139 சாலைப் பணிகள் 2022-23 ஆம் ஆண்டிற்கான* TURIP *திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு, சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *56 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் 6 தொகுப்புகளாக ரூ.8.34 கோடியில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*
- *3 எண்ணிக்கையிலான பொருட்கள் மீட்பு மையம் ரூ.2.55 கோடியில்* SBM *2.0 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.*
- *ஆய்வகம் மற்றும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக 2022-23 இல் ரூ.0.47 கோடி அனுமதிக்கப்பட்டு, இரண்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.*
- *2021-22 ஆம் ஆண்டிற்கான மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.5.00 கோடி அனுமதிக்கப்பட்டு வணிக வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.*
- *கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டிற்கு அறிவுசார் மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, ரூ.2.61 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *2022-23 ஆம் ஆண்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.10.00 கோடி சிறப்பு நிதியில் அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[2023 மார்ச் 30

3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதி உள்ளாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது. சென்னை மாநகராட்சி நாட்டின் பழமையான நகராட்சி அமைப்பாகவும், உலகின் 2-வது பழமையான நகராட்சி அமைப்பாகவும் திகழ்கிறது. சென்னை மாநகரமானது 426 ச.கி.மீ. பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 66.72 இலட்சம் மக்கள் தொகை கொண்டதாகும் மற்றும் 2022 ஆம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 87.1 இலட்சமாக இருக்கும்.

பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாக நலன் கருதி 200 கோட்டங்களைக் கொண்ட 15 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 15 மண்டலங்கள் 3 வட்டார அலுவலகங்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பு அம்சங்கள் அட்டவணை 3.1-ல் பின்வருமாறு:

அட்டவணை - 3.1

பரப்பளவு	மக்கள் தொகை	குடியிருப்புகள்	மண்டலம்	வார்டுகள் / கோட்டங்கள்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்
426 ச.கி.மீ	66.72 இலட்சம் (2011 மக்கள் தொகை கணக்கின் படி) 87.1 * இலட்சம் (2022)	13,19,149	15	200	23,917
சாலைகள்	**பாலங்கள்**	**மழைநீர் வடிகால்கள்**	**தெரு விளக்குகள்**	**பள்ளிகள்**	**பூங்காக்கள்**
5,657 கி.மீ	286	2,623.56 கி.மீ	2.91 இலட்சம்	281**	786

2023 மார்ச் 30]

விளையாட்டு திடல்கள்	நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம்	நகர்ப்புர சமுதாயநல மருத்துவ மனை/ மகப்பேறு நிலையம்	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் / பால்வாடிகள்/ அங்கன் வாடிகள்	பொதுக் கழிப்பிடங்கள்	தகன மேடைகள் / மயான பூமிகள்
222	141	16/3	1,806	1,384	211

* மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை

* * அரசாணை(நிலை) எண்.48 பள்ளி கல்வித் துறை, நாள்:01.03.2023-ன்படி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் 139 பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டன. எனவே 2023-24-ல் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 281+139=420 ஆக இருக்கும்.

3.1. உட்கட்டமைப்பு

3.1.1 சாலைகள்

(i) பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புறச்சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள் மற்றும் 5,270 கி.மீ. நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP), சிங்கார சென்னை 2.0 (Singara Chennai 2.0) மற்றும் மாநகராட்சி மூலதன நிதி (GCC's Capital Funds) மூலமும் மற்றும் வெளி ஆதாரத் திட்டங்கள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

சிங்கார சென்னை 2.0 திட்டம் 2022–23-ன்கீழ், 78.29 கி.மீ. நீளமுடைய 452 சாலைப் பணிகள் ரூ.55.61 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (TURIF)கீழ் 126.53 கி.மீ. நீளமுடைய 705 உட்புற சாலைகள்

[2023 மார்ச் 30

ரூ.69.08 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்திட்டத்தில் 630 சாலை பணிகள் ரூ.80.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் (NSMT) 2022-23-ன்கீழ் 219.09 கி.மீ. நீளமுடைய 1,366 எண்ணிக்கையிலான சாலைகள் ரூ.151.00 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், இரண்டாம் கட்டமாக ரூ.370 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. SFC திட்டம் 2022-23-ன்கீழ் ரூ.150 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிங்கார சென்னை 2.0 திட்டம் 2022-23-ன்கீழ், மேம்பாலங்களை அழகுபடுத்தும் நோக்கில் நீர்ஊற்றுகள், வண்ண விளக்குகள் மற்றும் பசுமை ஆக்கல் பணிகளுக்காக ரூ.9.47 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ii) பேருந்து நிழற்குடை

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டங்களின்கீழ் கட்டப்பட்டுள்ள 1,416 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 637 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் அமைக்கப்பட்டுள்ளன. பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) திட்டத்தின்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 844 நவீன பேருந்து நிழற்குடைகள் 4 வருடங்களுக்கு புதுப்பித்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் (ROT) முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்மூலம் முதல் வருடத்தில் ரூ.20.14 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) போக்குவரத்து தீவுகள் மற்றும் மையத் தடுப்புச் சுவர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியின்மூலம் 128 போக்குவரத்துத் தீவுகள் மற்றும் 173 மையத் தடுப்புச் சுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 30]

பிரதான சாலைகளில் இருக்கும் மையத் தடுப்புச் சுவர்களை மேம்படுத்துதல் மற்றும் அலங்காரச் செடிகளால் அழகுபடுத்தும் பணி நமக்கு நாமே திட்டம் மற்றும் மக்கள் குழுக்களின் தத்தெடுப்பை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.1.2 பாலங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியால், 26 முக்கியப் பாலங்கள் (14 மேம்பாலங்கள் மற்றும் 12 இரயில்வே மேம்பாலங்கள்), 16 வாகனச் சுரங்கப்பாதைகள், 5 பாதசாரிகள் சுரங்கப்பாதைகள், 5 நடைமேம்பாலங்கள் மற்றும் 234 சிறுபாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட அட்டவணை 3.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பால பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன:

அட்டவணை - 3.2

வ. எண்	பணியின் பெயர்	நிதி ஆதாரம்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	*புழல் உபரி நீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் புதிய பாலம்*	*சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி*	*19.33*
2	*மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து தி.நகர் பேருந்து நிலையம் வரை (Escalators) நகரும் படிகட்டுகளுடன்கூடிய ஆகாய நடைபாதை அமைக்கும் பணி*	*சீர்மிகு நகர திட்ட நிதி*	*28.45*
3	*கொளத்தூர் - வில்லிவாக்கம் சந்திக்கடவு (எல்.சி-1) குறுக்கே இரயில்வே மேம்பாலம்*	*மூலதன மானிய நிதி*	*61.98*

வ. எண்	பணியின் பெயர்	நிதி ஆதாரம்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
4	யானை கவுனி சாலையில் தற்போதுள்ள இரயில்வே மேம்பாலத்தினை இடித்துவிட்டு புதிதாக மேம்பாலம் அமைக்கும் பணி (சென்னை மாநகராட்சி பகுதி மட்டும்)	மூலதன மானிய நிதி	30.78
5	ஸ்டீபன்சன் சாலையில் உள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி (ஓட்டேரி நல்லா சாலை குறுக்கே)	மூலதன மானிய நிதி	43.46
6	எம்.கே.பி. நகர் பாலத்தை புனரமைக்கும் மற்றும் (Retrofitting) பராமரிக்கும் பணி	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி	1.92
7	வைத்தியநாதன் பாலத்தை புனரமைக்கும் மற்றும் (Retrofitting) பராமரிக்கும் பணி	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி	5.01
8	கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	142.00
9	தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் முதல் பிரதான சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	131.00

2023 மார்ச் 30]

வ. எண்	பணியின் பெயர்	நிதி ஆதாரம்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
10	போஜராஜா நகர், இரயில்வே சந்திக்கடவு (LC) No.11A குறுக்கே வரையறுக்கப்பட்ட வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி	மூலதன மானிய நிதி	13.41
11	மணலி சாலையில் ஏற்கெனவே உள்ள இரயில்வே சந்திக்கடவு 2பி-க்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	96.04
12	ஆதம்பாக்கம் ஏரியின் குறுக்கே ஜீவன் நகர் 2-வது தெருவில் பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	5.00
13	ஓட்டேரி நல்லாவின் குறுக்கே ஆஸ்பிரன் கார்டன் 2-வது தெரு மற்றும் கீழ்ப்பாக்கம் தோட்டம் தெருவை இணைக்கும் இடத்தில் அமைந்துள்ள பாலத்தை இடித்துவிட்டு புதியதாக பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	6.20
	மொத்தம்		584.58

மாம்பலம் ஆகாய நடைபாதை, கொளத்தூர் - வில்லிவாக்கம் சந்திக்கடவு (LC-1) மற்றும் ஸ்டீபன்சன் சாலை பாலம் ஆகியவை குறுகிய காலத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தற்போதுள்ள வாகனப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தவும், எதிர்வரும் காலங்களில் தங்குதடையற்ற

வாகனப் போக்குவரத்தை வழங்கிடவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் ரூ.250.36 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதியின் (I&A)மூலம் பின்வரும் 3 இடங்களில் மேம்பாலம்/பாலங்கள் கட்டப்பட உள்ளன:

அட்டவணை – 3.3

வ. எண்	பணியின் பெயர்	ஆண்டு/நிதி ஆதாரம்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	கூவம் ஆற்றின் குறுக்கே சன்னதி முதல் குறுக்கு தெருவில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	31.65
2	கூவம் ஆற்றின் குறுக்கே சின்ன நொளம்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	42.71
3	வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி	உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி	176.00
மொத்தம்			250.36

2023 மார்ச் 30]

வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி, நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்த பிறகு தொடங்கப்படும்.

3.1.3 மழைநீர் வடிகால்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2,624 கி.மீ. நீளத்திற்கு 11,516 மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் அட்டவணை 3.4-ல் உள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை - 3.4

வ. எண்	மண்டலம் எண்	மண்டலத்தின் பெயர்	மழைநீர் வடிகால் எண்ணிக்கை	மழைநீர் வடிகால் நீளம் (கி.மீ.)
1	I	திருவொற்றியூர்	550	98.93
2	II	மணலி	421	108.16
3	III	மாதவரம்	531	168.57
4	IV	தண்டையார் பேட்டை	423	117.01
5	V	இராயபுரம்	377	119.71
6	VI	திரு.வி.க.நகர்	586	140.08
7	VII	அம்பத்தூர்	1299	326.04
8	VIII	அண்ணாநகர்	711	184.36
9	IX	தேனாம்பேட்டை	754	177.65
10	X	கோடம்பாக்கம்	763	214.23
11	XI	வளசரவாக்கம்	1483	282.00
12	XII	ஆலந்தூர்	1267	211.06
13	XIII	அடையாறு	784	210.50
14	XIV	பெருங்குடி	1255	204.83
15	XV	சோழிங்கநல்லூர்	312	60.43
மொத்தம்			11,156	2,623.56

[2023 மார்ச் 30

மேலும், 33 நீர்வழிக் கால்வாய்கள் 53.42 கி.மீ. நீளத்திற்கு அட்டவணை 3.5-ல் உள்ளவாறு பராமரிக்கப்படுகின்றன.

அட்டவணை - 3.5

வ. எண்	மண்டலம் எண்	கால்வாயின் பெயர்	நீளம் (மீ.)
1	I	தாமரைகுளம் கால்வாய்	500
2	II	பழைய நாபாளையம் கால்வாய்	1299
3	II	துளசி நகர் கால்வாய்	2043
4	II	மணலி புதூர் TNHB கால்வாய்	1121
5	II	பெரிய ஏச்சன்குழி கால்வாய்	257
6	II	கடப்பாக்கம் ஏரி உபரி நீர் கால்வாய்	952
7	II	மாதவரம்-மணலி ஏரி கால்வாய்	1266
8	IV	கேப்டன் காட்டன் கால்வாய்	3040
9	VI	கொடுங்கையூர் கால்வாய் வடக்கு	1150
		கொடுங்கையூர் கால்வாய் தெற்கு	1675
		கொடுங்கையூர் கால்வாய் பிரதானம்	2575
10	IV	இணைப்பு கால்வாய்	530
11	IV	வியாசர்பாடி கால்வாய்	1350
12	IV	ஜவஹர் கால்வாய்	750
13	VI	ஏகாங்கிபுரம் கால்வாய்	1530
14	VII	வடக்கு அவென்யூ கால்வாய்	2900
15	VII	அம்பத்தூர் சிட்கோ கால்வாய்	1320

2023 மார்ச் 30]

வ. எண்	மண்டலம் எண்	கால்வாயின் பெயர்	நீளம் (மீ.)
16	VII	பாடிக்குப்பம் கால்வாய்	2120
17	VIII	TVS கால்வாய்	910
18	VII & XI	நொளம்பூர் கால்வாய்	2480
19	IX	நுங்கம்பாக்கம் கால்வாய்	900
20	IX	நந்தனம் கால்வாய்	1060
21	IX	ட்ரஸ்ட்புரம் கால்வாய்	1500
22	IX & XIII	மாம்பலம் கால்வாய்	5800
23	X	ரெட்டிகுப்பம் கால்வாய்	500
24	X	எம்.ஜி.ஆர். கால்வாய்	1800
25	X	ஜாபர்கான்பேட்டை கால்வாய்	600
26	XI & XII	நந்தம்பாக்கம் கால்வாய்	3240
27	XII	ஆதம்பாக்கம் கால்வாய்	927
28	XIII	செல்லம்மாள் கல்லூரி கால்வாய்	700
29	XIII	கிண்டி தொழிற்பேட்டை கால்வாய்	1600
30	XIII	ராஜ்பவன் கால்வாய்	1100
31	XIV	பள்ளிக்கரணை கால்வாய்(மயிலை பாலாஜி கால்வாய்-1 &2)	342
32	XV	தலைமைச் செயலகம் காலனி கால்வாய்	1084
33	XV	செம்மஞ்சேரி கால்வாய்	2500
மொத்தம்			53,421

சென்னை மாநகரம் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு சவாலை எதிர்கொள்கிறது. பெருநகர சென்னை மாநகராட்சி உருவாக்கிய மழைநீர் வடிகால் உட்கட்டமைப்பின் திறமையான திட்டமிடல் காரணமாக, 2022 வடகிழக்குப் பருவமழையில் சென்னை மாநகரில் மழைநீர் தேக்கம் மற்றும் வெள்ளப்பெருக்கு பெருமளவில் தடுக்கப்பட்டது. வெள்ளத்தடுப்பு மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் சிங்கார சென்னை 2.0, மாநில

[2023 மார்ச் 30

பேரிடர் நிவாரண நிதி (SDRF) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB), KfW மற்றும் உலக வங்கி நிதியின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

வடசென்னையில் மழைக்காலங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் நீண்டநாள் கோரிக்கையான ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் ஆசிய வளர்ச்சி நிதியின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் 769 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை 45% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்மூலம் அம்பத்தூர், மணலி, மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

கோவளம் வடிநிலப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 39.78 கி.மீ. நீளத்திற்கு, ரூ.150.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 15% பணிகள் முடிக்கப்பட்டது. மேலும் இரண்டாம் கட்டமாக 120.55 கி.மீ. நீளத்திற்கு, ரூ.447.03 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டமாக வடிவமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தால் பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் மண்டலப் பகுதியில் வாழும் சுமார் 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

சிங்கார சென்னை 2.0(பகுதி I) திட்டத்தின்கீழ் 40.79 கி.மீ. நீளத்திற்கு, ரூ.184.65 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும், சிங்கார சென்னை 2.0 (பகுதி II) திட்டத்தின்கீழ் 17.89 கி.மீ. நீளமுடைய மழைநீர்வடிகால் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும், சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் கட்டமைப்பு சிறந்த முறையில் அமைக்கும் முயற்சிகளில், கூடுதலாக 60.53 கி.மீ. நீளமுடைய புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் 12 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அம்ரூத்

2023 மார்ச் 30]

திட்டத்தின்கீழ் 5 நீர்நிலைகள் புனரமைக்கும் பணிகள் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

3.1.4 சிறப்புத் திட்டங்கள்

(i) சென்னைப் பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம்

*சென்னை பெருநகர பகுதியில் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளை தீர்க்க ரூ.904.88 கோடி மதிப்பீட்டில் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (*JICA*) கடனுதவியுடன் சென்னையில் திறன்மிகு போக்குவரத்து திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கியக் கூறுகள்:*

1. *தகவமைப்பு போக்குவரத்து சமிக்ஞை கட்டுப்பாடு அமைப்பு (*Adaptive Traffic Signal Control System*)*
2. *சென்னை போக்குவரத்து தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (*Chennai Traffic Information and Management System*)*
3. *சென்னை பெருநகர பேருந்து அமைப்பு முறை (*City Bus System*)*

(ii) சென்னை நகரக் கூட்டாண்மை திட்டம்

சென்னை நகரக் கூட்டாண்மை திட்டத்தின் முக்கிய நோக்கம், சென்னை பெருநகரத்தின் எதிர்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதும் மற்றும் சென்னை மாநகரப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதில் முன்னேற்றம் ஏற்படுத்துவதே ஆகும். 1 பில்லியன் USD *(சுமார் ரூ.7,500 கோடி) கொண்டுள்ள இத்திட்டம் 3 கட்டங்களாக நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி முக்கியப் பங்குதாரராக விளங்குகிறது.*

முதற்கட்டமாக 300 மில்லியன் USD *(சுமார் ரூ.2,250 கோடி) 2021 முதல் ஐந்து வருடங்களுக்கு உலக வங்கி தமிழ்நாடு அரசிற்கு வழங்கும். பெருநகர சென்னை மாநகராட்சி 5 வருடங்களுக்கு உலக வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 4 செயல்திறனுடன் இணைந்த குறியீடுகள் (*Disbursement Link in Indicators*) செயல்படுத்தினால் 90 மில்லியன்* USD *(சுமார் ரூ.675 கோடி) பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக்கொள்ளும். மேலும் 4* DLI-*க்கு கூடுதலாக*

பெருநகர சென்னை மாநகராட்சி உலக வங்கியிடம் ஒப்புக்கொண்டவாறு முடிவு கட்டமைப்பு குறியீடுகளும் (Result Frame work Indicators) செயல்படுத்த வேண்டும்.

4 செயல்திறனுடன் இணைந்த குறியீடுகள் (Disbursement Link in Indicators), பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில்முறை காலிப்பணியிட விகிதங்களைக் குறைத்தல், பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது கொள்முதல் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார அமைப்பு பலப்படுத்துதல், பெருநகர சென்னை மாநகராட்சியில் சொந்த ஆண்டு வருவாயை அதிகரித்தல் ஆகும். மேலும், முடிவு கட்டமைப்பு குறியீடுகள் (RFI), பொது இடங்கள் மற்றும் பேருந்து பயணங்களில் மகளிர் பாதுகாப்பினை உறுதி செய்தல், பாதசாரிகளுக்கான நடைபாதையை அதிகரித்தல், திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல், குடிமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம், மாநகராட்சி அளிக்கும் சேவையின் மீது அவர்களின் கருத்தை அறிதல் ஆகியவை ஆகும்.

பெருநகர சாலை திட்டம்

சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தில் பெருநகர சாலை திட்டமானது முக்கியமான அங்கமாகும். இந்தத் திட்டம் அனைவருக்கும் உயர்தரமான மற்றும் ஒரேமாதிரியான சாலைகள் உருவாக்குவதேயாகும். பெருநகர சென்னை மாநகராட்சியானது அனைத்து சாலைகளையும் இணைத்து “முழுமையான சாலைகள்” ஆக மாற்றுவதற்காக பெருநகர சாலை திட்டத்தைத் தொடங்கியுள்ளது. புதிய வடிவமைப்பின் தொடர்ச்சியாக நடைபாதைகள், ஒழுங்குமுறைப்பட்ட வாகனப் பாதைகள், தங்குதடையின்றி தொடர்ச்சியான ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்தம் மற்றும் பிற சேவை துறைகளின் பயன்பாட்டிற்காக நிலத்தடி குழாய்கள் (DUCT) அமைத்தல், பாதசாரிகள் நடைபயிற்சிக்கு இடையூறு ஏற்படாத வகையில் பேருந்து நிறுத்தங்களை வடிவமைத்தல், நடைபாதை வியாபாரங்கள் மற்றும் இதர பிற சாலையோர கட்டமைப்புகளை வடிவமைத்தல் ஆகும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 70 சதுர கி.மீ. பரப்பளவில் 111 கி.மீ. சாலை எடுக்கப்படும்.

2023 மார்ச் 30]

(iii) பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கழிப்பறைகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல்

பெருநகர சென்னை மாநகராட்சி திறந்த முறை ஒப்பங்கள் மூலமாக கழிப்பறைகளை வடிவமைத்தல், உருவாக்குதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் (DBFOT) என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள தனியார் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இப்பணிக்காலமான 9 வருடங்களில், 1 வருடம் வடிவமைத்தல், உருவாக்கம் மற்றும் செயல்படுத்தவும், மீதமுள்ள 8 வருடங்கள் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்காகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் Hybrid Annuity Model முறையில் உருவாக்கப்பட்டு, பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP)மூலம் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு பிரதான செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1-4-2023-ல் துவங்கப்பட்டு, 30-3-2032-ல் முடிவடையும். அட்டவணை 3.6-ல் உள்ளவாறு மண்டலம் 5, 6 & 9 (மெரினா மட்டும்) எடுத்துக்கொள்ளப்பட்ட கழிப்பறைகளின் விவரங்கள்.

அட்டவணை - 3.6

விவரம்	மண்டலம் -5		மண்டலம் -6		மண்டலம்-9 (மெரினா மட்டும்)		மொத்தம்	
	இடங்கள்	இருக்கைகள்	இடங்கள்	இருக்கைகள்	இடங்கள்	இருக்கைகள்	இடங்கள்	இருக்கைகள்
புதிய கட்டுமானம்	*51*	*365*	*36*	*281*	*3*	*16*	*90*	*662*
முக்கிய சீரமைப்பு	*71*	*396*	*17*	*46*	-	-	*88*	*442*
சிறு சீரமைப்பு	*105*	*1,398*	*81*	*661*	*8*	*107*	*194*	*2,166*
மொத்தம்	*227*	*2,159*	*134*	*988*	*11*	*123*	*372*	*3,270*

[2023 மார்ச் 30

இரண்டாம் கட்டமாக, மண்டலம்-7, 8, 9 & 10-ல் உள்ள பொதுக் கழிப்பறைகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு முதற்கட்டத்தைப் போன்று பணிகள் மேற்கொள்ளப்படும். முதற்கட்ட பணிகள் முடிவடைந்துள்ளன. தகுதிக்கான விண்ணப்பத்தை தயாரிக்கும் பணி நடந்து வருகிறது.

(iv) சீர்மிகு நகர திட்டம் (SCM)

சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.827.54 கோடி மதிப்பீட்டில் 43 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன இதில் முக்கிய பணிகளாக, பாதசாரிகள் வளாகம், பல அடுக்கு வாகன நிறுத்தம், நவீன குடிநீர் அளவுமானிகள், நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் போன்ற முக்கிய பணிகள் அடங்கும். மேலும், ரூ.269.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 5 பணிகள் 2023-24-க்குள் முடிக்கப்படும்.

(v) விக்டோரியா பொதுக்கூடம் புனரமைத்தல்

விக்டோரியா பொதுக்கூடம் 1890 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு பாரம்பரிய மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம் ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் விக்டோரியா பொதுக்கூடத்தின் பாதுகாப்பு, புத்துயிர் மற்றும் நில அதிர்வு மறுசீரமைப்புப் பணிகள் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் யாவும் முடிவுற்ற பிறகு, இது அருங்காட்சியகம் மற்றும் கலாச்சார இடமாகவும் மாறும்.

(vi) வில்லிவாக்கம் ஏரி சுற்றுச்சூழல் சீரமைப்பு

வில்லிவாக்கம் ஏரியில் 50,000 க.மீ. கொள்ளவு கொண்ட கூடுதல் குளம் ரூ.11.38 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் TNUIFSLமூலம் KfW மற்றும் SMIF மானியத்தின்மூலம் மேற்கொள்ளப்படும்.

(vii) பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் (பிராட்வே)

பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு வசதி வளாகம் (MMFC) அமைக்க முன்மொழியப்பட்டு, தற்போது உள்ள பேருந்து நிலையத்தில் ஒருங்கிணைந்த பல்வேறு போக்குவரத்து முனைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், பல அடுக்கு வாகன நிறுத்தம்,

2023 மார்ச் 30]

வணிக வளாகம் மற்றும் கடைநிலை இணைப்புகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்படும். Viability Gap Funding (VGF) மாதிரியின்படி இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

3.1.5 கட்டடங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியானது பள்ளிகள், மருத்துவமனைகள், சமுதாய கூடம் உள்ளிட்ட 2,813 கட்டிடங்களை அட்டவணை–3.7-ல் குறிப்பிட்டுள்ளவாறு பராமரிக்கின்றது.

அட்டவணை– 3.7

வ.எண்	மண்டலம்	நகர்ப்புற சமூகநல மருத்துவமனை	நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம்	பள்ளி கட்டடம்	சமுதாய நலக்கூடம்	சிறப்பு காப்பகங்கள்	அலுவலக கட்டடங்கள்	பிற வகையான கட்டடங்கள்	கட்டடங்களின் மொத்த எண்ணிக்கை
1	திருவொற்றியூர்	1	6	-	1	2	14	176	200
2	மணலி	1	2	-	1	1	7	56	68
3	மாதவரம்	1	4	-	3	2	14	144	168
4	தண்டையார் பேட்டை	1	15	46	4	6	16	122	210
5	இராயபுரம்	1	14	42	7	16	38	194	313
6	திரு. வி. க. நகர்	1	14	51	8	7	19	184	284
7	அம்பத்தூர்	1	9	-	1	2	8	122	144
8	அண்ணா நகர்	1	15	28	8	6	8	223	289
9	தேனாம்பேட்டை	1	16	53	13	10	18	35	146
10	கோடம்பாக்கம்	1	15	37	6	2	18	191	270
11	வளசரவாக்கம்	1	5	-	1	2	12	19	40
12	ஆலந்தூர்	1	5	-	4	1	14	180	205
13	அடையாறு	1	11	24	3	4	6	326	375
14	பெருங்குடி	1	5	-	4	-	12	51	73
15	சோழிங்கநல்லூர்	2	5	-	2	2	13	4	28
மொத்தம்		16	141	281	66	63	217	2,029	2,813

[2023 மார்ச் 30

சிங்கார சென்னை 2.0 (2022–23) திட்டத்தின் கீழ், 16 பள்ளிக் கட்டட பணிகள் ரூ.56.23 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 28 மயான பூமிகள் ரூ.23.86 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

15 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.62.65 கோடி மதிப்பீட்டில் 2023-2024 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

தூய்மை இந்தியா இயக்கம் நிதி, நிர்பயா நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதியின்கீழ் பல்வேறு கட்டங்களாக, ரூ.105.50 கோடி மதிப்பீட்டில் 2020 ஆஸ்பிரேஷனல் கழிப்பறைகள் மற்றும் 600 சிறுநீர் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 844 WC மற்றும் 942 சிறுநீர் கழிப்பறைகளும் 492 இடங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 292 இடங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 200 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.6 மின்சாரம்

தெருவிளக்குகள்

பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஒரே மாதிரியான தெரு விளக்குகளை வழங்குகிறது. அனைத்து பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி 2.91 இலட்சம் தெரு விளக்குகளை பராமரித்து வருகிறது. இவையனைத்தும் மின்சாரம் சேமிக்கும் எல்.இ.டி விளக்குகளாகும். முக்கிய சாலை சந்திப்புகள், கடற்கரைப் பகுதிகள் மற்றும் பூங்காக்களில் 435 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் அட்டவணை 3.8-ல் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

அட்டவணை- 3.8

வ. எண்	மண்டலம்	மண்டலங்களின் பெயர்	தெரு விளக்குகளின் எண்ணிக்கை	உயர்கோபுர மின் விளக்கு கம்பங்களின் எண்ணிக்கை
1	I	திருவொற்றியூர்	13,475	23
2	II	மணலி	12,293	10
3	III	மாதவரம்	18,767	33
4	IV	தண்டையார்பேட்டை	18,603	32
5	V	ராயபுரம்	15,193	37
6	VI	திரு.வி.க நகர்	17,760	32
7	VII	அம்பத்தூர்	27,091	49
8	VIII	அண்ணா நகர்	20,404	29
9	IX	தேனாம்பேட்டை	22,233	52
10	X	கோடம்பாக்கம்	24,165	34
11	XI	வளசரவாக்கம்	20,692	17
12	XII	ஆலந்தூர்	15,772	20
13	XIII	அடையாறு	23,098	32
14	XIV	பெருங்குடி	22,157	18
15	XV	சோழிங்கநல்லூர்	19,712	17
மொத்தம்			2,91,415	435

தெரு மின் விளக்குகள் பொதுவாக 25 மீ. இடைவெளியில் அமைக்கப்படுகிறது. விரிவாக்கப்பட்ட பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பு, போதிய வெளிச்சம் இல்லாத பகுதிகள் மற்றும் இருள் சூழ்ந்த பகுதிகளில் புதிய தெரு மின் விளக்குகள் அமைக்கும் பணிகள் நிர்பயா திட்டத்தின்கீழ் ரூ.60.84 கோடி மதிப்பீட்டில், தற்போது நடைபெற்று வருகின்றன.

3.1.7 மின்ஆளுமை

பெருநகர சென்னை மாநகராட்சி இணையதள சேவைகள்மூலம் சொத்து வரி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, நகர திட்டமிடல்,

பொதுமக்கள் குறைகள் தீர்வு, நம்ம சென்னை செயலி, வாட்ஸ் அப் சேவைகள் மற்றும் 1913 அழைப்பு மையம் ஆகிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நிறுவன வள திட்டமிடல் (Enterprise Resource Planning) மூலம் பணிகள் மேலாண்மை, சட்ட வழக்கு மேலாண்மை அமைப்பு, பொது மேலாண்மை அமைப்பு, ஓய்வூதிய மேலாண்மை போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

3.1.8 பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 786 பூங்காக்கள், 104 சாலை மையத்தடுப்புகள், 113 போக்குவரத்து தீவுத்திட்டுகள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த 786 பூங்காக்களில், ஒப்பந்த முறையில் 584 பூங்காக்களும், 145 பூங்காக்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா பணியாளர்கள் மூலமும், 57 பூங்காக்கள் பொதுமக்கள் தத்தெடுப்பு முறையிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் 222 விளையாட்டு மைதானங்கள் மற்றும் இதர விளையாட்டு வசதிகள் அட்டவணை 3.9-ல் உள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அட்டவணை – 3.9

மண்டலம்	மண்டலத்தின் பெயர்	பூங்காக்களின் எண்ணிக்கை	விளையாட்டுத் திடல்களின் எண்ணிக்கை	சிறுவர் விளையாட்டுத் திடல்களின் எண்ணிக்கை
I	திருவொற்றியூர்	8	1	—
II	மணலி	32	8	28
III	மாதவரம்	51	10	2
IV	தண்டையார் பேட்டை	54	24	37
V	ராயபுரம்	27	10	—

2023 மார்ச் 30]

மண்டலம்	மண்டலத்தின் பெயர்	பூங்காக்களின் எண்ணிக்கை	விளையாட்டுத் திடல்களின் எண்ணிக்கை	சிறுவர் விளையாட்டுத் திடல்களின் எண்ணிக்கை
VI	திரு.வி.க நகர்	47	22	3
VII	அம்பத்தூர்	72	8	1
VIII	அண்ணா நகர்	42	42	9
IX	தேனாம்பேட்டை	39	13	5
X	கோடம்பாக்கம்	59	17	54
XI	வளசரவாக்கம்	84	6	6
XII	ஆலந்தூர்	70	2	4
XIII	அடையாறு	70	50	29
XIV	பெருங்குடி	63	8	4
XV	சோழிங்கநல்லூர்	68	1	22
மொத்தம்		786	222	204

(i) பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் மறுசீரமைப்பு

2022-23 நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. புதிதாக அமைக்கப்படும் சில பூங்காக்களில், திறந்தவெளி உடற்பயிற்சிக்கான உபகரணங்கள் அமைக்கப்படுகின்றன. புதிதாக அமைக்கப்படும் பூங்காக்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. மேலும், புதிய பூங்காக்கள் மழைக்காலத்தில் நீர்தங்கும் பூங்காக்களாக (sponge parks) செயல்படும் வகையில் குறைந்தபட்ச கான்கிரீட் மற்றும் ஏராளமான பசுமையைக் கொண்டிருக்கும்.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) திட்டத்தின்கீழ் அடையாறு கரையோரம், கோட்டூர்புரம் பகுதியில் ரூ.9.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ரூ1.99 கோடி மதிப்பீட்டில் கெனால் பேங்க் சாலை, கோட்டூர்புரம் மற்றும் அடையாறு (செயின்ட் பேட்ரிக் கல்லூரி) ஆகிய இடங்களில் புதிய விளையாட்டுத்திடல் மற்றும் அடர்வன காடு அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.

சிங்கார சென்னை 2.0 (2022-23) திட்டத்தின்கீழ் ரூ.36.46 கோடி மற்றும் ரூ.16.33 கோடி மதிப்பீட்டில் முறையே 141 பூங்காக்கள் மற்றும் 51 விளையாட்டுத்திடல் அனுமதிக்கப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் சிங்கார சென்னை 2.0 மற்றும் நமக்கு நாமே திட்ட நிதியிலும் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

(ii) பசுமைப்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சென்னை மாநகரின் பசுமைப் பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாரம்பரிய மரவகைகள் பல்வேறு பகுதிகளில் நடப்பட்டுள்ளன. இத்துடன், சென்னை நகரில் உள்ள குடியிருப்பு நலச் சங்கங்களை ஒருங்கிணைத்து மரக்கன்றுகளை வளர்க்க பெருநகர சென்னை மாநகராட்சி முயற்சி எடுத்துள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டில் 2.58 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

3.2. சுகாதாரம் மற்றும் தூய்மை

3.2.1 திடக்கழிவு மேலாண்மை

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் நாளொன்றுக்கு உருவாகும் குப்பையின் அளவு சராசரியாக 5,500 மெட்ரிக் டன் ஆகும். அனைத்து வீடுகளிலிருந்து குப்பை சேகரிக்கப்படுகிறது. தரம் பிரிக்கப்பட்ட ஈரமான மற்றும் உலர் கழிவுகள் பரவலாக்கப்பட்ட பதனிடுதல் மையங்களுக்கு அனுப்பப்படுகிறது, மீதமுள்ள கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பைகொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள பதினைந்து மண்டலங்களில், ஐந்து மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியாலும், மீதமுள்ள பத்து மண்டலங்களில் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

2023 மார்ச் 30]

(i) உட்கட்டமைப்பு

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், கழிவுகளை உருவாக்கும் இடத்தில் கழிவுகளைச் சேகரித்தல், அந்தந்த பதனிடுதல் மையங்களுக்கு கொண்டு செல்வது மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பெருநகர சென்னை மாநகராட்சி. இந்த செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு, 2041 பேட்டரிமூலம் இயக்கப்படும் வாகனங்கள், 95 பேட்டரிமூலம் இயக்கப்படும் மூன்று சக்கர மிதிவண்டிகள், 609 மூன்று சக்கர மிதிவண்டிகள், 171 கனரக/இலகுரக காம்பாக்டர்கள், 114 கனரக/இலகுரக டிப்பர்கள், 16 சாலை பெருக்கும் இயந்திரங்கள் போன்றவை பயன்பாட்டில் உள்ளன. இதேபோன்று 3,437 பேட்டரிமூலம் இயக்கப்படும் வாகனங்கள், 133 கனரக/இலகுரக காம்பாக்டர்கள், 105 கனரக/இலகுரக டிப்பர்கள் மற்றும் 48 சாலை பெருக்கும் இயந்திரங்கள் ஆகியவை தனியார்மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் பயன்பாட்டில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 5,088 எண்ணிக்கையில் நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள், 479 எண்ணிக்கையிலான NMR *(தற்காலிக தினக்கூலி பணியாளர்) மற்றும் 4,379 எண்ணிக்கையிலான* NULM *(தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக 9,143 பணியாளர்கள் தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.*

(ii) ஈரமான மற்றும் உலர்கழிவு பதனிடுதல்

பெருநகர சென்னை மாநகராட்சியில், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி, தரம் பிரிக்கப்பட்ட ஈர மற்றும் உலர் கழிவுகள் பதனிட பல்வேறு இடங்களில் பரவலாக்கப்பட்ட பதனிடும் மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

*தற்போது நாளொன்றுக்கு 1,021 மெட்ரிக்டன் அளவிற்கு ஈரக் கழிவுகளைப் பதப்படுத்தும் வசதிகளான நுண்ணுயிர்மூலம் உரம் தயாரிக்கும் கிடங்குகள், காற்று புகும் முறையில் உரம் தயாரிக்கும் கூடங்கள் (*Windrow Composting*), இயற்கை உயிரி எரிவாயு ஆலைகள் (*Bio-CNG*) மற்றும் தோட்டக்கழிவுகள் மறுசுழற்சி நிலையங்கள் என மொத்தம் 200 எண்ணிக்கையிலான பதனிடும் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஈரக்கழிவுகளைப்*

பதப்படுத்தும் நிலையங்களிலிருந்து தற்போது ஒரு மாதத்திற்கு சுமார் 720 டன் உரம் மற்றும் இயற்கை உயிரி எரிவாயு (Bio-CNG) 562 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஈரக்கழிவுகளைப் பதப்படுத்த, 100 மெட்ரிக்டன் திறன் கொண்ட இரண்டு உயிரி எரிவாயு ஆலைகள் சேத்துப்பட்டு மற்றும் மாதவரத்தில் இயங்கி வருகிறது. மேலும் கூடுதலாக 5 இடங்களில் நாளொன்றுக்கு மொத்தம் 500 மெட்ரிக் டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டு ஆலைகள் கட்டுமான பணிகள் பல்வேறு நிலையில் உள்ளது.

அட்டவணை 3.10

வ. எண்	செயல் முறை வகைகள்	மொத்த எண்ணிக்கை	திறன் (மெட்ரிக்டன்)
1	இயற்கை உரம் தயாரிக்கும் கூடம்	194	560
2	காற்று புகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் கூடம்	2	100
3	தோட்டக் கழிவுகள் மற்றும் இளநீர் குடுவைகளை மறுசுழற்சி செய்யும் நிலையம்	2	160
4	இயற்கை உயிரி எரிவாயு நிலையம்	2	200
மொத்தம்		200	1,020

நாளொன்றுக்கு 560 மெட்ரிக்டன் உலர் கழிவுகளை கையாள, 143 எண்ணிக்கையிலான பொருள் மீட்பு வசதிகள், வள மீட்பு மையங்கள், நவீன எரியூட்டிகள் மற்றும் இதர மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

இது தவிர மறுசுழற்சி செய்ய முடியாத எரியக்கூடிய உலர் கழிவுகள் இணை எரியூட்டியாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு வாரந்தோறும் 50 மெட்ரிக்டன் நான்கு எண்ணிக்கையிலான பேலிங் மையங்களிலிருந்து மாதவரம், தங்கசாலை, ஓட்டேரி மற்றும் பள்ளிக்கரணை-க்கு அனுப்பப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உலர் கழிவுகளை கையாள்வதற்கான வசதிகள் அட்டவணை 3.11-ல் உள்ளன.

அட்டவணை 3.11

வ. எண்	**செயல் முறை வகைகள்**	**மொத்த எண்ணிக்கை**	**திறன் (மெட்ரிக்டன்)**
1	பொருள் மீட்பு வசதிகள் / வள மீட்பு மையங்கள்	*136*	*415*
2	நவீன எரியூட்டு நிலையங்கள்	*3*	*65*
3	பேலிங் மையங்கள்	*4*	*80*
	மொத்தம்	*143*	*560*

(iii) மரபுக்கழிவுகளை பதனிடுதல் மற்றும் களைதல்

அ) பெருங்குடி

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் நகரின் தெற்கு பகுதியில் 225.16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இவ்வளாகம் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது, இதில் 9 முதல் 15 மண்டலங்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகிறது.

இதில் தரைமட்டத்திற்கு மேலே உள்ள பழைய குப்பை கழிவுகளின் அளவு சுமார் 34.02 இலட்சம் கன மீட்டர் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாக நிலப்பரப்பை உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (Bio-mining) முறையில் மீட்டெடுக்க ரூ.350.65 கோடி திட்ட மதிப்பீட்டிற்குத் தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[*2023 மார்ச் 30*

கீழ் 6 சிப்பங்களாக ஒப்புதல் வழங்கப்பட்டது. குப்பை கொட்டும் வளாகத்தில் குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 20.54 இலட்சம் கன மீட்டர் மரபுக்கழிவுகள் அகழ்ந்தெடுத்து சீரமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜூன் 2024-க்குள் நிறைவுபெறும். கூடுதலாக தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2.5 இலட்சம் கன மீட்டர் கழிவுகள் அகழ்ந்தெடுக்கும் பணிக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முடிவுறும்போது 200 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும். மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் தொல்காப்பிய பூங்காவைப் போன்று சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும்.

ஆ) கொடுங்கையூர்

மாநகரத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் 342.93 ஏக்கர் பரப்பளவில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளது. இதில் 1 முதல் 8 மண்டலங்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகிறது.

*இதில் தரை மட்டத்திற்கு மேலே உள்ள மரபுக்கழிவுகளின் அளவு சுமார் 66.52 இலட்சம் மெட்ரிக்டன் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலத்தை அகழ்ந்தெடுத்தல் (*Bio-mining*) முறையில் மீட்டெடுக்க விரிவான சாத்தியக் கூறு தயாரிக்கப்பட்டு, அரசிடமிருந்து அரசாணை (ப) எண் 15, நாள் 19-1-2023-ல் ரூ.640.83 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகளை தூய்மை இந்தியா 2.0 திட்டம்மூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்படும். இத்திட்டம் முடிவுறும்போது 252 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும்.*

(iv) கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதைய கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளின் சேகரிப்பு தினந்தோறும் சுமார் 800 மெட்ரிக் டன் ஆகும். இச்சேவையை மேம்படுத்துவதற்காக கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளைச் சேகரித்தல் மற்றும்

2023 மார்ச் 30]

கொண்டு செல்வது தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவற்றின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களிலும் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் ஆலைகள், பொதுமக்கள்-தனியார் பங்களிப்புமூலம் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையங்களில் தற்போது ஒரு நாளைக்கு சராசரியாக தலா 250 மெட்ரிக் டன் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் பெறப்பட்டு பதப்படுத்தப்படுகிறது. இதுநாள் வரையில் சுமார் 2,41,744 மெட்ரிக் டன் அளவிலான கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் பெரிய மற்றும் சிறிய சரளைக்கற்கள் மற்றும் மணல், கட்டுமானப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

(v) இயந்திர உட்கட்டமைப்பு

பெருநகர சென்னை மாநகராட்சியில் இயந்திரப் பொறியியல் துறையின்கீழ் தூய்மைப் பணி, குப்பைகள், கட்டடக் கழிவுகளை அகற்றும் பணி மற்றும் இதர துறை பணிகளுக்காக பேட்டரிமூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள், கனரக மற்றும் இலகுரக காம்பாக்டர், டிப்பர் வாகனங்கள், முன், பின் பளு தூக்கிகள், புல்டோசர்கள், ஹைட்ராலிக் எஸ்கவேட்டர்கள் உள்ளிட்ட 3,045 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் உள்ள சிறப்பு உபகரணங்களான 2 ஆம்பிபியன் வாகனங்கள், 4 ரோபாடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர்கள், 3 மினி ஆம்பிபியன் ஆகியவை கால்வாய்களில் மிதக்கும் கழிவுகள் மற்றும் தாவரங்களை அகற்றவும், 7 எண்ணிக்கையிலான வாகனத்தின் மீது பொருத்தப்பட்ட உயர்திறன் கொண்ட கழிவுகளை உறிஞ்சி, நீரை மறு சுழற்சி செய்து பயன்படுத்தும் ரீசைக்லர், 6 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக்மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்கள், மெரீனா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, பாலவாக்கம் கடற்கரை உள்ளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், காகிதக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், உடைந்த பாட்டில்கள், ஓடுகள் ஆகியவற்றை கடற்கரை மணலை சலித்து அகற்றி கடற்கரையை தூய்மை செய்திட டிராக்டர்மூலம் இயக்கப்படும்

மணல் சலிக்கும் 8 இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், 78 எண்ணிக்கையிலான இயந்திரப் பெருக்கி வாகனங்கள் (தனியார் ஒப்பந்ததாரரது வாகனங்கள் உட்பட) சாலைகளில் உள்ள மண் குவியலை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படுகின்றன.

மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் வீடுதோறும் சென்று தரம் பிரிக்கப்பட்ட குப்பை சேகரிக்கும் பணியினை துரிதமாகவும், முழுமையாகவும் மேற்கொள்ள அதிக எண்ணிக்கையில் 5,478 பேட்டரிமூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் (தனியார் ஒப்பந்ததாரரது வாகனங்கள் உட்பட) ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், 3,850 எண்ணிக்கையிலான காம்பாக்டர் தொட்டிகள் புதியதாக கொள்முதல் செய்யப்பட்டு மண்டலங்கள் 4,5,6,7 மற்றும் 8 பகுதிகளில் வைக்கப்பட்டு சாலையில் குப்பைகள் சிதறுவது தவிர்க்கப்பட்டு வருகிறது. இந்த தொட்டிகள் அவ்வப்பொழுது சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(vi) தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC)

சுத்தமான மற்றும் குப்பையில்லா நகரத்தை உருவாக்குவதற்கு மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும்.

எனவே, தூய்மையான நகரத்தை உருவாக்கவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகளில் மக்கள் தீவிர பங்களிக்கும் பொருட்டும் 3-6-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் 2 ஆம் மற்றும் 4 ஆம் சனிக்கிழமைகளில் ஒரு சிறப்பு பிரச்சாரம் பெருநகர சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பொது இடங்களில் தீவிர சுத்தம் செய்தல், நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்துதல், பழுதடைந்த சாலைக்கலன்களை அகற்றுதல், சாலையோரம் உள்ள சேதமடைந்த வாகனங்கள் மற்றும் இதர கழிவுப் பொருட்களை அகற்றுதல், குடியிருப்போர் நலச் சங்கங்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடச் செல்ல தகுந்த ஏற்பாடுகள் செய்தல், திடக்கழிவுகளை கையாளுதல் முறைகளை மாணவர்களுக்கு கற்பித்தல், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே

2023 மார்ச் 30]

தரம் பிரித்தல் போன்ற செயல்பாடுகள் நடைபெறுகின்றன. தூய்மை இந்தியா திட்டத்தில் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

3.2.2 பொது சுகாதாரம்

(i) பொது சுகாதார சேவைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத் துறையானது நோய்த் தடுப்பு சிகிச்சை வசதிகள் மற்றும் பொது மக்களை மையப்படுத்திய பல்வேறு சேவைகள் - பூச்சி தடுப்பு நடவடிக்கைகள், பல்வேறு தேசிய நலத் திட்டங்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் வீடற்றோர்களுக்கான காப்பகங்கள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. பொது சுகாதாரத் துறையானது சென்னை முனிசிபல் கார்ப்பரேசன் சட்டம் (CCMC) மற்றும் தமிழ்நாடு பொது சுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த சுகாதார உள்கட்டமைப்பின்மூலம் தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை, கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகள் போன்றவற்றை முழுமையாக அளித்து வருகிறது. 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள்(UPHC), 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள்(UCHC) மற்றும் 3 அவசர கால மகப்பேறு மருத்துவமனைகளின் (Maternity Hospital)மூலம் உரிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 இரத்த சுத்திகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கான சிறப்பு மருத்துவ சேவை வழங்குவதற்காக 40 பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் (Polyclinic), சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தொற்று நோய்களுக்கான சிறப்பு மருத்துவமனை(Communicable Diseases Hospital) 360 படுக்கைகள் கொண்டு 1914-ம் ஆண்டு தண்டையார்பேட்டையில்

துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையானது OPD, IP மற்றும் பல்வேறு நோயறிதல் சேவைகளுடன் கூடிய மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் கொரோனா நோய் தாக்கம் கண்டறியும் PCR ஆய்வுக் கூடமும் உள்ளது.

ரூ.88.30 கோடி மதிப்பீட்டில் பதினைந்தாவது நிதி ஆணையத்தின் மானியத்தின்கீழ் 140 நகர்ப்புர சுகாதார மற்றும் நல வாழ்வு மையங்கள் மற்றும் இதர வசதிகள் பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கத்தின்மூலம் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பார்வை இழப்பு தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2022-2023-ம் நிதி ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பார்வைத் திறன் குறைபாட்டினை சரிசெய்ய 1,325 மாணவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 12,296 பொது மக்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது மற்றும் 1,564 கண்கள் கண் வங்கிகள்மூலம் பெறப்பட்டன.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்மூலம் 2025-க்குள் காசநோயினை ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. காசநோய்க்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 13 CBNAAT மையங்கள் மற்றும் 13 Truenat மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில், 2,36,933 நபர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டு மாநகராட்சிமூலம் 10,549 நபர்களுக்கும், தனியார்மூலம் 4,390 நபர்களுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியாக இயங்கும் 9 ஆயுஷ்/சித்தா சுகாதார நிலையங்களும் மற்றும் 3 ஒருங்கிணைந்த ஆயுர்வேத சுகாதார நிலையங்களும் உள்ளன.

(ii) பிறப்பு மற்றும் இறப்பு பதிவு

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் இலவசமாக இணையதளத்தின்மூலம் (www.chennaicorporation.gov.in) பெற்றுக் கொள்ளும் வசதி 7-9-2008 முதல் உள்ளது. மேலும் 1930 ஆம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் கணிணிமயமாக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

(iii) கொசு ஒழிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி, கொசுக்களின்மூலம் பரவும் நோய்களைத் தடுப்பதற்கு வாகனத்தில் எடுத்துச் செல்லும் 68 புகை பரப்பும் இயந்திரங்கள், கையினால் எடுத்துச் செல்லும் 240 புகை பரப்பும் இயந்திரங்கள் ஆகியவற்றினை கொண்டு புகைமருந்து அடிக்கப்பட்டு, முதிர் கொசுக்களைக் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 424 கைத் தெளிப்பான்கள், 300 பேட்டரியினால் இயங்கும் கைத் தெளிப்பான்கள், 8 சிறிய புகைபரப்பும் இயந்திரங்கள் மற்றும் 120 அதிவேக திறன் கொண்ட கைத்தெளிப்பான்களைக் கொண்டு மழைநீர் வடிகால்களிலும், திறந்தவெளி கால்வாய்களிலும், நீர் தேங்கி கொசுப்புழுக்கள் உள்ள இடங்களில் கொசுப்புழு கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு, கொசுப்புழுக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இப்பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சியானது 3,312 பணியாளர்களை ஈடுபடுத்தியுள்ளது. கொசுத் தொல்லை இல்லாத சென்னையை உருவாக்க, நீர்வழிகளில் தெளிப்பான்களை தெளிக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 6 ட்ரோன்களை வாங்கியுள்ளது.

(iv) இரவு காப்பகங்கள்

நகர்ப்புற வீடற்றோர்களுக்கு சிறப்பு பராமரிப்பு சேவைகள் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 இரவுக் காப்பகங்கள் நடத்தப்பட்டு அவை அரசு சாரா நிறுவனங்கள்மூலம் பாராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 38 வீடற்றோருக்கான காப்பகங்களும், 12 மருத்துவமனை உள்நோயாளிகளின் உடனிருப்பவர்கள் தங்கும் சிறப்பு காப்பகங்களும் அடங்கும்.

(v) விலங்குகள் நலன்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 நாய் இனக் கட்டுப்பாடு மையங்கள்மூலம் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, நாய்களுக்கு இனக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. மேலும் அவை புதுப்பிக்கப்பட்டு, 2 புதிய நாய் இனக் கட்டுப்பாடு மையங்கள் ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ், 16,531 தெரு நாய்களுக்கு இனக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையும், வெறிநாய்க்கடி நோய் ARV தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

செல்லப்பிராணிகளுக்கான மருத்துவமனைகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் நுங்கம்பாக்கம், திரு.வி.க.நகர், மீனம்பாக்கம் மற்றும் கண்ணம்மா பேட்டையில் இயங்கி வருகின்றன. இதன்மூலம் 2022-ம் ஆண்டில் 25,136 செல்லப்பிராணிகளுக்கு சிகிச்சை மற்றும் 1,565 செல்லப்பிராணிகளுக்கு உரிமம் (Licence) வழங்கப்பட்டுள்ளது.

சாலையோரத்தில் சுற்றித்திரியும் மாடுகளுக்கு காப்பகம், புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் செயல்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டில் 7,021 கால்நடைகள் பிடிக்கப்பட்டு ரூ.1.14 கோடி அபராதத்தொகை விதிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டு பிடிக்கப்பட்ட 1,823 கால்நடைகள் மற்றும் அபராதத்தொகை ரூ.27.64 இலட்சத்தைவிட அதிகம் ஆகும்.

3.3. வருவாய்

சென்னை மாநகர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் போதிய வசதிகளை உருவாக்குவதை கருத்திற்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி புதுமை மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள்மூலம் செயல் திறனை அதிகரித்து வருவாயினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆண்டு வரவு-செலவு ரூ.5,330 கோடி ஆகும். 2021-22 ஆம் நிதியாண்டின் வரவு-செலவு கணக்குகள் அட்டவணை-3.12-ல் பின்வருமாறு:

அட்டவணை – 3.12

வ.எண்	கணக்கு தலைப்பு	2021 – 2022 (ரூ. கோடியில்)
வருவாய் கணக்கு		
1	வரவு	2,984.62
	செலவு	3,246.04

பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பல்வேறு வருவாய் ஆதாரங்கள்/ வரவினங்கள் விவரம் படம்-1 மற்றும் பல்வேறு வருவாய் செலவினங்கள் விவரம் படம்-2-ல் உள்ளன.

2023 மார்ச் 30]



படம்.1 இனம் வாரியாக வருவாய் வரவினம்



படம்.2 இனம் வாரியாக வருவாய் செலவினம்

3.3.1 வருவாய் துறை

சொத்து வரி, தொழில் வரி, நிறுவன வரி, கேளிக்கை வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் வணிக வளாக வாடகைகளை வலிப்பது வருவாய்த் துறையின் பொறுப்பாகும். இனம் வாரியான கேட்பு அட்டவணை 3.13 இல் உள்ளன.

[2023 மார்ச் 30

அட்டவணை - 3.13

வ. எண்	இனம்	2023-24 நிதி ஆண்டு கேட்பு (தோராயமாக) (ரூ. கோடியில்)
1	சொத்து வரி	1500
2	தொழில் வரி	500
3	நிறுவன வரி	2
4	கேளிக்கை வரி	40
5	தொழில் உரிமக் கட்டணம்	20
6	வணிக வளாக வாடகை	20

3.3.2. தொழில்நுட்பம்மூலம் வசூல் மேம்படுத்துதல்

பொது சீராய்வின்மூலம் சொத்து வரி உயர்த்தப்பட்ட பின், புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்மூலம் வரி வசூல் திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, உலக வங்கி TNSUDP-ன் நிதி உதவியுடன் ரூ.6.44 கோடி மதிப்பீட்டில் "ட்ரோன்களை" பயன்படுத்தி புவிசார் தொழில்நுட்ப அடிப்படையில் வரைபடம் உருவாக்கும் திட்டம் (பகுதி-I) தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மார்ச் 2023-க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகளில் சொத்து வரி குறைவாக உள்ள மற்றும் சொத்து வரி மதிப்பிடப்படாத கட்டடங்களைக் கண்டறிந்து, அவற்றின்மூலம், சொத்து வரி வருவாயினை உயர்த்துவதும் ஒன்றாகும். மொத்தமுள்ள 200 வார்டுகளுக்கு களஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலையினை மேம்படுத்த, வரி மதிப்பு குறைவாக/வரி மதிப்பீடு செய்யப்படாத சொத்து வரி இனங்களைக் கண்டறிந்து, அவை அனைத்தையும் சொத்து வரி வரம்பிற்குள் கொண்டு வர அனைத்து விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

ட்ரோன்மூலம் கணக்கெடுப்பில் குறைவாக மதிப்பிடப்பட்டதாகக் கண்டறியப்பட்ட கிட்டத்தட்ட

2023 மார்ச் 30]

3 இலட்சம் சொத்துகளை மறுமதிப்பீடு செய்ய, தொழில்முறை நிறுவனங்களைப் பணியமர்த்த, பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தம் கோரியுள்ளது. மறுமதிப்பீடு ஓராண்டில் முடிக்கப்பட்டு, ஆண்டுக்கு சொத்து வரி கூடுதலாக ரூ.200 கோடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.3.3.பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி பொதுச் சீராய்வு அமல்படுத்தப்பட்ட பிறகு, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை ஒப்பீட்டளவில் மேம்பட்டுள்ளது. எனினும், கடந்த ஆண்டுகளில் பல அரசு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் ஒப்பந்தப்பட்டிகள் நிலுவையிலுள்ள நிலையில், அவற்றை வரும் ஆண்டுகளில் தீர்க்கப்பட வேண்டிய நிலை உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தற்போது ரூ.2,573.54 கோடி கடன் நிலுவையில் உள்ளது. ஒப்பந்ததாரர்களுக்கு ரூ.140 கோடிக்கான நிலுவைப் பட்டிகள் மற்றும் ரூ.728 கோடி பல அரசு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இது தவிர, 11 மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் செலவினங்களை மேற்கொண்டு வருகிறது. அதாவது, குப்பைக் கழிவுகளை சேகரித்து அதனை குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லும் (PPP) திட்டத்திற்காக, தனியார் ஒப்பந்த நிறுவனங்களுக்கு மாதந்தோறும் ரூ.53 கோடி பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மண்டலம் - 5, 6 & 9 (பகுதி)இல் கழிப்பறைகளைப் பராமரிக்கும் பணி பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் மேற்கொள்ளுதல் மற்றும் இதுபோன்ற திட்டங்களால் பெருநகர சென்னை மாநகராட்சிக்குக் கூடுதல் நிதிச் சுமை ஏற்பட்டாலும், இதுபோன்ற சேவைகள் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

3.4 கல்வி

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித் துறை, சென்னைப் பள்ளிகள்மூலம் மாணவ/ மாணவியர்களுக்கு வாழ்க்கைத் திறன்களைக் கொண்ட தரமான கல்வியை வழங்க பெருமளவில் முயற்சி எடுக்கிறது.

[2023 மார்ச் 30

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிருவாகத்தின்கீழ் உள்ள 281 பள்ளிகளில் 2,731 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதன் விவரம் கீழே அட்டவணை 3.14-ல் உள்ளவாறு, தற்பொழுது, வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 48 பள்ளிக் கல்வித் துறை, நாள் 1-3-2023-ன்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் உள்ள 139 பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது.

அட்டவணை – 3.14

பள்ளிகளின் வகைகள்	பள்ளிகளின் எண்ணிக்கை	தற்போதைய எண்ணிக்கை (1-4-2023)
மழலையர் வகுப்புகளை உள்ளடக்கிய தொடக்கப் பள்ளிகள்	119	209
மழலையர் வகுப்புகளை உள்ளடக்கிய நடுநிலைப் பள்ளிகள்	92	130
உயர்நிலைப் பள்ளிகள்	38	46
மேல்நிலைப் பள்ளிகள்	32	35
மொத்தம்	281	420

3.4.1 மாணவர்களின் சேர்க்கை மற்றும் வருகைப் பதிவு விவரம்

2022-2023 ஆம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் 1,32,975 மாணவ/ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். தற்போது பிப்ரவரி மாதம் 2023 தகவலின்படி மாணவ/மாணவியர்களின் சராசரி வருகைப் பதிவு சுமார் 90.32% ஆக உள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் மாணவ/மாணவியர்களின் வருகைப் பதிவு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

2023 மார்ச் 30]

அட்டவணை - 3.15

2021-22 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சராசரி வருகைப் பதிவு சதவீதம்				2022-23 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சராசரி வருகைப் பதிவு சதவீதம்			
நவம்பர் 2021	டிசம்பர் 2021	ஜனவரி 2022	பிப்ரவரி 2022	நவம்பர் 2022	டிசம்பர் 2022	ஜனவரி 2023	பிப்ரவரி 2023
62.58%	65.39%	27.55%	79.08%	87.49%	89.77%	88.59%	90.32%

3.4.2 சிறப்பு கவனம் செலுத்தும் பகுதிகளின் விவரங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி நிருவாகத்தால் நடத்தப்படும் வாராந்திர ஆய்வுக் கூட்டத்தால் மாணவ/ மாணவியர்களின் வருகை மற்றும் வாரத் தேர்வுகள் நடத்தப்படுவது, அவற்றின் முடிவுகள் ஆய்வு செய்யப்படுகின்றன. தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், ஒவ்வொரு வாரமும் குறைதீர் கற்பித்தல் வகுப்புகளில் அவர்களின் செயல்திறன் கண்காணிக்கப்படுகிறது.

காலை வழிபாட்டுக் கூட்டம் வாரந்தோறும், இரண்டு நாட்கள் ஆங்கிலத்தில் நடத்தப்படவேண்டும் என்றும் மற்றும் ஆங்கில பாட வகுப்பு நேரத்தில் ஆங்கிலத்தில் மட்டும் பேசுமாறும் வலியுறுத்தப்படுகிறது.

தற்போது அனைத்து பள்ளி மாணவர்களும் நூலகப் புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று திறம்படப் பயன்படுத்துகின்றனர். மாணவர்களை நூலகப் புத்தகங்களில் தாங்கள் படித்த கருத்துகளை வெளிப்படுத்தும் விதமாக வரையவோ, விரிவாகப் பேசவோ அல்லது எழுதவோ ஊக்குவிப்பதன்மூலம் நூலகப் புத்தகங்களின் பயன்பாடு சரிபார்க்கப்படுகிறது.

3.4.3 CITIIS நிதியின்கீழ் “மாதிரி மற்றும் சீர்மிகு சென்னை பள்ளிகள்”

CITIIS *(நகர முதலீடுகள் புதுமை, ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைத்திருத்தல்) முன்முயற்சி திட்டத்தின்கீழ் 18 வளாகங்களில் உள்ள 28 பள்ளிகளை “மாதிரி மற்றும் சீர்மிகு” பள்ளிகளாக மாற்றியமைக்க ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது.*

அதில் AFD (பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம்) ரூ.76.2 கோடியும், சீர்மிகு சென்னை நிறுவனம் ரூ.19.05 கோடியும் பங்களிக்க உள்ளது. இந்தத் திட்டம் கடின மற்றும் மென் உட்கட்டமைப்புகளை உள்ளடக்கியது.

சிறப்பு தலையீடுகள்

CITIIS திட்டத்தின்கீழ், சிறப்புத் திட்டங்களின் முயற்சியாக ஆசிரியர்களுக்கு மென்பொருள் திறன் பயிற்சி கூறுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் மாணவர்களின் முழு உடல் தகுதியின் அவசியத்தைக் கருத்தில்கொண்டு ரூ.40 இலட்சம் செலவில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கிரிக்கெட் மற்றும் கால்பந்து போன்ற விளையாட்டுகளில் சிறப்பு பயிற்சி வழங்கப்படுகிறது.

நிர்பயா நிதியின்கீழ் பாதுகாப்பு அம்சங்கள்:

நிர்பயா நிதியின் பாதுகாப்பான நகரம் திட்டத்தின்கீழ் அட்டவணை 3.16 இல் உள்ளவாறு பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

அட்டவணை – 3.16

வ. எண்	பொருள்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	159 பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள்	5.47
2	192 பள்ளிகளில் மாணவியர்களுக்கான பாதுகாப்பான கழிவறைகள் புதுப்பித்தல்	18.87
3	பாதுகாப்பான தற்காப்பு பயிற்சி	2.85
	GCC பள்ளிகளில் விளையாட்டுப் பயிற்சி மைதானங்களை மேம்படுத்துதல்	4.06
	159 சென்னை பள்ளிகளில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை	4.79
மொத்தம்		36.04

2023 மார்ச் 30]

உள்கட்டமைப்பு மேம்பாடு/புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு:

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.60 கோடி செலவில் அட்டவணை 3.17 இல் உள்ளவாறு உள்கட்டமைப்பு மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை - 3.17

வ. எண்	பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் 128 பள்ளிகளில் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 4,090 இரட்டை மேசைகள் வழங்குதல்.	4
2	சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் 23 பள்ளிகளில் புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு பணிகள்	56
	மொத்தம்	60

உண்டி உறைவிட மாதிரி பள்ளி

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில போட்டித் தேர்வுகளில் பங்குபெற்று வெற்றி பெறச் செய்ய ரூ.1.83 கோடி செலவில் சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கத்தில் உண்டி உறைவிட மாதிரி பள்ளி ஆகியவை தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

3.4.4 சமுதாய கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் (ITI)

மண்டலம்-9 இல் பெருநகர சென்னை மாநகராட்சியின்கீழ் இயங்கி வரும் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற (NCVT

[2023 மார்ச் 30

National Council of Vocational Training) தொழில் பயிற்சி நிலையத்தின்மூலம் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகளான பிளம்பர், பொருத்துநர், மெக்கானிக், எலக்டிரீசியன், மோட்டார் மெக்கானிக் மற்றும் கணினி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சி முடித்த மாணவர்களுக்கு தொழில் பயிற்சி நிலையத்தின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின்கீழ் நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, சுந்தரம் தெரு, புரசைவாக்கம் மற்றும் சி.வி. ராமன் தெரு, ஆழ்வார்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் சமுதாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இச்சமுதாயக் கல்லூரிகளின்மூலம் மென்பொருள் கணினி, சுகாதார உதவியாளர்கள், துணை மருத்துவப் படிப்புகள், அடுமனை மற்றும் இனிப்பு தயாரித்தல் மற்றும் சணல் பை உற்பத்தி செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

3.5 நமக்கு நாமே திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் “நமக்கு நாமே திட்டம்” பொதுச் சொத்துகளை மேம்படுத்தவும், நீர்நிலைகள், சாலைகள், வடிகால்கள், மயானங்கள், பூங்காக்கள், CCTV கேமரா, அழகுபடுத்தல், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்க செயல்படுத்தப்படுகிறது. நமக்கு நாமே திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சுமார் ரூ.49.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 411 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.48.30 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் பங்களிப்பாளர்களின் தொகை ரூ.25.87 கோடி ஆகும். அரசாங்கத்தின் தொகை ரூ.22.42 கோடி பங்களிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நமக்கு நாமே திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, 5 நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகளும், 78 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை மேம்படுத்தும் பணிகளும் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணிகளும், 127 சென்னை பள்ளிகளை மேம்படுத்தும் பணிகளும், 94 அழகுபடுத்தும் பணிகளும்,

2023 மார்ச் 30]

28 பொதுக் கழிப்பிடங்களை மேம்படுத்தும் பணிகளும் மற்றும் 6 மயான பூமி மற்றும் தகனமேடையினை மேம்படுத்தும் பணிகளும், 73 மையதடுப்புச் சுவர், மழைநீர் வடிகால் மேம்படுத்துதல், மருத்துவமனைகளை மேம்படுத்தும் பணி, மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் போன்ற பிற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

3.6 தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களைக் கொண்ட மண்டலம் - 4 (தண்டையார்பேட்டை) மற்றும் மண்டலம்-6 (திரு.வி.க. நகர்) ஆகிய இரண்டு மண்டலங்கள் இத்திட்டத்தின்கீழ் முன்மாதிரியாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ரூ.5 கோடி வீதம், மொத்தம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் கால்வாய் தூர்வாரும் பணிக்காக தினக்கூலியாக ரூ.382/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இரு மண்டலங்களிலும் சேர்ந்து இதுவரை 3 இலட்சம் வீடுகள் ஆய்வு செய்து 54,072 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி பணிக்குரிய தகுதியான பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 47,464 பயனாளிகளுக்கான வேலை அட்டை (Job Card) வழங்கப்பட்ட உள்ளது.

இதுவரை மண்டலம்-4 இல் (தண்டையார்பேட்டை) மற்றும் மண்டலம்-6 இல்(திரு.வி.க. நகர்) மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.7 திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (TNIUS) கோயம்புத்தூர்மூலம் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பில் உள்ளவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தினை ஆலோசகர்மூலம் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு TNUIFSLமூலம் பயிற்சி அளிக்கப்படும்.

3.8 சிங்கார சென்னை 2.0

தமிழ்நாடு அரசு 2021-22-ம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில் நவீன, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக “சிங்கார சென்னை 2.0” திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்காக 2021-22-ம் ஆண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2022-2023-ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அட்டவணை 3.18-ல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிகள் 2021-22-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

அட்டவணை 3.18 - கட்டம் - 1

வ. எண்	திட்டம்	அனுமதிக்கப்பட்டவை	
		எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
1	பேருந்து தட சாலைகள்	59	37.58
2	செயற்கை நீரூற்று	26	1.29
3	பூங்கா மேம்படுத்தும் பணி	28	24.43
4	விளையாட்டுத் திடல் மேம்படுத்தும் பணி	18	12.57
5	மாறும் வண்ண மின் விளக்குகள்	1	1.81
6	சாலை பெயர் பலகை	1	8.43
7	மயான பூமி	10	6.14

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டம்	அனுமதிக்கப்பட்டவை	
		எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
8	மழைநீர் வடிகால் (கட்டம்–I - 9, கட்டம்–II-10)	19	260.87
9	நீர் நிலைகள்	12	9.08
10	பள்ளிகள்	24	50.67
11	நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம்	2	0.81
12	மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை	1	0.14
13	பாலங்களின் கீழ்ப்பகுதியில் அழகுபடுத்தும் பணி	3	0.79
மொத்தம்		204	415.61

அட்டவணை 3.19 - கட்டம் - 2

வ. எண்	திட்டம்	அனுமதிக்கப்பட்டவை	
		எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
1	பேருந்து தட சாலைகள்	38	25.91
2	உட்புற சாலைகள்	414	29.69
3	பூங்கா	84	28.79
4	பூங்கா (Sponge Parks)	57	7.67
5	விளையாட்டுத் திடல்	51	16.33
6	மயான பூமி	28	23.86
7	மழைநீர் வடிகால்	2	103.88
8	பள்ளி மேசைகள்	1	4.15

வ. எண்	திட்டம்	அனுமதிக்கப்பட்டவை	
		எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
9	நாய்கள் இன கட்டுப்பாட்டு மையம்	3	19.72
10	மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை	1	0.99
11	பாலங்களின் கீழ்ப்பகுதியில் அழகுபடுத்தும் பணி	9	9.47
12	பள்ளிக் கட்டடங்கள்	16	56.32
13	விக்டோரியா பொதுக் கூடம்	1	32.62
மொத்தம்		**705**	**359.40**

3.9. வெள்ளத் தடுப்பு பணிகளுக்காக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சட்டமன்றத்தில் 21 ஜூன் 2021-ல் ஆளுநர் ஆற்றிய உரையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு முனைவர் திருப்புகழ் (IAS., Retd), தேசிய பேரிடர் மேலாண்மையின் முன்னாள் கூடுதல் செயலர்/ஆலோசகர் தலைமையில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. சென்னை பெருநகரில் வெள்ள அபாயத்தை தடுக்க ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இக்குழு தனது இறுதி அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 14.03.2023 அன்று வழங்கியது.

2021 வடகிழக்குப் பருவமழையின்போது சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான இடங்கள் மழைநீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இக்குழு கடந்த வடகிழக்குப் பருவமழை 2021 மற்றும் 2005, 2015 ஆண்டுகளில் மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று அப்பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் அதிகாரிகளுடன்

2023 மார்ச் 30]

கலந்துரையாடி குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை உள்ளடக்கிய பரிந்துரைகளை வழங்கியது.

இப்பரிந்துரையின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பு பெருமளவு தவிர்க்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத் துறை, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானத் துறை மற்றும் இந்திய இரயில்வே துறைகளுடன் ஒருங்கிணைந்து சென்னை மாநகரில் வெள்ளத் தடுப்பிற்கான உட்கட்டமைப்பை மேம்படுத்த செயல்பட்டது. இதனால் கடந்த 2022-23 பருவமழையின்போது பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்குவது தவிர்க்கப்பட்டது. மேலும், மாண்டோஸ் புயலின்போதும் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால் பாதிப்பு ஏற்படாததால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இக்குழு சமர்ப்பித்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை செயல்படுத்த உள்ளது.

4. பேரூராட்சிகளின் இயக்குநரகம்

பேரூராட்சிப் பகுதிகள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறம் நோக்கி மாற்றமடைந்து வருகின்றன. இந்த சிறிய, மற்றும் நடுத்தர நகரங்களில் பொருள்களின் உற்பத்திக்கான விலையும், வாழ்வதற்கான செலவும் குறைவாக இருப்பதால், பொருள்களுக்கான உற்பத்தியில் போட்டியினை உருவாக்கி, வளர்ச்சிக்கான பாதையில் பேரூராட்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மேலும், இந்நகரங்கள் கிராமப் பொருளாதாரத்தின் பன்முகத்தன்மையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராமப்புற வளர்ச்சிக்கான செயலில், கிராமங்களுக்கான சந்தை வாய்ப்புகளையும், சேவைகளையும் பேரூராட்சிகள் வழங்குவதோடு, கிராமங்களையும் பெருநகரங்களையும் இணைக்கும் இணைப்புப் பாலமாகவும் இந்நகரங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர மக்கள் தொகையில், சுமார் 19.8 சதவீதம் கொண்டுள்ள மக்கள் பேரூராட்சிப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவை, மொத்தமுள்ள நகர்ப்புர பகுதிகளில் 59

[2023 மார்ச் 30

சதவீதமாகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பேரூராட்சிகளில் 69,24,178 மக்கள் வசிக்கின்றனர். மேலும் சந்தைபடுத்துதல், சுகாதாரம், கல்வி, பொழுதுபோக்கு போன்ற சேவைகளைப் பயன்படுத்திட தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட சதவீத கிராமப்புற மக்கள் பேரூராட்சிகளுக்கு வந்து செல்கின்றனர்.

கிராமங்களுக்கு சந்தைக்கான வாய்ப்புகளையும், பெருநகரங்களுக்கு தேவையான மனித வளங்களையும் பேரூராட்சிகள் வழங்குவதால், இப்பகுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது அவசியமானதாகும். எனவே, ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் பிராந்திய வேறுபாடுகளைக் குறைப்பதிலும், பெரிய நகரங்களுக்கு மக்கள் இடம்பெயர்வதைத் தடுக்கவும் பேரூராட்சிகள் முக்கியப் பங்காற்றுவதால் இப்பகுதிகளுக்கான அடிப்படை வசதிகளையும், குடிமை உட்கட்டமைப்புகளையும் வழங்கி இப்பகுதிகளை மேம்படுத்திட அரசு உறுதிபூண்டுள்ளது.

4.1 நிருவாகம்

மாநிலத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளையும், பேரூராட்சிகள் இயக்ககம் நிருவகித்து வருகிறது. நிருவாகத்தின் வசதிக்காக, மாநிலம் முழுவதும் 17 மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு பேரூராட்சியின் உதவி இயக்குநர் தலைமையின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முழு கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறது. பேரூராட்சிகள் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 3-AA-ன்கீழ் கொண்டு வரப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன. பேரூராட்சிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், 4 நிலைகளாக கீழ்க்காணும் அட்டவணை 4.1-ல் கண்டுள்ளவாறு தரம் பிரிக்கப்பட்டுள்ளன:-

அட்டவணை 4.1

வகைப்பாடு	ஆண்டு வருமானம்	எண்ணிக்கை
சிறப்பு நிலை	ரூ.200 இலட்சத்திற்கு மேல்	47
தேர்வு நிலை	ரூ.100 இலட்சத்திற்கு மேல் ரூ.200 இலட்சம் வரை	187

2023 மார்ச் 30]

முதல் நிலை	ரூ.50 இலட்சத்திற்கு மேல் ரூ.100 இலட்சம் வரை	194
இரண்டாம் நிலை	ரூ.50 இலட்சத்திற்கு கீழ்	62
	மொத்தம்	490

4.2 பேரூராட்சிகளின் செயல்பாடுகள்:

குடிநீர் வழங்கல், சாலை அமைத்தல், தெருவிளக்கு அமைத்தல் மற்றும் பல்வேறு பணிகளான சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, சமுதாயக் கூடம் போன்ற இதர சொத்துகளை பராமரித்தல் மற்றும் கட்டட உரிமங்கள் வழங்குதல் ஆகிய அடிப்படை பணிகளை குடிமக்களுக்கு வழங்குவது பேரூராட்சிகளின் பொறுப்பாகும்.

4.2.1 வருவாய் ஆதாரங்கள்

பேரூராட்சிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட வருவாய் இனங்களான முத்திரைத்தாள் மிகுவரி, மாநில பகிர்வு நிதி, வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகிய பல்வேறு ஆதாரங்களின் மூலமாக வருவாய் பெறுகின்றன. மேலும் 15-வது நிதி ஆணையத்தில் இருந்து வருவாய் பெறப்படுகிறது.

4.2.2 குடிநீர் வழங்கல்

குடிநீர் வழங்கும் அமைப்புகளை (Water Supply Systems) புதுப்பித்தல் மற்றும் அதிகரித்தல் தவிர, குடிமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும் மற்றும் குடியிருப்புகளுக்கான குடிநீர் இணைப்புகளை வழங்குவதற்கும் அரசு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அனைத்து பேரூராட்சிகளும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் (எல்பிசிடி) பொதுமக்களுக்கு வழங்குகின்றன. அதே சமயத்தில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் பேரூராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மொத்தமுள்ள 490 பேரூராட்சிகளில், 102 பேரூராட்சிகள் தனி குடிநீர்த் திட்டத்தின் மூலமும், 373 பேரூராட்சிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களாலும் குடிநீர் வழங்கப்படுகின்றன. மீதமுள்ள பேரூராட்சிகளுக்கு உள்ளூர் நீர் ஆதாரங்கள்மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றன. அனைத்து குடியிருப்புகளுக்கும்

[2023 மார்ச் 30

செயல்படத்தக்க குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதன்மூலம், அனைத்து பகுதிகளுக்கும் முழுமையான முறையில் குடிநீர் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. நீரின் வட்ட பொருளாதாரம்மூலம் பயன்தருகிற வகையில் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், நீர்நிலைகள் மற்றும் கிணறுகளைப் புனரமைத்தல், உபயோகப்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி/மறுபயன்பாடு செய்தல், மழைநீரை சேகரித்தல் ஆகியவை சமுதாயப் பங்களிப்புடன் சாத்தியமாக்கப்படும்.

மறுசுழற்சி செய்யப்பட்ட நீர்மூலம் 20% தண்ணீர் தேவையைப் பெறுதல், வருவாய் இல்லாத தண்ணீரை 20%-க்கும் குறைவாக குறைத்தல் மற்றும் நீர்நிலைகளைப் புனரமைப்பு செய்தல் ஆகியவை பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் முக்கிய நீர் தொடர்பான சீர்திருத்தங்கள் ஆகும்.

பேரூராட்சிகளில் இதுவரை, ரூ.1,622.86 கோடி மதிப்பீட்டில் 99 குடிநீர் வழங்கல் திட்டங்களும், ரூ.77.27 கோடி மதிப்பீட்டில் 116 நீர்நிலைகள் புனரமைப்புப் பணிகளும் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்கள் முடிவுற்ற பின்னர், வீட்டு குடிநீர் இணைப்புகள் கணிசமாக உயரும்.

4.2.3 சாலைகள்

ஒரு பகுதியின் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும், வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதற்கும் நல்ல தரமான சாலைகள் அவசியமாகும். பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் தரத்தினை உயர்த்துவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 490 பேரூராட்சிகள் மொத்தம் 20,306 கி.மீ. நீளம் கொண்ட பல்வேறு வகையான சாலைகளை பராமரிக்கின்றன.

தற்போதுள்ள 2,977 கி.மீ. நீளமுள்ள மண் மற்றும் கிராவல் சாலைகள், தார், சிமெண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக தரம் உயர்த்தப்படும். 2021-22 ஆம் ஆண்டில், 994.41 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.650.04 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் தரம் உயர்த்தப்பட்டன. மேலும், 2022-23 ஆம் ஆண்டில் ரூ.506.17 கோடி மதிப்பீட்டில் 655.616 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் மேம்பாடு/ தரம் உயர்த்தப்படும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகள் எதிர்வரும் வருடங்களில் தரம் உயர்த்தப்படும்.

2023 மார்ச் 30]

4.2.4 தெரு விளக்குகள்

தெருவிளக்குகள் பராமரிப்பு என்பது பேரூராட்சியின் முதன்மை கடமையாகும். 2,251 உயர் கோபுர மின் விளக்குகள், 830 மெர்குரி ஆவி விளக்குகள், 16,513 சோடியம் ஆவி விளக்குகள், 1,93,584 குழல் விளக்குகள், 88,796 அடர்மின் விளக்குகள், 84,923 ஆற்றல் மிகு மின் விளக்குகள் மற்றும் 3,063 சூரிய சக்தி மின் விளக்குகள், ஆக மொத்தம் 3,89,960 தெருவிளக்குகள் பேரூராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பேரூராட்சிகளில் ஏறக்குறைய 2.67 இலட்சம் பாரம்பரிய விளக்குகள் ரூ.155.56 கோடி மதிப்பீட்டில் ஆற்றல்மிகு மின் விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டு வருவதன்மூலம், பேரூராட்சிகளில் ஒளிவூட்டலை முன்னேற்றுவதுடன் மின் பயன்பாட்டினை குறைப்பதோடு மட்டுமல்லாமல், மின் கட்டணம் குறைவதற்கு உதவுகின்றது.

4.2.5 பேருந்து நிலையங்கள்

பேருந்து நிலையங்கள் பேரூராட்சியின் இதயம் போன்றதாகும். 490 பேரூராட்சிகளில், 203 பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் மற்றும் 33 பேருந்து பணிமனைகள் உள்ளன. பேரூராட்சிகளில் 2021-22 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10 பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ரூ.44.69 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 15 பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ரூ.16.61 கோடி மதிப்பீட்டில் அட்டவணை 4.2-ல் கண்டுள்ளவாறு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேற்படி பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளதுடன் 2023-24 ஆம் ஆண்டில் முடிவுபெறும்.

அட்டவணை-4.2

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	பேரூராட்சியின் பெயர்	ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
(1)	(2)	(3)	(4)
1	தூத்துக்குடி	சாயர்புரம்	1.67
2	கன்னியாகுமரி	திருவட்டாறு	2.55
3	செங்கல்பட்டு	திருக்கழுக்குன்றம்	0.20
4	தருமபுரி	பாலக்கோடு	0.83
5	தருமபுரி	அரூர்	3.62
6	கிருஷ்ணகிரி	ஊத்தங்கரை	1.84
7	நாமக்கல்	மல்லசமுத்திரம்	0.89
8	கடலூர்	காட்டுமன்னார் கோவில்	0.50
9	புதுக்கோட்டை	கீரமங்கலம்	1.02
10	புதுக்கோட்டை	கீரனூர்	0.87
11	புதுக்கோட்டை	கறம்பக்குடி	0.74
12	மதுரை	பேரையூர்	0.50
13	தூத்துக்குடி	வி.புதூர்	0.40
14	தூத்துக்குடி	கயத்தாறு	0.42
15	தூத்துக்குடி	ஆத்தூர்	0.56

4.2.6 சந்தைகள்

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பொருட்களை வாங்கவும், விற்பனை செய்யவும் மையமாக விளங்கும் வாரச் சந்தைகள் அப்பகுதிகளின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 2021-22 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 15 புதிய சந்தைகள் மற்றும் ஏற்கெனவே உள்ள சந்தைகளின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.51.84 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2022-23 ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் ரூ.31.72 கோடி மதிப்பீட்டில் 16 சந்தை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

4.3 சுகாதாரம்

குடிமக்களுக்கு தரமான சுகாதாரத்தை உறுதி செய்தல், பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்களை நல்ல மற்றும் தூய்மையான நிலையில் பராமரித்தல் ஆகியவை பேரூராட்சிகளின் முதன்மையான கடமைகளாகும். இதை நிறைவேற்றவும், அனைத்து பேரூராட்சிகளிலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை நிலைநிறுத்தவும், தேவையின் அடிப்படையில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைக்கப்படும். கடந்த 2 ஆண்டுகளில் 41,858 தனி நபர் இல்லக் கழிப்பறைகள் ரூ.125.58 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும், ஏப்ரல்-மே 2023-க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தூய்மை இந்தியா இயக்கம் 2.0 இன்கீழ் அனைத்து பேரூராட்சிகளுக்கும் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுடன் நகரத் தூய்மை செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நகரத் தூய்மை செயல் திட்டத்தின் அடிப்படையில் இடைவெளி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சமுதாயக் கழிப்பிடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் அனுமதிக்கப்படுகிறது. இதுவரை 190 சமுதாயக் கழிப்பிடங்கள், 50 பொது கழிப்பிடங்கள் மற்றும் 113 சிறுநீர் கழிப்பிடங்கள் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இவை அனைத்தும் 2023-24-ம் ஆண்டில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

15-வது நிதி ஆணைய மானியத்தின்கீழ் பழுதடைந்த சமுதாயக் கழிப்பிடங்களைப் புதுப்பிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 204 பழுதடைந்த கழிப்பிடங்கள் புதுப்பிக்கும் பணிகள் 160 பேரூராட்சிகளில் ரூ.9.27 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜூன் 2023-க்குள் முடிக்கப்படும். சமுதாய/பொது கழிப்பிடங்களைப் பராமரிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. பொது மக்களிடமிருந்து கருத்துகளைப் பெற்று, அதன்படி திறம்பட கையாள அனைத்து சமுதாய/பொது கழிப்பிடங்களிலும் QR குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

4.3.1 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி, பேரூராட்சிகள் திடக்கழிவுகளை முறையாகக் கையாளுவதன்மூலம் சுற்றுச்சூழல் செம்மைப்படுத்தப்படுவதோடு மனித ஆரோக்கியம்

பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்கின்றன. 490 பேரூராட்சிகளிலும் நாளொன்றுக்கு தோராயமாக 1,840 மெட்ரிக் டன் கழிவுகள் உருவாகின்றன. அதில், 50% அளவிற்கு ஈரக்கழிவுகளாகவும் (மக்கும் கழிவுகள்) மீதமுள்ளவை, உலர் கழிவுகளாகவும் (மக்காத கழிவுகள் மற்றும் மண் கழிவுகள்) உள்ளது. ஈரக்கழிவுகள் வளமீட்புப் பூங்காக்களில் பதப்படுத்தப்பட்டு, உரமாக மாற்றப்படுகின்றன மற்றும் உலர்கழிவுகள் வளமீட்பு மையங்களில் மேலும் தரம் பிரிக்கப்பட்டு, இணை செயலாக்கத்திற்காக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

தற்போது, 490 பேரூராட்சிகளில் 489 வளமீட்பு மையங்களுடன் கூடிய 489 வளமீட்புப் பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது பேரூராட்சிகளில், 96% வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இடைவெளியை ஈடு செய்ய, வீடுகளிலேயே உரம் தயாரிக்கும் பணிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. மறுசுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகள் விற்பனையாளர்களுக்கு விற்கப்படுகின்றன, மேலும் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு இணை செயலாக்கத்திற்காக அனுப்பப்படுகின்றன.

சுமார் 13,808 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குப்பைகளை சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல் ஆகிய இரண்டு பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர் மற்றும் 6,845 தூய்மைப் பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மையை பேரூராட்சிகளில் திறம்பட செயல்படுத்துவதற்காக தெருக்களை சுத்தம் செய்தல்/திடக்கழிவுகளை சேகரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2022-23 ஆம் ஆண்டில், 354 பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு 642 டன் ஈரக் கழிவுகளைக் கையாளுவதற்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.73.83 கோடியும், 313 பேரூராட்சிகளில் நாள் ஒன்றுக்கு 445 டன் உலர் கழிவுகளைக் கையாளுவதற்கு ரூ.22.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீடுகளிலேயே உரம் தயாரித்தல்

பேரூராட்சிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் கழிவுகளை தாங்களாகவே கையாளவும், மேலாண்மை செய்யவும், தங்களுடைய சொந்த வீட்டு வளாகத்திலேயே உரம் தயாரிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். தற்போது, சுமார் 52,500 குடியிருப்பாளர்கள் வீடுகளிலேயே உரம் தயாரிக்கும்

2023 மார்ச் 30]

பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வீடுகளிலேயே உரம் தயாரிக்கும் பணிகளை விரிவுபடுத்தும் வகையில் பேரூராட்சிகளில் சுயஉதவிக் குழுக்கள்மூலம் பல்வேறு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வீடுகளில் உருவாக்கப்படும் உரங்களை திறம்பட பயன்படுத்தும் நோக்கில், தோட்டக்கலையினை குறிப்பாக மாடித்தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இயற்கை / மண்புழு உரம் தயாரித்தல்

தற்போது, 490 பேரூராட்சிகளில் மக்கும் கழிவுகள் இயற்கை மற்றும் பரவலாக்கப்பட்ட முறையில் தீர்வு செய்யப்பட்டு, உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் 110 மெட்ரிக் டன் இயற்கை உரம் பேரூராட்சிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. 249 பேரூராட்சிகளில் மண்புழு உரம் தயாரித்தல் பணி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது மற்றும் தினசரி 17 மெட்ரிக் டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் விற்பனை செய்வதன்மூலம் பேரூராட்சிகளுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.40.00 இலட்சம் வருவாய் கிடைக்கிறது.

4.3.2 பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை

சில பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கசடுகழிவு மேலாண்மை நிலையங்கள் உள்ளன. இருப்பினும், பெரும்பான்மையான பேரூராட்சிகளில் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை வசதிகள் இல்லை. தூய்மை இந்தியா இயக்கம் 2.0-ல் தொகுப்பு முறையில் பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன்கூடிய கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கசடுகழிவு மற்றும் திரவக் கழிவுகளை தொகுப்பு முறையில் மேலாண்மை செய்ய பயிற்சி அளிப்பதுடன், ஊக்குவிக்கப்பட வேண்டும். எங்கெங்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளதோ, அங்கெல்லாம் மறு சீரமைப்பு பணிகள்மூலம் திட, திரவ கழிவுகளை பிரிக்கும் கட்டமைப்புகளை உருவாக்கி கழிவு நீருடன் கசடுகழிவுகள் இணை சுத்திகரிப்பு பணிகள்மூலம் அகற்றப்பட வேண்டும். இதன்மூலம் சுத்திகரிக்கப்படாத கசடு கழிவு மற்றும் கழிவு நீர், நீர்நிலைகளில் கலக்கா வண்ணம் தடுப்பதுடன் பாதுகாப்பான முறையில் சேகரிக்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு சென்று, சுத்திகரிக்கப்பட்டு அதிகபட்ச மறு பயன்பாடு

கொண்ட சுத்திகரிக்கப்பட்ட நீராக உபயோகப்படுத்திட அனைத்து பேரூராட்சிகளிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக, 165 பேரூராட்சிகளில் முதற்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.3.2.1 பாதாள சாக்கடைத் திட்டம்

12 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றுள் ஒரத்தநாடு, வல்லம், மாமல்லபுரம், எஸ்.கண்ணனூர், வேளாங்கண்ணி, பெருந்துறை, பழனிசெட்டிபட்டி, திருமழிசை, மண்ணச்சநல்லூர் மற்றும் மேலச்சொக்கநாதபுரம் ஆகிய 10 பேரூராட்சிகளில் பணி முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீபெரும்புதூர் மற்றும் திருப்போரூர் ஆகிய 2 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளதுடன் 2023-24-ம் ஆண்டில் முடிக்கப்படும்.

4.3.2.2 கசடுகழிவு மேலாண்மைத் திட்டம்

10 பேரூராட்சிகளில் கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 5 திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன. கருங்குழி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிகள் கசடுகழிவு மேலாண்மைத் திட்டத்தில் மாதிரி பேரூராட்சிகளாக திகழ்கிறது. மேலும் இப்பேரூராட்சிகள் மற்ற நகரங்களுக்கும் பயிற்சி களமாக விளங்குகின்றன. ஆலங்காயம், செங்கம் மற்றும் முதுகுளத்தூர் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 5 பணிகள், ஜலகண்டாபுரம், காவேரிபட்டினம், குரும்பலூர், பெண்ணாடம் மற்றும் பெண்ணாகரம் ஆகிய பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

2022-23 ஆம் ஆண்டிற்கு அய்யலூர், நிலக்கோட்டை, பாலக்கோடு, சோழவந்தான், திருக்கழுக்குன்றம், வி.புதூர், வேடசந்தூர், பேராவூரணி, திசையன்விளை மற்றும் ஆயக்குடி ஆகிய 10 பேரூராட்சிகளில் கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.மேலும்,மேற்படி பேரூராட்சிகளுக்கு 10 கி.மீ. அருகாமையிலுள்ள 6 பேரூராட்சிகளான வடமதுரை, சேவுகம்பட்டி, வத்தலக்குண்டு, அகரம், சாம்பவார்வடகரை மற்றும் சுந்தரபாண்டியபுரம் ஆகிய பேரூராட்சிகளும் இத்திட்டத்தின்மூலம் பயனடைவதோடு, இத்திட்டம் பேரூராட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

2023 மார்ச் 30]

4.3.3 நவீன எரிவாயு தகனமேடை

தற்போது பெரும்பாலான பேரூராட்சிகளில் மரக்கட்டைகளை எரியூட்டி தகனம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பேரூராட்சியிலும் நவீன மற்றும் முழு திறனுடன்கூடிய நவீன எரிவாயு தகன மேடைகளை அமைப்பது அரசின் பெருமுயற்சியாக உள்ளது. அதன்படி, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் மயானங்களை எரிவாயு தகன மேடைகளாக மாற்றும் முயற்சி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பேரூராட்சிகளில் 22 நவீன எரிவாயு தகன மேடைகள் பயன்பாட்டில் உள்ளன. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.31.50 கோடி மதிப்பீட்டில் 23 நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில், மேலும் 47 எரிவாயு தகன மேடைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த எரிவாயு தகன மேடைகளைப் பராமரிக்க பொதுநல சங்கங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் கண்டறியப்பட்டு, பேரூராட்சிகள் இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. முறையான பராமரிப்பிற்கான துணை விதிகளும் பேரூராட்சிகள் இயக்ககத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பேரூராட்சிகளிலும் தேவையின் அடிப்படையில் இப்பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

4.4 சுற்றுச்சூழல் மேம்பாடு

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் பசுமை நகரமயமாக்கலுக்கு அரசு உந்துதல் அளித்து வருகிறது. பேரூராட்சிப் பகுதிகளில், 2022-23-ம் ஆண்டில் சுமார் ரூ.2.40 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

4.4.1 நீர்நிலைகளைப் புனரமைத்தல்

490 பேரூராட்சிகளில் 2,212 நீர்நிலைகள் உள்ளன. இவற்றில் 1,182 நீர்நிலைகள் ஏற்கெனவே புனரமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியான நீர்நிலைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பேரூராட்சிகளில் தற்போது 565 நீர்நிலைகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் அட்டவணை 4.3-ல் கண்டுள்ளபடி புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் 317 நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 248 நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

அட்டவணை 4.3

(ரூ.கோடியில்)

வ. எண்.	வருடம்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு தொகை
1	2021-22	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்	11	14.87
2		நமக்கு நாமே திட்டம்	6	0.37
3		15-வது நிதிக் குழு மானியம்	302	38.56
4		தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்	124	20.53
5		மூலதன மானிய திட்டம்	5	17.05
6	2022-23	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் + அம்ருத் 2.0	115	76.82
7		கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்	2	2.33
மொத்தம்			**565**	**170.53**

மீதமுள்ள 465 நீர்நிலைகள் உரிய காலத்திற்குள் படிப்படியாக புனரமைப்பு செய்யப்படும்.

4.4.2 மழை நீர் சேகரிப்பு

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகள், 1920 மற்றும் கட்டட விதிகளின்கீழ் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி, ஒவ்வொரு கட்டடத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது, தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டத்தை செறிவூட்டுவதில் மிகப் பெரிய தாக்கத்தை

2023 மார்ச் 30]

ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே பொது மற்றும் தனியார் கட்டடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

4.4.3 பூங்காக்கள்

பேரூராட்சிகளில் ஏற்கெனவே உள்ள 536 பூங்காக்களுடன் 160 பூங்காக்கள் 2022-23-ம் ஆண்டில் ரூ.40.21 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

4.5 செயலாக்கத்திலுள்ள மத்திய அரசு திட்டங்கள்

4.5.1 தூய்மை இந்தியா திட்டம் 2.0

தூய்மை இந்தியா இயக்கம் - 2.0, 2021-22 ஆம் ஆண்டின் கீழ், மொத்தம் 7,295 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 847 இருக்கைகள் கொண்ட 100 சமுதாயக் கழிப்பிடங்கள் மற்றும் 450 இருக்கைகள் கொண்ட 75 சிறுநீர் கழிப்பிடங்கள் ரூ.36.04 கோடியில் அனுமதிக்கப்பட்டது. அவற்றில் 4,127 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 34 சமுதாயக் கழிப்பிடங்கள் மற்றும் 69 சிறுநீர் கழிப்பிடங்கள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், மொத்தம் 34,563 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 90 சமுதாயக் கழிப்பிடங்கள், 50 பொது கழிப்பிடங்கள் மற்றும் 125 சிறுநீர் கழிப்பிடங்கள் ரூ.125.97 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அவற்றில், 7,183 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 8 சமூகக் கழிப்பிடங்கள், 2 பொதுக் கழிப்பிடங்கள், 44 சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், 2021-22 ஆம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைக்காக கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,909 மின்கல வாகனங்கள் மற்றும் 98 இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.49.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் 965 மின்கல வாகனங்கள் மற்றும் 13 இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்பாட்டுக்கு

கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள வாகனங்கள் விரைவில் கொள்முதல் செய்யப்படும்.

உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல்

உயிரி அகழ்வு செயல்முறைமூலம் மரபுக் கழிவுகளால் நிரப்பப்பட்ட குப்பைக் கிடங்குகள் மறுசீரமைக்கப்படுகின்றன. 131 பேரூராட்சிகளில் 149 பழைய மற்றும் கைவிடப்பட்ட குப்பை கிடங்குகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 257 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 11.4 இலட்சம் கனமீட்டர் மரபுக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. மரபுக் கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் பதப்படுத்தி தீர்வு செய்ய ரூ.70.23 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. கிண்டி வளாகத்திலுள்ள அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வு மையம், உயிரி அகழ்வு பணிகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலுக்கான மூன்றாம் தரப்பு ஆய்வு முகமையாக ஈடுபட்டுள்ளது.

4.5.2 பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புரம்) அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் (பயனாளர்கள் தாமாக வீடுகளைக் கட்டுதல்)

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புரம்) திட்டத்தின்கீழ் பயனாளர்கள் தாமாகவே வீடு கட்டும் திட்டம் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளருக்கும் வழங்கப்படும் தலா ரூ.2.10 இலட்சம் மானியத்தில், மத்திய அரசால் ரூ.1.50 இலட்சமும், மாநில அரசால் ரூ.0.60 இலட்சமும் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் செலவினம் ஏதுமிருப்பின் பயனாளர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் நாளது வரை 89,141 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, 60,853 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 28,288 வீடுகள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் டிசம்பர் 2023-க்குள் கட்டி முடிக்கப்படும்.

4.5.3 தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டம்

மொத்தமுள்ள 7 உட்கூறுகளில், வீடற்ற நகர்ப்புர ஏழைகள் தங்குமிடம் (SUH) மற்றும் சாலையோர வியாபாரிகளுக்கான உதவிகள் (SUSV) ஆகிய இரண்டு உட்கூறுகள் மட்டுமே பேரூராட்சிகள் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 30]

i) வீடற்ற நகர்ப்புர ஏழைகள் தங்குமிடம் (SUH)

இத்திட்டத்தின்கீழ், 38 தங்குமிடங்கள், அதாவது நகர்ப்புர வீடற்றவர்களுக்கான 3 சாதாரண தங்குமிடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுடன் வரும் உதவியாளர்கள் தங்கிட ஏதுவாக 35 சிறப்பு தங்குமிடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 35 தங்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. (சிறப்பு தங்குமிடங்கள் - 2 – கருமாண்டிசெல்லிபாளையம் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சிகள் மற்றும் சாதாரண தங்குமிடம் - 1 – அவிநாசி பேரூராட்சி).

ii) சாலையோர வியாபாரிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல்

வேளாங்கண்ணி பேரூராட்சியில் சாலையோர வியாபாரிகளுக்கு 228 எண்ணிக்கையிலான தள்ளுவண்டிகளுக்கு ரூ.188.34 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனைத்து தள்ளுவண்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டு சாலையோர வியாபார பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சாலையோர வியாபாரிகள் குறித்த புதிய கணக்கெடுப்புப் பணிகள் நடத்தப்பட்டு வருகிறது. கணக்கெடுப்புப் பணிகள் முடிக்கப்பெற்றவுடன் அடையாளம் காணப்பட்ட சாலையோர வியாபாரிகள் தங்களது வியாபாரத்தினை தங்குதடையின்றி மேற்கொள்ள ஏதுவாக அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

பேரூராட்சிகளில் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு, அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வியாபாரிகள் குழு அமைக்கும் பணிகளுக்கு ரூ.2.57 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) பிரதம மந்திரி சாலையோர வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிவாரண நிதி PM-SVANidhi

இத்திட்டத்தின்கீழ், பேரூராட்சிப் பகுதிகளின் சாலையோர வியாபாரிகளுக்கு வட்டிக்கான மானியத்துடன் ரூ.10,000/- கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு இலக்கீடாக 65,000 நிர்ணயம் செய்யப்பட்டதில், சாலையோர வியாபாரிகளிடம் இருந்து 68,358 கடனுக்கான விண்ணப்பங்கள் PMSVANidhi *இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. அவற்றில்,*

[2023 மார்ச் 30

37,882 கடன் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, 32,130 விண்ணப்பங்களுக்கு கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான கடனுதவிகள் வழங்கும் பொருட்டு, பயனாளர்கள் மற்றும் வங்கியாளர்களுடனான கூட்டங்கள் மண்டல அளவில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

4.6 மாநில அரசின் திட்டங்கள்

4.6.1 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், பேருந்து நிலையங்கள், நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள், தகன மேடைகள், அங்காடிகள், சந்தைகள் அமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. 2021-22-ம் ஆண்டில் மொத்தம் 800 பணிகள் ரூ.473.42 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 700 பணிகள் முடிவுற்றும், 100 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும் உள்ளன.

அதேபோன்று, 2022-23-ம் ஆண்டில் ரூ.466.19 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 291 பணிகள், அதாவது 15 சந்தைகள், 11 பேருந்து நிலையங்கள், 37 எரிவாயு தகனமேடைகள், 2 நீர்நிலைகளைப் புனரமைத்தல், 1 பூங்கா மேம்பாட்டுப் பணி, 1 சமுதாயக் கூடம் மற்றும் 223 சாலைப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

எதிர்வரும் ஆண்டுகளில் அதிகளவில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

4.6.2 நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 2021-22-ம் ஆண்டில் அரசு பங்களிப்பு ரூ.37.25 கோடி மற்றும் பொது மக்கள் பங்களிப்பு ரூ.20.03 கோடி என மொத்தம் ரூ.57.28 கோடி மதிப்பீட்டில் 522 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில், 317 பணிகள் முடிக்கப்பட்டு, 205 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2023 மார்ச் 30]

4.6.3 தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசின் ஒரு முன்னெடுப்பு முயற்சியாக, தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் என்ற திட்டம் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் பொது சொத்துகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின்மூலம் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். இத்திட்டம் பரிசோதனை அடிப்படையில் மாவட்டத்திற்கு ஒரு பேரூராட்சி வீதம் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த பணி நாட்களில் 50 சதவீதம் மகளிருக்கு பணி வழங்குவதையும், ஒரே விதமான பணிகளுக்கு மகளிருக்கும் சமமான ஊதியம் வழங்குவதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 192 பணிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.16.08 கோடி செலவினம் மேற்கொண்டு, நாளது வரை 5,72,037 பணி நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4.6.4 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி - (NABARD)

நபார்டு வங்கி, பேரூராட்சிகளில் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்க நிதியுதவி அளித்து வருகிறது. 2021-22 நிதியாண்டில், 147 பேரூராட்சிகளில் ரூ.181.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 292.66 கி.மீ. நீளத்திற்கு 192 சாலைப் பணிகள் மற்றும் ரூ.19.40 கோடி மதிப்பீட்டில் 7 பேரூராட்சிகளில் 11 பாலம் கட்டுதல் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 153 சாலைப் பணிகள் மற்றும் 2 பாலங்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 39 சாலைப் பணிகள் மற்றும் 9 பாலம் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2022-23 ஆம் ஆண்டில் 150 பேரூராட்சிகளில் ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் 159 சாலைப் பணிகள் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முன்னேற்றத்திலுள்ள இப்பணிகள் அனைத்தும் 2023 செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

4.6.5 மூலதன மானிய நிதித் திட்டம் (CGF)

மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடங்கள், தகனமேடைகள், சமுதாயக் கூடங்கள், சந்தைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு

பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021-22 நிதியாண்டில் 176 பணிகளுக்கு ரூ.223.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 124 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 52 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.165.00 கோடி பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.6.6 இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதித் திட்டம்

அடிப்படை கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிதி தேவைப்படும் பேரூராட்சிகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021-22 நிதியாண்டில் ரூ.74.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 359 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் நாளது வரை 318 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 41 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2022-23-ம் ஆண்டிற்கு ரூ.66.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.6.7 தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளைத் தரம் உயர்த்தும் நோக்கில் தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 67 பேரூராட்சிகளில் 122.72 கி.மீ. நீளத்திற்கு 175 சாலைப் பணிகள் ரூ.82.99 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 164 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 114 பேரூராட்சிகளில் 118.531 கி.மீ. நீளத்திற்கு 121 சாலைப் பணிகள் ரூ.82.06 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சேமிப்பு மற்றும் வட்டி நிதியின்கீழ் 104 பேரூராட்சிகளில் 110.021 கி.மீ. நீளத்திற்கு 107 சாலைப் பணிகள் ரூ.74.27 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ள இப்பணிகள் அனைத்தும் 2023 செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

2023 மார்ச் 30]

4.6.8 நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT)

சாலைகள் அருகாமையில் உள்ள கிராமங்களையும், நகரங்களையும் இணைத்து பேரூராட்சியின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 490 பேரூராட்சிகளில் 20,306 கி.மீ. நீளமுள்ள பல்வேறு வகையான சாலைகள் பாரமரிக்கப்பட்டு வருகின்றன.

சாலைகள் சேதமடைய காரணமாக இருப்பவை அதன் வயது, தேய்மானம், அடர்ந்த போக்குவரத்து, கனமழை மற்றும் இயற்கை இடர்பாடுகளான வெள்ளம் போன்றவை ஆகும். மேலும், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்துவதன் காரணமாக சாலைகள் சேதமடைகின்றன. எனவே இதுபோன்ற தேவைகள் எழும்போது மேற்படி பழுதடைந்த சாலைகளை மறுசீரமைத்தல் அவசியமாகிறது. எனவே நகர்ப்புர பகுதிகளிலுள்ள தரமான சாலை கட்டமைப்பு அப்பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தவும், அப்பகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகிறது.

நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளில் 6,318 கி.மீ. நீளத்திலுள்ள பழுதடைந்த சாலைகள் இந்த நான்கு ஆண்டுகளில் மேம்படுத்தப்படும். 6,318 கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த சாலைகளில் 5,200 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நடைமுறையிலுள்ள பல்வேறு திட்டங்களின்கீழ் அதாவது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், மாநில நிதிக் குழு மானியம், தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தப்படும். மீதமுள்ள 1,118 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.505 கோடி சிறப்பு நிதியின்கீழ் மேம்படுத்தப்படும்.

2022-23 ஆம் ஆண்டிற்கு சிறப்பு நிதியின்கீழ் பேரூராட்சிகளில் 382 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கு ரூ.154.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.7 இணையம் வாயிலாக வரி மற்றும் கட்டணங்கள் செலுத்துதல்

வரி மற்றும் வரியில்லா வருவாய் இனங்களே பேரூராட்சிகளின் அடிப்படை வருவாய் ஆதாரமாகும். இருப்பினும், தற்போதைய வரிவசூல் நடைமுறையில் பொதுமக்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக வருவது சிரமமாக உள்ளதனால், பேரூராட்சியின் வருவாய் பாதிக்கப்படுகிறது. எனவே, தேசிய தகவல் மையம் உதவியுடன் இணையம் வாயிலாக வரிவசூலிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[*2023 மார்ச் 30*

இவ்விணைய வழி வரிசெலுத்தும் முறையின் வாயிலாக பொதுமக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்களையும் பேரூராட்சி அலுவலகத்திற்கு வராமல், எங்கிருந்தும் இணையம் வாயிலாக செலுத்த முடியும்.

இப்பரிவர்த்தனைகள் தேசிய தகவல் மைய உதவியுடன் பற்று அட்டை, கடன் அட்டை, இணைய வங்கி, யுபிஐ மற்றும் கியூஆர் குறியீடு போன்ற வழிமுறைகளில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பரிவர்த்தனை முறைகள் 490 பேரூராட்சிகளிலும் பரிசோதனை செய்யப்பட்டு விரைவில் நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

இப்பரிவர்த்தனை முறைகளை நடைமுறைப்படுத்துவதில், பொதுமக்கள் இணைய தொடர்பு http://dtp.tn.gov.in *பயன்படுத்தி தங்களது வரியினங்களை எப்பகுதியிலிருந்தும் செலுத்தலாம்.*

4.8 நிதி மேலாண்மை

4.8.1 ஆறாவது மாநில நிதி ஆணையம்

ஆறாவது மாநில நிதி ஆணைய பரிந்துரைகளை ஏற்று அரசாணை எண் 60 நிதித் (மா.நி.ஆ) துறை, நாள் 28-2-2023-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் காலவரையறை 2022-23 முதல் 2026-27 ஆகும்.

ஆறாவது மாநில நிதி ஆணைய பரிந்துரைகளின்படி 2022-23-ம் ஆண்டிற்கு நிதி விடுவிக்கப்பட்ட விவரம் மற்றும் 2023-24-ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் அட்டவணை 4.4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

அட்டவணை 4.4

வ. எண்	நிதியின் வகை	2022-23 ஆம் நிதி ஆண்டு (ரூ. கோடியில்)		2023-24 ஆம் நிதி ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
		ஒதுக்கீடு	விடுவிக்கப் பட்டது	
1.	மாநில நிதி ஆணைய ஒதுக்கீடு	1,525.34	1,519.23	1,784.87
2.	மூலதன மானிய நிதி	165	165*	181.50
3.	இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி	66	66*	72.60
மொத்தம்		1,756.34	1750.23	2,038.97
* அரசாணை வெளியிடப்படவுள்ளது				

4.8.2 – 15-வது நிதி ஆணையம்

15-வது நிதி ஆணையம், நிபந்தனையற்ற மானியம் மற்றும் நிபந்தனையுடன்கூடிய மானியம் என இரண்டு பிரிவுகளாக மானியங்களை பரிந்துரைத்துள்ளது.

- ❖ **நிபந்தனையற்ற மானியம்:-** *நிபந்தனையற்ற மானியம், சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் நீங்கலாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 12-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 பொருள்கள் தொடர்பான பணிகளில் தேவையென கருதப்படும் பணிகளுக்கு பேரூராட்சிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். 2021-22 ஆம் ஆண்டிற்கான நிபந்தனையற்ற மானியத்தின்கீழ் ரூ.110.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,231 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் 551 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 680 பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[2023 மார்ச் 30

- **நிபந்தனையுடன்கூடிய மானியம்:-** *நிபந்தனையுடன் கூடிய மானியத்தில் 50% சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் 50% குடிநீர், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகியவற்றுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டிற்கான நிபந்தனையுடன் கூடிய மானியத்தின்கீழ் ரூ.166.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,263 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் 1,401 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 862 பணிகள் நடைபெற்று வருகின்றன.*

4.8.3 பேரூராட்சிகளின் நிதிநிலை

அட்டவணை 4.5

(ரூ. கோடியில்)

வ. எண்	விவரம்	2021-22	2022-23
	வருவாய்		
1.	வரியினம்	234.00	323.55
2.	வரியில்லா இனம்	267.42	284.39
3.	இதர வருவாய் இனம்	132.33	210.96
4.	மாநில நிதிக் குழு மானியம்/ மத்திய நிதிக் குழு மானியம்	1,601.45	1,805.98
5.	மூலதன வருவாய்	635.26	431.70
	மொத்தம்	2,870.46	3,056.58
	செலவு		
1.	நிருவாக / பணியாளர்கள் ஊதிய செலவு	1,361.34	1,152.83
2.	மூலதன செலவினம்	1,960.36	2,203.36
	மொத்தம்	3,321.70	3,356.19

4.8.4 கடன்கள் மற்றும் நிலுவைகள்

31-3-2023 வரை செலுத்தப்பட வேண்டிய கடன்கள் மற்றும் கட்டணங்கள் நிலுவை விவரம் கீழே 4.6 அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

2023 மார்ச் 30]

அட்டவணை 4.6

வ.எண்	விவரம்	தொகை (ரூ.கோடியில்)
1	மின் நுகர்வு கட்டண நிலுவை	*20.16*
2	எல்.ஐ.சி. கடன் மற்றும் வட்டியுடன் கூடிய நிலுவைத் தொகை	*46.30*
	மொத்தம்	*66.46*

5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னை நகரம் இந்தியாவின் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாகவும், மக்கள் தொகை அடிப்படையில் உலகின் 36-வது பெரிய பெருநகரப் பகுதியாகவும் விளங்குகிறது. 1974 ஆம் ஆண்டில் சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் சென்னைப் பெருநகரப் பகுதி (CMA) என அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புகளை நகரின் வளர்ச்சிக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் தேவைகளுக்காகவும், தமிழ்நாடு சட்டம் 22/1978-ன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அரசுரிமையாக்கப்பட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

இவ்வாரியமானது, ஒரு முழு நேர மேலாண்மை இயக்குநரால் நிருவகிக்கப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியமானது கீழ்க்கண்டவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது:

[2023 மார்ச் 30

வாரிய இயக்குநர்கள்

வாரிய தலைவர்	
1	நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்
வாரிய இயக்குநர்கள்	
2	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை
4	மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
5	அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
6	உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
7	மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
8	செயல் இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
9	நிதி இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
10	பொறியியல் இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றுதல் ஆகியவை சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும், மக்களின் நலனுக்கும் இன்றியமையாதவையாகும். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் துவக்கப்பட்ட நாள் முதல், இந்த சேவைகளை சென்னைப் பெருநகர பகுதி மக்களுக்கு வழங்கி வருகிறது. தற்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலுள்ள சென்னைப் பெருநகரில்

2023 மார்ச் 30]

வசிக்கும் சுமார் 85.70 இலட்சம் மக்களுக்கு, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள்மூலம் தனது சேவையை நேரடியாக வழங்கி வருகிறது. மேலும், சென்னைக்கு அருகிலுள்ள நகர்ப்புர அமைப்புகளுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான நீர் இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை

- *சென்னைப் பெருநகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் செயல்படக்கூடிய குடிநீர் குழாய் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்கும் வசதிகளை ஏற்படுத்துதல்.*

- *நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் குடிநீர் கட்டமைப்பை வலுப்படுத்துவதன்மூலம், தேவை–பற்றாக்குறை இடைவெளியை குறைத்தல்.*

- *மழைநீரை சேமிப்பதற்காக, சென்னைப் பெருநகரின் ஒவ்வொரு வளாகத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி கண்காணித்தல் மற்றும் நீர்ப்படுகை மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்.*

- *நகர்ப்புர நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் மீட்டெடுத்தல்.*

- *பயன்படுத்தப்பட்ட நீரினைக் குறைந்தபட்சம் 20 சதவீதம் மறு சுழற்சி செய்து, மறு பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல்.*

- *வருவாய் அல்லாத நீரின் அளவை 15 சதவீதத்திற்கும்கீழ் குறைத்தல்.*

- *சென்னைப் பெருநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுதல்.*

- *மாநகரின் நீர்வழிப் பாதைகளான அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் வடிநிலப் பகுதிகள் மற்றும் அவற்றின் பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்கு, குறுகிய கால திட்டமாக இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல் மற்றும் நீண்ட கால திட்டமாக கட்டமைப்பு பணிகளை வலுப்படுத்துதல்.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

- போதிய அளவு சுத்திகரிப்புத் திறனை அடைவதற்கு, புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் புனரமைத்தல்.

5.1 குடிநீர் வழங்கல் மேலாண்மை

5.1.1 குடிநீர் ஆதாரங்கள்

சென்னை மாநகர மக்களுக்கு தேவையான அளவு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான நீரை வழங்குவது சென்னைக் குடிநீர் வாரியத்தின் முதன்மையான மற்றும் உறுதியான பெரும் முயற்சியாகும். மேற்பரப்பு நீராதாரங்கள், நிலத்தடி நீர் ஆதாரங்கள், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்மூலம் நகரின் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

(i) மேற்பரப்பு நீராதாரங்கள்

சென்னை மாநகரின் முக்கிய நீராதாரமாக மேற்பரப்பு நீராதாரம் விளங்குகிறது. கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின்கீழ் கண்டலேறு அணையிலிருந்து பெறப்படும் நீர் மற்றும் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை-தேர்வாய் கண்டிகை மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஆகியவற்றிலிருந்து தேவையான நீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

(ii) நிலத்தடி நீராதாரங்கள்

தாமரைப்பாக்கம் பகுதி நிலத்தடி நீராதாரங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 5 மில்லியன் லிட்டர் மற்றும் மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தடி நீராதாரங்களில் இருந்து 20 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு வருகின்றது.

(iii) கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

சென்னை மாநகரில் வற்றாத நீராதாரங்கள் ஏதுமில்லை. எனவே, சென்னைப் பெருநகரம், வடகிழக்குப் பருவ மழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவ மழை பொய்க்கும் காலங்களில் சென்னைப் பெருநகரம் வறட்சி நிலையை எதிர்கொள்கிறது. மேலும், சென்னைக்கு அருகாமையிலுள்ள பகுதிகள் நகரமயமாதல் மற்றும் தொழிற்சாலைகளின் விரைவான பெருக்கம் ஆகியவை

2023 மார்ச் 30]

நீர் தேவையை அதிகரித்து, நீராதாரங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி கால அவசர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நகரின் நீண்ட கால குடிநீர் தேவை மற்றும் நகரை வறட்சியிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசு, கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது.

அ) கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் - மீஞ்சூர்

கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் நகரின் குடிநீர்த் தேவையை ஈடு செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட,கடல்நீரைக்குடிநீராக்கும் முதலாவது நிலையம்,மீஞ்சூரில், வடிவமைத்தல், நிறுவுதல், சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தருதல் எனும் (DBOOT) ஒப்பந்த அடிப்படையில் நிறுவப்பட்டு, 31-7-2010 அன்று அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர், வடசென்னை பகுதிகளான மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் வசிக்கும் சுமார் 12 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

ஆ) கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் - நெம்மேலி

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையம் ரூ.805.08 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் முழு நிதி உதவியுடன் நெம்மேலியில் நிறுவப்பட்டது. இந்நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அவர் துணை முதலமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு வகித்தபோது, 23-2-2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, 2013 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் தென் சென்னை பகுதிகளான சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்கிறது.

[2023 மார்ச் 30

(iv) மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து (TTRO), சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான நீர் வழங்குவதற்காக, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு நிலையங்களை கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவியுள்ளது. இந்நிலையங்களிலிருந்து, இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், மணலி-எண்ணூர் மற்றும் மணலி-மீஞ்சூர் வழித்தடங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இரண்டு நிலையங்களும் தற்போது இயக்கத்தில் உள்ளன. கொடுங்கையூரிலிருந்து நாளொன்றுக்கு 23 மில்லியன் லிட்டரும், கோயம்பேடு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டரும் தொழிற்சாலைகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

5.1.2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் அட்டவணை 5.1-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாளொன்றுக்கு 1,500 மில்லியன் லிட்டர் ஆகும். கீழ்ப்பாக்கத்தில் இயங்கிவரும் நூற்றாண்டு பழமையான முதலாவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது வரை தொடர்ந்து சென்னைப் பெருநகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்து வருகிறது.

அட்டவணை 5.1

வ. எண்	நிலையம் அமைந்துள்ள இடம்	சுத்திகரிப்பு திறன் (MLD)	நிறுவப்பட்ட ஆண்டு
1	கீழ்ப்பாக்கம்	270	1914
2	செங்குன்றம்	300	1996
3	வீராணம்	180	2004
4	செம்பரம்பாக்கம்	530	2008

2023 மார்ச் 30]

வ. எண்	நிலையம் அமைந்துள்ள இடம்	சுத்திகரிப்பு திறன் (MLD)	நிறுவப்பட்ட ஆண்டு
5	*சூரப்பட்டு*	*14*	*1965 (2009 ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்டது)*
6	*கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், மீஞ்சூர்*	*100*	*2010*
7	*கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நெம்மேலி*	*100*	*2013*
8	*போரூர்*	*6*	*2202*
	மொத்தம்	*1,500*	

5.1.3 குடிநீர் விநியோகம்

சென்னைப் பெருநகர மக்களுக்கு 16 பிரதான குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் 92 சிறிய நீரேற்று நிலையங்கள்மூலம் 5,247 கி.மீ. நீளமுள்ள குடிநீர் குழாய்கள் மூலமாக அட்டவணை 5.2-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அட்டவணை 5.2

வ.எண்	குடிநீர் விநியோக நிலையம்	வழங்கப்படும் நீரின் அளவு (MLD)
1	*பட்டேல் நகர்*	*30*
2	*அண்ணா பூங்கா*	*22*
3	*கண்ணப்பர் திடல்*	*25*

வ.எண்	குடிநீர் விநியோக நிலையம்	வழங்கப்படும் நீரின் அளவு (MLD)
4	வியாசர்பாடி	35
5	கொளத்தூர்	25
6	கீழ்ப்பாக்கம்	105
7	சூளைமேடு	50
8	திருவல்லிக்கேணி	15
9	தெற்கு நீரேற்று நிலையம்	50
10	வள்ளுவர் கோட்டம்	20
11	கே.கே. நகர்	32
12	ஈக்காட்டுத் தாங்கல்	10
13	மயிலாப்பூர்	40
14	நந்தனம்	20
15	பள்ளிப்பட்டு	35
16	வேளச்சேரி	35
17	நேரடி விநியோகம் மற்றும் சிறிய நீரேற்று நிலையங்கள்	191
	பிரதான சென்னை பகுதிக்கு குழாய்மூலம்	**740**
18	இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குழாய்மூலம்	175
19	லாரிகள்மூலம் (பிரதான சென்னை + இணைக்கப்பட்ட பகுதிகள்)	30
20	பெருமளவு நுகர்வோர்	30
	வீட்டு உபயோகத்திற்காக வழங்கப்படும் மொத்த அளவு	975
21	தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர்	25
	இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீர்	23

2023 மார்ச் 30]

வ.எண்	குடிநீர் விநியோக நிலையம்	வழங்கப்படும் நீரின் அளவு (MLD)
	எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர்	*38*
	தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மொத்த நீர்	*86*
	விநியோகிக்கப்படும் நீரின் மொத்த அளவு	*1,061*

5.1.4 தரம் கண்காணித்தல்

பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்கு, தொடர் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் நீரின் தரத்தை கண்காணித்தல் ஆகியவை இன்றியமையாதவையாகும். நுகர்வோருக்கு வழங்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீரின் தரத்தினை உறுதி செய்வதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் தர உறுதி பிரிவு செயல்பட்டு வருகிறது. மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் விநியோக நிலையங்கள், துணை நீரேற்று நிலையங்கள், சென்னை நகரின் விநியோக அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து நீர் மாதிரிகள் தினசரி சேகரிக்கப்பட்டு, அவற்றின் இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் காரணிகளை, இந்திய தர நிர்ணயம் 10500 - 2012 அடிப்படையில் பரிசோதித்து, குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

தற்போது, தினந்தோறும் 300 நீர் மாதிரிகள் தர உறுதி பிரிவில் சேகரிக்கப்பட்டு, நீரின் தரம் பரிசோதிக்கப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியம், 12,000 சதுர அடி பரப்பளவில் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் பரிசோதனை நிலையத்தை அமைத்துள்ளது. இந்த ஆய்வுக்கூடமானது, பரிசோதனைக்கான நவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் ஆய்வக பிரிவுகளை தனித்தனியாக கொண்டுள்ளது. இப்பிரிவுகள், இயற்பியல், வேதியியல் பகுப்பாய்வு மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு

ஆகிய வசதிகளை தனித்தனியாக கொண்டுள்ளன. இந்த பரிசோதனை நிலையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-11-2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆய்வுக்கூடத்திற்கு தேசிய சான்று பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5.2 குடிநீர் வழங்கல் திட்டங்கள்

5.2.1 நடைபெற்றுவரும் குடிநீர் திட்டப் பணிகள்

(i) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பல்லாவரம் வரை குழாய் பதிக்கும் பணிகள்

வளர்ந்து வரும் சென்னை பெருநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்காக, நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தினை நிறுவ திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு அரசு, ரூ.1,516.82 கோடி திட்ட மதிப்பிற்கு திருத்தப்பட்ட நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அம்ரூத் திட்டம் மற்றும் ஜெர்மானிய வளர்ச்சி வங்கி (KfW) நிதி உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணிகள் அனைத்தும் முழுமையாக ஜூலை 2023-ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினால் தெற்குப் பகுதியிலுள்ள சென்னைப் பெருநகர பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, தாம்பரம், மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வழித்தடப் பகுதிகளில் உள்ள தோராயமாக 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

(ii) பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

சென்னை பெருநகரின் தற்போதைய குடிநீர் தேவை நாளொன்றுக்கு 1,400 மில்லியன் லிட்டர் ஆகும். இதில், நாளொன்றுக்கு விநியோக அளவு சுமார் 1,060 மில்லியன் லிட்டர் மற்றும் பற்றாக்குறை 340 மில்லியன் லிட்டர் ஆகும்.

2023 மார்ச் 30]

இந்த இடைவெளியை நிறைவு செய்வதற்காக, குடிநீர் வழங்கலை பெருக்குவதற்கு புதிய கூடுதல் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல் மிக முக்கியமாகும்.

எனவே, சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையிலுள்ள பேரூரில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.6,078.40 கோடி மதிப்பிற்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்தது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TNIDB) மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் இந்நிலையம் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டப் பணியானது, ஒப்பந்த நிலையில் உள்ளது மற்றும் இத்திட்டப் பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முடிவுறும்போது, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகள் தேவையான குடிநீரைப் பெறும். இதன்மூலம் இப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 23 இலட்சம் மக்கள் பயனடைவர்.

(iii) மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல் பணிகள்

ரூ.385.63 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நெற்குன்றம், மாதவரம், ராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, மடிப்பாக்கம் மற்றும் உத்தண்டி ஆகிய 9 இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. நீலாங்கரை குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு ரூ.66.67 கோடி மதிப்பீட்டிற்கும், செம்மஞ்சேரி குடிநீர் வழங்கல் திட்டப் பணிக்கு ரூ.46 கோடி மதிப்பீட்டிற்கும் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்த நிலையில் உள்ளன.

இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், மாத்தூர், ஜல்லடம்பேட்டை, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம் மற்றும் புழல் ஆகிய பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளன. எஞ்சிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் 2023-24-ல் செயல்பாட்டிற்கு வரும்.

(iv) வளசரவாக்கம் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்

வளசரவாக்கத்திலுள்ள வார்டு எண் 149 மற்றும் 152 ஆகிய பகுதிகளில் தன்னிறைவு மண்டல துணை பகுதிகள் (DMA) அடிப்படையில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத்த, ரூ.69.64 கோடி மதிப்பிலான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது மற்றும் ஜுன் 2023-க்குள் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.2.2 நீர் இழப்பை குறைப்பதற்காக தற்போது உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல்

பேரூரில் திட்டமிடப்பட்டுள்ள நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டக் கூறுகளின் ஒரு பகுதி, சென்னை பெருநகரின் பிரதான பகுதிகளில் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். சென்னைப் பெருநகரின் பிரதான பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடிநீர் விநியோகக் குழாய்கள், 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானவை. எனவே, சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதை உறுதி செய்வதற்காக, திட்ட மேலாண்மை ஆலோசகரால், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்:

- *சென்னைப் பெருநகரின் பிரதான பகுதிகளில் பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்தல்*
- *விடுபட்ட தெருக்களுக்கு துணைக் குழாய்கள் பதித்தல்*
- *தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பினை நீரியல் கட்டமைப்பாக வலுவூட்டல்*
- *கீழ்நிலை நீர்த்தேக்கம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கம்மூலம் நீர் சேமிப்பு கட்டமைப்பை வலுவூட்டல்*
- *தன்னிறைவு மண்டல துணைப் பகுதிகளை உருவாக்குதல்*
- *குடிநீர் அளவுமானி பொருத்தப்பட்ட வீட்டு இணைப்பு வழங்குதல்*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 மார்ச் 30]

இதற்கிடையே, மேற்கண்ட பணியினை உலக வங்கியின் நிதி உதவியுடன், சென்னை நகர கூட்டிணைவு திட்டத்தின்கீழ் செயல்படுத்த பரிசீலிக்கப்பட்டது.

பகுதி-X மற்றும் XIII-ல் உள்ள அனைத்து குடிநீர் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஒடிசா அரசின் நீர் நிறுவனத்தை (WATCO) சென்னை குடிநீர் வாரியம் நியமனம் செய்ய உத்தேசித்துள்ளது. ஒடிசா அரசு நீர் நிறுவனம், பகுதி-X மற்றும் XIII-க்கான வரைவு திட்ட அறிக்கை தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் 24X7 குடிநீர் விநியோகத்தை செயல்படுத்த ஒப்புக்கொண்டு, பகுதி XIII-ல் உள்ள திருவான்மியூர் மற்றும் பள்ளிப்பட்டில் உள்ள குடிநீர் பகிர்மான நிலையங்களில் முதற்கட்ட ஆய்வை நடத்தியுள்ளது.

5.2.3 மழைநீர் சேகரிப்பு

தமிழ்நாடு, மழைநீர் சேகரிப்பில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு அமைப்பினை, தற்போதுள்ள மற்றும் புதிய கட்டடங்களில் நிறுவப்படுவதை கட்டாயமாக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், அனைத்து கட்டடங்களுக்கும், கட்டடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கிட நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில், தகவல் தொடர்பு உத்தியினை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வடிவமைத்துள்ளது. பருவ மழையின்போது அதிகபட்ச பலன்களை பெறுவதற்காக, மழைநீர் சேகரிப்பு குறித்து சென்னை நகரவாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஒவ்வோர் ஆண்டும் பருவமழை தொடங்கும்முன் பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

மழைநீர் சேகரிப்பு பிரச்சாரம் மற்றும் நீர் பாதுகாப்பு சிறப்பு இயக்க வாரம் 2022

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாளன்று மழைநீர் சேகரிப்பு மற்றும் நீரின் தரம் குறித்த விழிப்புணர்வு பிராச்சாரத்தை தொடங்கி

வைத்தார்கள். இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தின் நோக்கமானது, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்க தன்னார்வலர்கள் 1,000 பேர்மூலம் சென்னை பெருநகரின் 15 பகுதிகளிலும், வீடுதோறும் பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் திறந்தவெளி கிணறுகள்/ ஆழ்துளைக் கிணறுகள், குழாய்கள்மூலம் பெறப்படும் நீரிலுள்ள மொத்த திடப்பொருள்களின் அளவு (TDS) குறித்த விவரங்களை சேகரிப்பதாகும்.

1. பயிற்சி

- இணையதள உதவியுடன் இயங்கும் அலைபேசி செயலிமூலம் மழைநீர் சேகரிப்பு கணக்கெடுப்பு பற்றி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கக தன்னார்வலர்கள் 1,000 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

- நீரின் தரத்தை பரிசோதிக்க நீரிலுள்ள மொத்த திடப்பொருள்களின் அளவை கணக்கிடும் கருவிகள் வழங்கப்பட்டன.

2. கணக்கெடுப்பு விவரங்கள்

- மழைநீர் சேகரிப்பு பற்றிய கணக்கெடுப்பிற்காக இணையதள உதவியுடன் இயங்கும் ஆன்ட்ராய்டு அலைபேசி செயலி பின்வரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

 அ) அனைத்து வளாகங்களின் புவிசார் குறியீடு/ மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்/குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள்/ஆழ்துளை மற்றும் திறந்தவெளி கிணறுகள்

 ஆ) குடிநீர் வழங்கப்படும் நேரம் மற்றும் கால அளவு

 இ) கட்டடங்களின் வகைப்பாடு

3. தகவல், கற்பித்தல் மற்றும் தொடர்புகொள்ளுதல்

- முக்கிய சாலைகளின் நடுப்பகுதி, பேருந்து நிழற்குடைகள் போன்ற இடங்களில் மழைநீர் சேகரிப்பு பராமரிப்பு பற்றிய காட்சிப்பலகைகள் வைக்கப்பட்டன.

- மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பராமரிப்பு பற்றிய துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

2023 மார்ச் 30]

- *ஒளி உமிழும் டையோடு திரை பொருத்தப்பட்ட வாகனங்கள், சமூக ஊடகங்கள் ஆகிய காட்சி தொடர்பு ஊடகங்கள்மூலம் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.*

- *காணொலி வாயிலாக மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்புகள் பற்றி விளக்கப்பட்டன.*

2022-2023 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகரில் மொத்தமுள்ள 11.05 இலட்சம் கட்டடங்களில், 10.27 இலட்சம் கட்டடங்களில் சரிபார்ப்பு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்புமூலம் 6,98,360 (68%) கட்டடங்களில் செயல்படக்கூடிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. மேலும், 1,84,860 (18%) கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் பராமரிப்பு இன்றி இருந்தது கண்டறியப்பட்டது. எஞ்சியுள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி மறுசீரமைப்பு செய்திட அறிவிப்பு கடிதம் மற்றும் விழிப்புணர்வு செய்திகள்மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னைக் குடிநீர் வாரியம் நிலத்தடி நீர் அளவை அவ்வப்போது கண்காணிப்பதற்காக தனது 200 பணிமனைகளிலும் எண்ம நிலத்தடி நீர் அளவு பதிவு கருவிகளை நிறுவியுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு பருவகாலத்திற்குப் பின்பும், நிலத்தடி நீரின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றம் இருப்பது தெரியவந்துள்ளது. இந்த அளவுகள் வாரியத்தின் இணைய தளத்தில் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக புதுப்பிக்கப்படுகிறது. மேலும், சென்னை மாநகர் முழுவதும் பரவலாக பெய்யும் மழைப் பொழிவின் அளவினை கணக்கிட மழைமானி கருவிகள் சென்னை குடிநீர் வாரியத்தின் 15 பகுதி அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

சென்னைக் குடிநீர் வாரியத்தால் 200 பணிமனைகளிலும் அமைக்கப்பட்டுள்ள எண்ம நிலத்தடி நீர் அளவு பதிவு கருவிகள்மூலம் நிலத்தடி நீரின் அளவானது, 2003 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில், 7.83 மீட்டரில் இருந்து, 2022 ஆம் ஆண்டில் 3.56 மீட்டராக (+4.27 மீட்டர்) உயர்ந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இதேபோல், நிலத்தடி நீரின் தரத்திலும் கணிசமான அளவில் முன்னேற்றம் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

5.3 கழிவுநீர் மேலாண்மை

சென்னை நகரின் கழிவுநீரை சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மற்றுமொரு முக்கிய கடமை ஆகும். பிரதான சென்னை மாநகரின் கழிவுநீர் கட்டமைப்பானது முதன் முதலாக 1917-ல் நிறுவப்பட்டது. சென்னை மாநகரின் கழிவுநீர் கட்டமைப்பானது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனிப்பட்ட கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள், கழிவுநீரை கொண்டு செல்லும் அமைப்பு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் கழிவுநீர் 4,149 கிலோ மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய் கட்டமைப்பு வாயிலாக 322 கழிவு நீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்த கழிவு நீரிறைக்கும் நிலையங்களிலிருந்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி சுத்திகரிக்கப்பட்ட பின், பாதுகாப்பாக வெளியேற்றப்படுகிறது.

5.3.1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

மாநகரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 912.80 மில்லியன் லிட்டர் ஆகும். விவரங்கள் அட்டவணை 5.3-ல் உள்ளன.

அட்டவணை-5.3

கழிவுநீர் மண்டலம்	கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்	தற்போதைய சுத்திகரிப்பு திறன் (MLD)
I & II	கொடுங்கையூர் (120+110+80+80)	390
	திருவொற்றியூர்	31
III	கோயம்பேடு (34+60+120)	214
IV	நெசப்பாக்கம் (54+40+23)	117
	நெசப்பாக்கம் TTUF	10
V	பெருங்குடி (12+54+60)	126
	சோழிங்கநல்லூர் – I	18

2023 மார்ச் 30]

	நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்	
	சேத்துப்பட்டு	1
	சூளைமேடு	1.2
	தாடண்டர் நகர்	4
	கோட்டூர்புரம்	0.6
	மொத்தம்	912.80

5.3.2 கழிவுநீர் கட்டமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினைத் தவிர்க்க, வாரியம் சென்னைப் பெருநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்புகளின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கு ஜெட்ராடிங் இயந்திரங்களும், இயந்திர நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றுவதற்கு அதிவேக உறிஞ்சும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களும் உபயோகிக்கப்படுகின்றன. தற்சமயம், கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 537 இயந்திரங்கள் அட்டவணை 5.4-ல் உள்ளவாறு பயன்பாட்டில் உள்ளன.

அட்டவணை-5.4

வ.எண்	இயந்திரங்களின் விவரம்	எண்ணிக்கை
1	தூர் வாரும் இயந்திரங்கள்	300
2	ஜெட்ராடிங் இயந்திரங்கள் (2KL, 6 KL & 9 KL)	142
3	ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள்	35
4	அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள்	60
	மொத்தம்	537

கழிவுநீர் கட்டமைப்புகளின் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் கூடுதலாக இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

[2023 மார்ச் 30

5.4 கழிவுநீர் திட்டங்கள்

5.4.1 மாநகருடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் திட்டப் பணிகள்

நெற்குன்றம், பள்ளிக்கரணை, ராமாபுரம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம், காரம்பாக்கம், முகலிவாக்கம் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 9 பகுதிகளில் ரூ.783 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.4.2 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது 30-5-2020 நாளிட்ட ஐந்தாவது திருத்தப்பட்ட தொகுப்புரையில் மத்திய சட்டங்கள், விதிமுறைகள், அறிவிக்கைகள் மற்றும் ஆணைகளின் அடிப்படையில், சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் நீரின் திருத்திய தர அளவுகளை வரையறுத்துள்ளது. இந்த தர அளவு விவரங்கள் அட்டவணை 5.5-ல் உள்ளன. இவை 26-5-2026 முதல் அமலுக்கு வரும்.

அட்டவணை-5.5

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தர அளவுகள்		
வ. எண்	**தர அளவுகள்**	**மிகப் பெரிய மற்றும் பெருநகரங்கள் (சென்னை)**
1	*அமில - கார குறியீடு (pH)*	*5.5 - 9.0*
2	*உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD)*	*10 மி.கி/லி*
3	*மொத்த மிதக்கும் திடப் பொருட்கள் (TSS)*	*20 மி.கி/லி*
4	*வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (COD)*	*50 மி.கி/லி*
5	*மொத்த நைட்ரஜன்*	*10 மி.கி/லி*

2023 மார்ச் 30]

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தர அளவுகள்		
வ. எண்	**தர அளவுகள்**	**மிகப் பெரிய மற்றும் பெருநகரங்கள் (சென்னை)**
6	*மொத்த பாஸ்பரஸ் (குளங்கள், ஏரிகளில் வெளியேற்றுவதற்கான)*	*1.0 மி.கி/லி*
7	*மல கோலிபார்ம் (FC) – 100 மிலி-க்கு தோராயமான எண்ணிக்கை (MPN/100)*	*விரும்பத்தக்க அளவு-100; அனுமதிக்கப்பட்ட அளவு -230*

சென்னை குடிநீர் வாரியம், கொடுங்கையூர்-I, கொடுங்கையூர்-II, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகளை ரூ.811.40 கோடி திட்ட மதிப்பீட்டில் அட்டவணை 5.6-ல் உள்ளவாறு மேற்கொண்டுள்ளது.

அட்டவணை-5.6

புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்		**செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல்**	
இடங்கள்	**சுத்திகரிப்பு திறன் (MLD)**	**இடங்கள்**	**சுத்தி கரிப்பு திறன் (MLD)**
கொடுங்கையூர்-I	*120*	*கொடுங்கையூர்*	*110*
நெசப்பாக்கம்	*50*	*கோயம்பேடு (60+120)*	*180*

பெருங்குடி	60	நெசப்பாக்கம் (54+40)	94
மொத்தம்	230	பெருங்குடி (54+60)	114
		மொத்தம்	498

மேற்கண்டவற்றில், 120 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கொடுங்கையூர்-II நிலையமானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-11-2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

5.4.3 சோழிங்கநல்லூரில் 54 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

சோழிங்கநல்லூரில் ரூ.65.97 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஏற்கெனவே, நாளொன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட அலகு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தொடர் உலை தொழில்நுட்பத்தை (SBR Technology) பயன்படுத்தி, சென்னையின் தென் பகுதியில் உள்ள கிழக்குக் கடற்கரை சாலையை ஒட்டி அமைந்துள்ள இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீரை சுத்திகரிக்க, நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட அலகு நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2023-24-ல் செயல்பாட்டிற்கு வரும்.

5.4.4 சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னையின் நீர் வழித்தடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) மேற்கொண்டுள்ள பணிகளின் ஒரு பகுதியாக, சேத்துப்பட்டு (1 MLD), சூளைமேடு (1.2 MLD), தாடண்டர் நகர் (4 MLD) மற்றும் கோட்டூர்புரம் (0.6 MLD) ஆகிய இடங்களில் சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

5.4.5 மாநகருடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள கழிவுநீர் திட்டப் பணிகள்

நந்தம்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.24.65 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஒக்கியம்-துரைப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.256.91 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது ஒப்பந்த நிலையில் உள்ளது. மேலும், ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கு ரூ.644.59 கோடிக்கும், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம் மற்றும் மாதவரத்தில் உள்ள விடுபட்ட தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கு ரூ.1,269.63 கோடிக்கும், அம்ரூத் 2.0., ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி மற்றும் சிங்கார சென்னை 2.0 ஆகிய திட்டங்களின்கீழ் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றில் ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான திட்டப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

ஜல்லடம்பேட்டை பகுதிக்கான விரிவான பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கு, திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.92.76 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அம்ரூத் 2.0 மற்றும் சிங்கார சென்னை 2.0 திட்டங்களின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்கள் செயல்பாட்டிற்கு வரும்போது, சென்னை நகருடன் இணைக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளும் பாதாள சாக்கடை வசதியினை பெற்றிருக்கும்.

5.4.6 சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைமூலம் மேற்கொண்டுள்ள திட்டப் பணிகள்

தமிழ்நாடு அரசு, சென்னை மாநகரின் நீர்வழிப் பாதைகளின் சுற்றுச் சூழல்களை மீட்டெடுக்கும் பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT)மூலம் மேற்கொண்டுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன், சென்னைக் குடிநீர் வாரியம் இணைந்து கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மற்றும் அவற்றின் கால்வாய்களில்

கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. கூவம் மற்றும் அடையாறு நதிகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம், முறையே, ரூ.186.19 கோடி மற்றும் ரூ.123.19 கோடி மதிப்பில் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் காரணமாக, அடையாறு சீரமைப்பு பணிகளில், சில பணிகள் (நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் இடைமறித்தல் & திருப்புதல் பணிகள்) கைவிடப்பட்டன. இதன் காரணமாக, மொத்த திட்ட மதிப்பீடான ரூ.123.19 கோடியில், ரூ.64.89 கோடி சேமிப்பாக கிடைத்துள்ளது. இந்த சேமிப்பு தொகையை பயன்படுத்தி, பகுதி X மற்றும் XIII-ல், 9 பணிகள் ரூ.64.89 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது ஒப்பந்த நிலையில் உள்ளன. இப்பணிகளினால் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் வலுவூட்டப்படும்.

சென்னை மாநகரின் நீர் வழித்தடங்களின் மீட்டுருவாக்கத்திற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கூவம், அடையாறு ஆறுகள், பக்கிங்காம் கால்வாய் வடிநிலப் பகுதிகளைச் சார்ந்த நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், நேரடியாகக் கலக்கும் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் திருப்புதல், தற்போதுள்ள கழிவுநீர் உட்கட்டமைப்புகளை வலுவூட்டல்/புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

கழிவுநீர் கலப்பதை தடுக்கும் திட்டத்திற்கு, அரசு ரூ.2,371 கோடிக்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து, முதற்கட்ட திட்டப் பணிகளை செயல்படுத்த ரூ.1,001 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.364.80 கோடி மதிப்பீட்டிலான 36 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. அவற்றில், 19 பணிகள் முடிவுற்று, எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஏற்கெனவே பணி ஆணை வழங்கப்பட்ட பணிகளை முடிப்பதற்கு, ரூ.385.38 கோடி மதிப்பிற்கு திருத்தப்பட்ட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளை மேற்கொள்ள ரூ.468.76 கோடி மதிப்பீட்டிற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2023 மார்ச் 30]

5.5 மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம்

சென்னை பெருநகரம், உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டில் முன்னோடியாக திகழ்கிறது. அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டத்தின் (அம்ரூத் 2.0) வழிகாட்டுதல்களின்படி, பயன்படுத்தப்பட்ட நீரின் 20 சதவீதம் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்யப்பட வேண்டும். நீர் சேமிப்பின் முயற்சியாக, நாளொன்றிற்கு 23 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது, மீண்டும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு முறை வாயிலாக தொழிற்சாலைகளால் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான 2 சுத்திகரிப்பு நிலையங்களை (TTRO) அமைத்துள்ளது.

5.5.1 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தால் கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவப்பட்ட தலா நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீர் வழங்கலை உறுதி செய்வதுடன், தொழிற்சாலைகளுக்கு நீடித்த நீர் வழங்கல் உறுதி செய்யப்படுகிறது. தொழிற்சாலைகளின் நன்னீர் தேவை அளவை குறைக்கிறது.

5.5.2 மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையங்கள்

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நீடித்த ஆதாரங்கள்மூலம் உறுதி செய்யும் விதமாக, தலா நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மூன்றாம் நிலை நுண் வடிகட்டி நிலையங்கள் (TTUF) அமைக்கும் பணி பெருங்குடி, நெசப்பாக்கம் மற்றும் லாங்ஸ் கார்டன்

ஆகிய 3 இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு, இவற்றில், நெசப்பாக்கம் நுண் வடிகட்டி நிலையம் (TTUF) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-11-2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி நிலையங்களிலிருந்து பெறப்படும் நீர், முறையே போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகளின் சேமிப்பிற்கு பயன்படுத்தப்படும். மேலும், லாங்ஸ் கார்டன் நுண் வடிகட்டி நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரானது, தென்னக இரயில்வேயின் இரயில் பெட்டிகளை சுத்தப்படுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கும் வழங்கப்படும்.

நாளொன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் பயன்படுத்தப்பட்ட நீரை மறு சுழற்சி செய்து, சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஏரிகளை மீள் நிரப்ப விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) மற்றும் ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையுடன் (DST-GoI) இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பெறப்படும் பயன்படுத்தப்பட்ட நீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து, சுற்றியுள்ள நகரமயமாக்கப்பட்ட ஏரிகளில் மீள் நிரப்புவதற்காக விரிவான வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

5.5.3 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை பெருநகர பகுதிகளில் கழிவுநீரகற்றல் (ஒழுங்குபடுத்தல்) விதிகள்

சிறு நகரங்கள், நகரங்கள் மற்றும் பெருநகரங்களின் வளர்ச்சிக்கு சாத்தியமான சுகாதார முறையாக, மலக்கசடு மற்றும் கழிவுநீரகற்றல் மேலாண்மையின் (FSSM) முக்கியத்துவத்தை தமிழ்நாடு அரசு அங்கீகரித்துள்ளது. மலக் கசடு மற்றும் கழிவுநீரகற்றல் மேலாண்மை குறித்த தேசியக் கொள்கையின்படி, கழிவுநீர் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்தல் மற்றும் மலக் கசடு மற்றும் கழிவுநீரகற்றலை சுத்திகரித்து அகற்றுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் ஒரு விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மலக் கசடு அல்லது கழிவுநீரை எடுத்துச் செல்லக்கூடிய குறிப்பிட்ட வாகனங்களின் இயக்கம் மற்றும் அவற்றை தெளியவைத்து அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அம்சங்கள் ஆகியவை 1978 ஆம் ஆண்டு

2023 மார்ச் 30]
சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சட்டத்தின்படி தற்போது ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி, மேற்கண்ட நோக்கத்திற்கு தகுந்தவாறு, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தம்) அகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/2022) வாயிலாக 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. மேலும், 31-12-2022 ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின், அரசாணை எண்.183-ன்படி, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை பெருநகரப் பகுதி கழிவுநீரகற்றல் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் 2022 வெளியிடப்பட்டுள்ளன.

பாதாள சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் கழிவுநீரை அகற்றுதல், உள்ளாட்சி அமைப்புகளில் இயங்கும் கழிவுநீர் அகற்றல் ஊர்திகளை ஒழுங்குபடுத்துதல், முறைகேடாக கழிவுநீர் வெளியேறுவதைத் தடுத்தல் ஆகியவற்றின்மூலம் நீர்நிலைகளைப் பாதுகாக்கும் வகையில், புதிய கழிவு நீரகற்றல் மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை ஒழுங்குபடுத்தி அரசு வெளியிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் மலக்கசடு மற்றும் கழிவு நீரகற்றல் மேலாண்மை மற்றும் கழிவு நீரகற்றல் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகளின் முக்கிய கொள்கைகள் i) பாதுகாப்பற்ற கழிவு நீரகற்றலைத் தடுக்க போதுமான சட்ட விதிகளை அறிமுகப்படுத்தி, கழிவுநீர் சேகரிப்பு மற்றும் ஊர்தி சேவைகளை வழங்கும் கசடு அகற்றும் ஊர்தி இயக்குபவர்களை (Desludging Operators) ஒழுங்குபடுத்துதல்; ii) கழிவுநீர் சேகரித்து, சுத்திகரித்து அதை அகற்றுவதற்கான வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்.

புதிய கழிவுநீர் அகற்றல் மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள், 2022 இல் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள்:

- *மலக்கசடு மற்றும் கழிவுகளைச் சேகரித்து, ஊர்திமூலம் அகற்றுவதற்கான உரிமம் (சட்டப் பிரிவு 69B-ன்கீழ்) பெறுதல்*
- *மலக்கசடு மற்றும் கழிவுகளைச் சேகரித்து, ஊர்திமூலம் அகற்றுவது தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்*

- கழிவுநீர் அகற்றும் ஊர்திகளில், செயல்பாட்டில் உள்ள வாகன கண்காணிப்பு அமைப்பிற்கான புவிசார் தடங்காட்டி (GPS) பொருத்தப்பட்டிருப்பதை வாரியம் உறுதி செய்தல்

- கழிவுநீர் அகற்றும் ஊர்தி இயக்குபவர்கள், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், கழிவு நீரகற்றல்/ மலக்கசடு அகற்றுவது தொடர்பான ஊர்தி நடமாட்ட விவரங்கள் அடங்கிய பதிவு புத்தகத்தை பராமரிக்க வேண்டும் மற்றும் அதை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

- கசடு அகற்றும் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் பாதுகாப்பற்ற முறையில் அகற்றுவதைத் தடை செய்தல்

- பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உரிமம் பெற்றவர்கள், சட்ட விரோதமாக மலக் கசடுகளை வெளியேற்றுதலையும், கழிவுகளை அகற்றுவதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சட்டவிரோதமாக வெளியேற்றுதலையும் சென்னைக் குடிநீர் வாரியம் கண்காணிக்கும்,

ஒரு நபரோ அல்லது கழிவுநீர் ஊர்தி இயக்குபவரோ, நகருக்குள் அமைந்திருக்கும் குடியிருப்பு அல்லது வணிக வளாகங்கள் அல்லது நிறுவனங்களில் இருந்து மலக் கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்து, ஊர்திகளின்மூலம் வெளியேற்றுவதற்கான உரிமம் பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட ஒரு படிவத்தில் தேவையான ஆவணங்களுடன் உரிமத்தொகை ரூ.2,000 உடன் உரிமம் வழங்கும் உரிய அலுவலரிடம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

கழிவுநீர் ஊர்திகளை இயக்குபவர்கள், கழிவுநீரை வெளியேற்றும் வசதியை பயன்படுத்தக்கூடிய 22 இடங்களை சென்னைக் குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

உரிமதாரர் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும், மேலும், தன்னிடம் பணிபுரியும் ஒவ்வோர் ஓட்டுநர் மற்றும் பணியாளரும், ஆண்டுதோறும் உடல்நல பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்து, உரிமம் வழங்கும் அதிகாரியிடம் அதற்கான பதிவைச் சமர்ப்பிக்க

2023 மார்ச் 30]

வேண்டும். மேலும், உரிமம் பெற்றவர், தன்னிடம் பணிபுரியும் ஒவ்வோர் ஓட்டுநர் மற்றும் பணியாளருக்கு, ரூ.10 இலட்சம் மதிப்புடைய தனிநபர் விபத்துக் காப்பீட்டை ஒவ்வோர் ஆண்டும் செலுத்த வேண்டும்.

புதிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், குறிப்பிட்ட வாகனங்களை பறிமுதல் செய்யவும் அதிகாரம் அளிக்கிறது. சட்டம், விதிகள், துணை விதிகள் அல்லது வேறு ஏதேனும் விதிமுறைகளின்கீழ் குற்றம் நடந்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருப்பின், வாரியத்தின் பகுதி பொறியாளர், வாகனத்தை பறிமுதல் செய்யலாம் அல்லது அத்தகைய குற்றத்தைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பிற பொருள் அல்லது உபகரணங்கள் மற்றும் வாகனம் ஆகியவற்றை வாரியத்தின் சம்பந்தப்பட்ட பிராந்திய மேற்பார்வை பொறியாளர் முன், அவரது எல்லைக்குட்பட்ட பகுதியில் இதுபோன்ற குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார், பம்ப், ட்யூப், கருவி அல்லது பிற பொருள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை 24 மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

எவரேனும், விதிகளை மீறினால் அல்லது விதிகளுக்கு இணங்கத் தவறினால், முதல் தடவை குற்றத்திற்கு ரூ.25,000/- வரையும், இரண்டாவது அல்லது அடுத்தடுத்த குற்றங்களுக்கு ரூ.50,000/- வரையும் அபராதம் நீட்டிக்கப்படும். மேலும், தொடர்ச்சியாக விதிகளை மீறும் பட்சத்தில் கழிவுநீர் ஊர்திகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும்.

5.6 பணியாளர் திறன் மேம்படுத்துதல்

சென்னைக் குடிநீர் வாரியம் 1982-ம் ஆண்டு பயிற்சி மையத்தை நிறுவி, பல்வேறு உள்வளாக பயிற்சி வகுப்புகள், மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் (CPHEEO) அமைப்பின் ஆதரவில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறப்பு பயிற்சி வகுப்புகளை, வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது. வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பான சுமார் 42 பயிற்சி வகுப்புகள் மற்றும் CPHEEO ஆதரவில் 5 புத்தாக்க பயிற்சி வகுப்புகள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்றன. மேலும், பல்வேறு சிறப்பு பயிற்சிகள் உள்ளிட்ட பிற அரசு நிறுவனங்களுக்கான பிரத்யேக சிறப்பு பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

தொழில் முனைவோர்/புதிதாக தொழில் தொடங்குவோரை ஆதரிக்கும் விதமாக தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் (EDII-TN) இணைந்து பயிற்சி அளிக்க வாரியம் முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

பயிற்சி மையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையான தகவல் தொழில்நுட்பம்மூலம் செயற்படுத்துதல் மற்றும் இணைய வழியிலான மின் கற்றல் முறையை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.7 தொழில்நுட்ப பயன்பாடு

5.7.1 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகளின் புவிசார் வரைபடத்தை, புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தயாரிக்கும் பணி தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) அமர்த்திய கலந்தாலோசகர்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தின் (TNUFIP) கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள்மூலம் நிலத்திற்கு அடியிலும், நிலத்தின் மேற்பரப்பிலும் உள்ள வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகள் ஆகியவை புவியியல் தகவல் அமைப்புத்தளத்தில் வரைபடமாக்கப்படும். இப்பணி, உட்கட்டமைப்புகளின் சிறந்த பராமரிப்பிற்கும், அவற்றின் மேலாண்மைக்கும் உதவும். இவற்றின் வாயிலாக சென்னை மாநகர மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட முடியும். மேலும், இப்பணியில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பொறியாளர்களுக்கு, புவியியல் தகவல் அமைப்புதளத்தின்மூலம் கட்டமைப்புகளைப் பராமரிக்க பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திட்டத்திற்கு, சிந்தாதிரிபேட்டையிலுள்ள வாரிய தலைமை அலுவலகத்தில், புவியியல் தகவல் அமைப்பு சிறப்பு கட்டுப்பாட்டு அறையை, ரூ.17.80 கோடி மதிப்பீட்டில் அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு 20-1-2023 ஆம் நாளிட்ட அரசாணை எண் 8, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

2023 மார்ச் 30]

வாயிலாக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

(1) புவியியல் தகவல் அமைப்பு கட்டுப்பாட்டு அறையின் பணி நிலையங்கள், தரவு மையம் மற்றும் தரவு மீட்டு மையம் ஆகியவைகளுக்கு தேவையான புவியியல் தகவல் அமைப்பு சேவையக (GIS Server) வன்பொருள் மற்றும் மென்பொருள்களைக் கொள்முதல் செய்தல்

(2) புவிசார் தொழில்நுட்ப சேவையக மென்பொருள் கொள்முதல் செய்தல்

(3) அளவை உபகரணங்களைக் கொள்முதல் செய்தல்

(4) புவியியல் தகவல் அமைப்பு குழுவிற்கான பணியாளர்களை தேர்வு செய்தல் மற்றும்

(5) வாரிய தலைமை அலுவலகத்தில் புவியியல் தகவல் அமைப்பு கட்டுப்பாட்டு அறை அமைப்பதற்கான உட்கட்டமைப்பு செலவு

5.7.2 புவியிடங்காட்டி (GPS)மூலம் குடிநீர் ஊர்திகளைக் கண்காணித்தல்

குடிநீர் குழாய் இல்லாத தெருக்கள் மற்றும் குறைவான நீர் அழுத்தமுள்ள தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு வழக்கமான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் வகையில் லாரிகள்மூலம் வாரியம் நேரடியாகவும் அல்லது மேற்கண்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் தொட்டிகளில் (HDPE) நிரப்புதல் மூலமாகவும் குடிநீர் வழங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 3,600 லாரி நடைகள்மூலம் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு லாரிகள்மூலம் வழங்கப்படும் குடிநீர், புவியிடங்காட்டி (GPS) கண்காணிப்பு அமைப்புமூலம் தொடர் கண்காணிப்பு செய்யப்படுவதால், சரியான நேரத்தில் உரிய மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

5.7.3. நிகழ்நிலை (Online) சேவைகள்

நுகர்வோர் https://chennaimetrowater.tn.gov.in என்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இணையதளம்மூலம் பின்வரும் நிகழ்நிலை சேவைகளைப் பெறலாம்.

(1) பொது மக்களின் குறைகளை களைதல்

(2) குடிநீர் வரி மற்றும் குடிநீர்/கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல்

(3) குடியிருப்புக்கான புதிய குடிநீர்/கழிவுநீர் இணைப்பு (தரைதளம் + 2 தளங்கள் வரை)

(4) தொழிற்சாலைகளுக்கான புதிய குடிநீர் இணைப்பு

(5) அழைத்தால் இணைப்பு திட்டம் (கழிவுநீர் இணைப்புக்கு) பதிவு செய்தல் (தரைதளம் + 2 தளங்கள் வரை)

(6) குடிநீர் ஊர்திக்கு பதிவு செய்தல்

(7) கழிவுநீர் அகற்ற ஊர்திக்குப் பதிவு செய்தல்

(8) நிலத்தடி நீர் உரிமம் பெறுதல்

5.7.4 தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகள்

சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து, வாரியத்தின் அனைத்துப் பணிகள் மற்றும் சேவைகளையும், முழுமையாக (End-to-End) தகவல் தொழில்நுட்பம்மூலம் செயல்படுத்தல் மற்றும் புதிய நிறுவன வள திட்டமிடல் (ERP) ஆகிய பணிகளை ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டமானது, ஜூன் 2023-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.8 சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டம்

சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டம் மற்றும் அதன் வழங்கல் இணைக்கப்பட்ட குறிகாட்டிகளுக்கு (DLI), 16-9-2021 ஆம் தேதியிட்ட, நிதித் துறையின் (உட்கட்டமைப்பு அலகு) அரசாணை எண் 289-ன்படி, அரசு கொள்கை ரீதியான ஒப்புதலை வழங்கியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகரப் போக்குவரத்துக் கழகம், நீர்வளத் துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை பெருநகரப் போக்குவரத்து ஆணையம் ஆகியவை இதில் பங்கேற்கும் முகமைகள் ஆகும். கூட்டாண்மையானது, உயர்தர, நீடித்த மற்றும் மீள்திறன்மிக்க சேவைகளுக்கு மாறுவதற்கு, கீழ்க்காணும் மூன்று பகுதிகளைக் கொண்ட கட்டமைப்பை ஏற்றுக்கொள்கிறது.

2023 மார்ச் 30]

(i) சேவைகளை வழங்கும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்சார் மயமாக்குதல்

(ii) பங்கேற்கும் முகமைகளின் செயல்பாட்டு திறன் மற்றும் சேவை வழங்கல் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும்

(iii) நிதிநிலைத் தன்மையை மேம்படுத்துதல்.

இது, இணைக்கப்பட்ட முடிவுகள் செயல்பாட்டிற்கான (PforR), முக்கிய முடிவுகள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதற்கான பல துறை திட்டமாகும். சேவை வழங்கல் செயல்திறனில் முன்னேற்றம் மற்றும் பயனர் கட்டணங்கள்மூலம் மீட்டெடுக்கப்படும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகளின் பங்கு அதிகரிப்பு ஆகியவை சென்னை குடிநீர் வாரியத்திற்கான நிரல் மேம்பாட்டு நோக்கங்கள் (PDO) ஆகும். திட்ட காலத்தில், சென்னை குடிநீர் வாரியம் கீழ்க்காணும் 4 வழங்கலுடன்கூடிய குறிகாட்டிகளை (DLI) எய்த வேண்டும்.

(i) வழங்கலுடன்கூடிய குறிகாட்டி 4 - பொது கொள்முதலின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்

(ii) வழங்கலுடன்கூடிய குறிகாட்டி 7 - குடிநீர் விநியோகத்தில் மேம்பட்ட செயல்பாட்டு திறன்

(iii) வழங்கலுடன்கூடிய குறிகாட்டி 8 - குடிநீர் வழங்கல் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்

(iv) வழங்கலுடன்கூடிய குறிகாட்டி 10 - குடிநீர் வழங்கல் சேவைகளின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துதல்

5.8.1 அளவீட்டு கொள்கை

சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டத்தின் வழங்கலுடன்கூடிய குறிகாட்டி (DLI) 7-ன் ஒரு பகுதியாக, சென்னை குடிநீர் வாரியமானது அளவீடு செய்வதற்கான கொள்கையை ஏற்க வேண்டும். 23-11-2022 நாளன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், அளவீட்டுக் கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கொள்கையின் முக்கிய நோக்கங்கள்:

(i) திறமையான நீர் பயன்பாட்டை ஊக்குவிப்பதன்மூலம் நீர் சேமிப்பை மேம்படுத்துதல்

(ii) வருவாய் அல்லாத நீர் (NRW) குறைப்பின்மூலம் செலவு மீட்பை அதிகரிக்க செய்தல்

(iii) அனைத்து நுகர்வோருக்கும் குடிநீர் சேவைகளுக்கு நியாயமான மற்றும் சரியான கட்டணம் வசூலிப்பதை உறுதிபடுத்துதல்.

(iv) 2023 ஆம் ஆண்டிற்குள் அனைத்து உயர் அடுக்கு மற்றும் வணிக இணைப்புகளுக்கு 100% அளவீடு செய்தல் மற்றும் 2027 ஆம் ஆண்டிற்குள் 80% வீட்டு இணைப்புகளுக்கு (தரை தளம் + 2 மற்றும் அதற்குக் கீழே உள்ள கட்டடங்கள்) அளவீடு செய்தல்.

(v) அளவீட்டு மானிகளுடன் கூடிய இணைப்புகளை நிறுவுதல், குடிநீர் அளவு மானிகளைப் பராமரித்தல் தொடர்பாக, சென்னைக் குடிநீர் வாரியம் மற்றும் நுகர்வோர் ஆகிய இருவரின் பங்களிப்பினையும், பொறுப்புகளையும் நிர்ணயித்தல்.

இந்தக் கொள்கையானது, நுகர்வோர்களின் வகைப்பாட்டிற்கு ஏற்ப அளவீடு, அளவுமானி தேர்வு, அதன் விவரக்குறிப்பு மற்றும் நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை உள்ளடக்கியது. இது, கட்டணம், பட்டியலிடல், வசூலித்தல் மற்றும் அளவீடு தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்யும் நடைமுறைகளை உள்ளடக்கியது. அளவீடு தொடர்பாக வாரியம் மற்றும் நுகர்வோரின் பொறுப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், அளவீட்டுக் கொள்கையானது, பெருமளவு நீர் நுகர்வு மற்றும் உயர் வருவாய் பிரிவுகள் தொடங்கி, குடியிருப்பு அல்லாத நுகர்வோர் மற்றும் புதிய நுகர்வோர்களுடன், குடிநீர் இணைப்புகளைக் கொண்ட அனைத்து நுகர்வோருக்கும், படிப்படியாக மற்றும் முன்னேற்றமான முறையில், குடிநீர் பயனீட்டளவு அளவுமானிகளை சென்னைக் குடிநீர் வாரியம் நிறுவ வேண்டும் என வரையறுத்துள்ளது.

5.8.2 பெருமளவு குடிநீர் அளவுமானி பொருத்துதல்

நீர் தணிக்கை மற்றும் வருவாய் இல்லா நீர் அளவை கண்டறிவதற்கு, பெருமளவு அளவுமானிகளை பொருத்துதல் உதவி புரிகிறது. குடிநீர் தணிக்கையானது, செயல்திறன் ஆய்வுகள், வசதிகளை திட்டமிடல் மற்றும் வளம் காக்கும் நடவடிக்கைகளின் மதிப்பீடு ஆகியவற்றிற்கான அத்தியாவசிய தரவுகளை வழங்குகிறது.

2023 மார்ச் 30]

இதன் அடிப்படையில், சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் பகிர்மான நிலையங்கள் மற்றும் குடிநீர் நிரப்பு நிலையங்களில், 'இணைய தொழில்நுட்பம் சார்ந்த தரவுகளை மாற்றும் வசதிகொண்ட மின்காந்த பாய்வுமானிகளை' (IoT technology-based electromagnetic flow meters) *வழங்கி, பொருத்துதல் மற்றும் இயக்குதல் அடிப்படையில், ஐந்து ஆண்டுகளுக்கு விரிவான இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் உள்ளடங்கிய சென்னை குடிநீர் வாரியத்தின் செயற்குறிப்பிற்கு, அரசு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ், 8-2-2023 ஆம் தேதியிட்ட, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 54 வாயிலாக ரூ.43.01 கோடிக்கு, நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.*

5.8.3 சென்னைக் குடிநீர் வாரியத்தில் மின்னணு கொள்முதல் வழித்தடத்தை மேற்கொள்ளல்

மின்னணு கொள்முதல் வழித்தடத்திற்கு 23-11-2022 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மின்னணு கொள்முதல் முறையில் கோரப்படும் அனைத்து வித ஒப்பந்தப்புள்ளிகள் குறித்தும் இந்த வழித்தடமானது விரித்துரைக்கிறது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகளை நிகழ்நிலையில் மதிப்பாய்வு செய்வதற்காக, ஏப்ரல் 2023-ல் இருந்து ஒரு பொதுவான தொழிற்நுட்ப மதிப்பாய்வுக் கூறு ஏற்படுத்தப்பட உள்ளதையும் எடுத்துரைக்கிறது. இதுதொடர்பாக, வாரியத்தின் ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு பிரிவின் பணியாளர்களுக்கு, தேசிய தகவல் மையம் வாயிலாக, பொதுவான தொழிற்நுட்ப மதிப்பாய்வு மற்றும் கலந்தாலோசக சேவைகளுக்கு தரம் மற்றும் செலவு அடிப்படையின்கீழ் ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றிற்கான பயிற்சி ஆகஸ்டு 2022-ல் அளிக்கப்பட்டது.

5.8.4 சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் சேவை நிலை அளவுகோலை ஏற்படுத்தல்

அடிப்படை வீட்டு இணைப்புகள் மற்றும் விநியோக நேரங்கள் உள்ளடக்கிய கணக்கெடுப்புமூலம், சேவை நிலை அளவுகோலை (SLB) *சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது அமைக்க உள்ளது. 23-11-2022 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், அடிப்படை கணக்கெடுப்பிற்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.*

மேற்கண்ட வலுவான அடிப்படை கணக்கெடுப்பிற்கு கீழ்க்கண்ட ஐந்து வகையான ஆரோக்கியமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

1) சென்னைக் குடிநீர் வாரிய நுகர்வோர் தரவுதளத்தை சரிபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.

2) குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீரின் தரம் சார்ந்த சேவைகள் தொடர்பான குடியிருப்பு மாதிரி கணக்கெடுப்பை வடிவமைத்து செயல்படுத்துதல்.

3) குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் தொடர்பாக கள மாதிரி ஆய்வு மேற்கொள்ளல்.

4) அடிப்படை மதிப்பீடு, குடிநீர் விநியோகம் தொடர்பான கூட்டுக் குறியீடு மற்றும் அதுகுறித்த அறிக்கை உருவாக்குதல்.

5) சென்னை மாநகரின் பிரதான பகுதிகளில் குடிநீர் விநியோகம் இல்லாத பகுதிகளிள் விவரணையாக்கம் மற்றும் தரவு அறிக்கையை உருவாக்குதல்.

5.9 நுகர்வோர் குறைகளைக் கண்காணித்தல்

5.9.1 24X7 கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம்

24 மணி நேரமும் இயங்கும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, 13-3-2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையமானது, நுகர்வோர் குறை தீர்க்கும் மையமாக இருப்பதோடு, குடிநீர் ஊர்திகள் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளின் பராமரிப்பு வாகனங்களின் புவியிடங்காட்டி (GPS) கண்காணிப்பு அமைப்புமூலம் தொடர் கண்காணிப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் ஆகியவற்றை கணினிமூலம் கண்காணிக்கும் வசதிகளை (SCADA) கொண்ட காணொளி சுவரினையும் கொண்டுள்ளது மற்றும் கண்காணிப்பு படக்கருவியின்மூலம் குடிநீர் நிரப்பும் இடங்களையும் கண்காணிக்கிறது. நுகர்வோர் தங்களது குறைகளையும்/ புகார்களையும் நேரடியாகவும் அல்லது தொலைபேசி

2023 மார்ச் 30]

எண் 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1916 மூலமாகவும் பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறைகளைக் களைந்திட உடனடியாக சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்படுகிறது. அதன்படி நுகர்வோர்களின் குறைகள் உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

5.9.2 சென்னைக் குடிநீர் வாரிய 'செயலி'

நுகர்வோர் தங்களது குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்களை எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் உரிய அதிகாரிகளுக்கு கைபேசிமூலம் பதிவு செய்து அனுப்புவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் 'Metro water' என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலியை கூகுள் ப்ளேஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மேலும், பொதுமக்கள் தங்களது விவரங்களை அதாவது பெயர், கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை ஒருமுறை பதிவு செய்வதன்மூலம் குடிநீர்/கழிவுநீர் சம்பந்தமான புகார் குறித்த படங்கள்/புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் கைபேசிமூலம் அனுப்பி அதன் நிலையை தெரிவிக்கலாம். ஒரு பிரத்தியேக புகார் எண் உருவாக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபருக்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படுகிறது. இந்த செயலிமூலம் புகார்களின் நிலை குறித்தும் சரிபார்த்துக்கொள்ளலாம்.

5.9.3 உடன் விளைவுக் குறியீடு (QR Code) சுவரொட்டி

குடிமக்கள் நலனைக் கவனத்தில் கொண்டு, சேவை பெறுதலை, ஒரு புதிய மாதிரி வடிவமாக கொண்ட, தரமான உடன் விளைவுக் குறியீடு (QR Code) வடிவமைப்பு சுவரொட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின் குறைகளை எளிதான முறையில் அணுகி நிவர்த்தி செய்து கொள்வதற்காக 15 பகுதி அலுவலகங்களிலும், 200 பணிமனைகள் மற்றும் சென்னை மாநகரின் முக்கியப் பகுதிகளிலும், சுமார் 300 உடன் விளைவுக் குறியீடு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

5.9.4 திறந்தவெளி குறை தீர்க்கும் கூட்டம்

பொதுமக்கள்/நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்காக அனைத்து பகுதி அலுவலகங்களிலும்,

[2023 மார்ச் 30

ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை வாரியத்தால் திறந்தவெளி குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. மேற்பார்வை பொறியாளர் நிலையில் உள்ள உயர் அலுவலர்கள் தலைமையில் இக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. திறந்தவெளி கூட்டங்களில் பெறப்படும் புகார்கள்/குறைகள்/ஆலோசனைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5.10 பணியாளர்களின் நலன்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வாரியப் பணியாளர்களின் சேவைத்திறனை முக்கிய உடைமையாக கருதுகிறது. எனவே வாரியம் அவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

களப்பணியாளர்களின் சுகாதார நலனை மேம்படுத்த, தையற் கட்டணத்துடன் சீருடைகள், எண்ணெய், சோப்பு, மழை மேலங்கிகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் குறிப்பிட்ட கால முறையில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், வாரியப் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் நலன் சார்ந்த வசதிகள் வழங்கப்படுகின்றன:

- முழு நேரப் பணியில் இருக்கும் மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் ஆய்வக தொழில்நுட்ப உதவியாளர் அடங்கிய அத்தியாவசிய உபகரணங்களுடன் முதலுதவி வசதியுடன் உள்ள மருந்தகம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.
- கண், காது, நுரையீரல், இதயம் ஆகியவைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் அனைத்து தொழிலாளர்கள் பணியாளர்களின் நலனுக்காக அவ்வப்போது நடத்தப்படுகின்றன.
- அரசு விதிகளின்படி, வாரியத்தில் பணிபுரியும் அனைத்து மாற்றுத் திறனாளி ஊழியர்களுக்கும் பயணப்படி வழங்கப்பட்டு வருகிறது
- அரசின் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள், மருத்துவ வசதிகள் அனைத்தும் வாரிய

பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படுகிறது.

- பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளில் ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்படுகின்றன.
- இறந்த பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு கோரிக்கை மனு பெறப்பட்ட உடன், இறப்புக் கால பணப் பயன்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.
- முன்களப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் பணியின் போது தேவையான அத்தியாவசிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.
- கழிவுநீர் பணியின்போது நச்சுவாயு தாக்கி இறப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு வாரிய ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கும் சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்டுள்ள 12.08.2022 ஆம் தேதியிட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மனிதர் கழிவுகளை மனிதர்களே அகற்றுதலை தடை செய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்விற்கான விதிகளில் குறிப்பிடப்பட்ட கழிவுநீர் சார்ந்த பணிகளில் கடைபிடிக்க வேண்டிய அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளும் சென்னை குடிநீர் வாரியத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது.
- மேற்கண்ட விதிகளின் அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளின் ஒப்பந்ததாரர்களுக்கு, இந்த விதிகளில் உள்ள பொருள்களை உள்ளடக்கி, ஒப்பந்த நிபந்தனைகள் மாற்றியமைக்கப்பட்டு, எந்தவொரு நபரும் மனித கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடவில்லை என்பதையும், அவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) வழங்கப்படுகின்றன என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது.

[2023 மார்ச் 30

5.11 நிதி நிலைமை

2022-23 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட தற்காலிக திருத்திய மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவு ரூ.1,418 கோடி மற்றும் மொத்த வருமானம் ரூ.1,310 கோடி ஆகும்.

2021-22 முதல் 2023-24 வரையுள்ள ஆண்டுகளுக்கான வருமானம், செலவினம், பற்றாக்குறை குறித்த விவரங்கள் அட்டவணை 5.7-ல் உள்ளன.

அட்டவணை 5.7

(ரூ. கோடியில்)

வ எண்	விவரங்கள்	திருத்திய மதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது) 2021—22 ஆம் நிதியாண்டு	தற்காலிக திருத்திய மதிப்பீடு 2022—23 ஆம் நிதியாண்டு	தற்காலிக வரவு செலவு திட்ட மதிப்பீடு 2023—24 ஆம் நிதியாண்டு
I	**வருவாய் வருமானம்**			
1	குடிநீர் விற்பனை	403	373	402
2	குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி	240	425	446
3	சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் மூலமான வருமானம்	164	166	176
4	இதர வருமானங்கள்	64	87	88
5	மானியங்கள்	236	259	399
	மொத்தம்	1,107	1,310	1,511

2023 மார்ச் 30]

வ எண்	விவரங்கள்	திருத்திய மதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது) 2021—22 ஆம் நிதியாண்டு	தற்காலிக திருத்திய மதிப்பீடு 2022—23 ஆம் நிதியாண்டு	தற்காலிக வரவு செலவு திட்ட மதிப்பீடு 2023—24 ஆம் நிதியாண்டு
II	**வருவாய் செலவினம்**			
1	மின்கட்டணம் (கடல்நீர் குடிநீராக்கும் செலவு நீங்கலாக)	144	184	211
2	குடிநீர் ஊர்தி வாடகை கட்டணம்	70	74	74
3	இயக்குதல் மற்றும் பராமரிப்பு (கடல்நீர் குடிநீராக்கும் செலவு நீங்கலாக)	315	388	390
4	கடல்நீரை குடிநீராக்குதல்* (மின்கட்டணம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு)	309	225	430
5	அலுவலகம் மற்றும் நிருவாகம்	15	17	18
6	ஊதியம் மற்றும் ஓய்வூதியம்	241	258	287
7	வட்டி	82	72	64
8	தேய்மானம்	200	200	200
	மொத்தம்	1,376	1,418	1,674

[2023 மார்ச் 30

வ எண்	விவரங்கள்	திருத்திய மதிப்பீடு (அங்கீகரிக்கப்பட்டது)	தற்காலிக திருத்திய மதிப்பீடு	தற்காலிக வரவு செலவு திட்ட மதிப்பீடு
		2021—22 ஆம் நிதியாண்டு	2022—23 ஆம் நிதியாண்டு	2023—24 ஆம் நிதியாண்டு
	உபரி/பற்றாக்குறை	-(269)	-(108)	-(163)

* ஜூலை 2023 முதல் செயல்படவுள்ள 150 MLD கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடு 28-2-2023 அன்று கொடுக்கப்படவேண்டிய, பெறப்படவேண்டிய மற்றும் கடன் நிலுவைத் தொகை விவரங்கள் அட்டவணை 5.8-ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 5.8

(ரூ. கோடியில்)

வ. எண்	விவரங்கள்	28.02.2023 அன்று தொகை (தோராயமாக)
I	**கொடுக்கப்படவேண்டியவை:**	
1	சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் - இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள்	18
2	திரும்ப கொடுக்க வேண்டிய வைப்புத் தொகைகள்	199
3	ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கவேண்டியவை (திட்ட நிதி)	26
	மொத்தம்	243

2023 மார்ச் 30]

வ. எண்	விவரங்கள்	28.02.2023 அன்று தொகை (தோராயமாக)
II	**பெறப்படவேண்டியவை: (குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணம்)**	
1	*உள்ளாட்சி அமைப்புகள்*	*25*
2	*அரசுத் துறைகள்*	*82*
3	*நுகர்வோர்கள்*	*220*
	மொத்தம்	*327*
III	**கடன் நிலுவைத் தொகை:**	
	அ) அசல் (அரசுக்கு செலுத்தவேண்டிய ரூ.1,522 கோடி உட்பட)	*1,829*
	ஆ) வட்டி(அரசு நிலுவைத் தொகை ரூ.283 கோடி TUFIDCO ரூ.7 கோடி)	*290*
	மொத்தம்	*2,119*

2023-24 ஆம் ஆண்டின் தற்காலிக வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவினமானது ரூ.1,674 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.1,511 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின்மூலம் ரூ.446 கோடியும், குடிநீர் கட்டணங்களின்மூலம் ரூ.402 கோடியும், சுத்திகரிக்கப்பட்ட பயன்பாட்டு நீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் மூலமான வருமானம் ரூ.176 கோடியும் இதர வருவாய் ரூ.88 கோடியும் ஆகும்.

6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டமுன் வடிவு, 1970 (தமிழ்நாடு சட்டம் 4-1971)-ன்படி 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர பகுதிகளை தவிர்த்து, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர் திட்டங்கள் மற்றும் நகர பகுதிகளில் கழிவுநீர்

அகற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் ஒரு பொறியியல் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

வாரிய இயக்குநர்கள்

தலைவர்	
1	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
இயக்குநர்கள்	
2	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள ஆதாரத் துறை
3	அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
4	அரசு முதன்மைச் செயலாளர், மருத்துவம் — மக்கள் நல்வாழ்வுத் துறை
5	மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்
6	ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
7	மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
8	அரசு கூடுதல் செயலாளர், நிதித் துறை
9	பேரூராட்சிகளின் இயக்குநர்
10	நகராட்சி நிருவாக இயக்குநர்
11	இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
12	நிதி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
13	பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நான்கு மண்டலங்களாக

2023 மார்ச் 30]

பிரிக்கப்பட்டு, நான்கு தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த மண்டலங்களின்கீழ் செயல்படும் 16 வட்ட அலுவலகங்கள், 85 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 259 உபகோட்ட அலுவலகங்கள்மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், நகர தனிக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்தும் வருகின்றன.

6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை:

- *தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.*
- *நகர பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்*
- *ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்து, தேவையான குடிநீரை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குதல்.*
- *நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.*

6.2 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

- *தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல், வடிவமைத்தல், மற்றும் செயல்படுத்துதல்.*
- *நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.*
- *கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.*
- *வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.*
- *ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்.*

6.3 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

6.3.1 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்/தனிக் குடிநீர் திட்டங்கள்

2022-23 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, கிருஷ்ணகிரி, தேனி, மதுரை, தென்காசி, திருநெல்வேலி, ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 1,802 ஊரக குடியிருப்புகளில் உள்ள 14.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 11கூட்டுக்குடிநீர் திட்டங்கள்/தனிக்குடிநீர் திட்டங்கள் நாளொன்றுக்கு 99.59 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் ரூ.956.74 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.1

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	திருச்சிராப்பள்ளி மாவட்டம்,தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.26 MLD)	*49.95*	*0.58*
2	கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளப்பள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.46 MLD)	*31.82*	*0.41*

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
3	*தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (14.36* MLD*)*	*76.15*	*0.90*
4	*தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அர்ப்பணிப்புத் திட்டம்*	*30.00*	
5	*மதுரை மாவட்டம், ஆனையூர் நகராட்சி (தற்போது மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) குடிநீர் அபிவிருத்தி திட்டம் (5.40* MLD*)*	*8.97*	*0.72*
6	*ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 96 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.31* MLD*)*	*56.94*	*0.64*

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
7	தென்காசி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 48 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பேரூராட்சியைச் சார்ந்த 1 குடியிருப்பிற்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.18 MLD)	50.50	0.50
8	நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி, ஆலம்பாளையம் மற்றும் படவீடு பேரூராட்சிகள், பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (24.28 MLD)	399.46	4.92
9	கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் பத்மநாபபுரம், காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் மேம்பாட்டு திட்டம் (31.81 MLD)	174.00	3.10

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
10	திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (8.16 MLD)	46.55	1.81
11	திருநெல்வேலி மாவட்டம், மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.37 MLD)	32.40	1.33
	மொத்தம் (99.59 MLD)	956.74	14.91

6.3.2 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2022-23 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், சிவகங்கை, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களைச் சார்ந்த 4 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியில் உள்ள 3.74 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 5 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.500.54 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 42.43 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்யும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட கழிவுநீரகற்று திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.2

வ. எண்.	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	கோயம்புத்தூர்	பொள்ளாச்சி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (11.25 MLD)	170.22	1.00
2	சிவகங்கை	காரைக்குடி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (16.00 MLD)	140.13	1.39
3	தேனி	மேலசொக்கநாதபுரம் பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (1.90 MLD)	41.72	0.22
4	கோயம்புத்தூர்	மேட்டுப்பாளையம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (8.65 MLD)	100.08	0.77
5	விருதுநகர்	சாத்தூர் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (4.63 MLD)	48.39	0.36
		மொத்தம் (42.43 MLD)	500.54	3.74

6.4 செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

6.4.1 குடிநீர்த் திட்டங்கள்

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு முறையே நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135, 90, 70 மற்றும் 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6.4.1.1 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

தற்பொழுது சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமரி, தேனி, கடலூர், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர்,

2023 மார்ச் 30]

நாகப்பட்டினம், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, ஈரோடு, கரூர், நீலகிரி, திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 12 நகராட்சிகள், 24 பேரூராட்சிகள் மற்றும் 9,811 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.7,084.64 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 489.29 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 79.25 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் 39 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 39 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், 10 திட்டங்கள், தேசிய வேளாண் மற்றும் கிராமப்புர வளர்ச்சி வங்கி (NABARD) மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்ட (MNP) நிதி ஆதாரங்களின்கீழ் 11 மாவட்டங்களில் உள்ள 4 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள் மற்றும் 6,198 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.3,667.06 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 258.30 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 49.02 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.3

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	சிவகங்கை மாவட்டம், 8 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2,452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (86.42 MLD)	1,752.73	16.11

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
2.	தேனி மாவட்டம், கடமலைக்குண்டு—மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (10.70 MLD)	162.43	1.78
3.	கடலூர் மாவட்டம், திட்டக்குடி, பெண்ணாடம், மங்களம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர், விருத்தாசலம் ஒன்றியங்களில் உள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (39.43 MLD)	479.00	7.92
4.	சேலம் மாவட்டம், இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (53.03 MLD)	652.84	6.03

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
5.	கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (36.15 MLD)	362.20	6.43
6.	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.45 MLD)	91.13	0.97
7.	நாகப்பட்டினம் மாவட்டம், 893 ஊரகக் குடியிருப்புகளுக்கான பயன்பாட்டிலுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம் (14.93 MLD)	42.46	7.03
8.	பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 73 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (4.05 MLD)	22.84	0.87

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
9.	கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஒன்றியத்தை சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.44 MLD)	31.00	0.54
10.	திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 ஊராட்சிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.70 MLD)	70.43	1.34
	மொத்தம் (258.30 MLD)	3,667.06	49.02

தஞ்சாவூர், திருப்பத்தூர், கரூர், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, இராணிப்பேட்டை, திருநெல்வேலி, மயிலாடுதுறை, செங்கல்பட்டு, நாமக்கல், தூத்துக்குடி, பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த 3,598 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 2 பேரூராட்சிகளுடன் இணைந்த 2 குடியிருப்புகளுக்கு ரூ.2,423.01 கோடி மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள்மூலம் 21.37 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 141.78 மில்லியன் லிட்டர் குடிநீர், 1,74,073 வீட்டிணைப்புகளின்மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

அட்டவணை 6.4

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர் & வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.97 MLD)	117.09	1.02
2	திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றாம்பள்ளி மற்றும் கந்திலி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (13.99 MLD)	182.09	2.91
3	கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 756 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (16.29 MLD)	440.63	2.09
4	ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (20.50 MLD)	412.12	3.16
5	ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.13 MLD)	87.68	0.50

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
6	ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியத்தைச் சார்ந்த கவுந்தபாடி ஊராட்சியிலுள்ள 55 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.00 MLD)	17.55	0.59
7	சேலம் மாவட்டம், ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு ஊராட்சியைச் சார்ந்த 8 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.99 MLD)	12.70	0.15
8	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோம்பை ஊராட்சியிலுள்ள முத்திகிராமம் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டம் (0.022 MLD)	0.75	0.004
9	கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஒன்றியம் முட்டம் ஊராட்சியிலுள்ள மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.22 MLD)	3.69	0.14
10	கன்னியாகுமரி மாவட்டம், மூஞ்சிரை ஒன்றியத்தைச் சேர்ந்த தூத்தூர் ஊராட்சியிலுள்ள 5 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம். (1.51 MLD)	3.51	0.22
11	இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம், சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஒன்றியங்களைச் சார்ந்த செம்பேடு மற்றும் 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.98 MLD)	42.30	0.72

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
12	*திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 109 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (11.26* MLD)	*248.59*	*1.90*
13	*திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த வாகைக்குளம் மற்றும் 12 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.20* MLD)	*12.05*	*0.16*
14	*மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தைச் சார்ந்த 7 ஊராட்சிகளில் உள்ள 32 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.46* MLD)	*36.14*	*0.20*
15	*செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோவளம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.82* MLD)	*13.62*	*0.14*
16	*நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியத்தில் உள்ள 11 ஊராட்சிகள் மற்றும் மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் ஒன்றிங்களைச் சார்ந்த 547 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.96* MLD)	*284.04*	*2.41*

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
17	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி ஒன்றியங்களைச் சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 97 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (6.80 MLD)	73.97	1.15
18	தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த பள்ளிபத்து ஊராட்சியில் உள்ள 4 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.08 MLD)	1.08	0.01
19	திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்தைச் சார்ந்த நல்லாத்தூர், என்.என். கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஊராட்சிகளில் உள்ள நல்லாத்தூர் மற்றும் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.56 MLD)	4.04	0.11
20	திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெட்டவாய்த்தலை ஊராட்சியில் உள்ள மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.42 MLD)	3.79	0.07
21	திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த M. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள 13 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (1.15 MLD)	7.24	0.11

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
22	பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியத்தைச் சார்ந்த *15* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (*1.81* MLD)	*34.97*	*0.29*
23	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த *174* ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (*11.71* MLD)	*119.22*	*1.37*
24	தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர், திருவையாறு, தஞ்சாவூர், ஒன்றியங்களைச் சார்ந்த *214* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (*16.78* MLD)	*248.67*	*1.79*
25	தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த *20* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (*1.17* MLD)	*15.48*	*0.16*
	மொத்தம் (141.78 MLD**)**	*2,423.01*	*21.37*

இதர நிதி ஆதாரங்களின்கீழ், விருதுநகர், தென்காசி மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சார்ந்த 8 நகராட்சிகள், 1 பேரூராட்சி மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.994.57 கோடி மதிப்பீட்டில் 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 89.21 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 8.85 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

[2023 மார்ச் 30

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.5

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி ஆதாரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (61.98 MLD)	TNSUDP	543.20	6.20
2.	விருதுநகர் மாவட்டம். அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (26.94 MLD)	HUDCO	444.71	2.60
3.	நீலகிரி மாவட்டம். குன்னூர் ஒன்றியத்தை சார்ந்த மேலூர் ஊராட்சியில் உள்ள அருகுச்சி மற்றும் 5 இதர குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.18 MLD)	SADP	1.21	0.03
4.	நீலகிரி மாவட்டம். உதகமண்டலம் ஒன்றியத்தை சார்ந்த மேல்குந்தா ஊராட்சியில் உள்ள கிண்ணக்கோரை மற்றும் 8 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.11 MLD)	SADP	5.45	0.016
	மொத்தம் (89.21 MLD)		994.57	8.85

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

6.4.1.2 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

14 மாவட்டங்களைச் சார்ந்த 7 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 10,480 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 64.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.13,607.98 கோடி மதிப்பீட்டிலான 19 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, ஜல் ஜீவன் மற்றும் அம்ரூத் 2.0 திட்ட நிதி ஆதாரங்களுடன், அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு வரும்போது தினசரி 597.46 மில்லியன் லிட்டர் குடிநீர் 11,86,366 வீட்டிணைப்புகள்மூலம் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.6

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	திருவாரூர் மாவட்டம் நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர் மற்றும் கொரடாச்சேரி ஆகிய *6* ஒன்றியங்களில் உள்ள *667* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் *(32.55* MLD*)*	*1,127.20*	*3.97*
2	திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒன்றியத்தில் உள்ள கங்கை கொண்டான் மற்றும் *21* ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் *(1.86* MLD*)*	*19.25*	*0.25*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
3	நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் மற்றும் பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 547 குடியிருப்புகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (பகுதி I) (86.04 MLD)	854.37	4.36
4	திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 41 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (4.12 MLD)	45.10	0.33
5	மதுரை மாவட்டம். கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஒன்றியங்களில் உள்ள 88 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (6.46 MLD)	127.18	1.31
6	மதுரை மாவட்டம். டி.கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி ஒன்றியங்களில் உள்ள 236 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் (8.80 MLD)	240.45	1.74

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
7	தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 252 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.81 MLD)	288.02	2.09
8	நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஒன்றியங்களைச் சார்ந்த 980 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (93.00 MLD)	1,752.00	7.57
9	மதுரை மாவட்டம், 7 ஒன்றியங்களைச் சார்ந்த 867 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (60.00 MLD)	1,559.07	7.12
10	ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், 22 ஊராட்சிகளிலுள்ள 434 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (14.20 MLD)	482.36	1.52
11	திருநெல்வேலி மாவட்டம், 6 ஒன்றியங்களை சார்ந்த 831 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (22.79 MLD)	605.75	2.59
12	விருதுநகர் மாவட்டம், 8 ஒன்றியங்களில் உள்ள 1,286 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் 2 ஒன்றியங்களில் உள்ள 45 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (45.90 MLD)	1,387.73	7.25

[2023 மார்ச் 30

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
13	தூத்துக்குடி மாவட்டம், 6 ஒன்றியங்களை சார்ந்த 363 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் (16.57 MLD)	515.72	3.05
14	திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மற்றும் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.76 MLD)	44.58	0.42
15	கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை நகர் பேரூராட்சி மற்றும் 2 ஒன்றியங்களைச் சார்ந்த 10 ஊராட்சிகளில் உள்ள 36 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.17 MLD)	255.64	1.28
16	இராமநாதபுரம் மாவட்டம் 2 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களில் உள்ள 2,306 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 7 ஒன்றியங்களில் உள்ள 1,366 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (158.38 MLD)	4,187.84	18.86
17	திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த வேளகாபுரம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.25 MLD)	3.18	0.04

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
18	திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த அம்மம்பாக்கம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.23 MLD)	3.64	0.05
19	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சிக்கான குடிநீர் திட்டம் (8.57 MLD)	108.90	0.39
	மொத்தம் (597.46 MLD)	13,607.98	64.19

6.4.1.3 2022-2023 ஆம் ஆண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளிலுள்ள 1.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.490.00 கோடிக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் மற்றும் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

6.4.2 தனிக் குடிநீர்த் திட்டங்கள்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான தனிக் குடிநீர்த் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாகவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் முடிந்தவுடன் அவை இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக அந்தந்த நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

6.4.2.1 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (அம்ரூத்)

அம்ரூத் திட்டத்தின்கீழ், 8 குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 திட்டங்கள்

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 குடிநீர்த் திட்டங்கள் ரூ.1,563.65 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள், 36.69 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 367.73 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நடைபெற்று வரும் திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.7

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	நாகர்கோயில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (49.56 MLD)	296.08	3.90
2.	பவானி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு புதிதாக இணைக்கப்பட்ட பகுதியினை உள்ளடக்கிய விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் — பில்லூர் – III (318.17 MLD)	779.86	32.79
3	கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (பகிர்மான குழாய் அமைப்பு மட்டும்)	487.71	—
	மொத்தம் (367.73 MLD)	1,563.65	36.69

2023 மார்ச் 30]

6.4.2.2 வெளிப்புற நிதி உதவித் திட்டங்கள் (EAP) (Externally Aided Projects, KfW- ஜெர்மன் மேம்பாட்டு வங்கி)

வெளிப்புற நிதியுதவித் திட்டங்களின்கீழ், திருநெல்வேலி மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ.295 கோடி மதிப்பீட்டில் 6.88 இலட்சம் மக்கள் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளது.

6.4.2.3 இதர நிதி ஆதாரத் திட்டங்கள்

இதர நிதி ஆதாரத் திட்டங்களின்கீழ் தேனி, மதுரை, கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகளுக்கு ரூ.240.08 கோடி மதிப்பீட்டில் 5 குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் முடிவுறும்போது 2.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 28.79 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.8

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி ஆதாரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	*தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (2.00* MLD*)*	NABA-RD	*13.31*	*0.28*
2	*மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (9.98* MLD*)*	IUDM	*73.03*	*0.64*

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி ஆதாரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
3	கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (4.83 MLD)	IUDM	30.94	0.31
4	திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (9.44 MLD)	IUDM	109.68	0.85
5	ஈரோடு மாவட்டம், சிவகிரி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (2.54 MLD)	O&M GFF	13.12	0.26
	மொத்தம் (28.79 MLD)		240.08	2.34

6.5 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

6.5.1 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

6.5.1.1 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (அம்ரூத்):

ரூ.1,060.49 கோடி மதிப்பீட்டில் 4 பாதாள சாக்கடைத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்களால் கோயம்புத்தூர் மாநகராட்சி (பகுதி) மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 9.63 இலட்சம் மக்கள் பயனடைவர். மேலும் இத்திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு 73.17 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரித்து சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.9-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

அட்டவணை 6.9

வ. எண்.	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (16.71 MLD)	165.55	1.83
2.	விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (21.85 MLD)	251.20	2.20
3.	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி (குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) பாதாள சாக்கடைத் திட்டம் (30.53 MLD)	591.14	5.17
4.	இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (4.08 MLD)	52.60	0.43
	மொத்தம் (73.17 MLD)	**1,060.49**	**9.63**

6.5.1.2 வெளிப்புற நிதி உதவித் திட்டங்கள் (Externally Aided Projects, KfW-ஜெர்மன் மேம்பாட்டு வங்கி)

வெளிப்புற நிதி உதவித் திட்டங்களின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், துடியலூர், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.860.80 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டம் முடிவுற்ற பின், 3.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 34.92 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

6.5.1.3 இதர நிதி ஆதார பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

கன்னியாகுமரி, தூத்துக்குடி, விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள், 3 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி பயன்பெறும் வகையில் ரூ.895.88 கோடி மதிப்பீட்டில் 6 பாதாள சாக்கடைத் திட்டங்கள் இதர நிதி ஆதாரங்களின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்றபின், 4.58 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 52.80 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.10

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி ஆதாரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (17.66 MLD)	UIDS SMT	129.95	1.54
2	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி வளர்ச்சி சார்ந்த பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (6.25 MLD)	Smart Cities Mission	120.53	0.54

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி ஆதாரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
3	விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (இணைக்கப்பட்ட பகுதி) (6.91 MLD)	HUDCO	263.00	0.60
4	விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (11.44 MLD)	HUDCO	268.00	1.00
5	திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (6.52 MLD)	IUDM	62.82	0.57
6	செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (4.02 MLD)	IUDM	51.58	0.33
	மொத்தம் (52.80 MLD)		**895.88**	**4.58**

6.5.2 புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி (பகுதி) பகுதிகள் (மண்டலம்-VI), ஓசூர் மாநகராட்சி மற்றும் தூத்துக்குடி

மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத (Non Area Based Development) பிற பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,006.15 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, அம்ரூத் 2.0 நிதி ஆதாரத்துடன் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.11-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.11

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு மற்றும் சரவணம்பட்டி (பகுதி) பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (மண்டலம் –VI) (9.95 MLD)	279.05	0.64
2.	ஓசூர் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (32.65 MLD)	574.96	2.25
3.	தூத்துக்குடி மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத (Non Area Based Development) பிற பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (5.37 MLD)	152.14	0.43
	மொத்தம் (47.97 MLD)	**1,006.15**	**3.32**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

6.5.3 2022-2023 ஆம் ஆண்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள்

மன்னார்குடி, அருப்புக்கோட்டை நகராட்சிகளுக்கான 2 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்ட அறிக்கை, 1.76 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.642.92 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் மற்றும் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

6.6 சிறப்புத் திட்டங்கள்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்—இரண்டாவது கட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை உயர்த்தி வழங்கும் வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20-1-2022-ல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும் 304.83 MLD *குடிநீர் வழங்கும் பொருட்டு, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான (இரண்டாவது கட்டம்) விரிவான திட்ட அறிக்கை ரூ.7,145 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, வெளிப்புற நிதி உதவித் திட்டங்களின் (*EAP*) கீழ் நிதியுதவி பெற அரசின் பரிசீலனையில் உள்ளது.*

இத்திட்டத்தின்மூலம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த ஓசூர் மாநகராட்சி, தருமபுரி நகராட்சி, 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 38.82 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

6.7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10-3-1994-ன்படி, ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக்

குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள், 52,361 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 568 தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் 4.53 கோடி மக்களைப் பயனாளிகளாகக் கொண்ட 544 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 544 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 2,104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் விவரங்கள் அட்டவணை 6.12-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.12

வ. எண்	பயனாளிகளின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை	திட்ட வடிவமைப்பின் படி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி)	தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி)
1	மாநகராட்சிகள்	12	292	259
2	நகராட்சிகள்	65	295	259
3	பேரூராட்சிகள்	346	379	331
4	ஊரகக் குடியிருப்புகள்	52,361	1366	1197
5	தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள்	568	67	58
	மொத்தம்	53,352	2,399	2,104

2023 மார்ச் 30]


தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
● பராமரிக்கப்படும் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்
வடக்கு
ஆந்திரா மாநிலம்
கர்நாடக மாநிலம்
கேரள மாநிலம்
வங்காள விரிகுடா
இந்திய பெருங்கடல்
0 20 40 80 120 160
Kilometers

ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் வீட்டிணைப்புகளின்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வழங்கிட திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், சேலம், நீலகிரி, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள 56 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ரூ.1,658.31 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகளை செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

6.8 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

6.8.1 ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாக பராமரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் குறைந்த திறன் (less efficiency) கொண்ட 57 மின்னிறைப்பான்கள் (Pumpsets) ரூ.5.95 கோடி செலவில் பழுது/மாற்றம் செய்யப்பட்டு, மின் கட்டணத்தில் ஆண்டு ஒன்றிற்கு ரூ.2.04 கோடி சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பின்வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை இணையவழி செயல்திறன்மூலம் (Internet of Things (IoT)) கண்காணிக்க நீர் அளவு கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

1. ஈரோடு மாவட்டத்தின் கோபி, நம்பியூர் ஆகிய ஒன்றியங்களில் 6 கிராம பஞ்சாயத்தில் உள்ள 96 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
2. திருநெல்வேலி மாவட்டத்தின் பாப்பாக்குடி ஒன்றியத்தில் உள்ள 17 குடியிருப்புகள்,

1 பேரூராட்சி பகுதி மற்றும் தென்காசி மாவட்டத்தின் ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள 31 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள திருவண்ணாமலை மாவட்டத்தின் தண்டராம்பட்டு ஒன்றியத்தின் கொழுந்தம்பட்டு கிராம ஊராட்சியில் உள்ள சாத்தனூர் மற்றும் 45 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

6.8.2 பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் இதர பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வகுப்புகளை சென்னையிலுள்ள தலைமை பயிற்சி மையம் மற்றும் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள துணை பயிற்சி மையங்கள் வழங்குகின்றன.

- 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள களப்பொறியாளர்கள், நிலநீர் புவியியலாளர்கள், வரைவு அலுவலர்கள், கணக்கு மற்றும் நிர்வாக அலுவலர்கள் உட்பட 1,100 நபர்களுக்கு ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியுடன் 11 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- 2023-24 ஆம் நிதியாண்டில், கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

 - ➢ கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கத்தில் புதுமையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

 - ➢ பாதாள சாக்கடைத் திட்டங்களை பாதுகாப்பு அம்சங்களுடன் செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல்

 - ➢ குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் விரிவான திட்ட அறிக்கையை மதிப்பீடு செய்தல் மற்றும் தயாரித்தல்

 - ➢ பராமரிப்பில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களில் மின் பயன்பாட்டினை தணிக்கை செய்தல் மற்றும் குடிநீர் விநியோகத்தை

தணிக்கை செய்தல், குடிநீர் தரம் கண்காணித்தல், நவீன குடிநீர் அளவுமானிகள் உட்பட குடிநீர் அளவுமானிகளின் பயன்பாடு

- குடிநீர் குழாய்களில் ஏற்படும் உயர் மற்றும் தாழ்வு அழுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பு (Water Hammer) குறித்து வடிவமைத்தல் மற்றும் கட்டட வடிவமைப்பு
- பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பார்வையிட்டு அதன் இயக்கங்களை அறிதல்.
- குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் கட்டமைப்பினை மென்பொருள் (Water GEMS & Sewer GEMS)மூலம் பகுத்தாய்வு மற்றும் வடிவமைத்தல்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கத்தின் வழிகாட்டுதல்களின்படி கட்டுமான பொருள்களை ஆய்வகத்தில் சோதனை செய்தல் மற்றும் தர அம்சங்களை களத்தில் உறுதி செய்தல்.
- சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புவியியல் தகவல் அமைப்புடன் கள ஆய்வு செய்தல்.
- நீதிமன்ற வழக்குகள், ஒழுங்கு நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம்.
- கணக்கு மற்றும் தணிக்கை
- ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மற்றும் ஒப்பந்த மேலாண்மை

6.9 கட்டுமான பொருட்கள் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு தரக் கட்டுப்பாட்டு சோதனை ஆய்வகங்கள் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவற்றில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள சோதனை ஆய்வகங்கள் NABL தரச் சான்று பெற்றவை.

- இந்த சோதனை ஆய்வகங்களில், கீழ்க்கண்ட கட்டுமானப் பொருட்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

2023 மார்ச் 30]

- சிமெண்ட், கம்பி, ஆற்று மணல், தூளாக்கப்பட்ட கல் மணல் (M Sand), ஜல்லி, செங்கல், கனசதுர வடிவ கான்கிரீட் மாதிரிகள் (Concrete Cubes), கான்கிரீட் கலவை வடிவமைப்பு (Mix Design)

- வடிகட்டி மணல்,

- PVC குழாய், UPVC குழாய், O-PVC குழாய், HDPE குழாய், DWC குழாய், GI குழாய், சுடுமண் (Stoneware) குழாய், நெகிழ் இரும்பு குழாய் (DI)

- மின் கடத்திகள் (Electric Cables)

2022-23 ஆம் நிதியாண்டில் (ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை) 9,293 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

2023-24 ஆம் நிதியாண்டில், தோராயமாக 10,000 மாதிரிகள் பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

6.10 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதிசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னையில் மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக் கூடம், 31 மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள், 56 துணை மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களை அமைத்துள்ளது. வழங்கப்படும் குடிநீரில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் குறித்த பரிசோதனைகள் இவற்றில் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் சென்னையில் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் NABL தரச்சான்றிதழ் பெற்று, மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் 31 மாவட்ட (புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் தவிர) அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL தரச் சான்றிதழ் மற்றும் 2 துணை மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடத்திற்கு NABL அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் 54 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதி ஆண்டில் ஜல் ஜீவன் திட்ட நிதி மற்றும் மாநில நிதி உதவியுடன் கிட்டத்தட்ட 6.63 இலட்சம் குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

6.11 நிலநீர் புவியியல் (Hydro geology) பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரங்கள் செயற்கைகோள் தொலை உணர்வு தொழில்நுட்பம் (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System) மூலமாக கண்டறியப்படுகின்றன. மேலும் இவை, நீராதாரத்தின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்ய நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கு சாத்தியமான இடங்களைத் தேர்வு செய்யவும், பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பரவலாக பருவ மழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய நீரின் தரம் குறித்த விவரங்கள் அடங்கிய பகுதிவாரியான வரைபடங்கள் (Topo Sheets - 220) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி குடிநீர் கட்டமைப்புகள் ஆகியன புவியிடக்குறிப்பு (Geo Tagging) செய்யப்பட்டு வருகின்றன. 35,184 குடிநீர் கட்டமைப்புகள் இணையதளத்தில் புவியிடக்குறிப்பு செய்யப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில், 714 புவி இயற்பியல் ஆய்வுப்பணிகள் (Geo-physical Survey) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.11.1 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

தமிழ்நாட்டில் உள்ள நகர பகுதிகளில், வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளைப் பயன்படுத்தி நீடித்த, நிலையான நீர் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்குடன் செயல்படும், நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தின் (Sustainable Water Security Mission - SuWaSeM), ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகிய துறைகள்மூலம் 50:50 நிதி பங்கீட்டுடன் (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் SuWaSeM) நீடித்த

2023 மார்ச் 30]

*நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கம் (*Sustainable Water Security Mission - SuWaSeM*) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

- *நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல்.*
- *மேற்கூரையில் விழும் மழைநீரைச் சேகரித்தல்.*
- *மேற்கூரை நீங்கலாக, வளாகத்தில் விழும் மழைநீரைச் சேகரித்தல்.*
- *மழைநீர் வடிகாலில் வரும் நீரைச் சேகரித்தல்.*

மேற்கண்ட குடிநீர் இயக்கத்தில் இதுவரை ரூ.8.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் பருவ மழைக்கு முன்னும் மற்றும் பின்னும், மாவட்டங்களில் நிலவும் சராசரி நிலத்தடி நீர்மட்ட விவரங்கள் 1,286 கண்காணிப்பு கிணறுகள்மூலம் அளவிடப்படுகின்றன.

*மே 2022 மற்றும் ஜனவரி 2023 காலகட்டத்தின் மாவட்ட வாரியாக சராசரி நிலத்தடி நீர்மட்ட (*Below Ground Level*) விவரங்கள் அட்டவணை 6.13-ல் கொடுக்கப்பட்டுள்ளன. (பருவமழைக்கு முன் மற்றும் பருவமழைக்குப் பின்)*

அட்டவணை 6.13

நீர் மட்டம் -மீட்டர்

மாவட்டம்	மொத்த கிணறுகளின் (ஆழ்துளை/ திறந்த வெளி) எண்ணிக்கை	மே 22	ஜனவரி 23	நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு (-)
அரியலூர்	27	23.3	19.50	+3.80
செங்கல்பட்டு	29	4.7	3.82	+0.88
கோயம்புத்தூர்	38	11.6	8.90	+2.70
கடலூர்	42	34.0	16.10	+17.90
தருமபுரி	37	7.3	4.30	+3.0

[2023 மார்ச் 30

மாவட்டம்	மொத்த கிணறுகளின் (ஆழ்துளை/ திறந்த வெளி) எண்ணிக்கை	மே 22	ஜனவரி 23	நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு (-)
திண்டுக்கல்	51	11.4	11.35	+0.05
ஈரோடு	42	10.6	3.38	+7.22
கள்ளக்குறிச்சி	42	6.3	3.60	+2.70
காஞ்சிபுரம்	17	5.7	4.87	+0.83
கன்னியாகுமாரி	16	5.0	5.30	—0.30
கரூர்	34	13	3.74	+9.26
கிருஷ்ணகிரி	44	7.0	2.50	+4.50
மதுரை	31	4.3	1.25	+3.05
மயிலாடுதுறை	13	7.8	4.91	+2.89
நாகப்பட்டினம்	13	2.2	1.38	+0.82
நாமக்கல்	37	7.0	3.83	+3.17
பெரம்பலூர்	16	5.6	2.66	+2.94
புதுக்கோட்டை	24	13.3	9.00	+4.30
இராமநாதபுரம்	91	16.5	15.67	+0.83
ராணிப்பேட்டை	20	4.4	3.11	+1.29
சேலம்	41	5.9	3.70	+2.20
சிவகங்கை	79	9.2	7.57	+1.63
தென்காசி	27	5.0	4.90	+0.10
தஞ்சாவூர்	35	18.5	8.77	+9.73
தேனி	20	12.4	9.46	+2.94
திருநெல்வேலி	49	3.9	4.90	—1.0
திருப்பத்தூர்	17	6	2.59	+3.41
திருப்பூர்	45	17.6	4.36	+13.24
திருவள்ளூர்	36	3.9	3.76	+0.14
திருவண்ணாமலை	39	6.5	2.59	+3.91
திருவாரூர்	58	4.4	4.12	+0.28

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 மார்ச் 30]

மாவட்டம்	மொத்த கிணறுகளின் (ஆழ்துளை/ திறந்த வெளி) எண்ணிக்கை	மே 22	ஜனவரி 23	நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு (-)
தூத்துக்குடி	19	10.5	4.50	+6.0
திருச்சிராப்பள்ளி	35	17.63	14.22	+3.41
வேலூர்	15	5.1	3.11	+1.99
விழுப்புரம்	47	8.7	5.71	+2.99
விருதுநகர்	60	4.7	3.47	+1.23
மாநில சராசரி	1286	9.3	5.74	+3.56

6.12 நிதிநிலை

2022-23 ஆம் ஆண்டுக்கான கணக்குகளின்படி மொத்த வருவாய் செலவு 28-2-2023 வரை ரூ.1,231.47 கோடியாகும். அதே சமயம், மொத்த வருமானம் ரூ.1,118.79 கோடி.

2020-21 முதல் 2022-23 வரையிலான (பிப்ரவரி 2023 வரை) வருமானம், செலவு, பற்றாக்குறை/உபரி மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை விவரங்கள் அட்டவணை 6.14-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.14

(ரூ.கோடியில்)

வ. எண்	விவரங்கள்	2020-21	2021-22	2022-23 பிப்ரவரி 23 வரை (தற்காலிகமானது)
I	வருவாய் வருமானம்			
1.	வீத கட்டணம்	197.60	314.54	245.25
2.	குடிநீர் கட்டணம்	675.92	729.75	642.95
3.	இதர வருமானம்	109.83	128.79	155.01

வ. எண்	விவரங்கள்	2020-21	2021-22	2022-23 பிப்ரவரி 23 வரை (தற்காலிகமானது)
4.	மானியங்கள்	159.48	217.13	75.58
	மொத்தம்	1,142.83	1,390.21	1118.79
II	வருவாய் செலவு			
1.	சம்பளம்	109.38	110.40	92.82
2.	ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நன்மைகள்	375.14	371.42	315.90
3.	கூட்டுக் குடிநீர்த் திட்டம்	962.54	1034.89	799.80
4.	இதர செலவுகள்	28.92	30.04	22.95
	மொத்தம்	1,475.98	1,546.75	1231.47
	பற்றாக்குறை	333.15	156.54	112.68
	ஒட்டு மொத்த பற்றாக்குறை	2,643.78	2,800.32	2,913 .00

28-2-2023 அன்று செலுத்த வேண்டிய தொகை, பெறத்தக்க மற்றும் நிலுவையில் உள்ள விவரங்கள் அட்டவணை 6.15-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.15

(ரூ. கோடியில்)

வ. எண்	விவரங்கள்	28.2.2023 அன்று தொகை (தற்காலிகமானது)
I	**செலுத்த வேண்டிய தொகை**	
1.	தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் (TANGEDCO)-மின்பயன்பாடு கட்டணம்	2,207.99
2.	வாரிய பணியாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள்	13.69

2023 மார்ச் 30]

வ. எண்	விவரங்கள்	28.2.2023 அன்று தொகை (தற்காலிகமானது)
3.	கூட்டுக் குடிநீர் திட்டம்- இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள்	*483.30*
4.	வேலை நிதி ஊழியர் (WCE)- நீதிமன்ற வழக்கு - நிலுவைத் தொகை	*13.70*
	மொத்தம்	*2,718.68*
II	**பெறப்பட வேண்டிய குடிநீர் கட்டணம்**	
1.	மாநகராட்சிகள்	*307.68*
2.	நகராட்சிகள்	*45.47*
3.	பேரூராட்சிகள்	*12.49*
4.	கிராம ஊராட்சிகள்	*320.90*
5.	தனியார் பயனாளிகள்	*143.75*
	மொத்தம்	*830.29*
III	**ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை:**	
	(a) அசல்	*68.30*
	(b) வட்டி	*23.60*
	மொத்தம்	*91.90*

6.13 உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission)

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வீட்டுக் குழாய் இணைப்புமூலம் 2024-க்குள் வழங்குவது உயிர் நீர் இயக்கத்தின் நோக்கமாகும்.

6.13.1 உயிர் நீர் இயக்கத்தின் கூறுகள்

i *நீடித்த நிலைத்தன்மை உடைய நீராதாரங்களை* (sourcesustainability) *தெரிந்தெடுத்தல் மற்றும் ஏற்கெனவே*

உள்ள நீராதாரங்களின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்தல் (source strengthening).

ii. தேவைப்படும் இடங்களில், அதிக அளவு நீரினை குழாய்கள்மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லுதல் (bulk water transfer), நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பகிர்மான குழாய்களின் அமைப்பினை ஏற்படுத்துதல்.

iii அனைத்து ஊரக வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை (in-village infrastructure) உருவாக்குதல்.

iv பராமரிப்பிலுள்ள குடிநீர்த் திட்டங்கள் மற்றும் நடைபெற்றுவரும் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைப்பு (retrofitting) செய்து ஊரகப் பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் அளவு குடிநீர் வழங்குதல்.

v தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC), மனிதவள மேம்பாடு (HRD), பயிற்சி, நீர் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆகியவை மேற்கொள்ளல்.

6.13.2 செயல்படுத்தும் துறை மற்றும் மாநில பொறுப்பு அலுவலர்

தமிழ்நாட்டில் உயிர் நீர் இயக்கத்தினை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்மூலம் செயல்படுத்தவும், இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளரை மாநில பொறுப்பு அலுவலராகவும் (State Nodal Officer) நியமித்து, அரசாணை (பல்வகை) எண் 26, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை, நாள் 4-2-2022 இன்மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், உயிர் நீர் இயக்கத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள், திட்ட இயக்குநராக உள்ளார்.

உயிர் நீர் இயக்க செயல்பாட்டில், இதன் திட்ட இயக்குநருக்கு உதவிட மாநில திட்ட மேலாண்மைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

2023 மார்ச் 30]

6.13.3 குழுக்கள்

அரசாணை (பல்வகை) எண் 33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை, நாள் 15-2-2022-ன்படி பின்வரும் குழுக்கள் மறுநியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

I. உயர் நிலைக் குழு (Apex Committee)

அரசு தலைமைச் செயலாளர் அவர்களை இக்குழுவின் தலைவராகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை உறுப்பினர்-செயலராகவும் மற்றும் 7 துறைகளின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/முதன்மைச் செயலாளர்/செயலாளர், உயிர் நீர் இயக்க மாநில திட்ட இயக்குநர், ஒன்றிய அரசின் பிரதிநிதி, பிற 3 உறுப்பினர்களும் இருப்பார்கள். இக்குழு கொள்கை முடிவுகள், மாநில செயல் திட்டத்தை இறுதி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

II. மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (State Level Scheme Sanctioning Committee)

உயர்நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வழங்கும் குழு தேவையான தொழில்நுட்ப அனுமதியை வழங்கும். இக்குழுவில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைவராகவும் மற்றும் ஒன்றிய அரசின் பிரதிநிதி உட்பட 13 உறுப்பினர்களும் உள்ளனர்.

III. செயற்குழு (Executive Committee)

உயிர் நீர் இயக்கத்தின் திட்ட இயக்குநர் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் ஆணையர், நிதித் துறை கூடுதல் செயலாளர் மற்றும் 4 மாநில அரசு அதிகாரிகளை உறுப்பினர்களாக கொண்ட செயற்குழுவால் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படும்.

6.13.4 செயலாக்க வழிமுறைகள்

உயிர் நீர் இயக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்ற பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:

i. *ஊரகப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமங்களிலும் குடிநீர் தேவைகளின் அடிப்படையில் கிராம செயல்*

திட்டம் (Village action plan) தயாரிக்கப்படுகிறது. குக்கிராமங்களின் செயல் திட்டங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, கிராம செயல் திட்டம் உருவாக்கப்பட்டு கிராம சபையின் ஒப்புதல் பெறப்படுகிறது.

ii. மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் செயல் திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு மாவட்ட செயல் திட்டம் (District action plan) தயாரிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார முகமை (District Water and Sanitation Mission) ஒப்புதல் வழங்குகிறது.

iii. மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் செயல் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், மொத்த நீர் பரிமாற்றம் ஆகியவை தொகுக்கப்பட்டு மாநில செயல் திட்டம் (State action plan) தயாரிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வோர் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாநில அளவில், ஆண்டு செயல் திட்டம் (Annual action plan) தயாரிக்கப்படுகிறது.

6.13.5 நிதியுதவி

உயிர் நீர் இயக்கத்தின்கீழ் ஊரக வீடுகளுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கான பணிகளைச் செயல்படுத்த 50 சதவிகித நிதியினை இந்திய அரசும், 50 சதவிகித நிதியினை மாநில அரசும் வழங்குகிறது. துணை நடவடிக்கைகள் (support activities) மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு 60 சதவிகிதமும், மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்குகிறது.

சமூகப் பங்களிப்பு (Community Contribution)

மக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்க, கிராம ஊராட்சியில் உட்கட்டமைப்பு செலவினத்தில் மலை மற்றும் வனப் பகுதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் 5 சதவிகிதமும், இதர கிராம ஊராட்சிகளில் 10 சதவிகிதமும் பணம்/பொருள்/உடல் உழைப்பு ஆகியவை பொது மக்கள் பங்களிப்பாக பெறப்படும்.

6.13.6 செயல்படுத்துதல்

உயிர் நீர் இயக்கம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

2023 மார்ச் 30]

6.13.6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

i. *ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் (*Combined water supply schemes/ multi village schemes*), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைத்து செயல்படுத்தப்படுகிறது.*

ii. *தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீர் ஆதாரத்தை பெருக்குதல், மின்சாதனங்களின் திறன்களைக் கூட்டுதல் மற்றும் குழாய்களை மறுசீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

6.13.6.2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

i. *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஒற்றை கிராம திட்டங்களை (*Single Village Schemes*) வடிவமைத்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்களில், நீர் ஆதாரத்தை உருவாக்குதல், கிராம உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

ii. *மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல கிராம திட்டங்களில், கிராம உட்கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொள்கிறது.*

6.13.7 உயிர் நீர் இயக்கத்தின் இதர முக்கிய அம்சங்கள்

i. *அனைத்து உயிர் நீர் இயக்கப் பணிகளின் தரத்தினை உறுதி செய்ய மூன்றாம் தரப்புமூலம் ஆய்வு மேற்கொள்ளுதல்.*

ii. *குடிநீரின் அளவு, தரம் மற்றும் சீரான விநியோகம் ஆகியவற்றுக்கான செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.*

iii. ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் (Integrated Management Information System-IMIS)மூலம் கண்காணித்தல்.

iv. கள ஆய்வு உபகரணங்களின் (Field Test Kit-FTK)மூலம் நீரின் தரத்தினை ஆய்வு செய்தல்.

v. நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் இதர நீர் விநியோகம் தொடர்பான தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC Activities) செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

6.13.8 இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல் (Convergence of Funds)

ஆண்டு செயல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட, உயிர் நீர் இயக்க திட்ட பணிகளை செயல்படுத்த, 15-வது நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு மானியம் (SFC) மற்றும் இதர மானிய நிதிகள் ஒருங்கிணைக்கப்படுகிறது.

6.13.9 உயிர் நீர் இயக்கத்தின் தற்போதைய நிலை

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள 125.52 இலட்சம் வீடுகளில், இதுவரை (1-3-2023) 77.14 இலட்சம் (61.46%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 2022-23-ம் ஆண்டில் 24.15 இலட்சம் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் வாரியாக வீட்டுக் குழாய் இணைப்புகளின் விவரங்கள் அட்டவணை 6.16-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

அட்டவணை 6.16

வ.எண்	மாவட்டம்	மொத்த வீடுகள்	வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டவை	சதவீதம் %	வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை	மொத்த கிராம ஊராட்சிகள்	100% வீட்டிணைப்பு உள்ள கிராம ஊராட்சிகள்
1	அரியலூர்	2,07,503	1,31,418	63	76,085	201	64
2	செங்கல்பட்டு	4,16,489	3,21,449	77	95,040	359	159
3	கோயம்புத்தூர்	3,74,014	3,08,095	82	65,919	228	60
4	கடலூர்	5,03,839	2,72,770	54	2,31,069	683	127
5	தருமபுரி	3,43,213	74,543	22	2,68,670	251	1
6	திண்டுக்கல்	4,57,368	2,54,801	56	2,02,567	306	13
7	ஈரோடு	4,20,703	2,87,297	68	1,33,406	225	59
8	கள்ளக்குறிச்சி	3,03,892	1,40,919	46	1,62,973	412	32
9	காஞ்சிபுரம்	2,15,901	2,15,901	100	0	274	274
10	கன்னியாகுமரி	2,16,738	1,97,647	91	19,091	95	19
11	கரூர்	2,04,464	1,40,055	68	64,409	157	33
12	கிருஷ்ணகிரி	4,09,805	1,85,949	45	2,23,856	333	19
13	மதுரை	4,48,409	2,58,774	58	1,89,635	420	65
14	மயிலாடுதுறை	2,02,657	1,35,503	67	67,154	241	17
15	நாகப்பட்டினம்	1,57,427	15,397	10	1,42,030	193	0
16	நாமக்கல்	3,51,839	2,85,618	81	66,221	322	77
17	நீலகிரி	96,970	50,257	52	46,713	35	1
18	பெரம்பலூர்	1,48,348	67,710	46	80,638	121	29
19	புதுக்கோட்டை	3,70,666	1,56,902	42	2,13,764	497	17
20	இராமநாதபுரம்	3,33,423	75,759	23	2,57,664	429	2
21	ராணிப்பேட்டை	1,89,334	1,89,334	100	0	288	288
22	சேலம்	6,49,977	4,47,448	69	2,02,529	385	69
23	சிவகங்கை	3,32,507	1,15,185	35	2,17,322	445	8
24	தென்காசி	3,41,728	1,94,304	57	1,47,424	221	62
25	தஞ்சாவூர்	4,22,759	3,36,419	80	86,340	589	228
26	தேனி	1,85,664	1,42,161	77	43,503	130	41

வ.எண்	மாவட்டம்	மொத்த வீடுகள்	வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டவை	சதவீதம் %	வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை	மொத்த கிராம ஊராட்சிகள்	100% வீட்டிணைப்பு உள்ள கிராம ஊராட்சிகள்
27	தூத்துக்குடி	3,75,139	1,98,802	53	1,76,337	403	123
28	திருச்சிராப்பள்ளி	4,72,472	3,78,107	80	94,365	404	92
29	திருநெல்வேலி	2,86,263	1,61,721	56	1,24,542	204	42
30	திருப்பத்தூர்	2,16,132	1,20,326	56	95,806	208	11
31	திருப்பூர்	4,57,456	3,34,246	73	1,23,210	265	26
32	திருவள்ளூர்	4,76,152	4,09,857	86	66,295	526	65
33	திருவண்ணா மலை	5,31,110	3,56,293	67	1,74,817	860	386
34	திருவாரூர்	3,05,459	1,83,698	60	1,21,761	430	24
35	வேலூர்	2,12,528	1,92,767	91	19,761	247	96
36	விழுப்புரம்	4,40,530	2,10,723	48	2,29,807	688	87
37	விருதுநகர்	4,72,647	1,65,492	35	3,07,155	450	133
	மொத்தம்	1,25,51,525	77,13,647	61	48,37,878	12,525	2,849

6.13.10 செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் நீடித்த நிலையான ஆற்று நீரினை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் இணைப்பது தமிழ்நாடு அரசின் தொலைநோக்கமாக உள்ளது.

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 48.38 இலட்சம் வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கும் வகையில் ரூ.18,228.38 கோடி மதிப்பீட்டில், 45 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 56 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் ஒற்றை கிராமத் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 30]

இதுவரை 27 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், பராமரிப்பிலுள்ள 48 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் அனைத்து ஒற்றை கிராமத் திட்டங்களுக்கும் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள பணிகளுக்கு பணி ஆணைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தி அவற்றின்மூலம் 26.03 இலட்சம் வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6.13.11 விருதுகள்

மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால், ஜல் ஜீவன் திட்டத்தில் குடிநீர் குழாய் இணைப்புகள் அளித்து, தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருவதற்கு 'செயல்பாட்டு மதிப்பீடு-2022' அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு 'முதல் பரிசு' வழங்கப்பட்டது.

ஒன்றிய அரசின் இச்செயல்பாட்டு மதிப்பீட்டு அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு, முறைமை மற்றும் தரம் ஆகியவை முறையே 94%, 93% மற்றும் 97% ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

7. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தனியார் துறை பங்களிப்புடன், ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1996 ஆம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி (ICICI Bank), வீட்டுவசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் (HDFC) மற்றும் ஐ.எல்.&எப்.எஸ். நிதி சேவைகள் நிறுவனம் (IL&FS) ஆகிய நிறுவனங்கள் இதன் மற்ற பங்குதாரர்களாக உள்ளன. இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ.2.00 கோடி. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ரூ.1.00 கோடியில், தமிழக அரசின் பங்கு ரூ.49.00 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனமானது, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மற்றும் இதர அரசு மானிய நிதிகளை நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம், நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரை அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. இதன் பிரதான பணிகளில், திட்ட உருவாக்கம், திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும். இந்நிறுவனம், தொடங்கப்பட்டது முதல் ஆதாயம் ஈட்டி வருவதோடு, ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

7.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், தமிழ்நாடு அரசால் தனியார் துறை பங்களிப்புடன் 1996 ஆம் ஆண்டு நவம்பரில் ஒரு பொறுப்பாட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதி நிறுவனம் மற்றும் ஐ.எல்.&எப்.எஸ். நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவை பங்களிப்பு செய்துள்ள தனியார் துறை நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கம், இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்பட்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளர்வதற்கும், அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புர சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது ஆகும்.

2023 மார்ச் 30]

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், நகர்ப்புர உட்கட்டமைப்புச் சொத்துகளை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின்மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு பங்களிப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

7.1.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- *நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளித்தல்.*
- *பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.*
- *நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.*

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றை செயல்படுத்த நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம் (TNUITCL), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தை நிருவகித்து வருகிறது. இந்நிதியம், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ரூ.199.60 கோடியில், தமிழக அரசு ரூ.142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, எச்.டி.எப்.சி. மற்றும் ஐ.எல்.& எப்.எஸ். ஆகிய நிறுவனங்கள் ரூ.56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.

7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் மூன்று வெளி ஆதாரக் கடன்கள் நிருவகிக்கப்படுகின்றன. அவையாவன–உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP),

ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன்கூடிய தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டுத் திட்டம் (TNUFIP) (நிலை I மற்றும் நிலை II) மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன்கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு-நிலை-II-பகுதி-2 (SMIF-TN-II-2) திட்டம் மற்றும் தமிழ்நாடு நகராட்சி உட்கட்டமைப்பு வளர்ச்சி மானியத் திட்டம் (MID-TN). மேற்குறிப்பிடப்பட்ட மூன்று வெளி ஆதாரக் கடன்களின் மொத்த நிதி ரூ.11,525.68 கோடி ஆகும். அவற்றின் விவரம் அட்டவணை 7.1-ல் பின்வருமாறு:

அட்டவணை 7.1

வெளி ஆதாரக் கடன்களின் அளவு

(ரூ. கோடியில்)

வ. எண்	உட்கூறுகள்	தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம்	தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம்		நீடித்த நகர்ப்புர உள் கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு நிலை-II பகுதி 2	தமிழ்நாடு நகர்ப்புர உள் கட்டமைப்பு வளர்ச்சி மானியத் திட்டம்	மொத்தம்
			நிலை I	நிலை II			
1	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன்	1,397.80	304.78	487.01	0	0	2,189.59
2	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம்	1,397.80	646.73	834.10	0	151.43	3,030.06
3	மாதிரி நகரங்களுக்கான மானியம்	386.29	0	0	0	0	386.29
4	தொழில்நுட்ப உதவி மானியம்/செயல் திறன்சார்ந்த ஊக்கத் தொகை	368.61	148.02	120.89	22.39	7.97	667.88
5	கோவிட் 19	37.18	0	0	0	0	37.18
6	கூடுதல் நிர்வாக செலவு மற்றும் வரி	0	36.33	40.32	0	0	76.65
7	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மற்றும் பிற	517.18	1,934.47	2,668.68	0	17.70	5,138.03
	மொத்தம்	4,104.86	3,070.33	4,151.00	22.39	177.10	11,525.68

2023 மார்ச் 30]

7.2.1. உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்குபெறும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நகர்ப்புர சேவைகளை நீடித்த நிதிநிலையுடன் மேம்படுத்துதல் மற்றும் மேம்பட்ட நகர்ப்புர மேலாண்மை நடைமுறைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் முன்னோடியாக செயல்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். ரூ.3,831.00 கோடியாக (600.00 மில்லியன் அமெரிக்க டாலர்) இருந்த இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு, 2021 ஆம் ஆண்டு, ரூ.4,104.86 கோடியாக (609.00 மில்லியன் அமெரிக்க டாலர்) மறுசீரமைக்கப்பட்டது. இதில், உலக வங்கியின் நிதியுதவி ரூ.2,770.39 கோடி (400.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.1,334.47 கோடி (209.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2023 வரை ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், 31 துணைத் திட்டங்களுக்கு ரூ.2,752.49 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள், ரூ.2,542.04 கோடி மதிப்பிலான 20 துணைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன மற்றும் மீதமுள்ள 11 துணைத் திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன.

7.2.2 ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP)

தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP), ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதியுதவியுடன் 2018 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெருவழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில், குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் ஆகிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், நகர்ப்புர ஆளுகை, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, காலநிலை நெகிழ்ச்சி மற்றும் நகர்ப்புர வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் மூன்று நிலைகளை கொண்டதாகும் (நிலை-I, நிலை-II, நிலை-III). இந்த மூன்று நிலைகளுக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 502.00 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலைக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.3,070.33 கோடி (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,099.53 கோடி (171.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில் மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.1,970.80 கோடி (306.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2018 முதல் ஜூன் 2023 வரை ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலையின்கீழ், 9 துணைத் திட்டப் பணிகளுக்காக ரூ.951.51 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள், 8 துணைத் திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன மற்றும் 1 துணைத் திட்டம் நிறைவடைந்துள்ளது.

இத்திட்டத்தின், இரண்டாம் நிலைக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.4,151.00 கோடி (593.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,442.00 கோடி (206.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில் மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.2,709.00 கோடி (387.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு டிசம்பர் 2019 முதல் டிசம்பர் 2025 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ், 6 துணைத் திட்டப் பணிகளுக்காக ரூ.1,321.11 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனைத்து துணைத் திட்டப் பணிகளும் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன.

இத்திட்டத்தின் மூன்றாம் நிலைக்கான ஒப்பந்தங்கள், ரூ.1,478.34 கோடி (193.50 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பில், ஆசிய மேம்பாட்டு வங்கியுடன், டிசம்பர் 2022 இல் நிறைவேற்றப்பட்டன. இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.955.00 கோடி (125.00 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் மாநில அரசு மற்றும் இதர பங்களிப்பு ரூ.523.34 கோடி (68.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இத்திட்டம், அரசின் நிருவாக அனுமதி பெற்றபின் 2023-24 நிதி ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கும்.

7.2.3 ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி-தமிழ்நாடு-நிலை-2-பகுதி-2 எனும் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW)

2023 மார்ச் 30]

நிதியுதவியுடன், 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, டிசம்பர் 2022 இல் நிறைவடைந்துள்ளது. இருப்பினும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்காக, தொழில்நுட்ப உதவிக் கூறான ரூ.22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) டிசம்பர் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 5,200 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு நகர்ப்புர நிர்வாகம், நிதி, திட்ட மேம்பாடு, செயலாக்கம், இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

KfW *நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், தமிழ்நாடு நகராட்சி உள்கட்டமைப்பு மேம்பாட்டு மானியத் திட்டத்திற்கான (*MID-TN*) ஒப்பந்தங்கள் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.177.10 கோடி (22.22 மில்லியன் யூரோ), இதில்,* KfW*-வின் மானியம் ரூ.159.40 கோடி (20.00 மில்லியன் யூரோ) மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ரூ.17.70 கோடி (2.22 மில்லியன் யூரோ) ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் அல்லது தமிழ்நாட்டில் காலநிலை நெகிழ்ச்சியை அதிகரிக்கும் புதுமையான திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், அரசின் நிருவாக அனுமதி பெற்றபின் 2023-24 நிதி ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கும்.*

KfW *நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி-தமிழ்நாடு-நிலை-3 திட்டத்திற்கான (*SMIF–TN-III*) ஒப்பந்தங்கள் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.6,398.25 கோடி (750.00 மில்லியன் யூரோ), இதில்,* KfW *நிதியுதவி ரூ.4,265.50 கோடி (500.00 மில்லியன் யூரோ) மற்றும் மாநில அரசு மற்றும் இதர ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.2,132.75 கோடி (250 மில்லியன் யூரோ) ஆகும். மேலும், இத்திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு* KfW*-வின் ரூ.68.25 கோடி (8.00 மில்லியன் யூரோ) மானிய உதவிக்கான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காலநிலை மீள்தன்மையுடைய நகர்ப்புர உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், 2023-24 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படத் தொடங்கும்.*

7.2.4 மதிப்பீட்டு நிலையில் உள்ள வெளி ஆதாரத் திட்டங்கள்

TNSUDP இன்கீழ் உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும், தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNCRUDP) என பெயரிடப்பட்ட திட்டம் உலக வங்கியின் மதிப்பீட்டின்கீழ் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3,350.25 கோடி (450.00 மில்லியன் அமெரிக்க டாலர்). இதில், உலக வங்கியின் நிதி உதவி ரூ.2,233.50 கோடி (300.00 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் மாநில அரசு மற்றும் பிற ஆதாரங்களின் பங்களிப்பு ரூ.1,116.75 கோடி (150.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும்.

7.3 குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டவும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- *உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்*
- *கூட்டு நிதி அமைப்பின்கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்*
- *நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின்மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்*
- *நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்*
- *குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்*

இதுவரை ரூ.302.30 கோடி நிதி வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தால் திரட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.222.30 கோடி முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

*வேலூர் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த, 12 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் வழங்குவதற்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (*HUDCO*) ரூ.300.00 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.*

மேலும், இந்நிறுவனம் ரூ.692.99 கோடி (அருப்புக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.355.21 கோடி, திண்டிவனம் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ரூ.174.20 கோடி மற்றும் விழுப்புரம் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ரூ.163.58 கோடி) கடன் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ.151.54 கோடி அருப்புக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் (ரூ.141.50 கோடி), திண்டிவனம் பாதாள சாக்கடைத் திட்டம் (ரூ.5.26 கோடி) மற்றும் விழுப்புரம் பாதாள சாக்கடைத் திட்டம் (ரூ.4.78 கோடி) ஆகியவற்றுக்காக பெறப்பட்டுள்ளது.

7.4 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM)

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் 2011-12 ஆம் நிதியாண்டில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதித் திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்க தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, ஒவ்வோர் ஆண்டும், அரசின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், இத்திட்டத்திற்கான மைய முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த 2011-12 முதல் 2015-16 வரை மற்றும் 2018-19 முதல் 2020-2021 வரையிலான ஆண்டுகளில் ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.9,054.38 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு, மூலதன மானியமாக ரூ.3,991.73 கோடியும், தொழில்நுட்ப மானியமாக ரூ.7.90 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.3,350.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

[2023 மார்ச் 30

8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

நகர்ப்புரங்களில் உள்ள அனைவருக்கும் தூய்மையான, பசுமையான மற்றும் நிலையான ஆரோக்கியமான சுற்றுச்சூழலை வழங்க தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. மேலும், சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட முக்கிய சீரமைப்பு பணிகளான திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் ஆறுகள், நீர்நிலைகள், கால்வாய்கள், உப்பங்கழி மற்றும் கழிமுகப்பகுதிகள் ஆகியவற்றை சீரமைப்பதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அரசு உருவாக்கியுள்ளது.

இவ்விலக்கினை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றி அனைத்து சார் துறைகளின் பங்களிப்புடன் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

8.1 நிறைவுற்ற சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள்

8.1.1 தொல்காப்பியப் பூங்கா-அடையாறு கழிமுக சுற்றுச்சூழல் சீரமைப்பு (58 ஏக்கர்)

தமிழ்நாடு அரசு, நகர்ப்புர கடலோர ஈரநில பாதுகாப்பின் ஒரு முன்னோடித் திட்டமாக, அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரத்தின் 358 ஏக்கர் அதன் தொடர்ச்சியாக திரு.வி.க. பாலத்திற்கு கிழக்கே அமைந்துள்ள அடையாறு முகத்துவாரப் பகுதியையும் சீரமைப்பதற்கு ரூ.100.00 கோடி வழங்கியது.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவார பகுதிகளில் மண்டிக்கிடந்த சீமைக்கருவேல மரங்கள், குப்பைகள், கட்டடக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் கலந்து காணப்பட்டதால், உப்பங்கழி மற்றும் முகத்துவாரச் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததன் விளைவாக நீர்பரப்புப் பகுதி சுருங்கி, ஓதநீரின் தொடர்பு முற்றிலும் குறைந்து, இச்சூழலில் பல்லுயிர்ப் பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்தன.

முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள அடையாறு உப்பங்கழியின் சீரமைப்புப் பணிகள் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அடையாறு உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பில் முக்கியப் பணிகளான ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்ப்பரப்பின் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது, மண்சார் தாவரங்களான உலர்வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளுக்குரிய தாவரங்கள், சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும்

2023 மார்ச் 30]

கோரைப்புற்கள் நடப்பட்டுள்ளன. மேலும், சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புப்படுத்தும் வகையில் நில சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சீரமைப்புப் பணிகள் 2011 ஆம் ஆண்டு முழுமையாக நிறைவு பெற்று தொடர் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது தொல்காப்பியப் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக மாணவர்கள் பெற்றிடும் வகையில் சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, 1,309 பள்ளிகளைச் சேர்ந்த, 1,06,886 மாணவர்கள் மற்றும் 5,305 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று பயனடைந்ததுடன், நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதி (CSR) பெறப்பட்டு, தொல்காப்பியப் பூங்காவில் பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

தொல்காப்பியப் பூங்காவில் சுற்றுச்சூழல் சீரமைப்பின் முக்கியத்துவம் குறித்து, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். இதுவரை, 23,397 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். தற்போது, தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு இதுவரை, 8,364 நபர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது, தொல்காப்பியப் பூங்கா அரசின் நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

தற்போது, தொல்காப்பியப் பூங்காவை நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் அமைப்பில் ஓர் வலுவான மையமாக மாற்றுவதற்கான மறுமேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மறுமேம்பாட்டுப் பணிகள் இந்த ஆண்டு தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8.1.2 அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்)

58 ஏக்கர் அடையாறு கழிமுக சுற்றுச்சூழல் சீரமைப்பின் தொடர்ச்சியாக, அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகளை (300 ஏக்கர்) அடையாறு உப்பங்கழி, முகத்துவாரம், சிறு தீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ள ரூ.24.93 கோடிக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது.

இதன் முக்கியக் கூறுகளாக, சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, கரைகள் திடப்படுத்தப்பட்டு, நெகிழி மற்றும் கட்டடக் கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதந்த மட்காத நெகிழி பொருட்கள் மற்றும் திடக் கழிவுகளை அகற்றி மற்றும் ஆழப்படுத்தி, ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்புப் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும் உள்ளூர் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.

அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் (358 ஏக்கர்) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, மெல்லுடலிகள், நண்டுகள், தும்பிகள், பட்டாம்பூச்சிகள், மீன்கள், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் போன்ற 424 வகையான விலங்குகள் உள்ளன. சீரமைப்பிற்கு முன்பு இந்த எண்ணிக்கை 141 ஆக இருந்தது. சீரமைக்கப்பட்ட அடையாறு உப்பங்கழி மற்றும் முகத்துவாரம் நகர்ப்புர ஈரநில பல்லுயிர் பெருக்கத்தின் வாழ்விடமாகத் திகழ்கிறது.

8.2 நடைபெற்றுவரும் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டங்கள்

பெருநகரில் உள்ள ஆறுகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசினால், ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் மற்றும் அடையாறு நதி சீரமைப்புத் திட்டம் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சீரமைப்பின் துணைத் திட்டங்கள் தொடர்புடைய சார் துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; தூர் வாருதல், சிறுகால்வாய் அமைத்தல் மற்றும் வெள்ள தடுப்புச்சுவர் அமைத்தல்

2023 மார்ச் 30]

போன்ற பணிகள் நீர்வளத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றது. திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலிகள் அமைத்தல், மிதவை தடுப்பான் அமைத்தல், பாலங்களை அழகுபடுத்துதல், பூர்வீகத் தாவரங்கள் நடவு செய்தல் மற்றும் நதிக்கரையோர மேம்பாட்டுப் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால்-கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8.2.1 ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான 32 கி.மீ. தூரம் மேற்கொள்ள ரூ.735.08 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய கூறுகள்: கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதைத் தடுக்க மாற்று ஏற்பாடுகளைச் செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டம், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்பு திட்டப் பணிகள் அனைத்தும் ஜூன், 2023-ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சீரமைப்புப் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை ரூ.495.38 கோடி நிதி சார் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

8.2.2 அடையாறு நதி சீரமைப்புத் திட்டம்

அடையாறு நதியின் தொடக்கம் ஆதனூர் ஏரி முதல் முகத்துவாரம் வரையிலான சுமார் 42 கிலோ மீட்டர் தூரத்திற்கான சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ.555.46 கோடி நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இதன் முக்கிய பணிகள்; கழிவுநீர் மேலாண்மை, திடக்கழிவு அகற்றுதல்,

நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

இச்சீரமைப்புப் பணிகள் தொடர்புடைய சார் துறைகளால் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சீரமைப்புப் பணிகள் ஜுன் 2023-ல் முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சீரமைப்புப் பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில், இதுவரை சார் துறைகளுக்கு ரூ.213.05 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

8.3 மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்

8.3.1 பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் கிளை கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளைக் கால்வாய்கள் சீரமைப்பு

சென்னை பெருநகரில் உள்ள நீர்வழித் தடங்களை முழுமையாக சீரமைப்பதற்காக, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் பிரதான கிளைக் கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் கிளைக் கால்வாய்கள் சீரமைப்புத் திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.1,281.88 கோடி நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. தொடர்புடைய சார் துறைகளால் ஆயத்தப் பணிகளான டிஜிபிஎஸ் கணக்கெடுப்புமூலம் எல்லை கணக்கெடுப்பு மற்றும் எல்லை வரையறுத்தல் போன்ற முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மார்ச், 2023-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான குடும்பங்களைக் கூட்டு பையோமெட்ரிக் கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8.3.2 எண்ணூர் கழிமுகப் பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்பு

எண்ணூர் கழிமுகப் பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்புக்கு ரூ.45.99 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியது. தாவரங்கள் நடவு செய்வதற்கான ஆயத்தப் பணிகள் வனத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.4 விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

8.4.1 கோவை செம்மொழிப் பூங்கா அமைப்பதற்கான பெருந்திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கோவை மத்திய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள 165 ஏக்கர் பரப்பளவில்

2023 மார்ச் 30]

செம்மொழிப் பூங்கா (உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா), கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகள் கொண்ட பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக, 45 ஏக்கரில் கோயம்புத்தூர் செம்மொழிப் பூங்கா மாநாட்டு அரங்கு, பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஜூன் 2023-ல் தொடங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8.4.2 அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்

பெருநகரில் உள்ள நீர்வழிப் பாதைகளின் நீரின் தரத்தை குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் மேம்படுத்துவதற்கான முழுமையான அணுகுமுறையை உறுதி செய்வதற்கு, அடையாறு மற்றும் கூவம் ஆறுகளுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் போன்ற பணிகள் Hybrid Annuity Model *முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

8.4.3 பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு (சென்னை மாநகரம் தவிர) நீர் வழங்கலுக்கான கூடுதல் ஆதாரமாக சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள சாத்தியமுள்ள நீர்நிலைகளைக் கண்டறிந்து சீரமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கைத் தயாரித்தல்

சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள 40 மில்லியன் கன அடிக்கும் குறையாத கொள்ளளவு கொண்ட சாத்தியமுள்ள நீர்நிலைகளைக் கண்டறிந்து அவற்றைச் சீரமைத்து, சென்னை வடிநிலப் பகுதியில் உள்ள பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு (சென்னை தவிர) நீர் வழங்கலுக்கான கூடுதல் நீர் ஆதாரமாக உருவாக்குவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் இறுதி அறிக்கை மார்ச் 2023-ல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2023 மார்ச் 30

9. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

ஒரு நகரத்தின் உட்கட்டமைப்பின் அடித்தளமானது, அதன் நகர்ப்புர உட்கட்டமைப்பைச் சார்ந்தது ஆகும். மேலும் உட்கட்டமைப்பின் வளர்ச்சியானது, மக்களுக்கு பொது சேவைகள் வழங்குவதையும், பொதுமக்கள் வாழத் தேவையான, பொது இடங்களின் பயன்பாட்டை முடிவு செய்து அளிப்பது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

அரசுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கும், திட்டங்களை வெற்றிகரமாக முடிக்கத் தேவையான நிதி உதவிகளை அளிக்கவும், திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும், 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாளன்று, “தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தை (TUFIDCO)” 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் நிறுவியது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கான முதலீடுகளை ஈர்க்கத்தக்க வகையில், குடிமக்கள் நிறைவுகொள்ளத்தக்க நிலையில் நீடிக்கத்தக்க வசதிகளுடன் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது டுபிட்கோ நிறுவனத்தின் தொலைநோக்காகும்.

9.1 திட்ட இயக்குநரகம்/திட்ட முகமை

டுபிட்கோ நிறுவனம் பின்வரும் ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களுக்குத் திட்ட இயக்குநரகமாகவும்/திட்ட முகமையுமாகவும் செயல்படுகிறது.

1. சீர்மிகு நகரத் திட்டம் (Smart Cities Mission)
2. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation)
3. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0)
4. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்
5. சிங்காரச் சென்னை 2.0
6. நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்

2023 மார்ச் 30]

9.2 நிதி மேலாளர்

மேலும், டுபிட்கோ நிறுவனம் பின்வரும் திட்டங்களுக்கான நிதியை கையாளுகிறது:

1. *சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (*Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns*) – சுழல் நிதி*
2. *மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (*State Urban Infrastructure Development Fund*)*
3. *ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்* I *மற்றும்* II *(*Integrated Urban Development Mission I & II*)*
4. *தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (*TUFIDCO Infrastructure Funding Scheme*)*
5. *சிறப்புச் சாலைகள் திட்டம் (*Special Roads Programme*)*

9.3 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

*ஒன்றிய அரசு, அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தை (*AMRUT*) ஜூன் 2015 இல் தொடங்கியது. மேலும், இத்திட்டத்தினை மார்ச் 2023-க்குள் முடிவுக்குக்கொண்டுவர ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய இலக்குகளானவை (அ) ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் இணைப்புமூலம் தடையற்ற குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை உறுதி செய்தல்; (ஆ) பூங்காக்கள் மற்றும் பசுமை திறந்தவெளிகளை ஏற்படுத்துவதன்மூலம் நகரங்களின் மதிப்பை ஏற்றமுற செய்தல் மற்றும் (இ) பொதுப் போக்குவரத்திற்கு மாறுவதன்மூலம் மாசுபாட்டை குறைத்தல் அல்லது நடைபயிற்சி, மிதிவண்டி ஓட்டுதல் போன்ற மோட்டார் பொருத்தப்படாத வாகனப் போக்குவரத்திற்கான வசதிகளை அமைத்து கொடுப்பது.*

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள 12 நகராட்சிகள், 15 மாநகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆகிய 28 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை 2015 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு தேர்வு செய்தது. விவரங்கள் பின்வரும் அட்டவணை 9.1-ல் உள்ளது:

[*2023 மார்ச் 30*

அட்டவணை 9.1

வ. எண்	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு	வ. எண்	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு
1	பெருநகர சென்னை மாநகராட்சி	15	ஆவடி மாநகராட்சி
2	கோயம்புத்தூர் மாநகராட்சி	16	பல்லவபுரம் நகராட்சி *
3	மதுரை மாநகராட்சி	17	தாம்பரம் மாநகராட்சி
4	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி	18	கடலூர் மாநகராட்சி
5	சேலம் மாநகராட்சி	19	கும்பகோணம் மாநகராட்சி
6	திருநெல்வேலி மாநகராட்சி	20	திருவண்ணாமலை நகராட்சி
7	திருப்பூர் மாநகராட்சி	21	காஞ்சிபுரம் நகராட்சி**
8	தூத்துக்குடி மாநகராட்சி	22	இராஜபாளையம் நகராட்சி
9	தஞ்சாவூர் மாநகராட்சி	23	புதுக்கோட்டை நகராட்சி
10	ஈரோடு மாநகராட்சி	24	ஆம்பூர் நகராட்சி
11	வேலூர் மாநகராட்சி	25	காரைக்குடி நகராட்சி
12	திண்டுக்கல் மாநகராட்சி	26	நாகப்பட்டினம் நகராட்சி
13	நாகர்கோவில் மாநகராட்சி	27	இராமேஸ்வரம் நகராட்சி
14	ஓசூர் மாநகராட்சி	28	வேளாங்கண்ணி பேரூராட்சி

* தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

** காஞ்சிபுரம் நகராட்சி தற்போது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

நிதிக்கூறு:

‘அம்ருத்’ திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பல்வேறு திட்டங்களுக்கான ஒன்றிய அரசு/மாநில அரசு/ உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்பு சதவீத வரையறைகள் பின்வரும் அட்டவணை 9.2-ல் உள்ளது:

அட்டவணை 9.2

வ. எண்	மக்கள் தொகை	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1	*10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்*	*33.33%*	*20%*	*46.67%*
2	*10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்*	*50%*	*20%*	*30%*
3	*பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ருத் நகரங்கள்)*	*50%*	*20%*	*30%*

9.3.1 மாநில ஆண்டு செயல் திட்டம் (I, II, III) - ‘அம்ருத்’ திட்டங்கள்

மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (I, II, III) அடிப்படையில், ‘அம்ருத்’ திட்டங்கள் 28 பெருநகரங்கள் மற்றும் நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. ரூ.11,441.42 கோடி மதிப்பீட்டில் 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே அதிக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். விவரங்கள் பின்வரும் அட்டவணை 9.3-ல் உள்ளது:

[2023 மார்ச் 30

அட்டவணை 9.3

(ரூ. கோடியில்)

மாநில ஆண்டு செயல்திட்டம்	ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு			
		மொத்தம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	உள்ளாட்சி அமைப்பு களின் பங்கு
மாநில ஆண்டு செயல்திட்டம் I	111	3,245.51	1,355.29	649.10	1,241.10
மாநில ஆண்டு செயல்திட்டம் II	171	3,700.45	1,531.47	740.09	1,428.90
மாநில ஆண்டு செயல்திட்டம் III	163	4,495.46	1,854.39	899.08	1,742.00
மொத்தம்	445	11,441.42	4,741.15	2,288.27	4,412.00

இதுவரை, ரூ.2,731.18 கோடி மதிப்பிலான 423 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. ரூ.8,710.23 கோடி மதிப்பிலான 22 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. விவரங்கள் பின்வரும் அட்டவணை 9.4-ல் உள்ளது:

அட்டவணை 9.4

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)	ஒப்பந்தப்படி நிறைவு பெற வேண்டிய நாள்	எதிர்பார்க்கப் படும் நிறைவு நாள்
1.	சென்னை குடிநீர் வாரியம் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் – நெம்மேலி	954.00	டிசம்பர் 2021	ஜுலை 2023

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)	ஒப்பந்தப்படி நிறைவு பெற வேண்டிய நாள்	எதிர்பார்க்கப் படும் நிறைவு நாள்
2	சென்னை குடிநீர் வாரியம் – 150 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், குடிநீரை கொண்டு செல்ல குழாய்கள் பதித்தல்	125.89	மார்ச் 2022	ஜூலை 2023
3	கோயம்புத்தூர் மாநகராட்சி — பில்லூர் III குடிநீர் வழங்கல் திட்டம்	649.30	ஆகஸ்ட் 2022	ஜூன் 2023
4	கோயம்புத்தூர் மாநகராட்சி — முந்தைய மாநகராட்சி பகுதிகளில் 24X7 குடிநீர் வழங்கல் முறையை செயல்படுத்துதல்	506.04	ஆகஸ்ட் 2023	ஜனவரி 2025
5	மதுரை மாநகராட்சி — லோயர் கேம்ப் முல்லை பெரியார் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல் தனித் திட்டம்.	1,020.00	மே 2023	டிசம்பர் 2025
6	திருநெல்வேலி மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம் – III ஆம் கட்டம்	381.86	டிசம்பர் 2021	டிசம்பர் 2023
7	சென்னை குடிநீர் வாரியம் — மணலி, சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம்	223.00	டிசம்பர் 2021	செப்டம்பர் 2023

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)	ஒப்பந்தப்படி நிறைவு பெற வேண்டிய நாள்	எதிர்பார்க்கப் படும் நிறைவு நாள்
8	சென்னைப் குடிநீர் வாரியம் — கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மேம்பாட்டு மற்றும் மாற்று பணிகள்	576.76	பிப்ரவரி 2022	ஆகஸ்ட் 2023
9	திருப்பூர் மாநகராட்சி - குடிநீர் வழங்கல் திட்டம்	992.94	செப்டம்பர் 2022	ஜுன் 2023
10	இராமேஸ்வரம் நகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம்	40.33	ஆகஸ்ட் 2021	ஜுன் 2023
11	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - பாதாளச் சாக்கடை திட்டம் II ஆம் கட்டம்	344.00	ஜனவரி 2022	ஜுன் 2023
12	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - பாதாளச் சாக்கடை திட்டம் III ஆம் கட்டம்	264.12	ஏப்ரல் 2022	ஜுலை 2023
13	வேலூர் மாநகராட்சி- பாதாளச் சாக்கடை திட்டம் II ஆம் கட்டம்	343.69	ஜனவரி 2022	ஜுலை 2023
14	வேலூர்-பாதாளச் சாக்கடை திட்டம் III ஆம் கட்டம்	248.26	மார்ச் 2022	ஜுலை 2023
15	சென்னை குடிநீர் வழங்கல் வாரியம் - வளசரவாக்கம் குடிநீர் திட்டம்	67.74	நவம்பர் 2020	மார்ச் 2023

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)	ஒப்பந்தப்படி நிறைவு பெற வேண்டிய நாள்	எதிர்பார்க்கப் படும் நிறைவு நாள்
16	ஆம்பூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம்	129.07	அக்டோபர் 2021	கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு– ஜுன் 2023 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஜுன் 2023
17	திருப்பூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம்	525.92	ஜுலை 2022	ஜுன் 2023
18	திருநெல்வேலி மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டம் – II ஆம் கட்டம்	289.01	ஜுலை 2021	ஜுலை 2023
19	கோயம்புத்தூர் மாநகராட்சி பாதாளச் சாக்கடை திட்டம்	442.00	அக்டோபர் 2021	செப்டம்பர் 2023
20	சென்னைப் குடிநீர் வாரியம் - மாத்தூர், மடிப்பாக்கம், ஜல்லடம்பேட்டை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்	184.11	ஜனவரி 2021	ஜுன் 2023

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்)	ஒப்பந்தப்படி நிறைவு பெற வேண்டிய நாள்	எதிர்பார்க்கப் படும் நிறைவு நாள்
21	இராஜபாளையம் நகராட்சி—பாதாளச் சாக்கடை திட்டம்	176.75	மார்ச் 2022	ஜுன் 2023
22	நாகர்கோவில் மாநகராட்சி – குடிநீர் வழங்கல் திட்டம்	223.44	மே 2021	மார்ச் 2023

9.4 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0

ஒன்றிய அரசு, "அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0" என்ற திட்டத்தை 1-10-2021 அன்று துவக்கியது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் அதாவது, 21 மாநகராட்சிகள் 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் ஆகியவை அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் பயனடைகின்றன.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாள் தொடங்கிய பின் 5 ஆண்டு திட்ட காலத்தில், மாநகரங்கள்/ நகரங்கள் முழுவதும் குழாய் வழி குடிநீர் வழங்குவதும், பெரிய நகரங்களில் (அம்ரூத் நகரங்கள்) சுகாதாரத்தை மேம்படுத்துவதும், இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் நகர்ப்புர ஈரநிலங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளை புத்துயிரூட்டுவது மட்டுமன்றி, பசுமைவெளிகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

9.4.1 திட்ட நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிதிப் பங்கீட்டு விவரம் பின்வரும் அட்டவணை 9.5-ல் உள்ளது:

2023 மார்ச் 30]

அட்டவணை 9.5

வ. எண்	மாநகரம்/ நகரத்தின் மக்கள் தொகை	ஒன்றிய அரசின் பங்கு
1	*1 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்கள்*	*50%*
2	*1இலட்சத்திற்கும்மேல் 10இலட்சத்திற்கும்கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்கள்*	*மூன்றில் ஒரு பங்கு*
3	*10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் (திட்ட ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 10 சதவிகித அளவிலான திட்டங்கள் பொது தனியார் பங்களிப்புடன் இருக்க வேண்டும்)*	*25%*

அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கான குறிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.4,942.00 கோடி ஆகும். முதல் கட்டத்தில் (2021-22 ஆம் நிதியாண்டு), ரூ.5,424 கோடி மதிப்பிலான 579 திட்ட செயற்குறிப்புகளுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணை 9.6-ல் உள்ளது.

அட்டவணை 9.6

இரண்டாம் கட்டத்தில் (2022-23 ஆம் நிதியாண்டு), ரூ.7,089.80 கோடி மதிப்பிலான 271 திட்ட செயற்குறிப்புகளுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணை 9.7-ல் உள்ளது:

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டங்கள்	எண்ணிக்கை	தோராய திட்ட மதிப்பீடு			
			மொத்தம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1	குடிநீர் வழங்கல்	*169*	*3,356.24*	*1,435.81*	*889.59*	*1,030.84*
2	பாதாள சாக்கடை திட்டம்	*8*	*1,904.22*	*487.23*	*617.81*	*799.18*
3	நீர்நிலைகள் மேம்பாடு	*187*	*120.20*	*50.42*	*36.18*	*33.60*
4	பசுமை வெளி மேம்பாடு	*215*	*43.56*	*17.21*	*9.11*	*17.24*
மொத்தம்		**579**	**5,424.22**	**1,990.67**	**1,552.69**	**1,880.86**

[2023 மார்ச் 30

அட்டவணை 9.7

(ரூ. கோடியில்)

வ எண்	திட்டங்கள்	எண்ணிக்கை	தோராய மதிப்பீடு			
			மொத்தம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1	குடிநீர் வழங்கல்	67	2,648.84	1,166.18	794.65	688.01
2	பாதாள சாக்கடை திட்டம்	22	4,352.04	1,217.36	1,305.62	1,829.06
3	நீர்நிலைகள் மேம்பாடு	71	48.51	14.94	14.62	18.95
4	பசுமை வெளி மேம்பாடு	111	40.40	11.28	11.28	16.94
	மொத்தம்	271	7,089.79	2,409.76	2,127.07	2,552.96

9.5 சீர்மிகு நகரத் திட்டம் (Smart Cities Mission)

முக்கிய உட்கட்டமைப்பை வழங்கும் நிலையான மற்றும் உள்ளடக்கிய நகரங்கள், குடிமக்களுக்கு உயர்தரமான வாழ்க்கை அளிப்பது, சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவது மற்றும் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்துவது சீர்மிகு நகரத் திட்டத்தின் நோக்கமானது ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் 11 நகரங்கள் அதாவது சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசும், மாநில அரசும் ஒரு நகரத்திற்கு தலா ரூ.500 கோடி வீதம், மொத்தம் ஒரு நகரத்திற்கு ரூ.1,000 கோடி நிதி அளிக்கிறது.

2023 மார்ச் 30]

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ரூ.10,797.89 கோடி மதிப்பிலான 684 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அதில், ரூ.5,583.08 கோடி மதிப்பிலான 485 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன; ரூ.5,214.81 கோடி மதிப்பிலான 199 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. அவற்றின் விவரம் கீழே அட்டவணை 9.8-ல் உள்ளது:

அட்டவணை 9.8

(ரூ. கோடியில்)

வ. எண்	சீர்மிகு நகரத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு
1	சென்னை	48	1096.95
2	கோயம்புத்தூர்	54	953.77
3	மதுரை	16	981.40
4	தஞ்சாவூர்	103	966.62
5	சேலம்	91	972.94
6	வேலூர்	52	963.40
7	திருப்பூர்	28	986.05
8	தூத்துக்குடி	84	965.00
9	திருநெல்வேலி	71	981.59
10	திருச்சிராப்பள்ளி	83	965.17
11	ஈரோடு	54	965.00
	மொத்தம்	684	10,797.89

சீர்மிகு நகரத் திட்டம் 30-6-2023 ஆம் நாளன்று முடிவடைவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

9.6 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

அரசு, “கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தை (KNMT)” 2021 ஆம் ஆண்டு தொடங்கியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களானவை, 100% வீட்டு குடிநீர்க் குழாய் இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள், சுகாதாரம், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், மயானங்களை நவீனமாக்குவது மற்றும் பிற சமூக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதாகும். மேலும், இத்திட்டம் பின்தங்கிய பகுதிகள், குடிசைப் பகுதிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்

[2023 மார்ச் 30

ஆகியவற்றின் உட்கட்டமைப்புகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதில் கவனம் செலுத்துகிறது, மாணவர்கள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு உதவும் வகையில், கணினிகள் மற்றும் அறிவுசார் மையங்களுடன்கூடிய நவீன நூலகங்கள் அமைப்பதிலும் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புர உட்கட்டமைப்புத் திட்டங்களான பேருந்து நிலையங்கள் மேம்பாடு, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், வாரச்சந்தைகள் மற்றும் சந்தைகளின் கட்டுமானம், நீர்நிலைகளை புனரமைத்தல், திடக்கழிவுகளை அகற்றுவதற்கான மின்-வாகனங்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் பொது கழிப்பறைகள் கட்டுதல் போன்றவற்றின்மீது கவனம் செலுத்துகிறது.

அரசு, இத்திட்டத்திற்காக தலா ரூ.1,000 கோடியை 2021-22 ஆம் நிதியாண்டிற்கும் மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டிற்கும் ஒதுக்கியுள்ளது. 2021-22 ஆம் நிதியாண்டில், ரூ.1,030.91 கோடி மதிப்பிலான 1,383 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது (கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் பங்கு ரூ.972.75 கோடி). அதன் விவரம் பின்வரும் அட்டவணை 9.9-ல் உள்ளது:

அட்டவணை 9.9

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு			
			மொத்தம்	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் பங்கு (2021-22)	அம்ருத் 2.0	உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு / குபிட்கோ கடன் உதவி
1	சாலைகள்	1030	475.28	475.28	0	0
2	உலோகத்திலான விபத்து தடுப்பு பட்டை	33	5.06	5.06	0	0
3	பூங்காக்கள்	83	46.66	45.52	1.14	0
4	சுடுகாடு	50	73.73	73.73	0	0

2023 மார்ச் 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு			
			மொத்தம்	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் பங்கு (2021-22)	அம்ருத் 2.0	உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு / டுபிட்கோ கடன் உதவி
5	அறிவுசார் மையம்	36	62.79	62.79	0	0
6	பேருந்து நிலையங்கள்	10	44.69	35.68	0	9.02
7	சந்தைகள்/ வாரச் சந்தைகள்	38	155.44	116.85	0	38.59
8	சமுதாயக்கூடம்	1	2.8	1.96	0	0.84
9	குளங்கள்/ நீர்நிலைகள்	100	115.33	110.88	4.45	0
10	மின்கல வாகனங்கள்	1	42	38.43	0	3.57
11	இலகுரக வாகனங்கள்	1	7.13	6.57	0	0.56
	மொத்தம்	1,383	1,030.91	972.75	5.59	52.57

ஒப்பளிக்கப்பட்டுள்ள 1,383 திட்டங்களில், ரூ.457.21 கோடி மதிப்பிலான 1,063 திட்டங்கள் முடிவுற்றுள்ளன மற்றும் பிற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

அதேபோன்று, 2022-23 ஆம் நிதியாண்டில், ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் அட்டவணை 9.10-ல் உள்ளது:

[2023 மார்ச் 30

அட்டவணை 9.10

(ரூ. கோடியில்)

வ எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு				
			மொத்தம்	கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின் பங்கு 2022-23	அம்ருத் 2.0	மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி	உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு / டுபிட்கோ
1	அறிவுசார் மையம்	35	67.20	67.20	0.00	0.00	0.00
2	சுடுகாடு மேம்பாடு	71	83.85	83.85	0.00	0.00	0.00
3	பேருந்து நிலைய மேம்பாடு	27	46.44	31.77	0.00	0.00	14.67
4	சந்தை கட்டுதல்	25	50.21	33.37	0.00	0.00	16.84
5	தினசரி சந்தை	22	165.06	82.55	0.00	0.00	82.51
6	மீன் அங்காடி	2	2.33	1.17	0.00	0.00	1.16
7	சாலைகள் சந்தைகள்	413	273.33	273.33	0.00	0.00	0.00
8	பூங்கா	332	97.25	57.65	39.60	0.00	0.00
9	குளங்கள் / நீர்நிலைகள்	242	146.88	74.39	72.49	0.00	0.00
10	குடிநீர் வழங்கல்	122	2499.33	305.40	1969.55	224.37	0.00
11	சமுதாயக் கூடம்	1	0.98	0.49	0.00	0.00	0.49
	மொத்தம்	1,292	3,432.86	1,011.17	2,081.64	224.37	115.67

1,292 திட்டப் பணிகளில், ரூ.5.58 கோடி மதிப்பிலான 25 திட்டங்கள் முடிவுற்றுள்ளன; ரூ.573.12 கோடி மதிப்பிலான 948 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன மற்றும் எஞ்சிய திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2023 மார்ச் 30]

9.7 சிங்காரச் சென்னை 2.0

அரசு "சிங்கார சென்னை 2.0" திட்டத்தை 2021 ஆம் ஆண்டு தொடங்கியது. 2021-22 ஆம் நிதியாண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் சேர்ந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தம் ரூ.511.48 கோடி மதிப்பிலான 202 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சாலை மேம்பாடு, விளையாட்டு மைதானம், தெரு பெயர் பலகைகள், நவீன தகனமேடை, மழைநீர் வடிகால், பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானம்/புதுப்பித்தல் மற்றும் தெருக்களை அலங்கரித்தல் உள்ளிட்டவை அடங்கும். 2021-22 ஆம் நிதியாண்டிற்கான திட்டங்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணை 9.11-ல் உள்ளது:

அட்டவணை 9.11

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	சிங்கார சென்னை 2.0 வின் பங்கு 2021-22
பெருநகர சென்னை மாநகராட்சி			
1	செயற்கை நீரூற்று	26	1.29
2	பூங்கா	27	23.25
3	விளையாட்டு மைதான மேம்பாடு	17	12.49
4	நிறம்மாறும் திறனுடைய வண்ண மின்விளக்குகள்	1	1.81
5	சாலைகள் (தார் சாலை/ பேருந்து சாலை)	59	37.58
6	சுடுகாடு மேம்பாடு	10	6.14
7	தெரு பெயர்ப் பலகை	1	8.43

[2023 மார்ச் 30

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	சிங்கார சென்னை 2.0 வின் பங்கு 2021-22
8	மழைநீர் வடிகால் (I கட்டம்-10, II ஆம் கட்டம்-9)	19	260.87
9	பள்ளிக்கூடக் கட்டடங்கள்	23	49.83
10	நீர்நிலைகள்	12	9.08
11	மாற்றுத்திறனாளிகளுக்கான தனிவழித்தடம்	1	1.14
12	விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையம்	2	0.81
13	மேம்பாலங்களை அழகுபடுத்துதல்	2	0.55
துணை மொத்தம் (அ)		200	413.27
சென்னை குடிநீர் வாரியம்			
1	நீலாங்கரை குடிநீர்த் திட்டம்	1	66.67
2	அண்ணா பிரதான சாலை நெசப்பாக்கம்-கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்-பாதாளச் சாக்கடைத் திட்டம்	1	31.54
	துணை மொத்தம்	2	98.21
மொத்தம்		202	511.48

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளும் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

அதேபோன்று, 2022-23 நிதியாண்டில், ரூ.499.85 கோடி மதிப்பிலான 726 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில், 21 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன; 470 திட்டங்கள் செயலாக்கத்திலும் மற்ற திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு நிலையிலும் உள்ளன. 2022-23 ஆம் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வரும் அட்டவணை 9.12-ல் உள்ளது:

2023 மார்ச் 30]

அட்டவணை 9.12

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	சிங்கார சென்னை 2.0-ன் பங்கு
பெருநகர சென்னை மாநகராட்சி			
1	சாலைகள் – பேருந்து வழித்தடம்	38	25.91
2	உட்புறச்சாலைகள்	414	29.69
3	விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையம்	3	19.72
4	பூங்கா	84	28.79
5	கடற்பாசி பூங்கா	57	7.67
6	விளையாட்டு மைதான மேம்பாடு	51	16.33
7	மேம்பாலங்களை அழகுபடுத்துதல்	9	9.47
8	மழைநீர் வடிகால்	2	103.88
9	மயான மேம்பாடு	28	23.86
10	கடற்கரையில் தனி வழித்தடம்	1	0.99
11	பள்ளிக்கு தேவையான மரப்பொருள்கள்	1	4.15
12	பள்ளிக்கூடங்கள்	16	56.32
13	விக்டோரியா வளாகத்தை அழகுபடுத்துதல்	1	32.62
14	நீர்நிலை மேம்பாடு	1	2.99
15	மீன் அங்காடி	1	1.35
16	ஆடுதொட்டி	1	1.43
	துணை மொத்தம்	719	382.40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	சிங்கார சென்னை 2.0-ன் பங்கு
சென்னை குடிநீர் வாரியம்			
1	பாதாள சாக்கடை — அன்னை சத்யா நகரில் உள்ள சிவானந்தா காலனி, எம்.கே.பி காலனி, மற்றும் படவட்டமன் தொழிற்பூங்கா மற்றும் சிறிய கூடம்	1	8.19
2	வில்லிவாக்கம் கொன்னூரர் ஏரியில் 5 எம் எல் டி கொள்ளளவு கொண்ட நிலையம்	1	17.97
3	நந்தம்பாக்கம் பாதாளச் சாக்கடை	1	13.39
4	செம்மஞ்சேரி குடிநீர் வழங்கல்	1	24.89
5	மின்காந்த அளவுமானி	1	43.01
6	உத்தண்டி ஒருங்கிணைந்த கழிவுநீர் திட்டம்	1	5.00
7	செம்மஞ்சேரியில் ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம்	1	5.00
	துணை மொத்தம்	7	**117.45**
	மொத்தம்	**726**	**499.85**

9.8 நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்

நகர்ப்புரங்களில் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தரமான சாலை உட்கட்டமைப்பு அவசியம். பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மேற்கொள்ளும் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் திட்டப் பணிகளின் காரணமாக சாலை உட்கட்டமைப்பு சேதமடைந்துள்ளது. நகர்ப்புர உள்ளாட்சிகள் தங்கள் சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அனைத்து மண் சாலைகளும், அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகளாக மாற்றுவது அவசியம்.

2023 மார்ச் 30]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19-10-2022 அன்று சட்டப் பேரவையில், அரசு, அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.2,200 கோடியை நகர்ப்புர உள்ளாட்சிகளின் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்த மானியமாக வழங்கும் என அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில், நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டத்தை (NSMT) செயல்படுத்த ரூ.2,200 கோடியை அனுமதிக்க 19-11-2022 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின், அரசாணை (ப) எண் 423-ல் ஆணை வெளியிடப்பட்டது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒப்புதல் வழங்க வழிகாட்டுமுறை 13-2-2023 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (ப) எண் 19-ல் வெளியிடப்பட்டுள்ளது:

9.9 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - சுழல் நிதி (UIDSSMT – Revolving Fund)

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, டுபிட்கோ நிறுவனம் சுழற்சி நிதியை உருவாக்கி உள்ளது. 99 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கான பணிகளுக்கு (Internal Plumbing) வட்டியில்லாக் கடன் அளிக்கப்பட்டுள்ளது. விவரம் பின்வரும் அட்டவணை 9.13-ல் உள்ளது:

அட்டவணை 9.13

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்டம்	நகராட்சிகள் / மாநகராட்சிகளின் எண்ணிக்கை	சுழற்சி நிதியில் ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை
1	குடிநீர் வழங்கல்	73	169.58
2	பாதாளச் சாக்கடைத் திட்டம்	26	193.22
	மொத்தம்	99	362.80

இத்திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

[2023 மார்ச் 30

9.10 மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF)

பெருநகர திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக, டுபிட்கோ நிறுவனம் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி என்ற சுழல் நிதியை உருவாக்கியுள்ளது. இதன்கீழ் இதுவரை ரூ.2,301.00 கோடி நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

அரசு “பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (MIDF) நோக்கத்தை விரிவுபடுத்தும் வகையிலும் “மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி” என பெயர் மாற்றம் செய்தும் 17-6-2022 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 89-ல் ஆணைகளை வெளியிட்டுள்ளது. இதன்மூலம், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அவற்றின் உட்கட்டமைப்புத் தேவைகளைப் நிறைவு செய்வதற்கான நிதியை குறைந்த வட்டியில் கடனாக அளிக்க ஏதுவாகியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. விவரம் பின்வரும் அட்டவணை 9.14-ல் உள்ளது:

அட்டவணை 9.14

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஏற்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
1	திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல்	159.98
2	8 மாநகராட்சிகள் மற்றும் 77 நகராட்சிகளில் ஆற்றல் திறன் கொண்ட தெரு விளக்குகள் பொருத்துதல்	342.85
3	11 நகராட்சிகளில் ஆற்றல் திறன் கொண்ட புதிய எல்.இ.டி. தெரு விளக்குகள் பொருத்துதல்	8.00
4	439 பேரூராட்சிகளில் ஆற்றல் திறன் கொண்ட தெரு விளக்குகள் பொருத்துதல்	155.56

2023 மார்ச் 30]

வ. எண்	**திட்டத்தின் பெயர்**	**ஏற்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)**
5	*மடிப்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம்*	*115.60*
6	*93 பேரூராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகள் – நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்பு*	*153.17*
7	*18 மாநகராட்சி / நகராட்சிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளுக்கான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்பு*	*56.39*
8	*விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் கொசஸ்தலை ஆற்றுப்படுகையில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுதல்*	*280.00*
9	*8 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாளச் சாக்கடை/குடிநீர் இணைப்பு அளித்தல்*	*62.95*
10	*6 மாநகராட்சி, 10 நகராட்சிகளில் உள்ள தெரு விளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட விளக்குகள்/ புதிய எல். இ.டி. விளக்குகளாக மாற்றுதல்*	*85.22*
11	*கோயம்புத்துரர் மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு பவானி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம்*	*410.61*
	மொத்தம்	*1,830.33*

9.11 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM) கட்டம் I (நிதியாண்டு 2011-2016)

2011-12 முதல் 2016-17 வரையிலான 5 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேருராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.10,773.22 கோடி (முழு நிதி/பகுதி நிதி) மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 13,257 திட்டங்களில், 13,242 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன மற்றும் 15 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-கட்டம் II (நிதியாண்டு 2018-19–2020-21)

ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-II, 2018-19 ஆம் ஆண்டில், ஆண்டுக்கு ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-II-ன்கீழ் (சென்னை நீங்கலாக) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளில் பின்வரும் அட்டவணை 9.15-ல் உள்ளவாறான அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

அட்டவணை 9.15

(ரூ. கோடியில்)

வ எண்	திட்டப் பணிகள்	திட்டங்களின் எண்ணிக்கை	ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்ட நிதிப் பங்கு				
			திட்ட மதிப்பீடு	2018-19	2019-20	2020-21	2021-22
1	சாலை	1,500	1,215.19	292.77	409.26	285.76	
2	கழிவுநீர்	769	263.70	94.51	51.13	86.42	
3	குடிநீர்	89	2,650.66	225.45	335.53	80.96	67.62

2023 மார்ச் 30]

வ எண்	திட்டப் பணிகள்	திட்டங்களின் எண்ணிக்கை	ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்ட நிதிப் பங்கு				
			திட்ட மதிப்பீடு	2018-19	2019-20	2020-21	2021-22
4	பாதாளச் சாக்கடை	67	703.97	121.87	94.68	238.24	
5	பூங்கா	3	9.50	-	8.53	-	
6	சந்தை	2	8.40	-	1.12	4.20	
7	பாலங்கள்	3	20.15	-	4.04	12.08	
8	பேருந்து நிலையம்	4	12.84	-	-	10.27	
9	தெருவிளக்குகள்	12	3.81	-	-	3.04	
10	கழிவுநீரகற்றல்	11	31.17	11.00	20.17	-	
11	திடக்கழிவு மேலாண்மை	1	8.57	-	7.71	-	
12	மற்றவை	10	9.80	4.40	5.12	-	
	மொத்தம்	2,471	4,937.76	750.00	937.28	720.97	67.62

மொத்தம் 2,078 திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன, மீதமுள்ள 387 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன மற்றும் 6 திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன.

9.12 டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (TIFS)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், உபரி நிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்கான அதிகபட்ச காலம் 10 வருடங்கள் ஆகும்.

9.13 சிறப்பு சாலைகள் திட்டம் (SRP)

அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் வங்கிகள்/நிதி நிறுவனங்களிடமிருந்து டுபிட்கோ மூலம் கடனாக திரட்டப்பட்ட நிதியின் மூலம், அவசரமாக சீரமைக்கப்பட வேண்டிய சாலைப் பணிகளை மேற்கொள்ள ரூ.1,000 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகியவை 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான சிறப்பு சாலைகள் திட்டத்தின் பின்வரும் சாலைப் பணிகளை மேற்கொண்டுள்ளன. அதன் விவரம் பின்வரும் அட்டவணை 9.16-ல் கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 9.16

(ரூ. கோடியில்)

வ. எண்	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்	எண்ணிக்கை	நீளம் கி.மீல்	ஏற்பளிக்கப்பட்ட திட்ட தொகை	சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட கடன்	நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1	*பெருநகர சென்னை மாநகராட்சி*	*1*	*256.01*	*150.11*	*150.00*	*0.11*
2.	*நகராட்சி நிர்வாக இயக்குநரகம்*	*102*	*1,349.05*	*804.19*	*700*	*104.19*
3.	*பேரூராட்சிகளின் ஆணையரகம்*	*183*	*302.28*	*150.00*	*150.00*	*0*
	மொத்தம்	*286*	*1,907.34*	*1,104.30*	*1,000.00*	*104.30*

அனைத்துத் திட்டங்களும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், வெகுகாலமாக தமிழ்நாடு அரசிடம், தமது தொழிற்சாலைகளின் அத்தியாவசிய நீர் தேவைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர, குறிப்பாக, தொழிற்சாலைகளுக்கு இன்றியமையாத தேவையான

2023 மார்ச் 30]

நீரைச் சீரான முறையில் வழங்க வசதிகளை கோரி வந்தது. இந்த நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும்பொருட்டு தமிழ்நாடு அரசு முந்தைய தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு (TACID) திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (TADP) ஒன்றை உருவாக்க பணித்தது. அதன்படி, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மூலமாக (TACID) திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (TADP) ஒன்றினை உருவாக்கி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான குடிநீர் விநியோக திட்டம், திருப்பூர் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு நீர் வழங்கல் திட்டம், சுத்திகரிப்பு வசதிகளுடன்கூடிய ஒரு பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த வகை செய்தது. இத்திட்டங்களைச் செயலாக்க, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) மற்றும் குத்தகை மற்றும் நிதி சேவை நிறுவனம் (IL&FS) ஆகிய நிறுவனங்களுக்கிடையே 25-8-1994 அன்று சம பங்கு முதலீடு மற்றும் பல்வேறு பொதுவான விதிமுறைகளுடன் கையெழுத்தானது. இறுதியாக, 1995 ஆம் ஆண்டு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் (NTADCL) நிறுவனமானது, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்திலிருந்து (TEA) 4 உறுப்பினர்கள், குத்தகை மற்றும் நிதி சேவை நிறுவனத்திலிருந்து (IL&FS) 2 உறுப்பினர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பாக ஓர் உறுப்பினர் ஆகியோரைக் கொண்டு தொடங்கப்பட்டது.

நாளொன்றுக்கு 185 MLD நீர் வழங்கல் சுமார் 250 MLD வரை விரிவுபடுத்தக்கூடிய ஒரு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் 15 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) சுமார் 30 MLD வரை விரிவுபடுத்தக்கூடிய திட்டம் ஆகியவற்றை ரூ.1,023 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த, சலுகை ஒப்பந்தம் ஒன்று 11-2-2000 அன்று தமிழ்நாடு அரசு, திருப்பூர் நகராட்சி (இப்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் இடையே கையெழுத்தானது. இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.1,023 கோடியாகும். இது ரூ.613.80 கோடி (பொது கடனாக) M/s IDBI வங்கி தலைமையிலான மற்ற 19 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மூலமும், ரூ.86.50 கோடி துணைக் கடனாக ஏற்பாட்டாளர்கள் மூலமும், ரூ.322.70 கோடி சம பங்குகள் மூலமாகவும் நிதி திரட்டப்பட்டது

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் சம பங்கு மூலதனம் ரூ.10 கோடி முதன் முதலில் இந்திய அரசின் சார்பின் 1997-98-ல் TACID மூலமாக நிதியளிக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு அரசு (ரூ.55 கோடி) மற்றும் IL&FS நிறுவனம் சேர்ந்து (ரூ.50 கோடி) கூட்டாக ILFS மற்றும் GOTN 54:46 பங்களிப்பில் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் (SPC) தமிழ்நாடு நீர் முதலீட்டுக் கழகம் (TWIC) மூலமாக ரூ.105 கோடி கூட்டு நிதி அளிக்கப்பட்டது. ILFS நிறுவனம் ஒரு தனியார் பங்களிப்பு முதலீட்டாளரான AIDQUA Holdings Mauritius லிட் என்ற நிறுவனத்தை 27.89% பங்களிப்பிற்காக ரூ.90 கோடி முதலீட்டில் கொண்டுவந்தது. 12-4-2001 அன்று, பங்குதாரர்களுக்கான ஓர் ஒப்பந்தமானது NTADCL நிர்வாகக் குழுவால் ஏற்கப்பட்டு, அதில் சில சிறப்பு அதிகாரங்களை M/s. AIDQUA-க்கு வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பங்குதாரர் ஒப்பந்தத்தின் சாராம்சங்களை NTADCL-ன் அசல் நிறுவன அமைப்பு ஆவண விதிகளுக்கு (Articles of Association) பதிலாக, புதிதாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்த முதலீடுகளைத் தவிர, NTADCL-ன் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (EPC), குழுவான மஹிந்திரா மூலமாக ரூ.45 கோடி, அரசு சார்ந்த காப்பீடு நிறுவனங்கள் மூலமாக ரூ.45 கோடி மற்றும் ILFSமூலம் ரூ.32.70 கோடி நேரடியாக முதலீடுகள் பெறப்பட்டன.

இத்திட்ட கட்டுமானப் பணிகள் 2002-ல் துவங்கப்பட்டு நீர் வழங்கல் சேவை 2006-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டம்மூலம் 38.957 MLD குடிநீர் திருப்பூர் மாநகராட்சிக்கும், 18.26 MLD குடிநீர் 8 வழியோர கிராமங்களுக்கும் மற்றும் 5 பஞ்சாயத்து ஒன்றியங்கள் உட்பட்ட 600 வழியோர குடியிருப்புகளுக்கும் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல நூற்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சாயம் மற்றும் செயலாக்க நிறுவனங்களில் நீர் வழங்கல் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. பாதாள கழிவுநீர் அகற்றும் அமைப்பு 15 MLD சுத்திகரிப்பு திறனுடன் ஒன்று கட்டப்பட்டு, தற்போது 15,246 வீடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட 8 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட நகர்ப்புர ஏழை மக்களுக்காக குறைந்த செலவின கழிப்பறை வசதிகள் 31 சுகாதார வளாகங்கள்மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

இந்த நீர் வழங்கல் திட்டம், கலப்பு மானிய மாதிரியில் அதாவது, இதன் வணிக அளவிலான வெற்றிகரமான செயல்பாடானது நிறுவனங்களுக்கான நீர் வழங்கலின் வருமானத்தை இணைத்தே உருவாக்கப்பட்டிருந்தது. ஆரம்பக் காலத்தில், நிறுவனங்களுக்கான நீர் வழங்கல் மெதுவாக உயர்ந்து கொண்டிருந்தபோதிலும், மதிப்பிடப்பட்ட தேவையான 115 MLD என்ற அளவில் 50 MLD என்ற அளவிற்கு மேலாக அடைய முடியவில்லை. தொழிற்சாலைகளுக்கு குறைந்த அளவில் நீர் வழங்கல் மற்றும் வருமானம், அதனோடு சேர்ந்த கூடுதலான முதலீட்டுச் செலவினங்கள், திட்ட கட்டுமான செலவினங்களின் மேல் செலவு ஆகிய காரணங்களால் ஆரம்ப காலங்களிலிருந்தே இந்நிறுவனம் கூடுதலான வருமான இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது.

நிறுவனம் மிகுந்த இழப்புகளைச் சந்தித்துவந்த நிலையில், மேலாக, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 30-11-2011 அன்று வெளியிட்ட பூஜ்ய திரவ வெளியேற்றல் (ZLD) ஆணை காரணமாக பெரும்பாலான சாயப்பட்டறைகள் மற்றும் வெளுத்தல் நிறுவனங்கள் மூடப்பட்டன. நிறுவனத்தின் வணிகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியதால் தொழிற்சாலைகளுக்கான நீர் வழங்கல் 8 MLD-க்கும் கீழாக குறைந்து, நிறுவனத்தின் நிதிச் சிக்கலை மேலும் அதிகரித்தது. இதனால், இந்நிறுவனம் அதன் கடனைத் திருப்பிச் செலுத்தும் சக்தியினை இழந்து, அதன் நிகரமதிப்பு சற்றேறக்குறைய முழுவதுமாக துடைத்தெறியப்பட்டது.

இந்த இக்கட்டான நிதிச் சூழல் ஒரு நிறுவன கடன் மறுசீரமைப்புத் தொகுப்பு (Corporate Debt Restructuring package) ஒன்றின்மூலம் 2011-12 இல் சீரமைக்கப்பட்டது. CDR-ன்கீழ் பொது கடனீட்டாளர்கள் தங்களது கடனை மறுசீரமைத்து, வட்டி விகிதத்தை 11 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக குறைத்து, மேலும் 15% வரையிலான கடன் நிலுவைத் தொகையை பங்குகளாக மாற்றியமைத்தார்கள். தமிழ்நாடு அரசு ரூ.150 கோடி பங்கு முதலீடு செய்தும், மேலும் 100 MLD வரையிலான குடிநீரைக் கூடுதலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய உறுதி அளித்தது. தற்போது சுமார் 65 MLD நீரானது கூடுதலாக, திருப்பூர் மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு 21/KL விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது. அவ்விலையில் ஒரு பகுதி தமிழ்நாடு அரசு அதன் அரசாணை G.O (Ms) No.25, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16-3-2012-ன்படி நேரடியாக வழங்குகிறது. மேலும், இந்த நிறுவன கடன் மறுசீரமைப்பு தொகுப்பு அரசால் அனுமதிக்கப்பட்டது.

[2023 மார்ச் 30

தமிழ்நாடு அரசின் கூடுதல் நிதியளிப்பு மற்றும் உயர்த்தப்பட்ட விலை நிர்ணயம் மூலமாக நிறுவனத்தின் செயல்திறன் கணிசமாக மேம்பட்டு, 2015-16-ம் நிதியாண்டு முதல் இலாபம் ஈட்டத் தொடங்கியது. நிறுவனத்தின் விற்பனை 2010-11 நிதியாண்டில் ரூ.106.65 கோடியிலிருந்து, 2021-22 நிதியாண்டில் ரூ.226.56 கோடியாக உயர்ந்தது. 2010-11 நிதியாண்டில் ரூ.56.84 கோடி நட்டமாக இருந்த நிகரநட்டம் 2021-22 நிதியாண்டில் ரூ.50.46 கோடி இலாபம் என்ற அளவில் முன்னேற்றம் கண்டது. இந்த மேம்பட்ட நிதி ஆதாரங்கள் வாயிலாக நிறுவனமானது தனது பொதுக்கடன் முழுவதுமாக முன்னதாகவே திருப்பிச் செலுத்தியது.

இந்த CDR, நிறுவன சட்ட வாரியத்தின் ஒப்புதல் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒப்பிசைவினை பெற்றது. இருந்தபோதிலும், PE பங்குதாரர் M/s. AIDQUA இதனை உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து தற்போது நிலுவையில் உள்ளது.

கடன் மறுசீரமைப்பு நிலையில், 15% நிலுவை சமபங்குகளாக ஒதுக்கப்பட்ட பின் பொதுக்கடன் ரூ.489.04 கோடி நிலுவையில் இருந்தது. நிறுவனம் இதுவரை ரூ.389.74 கோடி அசலை திருப்பிச் செலுத்தி, அதனுடன் சேர்த்து ரூ.1,028.87 கோடி வட்டியும் செலுத்தியுள்ளது. இன்றைய தேதியில் IL&FS தவிர்த்து, மொத்த கடனீட்டாளர்களின் நிலுவை ரூ.47.12 கோடியாக உள்ளது. அதாவது IL&FS USAID கடன் விடுவிப்பை ரூ.41.23 கோடி குறைவாக விடுவித்ததால் நிறுவனம் ILFS உடன் தாவாவில் உள்ளது.

குறிப்பிட்ட கால அளவுக்கு முன்னதாகவே இந்நிறுவனம் கடனை திருப்பிச் செலுத்தும் திறன் கொண்டுள்ளதால், இந்நிறுவனத்தின் நிர்வாகிகள், நீர் வழங்கும் சேவையை 185 MLD-யிலிருந்து 250 MLD-க்கு மேலும் விரிவாக்கம் செய்வதற்கும், இந்நிறுவனத்தின் மின்சார செலவைக் குறைக்க சூரிய மின்சக்தி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் (மொத்த செலவில் மின்சார செலவு 55%) தேவை மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளது. நிருவாகம் சிறந்த அனுபவத்தைப் பெற்றுள்ளதாலும், கலப்பு மானிய திட்டத்தைச் (Cross Subsidisation model) செம்மையாக செயல்படுத்தி உள்ளதாலும், எதிர்வரும் காலங்களில் இத்திட்டத்தை உள்ளாட்சி அமைப்பு மற்றும் தொழிற்சாலை நீர் வழங்கல் சேவைகளில் விரிவாக்க உள்ளது.

2023 மார்ச் 30]

11. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு மற்றும் உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிடெட் (Infrastructure Leasing and Financial Services Ltd) ஆகியவை இணைந்து தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) என்ற ஒரு முதலீட்டு நிறுவனத்தை ஒரு சிறப்பு குறிக்கோள் நிறுவனமாக (Special Purpose Vehicle) நிறுவன சட்டம், 1956-ன்கீழ் 2000 ஆம் ஆண்டில் உருவாக்கின. இந்நிறுவனம் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினை (NTADCL) தோற்றுவித்து, தண்ணீர் துறையில், முதல் பொது மற்றும் தனியார் கூட்டுப் பங்களிப்புடன் (PPP) புதிய திருப்பூர் தண்ணீர் திட்டத்தை நாள் ஒன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் (MLD) திறனில் ரூ.1023 கோடியில் செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தண்ணீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள், மறுசுழற்சி, கடல்நீரைக் குடிநீராக்குதல், நதி மறுசீரமைப்பு, தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை ஆகிய பல்வேறு அம்சங்கள் பற்றிய செயல் திட்டங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் பணிகளில் நிபுணத்துவம் பெற்று முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், கருத்தாக்கம் முதல் நடைமுறைப்படுத்துதல் வரை நிலையான வளர்ச்சி மற்றும் கட்டமைப்புக்கான ஆயுள் சுழற்சி செலவுகளை குறைப்பதற்கான மாதிரியைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், பின்வரும் துறைகளில் ஆலோசனை, திட்ட மேலாண்மை ஆலோசனை, இயக்குதல் மற்றும் பராமரிப்பு சேவைப் பணிகள் ஆகியவற்றை வழங்குகிறது.

1. தண்ணீர் மறுபயன்பாட்டிற்கான குறிக்கோளுடன் நகர்ப்புர குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைப்புகள்

2. கடல்நீரைக் குடிநீராக்குதல்

3. தொழிற்கூட கழிவுநீர் மேலாண்மை மற்றும் மறு சுழற்சி - பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) உள்பட

4. ஏரி மற்றும் ஆறுகளின் மாசுபாட்டைக் குறைத்தல்

5. திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி மேலாண்மை, திட்ட மேலாண்மை மற்றும் தண்ணீர் மற்றும் கழிவுநீர் பிரிவுகளில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் அவர்களை இந்நிறுவனத்தின் அலுவல் வழி தலைவர் பொறுப்பில் அமர்த்தியுள்ளது. நிதி, சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றம் மற்றும் தொழில் துறைகளை சார்ந்த மூத்த அரசு அதிகாரிகள் இந்நிறுவனத்தின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இயக்குநர் குழுவில் தற்போது உள்ள 10 இயக்குநர்களில் 4 இயக்குநர்கள், தமிழ்நாடு அரசாங்கத்தையும், 3 இயக்குநர்கள், உள்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிடெட் (IL&FS) நிறுவனத்தையும், 3 இயக்குநர்கள், சுயேச்சை இயக்குநர்களாகவும் உள்ளனர். இந்நிறுவனத்தின் அன்றாட அலுவல்களை தலைமைச் செயல் அலுவலர் கவனித்து வருகிறார்.

11.1 செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில திட்டங்கள்

11.1.1 நகர்ப்புர தண்ணீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட தண்ணீர்

1. அம்ருத் மற்றும் சீர்மிகு நகரம் (Smart city) ஆகிய திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் அனைத்து பெரிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான தண்ணீர் வழங்கல் மற்றும் மாவட்ட அளவீட்டுப் பகுதி ஆகியவற்றுக்கான ஆலோசகர்.

2.. பாதாளச் சாக்கடை அமைப்புப் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புக்கான ஆலோசகர்: தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம் மாநகராட்சிகள், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகள்.

3. தமிழ்நாடு மாநிலத்தில் தண்ணீர் மறுபயன்பாட்டு தொகுப்புக்கான தேவையை ஆய்வு செய்து தயாரித்தல் மற்றும் தண்ணீர் மறு பயன்பாடு கொள்கை உருவாக்குவதற்கான ஆலோசகர்.

4. அம்ருத்/சீர்மிகு நகரம் ஆகிய திட்டங்களின்கீழ் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான

திட்ட மேலாண்மை முகமை (PMA): தஞ்சாவூர், கும்பகோணம், தூத்துக்குடி.

5. *பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த தியாகராய நகரில் செயல்படுத்தப்படும் சீர்மிகு நகரத் திட்டத்திற்கு ஆலோசகர்*

6. *எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு (TTRO) நிலையங்கள்மூலம் பயன்படுத்தப்பட்ட நீரை மறுபயன்பாடு செய்யும் திட்டத்திற்கு திட்ட மேலாண்மை முகமைப் பணி: 45 MLD திறன் கொண்ட சென்னை கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.*

7. *சென்னை கொடுங்கையூரில், 45 MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனைப் பணி.*

8. *சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மாநகராட்சியில் 28 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்துதல் பற்றிய திட்ட மேலாண்மை ஆலோசனைப் பணி.*

11.1.2 பூஜ்ய திரவ வெளியேற்றம் (ZLD) வகையில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்:

1. *திருப்பூரில் 3 MLD முதல் 11 MLD வரை திறன் கொண்ட பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையில் 9 ஜவுளி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.540 கோடி மதிப்பில் மேம்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப் பணிகள்*

2. *தமிழ்நாடு அரசின் வட்டி இல்லா கடன் வாயிலாக, எட்டு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ய திரவ வெளியேற்ற அமைப்பை மேம்படுத்துவதற்காக, திட்ட மேலாண்மை முகமை சேவைப் பணிகள் இந்நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர், மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.*

3. ஆம்பூரில் இரண்டு மற்றும் வாணியம்பாடி, பல்லாவரம் மற்றும் மேல்விசாரம் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ரூ.143 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த 11.55 MLD திறன்கொண்ட தோல் பதனிடல் சார்ந்த ஐந்து பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை சேவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தற்போது திருப்பூரில் 4 ஜவுளித் தொழில் சார்ந்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான தன்னிச்சையான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டாளராக செயல்பட்டு வருகிறது.

5. கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் தொழிற்சாலையில் 11எம்.எல்.டி பயன்படுத்தப்பட்ட நீரிலிருந்து நன்னீரை பிரித்தெடுக்கும் மீட்பு முறையை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும் ஆலோசனைப் பணிகள் நிறைவேற்றப்பட்டது. இவற்றில் நாளொன்றுக்கு 1,20,000 லிட்டர் திறன்கொண்ட திரவ வெளியேற்றமில்லா முறையை தொழில்நுட்ப வணிகமயமாக்குவதற்கான சாத்தியக்கூறு மற்றும் முன்னோட்ட செய்முறையும் அடங்கும்.

6. பாணிப்பட்டில் 42 எம்.எல்.டி திறன் கொண்டதிரவ வெளியேற்றமில்லா பொது தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கும் ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டது.

7. வங்காள தேசத்தில் கொனபாரி ஜவுளி தொகுப்பில் ஒருங்கிணைந்த தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கான ஆலோசனை பணிகள் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

11.1.3 கடல்நீரைக் குடிநீராக்குதல்

0.5 எம்.எல்.டி முதல் 110 எம்.எல்.டி வரை திறன் கொண்ட 16 கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களுக்காக ஆலோசனை சேவைகளை தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவுபடுத்தியுள்ளது.(குஜராத்-8, தமிழ்நாடு-7 மற்றும் ஒடிசா-1).

2023 மார்ச் 30]

11.1.4 நீராதாரங்களை மீட்டெடுத்தல் மற்றும் புனரமைத்தல்

1. சென்னைப் பெருநகர மாநகராட்சியில் உள்ள 60 நீராதாரங்களுக்காக விரிவான திட்ட அறிக்கை.
2. உதகமண்டலம் ஏரிக்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் ஆதார சோதனை செய்தல்.
3. பல்லாவரம் நகராட்சி சார்ந்த ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் கீழ்கட்டளை ஏரிக்காக திட்ட மேலாண்மை ஆலோசனை.
4. விசாகப்பட்டினம் பெருநகர மாநகராட்சியில் முடசர்லோவா ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை முகமை.

11.2 நடைபெற்று வரும் திட்டங்கள்

1. இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகம், ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (IPDS) பின்வரும் திட்டங்களுக்காக 50% மானிய தொகைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

i) குமாரபாளையம் கிரீன் காவேரி டையிங் கிளஸ்ட்டருக்காக, பூஜ்ய திரவ வெளியேற்ற அடிப்படையுடன்கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன்கூடிய ஜவுளித் தொழில் செயற்பாங்கு பூங்கா மற்றும் நாமக்கல் மாவட்டத்தில், க்ரீன் என்விரான்மென்ட்டல் அசோசியேஷனுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை.

ii) ராஜஸ்தான் மாநிலம், பாலியில் உள்ள நெக்ஸ்ட் ஜென் டெக்ஸ்டைல் பூங்காவிற்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.

iii) தெலுங்கானா மாநிலம், வாரங்கல்லில் உள்ள ககாதியா மெகா டெக்ஸ்டைல் பூங்காவிற்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை.

iv) காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளுக்கு புத்துயிரூட்டுதல் திட்டத்தின்கீழ், பூஜ்ய திரவ

வெளியேற்ற வகையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்துள்ளது. (கருத்துரு நிலையில் உள்ளது). மேற்காணும் திட்டத்தின்கீழ், கட்டம்-I-ல் ரூ.487 கோடி மதிப்பில், ஸ்ரீ பவானி டையிங் கிளஸ்ட்டர், காடையாம்பட்டி டையிங் கிளஸ்ட்டர் மற்றும் குமாரபாளையம் க்ரீன் காவேரி கிளஸ்ட்டர் திட்டங்கள், ஒன்றிய அரசின் ஜவுளித் துறை அமைச்சகத்தின் IPDS திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டங்களுக்காக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் திட்ட மேலாண்மை முகமைப் பணிகளை விரிவுபடுத்தியுள்ளது.

11.3 நடைபெற்று வரும் பெரிய அளவிலான திட்டங்கள்

1. இந்திய அரசின் தேசிய தூய்மை கங்கை (NMCG) திட்ட நிதியுதவியின்கீழ், கான்பூர் ஜாஜ்மா (Jajmau) தோல் பதனிடுதல் கிளஸ்ட்டருக்காக, 20 MLD திறன் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திட்ட மேலாண்மை முகமை.

2. தமிழ்நாட்டில் 9 நகராட்சிகள் மற்றும் 18 பேரூராட்சிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆற்றுப் படுகைகளில், மாசுபாடுகளைக் குறைக்கும் பணிகளுக்காக, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் பணி (விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளது).

3. கடல்நீரைக் குடிநீராக்குதலுக்கான திட்டங்கள்

 i) நெம்மேலியில், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்காக, 150 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.

 ii) குஜராத்தில் டஹேஜ் GIDC - ல் 100 MLD திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்.

 iii) விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60 MLD திறனுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்

2023 மார்ச் 30]

iv) *தூத்துக்குடி மாவட்டம், முல்லக்காட்டில், சிப்காட் உத்தேசித்துள்ள 60* MLD *திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்*

v) *இராமநாதபுரம் மாவட்டம், குதிரைமொழியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ள 60* MLD *திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்*

vi) *கடலூரில் சிப்காட் உத்தேசித்துள்ள 20* MLD *திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர்*

vii) *ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தில் 10* MLD *திறன் கொண்ட நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் (ஒப்பந்தப்புள்ளி நிலை).*

*4. எடப்பாடி நகராட்சியில் மாவட்ட அளவீட்டு பகுதி (*DMA*) அடிப்படையில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.*

5. ஆவடி மாநகராட்சியில், விடுபட்டுப்போன பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

6. அம்ரூத் திட்டத்தின்கீழ், கும்பகோணம் நகராட்சியிலும், சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியிலும் முறையே குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்துதல் பற்றிய திட்ட மேலாண்மை ஆலோசனைப் பணி.

7. ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தற்போதுள்ள நீர் விநியோக முறையை மேம்படுத்துவதற்கும் மற்றும் சேர்க்கப்படாத பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

8. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் நான்காம் கட்டமாக, பாதாளச் சாக்கடை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

9. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 100 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி.

10. கோயம்புத்தூர் டைடல் பூங்காவில், 400 KLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிபந்தனை மதிப்பீடு தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணி

11. முன்மொழியப்பட்டுள்ள SIPCOT தொழில் பூங்காவிற்கு, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை மீண்டும் பயன்படுத்துவதற்கும் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பெறுவதற்கான ஆதாரங்கள் அல்லது பொருத்தமான அமைப்புகளை அடையாளம் காணுவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை.

12. ஓசூரில் உள்ள M/s. டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் உற்பத்தித் திட்ட தளத்திற்கு நீர் பகிர்மான அமைப்புடன் 3MLD திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) ஆலை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை, ஏல ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் ஏல செயல்முறை மேலாண்மை தயாரிப்பதற்கான பணி

13. இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பிதுஜாவில் பொது காஸ்டிக் மீட்பு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர்.

14. தெலுங்கானா சனகாரெட்டி மாவட்டம், இந்திரக்கரன் ஜவுளிப் பூங்காவில் பொது தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனைப் பணி.

15. ஒடிசா தொழில் துறை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்காக (IDCO) தொழிற்சாலைக் கிளஸ்டர்கள்/ பூங்காக்களில் பூஜ்ய திரவ வெளியேற்றம் கொண்ட பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள், சுற்றுச்சூழல் திட்டமிடல் (திட/திரவ கழிவு மேலாண்மை உட்பட) போன்ற கூறுகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

2023 மார்ச் 30]

16. *இந்தோ-ஜெர்மானிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் (*IGSTC*) மானியம் மூலமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:*

i) *"இந்தியா மற்றும் ஜெர்மனியில் வருங்காலத்தில் உருவாக்கப்படும் மாநகரங்களுக்காக திறன்மிகு, நம்பகமான குடிநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் கட்டமைப்பு வசதிகள்".*

ii) *"சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீரிலிருந்து மின்சார செயல்திறன்மூலம் உப்பு மற்றும் நுண்துகள்களை நீக்குவதற்கான தண்ணீர் சுத்திகரிப்பு நடைமுறைகளை மிகச் சிறந்த முறையில் கண்காணித்தல்".*

11.4 விருதுகள்

1. *குளோபல் வாட்டர் இன்ட்டலிஜன்ஸ் (*GWI*) விருது 2014 ஆம் ஆண்டின் தொழிற்கூட தண்ணீர் சார்ந்த திட்டத்திற்காக வழங்கப்பட்டது.*

2. *அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தண்ணீர் மறுபயன்பாட்டு சங்கத்தால், 2014 ஆம் ஆண்டுக்கான தண்ணீர் மறு பயன்பாடு தொழிற்கூட திட்டத்திற்காக விருது வழங்கப்பட்டது.*

3. *ஏதென்ஸ் நகரில், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு, 2015 ஆம் ஆண்டுக்கான* The *2030* WRG Corporate Water Stewardship *விருது,* GWI, UK *ஆல் வழங்கப்பட்டது.*

11.5 தமிழ்நாடு அரசுக்காக மேற்கொள்ளப்படும் பணிகள்

1. *தமிழ்நாடு அரசு, பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் மறுபயன்பாடு மூலமாக தொழிற்கூட தண்ணீர் வழங்கல் மற்றும் கடல்நீரை நன்னீராக்குதல் ஆகியவை தொடர்பான எதிர்கால செயல்திட்டங்களை வளர்த்தெடுத்தல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான திட்ட மேலாண்மை முகமையாக, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை நியமனம் செய்துள்ளது.*

2. *திருப்பூரில் ஜவுளித் தொழில் சார்ந்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மேலாண்மை முகமையாக தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைவினை,*

துணிநூல் மற்றும் கதர் துறை, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை நியமனம் செய்துள்ளது.

3. நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர மாசுநீக்கிகள் (Bleaching) மற்றும் சாயப்பட்டறைகளுக்காக கண்டறிவதற்கான ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், நிதி ஆதாரங்களைக் கண்டறிதல் மற்றும் ஆலோசகர் ஆகிய அம்சங்களுக்கான திட்ட மேலாண்மை முகமை/ இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டாளராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை, தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை நியமனம் செய்துள்ளது.

4. அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் சமநிலை திட்டத்தை தயாரிப்பதற்கான இணைப்பு முகமை.

5. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளைக்காக (CRRT) கூவம், அடையாறு நதிகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய்களை மறுசீரமைக்கும் பணிகளுக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணியினை இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் வழங்கி உள்ளது.

11.6 இந்திய அரசுக்காக மேற்கொள்ளப்படும் பணிகள்

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், இந்திய அரசின் பல்வேறு வளர்ச்சி மற்றும் திட்டங்களுக்காக, இணைந்து செயலாற்றி வருகிறது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் பூஜ்ய திரவ வெளியேற்ற (ZLD) தொழில்நுட்பத்தை ஜவுளித் துறை அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மதிப்பீடு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது.

2. இந்தியாவில் ஜவுளித் துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சி திட்டத்திற்கு ஜவுளி அடிப்படையிலான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையங்கள் அமைப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் விளங்குகிறது.

3. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் தேசிய தூய்மை கங்கை திட்டத்திற்காக (NMCG) பல்வேறு தொழிற்சாலைகளுக்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை உத்தரப்பிரதேச மாநிலத்தில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக திட்ட மேலாண்மை ஆலோசகராக விளங்கி வருகிறது. மேலும், இந்நிறுவனம் கான்பூரில் உள்ள ஜாஜ்மா தோல் பதனிடல் தொழிற்சாலைக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்டப் பொறியாளராகவும் செயல்படுகிறது.

4. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், துறை முகங்களில் எதிர்மறை சவ்வூடுபரவல் வாயிலாக கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கு ஆலோசனைகளை அளிப்பதற்காக, தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (NIOT) கூட்டு நிறுவனமாக விளங்குகிறது.

5. இந்தோ-ஜெர்மன் வளர்ச்சி கூட்டுறவின்கீழ் Adellphi Consult GmbH, ஜெர்மனி உடன் இணைந்து மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்காக இந்தியாவில் கழிவுநீரை மறுஉபயோகப்படுத்துதல், மறுசுழற்சி செய்தல், திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கான ஆயத்தப் பணிகளை மேம்படுத்துவதற்கான பணிகளை வழங்கும் ஆலோசகர்.

11.7 நிறுவனத்தின் நிதிநிலை

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் வருவாய் 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.31.26 கோடியாக இருந்த நிலையில், 2021-22 ஆம் ஆண்டில் ரூ.27.60 கோடியாக உள்ளது. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு வழங்கிய கடனுக்காக 2022-23 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி வட்டியாக செலுத்தி உள்ளது.

11.8 சமூகப் பொறுப்புணர்வு பணிகள்

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், 2022-2023 ஆம் நிதி ஆண்டில், தங்களுடைய சமூகப் பொறுப்புணர்வு செயல்களின் (CSR) பகுதியாக, ரூ.8.75 இலட்சங்களை தூய்மைப் பணிகள் மேம்பாட்டிற்காக சென்னை பெருநகர மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.

12. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை 2030-க்குள் அடைவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கிறது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை நேரடியாக அடைவதற்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு, அவையாவும் செயலாக்கத்தில் உள்ளன. இத்துறையால் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளின் விவரங்கள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(அ) நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (இலக்கு 3)

பொது சுகாதாரத்திற்காக 15-வது நிதிக் குழுவில் ஒதுக்கப்பட்ட மானியத்தைப் பயன்படுத்தி நகர்ப்புர பொது சுகாதார மையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள், உள்ளாட்சி அமைப்புகளால் அமைக்கப்பட்டு வருகின்றன. இம்மையங்கள் அடிப்படை ஆரம்ப சுகாதார வசதிகளை அருகாமையிலேயே வழங்குகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற பெரிய மாநகராட்சிகள் ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளான மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய சேவைகள் குழந்தை நல விவரக் குறிப்புகள், அடிப்படை நோயறிதல் மற்றும் பல்வேறு நோய்களுக்கான மருத்துவம் ஆகியவற்றை ஒரே குடையில் வழங்குகின்றன.

அம்ரூத் மற்றும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் நகர்ப்புர பசுமை இடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவை மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வசதிகள் ஒட்டுமொத்த குடிமக்களின் நல்வாழ்வு வசதிகளைக் கூடுதலாக்கும்.

2023 மார்ச் 30]

(ஆ) தரமான கல்வி (இலக்கு 4)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகள், உடற்கல்வி கட்டமைப்பு, மின்னனு வசதியுடன்கூடிய கட்டமைப்பு மற்றும் விளையாட்டு மற்றும் கூடுதல் பாடத் திட்ட நடவடிக்கைகள் ஆசிரியர் திறன் வளர்ச்சி மற்றும் சீர்மிகு கற்பித்தல் முறையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை மேம்படுத்தப்பட்டு, மாற்றப்பட்டு வருகின்றன. பள்ளிகளின் செயல்பாட்டினைச் செம்மைபடுத்த, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாயம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கிடையே இருக்கும் கூட்டமைப்பினை உருவாக்குவதன்மூலம் பள்ளியின் செயல்பாடுகள் மேம்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றும் ரூ.60 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள பள்ளிக் கட்டடங்களைப் பராமரிக்கவும், 6-வது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த முன்னெடுப்புகள், தரமான கல்வி வழங்குவதற்கு மிகவும் தேவையான உற்சாகத்தை அளிக்கும்.

(இ) பாலின சமத்துவம் (இலக்கு 5)

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்காக நவீன கழிப்பிடங்களை அணுகுதல், பாதுகாப்பான பள்ளிகள் (CCTC கருவி மற்றும் நவீன கழிப்பிடங்கள்) போன்ற எண்ணற்ற திட்டங்களை "நிர்பயா" திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் மகளிருக்கான பாதுகாப்பு மற்றும் பொது இடங்களை அவர்கள் அணுகுதல் குறித்தான பிரச்சினைகள் குறித்து ஆராய ஒரு பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பாலினம் மற்றும் சென்னை ஆய்வகம், பொது இடங்களில் உள்ள பாதுகாப்பு தொடர்பான விஷயங்களைப் புரிந்து கொள்வதற்காக, நகர் முழுவதும் ஓர் உணர்வு சார்ந்த ஆராய்வினை மேற்கொண்டு வருகிறது. பெண்களின் பாதுகாப்பு மற்றும் பொது இடங்களுக்கு அணுகுதல் தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி பாதுகாப்பு தணிக்கைமூலம் நகரத்தில் இருக்கும் "இருளான இடங்களை" கண்டறிந்து, அவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் கூடுதல் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதேபோன்று மற்ற மாநகராட்சிகளும் பரபரப்பான இடங்கள் மற்றும் சந்தைகளை கண்காணிப்பதற்கான தொழில்நுட்பங்களை, சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த கட்டளை (மற்றும்) கட்டுப்பாடு மையங்கள்மூலம் பயன்படுத்துகிறது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கும் குடிமை உட்கட்டமைப்பு அதாவது, பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றின் வடிவமைப்பு பாலினம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு ஏற்ற வகையில் இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படுகிறது.

(ஈ) சுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதாரம் (இலக்கு 6)

தூய்மை இந்தியா திட்டம், அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் மற்றும் ஜல் ஜீவன் திட்டம் ஆகியவற்றின் நோக்கம் இந்த நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குடன் ஒத்துப்போவது ஆகும்.

அம்ரூத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள் பெரும்பாலான மாநகரங்களிலும், அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் சிறிய நகரங்களிலும் செயலாக்கத்தில் உள்ளன. ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு செயல்படத்தக்க வகையிலான வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள்மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்காக தனி கிராமம் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அம்ரூத் 2.0 கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், சிங்கார சென்னை 2.0 மற்றும் நமக்கு நாமே திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் நீர்நிலைகளைப் புனரமைப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. இது, நகர்ப்புர நீர்நிலைகளை மீட்பதற்கும் மற்றும் நிலத்தடி நீரை செறிவூட்டுவதற்கும் உதவுகிறது.

மழைநீர் சேகரிப்புத் திட்டம் கட்டாயமாக்கப்பட்டு, ஒவ்வொரு பருவக் காலத்திற்கு முன்பும், பிரச்சார முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது, நிலத்தடி நீரில் நேர்மறையான தாக்கத்தைக் கொண்டுள்ளது.

பயன்படுத்தப்பட்ட நீரை மறுபயன்பாடு செய்தல் மற்றும் வருவாய் அல்லாத நீர் பயன்பாட்டினைக் குறைத்தல் ஆகியவை அம்ருத் திட்ட சீர்திருத்தங்கள்மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

2023 மார்ச் 30]

பெரிய நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்களும், சிறிய நகரங்களில் கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டங்களும் AMRUT *2.0,* SBM *2.0 மற்றும்* EAP *நிதிமூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பிற்கும், நகர சுகாதார செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, சமூக மற்றும் பொது கழிப்பிடங்கள், கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற சுகாதார கட்டமைப்புகளில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன்கீழ் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.*

(உ) சிக்கனமான மற்றும் தூய ஆற்றல் திறன் (இலக்கு 7)

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து தெரு விளக்குகளும் ஆற்றல் திறன் கொண்ட ஒலி உமிழும் டையோடு விளக்குகள் ஆகும். இதேபோன்று, மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் ஏற்கெனவே இருக்கும் தெரு விளக்குகளை, ஆற்றல் திறன்கொண்ட ஒளி உமிழும் டையோடு விளக்குகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குடிமக்களின் நல்வாழ்வினை மேம்படுத்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மோட்டார் பொருத்தப்படாத போக்குவரத்தை, அதாவது நடைபயிற்சி, மிதிவண்டி ஓட்டுதல் மற்றும் மின்கலன்மூலம் இயங்கும் இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை வளரச் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தனது ஆற்றல் தேவையின் ஒரு பகுதியை மீட்பதற்கு சூரிய மின்சக்தி நிலையங்களை நிறுவுவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றன.

(ஊ) நீடித்த நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (இலக்கு 11)

திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை இந்தியா திட்டம்மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. நகர திடக்கழிவு செயல் திட்டம்மூலம், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் தங்களது திறன், தேவை மற்றும் திடக்கழிவு மேலாண்மை உள்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்துள்ளது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நகர திடக்கழிவு செயல் திட்டத்தின் அடிப்படையில், திடக்கழிவு மற்றும் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை விஞ்ஞான முறையிலும், சுற்றுச்சூழலை பாதிக்காத வகையிலும் பதப்படுத்தி அகற்றுவதற்குத் திட்டங்கள் எடுத்துக்கொண்டு வருகிறது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், மண் சாலைகளை அனைத்து பருவ நிலைகளையும் தாங்கக்கூடிய சாலைகளாக மாற்றுவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகள் நகர்ப்புர சமுதாயங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் அதன்மேல் நேர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

(எ) கூட்டாண்மைக்கான இலக்குகள் (இலக்கு 17)

தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து, சென்னை நகர கூட்டாண்மை இயக்கம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் உள்ள பல்வேறு குறியீடுகளை அடைவதற்கு உத்தேசித்துள்ளது. இதேபோன்று, தமிழ்நாடு அரசு, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), ஆசிய வளர்ச்சி வங்கி, இந்திய அரசாங்கம் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு நீடித்த நிலையான வளர்ச்சிக்கான பல்வேறு இலக்குகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

13. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்மூலம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியுடன்கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதியுதவி–தமிழ்நாடு–நிலை–II-பகுதி-2 (SMIF-TN-II-2) திட்டத்தின்கீழ், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்கான திட்ட அறிக்கை, 52 பாடப் பிரிவுகள் மற்றும் 8 கருத்தரங்குகள் கொண்ட 11 பகுதிகள், பின்வரும் திட்டங்களை உள்ளடக்கி தயார் செய்யப்பட்டுள்ளது:

- நகர்ப்புர ஆளுகை மற்றும் மேலாண்மை
- நகர்ப்புர குடிநீர் மேலாண்மை
- நகர்ப்புர சுகாதார மேலாண்மை
- நகர்ப்புர இயக்கம் மற்றும் பாதுகாப்பான நகர்ப்புர சாலைகள்
- நகர்ப்புர திட்டமிடல் - நீல பசுமை உட்கட்டமைப்பு

2023 மார்ச் 30]

- *நிதி*
- *திட்ட மேலாண்மை*
- *கொள்முதல்*
- *சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை*
- *பொது நிருவாகம்*
- *நகர்ப்புர தரவு மேலாண்மை, தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு*

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி குழுக்கள் என சுமார் 5,200 பேருக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி ஏப்ரல் 2023 முதல் டிசம்பர் 2024 வரை செயல்படுத்தப்படும்.

இதற்குக் கூடுதலாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் தொழிற்நுட்பம், கணக்குகள் மற்றும் பொது பிரிவுகளைச் சார்ந்த பணியாளர்களுக்குத் தேவையின் அடிப்படையில் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள் ஏற்படுத்தப்படும். இந்தப் பயிற்சித் திட்டங்களுக்கு அம்ரூத் 2.0 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நிதி அளிக்கப்படும்.

குடிநீர் விநியோக கட்டுமானம், இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு ஆகியவை குறித்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகரக் கழிவுநீரகற்றல் வாரியம்மூலம் நடத்தப்படும் பயிற்சி மையங்கள் பயன்படுத்தப்படும்.

[2023 மார்ச் 30

கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டு மானியமாக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம், நகர்ப்புர ஆளுகை மற்றும் நகராட்சி பொருண்மை குறித்து பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி தருவதற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்படும்.

14. தொடர் செயல் திட்டம்

தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது போல், தரமான வாழ்வு, சுத்தம், பசுமை மற்றும் நீடித்த ஆரோக்கியமான சுற்றுச்சூழல், தரமான அடிப்படை வசதிகள் மற்றும் துடிப்பான திறந்தவெளிகள் போன்ற வசதிகளை மாநிலத்திலுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளின் குடிமக்களுக்கு ஒரு பொறுப்பான நகர ஆளுகையின்மூலம், ஒருங்கிணைந்த, நியாயமான மற்றும் நகர்ப்புர வளர்ச்சியில் வெளிப்படைத் தன்மையுடன்கூடிய பங்கேற்பு அணுகுமுறையைப் பின்பற்றி, சிறந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதற்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை விழையும்.

கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் பின்னூட்டம் ஆகியவை பல திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதிலும், சேவைகளை மேம்படுத்தவும் உதவி புரிகிறது.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தொலைநோக்குத் திட்டம் மற்றும் சேவைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமை இத்துறைக்கு ஊக்கம் அளிக்கிறது.

.

இணைப்பு-II

(115 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தான் 'திராவிட மாடல்' வளர்ச்சி. அந்த நோக்கத்துடன் தமிழ்நாடு வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை, வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒரு சேர வளர வேண்டும். அதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!"

- மு.க.ஸ்டாலின்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பொருளாதாரக் குறியீட்டை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரு மாநிலம் வளர்ந்த மாநிலம் என கருதப்படுவதில்லை. மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியைத் தமிழ்நாடு அரசு முன்னெடுக்கிறது. வலிமையான அடித்தளமும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் தமிழ்நாட்டை பல ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் நிலை நிறுத்துகிறது.

தமிழ்நாடு, புதுமையான ஊரக வளர்ச்சித் திட்டங்களை வகுத்து அனைத்து தரப்பினரும் முன்னேற வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் அத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதில் நாட்டின் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்துறையின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவை சமூக நீதி, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய சீர்மைகளுடன் வலிமையாக இணைந்துள்ளது.

மாநில அரசு தனது திறமை வாய்ந்த ஊரக வளர்ச்சித் துறை பணியாளர் தொகுதியின்மூலம் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுடன் நெருங்கி பணியாற்றி ஊரக வளர்ச்சித் துறையின் ஒன்றிய, மாநில அரசு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி பெறும் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்கிறது.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் ஊரக மக்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதைக் கடமையாக கொண்டுள்ளன. மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - II ஆகிய திட்டங்கள் இன்றியமையாதவையாகவும் ஏழை, விளிம்புநிலை மற்றும் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரம், ஊரக உட்கட்டமைப்பு, இயற்கை வள மேலாண்மை ஆகியவற்றுடன் நேரடித் தொடர்புடையனவாக உள்ளன.

அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், ஊரக இணைப்புச் சாலை வசதிகள் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் ஆகிய ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்திற்கான நிதிப்பகிர்வு 62:38 என்ற விகிதத்தில் உள்ளது. இதில் 62% மாநில அரசால் வழங்கப்படுகிறது. இது வீடு இல்லாதவர்களுக்கு தரமான வீடுகளை வழங்குவதில் மாநில அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை காண்பிக்கிறது.

ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இணையாகவும் கூடுதல் பயனளிக்கும் திட்டங்களாகவும் மாநில அரசின் சில முன்னோடித் திட்டங்கள் உள்ளன. சமூக நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்யும் திட்டமாக பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டமும், கல்வி உட்கட்டமைப்பினை உறுதி செய்யும் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமும், கிராம சாலை இணைப்புகளை மேம்படுத்த இதர சாலை மேம்பாட்டுத் திட்டங்களுடன் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023 மார்ச் 30]

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படும் இவ்வரசு, மகாத்மா காந்தி அவர்களின் கனவினைப் பூர்த்தி செய்திடும் வகையில் தன்னிறைவு பெற்ற சுயசார்பு கிராமங்களை உருவாக்கிட முனைப்புடன் செயல்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஒரு முதன்மையான துறையாக வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், கிராமத் தொழில்கள் மற்றும் நீர்வள மேலாண்மை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து நீடித்த வளர்ச்சிக்கான சமுதாய உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சொத்துகளை ஊரகப் பகுதிகளில் உருவாக்குகிறது. இந்த அரசின் முதன்மையான குறிக்கோள் ஊரகப் பகுதிகளில் வளர்ச்சியை முடுக்கிவிட்டு நகர மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, உட்கட்டமைப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்குவதாகும்.

தமிழ்நாட்டின் பரப்பளவில் 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட பரப்பினை ஊரகப் பகுதிகள் கொண்டுள்ளன. பரந்து விரிந்த இப்பகுதிகள் கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,18,978 எண்ணிக்கையிலான பிரதிநிதிகளைக் கொண்டு நிர்வகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டதன் மூலமும் உரிய காலங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டதனாலும் மக்களாட்சி முறையில் அதிகாரப்பரவலாக்கல் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உறுதி செய்யப்பட்டது. எனவே, திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் மக்களின் பங்கேற்பினை உறுதி செய்ய ஆண்டுக்கு ஆறு முறை கிராம சபைகள் கூட்டப்படவேண்டும் என்ற நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகள் மறுவகைப்படுத்தப்பட்டு, உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக்கான

[2023 மார்ச் 30

9 கருப்பொருட்களின் குறியீடுகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குள் உட்புகுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். அவையாவன;

- வறுமையில்லாத மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி
- நலவாழ்வு கிராம ஊராட்சி
- குழந்தைகள் நேய கிராம ஊராட்சி
- நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
- தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி
- உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி
- சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி
- நல் ஆளுமையுள்ள கிராம ஊராட்சி
- மகளிர் நேய கிராம ஊராட்சி

உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக்கான 9 கருப்பொருட்களின் குறியீடுகளை அடைவதன்மூலம் மட்டுமே நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை எய்த முடியும். அனைத்துத் துறை செயல்பாடுகளையும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதால் மட்டுமே இது சாத்தியமாகும்.

“அரசு நிர்வாகம் என்பது யாரால் உரத்த குரல் கொடுக்க முடியாதோ அவர்களின் தேவையை உணர்ந்து அவற்றை நிறைவேற்றித் தருவதே ஆகும்“ என்ற உயரிய கொள்கையினை அடையும் நோக்கில் துறையின் தினசரி நடவடிக்கைகள் அமையும்.

2023 மார்ச் 30]

2. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

2.1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தொல்லியல் சான்றுகள், பொருநை நதி மற்றும் வைகை நதி நாகரீகங்கள்மூலம் சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழகத்தில் உள்ளூர் திட்டமிடல் முறை இருந்ததனை அறிய முடிகிறது. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் திட்டமிடப்பட்ட நகர நாகரீகம் இருந்ததற்கான சான்றுகளாக சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள், சுடுமண் குழாய்மூலம் உருவாக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய்கள், உறை கிணறுகள், வடிகட்டிமூலம் நீரினைத் தூய்மைப்படுத்தி உபயோகப்படுத்திடும் வழக்கம் ஆகியன அகழாய்வுமூலம் தெரிய வந்துள்ளன.

அகநானூற்றில், "குடவோலை முறை" போன்ற நடைமுறை கி.மு. 2 மற்றும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் முதல் இருந்துள்ளதை அறிய முடிகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டு காலத்தைய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் கல்வெட்டுகளில் தேர்தல்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள்மூலம் சோழ அரசு காலத்தில் தல சுயாட்சி நிர்வாகம் சிறந்து விளங்கியதை அறிய முடிகிறது. தமிழ்நாட்டில், அப்போதைய காலத்தில் இருந்த கிராம குடியரசுகள் சமுதாயக் குழுக்களுடன் இணைந்து அப்பகுதிகளின் முன்னேற்றத்திற்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டன.

பத்து மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த வழிமுறைகள் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டு இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில், தாமஸ் மன்றோ அறிமுகப்படுத்திய ரயத்வாரி வரி விதிப்பு முறை நேரடியாக விவசாயிகளிடம் வரி வசூல் செய்யும் முறைக்கு வழிவகுத்ததுடன், விவசாயிகளிடமே நிலத்திற்கான உரிமை இருப்பதையும் உறுதி செய்தது.

[2023 மார்ச் 30

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அப்போதைய ஆங்கிலேய இந்தியாவின் வைசிராய் ரிப்பன் பிரபு தலசுய ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகாரப் பரவலாக்கம் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம், 1950" ஆகும். மேலும், இந்திய அரசியலமைப்பில் "அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறை" களின்படி, அரசானது சுயாட்சி பெற்ற கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பல்வந்த்ராய் மேத்தா குழு (1957), அசோக் மேத்தா குழு (1977), G.V.K. ராவ் குழு (1985), L.M. சிங்வி குழு (1986) ஆகிய பல்வேறு குழுக்கள் ஊராட்சி நிர்வாகத்தை ஆராயும் பொருட்டு அரசால் அமைக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவைகளின் அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் நிறுவனப்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 73-வது திருத்த சட்டம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 1993 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 11-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்கிட மாநில அரசு வழிவகை செய்திட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243-G தெரிவிக்கின்றது. தமிழ்நாடு அரசு பல்வேறு அரசு ஆணைகள்மூலம் 11-வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர் விநியோகம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பொது விநியோகம் போன்ற 29 இனங்களில் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து ஆணையிட்டுள்ளது.

2.2 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான ஒரு சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அமைப்பாக 1994-ல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களில், அதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு,

2023 மார்ச் 30]

அம்மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் 2019-20 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, மீதமுள்ள 9 மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறைப் பணிகள் நிறைவடைந்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிருக்கான இடஒதுக்கீடு 50% என நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் அதற்கு அதிகமான பிரதிநிதித்துவத்தினை, அதாவது, 56% என்கிற அளவில் மகளிர் ஊராட்சி நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ளனர். பெண்கள் 7,012 (56%) பேர் கிராம ஊராட்சித் தலைவர்களாகவும், 242 (62%) பேர் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாகவும், 20 (55%) பேர் மாவட்ட ஊராட்சித் தலைவர்களாகவும் பொறுப்பில் உள்ளனர். மேலும் ஊராட்சி நிர்வாகத்தில், மொத்தமுள்ள பிரதிநிதிகளில் 67,756 பேர், அதாவது 56%, மகளிர் ஆவர். பெண் பிரதிநிதிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவ பண்புகள் பெற்றிடும் வகையில் உரிய பயிற்சிகளை வழங்க அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

2.3 மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

2.3.1 கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,395 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விவரம் ஆகஸ்ட் 2014-ல் வெளியிடப்பட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள்

[2023 மார்ச் 30

தொகையில் ஆதி திராவிடர்/பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் https://tnrd.tn.gov.in/ *என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.*

கிராம சபை

தமிழ்நாட்டின் வரலாற்றுப் பதிவுகளில் சோழர் காலத்தில் "ஊர் மற்றும் சபை" என்கிற அமைப்புகள் இருந்துள்ளன. இச்சபைகள் அவ்வூராட்சியின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகவும் மக்களாட்சி முறை வேரூன்றி முடிவுகள் எடுப்பதையும் உறுதி செய்தன.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243 ஆவது பிரிவு சேர்க்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டன. அவற்றில் பிரிவு 243 கிராம சபை குறித்து விவரிக்கிறது. கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராம சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110-ன்கீழ் ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 மற்றும் நவம்பர் 1 ஆகிய ஆறு நாட்களில் கிராம சபைக் கூட்டங்கள் கட்டாயமாக நடத்தப்படும் என அறிவித்தார். இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தப்படலாம்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

"நம்ம கிராம சபை" செயலி

"நம்ம கிராம சபை" என்கிற புதிய கைபேசி செயலி, கிராம சபை நிகழ்வுகளைக் கண்காணித்திடும் பொருட்டு இத்துறையின்மூலம் இவ்வாண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த செயலி இயக்குவதற்கு எளிதாகவும், கீழ்க்காணும் செயல்பாடுகளைப் பதிவு செய்திடவும் பயன்படுத்தப்படுகிறது.

- *கிராம சபையின் குறைவெண் வரம்பு*
- *கிராம சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்*
- *கிராம சபையில் பங்கேற்ற பற்றாளர்களின் விவரங்கள்*

2023 மார்ச் 30]

- *கிராம சபை நடைபெற்ற நேரம்*
- *கலந்துகொண்ட பிற துறை அலுவலர்களின் விவரம்*
- *கிராம சபை நடைபெற்றதற்கான புகைப்பட ஆதாரங்கள்*

கிராம சபை நிகழ்வுகளை நிகழ் நேரத்தில் கண்காணித்திடவும் அதில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் குறித்து அறிந்து கொள்ளவும், இந்த கைபேசி செயலி ஒரு பயனுள்ள கருவி என நிரூபித்துள்ளது.

கிராம ஊராட்சிக் குழுக்கள்

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படும்.

- *நியமனக் குழு*
- *வளர்ச்சிக் குழு*
- *வேளாண்மை மற்றும் நீர்வடிப் பகுதிக் குழு*
- *பணிகள் குழு*
- *கல்விக் குழு*

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் பிரிவு 240-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வோர் ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும்.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி அதற்கு முந்தைய ஆண்டிலேயே தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும், இதர துறைகளின் ஒருங்கிணைப்புடன் கிராம வளர்ச்சிக்காக திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக

மற்றும் பொருளாதார தேவைகளுக்கான மதிப்பீடு, சமுதாய வளபயிற்றுனர்கள்மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, ஒன்றிய அரசின் மிஷன் அந்தியோதயா செயலிமூலம் உள்ளீடு செய்யப்படும். கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் கட்டாயமாக நடத்தப்படவேண்டும்.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் எதிர்வரும் 2023- 24 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூர் மயமாக்கப்பட்ட நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகள் சார்ந்த கருப்பொருள்கள் அடிப்படையில் தயாரிக்கப்படும். ஊராட்சி அளவில், இந்தக் கருப்பொருள்கள் அடிப்படையிலான திட்டமிடலே அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

2.3.2 ஊராட்சி ஒன்றியங்கள்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும்.

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின்மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.

2.3.3 மாவட்ட ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்,1994 பிரிவு 24-ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல்மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார். புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கான மாவட்ட ஊராட்சி அடுத்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களுக்குப் பின் அமைக்கப்படும்.

2023 மார்ச் 30]

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஓர் அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை.

திருத்தியமைக்கப்பட்ட மாவட்ட திட்டக் குழு

31 மாவட்ட திட்டக் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டதுடன் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு முதல் முறையாக மாவட்ட திட்டக் குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன:

அ) மானியம்

ஆ) வரி வருவாய்

இ) வரியில்லா வருவாய்

அ. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்

மாநில நிதிக் குழு மானியம்

73-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198-ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

1. *அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள்மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்குதல்.*

2. *ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.*

3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட 1994-லிருந்து இதுவரை ஆறு மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1) ஆறாவது மாநில நிதி ஆணையம் (2022-23 –2027-28)

ஆறாவது மாநில நிதிக் குழு அரசால் 2020 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, அதன் பெரும்பாலான பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆறாவது மாநில நிதிக் குழுவின் முக்கியப் பரிந்துரைகள்

1. ஆறாவது மாநில நிதிக் குழுவின் செயல்பாட்டுக் காலம் 2022-2023 முதல் 2027-2028 ஆம் ஆண்டு வரை ஆகும்.

2. ஆறாவது மாநில நிதிக் குழு மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 10% சதவீதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரைத்துள்ளது.

3. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்மான விகிதம் 51:49 ஆகும்.

4. அரசு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கியுள்ள மானியத்தினை மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 6:39:55 என்கிற பகிர்மான விகிதத்தில் வழங்கிட ஆணையிட்டுள்ளது.

5. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியமானது ஆறாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள பகிர்மான விதிமுறைகளின்படி பகிர்ந்தளிக்கப்படும்.

6. ஆறாவது மாநில நிதிக் குழு, மானியங்களை கீழ்க்கண்டவாறு இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

2023 மார்ச் 30]

1. சிறப்பு மானியம்

2. பகிர்மான மானியம்

சிறப்பு மானியம்

நிதிக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் சில முன்னுரிமைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு துறைக்கு சிறப்பு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள சிறப்பு மானியங்கள் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது மூலதன மானிய நிதி மற்றும் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இம்மானியங்கள், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வழங்கப்பட்டுள்ளன.

I. மூலதன மானிய நிதி

ஐந்தாவது நிதிக் குழு பரிந்துரைத்ததைப் போலவே ஆறாவது நிதிக் குழு காலத்திலும் மூலதன மானிய நிதி நீட்டிக்கப்பட்டுள்ளது. மூலதன மானிய நிதி மாநில மற்றும் மாவட்ட அளவிலான தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆறாவது நிதிக் குழு, மாநில அளவிலான மூலதன மானிய நிதியை கீழ்க்காணும் வகையில் பிரித்து பயன்படுத்திட பரிந்துரைத்துள்ளது.

மாநில அளவிலான மூலதன மானிய நிதி

- *ஊரக கட்டமைப்பு - ரூ.600 கோடி*
- *இதர மாவட்ட சாலை (ODR) – சாலை வகை மாற்றம் - ரூ.120 கோடி*
- *மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் - ரூ.1 கோடி*
- *பள்ளிகள் பராமரிப்பு - ரூ.140 கோடி*

மாவட்ட அளவிலான மூலதன மானிய நிதி

- *மூலதன மானிய நிதி – மாவட்ட அளவில்: ரூ.200 கோடி.*

இதன்படி 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.1,061 கோடியை மூலதன மானிய நிதிக்கென ஆறாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ஒதுக்கீடு செய்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

II. செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதி

பற்றாக்குறை ஊராட்சிகளுக்கான மானிய நிதிக்குப் பதிலாக செயல்பாடு, பராமரிப்பு மற்றும் பற்றாக்குறை மானிய நிதியினை ஆறாவது மாநில நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. இதன்படி, 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.782.60 கோடியை கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்துள்ளது.

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்ட கால குடிநீர் கட்டண நிலுவைகளைச் செலுத்தும் பொருட்டு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகளைச் செலுத்திடும் பொருட்டு ரூ.200 கோடியை ஒதுக்கியுள்ளது.

3. ஒவ்வொரு வருடமும் ரூ.280 கோடியை பற்றாக்குறை ஊராட்சிகளுக்கு வழங்கிடும் பொருட்டு ஆறாவது மாநில நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது.

4. ஆறாவது நிதிக் குழு முதல் முறையாக நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கு சிறப்பு மானியமாக ரூ.69 கோடியையும், மலைப்பகுதி ஊராட்சிகளுக்காக ரூ.30 கோடியையும் ஒதுக்கியுள்ளது.

5. ஆறாவது மாநில நிதிக் குழு ரூ.28 கோடி ரூபாயினை நூலக மேல் வரியின் முன்பணமாக நூலகத் துறை இயக்குநரகத்துக்கு கிராம ஊராட்சிகள் சார்பாக வழங்கிடும் பொருட்டு பரிந்துரைத்துள்ளது. இதனை, தொடர்புடைய கிராம ஊராட்சிகள் சொத்து வரியுடன், நூலக மேல்வரியை வசூலித்து அதனை ஊராட்சிகளே பயன்படுத்திக்கொள்ளலாம்.

6. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்மூலம் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கான நல உதவிகளுக்காக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கென ரூ.60 இலட்சம் மண்டல

2023 மார்ச் 30]

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

8. ஆறாவது மாநில நிதிக் குழு ரூ.60 கோடியை மானியமாக பள்ளி மேம்பாட்டுக்கெனவும், வன உரிமைச் சட்டத்தினை ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு ஊக்கத் தொகையாக ரூ.10 கோடியும் ஒதுக்கியுள்ளது.

சிறப்பு மானியமாக ரூ.1,843.60 கோடி, 2022-23 ஆம் ஆண்டு ஆறாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பகிர்மான மானியம்

பகிர்மான மானியம் 6:39:55 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.5,593.20 கோடியை பகிர்மான நிதியாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒன்றிய நிதி ஆணைய மானியம்

நிதிப் பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2021-22 முதல் 2025-26 வரையிலான காலத்திற்குரியதாகும்.

- வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 60:40 ஆகும்.
- வரையறுக்கப்பட்ட மானியத்தில் 50% (30%) குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சிப் பணிகளுக்காகவும் மீதமுள்ள 50 சதவீதம் (30%) சுகாதாரம் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.
- வரையறுக்கப்படாத மானியம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் அல்லது நிர்வாக செலவினம் தவிர, அரசு அனுமதித்துள்ள இதர குறிப்பிட்ட பணிகளுக்காகப் பயன்படுத்தலாம்.
- பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள அடிப்படை மற்றும் வரையறுக்கப்பட்ட மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளுக்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படுகிறது.

மாவட்ட ஊராட்சிகள்	5%
ஊராட்சி ஒன்றியங்கள்	15%
கிராம ஊராட்சிகள்	80%

15-வது ஒன்றிய நிதிக் குழுவின் ஒட்டுமொத்த காலத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1

(ரூ. கோடியில்)

ஆண்டு	மொத்த மானியம்	வரையறுக்கப்படாத மானியம் (40%)	வரையறுக்கப் பட்ட மானியம் (60%)
2021-22	2666	1066.4	1599.6
2022-23	2761	1104.4	1656.6
2023-24	2791	1116.4	1674.6
2024-25	2957	1182.8	1774.2
2025-26	2884	1153.6	1730.4
மொத்தம்	14059	5623.6	8435.4

2.5 சொந்த வருவாய் இனங்கள்

1. வரி வருவாய்

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172-ன்படி வீட்டு வரி/சொத்து வரி வசூல் செய்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 198(B)-ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகையுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும்.

2023 மார்ச் 30]

- *தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172, 220 மற்றும் பிரிவு 242-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன.*

2. வரியில்லா வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியில்லா வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) *மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்*

ii) *அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்*

iii) *சந்தைக் கட்டணம்*

iv) *குடிநீர் கட்டணம்*

v) *வண்டி நிலையங்களுக்கான கட்டணம்*

vi) *சமூகக் காடுகள் ஏலம்*

vii) *மீன்பாசி குத்தகை*

viii) *2சி பட்டா கட்டணம்*

ix) *சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்*

x) *படகுக் குழாம்மூலம் பெறப்படும் கட்டணங்கள்*

xi) *அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை*

xii) *கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை*

2.6 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணத்துடன் பெறப்படும் மிகுவரி வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு, பதிவுத் துறைமூலம் விடுவிக்கப்படுகிறது. இந்த மிகுவரி வருவாய் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்து வழங்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அதன்படி, 2022-23 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.1,003.00 கோடியை பின்வருமாறு அனுமதித்து அரசாணையின்படி விடுவித்துள்ளது.

- மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.334.33 கோடி நிதியானது கிராம ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்வு செய்யப்படுகிறது.

- மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.668.66 கோடி ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின்கீழ் தேவையின் அடிப்படையில் சிறப்பு உட்கட்டமைப்பு பணிகளான சாலைகள், பாலங்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான அலுவலகக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் மற்றும் எரிவாயு தகன மேடை போன்ற பணிகள் ஒப்பளிக்கப்படுகின்றன. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு வாகனங்கள் வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 277 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ரூ.672.11 கோடி மதிப்பீட்டிலும், 15 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் ரூ.104.46 கோடி மதிப்பீட்டிலும் எடுக்கப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டு, 82 புதிய வாகனங்கள் ரூ.6.82 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. புதிய முன்னெடுப்பாக, 2021-22 ஆம் ஆண்டில், 10 மாவட்டங்களில் நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 10 எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2.7 சிறப்பாக செயல் புரியும் கிராம ஊராட்சிகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் விருதுகள் வழங்குதல்:

அ. உத்தமர் காந்தி விருது

கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சியின் முன்னேற்றத்திற்காக திட்டமிடலில் துவங்கி, தேவையான ஆதாரங்களை திரட்டுதல், தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல், அரசு திட்டங்களைச் செயல்படுத்துதல் வரையிலான பல்வேறு பணிகளை மேற்கொண்டு

2023 மார்ச் 30]

ஒட்டுமொத்தக் கிராம வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறார். கிராம ஊராட்சித் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவும், கிராம ஊராட்சியின் செயல் அலுவலராகவும் இருந்து, பொது மக்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும் முக்கிய இணைப்புப்பாலமாக விளங்குகிறார். எனவே, ஊராட்சியின் மேம்பாடானது பெரும்பாலும் கிராம ஊராட்சித் தலைவரின் தலைமைத்துவத்தினையும், நிர்வாகத்திறன் மற்றும் அறிவுக்கூர்மையையும் பொறுத்து, அரசின் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும், அத்திட்டங்களினால் ஏற்படும் நன்மைகளை கடைக்கோடி வரை கொண்டு சேர்ப்பதிலும் முக்கிய மையப்புள்ளியாக உள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி 2022 ஆம் ஆண்டிலிருந்து "உத்தமர் காந்தி விருது" மீண்டும் நிறுவப்பட்டது. கிராம ஊராட்சியின் மேம்பாட்டிற்காகவும், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் முன்னின்று வழிநடத்தும் கிராம ஊராட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்விருது 2006 முதல் 2010 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது

இவ்விருது, சிறப்பாக செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ரூ.10 இலட்சம் ரொக்கப் பரிசுடன் வழங்கப்படும். விருதுக்கு தகுதியான கிராம ஊராட்சியின், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சிறப்பாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட குறியீடுகளையும் மற்றும் அதன் செயல்திறன்களை அளவிடுவதைப் பொறுத்தும் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களை அங்கீகாரப்படுத்துவதன்மூலம் இவ்வூராட்சியில் நடைபெற்ற சிறப்பான பணிகள் பிற ஊராட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் முன் மாதிரியாக அமைவதோடு அவ்வூராட்சிகளும் மேம்பாடு அடைய ஊக்கப்படுத்துகிறது.

சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருதுகள்:

அரசு சாரா தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார

நடவடிக்கைகளை சமூக நலத் திட்டங்களின் ஒரு பகுதியாக மேற்கொண்டு வருகின்றன. பெருநிறுவனங்கள் தங்களுடைய நிகர இலாபத்தில் 2% நிதியினை சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திட நிறுவனங்கள் சட்டம், 2013மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டிற்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான விருது உருவாக்கப்பட்டது. இவ்விருதுகள் சிறப்பாக செயல்படும் பெருநிறுவனங்களுக்கு 2010 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டது. தற்போது, ஊரகப் பகுதிகளில் சமூக மற்றும் ஊரக மேம்பாட்டிற்காக சிறப்பாக செயல்படும் பெருநிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அங்கீகரிக்கும் விதமாக, சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் பெருநிறுவனங்களுக்கான விருதுகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும், மாவட்டம் தோறும் சிறப்பாக செயல்படும் ஒரு பெரு/தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு விருதுடன், ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசும் கேடயமும் வழங்கப்படும்.

2.8 புதிய முன்னெடுப்புகள்

1. 648 கிராம ஊராட்சிகளில், பல்வேறு துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைக்க கிராம செயலகக் கட்டடங்கள் ரூ.260 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

2. கிராம ஊராட்சிகளில் சிறப்பான சேவைகள் உறுதி செய்திடும் விதமாக மேம்பட்ட தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்துடன் புதிய கணினி உபகரணங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளன.

3. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இணைய வரி முனையம் மூலமாக சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, தொழில் உரிமம் மற்றும் வரியில்லா வருவாய் ஆகியவற்றை எளிதில் பெறுவதற்கு இணைய சேவை துவங்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவு அனுமதி, கட்டட அனுமதி மற்றும் தொழிற்சாலை நிறுவுதல் அனுமதி போன்ற சேவைகள் இணையதள வாயிலாக கூடிய விரைவில் செயல்படுத்தப்படும்.

2023 மார்ச் 30]

4. தற்போது, கிராம ஊராட்சிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

5. ஊராட்சிகளுக்கான மானியம் மற்றும் சொந்த வருவாய் இனங்களை பராமரிக்க மாநில அளவிலான ஒற்றை மையக் கணக்குமூலம் சிறந்த நிதி நிர்வாகத்தினை கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தி, வேலைப்பளுவினைக் குறைத்து கணக்குகளை எளிதாக பராமரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களுக்கு குறைதீர்க்கும் வழி முறையாக (155340) என்ற எண்ணுடன் ஒரு உதவி மையம் (Help Desk) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகத்தில் 24X7 என்ற வகையில் அனைத்து நாள்களிலும் செயல்படும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

3. மாநில அரசுத் திட்டங்கள்

3.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II

அனைத்து கிராம ஊராட்சிகளும் முழுமையான வளர்ச்சியை அடையும் நோக்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது 2006 முதல் 2011 வரை மாநில அரசால்செயல்படுத்தப்பட்டது.இத்திட்டமானதுஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஊராட்சியிலும் குளங்கள் புதுப்பித்தல், அறைகலன்கள் மற்றும் புத்தகங்களுடன்கூடிய ஊரக நூலகங்கள் அமைத்தல், புதிய இடுகாடு/சுடுகாடு மற்றும் பழைய இடுகாடு/சுடுகாடுகளில் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சமுதாய/பள்ளி விளையாட்டு மையங்கள் தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் ஊரக மக்களிடையே ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதிசெய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021-22-ம் ஆண்டு முதல் 2025-26-ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும். அனைத்து குக்கிராமங்களில் வாழும் மக்களுக்கு தேவைப்படும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களுடனும் ஏறத்தாழ 16 துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஊரக மக்களுக்கு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

3.1.1 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ன்கீழ் ஒவ்வோர் ஆண்டும், 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

நிதி ஒதுக்கீடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ன்கீழ், குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30 இலட்சமும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூ.5 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். மக்கள்தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியவற்றைக் கணக்கிடும் போது குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள் தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படும்.

செயல் திறன் ஊக்க நிதியானது 9 காரணிகளின் அடிப்படையில் ஊராட்சிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவை எய்தப்பட்ட அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, ஊராட்சியின் தலைவர், ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் கொண்ட உள்ளூர் குழுவின்மூலம்

2023 மார்ச் 30]

எடுக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், மூன்று விரிவான இனங்களின்கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

(1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் பணிகள் (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள் (3) பல்வேறு இதர துறைகளின் திட்டங்கள்.

திட்டக் கூறுகள்

திட்ட கூறுகளின் விவரம் பின்வருமாறு:-

அட்டவணை 3.1

வ. எண்	பணியின் வகைகள்	நிதி ஒதுக்கீடு
1.	நீர் நிலைகள் புதுப்பித்தல்	30%
2.	குக்கிராமங்களில் தெருக்கள்/வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்	25%
3.	சமத்துவ சுடுகாடு/இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்டவைகளின் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்	10%
4.	பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல்	15%
5.	சுத்தமான மற்றும் பசுமை கிராமம்	10%
6.	வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகளை ஒருங்கிணைத்தல்	10%

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் குக்கிராமங்கள்/பகுதிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில் 2,657 கிராம ஊராட்சிகள், ரூ.1,455 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும், 2022-23 ஆம் ஆண்டில் 2,544 கிராம ஊராட்சிகள், ரூ.1,155 கோடி நிதி ஒதுக்கீட்டுடனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் 2,504 கிராம ஊராட்சிகள் ரூ.1,148 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தேர்ந்தெடுக்கப்படும்.

அட்டவணை 3.2

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	பணியின் வகைகள்	2021-22		2022-23	
		மொத்த பணிகள் (எண்ணிக்கை)	மொத்த தொகை (ரூபாய் கோடியில்)	மொத்த பணிகள் (எண்ணிக்கை)	மொத்த தொகை (ரூபாய் கோடியில்)
1	நீர் நிலைகள் புதுப்பித்தல்	2616	257	2152	198
2	தெருக்கள்/வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்	8954	415	6309	309
3	சமத்துவ சுடுகாடு / இடுகாடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள்	900	47	553	29
4	பள்ளிகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான கட்டமைப்புகளை உருவாக்குதல்	4256	303	2933	254
5	தூய்மை மற்றும் பசுமை பணிகள்	1410	68	1164	56
6	வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகள்	2296	149	1828	127

2023 மார்ச் 30]

பிற துறைகளுடன் பணிகளை ஒருங்கிணைத்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ன்கீழ் பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளின் ஒருங்கிணைப்பு மிக முக்கிய அம்சமாகும். தகுதியுள்ள பொருத்தமான பயனாளிகளுக்கு அனைத்து திட்டங்களும் சென்றடையும் வண்ணம் முக்கிய 16 துறைகள் குறிப்பிட்ட வருடத்திற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II ஊராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்வூராட்சிகளில் தொடர்புடைய துறைகளால் அரசின் திட்டங்களைப்பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஊரக மக்களுக்கு தேவையான வசதிகளை வழங்கிட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

3.2 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2022-23-ம் ஆண்டில் ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை எண்.XI விதிகள் 243ஜி மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111-ல் கிராமங்களில் நூலகங்கள்/வாசிப்பு அறைகளைத் திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2006-07 முதல் 2010-11 முடிய 12,618 ஊரக நூலகங்கள் அமைக்கப்பட்டன. இந்நூலகங்கள் முறையாகப் பராமரிக்கப்படாமல் இருந்தமையால், முழுமையான முறையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களைப் புதுப்பிப்பதற்கான திட்டம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் 12,525 கிராம ஊராட்சிகளிலும் ஏற்படுத்தப்பட்ட நூலகங்களை 2021-22 முதல் 2023-24 முடிய மூன்றாண்டு காலங்களில் பழுது பார்க்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஊரக நூலகக் கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தலில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் கழிப்பறை அமைத்தல், பழுதுபட்ட பயன்படுத்த இயலாத அறைகலன்களை மாற்றுதல் மற்றும் புதிய/கூடுதலான புத்தகங்கள் வழங்கப்படுதலும் உள்ளன.

[2023 மார்ச் 30

2021-22 ஆம் ஆண்டில் 4,116 நூலகங்கள் ரூ.91.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 3,808 நூலகங்கள் ரூ.84.27 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள நூலகங்கள் 2023-24-ல் புதுப்பிக்க எடுத்துக்கொள்ளப்படும்.

3.3 பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை ஊக்குவிக்கவும், தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கையைப் பரப்பும் பொருட்டும், சுதந்திர பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகவும், "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டம் தமிழ்நாடு அரசால் 1997-98 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, 238 சமத்துவபுரங்கள் இரு கட்டங்களாக அமைக்கப்பட்டன. முதற்கட்டமாக, 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் 145 சமத்துவபுரங்களும், இரண்டாம் கட்டமாக 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் 93 சமத்துவபுரங்களும் அமைக்கப்பட்டன.

பல்வேறு சமூகங்களைச் சார்ந்த மக்கள் சாதி, சமய வேறுபாடின்றி ஒன்றாக வாழ்வதற்கு வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். 100 வீடுகளும், அடிப்படை வசதிகளும் கொண்ட மாதிரி கிராமத்தை உருவாக்கிட 8 முதல் 10 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் பல்வேறு இனத்தை சேர்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

சமத்துவபுரங்கள் சீரமைப்பு

சமூக ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் பிரதிபலிக்கும் அடையாளமாக விளங்கும் சமத்துவபுரங்கள், எவ்வித பராமரிப்புமின்றி கைவிடப்பட்ட நிலையில் இருந்ததால், உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி, 238 சமத்துவபுரங்களையும் படிப்படியாக சீரமைத்திட அரசால் முடிவு செய்யப்பட்டது.

- *சமத்துவபுரங்கள் சீரமைப்புப் பணிகள் கீழ்க்கண்ட மூன்று கூறுகளை உள்ளடக்கியதாகும்.*

 - *சிறுபழுதுகள் நீக்கம் - வீடு ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம்;*
 - *வெவ்வேறு நிலைகளிலிருந்து திட்ட மதிப்பீட்டின்படி வீடுகளை மீளக்கட்டுதல்;*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 30]

- ○ *பொது உட்கட்டமைப்பு வசதிகளை சீரமைத்தல்.*

- *பயனாளிகள் அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் குடியிருக்கும் வீடுகளில், சிறுபழுதுநீக்கப் பணிகள் சம்பந்தப்பட்ட பயனாளிகள்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மீளகட்டும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி பயனாளியின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படுகிறது.*

- *ஒதுக்கீடு செய்யப்படாத/கைவிடப்பட்ட வீடுகளில் மேற்கொள்ளப்படும் சிறுபழுதுகள் மற்றும் மீளகட்டும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய வீடுகள் உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தெரிவு செய்யப்பட்ட தகுதியான பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.*

- *பொது உட்கட்டமைப்பு சீரமைப்புப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றன.*

- *இந்த நிதியுதவி ஒரு முறை மட்டுமே அரசால் வழங்கப்படும் என்பதால், சீரமைப்புப் பணிகளில் பயனாளிகள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஏதுவாகவும், சீரமைப்புப் பணிகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்திடவும், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் குடியிருப்போர் நலச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.*

சமத்துவபுரங்கள் சீரமைப்பு கட்டம்-I (2021-22)

முதற்கட்டமாக 149 சமத்துவபுரங்கள் சீரமைக்க எடுத்துகொள்ளப்பட்டு, அவற்றில் உள்ள வீடுகளில் சிறு பழுது நீக்கம் செய்தல், மிகவும் பழுதடைந்த வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் விநியோகம், சாலைகள், தெருவிளக்குகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், சமுதாயக்கூடம், நூலகம், அங்கன்வாடி, பொது விநியோக அங்காடி, பள்ளிக் கட்டடம் சீரமைத்தல் போன்ற பணிகள் ரூ.190.44 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

ஏற்கெனவே, கட்டி முடிக்கப்பட்டு, ஆட்சி மாற்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்த ஐந்து சமத்துவபுரங்களில், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு சமத்துவபுரமும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு சமத்துவபுரமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைக்கபட்டுள்ள மற்ற மூன்று சமத்துவபுரங்களும் விரைவில் திறந்து வைக்கப்படும்.

149 சமத்துவபுரங்களில் வாழும் மக்கள் பயனடையும் வகையில் 11,332 வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், 2,364 வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் 1,939 பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

சமத்துவபுரங்கள் சீரமைப்பு கட்டம்-II

இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள 88 சமத்துவபுரங்களில் 7,574 வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், 60 வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் 650 பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு

“குடிசைகள் இல்லாத தமிழ்நாடு” என்ற நிலையை அடைய வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. நிரந்தர வீடு தேவைப்படும் நிலையில் உள்ள குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பில் குடிசைகள், நிலைத்த தன்மையற்ற மற்றும் வாழத் தகுதியற்ற வீடுகளில் வாழும் சமுக பொருளாதார சாதி வாரி கணக்கெடுப்பு, ஆவாஸ் ப்ளஸ், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் - மறுகணக்கெடுப்பு, புதிய குடிசைகள் கணக்கெடுப்பு ஆகிய பட்டியல்களில் இடம் பெறாத குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு, கள சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசுத் திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது நீக்கம் மேற்கொள்வதற்கான கணக்கெடுப்பு

1970 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு மாநில மற்றும் ஒன்றிய அரசு பங்களிப்புத் திட்டங்களின்மூலம் வீடுகள் வழங்கி வருகிறது. 2010-11 ஆம் ஆண்டுக்கு முன்னதாக கட்டப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலை குறித்து அறிந்திடும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 மார்ச் 30]

பிற துறைகளுக்காக செயல்படுத்தப்படும் வீட்டு வசதித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வீட்டு வசதித் திட்டங்கள் தவிர, மீனவர்கள், இலங்கை அகதிகள், பழங்குடியினர் போன்ற சிறப்பு பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டங்களும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- *மீனவர்களுக்கு வீடு வழங்கும் திட்டமான நீலப்புரட்சி திட்டத்தின்கீழ் 4,069 வீடுகள் ரூ.69.17 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,901 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*
- *அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையால் 19 மாவட்டங்களில் உள்ள 32 முகாம்களில் ரூ.175.747 கோடி மதிப்பீட்டில் 3,510 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள இப்பணிகள் குறித்த காலக்கெடுவிற்குள் முடிக்கப்படும்.*
- *பழங்குடியினர் நலத் துறையால் 2022-23 ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 1,094 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. தற்போது பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள இவ்வீடுகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.*

3.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் முழுமையாக நிதியளிக்கப்படும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தின் 234 தொகுதிகளுக்கு ஆண்டுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.3.00 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து, அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதை சட்டமன்ற மேம்பாட்டுத் திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், அரசால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குறித்த காலத்தில் பணிகளைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் பணிகளை

பரிந்துரைப்பதன் பேரில், அதற்கான அனுமதி ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டும். மேலும், ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில், 22% ஆதி திராவிடர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) மக்கள் அதிகம் வசிக்கும் கிராமப்புர பகுதிகளுக்கும், நகர்ப்புரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில், ரூ.702 கோடி அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டுக்கு ரூ.702 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3.5 நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

மக்களின் பங்கேற்புடன் பொது சொத்துகளை உருவாக்குவதை ஊக்குவிக்க நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். ஊரக மக்களின் சுய உதவி மற்றும் சுய சார்பு எண்ணத்தை ஊக்குவித்தல் மற்றும் வலிமைப்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், வணிக நிறுவனங்கள் அல்லது உள்ளூர் மக்கள், மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பை அளித்து, நமக்கு நாமே திட்டத்தில் பங்கேற்கலாம். பொது மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர், ஒப்பந்தப்புள்ளியின்றி, பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்கலாம். ஏற்கெனவே உள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் செய்து, ஆதி திராவிடர் (SC)/பழங்குடியினர் (ST) குடியிருப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான குறைந்தபட்ச பொது மக்கள் பங்களிப்புத் தொகையை ஒட்டுமொத்த பணியின் மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பங்காக (1/5) அரசால் குறைக்கப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.100.00 கோடி அனுமதிக்கப்பட்டது. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 2,819 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில், ரூ.100.00 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2023 மார்ச் 30]

3.6 ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

தமிழ்நாடு பரந்து விரிந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை உள்ளடக்கிய ஊரகச் சாலைத் தொகுப்பினை கொண்டுள்ளது. ஊரகச் சாலைகள் கிராமப்புர மக்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஊரகச் சாலைகளைத் தொடர்ந்து பயன்படுத்தத்தக்க வகையில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் இத்துறையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில், 1,55,351 கி.மீ நீளம் கொண்ட 1,44,083 கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில், 68% சாலைகள் தார் இடப்பட்ட சாலைகளாகவும், 32% சாலைகள் தார் இடப்படாத சாலைகளாகவும் உள்ளன. தேவை மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் தார் இடப்படாத சாலைகள் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய எடுத்துகொள்ளப்படுகிறது. இதில் தார் இடப்பட்ட 1.02 இலட்சம் கி.மீ சாலையில், 58,875 கி.மீ. (58%) நீளமுள்ள ஊரகச் சாலைகள் கடந்த ஐந்தாண்டுகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்பு செய்யப்படவில்லை. 5 ஆண்டுகளுக்கு உட்பட்ட சாலைகளுக்கு தொடர் பராமரிப்பும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சாலைகளுக்கு, சாலையின் மேற்பரப்பின் நிலையின் (PCI) அடிப்படையில் காலமுறை பராமரிப்பு அல்லது வலுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சாலையின் மேற்பரப்பின் அடிப்படையில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3

வ. எண்	சாலையின் மேற்பரப்பின் வகை	ஊராட்சி ஒன்றிய சாலைகள்	கிராம ஊராட்சி சாலைகள்	மொத்தம்
		நீளம் (கி.மீ)		
1.	தார்ச்சாலை	25,720	76,369	1,02,089
2.	சிமெண்ட் சாலை	319	3,246	3,565
3.	ஈரடுக்கு கப்பிச்சாலை	140	1,771	1,911

4.	ஓரடுக்கு கப்பிச்சாலை	360	9,575	9,935
5.	சரளைக்கல் சாலை	149	4,622	4,771
6.	மண் சாலை	901	32,179	33,080
மொத்தம்		27,589	1,27,762	1,55,351

3.7 முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

ஊரகச் சாலைகளுக்கு தொடர் மற்றும் காலமுறை பராமரிப்பு பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தை தவிர்த்து, வேறு திட்டங்களின்கீழ் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை. 1.02 இலட்சம் கி.மீ நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ.54,000 கோடி சொத்து மதிப்பு உடையது. இச்சாலைகளை முறையாக பராமரிக்கவில்லையெனில், விரைவில் சாலைகள் சேதமடைவதுடன், அரசிற்கு கணிசமான சொத்து இழப்பும் ஏற்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 13.01.2023 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்தபோது, "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும் என்றும் இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.4,000 கோடியில் மேம்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்கள். ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல்/வலுப்படுத்துதல்/பராமரித்தல், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

சாலைகளின் மறுவகைப்பாடு

I. ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைத் தொகுப்பின் முழு விவரத்தினை அறிய வட்டார ஊரகச் சாலைத் திட்டம் (Block Rural Road Plan) தயாரிக்கப்படும். மேலும், ஒவ்வொரு சாலைக்கும் தேர்ந்தெடுக்கப்படும் காரணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

II. ஊரகச் சாலைகளின் வகைப்பாட்டிலுள்ள சமமின்மையை நீக்க, முக்கிய கிராம ஊராட்சி சாலைகள்

குக்கிராமங்களை இணைக்கும் ஒற்றை இணைப்புச் சாலைகள், பேருந்து செல்லும் சாலைகள், 3 கி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டத்தின் முக்கிய சாலைகள், புறவழி சாலைகள் மற்றும் இதர முக்கிய சேவைகளை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகளாக மறுவகைப்படுத்தப்படும். தோராயமாக, 38,600 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகளாக மறுவகைப்படுத்தப்படும்.

III. ஊரகச் சாலைத் தொகுப்பின் மேம்படுத்தப்பட்ட மேலாண்மைக்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள், முக்கிய ஒன்றிய சாலைகள் (Major Union Roads) மற்றும் இதர ஊராட்சி ஒன்றிய சாலைகள் (Other Union Roads) என மேலும் வகைப்படுத்தப்படும்.

சிறப்பு அம்சங்கள்

- இத்திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களால் முன்மொழியப்படும் சாலைகள், இத்துறையின் வசம் உள்ள, இடம் சார்ந்த (Spatial data) தரவுகள் (புவியியல் தகவல் அமைப்பு)மூலம் ஆய்வு செய்யப்படும்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் மாநிலத் திட்டங்களில், இத்திட்டத்தில்தான் முதன்முறையாக, சாலைகள் மேம்பாட்டிற்கு பிறகு, 5 ஆண்டுக்கால தொடர் பராமரிப்பு, அதன் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும் சாலைப் பணிகளின் தரம், தனிப்பட்ட மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பு முகமை மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்திற்கு இணையான தரம் உறுதிபடுத்தப்படும்.
- முக்கிய சாலைகளுடன் ஊரகச் சாலைகள் இணையும் இடத்தில், சாலைகளுக்கான சந்திப்பு மேம்பாடு (Intersection Improvement) கட்டாயம் மேற்கொள்ளப்படும். பாதுகாப்பான சாலைகளை உறுதி செய்வதற்காக வேகத்தடைகள், பாதுகாப்புத்

தடைகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம், ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் ஆகும். இத்திட்டத்திற்கான நிதி, மாநில நிதிக் குழு மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 29,194 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.6,427.23 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 2,325 கி.மீ. நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.718 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

3.8 நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD - RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின்கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை ஒன்றிய அரசு 1995-96 ஆம் ஆண்டு அறிவித்தது. (இதில் 80% கடனாகவும், 20% மாநில அரசின் பங்காகவும் உள்ளது). ஊரகப் பகுதிகளில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த தார்ச் சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தேவையின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல்மூலம் ஊரகப் பகுதிகளில் அனைத்து பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகள் அமைப்பது இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள்

- *பேருந்துகள்/சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்குப் பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும் சாலைகள், சுற்றுலா பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள், மருத்துவமனை, பள்ளி மற்றும் இதர சேவைகளை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் சாலைகள் தேர்வு செய்யப்படுகின்றன.*

2023 மார்ச் 30]

- குறைந்தபட்சம் 1 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இத்திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ், 2006-07 ஆம் ஆண்டு முதல் 2022-23 ஆம் ஆண்டு வரை 19,063 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி/ ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 510 பாலங்கள் ரூ.4,312 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2021-22 ஆம் ஆண்டில், 113 பாலங்கள் ரூ.333 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, இதுவரை 15 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 98 பாலங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், 80 பாலங்கள் ரூ.262 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

3.9 பள்ளி உட்கட்டமைப்பு - குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்த, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, அரசுப் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மாநிலத்தில் 21,136 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் (PUPS) மற்றும் 6,502 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் (PUMS) உள்ளன. இந்தப் பள்ளிகளில் 58,835 கட்டடங்கள் உள்ளன. மேற்கூறப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோவிட்-19 காலத்தில், பள்ளிகள் மூடப்பட்டதாலும், இந்தக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் புனரமைத்தல் பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கப்படாததாலும், கற்றலுக்கேற்ற பாதுகாப்பான மற்றும் போதுமான வகுப்பறைகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பழுதடைந்த நிலையில் இருந்த 2,745 கட்டடங்களை இடிக்க அரசு விரைவான நடவடிக்கை மேற்கொண்டது.

மேலும், 4,847 பள்ளிகளில் 13,157 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. புதிய வகுப்பறைகளுக்கான தேவை இடைவெளியை குறைக்க, கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளைக் கட்டுவதற்காக, இந்த அரசால் 2022-23 ஆம் ஆண்டில் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் ரூ.823 கோடி மதிப்பீட்டில் 5,483 புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS), நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS), நமக்கு நாமே திட்டம் (NNT) போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் 236 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 472 வகுப்பறைகள் ரூ.51.63 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் கட்டடங்கள் பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கற்பித்தல் - கற்றல் சூழலை ஏற்படுத்தும் வகையில் இருக்கும். கற்றல் தொடர்பான தகவல்கள் மற்றும் வாழ்க்கைத் திறன்கள் ஓவியங்களாக வரையப்பட்டிருக்கும். பள்ளிக் கட்டடங்கள், போதுமான வெளிச்சம், சிறந்த காற்றோட்டம், பாதுகாப்பு அம்சங்கள், கவர்ச்சிகரமான வண்ணமயமான வரைபடங்கள் மற்றும் படங்கள் போன்ற குழந்தை நேய வடிவமைப்பு அம்சங்களுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

3.10 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) 2021-22-ல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க (PUPS) மற்றும் நடுநிலைப் (PUMS) பள்ளிகளில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில், ரூ.135.87 கோடி மதிப்பீட்டில், 10,171 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல், 2022-23 ஆம் ஆண்டிற்கு, ரூ.194.65 கோடி மதிப்பீட்டில், 8,824 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

3.11 சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலிசம் பரவுதலை கட்டுப்படுத்தும் வகையில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் சமூகப்

2023 மார்ச் 30]

பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003-04 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு மாவட்டங்களில், நக்சல் பாதித்த பகுதிகளில் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கடைக்கோடி கிராமப்புர மக்களையும் சமூகப் பொருளாதார பணிகளை வலுவூட்டிடும் வகையிலான பணிகளை மேற்கொண்டு, மேற்படி நக்சலைட்டுகளால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் முன்னேற்றத்தினை விரைவுப்படுத்திட ரூ.750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3.12 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்

அ. ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான, குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், இணைப்புச் சாலைகள்/தெருக்களை மேம்படுத்துதல், மயானத்தில் எரிமேடை/காத்திருப்போர் கூடம், அணுகு சாலை, விளையாட்டு மைதானங்கள் மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை செய்வதற்காக நிதியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்குகிறது. ஏற்கெனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ், மக்கள் தொகையின் அடிப்படையில் ஆதி திராவிடர் குடியிருப்புகள் தேர்வு செய்யப்படுகின்றன. 2022-23 ஆம் ஆண்டிற்கு, ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டில் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஆதி திராவிடர் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முழுமையடையும் வகையில் வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

ஆ. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு செய்தல்

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், சாலைகள் அமைத்தல்

[2023 மார்ச் 30

போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2021-2022 ஆம் ஆண்டிற்கு தெரு விளக்குகள், சூரிய விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்த ரூ.25.19 கோடி நிதி ஒதுக்கீடு பழங்குடியினர் நலத் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

4. ஒன்றிய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

4.1.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006-ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இது ஒவ்வொரு நிதியாண்டிலும் திறன்சாரா உடலுழைப்பினை வழங்க முன்வரும் ஊரக குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டமாகும்.

4.1.2 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

அ. வேலை அட்டை பெறுவதற்கான உரிமை

ஆ. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

இ. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை

ஈ. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை

உ. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

ஊ. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை

எ. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

ஏ. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

2023 மார்ச் 30]

ஐ. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை

ஒ. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 'பணி வாரம்' என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து, அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும். ஊராட்சிகளிலுள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை-I-ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது, ஒரு வயதுவந்த நபர் ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு, முறையாகப் பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பைத் தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

6. அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கும் திறன்சார் தொழிலாளர் ஊதியத்திற்கும் பொதுப் பணித் துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

7. குடும்பத்தில் உள்ள ஒவ்வோர் உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமை பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வோர் ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 1-4-2022-லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் தொடர்ந்து பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8. 2017-18-ம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

9. தமிழ்நாட்டிற்கு, 1-4-2023 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி ஊதியம் நாளொன்றுக்கு ரூ.294 என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

10. பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

11. பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன.

12. கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.

13. கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளைத்

TRUTH ALONE TRIUMPHS

தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

14. வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை வைக்கப்படுகிறது.

15. 65.17 இலட்சம் ஊரகக் குடும்பங்களில் உள்ள 75.01 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

4.1.3 நிதி விடுவிப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி மூன்று முக்கியக் கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)

2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)

3. அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவின கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%-க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

4.1.4 குறித்த காலத்திற்குள் வங்கிகள்மூலம் ஊதியம் வழங்குதல்

2022-23-ம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை (நிலை-I) T+8 ஆகவும் மற்றும் (நிலை-II) T9-T15 ஆகவும் ஒன்றிய அரசு திருத்தி வரையறுத்துள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத் தொகை 100 விழுக்காடு அவர்களது வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு

[2023 மார்ச் 30

வைக்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனைத்து பரிவர்த்தனைகளும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS)மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

4.1.5 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலை நான்கு பிரிவுகளின்கீழ் வழங்குகிறது. அட்டவணை-I-ல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்புமூலம் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 268 பணிகளில், 182 பணிகள் இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

4.1.6 இயற்கை வள மேலாண்மைப் பணிகள்/விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்

இயற்கை வள மேலாண்மைப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் முக்கிய இலக்காகும். அதன்படி, பசுமை மற்றும் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளாக பெருமளவு மரக்கன்று நடுதல் மற்றும் சாலையோர மரக்கன்று நடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தடுப்பணைகள், மீள் நிரப்பு குழிகள், கசிவு நீர்க் குட்டைகள், அகழிகள், பண்ணைக் குட்டைகள், உறிஞ்சுக் குழிகள் ஆகிய செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்புகள் அமைப்பதன்மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரத்துக் கால்வாய்கள் மற்றும் பாரம்பரிய நீர் நிலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு, அவை முழு கொள்ளளவை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒன்றிய அரசு (ஊரக வளர்ச்சி அமைச்சகம்) வெளியிட்ட நீர் பாதுகாப்பு இயக்கத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 65 சதவீத செலவீனம் இயற்கை வள மேலாண்மைப் பணிகளுக்கும், 60 சதவீத செலவீனம் வேளாண்மை மற்றும் வேளாண் சார் பணிகளுக்கு செலவிட வேண்டும். தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளை குறிப்பாக நீர்ப் பற்றாக்குறை வட்டாரங்களில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்துகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 2,86,804 இயற்கை வள

2023 மார்ச் 30]

மேலாண்மைப் பணிகள் ரூ.7,308 கோடியில் எடுக்கப்பட்டு, 1,71,752 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இது மொத்த செலவினத்தில் 73.95% ஆகும்.

4.1.7 நீர் வள மேலாண்மைக்கான 100 நாள் சிறப்பு முயற்சிகள் (2021)

அதிக அளவில் நீர் சேமிப்புப் பணிகளை மேற்கொள்ளும் விதமாக செப்டம்பர்-நவம்பர் 2021-ல் 100 நாள் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒன்றிய அரசின் 'ஜல் சக்தி அபியான்-மழை நீர் சேகரிப்பின் ஒரு பகுதியாக 4,057 தடுப்பணைகள், 16,784 பண்ணைக் குட்டைகள், 1,562 கசிவு நீர்க் குட்டைகள், 5,681 நீர் அகழிகள், 6,283 அமிழ்ந்த நீர்க் குட்டைகள் போன்ற 27,973 பணிகள் சிறப்பு முயற்சியாக மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டன. இந்த முயற்சியானது, நீர் சேமிப்பு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் உள்ளூர் மக்களின் மத்தியில் ஆர்வத்தை மீண்டும் உருவாக்கியுள்ளது.

4.1.8 நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022)

2022 ஆம் ஆண்டில், மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜூன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக 2 குறிக்கோள்களுடன் நீர்வளப் பணிகள் எடுக்கப்பட்டன.

இக்காலத்தில் ஊரகப் பகுதிகளில் விழும் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிக்கும் வண்ணம் தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் அகழிகள், மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 15,397 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பசுமை வளம் அதிகரிப்பதை உறுதிசெய்ய இந்த 75 நாட்களில் மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு வட்டார நாற்றங்கால் பண்ணைகளிலும் 10,000 மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, சுமார் 30,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

நடப்பாண்டின் ஜல் சக்தி அபியான் திட்டத்தின்கீழ் "குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்தல்" என்ற கருப்பொருளுடன் ஒரு முயற்சி மார்ச் 22 ஆம் தேதியில் தொடங்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும், 22 மார்ச் 2023 அன்று உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் உள்ளூர் நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், நீர் விரயத்தை குறைக்கவும், அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

4.1.9 கண்காணிப்பு முறை

தேசிய கைப்பேசி கண்காணிப்பு முறை

தேசிய கைப்பேசி கண்காணிப்பு செயலி 21 மே 2021 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது. மேலும், இச்செயலிமூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன்மூலம் ஓர் வெளிப்படைத் தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை, இச்செயலிமூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் எடுக்கப்படுவதைக் கண்காணித்து உறுதிசெய்யும் பணியில் களநிலை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அனைத்து பணித்தள பொறுப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார/மாவட்ட அளவிலாள அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க உணர்த்தப்பட்டுள்ளனர்.

பகுதி அலுவலர் ஆய்வு செயலி

பகுதி அலுவலர்கள் ஆய்வு செயலி 21-5-2021 அன்று ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம்மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம் முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கும். மேலும் கள ஆய்வு விவரங்களைத் தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும், இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in *இணையதளத்தின்மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

2023 மார்ச் 30]

4.1.10 வெளிப்படைத்தன்மை

சமூக தணிக்கை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதிச் செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின்மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளைத் தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது (SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, இந்திய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது.

மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒவ்வொரு கிராம வள பயிற்றுநர்கள் பயிற்சி அளித்து சமூக தணிக்கை நடைபெற உதவுவார்கள். ஒவ்வோர் ஊராட்சியிலும் கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு எதேச்சையாக கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூக தணிக்கை மேற்கொள்வார்கள்.

சமூக தணிக்கையின் தாக்கம்

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில்

நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. சமூக தணிக்கையின் பலனாக கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலும் பதிவேடுகள் பராமரிப்பது மேம்பட்டு வருகிறது.

2022-23-ம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளுக்கான செலவினங்கள் தொடர்பான சமூக தணிக்கையானது 2022-23 ஆம் நிதியாண்டில் இதுவரை 11,905 கிராம ஊராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 619 கிராம ஊராட்சிகளில் இத்தணிக்கையானது 8-4-2023-க்குள் முடிக்கப்படும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் 15-வது நிதிக் குழு போன்ற பிற திட்டங்களுக்கும் சமூக தணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.1.11 குறைகேள் அலுவலர்

மாவட்ட அளவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை நிவர்த்தி செய்ய குறை தீர் அலுவலர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 37 மாவட்டங்களுக்கும் குறைகேள் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4.1.12 ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் இழப்பீட்டுத் தொகையும், வேலை கோரிய 15 நாட்களுக்குள் வேலை வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வழிவகை செய்கிறது. தமிழ்நாடு அரசு வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் குறித்த அறிவிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

2023 மார்ச் 30]

4.1.13 2023-24-ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு-செலவு மதிப்பீடு

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் வரவு-செலவு மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழிருந்து மேற்செல் அணுகுமுறையில் தயாரிக்கப்படுகிறது. இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்புவாரியான தேவைகளைக் கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து 2023-24 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு-செலவு திட்டத்திற்கு 35 கோடி மனித சக்தி நாட்களை பெற முன்மொழியப்பட்டுள்ளது.

4.1.14 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

மாநில அரசின் ஒரு முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை துவக்கியுள்ளது. இது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II செயல்படுத்தப்பட்டு வரும் அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன்மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படும். 2021-22 இல் 2,657 கிராம ஊராட்சிகளிலும் 2022-23 இல் 2,544 கிராம ஊராட்சிகளிலும் இவ்விரு திட்டங்கள் இணைந்து செயல்படுத்தப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II-ன் கூறுகளான நீர்நிலைகளைப் புனரமைத்தல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நோக்கம் மற்றும் அதன் பலன்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இதேபோல், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கூறுகளுடன் குறிப்பாக, நீர் வளப் பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமென்ட் கான்கிரீட்/ கம்பி வலை), பண்ணைக் குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள், மீள் நிரப்புத் தண்டு போன்ற பிற பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல் வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டுப் பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

[2023 மார்ச் 30

இதேபோல், இத்துறைமூலம் அர்ப்பணிக்கப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால்கள் (1,500) மற்றும் முருங்கை நாற்றங்கால்கள் (3,500) போன்றவை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II புவியியல் ரீதியாகவும் திட்ட செயலாக்க ரீதியாகவும் இயற்கை வள மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்புமூலம் உழவர்களுக்கு பலனை வழங்கிட ஒருங்கிணைந்து செயல்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்மூலம் சிறப்பு உந்துதல் தரப்படும். ஊரக வளர்ச்சித் துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் வாழ்க்கைத் தர குறியீடுகளை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

4.1.15 தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் திட்ட செயலாக்க முகமைகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 முருங்கை நாற்றங்கால்கள் மற்றும் 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைத் திட்ட செயலாக்க முகமைகளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4.1.16 மனித சக்தி நாட்களை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

அ. தொகுப்புகளை அதிகரித்தல்

தொழிலாளர்களின் வசிப்பிடத்திலிருந்து 2 கி.மீ. சுற்றளவிற்குள் அதிகளவு மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக தொகுப்புகள் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலைவாய்ப்பை வழங்குவதற்காக, ஒவ்வொரு கிராம ஊராட்சியின் தேவைக்கேற்ப கூடுதல் தொகுப்புகளை உருவாக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு

2023 மார்ச் 30]

அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 23,849 தொகுப்புகள் இருந்த நிலையில் தற்போது 3,412 புதிய தொகுப்புகள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, 27,261 தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. பணி இணையாளர்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித் தளத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை மேற்பார்வையிடுவதற்காக ஒவ்வொரு பணித்தளத்திற்கும் ஒரு பணி இணையாளர் ஈடுபடுத்தப்படுகிறார். வருகையை பதிவு செய்ய மற்றும் எளிய வழிகாட்டுதல்களை வழங்க தொழிலாளர்களில் இருந்து ஒருவர் தேர்வு செய்யப்படுவார். அவர் அவ்வேலை முடிவுறும் வரையிலோ அல்லது 100 நாட்கள் வரையிலோ இதில் எதில் முந்தையதோ அப்போது கட்டாயமாக பணியில் இருந்து மாற்றப்படுவார்.

இ. வேலை உறுதி திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர்களை ஈடுபடுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக, முன்னர் மக்கள் நலப் பணியாளர்களாக பணிபுரிந்தவர்கள் மற்றும் அவர்களில் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் அவர்களது விருப்பத்தின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வேலை உறுதித் திட்ட பணி ஒருங்கிணைப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு இத்திட்ட நிர்வாக கூறு நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.5,000 மற்றும் ஊராட்சி நிதியிலிருந்து ரூ.2,500—ம் ஆக மொத்தம் ரூ.7,500 மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

4.2 அனைவருக்கும் வீடு - பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம்

4.2.1 முன்னுரை

ஊரக குடியிருப்புத் திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை மேம்படுத்தும் விதமாக அத்திட்டம் சீரமைக்கப்பட்டு, பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டமாக ஒன்றிய அரசின் பங்களிப்புடன் 2016-17 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒன்றிய மற்றும் மாநில

அரசுகளின் நிதிபங்களிப்பு 60:40 என இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த விகிதமானது 38:62 ஆக உள்ளது. அதாவது அனைவருக்கும் வீடு-பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு வழங்கப்படும் தொகையில் 62% மாநில அரசால் வழங்கப்படுகிறது.

4.2.2 நோக்கம்

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடில்லாத ஏழைகளுக்கும், குடிசைகளிலும், சிதிலமடைந்த வீடுகளிலும் வசிக்கும் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன்கூடிய நிரந்தர வீடுகளை 2022 ஆம் ஆண்டுக்குள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்றிய அரசு தற்போது இத்திட்டத்தினை 2024-ம் ஆண்டுவரை நீட்டித்துள்ளது.

4.2.3 வீட்டு வசதித் திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகு தொகை ரூ.2.77 இலட்சமாகும். இதில் மாநில அரசின் கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கான தொகை மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம் ஆகிய திட்டங்களின் ஒருங்கிணைப்புமூலம் வழங்கப்படுகிற நிதியும் உள்ளடங்கும். அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 4.1

வீடு ஒன்றிற்கு தமிழ்நாட்டில் வழங்கப்படும் தொகை விவரம்

(ரூபாயில்)

விவரம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மொத்தம்
அலகுத் தொகை	72,000	48,000	1,20,000
மாநில அரசின் கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கான கூடுதல் நிதி	—	1,20,000	1,20,000
தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு	7,200	4,800	12,000

2023 மார்ச் 30]

விவரம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மொத்தம்
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம்	*25,290*	—	*25,290*
மொத்தம்	*1,04,490*	*1,72,800*	*2,77,290*

4.2.4 முக்கிய அம்சங்கள்

- *வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும். இது சுகாதாரமாக சமைப்பதற்கான பகுதியையும் உள்ளடக்கியது.*
- *பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கும், 40% இதர பிரிவினருக்கும் ஒதுக்கப்படுகிறது (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு வழங்கப்படும் 15% இதில் அடங்கும்). அனைத்து பிரிவுகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 5% ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.*
- *2019-20 வரை சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு-2011 புள்ளிவிவரங்களிலிருந்து பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்ட வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல், நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலிலிருந்து பயனாளிகள் கிராம சபைமூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.*
- *2021-22 ஆம் ஆண்டுக்கான வீடுகள் ஆவாஸ் பிளஸ் பட்டியலில் இருந்து அனுமதிக்கப்பட்டு வருகிறது.*
- *பயனாளிகளுக்கு வழங்கப்படும் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.*

[2023 மார்ச் 30

அட்டவணை 4.2

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள்

வருடம்	இலக்கு	அனுமதிக்கப் பட்டவை	முடிவுற்றது			நிலுவை	அனுமதிக்கப் பட்ட வீடுகளில் முடிவுற்ற வீடுகள் சதவீதம் (%)
			31.03.22 வரை	01.04.22 முதல் 24.03.23	மொத்தம்		
2016-17	176338	176338	145065	6195	151260	25078	85.78
2017-18	130214	130214	100268	6745	107013	23201	82.18
2018-19	21000	21000	13927	1902	15829	5171	75.38
கூட்டுத் தொகை	**327552**	**327552**	**259260**	**14842**	**274102**	**53450**	**83.68**
2019-20	200000	187183	76352	32275	108627	78556	58.03
2021-22	289887	265409	31	117470	117501	147908	44.27
கூட்டுத் தொகை	**489887**	**452592**	**76383**	**149745**	**226128**	**226464**	**49.96**
பெரு மொத்தம்	**817439**	**780144**	**335643**	**164587**	**500230**	**279914**	**64.12**

(மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நிலுவையில் உள்ள அனைத்து வீடுகளும் 31.12.2023-க்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.)

4.2.5 பெறப்பட்ட நிதி விவரம் (2022-23)

நடப்பு நிதியாண்டில், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் நாளதுவரை ரூ.2,492.90 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட தொகையில், திட்ட பயன்பாட்டிற்காக ரூ.2,430.89 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.667.46 கோடி விடுவிக்கக்கோரி ஒன்றிய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

2023 மார்ச் 30]

4.2.6 வீடுகளைத் துரிதமாக கட்டி முடிக்க 2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் பணிகளைத் துரிதப்படுத்த கீழ்க்காணும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

i நிலுவையிலுள்ள வீடுகளை விரைவாக கட்டி முடித்திடும் பொருட்டு 200 வீடுகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் தொழில்நுட்பப் பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

ii. வருவாய்த் துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாநில பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நிலமற்ற 98,923 பயனாளிகளில், 14,235 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

iii. பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஏழைப் பயனாளிகளின் நியாயமான குறைகளை விரைவில் தீர்க்கும் வண்ணம் இயக்கக அளவில் ஒரு குறைதீர்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

iv. கள அளவில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளைக் கூர்ந்து கண்காணித்திட கைபேசி செயலி (Mobile App) உருவாக்கப்பட்டுள்ளது.

v. கைப்பேசி செயலிமூலம் ஒவ்வொரு வீட்டின் அன்றாடப் பணி முன்னேற்றத்தைக் கண்காணித்திடும் வகையில் 13,550 ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

vi. கான்கிரீட் மேற்கூரைக்கான செலவினத்தினைக் கண்காணிக்கவும், அத்தொகை பயனாளிகளுக்கு சரியான நேரத்தில் விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் மாநில அளவில் வங்கிக் கணக்கு (SNA) ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.2.7 வீடுகள் கட்டுவதில் பின்பற்றப்படும் மாற்று கட்டுமான தொழில்நுட்பங்கள்

வீடுகளைக் குறைந்த செலவில் விரைந்து முடித்திட ஏதுவாக, எக்ஸ்பேண்டட் பாலிஸ்டிரீன் பேனல்கள், இன்டர்லாக் ப்ரிக்ஸ், ஆடோகிளேவுட் ஏரேடட் கான்கிரீட் ப்ளாக்/பேனல்கள், ப்ளை ஆஷ் ப்ரிக்ஸ், ரேட் ட்ரேப் பாண்ட் உடன் கூடிய ஃபில்லர் ஸ்லாப் போன்ற பல்வேறு புதிய/மாற்று தொழில்நுட்பங்களை வீடுகள் கட்டுவதற்கு இத்துறை பின்பற்றி வருகிறது.

4.3 ஜல் ஜீவன் இயக்கம்

ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கிடும் வகையில் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கும் நோக்கத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் 2019-20 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல்மூலம் வலுப்படுத்துதல், மறுபயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

4.3.1 திட்ட மூலதனத்தில் சமூகப் பங்களிப்பு

ஜல் ஜீவன் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த, மலைவாழ்/ வனப் பகுதிகள் & 50% மற்றும் அதற்கு மேல் ஆதி திராவிடர்/ பழங்குடியின மக்களைக் கொண்ட கிராமங்களில், திட்ட மூலதன தொகையில் 5% மற்றும் இதர கிராம ஊராட்சிகளில் 10% பணமாகவோ/பொருளாகவோ/உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூகப் பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

4.3.2 ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

i) ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கிடத் தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக நீண்ட காலத்திற்கு தொடர்ந்து குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

2023 மார்ச் 30]

iii) *ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சீராக குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக குறைவான அளவு நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள்மூலம் தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.*

iv) *முடிவுற்ற மற்றும் தற்போது நடைபெற்றுவரும் தனி கிராம மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல்.*

4.3.3 நிதிப் பங்களிப்பு

ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) பங்களிப்பாக வழங்கும். இருப்பினும், ஆதரவு மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதிப் பகிர்மான முறை 60:40 ஆகும்.

4.3.4 செயல்படுத்தும் முறை

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.

ஒற்றை கிராம திட்டத்தில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்குள் இருந்தால் திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றையும், இதேபோன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டத்தில், கிராம உட்கட்டமைப்பு பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டமிட்டு செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீரினை வழங்க பல் கிராம திட்டங்களை செயல்படுத்துகிறது.

4.3.5 இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- *மூன்றாம் தரப்பு ஆய்வு மற்றும் தரம் மதிப்பீடு செய்தல்.*

- *விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் தொடர்ச்சியாக சீரான குடிநீர் வழங்குதல் ஆகியவற்றைக் கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.*

- *ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின்மூலம் குடிநீர் விநியோக செயல்பாடு, பணிகளை நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவற்றைக் கண்காணித்தல்.*

- *கள ஆய்வு உபகரணங்களின்மூலம் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு நீரின் தரம் பரிசோதிக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.*

4.3.6 இயக்குதல் மற்றும் பராமரித்தல்

குடிநீர் வழங்கல் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும்.

i. *குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.30/- வசூலிக்கப்பட்டு வருகிறது.*

ii. *அரசால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த நீர் பரிமாற்ற கட்டணம் சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.*

iii. *ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் நடைபெறும் குடிநீர் வழங்கல் பணிகளை கிராம குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரக் குழுவும் (VWSC), கிராம ஊராட்சியும் கண்காணிக்கின்றன.*

4.3.7 15-வது ஒன்றிய நிதிக் குழு மானியம் மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

கிராம ஊராட்சிகளில் பல்வேறு திட்டங்களின்மூலம் அதாவது, 15-வது ஒன்றிய நிதிக் குழு மானியதின் வரையறுக்கப்பட்ட நிதி (30%), மாநில நிதிக் குழு மானியம், மாவட்ட கனிமவள நிதி மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2023 மார்ச் 30]

அட்டவணை 4.3

2021-22 & 2022-23 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் பணிகள் விவரம்

வ. எண்	திட்டம்	எடுக்கப்பட்ட பணிகள்		முடிக்கப்பட்ட பணிகள்	
		எண்ணிக்கை	தொகை (ரூ.கோடியில்)	எண்ணிக்கை	தொகை (ரூ.கோடியில்)
1.	ஜல் ஜீவன் இயக்கம்	18510	2558.59	15427	1595.42
2.	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	1930	104.01	972	45.90
3.	பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	115	8.03	34	1.49
4.	ஒன்றிய நிதிக்குழு மானியம் (30% வரையறுக்கப்பட்ட நிதி)	47878	2311.94	31507	1347.51
5.	நமக்கு நாமே திட்டம்	146	11.30	70	4.71
6.	மாநில நிதிக் குழு மானியம்	23382	695.06	10518	254.84
	மொத்தம்	91961	5688.93	58528	3249.87

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் மொத்தமுள்ள 1,25,51,754 வீடுகளில் நாளதுவரை 78,92,962 வீடுகளுக்கு செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ஊரக பகுதிகளிலுள்ள 79,395 குக்கிராமங்களுள் 31,832 குக்கிராமங்களிலுள்ள (40 சதவீதம்) அனைத்து வீடுகளுக்கும் செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில், 24.3 இலட்சம் வீடுகளுக்கு ரூ.3,307 கோடி

மதிப்பீட்டில் செயல்பாட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.3.8 முன்னோடி அடிப்படையில் குடிநீர் வழங்கல் அமைப்பினைக் கண்காணித்தல்

தானியங்கி சென்சார் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின்மூலம் மின்சார சிக்கனம் மற்றும் சிறந்த முறையிலான பொது குடிநீர் வழங்கல் அமைப்புகள் மேம்படுத்தப்படுகிறது. மோட்டரின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதன்மூலம் குடிநீர் வீணாவது தடுக்கப்படுகிறது. பின்வரும் ஊராட்சிகளில் முன்னோடி முறையில் சென்சார் அடிப்படையிலான தானியங்கி கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன:

வ. எண்.	மாவட்டம்	ஊராட்சி
1.	செங்கல்பட்டு	மாம்பாக்கம்
2.	காஞ்சிபுரம்	மருதூர்
		மேல்கதிர்பூர்
3.	திருவள்ளூர்	அழிஞ்சிவாக்கம்
		மல்லியன்குப்பம்
4.	ஈரோடு	கதிரம்பட்டி
5.	கோயம்புத்தூர்	அரசூர்

குடிநீர் வழங்குதலில் தானியங்கி கண்காணிப்பு அமைப்பு படிப்படியாக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

4.3.9 குடிநீர் தரத்தினை கண்காணித்தல்

ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் கள ஆய்வுக் கருவிகளை கொண்டு குடிநீரின் தரத்தினை, பரிசோதனை செய்வதற்காக 62,625 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பரிசோதனையில் 13 வகையான காரணிகள் அதாவது கார-அமிலத் தன்மை, மொத்த கலங்கியுள்ள திடப்பொருட்கள், கலங்கல்தன்மை, குளோரைடு, மொத்த காரத்தன்மை, மொத்த கடினத்தன்மை, சல்ஃபேட், இரும்பு, மொத்த ஆர்செனிக், ஃப்ளோரைடு, நைட்ரேட், மொத்த

2023 மார்ச் 30]

கொலிபோம் பாக்டிரியா, இ.கோலி பாக்டிரியா ஆகியவை பரிசோதிக்கப்படுகின்றன.

குடிநீர் வழங்கல் செயல்பாட்டில், சிறந்த செயல் திறனுக்காக 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியன்று புது தில்லியில் நடைபெற்ற ஸ்வச் பாரத் திவாஸ் விழாவின்போது மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாடு கௌரவிக்கப்பட்டது.

4.4 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது 1993 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் தேவைகளின் அடிப்படையில் நீடித்த சமூகச் சொத்துகளை உருவாக்குவதை வலியுறுத்துவதன்மூலம் வளர்ச்சித் தன்மை கொண்ட பணிகளைப் பரிந்துரைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.5 கோடி வீதம் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஒரு தொகுதிக்கு தலா ரூ.5 கோடி வீதம் ஒன்றிய அரசால் 2022-23 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டச் செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் 'எடுத்துச் செய்யக்கூடிய பணிகள்' குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள்' குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில், 1,269 பணிகளும், 2022-23 ஆம் ஆண்டில், 1,139 பணிகளும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.5 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின்

திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி அந்த கிராமங்களை மாதிரி கிராமங்களாக மாற்றி, அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப் பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள்தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும், மலைப்பகுதி/பழங்குடி கிராமங்கள் மற்றும் சவாலான பகுதிகள் எனில் மக்கள்தொகை 1,000 முதல் 3,000 வரை உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராம ஊராட்சியே இதன் அடிப்படை அலகாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது அல்லது தனது மனைவியின்/ கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புர தொகுதியைப் பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன்படி 2024 ஆம் ஆண்டிற்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

நாடாளுமன்ற மாதிரி கிராமத் திட்டத்தின்கீழ் கண்டறிந்த கிராம ஊராட்சிகளின் முழுமையான வளர்ச்சிக்கு நடைமுறையில் உள்ள ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்கள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

4.6 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

4.6.1 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III

மாநில அரசால், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் I மற்றும் II முடிக்கப்பட்டு, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் III (2019-2025) செயல்படுத்தப்பட்டு வருகிறது. குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன்

2023 மார்ச் 30]

இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். 7,375 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு, 2019-20 ஆண்டு முதல் 2022-23 ஆம் ஆண்டு வரை 4,449 கி.மீ. நீளமுள்ள 1,154 சாலைப்பணிகள் மற்றும் 55 பாலங்கள் ரூ.2,883 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, 2,926 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவினை ஒன்றிய அரசிற்கு விரைவில் சமர்ப்பிக்கும். பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் தொடக்கத்தில் ஒன்றிய அரசின் 100% நிதியுடன் செயல்படுத்தப்பட்டது, பின்னர் 2015ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பகிர்வு 60:40 என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

4.6.2 பராமரிப்பு

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் சாலைகளின் 5 ஆண்டு தொடர் பராமரிப்பு இமார்க் (eMARG) எனப்படும் இணைய முகப்பின்மூலம் கண்காணிக்கப்படுகிறது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்ட சாலைகளின் தொடர் பராமரிப்பிற்கு, 2021-22 ஆம் ஆண்டில் ரூ.41.46 கோடியும் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.52.68 கோடி நிதியும் மாநில அரசின்மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.6.3 தரக் கட்டுப்பாடு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக் கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்பு பொறியாளர் (தரக் கட்டுப்பாடு) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs) பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக் கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக் கட்டுப்பாட்டு பயிற்சிகள் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகின்றன.

தற்போது சாலைப் பணிகள் மற்றும் திட்டப் பணிகளின் தரத்தினைக் கண்காணிக்க 30 மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (சாலைகள்) மற்றும் 15 மாநில தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (திட்டங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

4.6.4 தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

அனைத்து மாவட்டங்களிலும், தரக் கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ள மாவட்ட அளவிலான தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் துறையின்மூலம் நிறுவப்பட்டுள்ளன. மேலும், பணித்தளத்தில் பணி நடைபெறும்பொழுதே தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ள 7 நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. தள ஆய்வின்போது பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய துறை அலுவலர்களின் வாகனங்களிலும் அடிப்படை தரக் கட்டுப்பாட்டு கருவிகள் உள்ளன. அனைத்துப் பணிகளுக்கும் தரக் கட்டுப்பாட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. தர ஆய்வாளர்கள்/சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள்/உதவி செயற்பொறியாளர்களின் திருப்திகரமான தரக் கட்டுப்பாட்டு ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மட்டுமே பணிகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது.

4.7 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை 2019 ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டன. கிராமச் சுகாதார இயக்கமானது இரு நிலைகளாக செயல்படுத்தப்படுகிறது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் பொது சுகாதார கழிப்பறைகள் கட்டுவதை பிரதான நோக்கமாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் முதல் நிலையாக செயல்படுத்தப்பட்டது. தூய்மை பாரத இயக்கம் இரண்டாம் நிலை, 2020-21 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டுவரை, தூய்மை பாரத இயக்கம், முதல் கட்ட செயல்பாடுகள் மூலமாகப் பெற்ற ஆதாயங்களைத் தக்கவைத்து மேலும் மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. தமிழ்நாடு 2019 ஆம் ஆண்டு திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற

2023 மார்ச் 30]

*நிலையை அடைந்துள்ளது. ஊரகப் பகுதிகளில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தக்கவைத்தல் மற்றும் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை செயல்பாடுகள் மூலமாக கிராமங்களில் தூய்மை நிலையை மேம்படுத்துவதோடு அதனை தக்க வைக்கும் (*ODF Plus*) கிராமங்களாக்குவதும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை* II-*ன் முக்கிய நோக்கமாகும்.*

*திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதுடன் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையுடனும் காட்சிக்குத் தூய்மையான கிராமங்களே மாதிரி கிராமங்கள் ஆகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை-*II-*ன் செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை நீங்கலாக இத்திட்டத்தின் இதர கூறுகள் அனைத்தும் 15-வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.*

4.7.1 கிராம சுகாதார செறிவிற்கான திட்டமிடல்

*தனிநபர் இல்லங்கள் மற்றும் நிறுவனங்களில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துவதிலும் மற்றும் கழிப்பறைகள் பயன்பாட்டிலும் சமீப காலங்களில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஒரு கிராமம் முழுமையான தூய்மைக்கான இடைவெளிகளைக் கண்டறிதல், அவற்றை அடைதல் மற்றும் ஊராட்சியின் தூய்மை நிலையை மேம்படுத்துவதன்மூலம் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கூடுதல் நிலையை (*ODF-plus*) அடைவதில் "ஆர்வமுள்ள ஊராட்சி" நிலையிலிருந்து "மாதிரி ஊராட்சியாக" மாற ஏதுவாகும். விரிவான மற்றும் முழுமையான மதிப்பீடு செய்வதன்மூலம் தற்போதைய சுகாதார வசதிகள், குடும்ப மற்றும் சமூக அளவில் தேவைப்படும் சுகாதார வசதிகள் ஆகியவை ஒவ்வொரு கிராம ஊராட்சி வாரியாக கணக்கிடப்படுகிறது.*

திட மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை தேவைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்து, தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையை மதிப்பீடு செய்வதற்கும், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மக்கள், தெரு வாரியாக நடைபயணங்களை மேற்கொண்டதன்மூலம் 'கிராம சுகாதார செறிவு திட்டத்தை' தயாரிக்கும் பணியை அரசு மேற்கொண்டது. கிராம சுகாதார செறிவு திட்டம் இறுதி செய்யப்பட்டவுடன், அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில், தூய்மை பாரத

இயக்கம் (ஊரகம்) நிதியிலிருந்தும், பிற திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் 15-வது ஒன்றிய நிதிக் குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. தூய்மை மற்றும் பசுமையான மாநிலத்தை உருவாக்க, திடக்கழிவு மற்றும் சாம்பல் நீர் மேலாண்மை ஆகியவற்றை எய்துவதன்மூலம் நிலையான சாதனையை செயல்படுத்துவதற்கு கீழ்மட்ட அணுகுமுறை மற்றும் தேவைகள் அடிப்படையிலான திட்டமிடலை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

4.7.2 தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறையானது அடித்தளம், மேற்கட்டமைப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன்மூலம் முறையான சுகாதாரப் பராமரிப்பு உறுதி செய்யப்படுகிறது. கண்டறியப்பட்ட தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானத்திற்காக ரூ.12,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில், மொத்தம் 19,156 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் ரூ.22.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

4.7.3 சமுதாய சுகாதார வளாகங்கள் (CSC)

திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையுடன் கூடுதல் நிலை (ODF plus) கிராமத்தில், அந்த கிராமத்தைக் கடந்து செல்லும் மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறைந்தபட்சம் ஒரு சமூக சுகாதார வளாகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமூக சுகாதார வளாகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே தேவையான எண்ணிக்கையிலான கழிப்பறை வசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு கழிப்பறை இருக்கைகள், குளியல் அறைகள், கை அலம்பும் தொட்டி போன்றவை இருக்கும். கிராமத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அது அமைக்கப்பட வேண்டும். 2022-23 ஆம் ஆண்டில், மொத்தம் 491 சமூக சுகாதார வளாகங்கள் ரூ.31.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

2023 மார்ச் 30]

4.7.4 திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை

தூய்மை பாரத இயக்கத்தில் (ஊரகம்) திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முக்கிய கூறுகளில் ஒன்றாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம்-II-ன்கீழ் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக உதவி, மக்கள் தொகை தனிநபர் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது. மேலும், 15-வது நிதிக் குழு மானியங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திடக்கழிவு மேலாண்மை

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள 66,130 தூய்மைக் காவலர்கள் வீடு வீடாக குப்பைகளைச் சேகரிக்கின்றனர். 150 வீடுகளுக்கு ஒரு தூய்மைக் காவலர் என பொறுப்பாக்கப்பட்டுள்ளார். அனைத்து ஊராட்சிகளிலும் 'கழிவு தணிக்கை' நடத்தப்பட்டு, அந்தந்த ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவு வகைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மொத்தத்தில், 70%-க்கும் அதிகமான கழிவுகள் மக்கும் கழிவுகள் ஆகும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, குப்பைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து அளிப்பதன்மூலம் குப்பைகளை எளிதில் உரமாக மாற்ற முடியும். புறநகர்/பெரிய கிராம ஊராட்சிகளில் உருவாகும் திடக்கழிவுகளைத் திறம்பட நிர்வகிக்க, 287 நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(ஆ) நெகிழிக் கழிவு மேலாண்மை

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை-II-ன்கீழ், வட்டார அளவில் நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகளை நிறுவ ரூ.16.00 இலட்சம் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும் நெகிழிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. பேவர் பிளாக்ஸ் மற்றும் பூங்கா பெஞ்சுகள் போன்ற பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க சுய உதவிக் குழுக்களுக்கு வசதி செய்து தரப்படும். வீடுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக்கைப் பிரித்து வைப்பதை ஊக்குவிக்க, நேரடி நெகிழி மீள வாங்கும் திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அத்தகைய மையங்கள் கிராம ஊராட்சிகளில் நிறுவப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 98 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டன.

(இ) சாம்பல் நீர் மேலாண்மை

ஒரு வட்டாரத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம் மொத்தம் 776 கிராம ஊராட்சிகள் 'மாதிரிகள்' உருவாக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. சாம்பல் நீர் மேலாண்மையின்கீழ், கிராம ஊராட்சிகளை தன்னிறைவு செய்யும் வகையில், கிராம சுகாதார தன்னிறைவு திட்டத்தின்கீழ் விரிவான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சாலைகள்/தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவுநீர் தேங்குவதைத் தடுக்கவும், கழிவுநீரைத் திறம்பட கையாளுவதை உறுதி செய்யவும், சமுதாய உறிஞ்சுக் குழிகள் மற்றும் கிடைமட்ட/செங்குத்து வடிகட்டிகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை-II இன்கீழ் 15-வது நிதிக் குழு மானியத்துடன் ஒன்றிணைந்து கட்டப்படுகின்றன.

(ஈ) மலக்கசடு மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்கெனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு (FSTP) வசதிகளில் கிராமப்புறங்களின் மலக்கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் நகர்ப்புற பகுதிகளுடன் தொகுப்பு விவரணை (மேப்பிங்) நடத்தப்பட்டது. 9,344 கிராம ஊராட்சிகள் நான்கு கட்டங்களில் செலவுப் பகிர்வு அடிப்படையில் அருகாமையில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களுடன் தொகுப்பு செய்யப்படும். தொகுப்பு செய்வது சாத்தியமில்லாத இடங்களில், விடுபட்ட கிராம ஊராட்சிகளை விவரணை செய்து, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை-II-ன்கீழ், மலம் கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

4.7.5 தகவல்-கல்வி-தகவல்தொடர்பு பிரச்சாரங்கள்

சுய உதவிக் குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 12,000 ஊக்குவிப்பாளர்களுக்கு நேரடி தகவல் பரிமாற்றத்தின்மூலம் பொது மக்களிடையே சிறந்த சுகாதார பழக்கங்களை ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

2023 மார்ச் 30]

4.7.6 'நம்ம ஊரு சூப்பரு' பிரச்சாரம்

'நம்ம ஊரு சூப்பரு' பிரச்சாரம் ஆகஸ்ட் 15, 2022 அன்று தொடங்கப்பட்டு, அக்டோபர் 2, 2022 வரை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டது. மக்களின் மனமாற்றத்தின்மூலம் தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்குவதற்காக சுகாதாரம் மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் குறிப்பிட்ட கவனம் செலுத்தும், மக்கள் இயக்கத்தை உருவாக்குவதே முதன்மை நோக்கமாக இருந்தது.

பிரச்சார காலத்தில் சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள், 16,829 பொது இடங்கள், 21,775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள், 45,824 அரசுக் கட்டடங்கள்/நிறுவனங்கள், 47,949 நீர்நிலைகள், 10,011 சமூக சுகாதார வளாகம் மற்றும் 1,569.35 கி.மீ. கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டன. 13,659 பள்ளிகள் மற்றும் 343 கல்லூரிகளில் ஊக்குவிப்பாளர்கள், சுய உதவிக் குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களால் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டன. பிரச்சார காலத்தில் சுமார் 4 இலட்சம் மரங்கள் நடப்பட்டன. மனமாற்றத்தை தக்கவைத்துக் கொள்ளவும் மற்றும் தூய்மையை உறுதிப்படுத்தவும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்படும்.

4.7.7 சாண மற்றும் கரிம எரிவாயு உயிர் கலன் திட்டம்

இத்திட்டம் வேளாண் கழிவுகளை மதிப்புமிக்க வளமாக மாற்றுவதன்மூலம் கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, விலங்குகளின் கழிவுகள், சமையலறை எச்சங்கள், விவசாயக் கழிவுகள் மற்றும் சந்தைக் கழிவுகளை உயிர் எரிவாயு மற்றும் உயிரிக் கழிவாக (Bio-slurry) மாற்றுகிறது. இந்தத் திட்டம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) நிலை-II-ன்கீழ் முழுத் திட்டக் காலத்திற்கும் ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சம் வரை ஒரு முறை மானியம் வழங்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் 16 சாண எரிவாயு கலன்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமப்புற மாவட்டங்களிலும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் சாண எரிவாயு கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.7.8 இதர திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்ட நிதியை, 15-வது மத்திய நிதிக் குழு மானியம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - II, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, உருவாக்கப்பட வேண்டும்.

- **கரிமவாயு திட்டம்:** மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்தத் திட்டமானது, தனிப்பட்ட நபர்கள், விவசாயிகள், கோழிப்பண்ணைகள், கோசாலைகள், இறைச்சிக் கூடங்கள், பால் பண்ணைகள்/கூட்டுறவு நிறுவனங்கள்/தொழிற்சாலைகளுக்கு ஒரு நாளைக்கு 1 கனமீட்டர் முதல் 2,500 கனமீட்டர் உயிர் எரிவாயு உற்பத்தி செய்யும் சிறிய மற்றும் நடுத்தர உயிர் எரிவாயு கலன்களை அமைக்க நிதியளிக்கிறது. நிறுவனங்கள் மற்றும் பிற பயனாளிகளுக்கு கோரிக்கையின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

- **அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம்-II கிராமப்புற சுகாதாரம்:** மொத்த நிதியில் 10% நிதி, சுத்தமான மற்றும் பசுமையான கிராமம் எனும் இலக்கிற்கு ஒதுக்கப்படுகிறது. இதில் வடிகால் இணைப்பு மற்றும் உறிஞ்சுக் குழிகள் அடங்கும்.

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS):** தனிநபர் மற்றும் சமுதாய உறிஞ்சிக்குழிகள், கிடைமட்ட/செங்குத்து வடிகட்டிகள் மற்றும் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட சுகாதாரப் கட்டுமானப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

- **15-வது ஒன்றிய நிதி ஆணையம்:** ஒன்றிய அரசின், குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறை வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் திடக் கழிவு மேலாண்மை மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளும் 15-வது நிதிக் குழு மானியத்தில் 30% உடன் ஒன்றிணைந்து மட்டுமே எடுக்கப்பட வேண்டும்.

2023 மார்ச் 30]

4.8 ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புரங்களுக்கு இணையான வளர்ச்சியுடையதாக சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் கிராமங்கள்" உருவாக்குதல் ஒன்றிய அரசின் ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தின் நோக்கமாகும் .

தமிழ்நாட்டிற்கு 11 பழங்குடியினர் அல்லாத தொகுப்புகள் 2016-17 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் படிப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில் (2016-17)-ஐந்து தொகுப்புகள் (திருநெல்வேலி-சுத்தமல்லி, கோயம்புத்தூர்-மதுக்கரை, சிவகங்கை-வாணியங்குடி, திருப்பூர்-வேலாயுதம்பாளையம், திருவள்ளூர்-குத்தம்பாக்கம்), இரண்டாம் கட்டத்தில் (2017-18)-மூன்று தொகுப்புகள் (செங்கல்பட்டு-சிங்கபெருமாள் கோவில், மதுரை-கோவில் பாப்பாக்குடி, தஞ்சாவூர்-திருமலை சமுத்திரம்), மற்றும் மூன்றாம் கட்டத்தில் (2018-19)-மூன்று தொகுப்புகள் (கன்னியாகுமரி-சடையமங்கலம், தேனி-சீலயம்பட்டி, கிருஷ்ணகிரி-அலசபள்ளி பட்டவரபள்ளி) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இடைநிரவல் நிரப்பு நிதியின் (CGF) கீழ் எடுக்கப்பட்ட 976 பணிகளில், 847 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 129 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்த ரூ.330 கோடி ஒதுக்கீட்டில், ரூ.311.32 கோடி நிதி விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.270.70 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 143 சொத்துகளில் தற்பொழுது வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள அனைத்து பணிகளும் இவ்வருடத்திற்குள் முடிக்கப்பட்டு உருவாக்கப்படும். சொத்துக்கள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும்.

4.9 பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்பு திட்டங்கள்

பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம்

கிராம மக்கள் தொகையில் 40 சதவிகிதத்திற்கும் மேல் ஆதி திராவிடர் வாழும் கிராமங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்றிய அரசு 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில்,

இத்திட்டத்தின் கீழ் 473 கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இக்கிராமங்களில், விடுபட்ட மற்றும் தன்னிறைவு பெற தேவையான பணிகளுக்காக, ஒரு கிராமத்திற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினால் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படுகிறது. அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல், கழிப்பறைகள் கட்டுதல், இணைப்புச் சாலைகள், வடிகால் வசதி செய்தல் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் இத்திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில், 473 கிராமங்களில் 1,993 பணிகள் ரூ.94.20 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2021-22 ஆம் ஆண்டிற்கு, 22 மாவட்டங்களில் உள்ள 1,342 கிராமங்களை ஒன்றிய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கு, 36 மாவட்டங்களில் உள்ள 1,123 கிராமங்களை ஒன்றிய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. மேலும், 3 முதல் 4 மடங்கு நிதி மதிப்பிலான பணிகள் மாநில அரசின் பல்வேறு திட்டங்களின்மூலம் இக்கிராமங்களுக்கு ஒருங்கிணைத்து வழங்கப்படுகின்றன.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு

5.1 பணியமைப்பு

கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் மற்றும் கிராம ஊராட்சிகள் நிர்வாகம் மாநில மற்றும் ஒன்றிய அரசுத் திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகள் உள்ளிட்ட பணிகளைச் செயல்படுத்தும் முக்கிய துறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை விளங்குகிறது.

மாநில அளவில் 65 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், 27 பொறியாளர்கள்/தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 251 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும், மாவட்ட/இதர அலுவலகங்களில் 1,580 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள்,

2023 மார்ச் 30]

5,290 பொறியாளர்கள்/தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 98,326 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும் உள்ளனர்.

5.2 அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

இத்துறையில், மேற்கண்ட பணிகளை முறையாக திட்டமிடவும், செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 5.1

வகைவாரியான பணியாளர்கள் விவரம்

அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை		
		இயக்குநரகம்	மாவட்ட / இதர அலுவலகங்கள்	மொத்தம்
1.	கூடுதல் இயக்குநர்	8	15	23
2.	இணை இயக்குநர்	2	95	97
3.	உதவி இயக்குநர்	10	398	408
4.	வட்டார வளர்ச்சி அலுவலர்	45	1072	1117
மொத்தம்		65	1580	1645

- *கூடுதல் இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப் பணியில் 6 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.*
- *இணை இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப் பணியில் 6 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.*

5.3 பொறியியல் பணியமைப்பு

இத்துறையின் தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட பிரிவானது ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அடிப்படை வசதிகள் தொடர்பான கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதுடன் ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை செயலாக்கும் பொறுப்பினை கொண்டது.

அட்டவணை 5.2

வகைவாரியான பொறியியல் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை		
		இயக்குநரகம்	மாவட்ட/ இதர அலுவலகங்கள்	மொத்தம்
1.	தலைமைப் பொறியாளர்	2	—	2
2.	கண்காணிப்புப் பொறியாளர்	3	—	3
3.	செயற்பொறியாளர்	2	43	45
4.	உதவி செயற்பொறியாளர்	4	193	197
5.	உதவிப் பொறியாளர்	13	932	945
6.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	—	37	37
7.	இளநிலைப் பொறியாளர்	—	315	315
8.	பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர்	3	2,619	2,622
9.	சாலை ஆய்வாளர்	—	1151	1151
	மொத்தம்	27	5290	5317

- இத்துறையில் 45 செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களில் இதர துறைகளில் மாற்றுப் பணியில் 4 செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 197 உதவி செயற்பொறியாளர்கள் உள்ளனர் அவர்களில், இதர துறைகளில் மாற்றுப் பணியில் 11 உதவி செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

2023 மார்ச் 30]

- *இத்துறையில் 945 உதவிப் பொறியாளர்களும், 315 இளநிலைப் பொறியாளர்களும், 37 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,622 பணி மேற்பார்வையாளர்கள்/ இளநிலை வரைதொழில் அலுவலர்களும் 1,151 சாலை ஆய்வாளர்களும் உள்ளனர். இத்துறையில் உள்ள 945 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப் பணியில் 17 உதவிப்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.*

முதுநிலை அலுவலர்களைப் பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB), தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA), சிப்காட் (SIPCOT), தேசிய நலவாழ்வு இயக்கம் (NHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன்மூலம் இதர துறை சார்ந்த பணிகளை கற்றுக்கொண்டு, அதன்மூலம் தமது தொழிற்திறனை வளர்த்துக் கொள்ள உதவி புரிகிறது.

5.4 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அடிப்படை பணி, தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகளுக்குட்பட்ட பணியாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் அனைவரது பணிகள் இப்பிரிவின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 மார்ச் 30

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின்கீழ் மாநில அளவில் 251 பணியாளர்களும், மாவட்டங்களிலும் மற்றும் பிற அலுவலகங்களிலும் 98326 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் விவரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

அட்டவணை 5.3

அரசிதழ் பதிவுபெறாத பணியாளர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை	
		இயக்குநரகம்	**மாவட்டம் / இதர அலுவலகங்கள்**
	அரசுப் பணியாளர்கள்		
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	47	3936
2.	உதவியாளர்	49	5642
3.	இளநிலை உதவியாளர்	38	3171
4.	சுருக்கெழுத்து தட்டச்சர்	17	185
5.	தட்டச்சர்	26	1054
6.	ஓட்டுநர்	11	934
7.	பதிவுரு எழுத்தர்	7	149
8.	அலுவலக உதவியாளர்	54	670
9.	இரவுக் காவலர்	2	135
10.	மசால்சி	0	14
	மொத்தம்	251	15890

2023 மார்ச் 30]

உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்		
அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்		
1.	ஓட்டுநர்	776
2.	பதிவுரு எழுத்தர்	390
3.	அலுவலக உதவியாளர்	1533
4.	இரவுக் காவலர்	380
5.	மசால்சி	9
மொத்தம்		3088
ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்		
1.	ஊராட்சி செயலர்	12525
2.	தூய்மைப் பணியாளர்	26404
3.	மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்	40419
மொத்தம்		79348

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி அலுவலங்களுக்கு புதியதாக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி அலுவலகங்களுக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன.

அட்டவணை 5.4

வ. எண்.	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்
1.	மாவட்ட ஊராட்சி செயலர்	5
2.	உதவியாளர்	5
3.	இளநிலை உதவியாளர்	5
4.	ஓட்டுநர்	5
5.	அலுவலக உதவியாளர்	5
	மொத்தம்	25

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

6. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

6.1 திறன் மேம்பாடு

அரசுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர்களின் திறமை, அறிவுத்திறன், ஆக்கத்திறன் ஆற்றல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் மிகவும் அவசியமாகும். அவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி என்பது மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துவதுடன், திறம்பட்ட செயல்பாட்டின்மூலம் அரசுத் திட்டங்களின் வெற்றியை உறுதி செய்கிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று நிறுவனங்களின்மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

அட்டவணை 6.1

வ. எண்.	நிறுவனங்களின் பெயர்		எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	
I	மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்		அனைத்து மாவட்டங்கள்	
II	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்			
	நிறுவனங்களின் பெயர்	தலைமை இடம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்	துவங்கப் பட்ட ஆண்டு	எல்லைக்குட் பட்ட மாவட்டங்கள்
	சத்திய விஜய நகரம்	திருவண்ணா மலை	1956	செங்கல்பட்டு, கடலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் (7 மாவட்டங்கள்)
	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	1958	தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ராணிப் ப்பேட்டை, சேலம், திருப்பத்தூர், வேலூர் (7 மாவட்டங்கள்)

2023 மார்ச் 30]

வ. எண்.	நிறுவனங்களின் பெயர்		எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	
	பட்டுக் கோட்டை	தஞ்சாவூர்	1954	மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர் , திருச்சிராப்பள்ளி (7 மாவட்டங்கள்)
	பவானிசாகர்	ஈரோடு	1972	அரியலூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், நீலகிரி, பெரம்பலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்)
	தே.கல்லுப்பட்டி	மதுரை	1948	கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், தென்காசி, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் (8 மாவட்டங்கள்)
III	ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)	அனைத்து மாவட்ட தலைமையகத்தில் தலா ஒன்று (36 எண்கள்)		

6.1.1 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், இந்நிறுவனமானது, ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் உள்ள ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவு, திறன் மேம்பாடு மற்றும் நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன்மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை அளிக்கின்றது. மேலும் பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு படிப்புகளுக்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தலும்

இந்நிறுவனத்தின் பொறுப்பாகும். மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

6.1.2 பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பல்வேறு பயிற்சிகளை அளிக்க, தேசிய கிராம சுயாட்சி திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில நிதிக் குழு மூலமாக ஒன்றிய, மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறுகிறது.

உட்கட்டமைப்பு உபகரணங்கள் வசதிகள் கொள்முதல் மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்காக ஒவ்வொரு வருடமும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்மூலம் தொடரா செலவினத்தில் 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

6.2 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மையங்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் நான்கு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. ஊராட்சி நிர்வாக மையம்/மாநில ஊரக வள மையம்.
2. ஊரக வளர்ச்சித் திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரகத் தொழில் நிறுவன மேம்பாட்டு மையம்.
4. ஊரகப் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம்

2023 மார்ச் 30]

6.3 பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன்கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள். களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவப் பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைப்பிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

6.4 பயிற்சி செயல்திறன்

2022-23 இல், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்மூலம் 85 பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 8,065 பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்றனர். மேலும் இணையவழி வகுப்பாக 85,486 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு தேசிய அளவிலான நிறுவனங்களான இந்திய நிர்வாக பணியாளர்கள் கல்லூரி மற்றும் ஊரக மேலாண்மை நிறுவனம், ஆனந்த், குஜராத், இந்திய பணியாளர்கள் நிர்வாக கல்லூரி (ASCI) போன்ற நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1,000 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகளில் 707 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியானது ஜூன் 2023-ல் நிறைவடையும்.

6.5 மறு சீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RRGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும், உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும், ஒன்றிய அரசால் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம் 2022 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மக்கள் பங்கேற்புடன்கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களைத் திறமையாக பயன்படுத்தி உள்ளூர்மயமான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் (LSDGs) தொடர்புடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030–க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

[2023 மார்ச் 30

6.5.1 நிதி ஒதுக்கீடு

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RRGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதித் தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப் பிரிவு, ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (1.5%) ஆகியவற்றிற்கு நிதி அளிக்கிறது.

2023-2024 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தில் 9 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்குதலுக்கு (LSDGs) தேவையான அனைத்து பயிற்சிகள் வழங்க சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

6.6 இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம்-சென்னை, காந்தி கிராமம் ஊரக நிறுவனம், குஜராத் மாநிலம், ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மெட்ராஸ் சமூகப் பணிகள் பள்ளி, தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனங்களோடு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, களவேலைகள், வெளியீடுகள், ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும். தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும். பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்தாய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

2023 மார்ச் 30]

6.7 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின்கீழ் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

6.8 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கம் மற்றும் கையேடுகளின் அடிப்படையில், அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 6,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சமாக 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்கின்றது.

2022-23 ஆம் ஆண்டில், 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் 154 பயிற்சிகள் நடத்தியதில், 58,584 நபர்கள் பயிற்சி பெற்றனர்.

6.8.1 நிதி ஆதாரங்கள்

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது. ஒன்றிய அரசு, ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும், ஒவ்வோர் ஆண்டும் பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை

[*2023 மார்ச் 30*

மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்தின்கீழ் நிதியினை வழங்குகிறது. மேலும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு, மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டம், மாநில நிதிக் குழு மானியம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய திட்டங்களில் நிதியுதவி பெறப்படுகிறது.

6.9 ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCPs)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள், ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகிய ஊராட்சிப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்களில் ஒன்பது கருப்பொருளில் மாவட்ட கீழ்நிலை அளவில் அலுவலர்கள் மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு, 79,368 பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

7. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் (LSDGs)

2023 மார்ச் 30]

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை 2030 ஆம் ஆண்டுக்குள் அடைவதை நோக்கிய தமிழ்நாட்டின் பயணத்தில், குறிப்பாக ஊராட்சி அளவில் ஒருங்கிணைத்து, சாத்தியமான முயற்சிகளை மேற்கொள்ள மாநிலத்தை வழிநடத்திச் செல்வதில் ஒரு முக்கியப் பங்காளராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முன் நிற்கிறது. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் அரசின் முக்கியமான படிநிலையாகவும், திறன் வாய்ந்த நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சி இலக்குகளை கிராம அளவில் சாதனை ஆக்குவதுமே ஆகும். கிராம ஊராட்சியே, அனைத்து திட்டங்களும், நடைமுறைகளும், கொள்கை குறிக்கோள்களும், ஒருங்கமையும் இடமாகவும், நிலையான வளர்ச்சி இலக்குகளை வெல்வதற்கான ஒரு பொது மேடையாகவும் விளங்குகிறது. எனவே, ஒன்றிய அரசின் பஞ்சாயத் ராஜ் அமைச்சகம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊராட்சி அளவில் சாத்தியப்பட்ட 9 கருப்பொருட்களாக ஒருங்கிணைத்துள்ளது.

7.1 வறுமையில்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி

அட்டவணை 7.1

கருப்பொருள்	**தொடர்புடைய இதர துறைகள்**	**தொடர்புடைய திட்டங்கள்**
வறுமையில்லாத மேம்படுத்தப்பட்ட வாழ்வாதாரம் கொண்ட கிராம ஊராட்சி	• *வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை* • *மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை*	• *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)* • *அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - II*

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
	• வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை • தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை • கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை • மாற்றுத் திறனாளிகள் நலத் துறை • குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (MSME) • கைத்தறி, கைத்திறன் துணிநூல் (ம) கதர்த் துறை • ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	• கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP) • தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) • தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) • பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம் (PMAY-G) • முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் • முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) • பொது விநியோகத் திட்டம் • புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) • வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

2023 மார்ச் 30]

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
		• திறன் மேம்பாட்டுப் பயிற்சி – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (MSME), வேளாண்மை, தோட்டக்கலை, ஆதி திராவிடர் / பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் போன்றவை.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்—II, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP), தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU—GKY), தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (DAY—NRLM) போன்ற திட்டங்கள் மூலமும் மகளிர் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வறுமை ஒழித்திட, மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பினை ஊராட்சி அளவில் ஏற்படுத்திட பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், வயது முதிர்ந்தோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு பிற துறைகளின் திட்டங்கள்மூலம் சமூக பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. உணவுப் பாதுகாப்பு, பொது விநியோகத் திட்டம்மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, வாய்ப்புகளை உருவாக்கிட திறன் பயிற்சிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் (TAHDCO)மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அரசு தொடர்ந்து "அனைவருக்கும் வீடு" என்பதற்கு முன்னுரிமை அளித்து "குடிசையற்ற தமிழ்நாடு" என்பதை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதற்கு முன்னோடியாக அனைத்து ஊராட்சிகளிலும், விளிம்புநிலை

[2023 மார்ச் 30

மக்கள் பயன்பெறும் வகையில் அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு, கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முழுமையான, விரிவான கிராம வளர்ச்சி திட்டத்தைத் தயாரிக்க கிராம ஊராட்சிக்குத் தேவையான திறன் மேம்பாட்டை இத்துறை பலப்படுத்துகிறது. ஏழை மற்றும் விளிம்புநிலை மக்களின் தேவைகள் மற்றும் வசதிகளை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புமூலம் தயாரிக்கும் கிராம வறுமை ஒழிப்புத் திட்டத்தின்மூலம் பதிவு செய்வது உறுதி செய்யப்படுகிறது.

அட்டவணை 7.2

7.2 நல்வாழ்வு கிராம ஊராட்சி

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
நலவாழ்வு கிராம ஊராட்சி	• மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை • சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை • மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	• ஜல் ஜீவன் இயக்கம் (JJM) • தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) SBM (G) • அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் — II • மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் • முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் • மக்களைத் தேடி மருத்துவம்

2023 மார்ச் 30]

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
		• டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு மருத்துவத் திட்டம் • ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) • ஊட்டச் சத்து இயக்கம் 2.0 (போஷன் அபியான் 2.0) • ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம் (RBSK) • பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) • ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் • ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி/மாநில நிதிக் குழு மானிய நிதி போன்றவை

பெருந்தொற்று காலத்தில் கிராம ஊராட்சிகள் மக்கள் நலன் மற்றும் சுகாதாரம், பல்வேறு புதிய திட்டங்கள்மூலம் மக்களின் நல வாழ்வு மற்றும் நலனை மேம்படுத்துதலை உறுதிப்படுத்தின. கிராம ஊராட்சியானது சமூகக் காரணிகளான நல்வாழ்வு, வீட்டுவசதி, சுகாதாரம், தூய்மை, சுத்தமான காற்று மற்றும் நீர் போன்றவற்றை சரிசெய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிராம ஊராட்சிகள் அடிப்படை வசதிகளான போதுமான, பாதுகாப்பான குடிநீர் அனைத்து வீடுகளுக்கும், வீட்டுக் குழாய் இணைப்புமூலம் வழங்குவதை ஜல் ஜீவன் திட்டத்தில் உறுதி செய்ய வேண்டும். தூய்மை பாரத இயக்க திட்டத்தின்கீழ் தூய்மை மற்றும் சுகாதார நடைமுறைகளை நடத்தை மாற்றத்தின்மூலம் கொண்டுவர வேண்டும். குழந்தைகள் இறப்பு விகிதம், மகப்பேறு கால மரண விகிதம் ஆகியவற்றைக் குறைக்க, மருத்துவமனைகளில் பிரசவித்தல் மற்றும் பெண்கள், கருவுற்ற தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து சவால்களை சரிசெய்வதுடன் கொசு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் இதர நடவடிக்கைகள்மூலம் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை 2030 ஆம் ஆண்டிற்குள் எய்திட வேண்டும்.

*அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் (*AGAMT—II*) கீழ், அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பால் முருங்கை மற்றும் பப்பாளி கன்றுகள் வளர்க்க ஊராட்சிகளால் முன்னுரிமை அளிக்கப்பட்டு அவ்வூராட்சியில் உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள். வளரிளம் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் உள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இச்செயல்பாடுகள் கிராம ஊராட்சியால் மேற்காள்ளப்படும் வறுமை ஒழிப்பு முயற்சி, நீடித்த வாழ்வாதார மேம்பாட்டினை அடைதல் போன்ற பணிகளுக்கு பெரும் பங்காற்றுகிறது.*

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் 11,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், பெண்கள் நலத் தொண்டர்களாக செயல்பட்டு, சமூகத்திற்கும் சுகாதாரத் திட்ட அமைப்பிற்கும் இடையே முக்கிய இணைப்பு சங்கிலியாகச் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் பொது மக்களிடையே இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஆகியவற்றை பரிசோதித்து, மருத்துவ உதவி தேவைப்படுபவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம்மூலம் மருந்துகளை வீட்டிற்கே சென்று வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம நலவாழ்வு மற்றும் சுகாதாரக் குழுக்கள் அவ்வூராட்சியில் நோய்களால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ள மற்றும் விளிம்புநிலை மக்களைக் கண்டறிந்து அவர்களின் உடல்நிலையைக் கண்காணித்து, அவ்வூராட்சிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் முறையே செயல்படுத்தப்படுவதையும், அதன் நன்மைகள் முறையே இலக்கு மக்களை அடைவதையும் உறுதி செய்திட வேண்டும். இதன்மூலம் அவ்வூராட்சி நலவாழ்வு ஊராட்சி என்ற நிலையை அடைய முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

2023 மார்ச் 30]

7.3 குழந்தைகள் நேய கிராம ஊராட்சி

அட்டவணை 7.3

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
குழந்தைகள் நேய கிராம ஊராட்சி	• மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை • பள்ளிக் கல்வித்துறை • சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை	• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் • குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (CFSIDS)
	• தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை • இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	• ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) • சர்வ சிக்சா அபியான் (SSA) • இல்லம் தேடி கல்வி • பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் • கேலோ இந்தியா • போஷன் அபியான் 2.0 • காலை சிற்றுண்டி திட்டம்/ சத்துணவுத் திட்டம் • ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி போன்றவை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

கிராம ஊராட்சிகள் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதியளிக்கக் கூடிய அமைப்பாக உள்ளது. சிசுக்கொலை, ஊட்டச்சத்து குறைபாடுகள், கல்வி, குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம் போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் முன்னின்று வழிநடத்தும் அமைப்பாகவும், குழந்தைகளுக்கு அவசியமான கல்வி மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் வளர்ச்சிக்குரிய உகந்த சூழலை ஏற்படுத்திடும் அமைப்பாகவும் திகழ்ந்திட கிராம ஊராட்சிகளின் திறன் மேம்படுத்தப்படும்.

கிராம ஊராட்சித் தலைவர்/உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் பள்ளி நிர்வாகக் குழு (SMC) மாதந்தோறும் நடத்தப்படுவதன்மூலம் பாதுகாப்பான கல்வி கற்கும் சூழலை உருவாக்கி கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், கற்றல் வெளிப்பாட்டிற்கும் முக்கியப் பங்காற்றுகிறது. இத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் உணவுக் கூடங்களைப் பழுதுபார்த்திடும் பொறுப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்களிலிருந்து தகுதியான சமையலரைத் தேர்வு செய்து, காலை உணவு பரிமாறிடவும் அதனை நாள்தோறும் கண்காணித்திடும் பணிகளை மேற்கொள்வதும் கிராம ஊராட்சிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பள்ளி உட்கட்டமைப்பு திட்டங்களான பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் குழந்தை நேய அம்சமான பள்ளிக் கட்டடங்களே காட்சி வழி கற்கும் கருவியாக செயல்படுவதைக் கண்காணித்திட வேண்டும். பள்ளிகளின் தூய்மையைப் பராமரிக்க நிதிக் குழு மானிய நிதியிலிருந்து தூய்மைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஊரக நூலகங்கள் தற்போது படிப்படியாக பழுதுபார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன. கல்வி வழங்குதலில் முக்கியப் பங்கினையும், நூலகங்கள்மூலம் அறிவினையும், விழிப்புணர்வினையும், இணையவழி சேவைகளை இ-சேவை மையங்கள் மூலமும், உறுதிப்படுத்திடும் முக்கியப் பணிகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

2023 மார்ச் 30]

*மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021 இன்படி "குழந்தைகளுக்கான கிராம சபைகள்" (*Bala Sabhas*) நடத்தப்பட்டு, அதில் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி விவாதித்து, அதன் தீர்மானங்கள் கிராம சபையில் வைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

7.4 நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி

அட்டவணை 7.4

கருப்பொருள்	**தொடர்புடைய இதர துறைகள்**	**தொடர்புடைய திட்டங்கள்**
நீரில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி	• *நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை* • *வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை* • *நீர்வளத் துறை*	• *ஜல் ஜீவன் இயக்கம் (*JJM*)* • *தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (*SBM-G*)* • *கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (*KAVIADP*)* • *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்* • *பிரதமரின் விவசாயிகள் பாசனத் திட்டம் (*PMKSY*)* • *நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் மற்றும் நீர்நிலைகள் மறுசீரமைப்பு மற்றும் மேலாண்மை (*IAMWARM*)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

மாநிலத்தின் தனித்துவமான பாரம்பரிய முறையிலான "குடிமராமத்து", உள்ளூர் மக்களை நீர்நிலைப் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவற்றைப் புதுப்பித்து, நீரில் தன்னிறைவு அடைந்த கிராமமாக மாற்றும் குறிக்கோளை அடைய உறுதி செய்கிறது.

ஜல் சக்தி அபியானின் "மழை பொழிவின்போது மழை பொழியும் இடத்தில் மழைநீர் சேகரிப்பது" என்பதனை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதமரின் விவசாயிகள் பாசனத் திட்டம் (PMKSY), ஒருங்கிணைந்த நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல், நீர்நிலைகள் மறுசீரமைப்பு மற்றும் மேலாண்மை (IAMWARM) ஆகிய திட்டங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் காரணமாக நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் நீர்மேலாண்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீர் மேலாண்மையின் முக்கியப் படியாக, ஊராட்சிப் பகுதியில் புதிதாக கட்டப்படும் அனைத்து பொது கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படும் 15-வது ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி முதலானவை முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, சமூக சொத்துகள் உருவாக்கப்பட்டு, அவை நீர் நிலைகளின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு உதவி செய்கின்றன.

ஊராட்சி அளவிலான கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு (VWSC) வானது, ஜல் ஜீவன் திட்டம்மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அனைத்து ஊரக குடும்பங்களுக்கும் செயல்பாட்டு வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புமூலம் நாளொன்றுக்கு தலா ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நீர் வழங்கல் அமைப்புகளின் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் கள சோதனை கருவிமூலம் நீரின் தரத்தை பரிசோதித்தல் ஆகியவற்றில் கிராம ஊராட்சியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சிகள், ஊராட்சி அளவில் நீரில் தன்னிறைவு அடையும் பொருட்டு "கிராம அளவிலான நீர் தன்னிறைவு திட்டத்தினை" (VWSP) தற்போது தயாரித்து வருகின்றன.

2023 மார்ச் 30]

7.5 தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி

அட்டவணை 7.5

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
தூய்மையான மற்றும் பசுமையான கிராம ஊராட்சி	• சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை • வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை • தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்	• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். • அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II. • தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) • நம்ம ஊரு சூப்பரு • மீண்டும் மஞ்சப்பை • பசுமை தமிழ்நாடு இயக்கம் • தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் போன்றவை.

ஊரகப் பகுதிகளில் ஒட்டுமொத்த தூய்மை மற்றும் சுகாதாரம் முதலானவை 73-வது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின்மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தூய்மை பாரத இயக்கம்மூலம், ஊராட்சியானது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாமையை நிலை நிறுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, திரவ கழிவு மேலாண்மை மற்றும் காட்சித் தூய்மை போன்றவற்றை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிலையான சுகாதார நடைமுறைகள் மற்றும் சரியான திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் “நம்ம ஊரு சூப்பரு” இயக்கம்மூலம் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படுத்தும் முயற்சிகளை ஊராட்சிகள் தொடர்ந்து செய்து வருகின்றன. கழிவுகள் மறுசுழற்சி செய்தல் மற்றும் குப்பைகளைப் பாதுகாப்பாக அகற்றும் வகையில் உரக் குழிகள் (Compost Pits) நுண்உரம் தயாரிக்கும் மையம்,

நெகிழியை துகளாக்கும் அலகு மற்றும் மண்புழு உரக்கிடங்கு (Vermi-compost) ஆகியவை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. "நெகிழி மீள வாங்கும் கொள்கை"மூலம் ஊராட்சிகள் நெகிழிக் கழிவுகளை நீக்குதல் மற்றும் மறுசுழற்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

கரியமிலத் தன்மையை குறைக்கும் விதமாக ஊராட்சிகள் பெருமளவில் மரங்களை நட்டு வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலமாக 69 இலட்சம் நிழல் தரும் மரங்கள், பழ மரங்கள் மற்றும் நாட்டு மரங்கள் அனைத்து ஊராட்சிகளிலும் நடப்பட்டுள்ளன. ஊராட்சிகளின் இதுபோன்ற முயற்சிகள், பசுமை தமிழ்நாடு இயக்கம் இந்த ஆண்டில் இரண்டு கோடி மரங்களை நட வேண்டும் என நிர்ணயித்த இலக்கை அடைவதற்கு உதவிபுரிகின்றன.

7.6. உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி

அட்டவணை 7.6

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
உட்கட்டமைப்பில் தன்னிறைவு அடைந்த கிராம ஊராட்சி	• தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை • வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை • கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் & மீனவர் நலத் துறை • பொதுப் பணித் துறை • பள்ளிக் கல்வித் துறை	• ஜல் ஜீவன் இயக்கம் • சொந்த வருவாயைப் பெருக்குதல் • நமக்கு நாமே திட்டம் • அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் — II. • நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை • கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP)

2023 மார்ச் 30]

	• தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் • நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை • இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	• முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (MGSMT) • தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் • பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் • நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) • சமூக—பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (SEDP) • பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) • சியாமாப் பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டம் • நபார்டு – உட்கட்டமைப்பு நிதி • ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி/ மாநில நிதிக் குழு மானிய நிதி போன்றவை.

ஊராட்சிகளை தன்னிறைவு பெற்ற, சுய சார்புள்ளவைகளாக உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் அரசியலமைப்பின் 73-வது சட்டத்திருத்தம் ஊராட்சிகளுக்கு மானிய நிதிப் பகிர்வைக் கொண்டு என்ன பணிகளை, யாரைக் கொண்டு செயல்படுத்துவது என்பதைத் தெரிவிக்கிறது.

கிராம ஊராட்சி, தனது திட்டமிடல், வளங்களை ஒருங்கிணைத்தல், தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல்

போன்றவைகள் வழியாக திட்டங்களைச் செயல்படுத்தி முழுமையான முன்னேற்றம் காண்பதை உறுதி செய்கிறது.

தற்போது, அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்க கூடுதல் கவனம் செலுத்தி பள்ளிகள், அங்கன்வாடிகள், கிராமச் சந்தைகள், உணவு தானியக் கிடங்குகள் மேலும் அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்குகள், சுகாதாரம், சாலைகள் போன்றவை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் மூலமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஜல் ஜீவன் மிஷின்(JJM), 15-வது ஒன்றிய நிதிக் குழு மானிய நிதி, ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம மாதிரித் திட்டம் போன்ற திட்டங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சியானது அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கிராம வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக அனைத்து உடனடி மற்றும் நீண்ட கால‌த் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில், அவசர தேவைகளை, இருப்பில் உள்ள நிதியினைக் கொண்டு அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொது மேடையாக விளங்குகிறது.

ஊராட்சிகளின் திறனை வளர்ப்பதன்மூலம், சாலைகள், கட்டடங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கவும், வேளாண்மை, வாழ்வாதாரம், கல்வி, நலவாழ்வு, ஊட்டச்சத்து போன்ற ஒட்டுமொத்த வளர்ச்சிகளை ஏற்படுத்தவும், அனைத்துத் திட்டங்கள், வளங்களை ஒருங்கிணைத்து அந்த ஊராட்சியே அதற்கான திட்டம் தயாரிப்பதை செய்திட முடியும்.

2023 மார்ச் 30]

7.7 சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி

அட்டவணை 7.7

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
சமூக நீதி மற்றும் சமூக பாதுகாப்பு உள்ள கிராம ஊராட்சி	• சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை • மாற்றுத் திறனாளிகள் நலத் துறை • தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை • வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை • ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை • கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை • பொதுத் துறை	• மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் • பெரியார் நினைவு சமத்துவபுரம் • அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II • தேசிய சமூக உதவித் திட்டம் (NSAP) • புதுமைப் பெண் திட்டம் • டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கலப்பு திருமண உதவித் திட்டம் • நீல புரட்சி திட்டம் • ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (ADHIS) • ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான சிறப்புத் திட்டங்கள் போன்றவை

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 30

ஊராட்சியானது கடைநிலை நிர்வாக அமைப்பாக இருந்து அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதுடன், ஏழை, விளிம்புநிலை மக்கள், மகளிர் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோரின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. சமூகத்தின் மேலிருந்து கீழும், மேலும், சம நேர் நிலையிலும் உள்ள அடுக்கமைப்பு நிலையில், அடிமட்ட நிலையில் சமூக நீதியை உறுதி செய்வது ஊராட்சியால் மட்டுமே செய்திட இயலும்.

அரசாங்கமானது சமூக நீதியை வளர்க்க மற்றும் ஊக்குவிக்கும் விதமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி, தந்தை பெரியாரின் சமூக சமுத்துவ செய்தியை கொண்டு செல்லும் விதமாக 1997-98 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பெரியார் நினைவு சமத்துவபுரத்தை தொடங்கி வைத்தது. பல்வேறு சமூகங்களைச் சார்ந்த மக்கள் சாதி மற்றும் வகுப்பு வேறுபாடு பாராமல், ஒன்றாக வாழ வேண்டும் என்பதே இதன் தொலைநோக்குப் பார்வையாக இருந்தது.

நலிந்த பிரிவினர் மற்றும் மகளிர் தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஊராட்சிகளில் அரசியலமைப்பு ரீதியான மற்றும் சட்டப்படியான உரிமைகளை நிலைநாட்டிட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை துறை வழங்கி வருகின்றது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 30% நிதியானது நலிந்த பிரிவினர் வசிக்கக் கூடிய பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. இதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 22% நிதி விளிம்புநிலை மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகளை கட்டாயமாகத் தேர்வு செய்யப்பட வேண்டும்.

*மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (*CMCHIS*), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (*TNSRLM*), டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், புதுமைப் பெண் திட்டம், ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (*ADHIS*) மற்றும் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம்* PMAY-G *ஆகிய திட்டங்களின்மூலம் குறிப்பிட்ட ஒதுக்கீடு நலிந்த மற்றும் விளிம்புநிலை பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.*

2023 மார்ச் 30]

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பட்டியலின மக்கள் வசிக்கும் ஊராட்சிகளில் பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.8 நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி

அட்டவணை 7.8

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி	• *தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை* • *முதல்வரின் முகவரி துறை*	• *தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA)* • *முதல்வரின் முகவரி திட்டம்* • *தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU—GKY)போன்றவை*

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RRGSA 2022) மூலமாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் திறனை வலிமைப்படுத்தி நல்லாட்சிக்கு வழிவகுக்கிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD & PR) அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு தலைமைப்பண்பு, ஆளுமை மற்றும் நிர்வாகத்தில் புதுமைகளைச் செயல்படுத்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

கிராம நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் இத்துறையானது 2022-23 முதல் சொத்து வரி, குடிநீர்க் கட்டணம், தொழில் வரி ஆகிய பொது சேவைகள் வழங்குவதற்கு ஒற்றை முனையம் "தேசிய தகவலியல் மையம்" (NIC) மூலமாக உருவாக்கப்பட்டு உள்ளது. கிராம ஊராட்சி அளவில், வங்கி வணிக தொடர்பாளர் (Business Correspondent) மற்றும் ATMமூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் ஊதியத்தை பெறவும் மற்றும் தினசரி வருகை பதிவேட்டினை தேசிய மொபைல் கண்காணிப்பு முறை (NMMS)மூலம் பதிவிடுவதன் மூலமாக பொது மக்கள் தொழில்நுட்பத்தை எளிதில் ஏற்றுக்கொள்பவர்களாக மாறியுள்ளனர்.

கிராம சபை சரியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்திட "நம்ம கிராம சபை செயலி" தற்போது அறிமுகம் செய்யப்பட்டு, கிராம சபை நடைபெறுவதைக் கண்காணிக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வளர்ச்சிப் பணிகளின் கண்காணிப்பு மற்றும் முன்னேற்ற விவரங்களைக் கண்டறிய "கண்காணிப்பு செயலி" உருவாக்கப்பட்டு, பணிகள் நடைபெறுவதை நேரடியாக கள ஆய்வு செய்து நேரம் மற்றும் புவியமைப்பு குறியீட்டுடன் புகைப்படம் எடுத்து கண்காணிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இச்செயலி பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுவதை எளிமையாக கண்காணிக்க உதவுகிறது.

ஊராட்சியில் நல் ஆளுமை கொண்ட நல்லாட்சியை ஏற்படுத்தும் முயற்சியாக அரசு, பொதுமக்களின் குறைகளைக் களையும் வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த மற்றும் எளிதில் அணுகும் வகையில் "முதல்வரின் முகவரி" என்ற இணையதளத்தை ஏற்படுத்தியுள்ளது.

7.9 மகளிர் நேய கிராம ஊராட்சி

அட்டவணை 7.9

கருப்பொருள்	தொடர்புடைய இதர துறைகள்	தொடர்புடைய திட்டங்கள்
மகளிர் நேய கிராம ஊராட்சி	• சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை • மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு துறை • உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை	• மகளிர் திட்டம் • புதுமைப் பெண் திட்டம் • பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் • காவலன் செயலி • ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) • பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்.

2023 மார்ச் 30]

ஊராட்சிகளில் மகளிருக்கான பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பினை உறுதிசெய்வதில் முக்கியப்படியானது ஊராட்சிகளில் உள்ளாட்சி பதவிகளில் 50 விழுக்காடு கட்டாயமாக்கப்பட்டதாகும். முந்தைய மகளிருக்கான 33 விழுக்காடானது 50 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டதால், ஊராட்சியின் வளர்ச்சியில், மகளிரின் பங்களிப்பு காரணமாக ஏற்பட்ட மாற்றங்களைக் காண முடிகிறது.

கிராம ஊராட்சி மகளிர் நேய கருப்பொருளில் முக்கியத்துவம் பெறும் வகையில் இத்துறையானது, மகளிருக்கு சமத்துவமான, நிலையான வருங்கால முன்னேற்றத்தினை உறுதி செய்யும் பொருட்டு உள்ளூர் நிர்வாகத்தில் மகளிர் சம பங்கேற்பு மற்றும் முடிவுகளை எடுத்தல் போன்றவற்றில் மகளிர் பங்கினை உறுதி செய்கிறது.

இத்துறையானது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் நெருக்கமாக இணைந்து சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றிற்கு தடையாக உள்ள, பல்வேறு சமூக தீமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்குகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறமை மற்றும் திறன் மேம்படுத்தப்பட்டு, வங்கிக் கடன்மூலம் குறு நிறுவனங்கள் நிறுவிட ஊக்குவிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஊராட்சி மற்றும் சமுதாயம் சார்ந்த கூட்டமைப்பின் இணைப்புக் கூறானது கிராம ஊராட்சியில் பயனுள்ள கூட்டாண்மையை உருவாக்கி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புமூலம் மகளிர் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துகிறது. ஊராட்சிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுடன் நெருக்கமாக இணைந்து ஊரக மகளிர்க்கு அதிகாரமளித்து, அதன்மூலம் கிராமத்தில் உள்ள பிற வளர்ச்சிப் பணிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிறது.

7.10 வருங்கால திட்டம்

நீடித்த நிலையான இலக்குகளுடன் தங்களை பரிச்சயப்படுத்திக் கொள்ளவும், திறம்பட செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும், கிராம ஊராட்சிகளுக்கு முதல் கட்டமாக 9 கருப்பொருட்களிலிருந்து 3 கருப்பொருட்களை தேர்ந்தெடுத்து, அதன் தொடர்புடைய குறிகாட்டிகள்

அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளும் 24 ஏப்ரல் 2022 அன்று கிராம சபையில் அடுத்த 2 ஆண்டுகளில் அதாவது 2024 வரை நிறைவேற்றுவதற்கான 3 கருப்பொருட்களை தேர்வு செய்துள்ளன. இவ்வாறாக 9 கருப்பொருட்களும் 2024, 2026, 2028 மற்றும் 2030 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக கிராம ஊராட்சிகளால் எடுத்துக்கொள்ளப்படும்.

2030 ஆம் ஆண்டில், அனைத்து இலக்குகள் மற்றும் குறியீடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்பாட்டில், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தினை துரிதப்படுத்த நீடித்த நிலையான இலக்குகளை அடைவதற்கு உள்ளூர் நடவடிக்கைகளை செயல்படுத்துவது மிக முக்கியமான பணியாகும். இதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது தொடர்புடைய பிற துறைகளுக்குத் தேவையான ஆதரவை வழங்கி, புது வீரியத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், 9 கருப்பொருட்களையும் நிறைவேற்றுவதை உறுதி செய்ய முனைப்புடன் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளும் 2030 ஆம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை எய்த, இத்துறை இதர தொடர்புடைய துறைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி ஊராட்சிகளை வலிமைப்படுத்த, தேவையான வசதிகளை செய்து கொடுக்கும்.

8. வரவு-செலவுத் திட்டம் 2023-2024

2023-2024 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் 22,562 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக 20,954 கோடி ரூபாய் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக 1,608 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. முடிவுரை

வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சியை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், சாலை வசதிகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கி, ஆக்கப்பூர்வமான மற்றும் தன்னிறைவு பெற்ற ஊரக சமுதாயங்களை உருவாக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்

TRUTH ALONE TRIUMPHS

துறை உறுதி பூண்டுள்ளது. ஊராட்சிகளை தூய்மையாகவும் பசுமையாகவும், எந்த கால நிலையையும் தாங்கக்கூடியவைகளாகவும் வாழத்தகுதியுள்ளவைகளாகவும், துடிப்பான பொருளாதாரத்தை கொண்டவைகளாகவும் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் விதமாக அனைத்து வசதிகளுடன் இணைக்கப்பட்ட மையங்களாகவும் உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்.

ஊராட்சிகள், அனைத்து துறை செயல்பாடுகளும் கிராம அளவில் ஒருங்கிணைவதை உறுதி செய்து அரசுக்கும், உள்ளூர் மக்களுக்கும் பாலமாக விளங்குகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரக தூய்மை பாரத இயக்கம், 15-வது ஒன்றிய நிதிக்குழு மானியம் மற்றும் இதரத் துறை திட்டங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து மேம்பட்ட பலன்களை கடைக்கோடி வரை சென்றடையும் வகையில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. திறம்பட்ட சேவைகள், ஊரக வாழ்வாதார மேம்பாடு, மேம்பட்ட இயற்கைவள மேலாண்மை, பசுமை பரப்பை அதிகரித்தல் மற்றும் கார்பன் அடிச்சுவடு குறைப்பு போன்றவை துறைகளுக்குள்ளான ஒருங்கிணைப்பின் விளைவுகளாக உள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை ஊராட்சி அளவில் உள்ளூர்மயமாக்கல் என்பது நீடித்த வளர்ச்சியை 2030-க்குள் அடைவதற்கு முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு கிராமத்தின் தேவைகள் மற்றும் சூழலைப் பொறுத்து உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை உருவாக்க வேண்டும். நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கல், உள்ளூர் நிர்வாகத்தையும் அமைப்புகளையும் வலிமைப்படுத்தி சமூக ஒற்றுமையை பலப்படுத்தி, சமூதாய மீள்தன்மையை ஊக்குவிக்கிறது. ஒட்டுமொத்தமாக, நீடித்த மற்றும் சமமான எதிர்காலத்தை உருவாக்குவதில் நீடித்த நிலையான வளர்ச்சியை உள்ளூர்மயமாக்கல் முக்கியமான ஒன்றாகும்.

திட்டங்களைச் செயல்படுத்துவதில் மின் ஆளுமை முன்னெடுப்புகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு செயல்பாடுகள் போன்றவை நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருவதால், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை திட்ட


செயலாக்கத்தில் மேலும் ஆற்றல் மிக்கவையாக்கும் முயற்சிகளை இத்துறை தனது செயல்பாடுகளில் முன்னிறுத்தி வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை வல்லுநர்கள் இடையிலான ஒருங்கிணைப்பு இதுவரை கிடைக்கப்பெற்ற பலன்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு சேவைகள் வழங்குவதிலும் அடிப்படை மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாட்டிலும் வேகமான செயல்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இத்துறையின் முக்கியமான பணியாகும். ஊரகப் பகுதிகளில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியை நிரப்பும் முக்கிய திட்டமாக திகழ்கிறது. முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஊரக சாலைகள் வகைப்பாட்டினை சீரமைத்து, சாலைகள் மேலாண்மையில் புதிய நோக்குடன் வடிவமைக்கிறது. சொத்துக் கணக்கெடுப்பில் அறியப்படும் இடைவெளிகள், துல்லியமான முறையில் நுண்ணிய திட்டமிடலுக்கு கருவிகளாக இருக்கிறது. கிராம சுகாதார செறிவுத் திட்டம், கிராம நீர் செறிவுத் திட்டம் மற்றும் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் போன்றவை கள அளவிலான திட்டமிடலுக்கு அடிப்படை தரவுகளுடன், அனைத்து இருப்பு வளங்களையும் செம்மையாக பயன்படுத்தவும் சேவை வழங்குதலில் முக்கியப் பங்களிக்கிறது.


ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் நாட்டின் முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைய தனித்துவ வளர்ச்சி மாதிரியை உருவாக்கி தொய்வடையாத அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்லும்.


.

2023 மார்ச் 30]



ஆறாவது மாநில நிதிக்குழு மானிய பகிர்மான முறை
ஆறாவது மாநில நிதிக்குழு 2022-23
ரூ.கோடியில்
சிறப்பு மானியம்
பகிர்மான மானியம்
மாநில அளவில்
மாவட்ட அளவில்
மூலதன மானிய நிதி
பற்றாக்குறை நிதி
ஊரக உட்கட்டமைப்பு 600
இதர மாவட்ட சாலைகள்-வகை 120
பயிற்சி 1
பள்ளி கட்டமைப்பு 140
குடிநீர் கட்டணம் 100
பயிற்சி 0.6
பற்றாகுறை ஊராட்சி 280
மின் கட்டணம் 200
நூலக மேல்வரி 28
தூய்மை பணியாளர் நல வாரியம் 5
புறநகர் ஊராட்சிகள் 69
மலையக ஊராட்சிகள் 30
மூலதன மானிய நிதி மாவட்டம் 200
பள்ளிகள் 60
10
10% ஆண்டு உயர்வு
6% மாவட்ட ஊராட்சி
39% ஊராட்சி ஒன்றியம்
55% கிராம ஊராட்சி

[2023 மார்ச் 30



அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II
2023–24 ஆம் ஆண்டிற்கு தேர்வு
செய்யப்பட்ட கிராம ஊராட்சிகள்
N
W
E
S
Tiruvallur
104
Ranipet
57
Vellore
51
Kancheepuram
55
Krishnagiri
63
Tirupathur
40
Tiruvannamalai
175
Chengalpattu
73
Villupuram
139
Dharmapuri
Salem
74
Kallakurichi
84
Erode
The Nilgiris
Cuddalore
Namakkal
Ariyalur
Coimbatore
Tiruchirappalli
Tiruppur
Thanjavur
118
Tiruvarur
Dindigul
Pudukkottai
Madurai
Sivagangai
Virudhunagar
Ramanathapuram
Tenkasi
45
Thoothukudi
82
Tirunelveli
41
0 - 30
31 - 60
61 - 90
91 - 100
101 - 175
0 10 20 40 60 80
Miles


மாவட்ட வாரியாக ஊரகச் சாலைகளின் அடர்த்தி
N
W
E
S
Tiruvallur
168.85Km
Chennai
Vellore
151.61Km
Ranipet
88.29Km
Kancheepuram
Chengalpattu
87.78Km
Krishnagiri
101.33Km
Tirupathur
212.52Km
Tiruvannamalai
125.03Km
Dharmapuri
Villupuram
105.31Km
Kallakurichi
Salem
Cuddalore
208.75Km
The Nilgiris
100.98Km
Erode
Namakkal
Perambalur
126.13Km
Ariyalur
177.1Km
Mayiladuthurai
237.86Km
Coimbatore
147.06Km
Tiruppur
Karur
177.21Km
Tiruchirappalli
Thanjavur
214.59Km
Tiruvarur
Pudukkottai
Nagapattinam
Dindigul
138.94Km
Theni
Madurai
93.21Km
Sivagangai
Virudhunagar
81.45Km
Ramanathapuram
117.11Km
Tenkasi
105.17Km
Thoothukudi
67.39Km
Tirunelveli
105.53Km
Kanniyakumari
275.22Km
ஊரக சாலைகளின் அடர்த்தி
(நீளம் கி.மீ/100 சதுர கி.மீ. பரப்பளவு)
0 - 100 Km (Per 100 Sq.Km area)
100 - 200 Km (Per 100 Sq.Km area)
200 - 300 Km (Per 100 Sq.Km area)
300 - 352 Km (Per 100 Sq.Km area)
Scale
0 10 20 40 60 80
Miles


[2023 மார்ச் 30


மாவட்ட வாரியாக ஊரகச் சாலைகளின் நீளம்
N
W
E
S
Tiruvallur 4828.9Km
Chennai
Vellore 1830.1Km
Ranipet 1430.7Km
Kancheepuram 1275.2Km
Krishnagiri 5031.6Km
Tirupathur 2538.7Km
Tiruvannamalai
Chengalpattu 2029.6Km
Dharmapuri
Villupuram 3798.3Km
Kallakurichi
Salem
The Nilgiris 1181.8Km
Erode
Cuddalore
Namakkal
Perambalur 2030.0Km
Ariyalur 3028.7Km
Mayiladuthurai 2964.5Km
Coimbatore 3727.3Km
Tiruppur
Karur
Tiruchirappalli
Thanjavur
Tiruvarur
Dindigul
Pudukkottai
Nagapattinam 3129.5Km
Theni 1669.5Km
Madurai 2966.8Km
Sivagangai 4677.8Km
Virudhunagar 2673.3Km
Ramanathapuram 4820.5Km
Tenkasi 2109.3Km
Thoothukudi 2871.2Km
Tirunelveli 2403.4Km
Kanniyakumari 1723.2Km
ஊரகச் சாலைகளின் நீளம் (கி.மீ.)
1000 Km - 2000 Km
2000 Km - 4000 Km
4000 Km - 6000 Km
Above 6000 Km
Scale
0 10 20 40 60 80 Miles


2023 மார்ச் 30]


ஆண்டுவாரியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை
உறுதித் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம்
(ரூ. கோடியில்)
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
4,952
5,285
5,769
5,448
5,738
5,625
8,550
9,159
8,435
8,963
9,585
9,796
9,088
10,090
11,215
2018-2019
2019-2020
2020-2021
2021-2022
2022-2023
ஒன்றிய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடு
மொத்த வரவினம்
மொத்த செலவினம்
ஆண்டு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS


[2023 மார்ச் 30


மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – ஊரக
கட்டமைப்பு பணிகள் விவரம் 2022–2023
தடுப்பணை
சிமெண்ட் கான்கிரீட் சாலை
வண்ண கல் பதித்தல்
அரசு பள்ளிகளில்
சுற்றுச்சுவர் அமைத்தல்
வடிகால்
ஓரடுக்கு கப்பிச் சாலை
அங்கன்வாடி கட்டடம்
திறந்தவெளி சமுதாயக் கிணறு
ஊராட்சி மன்றக் கட்டடம்
அங்கன்வாடி கழிவறை
உணவு தானியக் கிடங்கு
எரிமேடை
மீன் உலர் களம்
ஊரகச் சந்தை
சமையலறைக் கூடம்
சுயஉதவி குழு கட்டடம்
12,085
7,364
3,759
2,033
1,334
870
705
443
168
138
126
51
16
16
18
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY


2023 மார்ச் 30]


பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ்
ஆண்டு வாரியாக வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட விவரம்
வீடுகளின் எண்ணிக்கை
0
20000
40000
60000
80000
100000
120000
140000
160000
180000
0
23828
129487
74201
55114
57322
164587
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
ஆண்டு


[2023 மார்ச் 30


கடந்த மூன்று ஆண்டுகளில் ஊரக வீடுகளுக்கு வழங்கப்பட்ட
வீட்டு குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை
3000000
2500000
2000000
1500000
1000000
500000
0
1613190
1493032
2601613
2020-21
2021-22
2022-23
ஆண்டு

2023 மார்ச் 30]


செயல்பாட்டில் உள்ள வீட்டு குடிநீர்
குழாய் இணைப்புகளின் சதவீதம்
N
W
E
S
திருவள்ளூர் 86.97%
சென்னை
வேலூர் 93.24%
கிருஷ்ணகிரி 46.46%
திருப்பத்தூர் 58.26%
திருவண்ணாமலை 69.63%
செங்கல்பட்டு 78.13%
விழுப்புரம் 49.67%
சேலம்
நீலகிரி 54.04%
ஈரோடு
நாமக்கல் 82.73%
கடலூர் 55.93%
பெரம்பலூர் 47.48%
அரியலூர் 67.45%
மயிலாடுதுறை 71.03%
கோயம்புத்தூர் 84.14%
திருப்பூர் 73.61%
கரூர் 70.22%
திருச்சிராப்பள்ளி 82%
தஞ்சாவூர் 60.65%
திருவாரூர் 61.21%
நாகப்பட்டினம்
திண்டுக்கல் 57.33%
தேனி 78.62%
மதுரை 58.38%
தென்காசி 57.37%
தூத்துக்குடி 53.61%
திருநெல்வேலி 59.04%
கன்னியாகுமரி 91.84%
குடிநீர் குழாய் இணைப்புகளின் சதவீதம்
0 - 25
26 - 50
51 - 75
76 - 99
100
Scale
0 10 20 40 60 80 Miles
★ இம்மாவட்டங்களில் நடைபெற்றுவரும் கூட்டுக்குடிநீர் திட்டங்களின் கீழ் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும்

[*2023 மார்ச் 30*


கடந்த 5 ஆண்டுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதிகள்
(ரூ. கோடியில்)
14000.00
12000.00
10000.00
8000.00
6000.00
4000.00
2000.00
0.00
8044.69
7239.67
10457.85
11707.45
13131.80
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
ஆண்டு

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.